INDEX TO

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

IFTY-SEVENTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA

*7th, 11th to 13th and 15th February* 1980

VOLUME CLXVI (Nos. 1 to 5)

©

GOVERNMENT OF TAMIL NADU

1980

*Legislative Council Department*
*Fort St. George, Madras-600009.*

RICE *Rupee* : 1

V211,32 N80
N80.16631
122003

# Tamil Nadu Legislative Council Debates

FIFTY-SEVENTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

---

*7th, 11th to 13th and 15th February* 1980.

VOLUME CLXVI (Nos 1 TO 5.)

---

TABLE OF CONTENTS.

*Thursday, 7th February* 1980.


| | PAGES. |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... ... | i—v |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council ... ... ... ... ... ... | vii |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies ... ... ... ... | ix—xii |
| 1. Suspension of Question-hour ... ... ... | 1 |
| 2. Privilege Issue *re* surveilance on Thiru Arcot N. Veerasami, Member of the Council, by the Police ... ... ... ... ... | 1—4 |
| 3. Adjournment Motions— | |
| (1) Shortage of Petroleum products due to go-slow agitation by the employees of the Indian Oil Corporation ... ... ... ... | 4—6 |
| (2) Hunger strike by Thiru P. R. Thomas, M.L.C., and representatives of Ramanathapuram District Teachers' Federation in front of the Ramanathapuram Collectorate ... ... | 6—8 |

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR OF TAMIL NADU

### THIRU PRABHUDAS PATWARI

*Members of the Council of Ministers*

1. The HONOURABLE THIRU M. G. RAMACHANDRAN, Chief Minister in-charge of Public, General Administration, Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Passport, Prohibition, Prevention of Corruption, Large Scale Industries, Mines and Minerals.

2. The HONOURABLE THIRU K. MANOHARAN, Minister in-charge of Finance, Planning and Legislature, Public Works [Buildings], Establishment Works relating to Public Works Department.

3. The HONOURABLE THIRU S. RAMACHANDRAN, Minister in-charge of Electricity, Iron and Steel Control.

4. The HONOURABLE THIRU K. A. KRISHNASWAMY, Minister in-charge of Co-operation and Registration.

5. The HONOURABLE THIRU S. D. SOMASUNDARAM, Minister in-charge of Revenue, Commercial Taxes and Excise.

6. The HONOURABLE THIRU G. R. EDMUND, Minister in-charge of Food, Fisheries, Youth Service Corps, Backward Classes, Elections and Ex-Servicemen, Price Control.

7. The HONOURABLE THIRU R. M. VEERAPPAN, Minister in-charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona.

8. The HONOURABLE THIRU K. NARAYANASWAMY, Minister in-charge of Law Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on Money lending, Legislation on Chits and Registration of Companies.

9. The HONOURABLE THIRU C. ARANGANAYAGAM, Minister in-charge of Education including Technical Education, Official Language and Employment and Training.

10. The HONOURABLE THIRU K. KALIMUTHU, Minister in-charge of Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions, Rural Indebtedness and Bhoodan and Gramdhan.

11. The HONOURABLE THIRU S. RAGHAVANANDAM, Minister in-charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. The HONOURABLE THIRU P. SOUNDARAPANDIAN, Minister in-charge of Harijan Welfare, Stationery and Printing, Government Press, Newspaper Control, Hill Tribes and Bonded Labour.

13. The HONOURABLE THIRU C. PONNAIYAN, Minister in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Highways and Ports.

14. The HONOURABLE THIRU P. KOLANDAIVELU, Minister in-charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Service Co-operative Societies and Irrigation including Minor Irrigation, Agro-Engineering.

15. The HONOURABLE THIRU K. RAJA MOHAMMED, Minister in-charge of Rural Industries including Village, Cottage and Small Industries, Milk and Dairy Development and Wakfs.

16. The HONOURABLE THIRU P. SOUNDARARAJAN, Minister in-charge of Health.

17. The HONOURABLE SELVI P. T. SARASWATHI, Minister in-charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars' Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

18. The HONOURABLE THIRUMATHI SUBBULAKSHMI JEGADEESAN, Minister in-charge of Handlooms, Khadi, Textiles and Yarn.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

### திரு. பிரபுதாஸ் பட்வாரி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) ழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், ாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் ம்பந்தப்பட்டவை, காவல், பயண இசைவுச் சீட்டு, மதுவிலக்கு, லஞ்ச ஒழிப்பு, தொழில் நிறுவனங்கள், சுரங்கம்-கனிவளம்.

2. மாண்புமிகு திரு. கி. மனோகரன் (நிதித்துறை அமைச்சர்), ழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நிதி, திட்டம், சட்டமன்றம், பொதுப்பணி (கட்டிடங்கள்).

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின்சாரத்துறை மைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மின்சாரம், இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (கூட்டுறவுத்துறை மைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கூட்டுறவு, ஆவணப் பதிவுத்துறை.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த்துறை மைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வருவாய், வணிக வரிகள், ஆயத்துறை.

6. மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் (உணவுத்துறை மைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

உணவு, மீன்வளம், இளைஞர் அணி, பிற்பட்ட வகுப்பினர், ர்தல்கள், முன்னாள் இராணுவத்தினர், விலைக் கட்டுப்பாடு.

7. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி அறநிலைய மைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், ுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், நிலையத்துறை, சின்கோனா உட்பட வனங்கள்.

8. மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி (சட்டத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் சட்டம் இயற்றல், கடன் கொடுத்தல் சட்டம் இயற்றல், சீட் நிதிச் சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு.

9. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

10. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (உள்ளாட்சித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நகராட்சிகள், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட் ஒன்றியங்கள், ஊரகக் கடன்கள், பூமிதானம்-கிராமதானம்

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப் வகிப்பார் :—

தொழிலாளர், வீட்டுவசதி, குடிசைமாற்று வாரியம், புள்ள விவரங்கள், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், நகர அமைப்பு இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் (அரிசன நல துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகி பார் :—

அரிசன நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம் அச்சுக்காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணை தொழிலாளர்.

13. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (போக்குவரத்து துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகி பார் :—

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து இயக்கூர்திகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

14. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (வேளாண்மை நீர்ப்பாசனத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்கு பொறுப்பு வகிப்பார் :—

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு, வேளாண்மைப் பணிக்கூட்டுறவுச் சங்கங்கள் சிறுபாசனம் உள்ளிட்ட பாசனம், ஆக்ரோ பொறியியல் பிரிவு.

15. மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (கிராமத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப் பார் :—

கிராம, குடிசை மற்றும் சிறு தொழில்கள், பால், பால்வள நிறுவனம், வக்ப்.

16. மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் (நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப் பார் :—நல்வாழ்வு.

17. மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி (சமூகநலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூகநலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், அயல்நாடுவாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டோர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

18. மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செ துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்கு பார் :—கைத்தறி, கதர், நெசவு, நூல்.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்

மாண்புமிகு மேலவைத் தலைவர்

திரு. ம.பொ. சிவஞானம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்

திரு. ஜி. சுவாமிநாதன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. ஈ. எஸ். வெங்கடேசன்.
2. திரு. வி. ஆர். பெரியண்ணன்.
3. திரு. க. இராமமூர்த்தி.
4. திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி.

மேலவைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

சார்புச் செயலாளர்

திரு. த.பி. டெல்விதுரை, பி.எஸ்.சி., பி.எல்.

விவாதப் பதிவாளர்

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல், பி.எல்.

தலைமை நிருபர்.

திரு. ச. சுவாமிநாதன்.

10. The HONOURABLE THIRU K. KALIMUTHU, Minister in-charge of Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions, Rural Indebtedness and Bhoodan and Gramdhan.

11. The HONOURABLE THIRU S. RAGHAVANANDAM, Minister in-charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. The HONOURABLE THIRU P. SOUNDARAPANDIAN, Minister in-charge of Harijan Welfare, Stationery and Printing, Government Press, Newspaper Control, Hill Tribes and Bonded Labour.

13. The HONOURABLE THIRU C. PONNAIYAN, Minister in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Highways and Ports.

14. The HONOURABLE THIRU P. KOLANDAIVELU, Minister in-charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Service Co-operative Societies and Irrigation including Minor Irrigation, Agro-Engineering.

15. The HONOURABLE THIRU K. RAJA MOHAMMED, Minister in-charge of Rural Industries including Village, Cottage and Small Industries, Milk and Dairy Development and Wakfs.

16. The HONOURABLE THIRU P. SOUNDARARAJAN, Minister in-charge of Health.

17. The HONOURABLE SELVI P. T. SARASWATHI, Minister in-charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars' Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

18. The HONOURABLE THIRUMATHI SUBBULAKSHMI JEGADEESAN, Minister in-charge of Handlooms, Khadi, Textiles and Yarn.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

### திரு. பிரபுதாஸ் பட்வாரி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், பயண இசைவுச் சீட்டு, மதுவிலக்கு. இலஞ்ச ஒழிப்பு, தொழில் நிறுவனங்கள், சுரங்கம்-கனிவளம்.

2. மாண்புமிகு திரு. கி. மனோகரன் (நிதித்துறை அமைச்சர்), கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நிதி, திட்டம், சட்டமன்றம், பொதுப்பணி (கட்டிடங்கள்).

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின்சாரத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மின்சாரம், இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (கூட்டுறவுத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கூட்டுறவு, ஆவணப் பதிவுத்துறை.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வருவாய், வணிக வரிகள், ஆயத்துறை.

6. மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் (உணவுத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

உணவு, மீன்வளம், இளைஞர் அணி, பிற்பட்ட வகுப்பினர், தேர்தல்கள், முன்னாள் இராணுவத்தினர், விலைக் கட்டுப்பாடு.

7. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி அறநிலைய அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத்துறை, சின்கோனா உட்பட வனங்கள்.

8. மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி (சட்டத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் சட்டம் இயற்றல், கடன் கொடுத்தல் சட்டம் இயற்றல், சீட்டு நிதிச் சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு.

9. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி, வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

10. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (உள்ளாட்சித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நகராட்சிகள், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊரகக் கடன்கள், பூமிதானம்-கிராமதானம்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழிலாளர், வீட்டுவசதி, குடிசைமாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், நகர அமைப்பு, இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

அரிசன நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக்காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர்.

13. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

14. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (வேளாண்மை, நீர்ப்பாசனத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண்மைப் பணிக்கூட்டுறவுச் சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனம், ஆக்ரோ பொறியியல் பிரிவு.



15. மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (கிராமத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கிராம, குடிசை மற்றும் சிறு தொழில்கள், பால், பால்வள நிறுவனம், வக்ப்.

16. மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் (நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—நல்வாழ்வு.

17. மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி (சமூகநலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூகநலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

18. மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் (கைத்தறித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—கைத்தறி, கதர், நெசவு, நூல்.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்

மாண்புமிகு மேலவைத் தலைவர்

திரு. ம.பொ. சிவஞானம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்

திரு. ஜி. சுவாமிநாதன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. ஈ. எஸ். வெங்கடேசன்.
2. திரு. வி. ஆர். பெரியண்ணன்.
3. திரு. க. இராமமூர்த்தி.
4. திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி.

மேலவைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

சார்புச் செயலாளர்

திரு. த.பி. டெல்லிதுரை, பி.எஸ்.சி., பி.எல்.

விவாதப் பதிவாளர்

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல், பி.எல்.

தலைமை நிருபர்.

திரு. ச. சுவாமிநாதன்.

**ாகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.**

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| அப்துல் வகாப், திரு. கே. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 2 அறிவழகன், திரு. க., எம்.ஏ. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர்கள் தொகுதி. |
| 3 ஆறுமுகம், திரு. சி. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 4 ஆற்காடு வீராசாமி, திரு. நா. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 5 இரத்தின பாலகுருசாமி, திரு. | நியமனம். |
| 6 இராகவானந்தம், திரு. எஸ். (தொழிலாளர் நல அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 7 இராமகிருஷ்ணத் தேவர், திரு. எஸ். | இராமநாதபுரம் உள்ளாட்சி, மன்றத் தொகுதி. |
| 8 இராசா முகமது, திரு. கா. (கிராமத் தொழில்துறை அமைச்சர்.) | மாநிலச் சட்டமன்றப் பேரவை, |
| 9 இராமமூர்த்தி, திரு. க. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 10 இளம்பரிதி, திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 11 எலமந்தா, திரு. பி., எம்.ஏ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 12 கிருஷ்ணசாமி, திரு. கே.ஏ., எம்.ஏ., பி.எல். (கூட்டுறவுத் துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 13 சங்கரலிங்கம், திரு. ம., எம்.ஏ. | திருநெல்வேலி—கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 14 சந்தோஷம், திரு. த., எம்.ஏ.,பி.எல். | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் தொகுதி. |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும் (1) | தொகுதி (2) |
|---|---|
| 15 சிவஞானம், திரு. ம. பொ. (மாண்புமிகு தலைவர்). | நியமனம். |
| 16 சீதாதேவி கிருஷ்ணசாமி, திருமதி. | நியமனம். |
| 17 சுந்தரேசத் தேவர், திரு. என். | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 18 சுவாமிநாதன், திரு. ஜி., பி. பார்ம். (மாண்புமிகு துணைத் தலைவர்.) | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 19 டி' மாண்டி, திரு. டி. வி. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 20 தங்கப்பாண்டியன், திரு. வே., பி.ஏ., பி.டி. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 21 தங்கவேலு, திரு. ஏ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 22 தமிழரசி, திருமதி சி. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 23 தாமஸ், திரு. பி. ஆர். .. | மதுரை-இராமநாதபுரம் பட்டதாரிகள் தொகுதி. |
| 24 தாமோதரன், திரு. ஏ.ஆர்., பி.எஸ்ஸி. (ஹானர்ஸ்). | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 25 வெற்றிடம் .. .. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 26 திராவிடமணி, திரு. ஆ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 27 நல்லசிவன், திரு. ஆ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 28 நாராயணசாமி, திரு. கே. (சட்டத்துறை அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 29 நீலநாராயணன், திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |



| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும் (1) | தொகுதி (2) |
|---|---|
| 30 பாலசுப்பிரமணியம், திரு. கு. மா. | நியமனம். |
| 31 பாலசுப்ரமணியம், திரு. ஆ. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 32 புலவர் புலமைப்பித்தன் | நியமனம். |
| 33 பெரியண்ணன், திரு. வீ. ஆர். | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 34 மணி, திரு. கோ. சி. .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 5 மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி, திருமதி. | நியமனம். |
| 6 மாணிக்கம், திரு. ப. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 7 மியாகான், திரு. ஜே. எம். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 8 மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி-புதுக்கோட்டை ஆசிரியர்கள். |
| 9 முத்துசாமி, திரு. செ. .. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள். |
| 0 முருகேசன், திரு. எச். எல். | நியமனம். |
| 1 ராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 2 லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா. | வட ஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர்கள். |
| 3 வசந்த பை, திரு. ஜி. .. | சென்னை பட்டதாரிகள் தொகுதி. |
| 4 வில்வம், திரு. ஏ. கே. .. | நியமனம். |
| 5 வீரப்பன், திரு. இராம. (செய்தி-அறநிலைய அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| வெங்கடேசன், திரு. ஈ. எஸ். | நியமனம். |
| ஹண்டே, டாக்டர் எச்.வி. | சென்னை பட்டதாரிகள் தொகுதி. |
| வெற்றிடம் .. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |

(மாண்புமிகு மேலவைத் தலைவர்) [1980 பிப்ரவரி 7

வீட்டுக்கு வர முடியாத நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. எனது கா
போலீசாரால் பின் தொடரப்படுகிறது. எனது தொலைபேசி டேப் செய்யப
படுகிறது. பல நேரங்களில் முறையாக இயங்க முடியாதவாறு தடை செய்யப்
படுகிறது . . ."

இது குறித்து அரசின் விளக்கத்தைக் கோரியிருந்தேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் 5—4—1980 அன்று கீழ்க்கண்ட விளக்கத்தை அளித்தார் :—

"அரசுக்கு வந்த தகவலின்படி, கடந்த 10 நாட்களாக திரு. ஆற்காடு நா. வீராசாமி, எம்.எல்.சி. அவர்கள் செயல்பட முடியாத நிலையில் போலீசாரால், ஒரு குற்றவாளியைப் போல கண்காணிக்கப்படவில்லை என்று தெரிகிறது. அவருடைய வீடு சி.ஐ.டி. அதிகாரிகளால் முற்றுகையிடப் படவில்லை. அதை டி.ஐ.ஜி. (சி.ஐ.டி.) நேரிலும் கண்காணிக்கவும் இல்லை. ஆகவே அவரைப் பார்க்க வருபவர்கள் கண்காணிக்கப்படுகிறார்கள், அச்சுறுத்தப்படுகிறார்கள் என்ற கூற்று உண்மைக்குப் புறம்பானது. அவரது உறவினர்கள் கூட வீட்டிற்கு வர முடியாத நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதும் உண்மையல்ல. அவரது கார் போலீசாரால் பின்தொடரப்படுகிறது என்பது மெய்யன்று. அவரது தொலைபேசி டேப் செய்யப்படுகிறது என்பதும் உண்மையல்ல. பல நேரங்களில் முறையாக அதை இயக்க முடியாதபடி தடை செய்யப்படுகிறது என்பதும் உண்மையல்ல. அப்படித் தடை ஏதும் ஏற்பட்டிருப்பின் அதற்குப் போலீசார் பொறுப்பல்ல. ஆகவே, இந்த அரசுக்கோ, கண்காணிப்புத் துறைக்கோ அவருக்கு இடையூறு விளைவிக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்."

திரு. வீராசாமி அவர்கள் 5—2—1980 ஆம் தேதியிட்டு அளித்துள்ள கடிதத்தில், மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் உண்மைக்கு மாறானதை அவையில் படித்தார் என்றும், ஓர் உயர் மட்ட அதிகாரியை நியமித்து விசாரிக்க வேண்டும் என்றும் கோரியுள்ளார். என் முன்னுள்ள பிரச்சினை யெல்லாம் திரு. வீராசாமி எழுப்பிய பிரச்சினையை மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்பொழுது உரிமைப் பிரச்சினை உள்ளதா, இல்லையா என்பதுதான். இது குறித்துத்தான் நான் தீர்ப்புக் கூற வேண்டும்.

ஓர் உறுப்பினர் அவையில் இருக்கும்போதோ அல்லது அவைக்கு வரும் போதோ அல்லது அவையை விட்டுச் செல்லும்போதோ அல்லது அவை உறுப்பினர் என்ற முறையில் அவையின் அலுவலை ஆற்றும்போதோ, தடுக்கப் பட்டாலோ அல்லது அச்சுறுத்தப்பட்டாலோ, அது அவை மீறிய செயலாகும்.



980 பிப்ரவரி 7] [மாண்புமிகு மேலவைத் தலைவர்]

றுப்பினர் அவர்கள் எவ்விதம் தாம் இந்த அவையின் உறுப்பினர் என்ற
றையில் அவையின் அலுவல்களை ஆற்றும்போது தடுக்கப்பட்டார் என்று
ட்டிக் காட்டவில்லை.

மேலும் ஓர் உறுப்பினர் அவைக்கு வரும்போதோ அல்லது அவையை விட்டுச் செல்லும்போதோ அவமானப்படுத்தப்பட்டாலோ அல்லது அவர் அவையில் ஆற்றிய கடமை குறித்து அச்சுறுத்தப்பட்டாலோ, அது அவை உரிமை மீறிய செயலாகும். அவ்விதமாகவும் உறுப்பினர் குறிப்பாகச் சுட்டிக் காட்டவில்லை.

நாடாளுமன்ற மக்கள் அவையில் 31—5—1972 ஆம் தேதியன்று ஒரு உறுப்பினர், 'கடந்த மூன்று மாதங்களாக தம் வீடு வேவுச் செய்தி அதிகாரிகளால் (இன்டெலிஜென்ஸ்) கண்காணிக்கப்படுவதாகவும், தம் வீட்டிற்கு வருபவர்கள் அச்சுறுத்தப்படுவதாகவும்' எழுப்பிய உரிமைப் பிரச்சினைக்கு, அவைத் தலைவர் கீழ்க்கண்ட தீர்ப்பை அளித்துள்ளார்கள் :—

"இதில் உரிமைப் பிரச்சினை ஒன்றும் இல்லை. அரசுச் செய்கை நிர்வாக அல்லது பாதுகாப்பு நடவடிக்கையாகும். அது குறித்து நான் தீர்ப்புக் கூறவில்லை. உறுப்பினர் தடுக்கப்பட்டிருந்தால், விசாரிக்கிறேன். ஆனால் உரிமை மீறிய பிரச்சினையாக நான் ஏற்றுக்கொள்ள முடியாது. சட்டத்துக்கு எதிராக நான் எந்த உறுப்பினருக்கும் பாதுகாப்புக் கொடுக்க முடியாது."

மேலும், உறுப்பினர் அவர்கள் தமது தொலைபேசி 'டேப்' செய்யப் படுகிறது என்றும், முறையாக இயங்காதவாறு பல நேரங்களில் தடை செய்யப்படுகிறது என்றும் கூறினார். இது குறித்தும் நாடாளுமன்ற மக்கள் அவையில் 29—4—1960 அன்று அளிக்கப்பட்ட தீர்ப்பைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

"இங்கிலாந்திலும், இங்கேயும் உறுப்பினர்களுக்கு தங்கள் கடமையை ஆற்ற சில உரிமைகள் உள்ளன. வெளியில், உறுப்பினர்கள் சாதாரண குடிமகனுக்குக் கிட்டாத தனி உரிமைகளைக் கோரக் கூடாது. இதே மாதிரியான காரியம் சாதாரணக் குடிமகனுக்கு நடந்திருந்தால், அதை இங்கே உரிமைப் பிரச்சினையாகக் கொண்டு வர முடியாது."

எனவே, திரு. வீராசாமி அவர்கள் எழுப்பிய பிரச்சினையில் மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது, உரிமை மீறல் பிரச்சினை ஏதும் இல்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர்) [1980 பிப்ரவரி 7

பொதுவாக, அவை நடக்கும்போது, இம்மாதிரி உறுப்பினர்களுக்கு மனச் சங்கடம் ஏற்படும் காரியங்கள் தவிர்க்கப்பட வேண்டும். அரசும் இதை கவனத்தில் கொண்டு தக்க உத்தரவுகள் பிறப்பிப்பார்கள் என்று நம்புகிறேன்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### (1) பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷனின் சென்னை கிளை ஊழியர்கள் மந்தமாக வேலை செய்வதால் பெட்ரோலிய பொருட்கள் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள தடை குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் போன்ற பெட்ரோலிய பொருள்கள் கையிருப்பு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது குறித்து கொடுத்திருந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு தலைவரவர்களே, பெட்ரோலியம் எம்ப்ளாயிஸ், மற்றும் நேஷனல் பெட்ரோலியம் எம்ப்ளாயிஸ் ஆகிய யூனியன்களைச் சார்ந்த பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷனின் தண்டையார்பேட்டை நிறுவனத்தின் ஊழியர்கள் 3—1—1980 அன்று ஒரு நாள், சட்டத்திற்குப் புறம்பாக வேலை நிறுத்தம் செய்ததல்லாமல், விதி முறைக்கேற்ப வேலை செய்தல் அதாவது மந்தமாக வேலை செய்தல் (கோ ஸ்லோ) என்னும் கொள்கையையும் அன்றிலிருந்து கடைப்பிடித்து வருகின்றனர். அவர்கள் கடைப்பிடித்து வரும் இக்கொள்கையின் காரணமாக தண்டையார்பேட்டை நிறுவனத்திலிருந்து விநியோகத்திற்காக வெளியேற்றப் படும் பெட்ரோலிய பொருட்களின் விநியோகம் மொத்தத்தில் 60 சதவிகித அளவிற்கே செய்ய முடிந்துள்ளது என அக்கார்ப்பரேஷனின் வட்டார மேலாளர் தெரிவித்துள்ளார். இக்கார்ப்பரேஷனின் தண்டையார்பேட்டை நிறுவனத்தின் மூலமாக கடந்த ஜனவரி திங்களுக்கென பெட்ரோலிய பொருட்களின் விநியோகம் குறித்து ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவு மற்றும் விநியோகத்திற்காக எடுக்கப்பட்ட அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

மண்ணெண்ணெயைப் பொறுத்தமட்டில், மாவட்டங்களிலுள்ள மற்ற எண்ணெய் நிறுவனங்களின் விநியோகஸ்தர்கள் மூலமாக விநியோகத்திற்குக் கிடைக்கும் மண்ணெண்ணெயில் தடங்கல் எதுவும் இல்லாமலிருந்தால், பாரத்



1980 பிப்ரவரி 7] [திரு. கா. இராசா முகமது]

பெட்ரோலியம் நிறுவனத்தினரிடமிருந்து எடுக்காமல் விடப்பட்ட மண்ணெண்ணெயால் பெரும் பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை என்பதோடு கூட பொது மக்களுக்கு மண்ணெண்ணெய் கிடைப்பதிலும் தட்டுபாடு எதுவு மில்லை. மண்ணெண்ணெய் தட்டுப்பாடு பற்றியோ, மண்ணெண்ணெய் கிடைக்காதது பற்றியோ புகார் எதுவும் அரசுக்கோ அல்லது உணவுப் பொருள் வழங்குத் துறை ஆணையருக்கோ வரவில்லை.

தஞ்சை மற்றும் திருச்சி மாவட்டங்களிலுள்ள சில பகுதிகளைப் பொறுத்த மட்டில் இதுகாறும் தண்டையார்பேட்டை நிறுவனத்திலிருந்து விநியோகத்திற்காக பெறப்பெற்று வந்த பெட்ரோலியம் பொருள்களை பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷனின் திருச்சிராப்பள்ளி நிறுவனத்திலிருந்து பெறுவதற்கு தனி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என அக் கார்ப்பரேஷனின் வட்டார மேலாளர் தகவல் தெரிவித்துள்ளார். ஆகவே பெட்ரோல் மற்றும் டீசல் விநியோக முறை சென்னை நகரம், செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களை மட்டுமே பாதித்துள்ளது.

பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷனைச் சார்ந்த தண்டையார்பேட்டை நிறுவனத்தின் மூலமாக தற்போது ஏற்பட்டுள்ள விநியோகக் குறைவினால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களுக்கு பெட்ரோலிய பொருட்களின் விநியோகத்தை எவ்வகையில் சமாளிப்பது என்பது குறித்து தமிழக போக்கு வரத்து ஆணையர் மாநில ஒருங்கிணைப்பாளரை [இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட்டின் வட்டார அலுவலர் (விற்பனை)] கலந்தாலோசித்ததில் அவர் தேவைகளை முழுமையான அளவில் பூர்த்தி செய்ய முடியாவிட்டாலும் ஓரளவு பூர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்று கூறியுள்ளார்.

பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷனைச் சார்ந்த ஊழியர்களின் 'விதி முறைப்படி' வேலை செய்தல் அதாவது மந்தமாக வேலை செய்தல் (கோ ஸ்லோ) இயக்கம் சம்பந்தமான எல்லா நடவடிக்கைகள் பற்றியும் அவ்வப் போது தொழிலாளர் நல ஆணையாளருக்குத் தெரிவிக்கப்பட்டு ஆணை யாளரின் மூலமாக துணை தொழிலாளர் நல ஆணையாளரும் மற்றும் தொழிலாளர் நல அலுவலரும் மேற்கூறப்பட்ட யூனியன்களின் தலைவர் களுடன் கலந்து இப்போராட்டத்தைத் திரும்பப் பெறுவதற்கான சாத்தியக் கூறுகளை ஏற்படுத்துவதற்குரிய பேச்சுவார்த்தைகள் நடத்தி வருகின்றனர். ஆனாலும் அவர்களது இத்தகைய முயற்சி இன்னும் நல்லதொரு முடிவுகாண

[திரு. கா. இராசா முகமது] [1980 பிப்ரவரி 7

(பிற்பகல் 4-10)

இயலவில்லை என்பதை பாரத பெட்ரோலியம் கார்ப்பரேஷன் வட்டார மேலாளர் அவர்கள் தெரிவிக்கிறார். இதுவரை உள்ள நிலைமைகளை வைத்து மிக முக்கியமான சென்னை நகரம், செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களை பாதித்திருக்கக்கூடிய டீசல் விநியோகத்தைப் பொறுத்த வரையில், கார்ப்பரேஷன் மூலமாக மேலும் துரித நடவடிக்கை எடுத்து, பிரச்சினைகளை சமாளிப்பதற்கான முயற்சிகளில் அரசும் ஈடுபட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(2) இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் முன்பு மேலவை உறுப்பினர் திரு. பா. ரா. தாமஸ் அவர்களும், இராமநாதபுரம் மாவட்ட அனைத்து ஆசிரியர் பேரவை பிரதிநிதிகளும் உண்ணாவிரதம் இருப்பது குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் முன்பு மேலவை உறுப்பினர் திரு. பா. ரா. தாமஸ் அவர்களும், இராமநாதபுரம் மாவட்ட அனைத்து ஆசிரியர் பேரவை பிரதிநிதிகளும் உண்ணாவிரதம் இருப்பது குறித்து ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது அவ்வாறு விதிகளின்கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாக விளக்க வேண்டுகிறேன்.

*** திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, விருதுநகர் கல்வி மாவட்ட அதிகாரியாக இருப்பவர் அரசைப்பற்றியும், கல்வி அமைச்சர் அவர்களைப் பற்றியும், ஆசிரியர்களைப்பற்றியும் ஆசிரியர் கூட்டங்களிலும், பொது இடங்களிலும் மிகவும் அவதூறாகவும், இழித்தும், பழித்தும் பேசி வருவதால், அங்கே கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. விருதுநகர் கல்வி மாவட்டம் கல்வியில் சிறந்த மாவட்டம், எஸ்.எஸ்.எல்.சி. தேர்விலே முதலிடம் பெறும் மாவட்டம் என்பது அரசுக்குத் தெரியும். அறிக்கையிலேயும் கூட அந்த விபரம் இருக்கிறது. அப்படிப்பட்ட அமைதியான ஒரு கல்வி மாவட்டத்திலே ஒரு தனிப்பட்ட அதிகாரியினுடைய போக்கால் அங்கே இருக்கின்ற கல்வி அமைதியே பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆசிரியர்களைப் பற்றியும்; அரசைப்பற்றியும், அமைச்சர் அவர்களைப்பற்றியும் தமிழகப் பல்கலைக் கழகங்களுடைய தரத்தைப்பற்றியும், பொது இடங்களிலேயும், ஆசிரியர் கூட்டங்களிலும் பேசுகின்ற அவருடைய நெறிகெட்ட போக்கைக்



1980 பிப்ரவரி 7] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

குறித்து ஆசிரியர்களிடத்திலே கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. இதைப்பற்றி அங்குள்ள ஆசிரியர் சங்கங்கள் புகார் செய்திருக்கிறார்கள். இதைத் தெரிந்து கொண்ட அவர் தனக்கு வேண்டிய ஒருசிலரை ஏவிவிட்டு மாற்றுக் கருத்துக்களை அனுப்ப ஏற்பாடு செய்திருக்கிறார். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையால் அந்தச் சிறந்த கல்வி மாவட்டத்திலே கல்வி அமைதி பாதிக்கப் படும் அளவுக்கு நிலைமைகள் உருவாகி மேலவை உறுப்பினரே நேரடி நடவடிக்கையில் ஈடுபடவேண்டிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்பதை தலைவர் அவர்களுக்கும், கல்வி அமைச்சர் அவர்களுக்கும் சொல்லிக்கொண்டு, தனிப்பட்ட ஒரு நபரால் அந்தக் கல்வி மாவட்டத்திலே கல்வி மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லி, இந்தப் பிரச்சினையைப்பற்றி விவாதிக்க அவையின் நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்ட கல்வி அதிகாரி, ஆசிரியர் பெருமக்களை இழிவாகவும், மனம் புண்படும் வகையிலும் பேசி நடந்துகொள்கிறார் என்றும், அன்னாரை உடனடியாக மாற்ற வேண்டும் என்றும் சில ஆசிரியர் சங்கங்களும், அந்த மாவட்டக் கல்வி அதிகாரி கண்டிப்பானவர், திறமையானவர், தம் பணியைச் செவ்வனே செய்பவர், மாணவர்களின் திறனை நன்கு ஊக்குவிப்பவர், அத்தகையவரை மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை நியாயமற்றது என்றும், இந்த மாவட்டக் கல்வி அதிகாரி இங்கேயே நீடித்திருக்க வேண்டும் என்றும், மற்ற ஏழு ஆசிரியர் சங்கங்கள் துண்டு பிரச்சாரங்களை வெளியிட்டுள்ளன. இவ்வாறு ஆசிரியர் சங்கங்கள் மாற்றி மாற்றி அச்சடித்த அறிக்கைகள் விடுவதும், சுவரொட்டிகள் அடித்து ஒட்டுவதும் சில நாட்களாக நடந்து வருகிறது.

இதைக் குறித்து பள்ளிக் கல்வி இயக்குநர், இராமநாதபுரம் முதன்மைக் கல்வி அலுவலருடன் தொடர்பு கொண்டு அந்த மாவட்டக் கல்வி அதிகாரி மீது கூறப்பட்டுள்ள புகார்களுக்கு எந்தவித ஆதாரமும் கிடையாது என்றும், அவர் சிறப்பாகப் பணிபுரிகிறார் என்றும், தவறாகப் பணிபுரிகின்ற ஆசிரியர்களிடம் கண்டிப்பாக நடப்பதாகவும், இதனால் அதிருப்தியடைந்த ஒருசிலர் சங்கங்களின் போர்வையில் மாவட்டக் கல்வி அதிகாரியின் மீது வீண்பழி சுமத்துவதாகவும், எனவே, மாவட்டக் கல்வி அதிகாரியை மாற்றுவது உசிதமல்ல என்றும் கூறியுள்ளார்.

## இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் முன்பு மேலவை உறுப்பினர் திரு. பா. ரா. தாமஸ் அவர்களும், இராமநாதபுரம் மாவட்ட அனைத்து ஆசிரியர் பேரவை பிரதிநிதிகளும் உண்ணாவிரதம் இருப்பது குறித்து

[திரு. செ. அரங்கநாயகம்] [1980 பிப்ரவரி 7

அந்த மாவட்டத்திலுள்ள ஒரு ஆசிரியர் சங்கம் 2—2—1980-ல் இராமநாதபுரம் ஆட்சிமன்றத் தலைவர் அலுவலகம் முன்பு ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் இருக்கப்போவதாக துண்டு பிரசுரம் வெளியிட்டது. 2—2—1980-ல் நடைபெற்ற உண்ணாவிரதத்தில் 14 பேர்கள் மட்டுமே கலந்துகொண்டு பின் பிரிந்து சென்றுள்ளனர். எவ்வித அசம்பாவிதமும் நடைபெறவில்லை.

இந்நிலையில் மாவட்டக் கல்வி அலுவலரை மாற்ற வேண்டுமென்று மேற்கொண்ட உண்ணாவிரதம் தேவையற்றது. மாவட்டக் கல்வி அலுவலர் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு எவ்வித ஆதாரமும் இல்லையென்று விசாரணைக்குப் பிறகு தெரிவித்திருப்பதாலும், தவறு செய்யும் அதிகாரிகள் மீது இலாக்கா நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதாலும், இதனை ஒரு பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகக் கருதி மேலவை நடவடிக்கைகளை ஒத்திவைக்க அவசியமில்லையென தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டிய அவசியம் இல்லை என்று கருதி என் அனுமதியை மறுக்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** அந்த விருதுநகர் மாவட்டக் கல்வி அதிகாரி . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இதிலே, மேலும் பேச்சு கிடையாது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** ஆசிரியர்கள் தங்களுடைய . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** பேசத்தானே செய்கிறீர்கள் ! பேச்சுக்கு இடமில்லை. முடியாது. அப்படி ஒரு உறுப்பினருக்கு இல்லாத விசேஷ சலுகை உறுப்பினர் அவர்களுக்குக் கிடையாது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒருதலைப்பட்சமான அறிக்கையை இந்த அவைக்கு அளித்திருக்கிறார்கள். இந்த அறிக்கையின் மீது எதிர்ப்பு தெரிவித்து நான் இந்த சபையிலிருந்து வெளிநடப்பு செய்கிறேன்.

(பின்னர் உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் அவையிலிருந்து வெளியேறினார்.)



## 3) இராஜபாளையத்திலுள்ள பி.ஏ.சி. இராமசாமி ராஜா பாலிடெக்னிக் கல்லூரியில் ஆசிரியர்-மாணவர் உண்ணாவிரதம் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது இந்த மாதிரி யாரும் செய்ததே கிடையாது. ஆசிரியர்களின் பிரதிநிதிகள் எப்படிச் செய்கிறார்களே !

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் ம. சங்கரலிங்கம், பா. ரா. தாமஸ், க. மீனாட்சிசுந்தரம், செ. முத்துசாமி, ஆ. நல்லசிவன் ஆகியோர் இராஜபாளையத்திலுள்ள பி. ஏ. சி. இராமசாமி ராஜா பாலிடெக்னிக் கல்லூரியில் ஆசிரியர்-மாணவர் உண்ணாவிரதம் குறித்து ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு விதிகளின் கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். முதலிலே தீர்மானம் கொடுத்த உறுப்பினர் திரு. பா. ரா. தாமஸ் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

(பின்னர் உறுப்பினர் திரு. பா. ரா. தாமஸ் அவையில் இல்லாததால் திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்களை பேசுமாறு தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.)

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சினை. ஒழுங்குப் பிரச்சினை மீதும், எந்த ஒரு உறுப்பினருக்கும் அவையை விட்டு வெளியேறுவதற்கு உரிமை இருக்கிறது. ஆசிரியர் பிரதிநிதிகள் மட்டும்தான் இப்படிச் செய்கிறார்கள் என்று சொல்வது எங்களை அவ்வளவு மதிப்பதாக இல்லை என்ற மனத்துறையை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். வெளியேறுவதைப் பொறுத்தவரையில், எந்தக் கருத்துக்களைச் சொல்லி நாம் வெளியேற உரிமையுண்டு. அப்படி உண்டா இல்லையா என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற உரிமையை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆசிரியர்களின் பிரதிநிதிகளுக்கு ரொம்ப அதிகப் பொறுப்பு இருக்கிறது என்று மதிப்பு கொடுத்துத்தான் சொல்லியிருக்கிறேன். குறைத்து அல்ல, உறுப்பினர் எல்லோரும் ஆசிரியர் பிரதிநிதிதான். தயவு செய்து ஒத்துழைக்க வேண்டும்.

*** திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்திலே உள்ள இராஜபாளையத்திலுள்ள பி. ஏ. சி. இராமசாமி ராஜா பாலிடெக்னிக்கைச் சார்ந்த ஆசிரியர்கள் மற்ற பாலிடெக்னிக் ஆசிரியர்களோடு 29—10—1979 அன்று தேர்வு புறக்கணிப்புப் போராட்டத்திலே ஈடுபட்டார்கள். 13—11—1979 அன்று போராட்டத்திலே ஈடுபட்டவர்களை அழைத்துவைத்து

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1980 பிப்ரவரி 7]

அரசுத் தரப்பிலே பேசி, யாரும் பழிவாங்கப்பட மாட்டார்கள் என்று உறுதி மொழி தந்து, அதற்குப் பின்னாலே போராட்டம் முடிக்கப்பட்டது. பின்னர், அந்தப் போராட்டத்திலே தலைமைதாங்கி நடத்திய தலைவர் திரு. சந்திரசேகரன் என்பவர் அந்த பாலிடெக்னிக் பள்ளியில் இருந்து டிஸ்மிஸ் செய்யப்பட்டு பழிவாங்கப்பட்டார். அதே நேரத்தில் ஆதித்தன் என்ற ஒரு மாணவர் கூட டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார். டிஸ்மிஸ் செய்யப்பட்டது மட்டுமல்லாமல், அந்த ஆசிரியர்கள் தரப்பிலே அதிகாரிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தைகள் மூலமாக முடிக்கலாம் என்று கருதி தொழில் கல்வி இயக்குநரிடம், அந்தப் போராட்டத்தை நடத்திய தலைவர்கள் வந்து பேசிய போது, 'உங்களால் ஆனதைப் பார்த்துக்கொள்ளுங்கள்' என்று பேசி அனுப்பியிருக்கிறார். அதைத் தொடர்ந்து போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆசிரியர்கள் மட்டுமல்ல, மாணவர்களும் போராட்டங்களிலே ஈடுபட்டிருக்கிறார்கள். 4—2—1980 அன்று 37 மாணவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 5—2—1979 அன்று 87 மாணவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்படி அங்கே நிலைமை கட்டுக்கடங்காமல் போய்க்கொண்டிருக்கிறது. அவர்களை ஆதரித்து தொடக்கப் பள்ளி, உயர் நிலைப் பள்ளி, கல்லூரிகள் அனைத்தும் மூடப்பட்டிருக்கின்றன. இந்த நெருக்கடியான நிலையில் அதுபற்றி விவாதித்து நல்ல முடிவு எடுப்பதற்கு வாய்ப்பாக இந்த அவையை ஒத்திவைத்து அதுபற்றி விவாதிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இராஜபாளையத்தில் உள்ள பி. ஏ. வி இராமசாமி ராஜா பாலிடெக்னிக்கைச் சார்ந்த சில ஆசிரியர்களும் மற்றும் ஆசிரியர் அல்லாதவர்களும் சேர்ந்து. . .

**திரு. செ. முத்துசாமி :** இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை நானும் கொடுத்திருந்தேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் நேற்று கொடுக்க வில்லை. பலபேர் கொடுக்கிறபோது முன்னே கொடுத்தவர்கள் மட்டும்தான் பேசலாம் என்று அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவெடுத்திருக்கிறோம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** விதிமுறைகளில் அப்படி இல்லை. ஆனால் அலுவல் ஆய்வுக் குழு . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆய்வுக் குழு முடிவெடுத்தால், அதுவும் விதிதான். ஏழு பேர் கொடுத்திருக்கிறார்கள். ஏழு பேரும் எப்படிப் பேச முடியும் ?



0 பிப்ரவரி 7]

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தீர்மானம் கொடுத்த அத்தனைபேரும் பேச ண்டும். பேசாமல் இருந்தால், எங்களது பெயர் பத்திரிகைகளில் வருவதே லை. பத்திரிகைகளில் பெயர் வரவேண்டும் என்ற ஆசையால் அல்ல. ங்களும் அந்தப் பிரச்சினைகளை எடுத்துக்கொண்டோம் என்று வெளி லகத்திற்குத் தெரிய வேண்டும் என்பதால்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மறுபடியும் ஆய்வுக் குழுவிலே வைத்து ந்த முடிவை மாற்றுகிறோம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** ஆய்வுக் குழுவிலே இப்படி முரணான முடிவு டுக்கலாமா ? விதிமுறைகளிலே இதற்கு இடம் இருக்கிறதா ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திரும்பவும் ஆய்வுக் குழுவின் தீர்ப்புக்கு வக்கிறேன். அவர்கள் இந்த முடிவை மாற்றினால், நானும் ஏற்றுக் காள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** சில பிரச்சினைகளைப்பற்றிப் பேசும்போது, நவரே எல்லா விஷயங்களையும் சொல்லிவிட முடியாது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆய்வுக் குழு முடிவிற்கு ஒத்துழைப்புத் ாருங்கள். தேவைப்பட்டால் பிறகு மாற்றலாம்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இராஜபாளையத்தில் உள்ள பி. ஏ. வி. இராமசாமி ராஜா பாலிடெக்னிக்கைச் சார்ந்த சில ஆசிரியர்களும் ற்றும் ஆசிரியர் அல்லாதார்களும் சேர்ந்து, அந்த நிறுவனத்தின் சிவில் இஞ்சினியரிங் துறைத் தலைவர் அவர்களைத் தலைவராகக் கொண்டு ஒரு சங்கம் அமைத்தனர். இச்சங்கம் அரசினரால் அங்கீகரிக்கப்படவில்லை. இவர்கள் ஆசிரியர்களது ஊதிய விகிதத்தை மாற்றியமைப்பது போன்ற சில கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் இறங்கினர். இச்சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவரும் ஆசிரியர்களை 1979 அக்டோபரில் நடக்க இருந்த போர்டு தேர்வுகளை நிராகரிக்குமாறு தூண்டினர். தேர்வு நடத்து வதற்கான வேலைக்கு ஒத்துழைப்புத் தராமல் நின்றுவிட்டனர். எனவே, அரசு மற்றும் தனியார் துறை பாலிடெக்னிக் முதல்வர்களுக்கு தேர்வுகளை நடத்தும் பொருட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மற்றும் தேர்வுப் பணிக்கு ஒத்துழைப்புத் தராத ஆசிரியர்களின் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தப்பட்டனர். இப்பாலிடெக்னிக்கைச் சார்ந்த

(பிற்பகல் 4-20)

12 ஆசிரியர்கள் தேர்வு வேலையை நிராகரித்தனர். எனவே, அவ்வாறு தேர்வுப் பணியை நிராகரித்த ஆசிரியர்களின் 1979 அக்டோபர் மற்றும் நவம்பர் மாத ஊதியங்களிலிருந்து பல நாட்களுக்கான ஊதியம் பிடித்தம் செய்யப்பட்டது. அந்த பாலிடெக்னிக்கின் சங்கத் தலைவர் (சிவில் இன்ஜினியரிங் துறைத் தலைவர்) மீதும் நிர்வாகத்தினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. 21—1—1980 அன்று அவருடைய தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்டு அன்னார் பணியிலிருந்து நீக்கப்பட்டார். 22—1—1980-லிருந்து அந்தப் பாலிடெக்னிக்கின் ஆசிரியர்கள் கறுப்புச் சின்னத்தை அணிந்துகொண்டு பாலிடெக்னிக் ஆரம்பிக்கும் 10 நிமிடம் முன்பும் முடிந்த 10 நிமிடம் பின்பும் கோஷங்களை எழுப்பி, தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்தனர். மேலும், இராஜபாளையம் தாலுக்கா ஆபீஸ் முன்பும் 27—1—1980-லிருந்து தொடர உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர். அந்த பாலிடெக்னிக்கைச் சார்ந்த ஆசிரியர்களும் ஆசிரியரல்லாதாரும் கூட்டுச் செயற்குழு என்னும் அமைப்பை ஏற்படுத்தியுள்ளனர். இக்குழு 9 கோரிக்கைகளைக் கொண்ட ஒரு மனுவை அப்பாலிடெக்னிக்கின் நிர்வாகத்தினருக்குக் கொடுத்துள்ளனர். அந்த மனுவில் கண்டுள்ள முக்கிய கோரிக்கைகளாவன :—

அக்டோபர்-நவம்பர் மாதங்களில் பரீட்சையில் ஒத்துழைப்புத் தராத ஆசிரியர்களின் ஊதியம் பிடித்தம் செய்யப்பட்டதை திருப்பித் தரவேண்டுமென்றும்; வேலையிலிருந்து நீக்கம் செய்யப்பட்ட சிவில் இன்ஜினியரிங் தலைவர் மீண்டும் பணியில் அமர்த்தப்பட வேண்டும் என்றும்; மற்றும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாதோர்மீதும் எடுக்கும் பழி வாங்கும் நடவடிக்கைகள் பின்வாங்கப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளன.

சிவில் இன்ஜினியரிங் தலைவரை வேலை நீக்கம் செய்தது குறித்து அன்னார் கொடுத்துள்ள மேல் முறையீடு நிர்வாகத்தினரால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இப்போது ஆசிரியர்கள் மாணவர்களை வேலை நிறுத்தத்தில் ஈடுபடுமாறு தூண்டிவிட்டு வருகின்றனர். அப்பாலிடெக்னிக்கின் மாணவர் சங்கம் 2—2—1980-ல் தொழில் நுட்பக் கல்வி இயக்குநருக்கு அனுப்பிய மனுவில் தாங்கள் இராஜபாளையம் தாலுக்கா அலுவலகம் முன்பு 1—2—1980-ல் இருந்து உண்ணாவிரதம் தொடங்கப் போவதாக அறிவித்திருந்தனர். இம் மனுவில் கூறப்பட்டுள்ள அம்மாணவர்களின் முக்கியமான



கோரிக்கையாவது அப்பாலிடெக்னிக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட சில மாணவர்களை பாலிடெக்னிக்கில் மீண்டும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும், விடுதியிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட மாணவர்களை மீண்டும் விடுதியில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும், மாணவர் சங்கம் செயல்பட அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் மற்றும் தேர்வினை சரியாக நடத்தப்படல் வேண்டுமென்றும் அம்மனுவில் கூறப்பட்டுள்ளது.

ஏழு மாணவர்களுக்கு ஒழுங்கீனமாக நடந்துகொண்டதற்காக மாற்றுச் சான்றிதழ் வழங்கப்பட்டது. அவர்களில் 6 மாணவர்கள் மன்னிப்புக் கோரியதன் காரணமாக பாலிடெக்னிக்கில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். ஏழாவது மாணவர் மன்னிப்புக் கடிதம் தராததினால் அம் மாணவர் பாலிடெக்னிக்கில் அனுமதிக்கப்படவில்லை. உள்ளூர் வருவாய்த் துறை அதிகாரிகளின் ஆலோசனையின் பேரில் 5—2—1980 முதல் மாணவர்களின் வேலை நிறுத்த நடவடிக்கையின் காரணமாக சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்த அந்த பாலிடெக்னிக் மூடப்பட்டுள்ளது.

5—2—1980 அன்று பாலிடெக்னிக்கின் முன்பாக உண்ணாவிரதம் இருந்ததற்காக 36 மாணவர்கள் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இன்று மேற்கொண்டும் 25 மாணவர்கள் உண்ணாவிரதம் இருந்து வருவதாகவும் தெரிய வருகிறது.

எனினும், அரசு மற்றும் பாலிடெக்னிக் முதல்வர், அப்பாலிடெக்னிக்கின் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாதவர்கள் அப்பாலிடெக்னிக்கில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள் ஆகியோர்களுடன் கலந்து செயல்பட்டு ஒரு சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்தி, அப்பாலிடெக்னிக்கை மீண்டும் செயல்படுத்த உத்தேசித்துள்ளது. எனவே இப்பிரச்சினை குறித்து விவாதிக்க இந்த அவையை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்தப் பொருள் குறித்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதி இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு என் அனுமதியை மறுக்கிறேன்.

## (4) கல்லூரி ஆசிரியர்கள் தமிழகம் முழுவதும் காலவரையற்ற உண்ணாவிரதம் மேற்கொண்டிருப்பது குறித்து.

[1980 பிப்ரவரி 7

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, நமது மாநிலத்திலுள்ள அனைத்துக் கல்லூரி ஆசிரியர்களும் இன்று முதல் வேலை நிறுத்தம் செய்வதாக முடிவு செய்து இன்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. மாவட்டத் தலைநகரங்களிலிருந்து வருகிற செய்திகள் மூலமாக, இந்த வேலை நிறுத்தம் எல்லாப் பகுதிகளிலும் நடைபெறுவதாகவே தெரிகிறது. மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் சில தினங்களுக்கு முன்னாலே இந்த அவையில் ஒரு நீண்ட அறிக்கையை வைத்து, ஆசிரியர்களின் எந்தெந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன என்று குறிப்பிட்டார்கள். இருந்த போதிலும், இப்போது ஆசிரியர்களால் வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதால், இந்த நிலை நீடிக்கக்கூடாது என்பதில் இந்த அவையில் உள்ளவர்களுக்கு மிகுந்த அக்கறை இருக்கிறது. நமது நாட்டின்மீது அக்கறை கொண்டவர்களும் இதைத்தான் விரும்புகிறார்கள். எனவே தற்போதைய நிலைமைக்கு என்ன காரணம், இதைத் தீர்ப்பதற்கான வழி என்ன, அரசு ஆசிரியர்களை எவ்வாறு சந்தித்துப் பேசி, அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றி, குறைகளைப் போக்கப் போகிறது என்பது குறித்து இந்த அவையின் உறுப்பினர்களின் மேலான ஆலோசனையையும் தெரிந்துகொள்வதோடு, இது குறித்து அரசு எந்த விதத்தில் செயல்பட இருக்கிறது என்று உறுப்பினர்களாகிய நாங்களும் தெரிந்துகொள்ள ஒரு வாய்ப்பாக அமைய, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இந்தப் பொருள் குறித்து விவாதிக்க தலைவர் அவர்கள் அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு நானும் முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறேன். ஆனால் எங்களுடைய பெயர்கள் இங்கே உச்சரிக்கப்படுவதற்குக்கூட வாய்ப்பளிக்க முடியாது என்றால், நாங்கள் இந்த அவையில் இருப்பதற்கே பொருள் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இது முடிந்து போய்விட்ட விஷயம். உறுப்பினர் குறிப்பிடுவது முடிந்துபோய் 3-வது அயிட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எந்த ஒரு விதியின் அடிப்படையிலும் எல்லா உறுப்பினர்களுடைய பெயரையும் அவையில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றில்லை என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



1980 பிப்ரவரி 7]

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரி ஆசிரியர்கள் குறித்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கே நானும் முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறேன். எனினும் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் பெயர் மட்டும் தான் இங்கே சொல்லப்பட்டது. எங்கள் பெயர் சொல்லப்படவில்லை. எனக்கு வாய்ப்பும் தரப்படவில்லை என்பதைத் தான் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** எனக்குக் கொடுக்கப்பட்ட குறிப்பில் திரு. சங்கரலிங்கம் பெயர் மட்டும்தான் இருக்கிறது. உறுப்பினர் அவர்களுடைய ஒத்திவைப்புத் தீர்மானம் ஆய்வில் இருக்கிறது.

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, அதே பிரச்சினை குறித்து நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அப்படி இருக்கும் போது, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானம் அவை முன் வருகிறது. ஆனால் அதே பிரச்சினை குறித்து நான் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானம் மட்டும் ஆய்வில் இருக்கிறது என்றால், என்னாலே புரிந்துகொள்ள முடியவில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சரி. உறுப்பினர் அவர்களும் இந்தத் தீர்மானம் குறித்து தனது கருத்தைத் தெரிவிக்கலாம்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரி ஆசிரியர்கள் பிரச்சினை குறித்து அவர்களின் தலைவர்கள் மூவர் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு 3-வது நாளாக உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதில் ஒருவருடைய நிலை மிகவும் மோசமாக இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். இதன் காரணமாகவே தமிழ் நாட்டில் உள்ள மற்ற கல்லூரிகளும் மூடப்படும் நிலைமை இருக்கிறது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே இந்தப் பிரச்சினையில் கூறிய அனைத்துக் கருத்துக்களையும் ஆதரித்து, இந்தப் பிரச்சினையைக் குறித்து விரிவாக விவாதிக்க ஆசிரியர்களுக்கு நிவாரணம் தேட, அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று நானும் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, இதே பொருளில் நானும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பைக் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆசிரியப் பிரதிநிதிகள் இவ்வளவு சுருக்கமாகப் பேசுவதாக இருந்தால், நான் எல்லோருக்கும் சந்தர்ப்பம் கொடுத்திருப்பேன்.

[1980 பிப்ரவரி 7

**திரு. செ. முத்துசாமி :** யார் யார் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள் என்று அவர்களின் பெயரையாவது அவையில் அறிவித்தால், நாங்கள் சற்று திருப்தியடையலாம். அதைக்கூட செய்யவில்லையென்றால் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சரி. திரு. மீனாட்சிசுந்தரம்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, ஒன்றை தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இன்றையதினம் இந்தப் பிரச்சினை குறித்து நான் 1½ மணிக்கு முன்னதாகவே முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். விதிகளில் 1 மணி நேரத்திற்கு முன்னதாகக் கொடுத்தால் போதும் என்றிருக்கிறது. ஆக நான் 1½ மணி நேரத்திற்கு முன்னதாகவே அறிவிப்புக் கொடுத்திருந்தும், என்னுடைய பெயரை அழைக்கவில்லை என்பதை தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களேகூட இதை ஒரு ஒத்திவைப்புத் தீர்மானமாக விதிமுறைகளின் கீழ் கொண்டுவரவில்லை. அவர்கள் இருக்கிற அவசர நிலைமைகளை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து. . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே இங்கே குறிப்பிட்டுவிட்டார்கள்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** அவருடைய தீர்மானம் மரபுப்படி இல்லை என்பதைத்தான் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இதை அனுமதிக்க வேண்டும் என்பதே இல்லை.

* **திரு. க. மீனாட்சிசுந்தரம் :** இரண்டு நாட்களுக்கு முன்பாக இதே கல்லூரி ஆசிரியர்கள் பிரச்சினை சம்பந்தமாக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் வந்தபோதே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை கொடுத்தார்கள். சென்ற கூட்டத் தொடரின்போது நடந்த போராட்டத்தின் போது. . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இந்தத் தீர்மானம் எப்படி அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மட்டும் சொல்லவேண்டும். இப்படி மற்ற விஷயங்களையெல்லாம் பேசுவதால்தான், இந்தத் தீர்மானத்தில் ஒருவர் பெயரை மட்டுமே சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.



980 பிப்ரவரி 7]

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** 21 கோரிக்கைகளில் 17 கோரிக்கைகள் ஏற்கப்பட்டுவிட்டதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஏற்கெனவே முடிந்ததையே இப்போது படித்து சமாதானம் சொல்வது சரியல்ல . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திரும்பவும் சொல்ல விரும்புகிறேன், இந்தப் பிரச்சினை எவ்வாறு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** ஆசிரியர்கள் இப்போது புதிதாக நான்கு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அவைகளை நிறைவேற்ற வேண்டும் என்று அது சம்பந்தமாகத்தான் இப்போது காலவரையற்ற உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கிறார்கள். தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த உண்ணாவிரதம் நாளை மிக அதிகமாகப் பரவக்கூடிய நிலையில் இருக்கிறது என்ற காரணத்தால், இந்த அவசரப் பிரச்சினை குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** நானும் இன்று ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அது இப்போது இங்கே வரவில்லை.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** கல்லூரி ஆசிரியர்கள் இன்றைக்கு வேலை நிறுத்தம் செய்து கொண்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்து, இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து அந்தப் பிரச்சினையை குறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதன் காரணமாகவே இதற்கு முன்னாலே இப்படி ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது தந்த அறிக்கையை நான் இப்போது படித்தேன். அதிலும் அவர்கள் கேட்ட 21 கோரிக்கைகளில் 17 கோரிக்கைகளுக்கான உத்தரவுகள் அனுப்பப்பட்டுவிட்டன என்றும் இன்னும் 4 கோரிக்கைகள் அரசின் பரிசிலனையில் இருக்கின்றன என்றும் நான் சொன்னேன். அப்படிச் சொன்னதன் நோக்கம், ஏதோ இந்த அரசு செய்ததைத் திருப்பித் திருப்பிச் சொல்லி, ஆசிரியர்களை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் அல்ல.

சென்ற ஆண்டு ஆசிரியர்களின் போராட்டம் நடைபெற்றபோது, அவர்களோடு விவாதிக்கப்பட்ட பல்வேறு பிரச்சினைகளில் ஒன்று, பெரும்பான்மையான கோரிக்கைகளில் இன்று வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று அவர்கள் பேச்சில் மிகுந்த மனக்குறையோடு தெரிவித்தார்கள். அதைப் போக்கும் வகையில் இப்போது சொல்லப்பட்ட 21 கோரிக்கைகளில்

17 கோரிக்கைகள் மீதான உத்தரவுகள் அனுப்பப்பட்டுவிட்டன, மீதியுள்ள 4 கோரிக்கைகளும் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன என்று சொன்னதன் நோக்கம் கல்லூரி ஆசிரியர்களுக்கு அது எந்த அளவுக்கு மன நிறைவு அளிக்கும் என்பது மட்டுமல்ல, இந்த ஆட்சி எந்த அளவுக்கு இதில் அக்கறை எடுத்துக்கொண்டு செயல்பட்டு வருகிறது என்று காட்டுவதற்காகத்தான். ஆகவே இன்றைக்கு நான் சொல்ல விரும்புவது இந்த ஆசிரியர்கள் இந்த நிலையில் போராட்டத்தைத் துவக்கியிருப்பதென்பது மாணவர்களுடைய எதிர்கால நலனை எந்த அளவுக்குப் பாதிக்கிறது என்பதை மற்றவர்களும் உணர்வார்கள். பெற்றோர்கள் கவலைப்படுகிறார்கள். மாணவர்களும்

(பிற்பகல் 4.30)

இத்தகைய நடவடிக்கைகளில் விருப்பம் கொண்டிருக்கிறார்களா என்பது சந்தேகத்திற்குரிய ஒன்றாகும். இப்படிப்பட்ட சூழ்நிலைகளை வளர விடுவோமேயானால், தொடரவிடுவோமேயானால் எதிர்காலச் சந்ததியினர் என்று கருதப்படுகிற மாணவர்களுடைய வாழ்க்கை நிச்சயமாகப் பாதிக்கப்படும். அவர்கள் எழுதுகிற தேர்வுகள் தள்ளிப் போடப்பட்டால், அதைத் தொடர்ந்து அடுத்த ஆண்டு அவர்கள் தொடர்கிற படிப்பும் தள்ளிப் போடப்படும். சட்டக் கல்லூரியில்கூட இந்த ஆண்டுப் படிப்பை இப்போதுதான் தொடங்கியிருக்கிறோம். இதற்குக் காரணம், சென்ற ஆண்டு நடந்த போராட்டம்தான். ஆகவே ஏழெட்டு மாதங்களுக்கு மாணவர்களுடைய கல்லூரிப் படிப்பு கெடுகிற நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிறது. இவைகளையெல்லாம் கருத்திற்கொண்டு மாணவர்களுடைய எதிர்கால நலனில் அக்கறை கொண்டுள்ள ஆசிரியர் பெருமக்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், போராட்ட நடவடிக்கைகளை கைவிட்டுவிட்டு, அதிகாரிகளுடனும், அமைச்சருடனும், அதாவது அரசுடனும் பேசி அவர்கள் தங்களுடைய கோரிக்கைகளை எந்த அளவிற்கு நிறைவேற்றிக்கொள்ள முடியுமோ அந்த அளவிற்கு நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்பதுதான்.

அவர்கள் அரசோடு பேசவில்லை என்று எந்த நோக்கிலும் கூறமுடியாது. இரண்டு நாட்களுக்கு முன்னாலே கூட பேசியிருக்கிறார்கள். இப்போது கூட பேசுவதாகச் சொன்னதாக இயக்குநர் அவர்கள் எனக்குச் செய்தி அனுப்பியிருக்கிறார்கள். அவர்களும் ஓரளவிற்கு ஒத்துழைப்பைத் தந்துகொண்டிருக்கிறார்கள். பேசிக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஆகவே பேச்சுவார்த்தை சுமுகமாக முடியுமென்று நம்புகிறேன். அவர்களும் ஒத்துழைப்புத் தர வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்களும் இது தொடர்பாக ஆசிரியர்களைச்





சந்திக்கிறபோது, ஒத்துழைப்புத் தந்து பிரச்சினைகளை முடிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போராட்டம் தொடர்ந்து நடைபெறுவது என்பது நல்ல கல்விச் சூழ்நிலையை அழிக்கும் என்ற கருத்தை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள் என்ற அந்த அடிப்படையில் இந்த வேண்டுகோளை விடுக்கிறேன். இப்போதும் பேசலாம். அதிகாரிகளிடமும் பேசலாம், என்னோடும் பேசலாம். பேசவில்லையென்று சொல்லவில்லை. பேசிக்கொண்டுதான் இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே பேச்சுவார்த்தை வெற்றிகரமாக முடியக்கூடிய நிலைமை இருப்பதால், இங்கே இதைப்பற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்குப் பிறகு, இது குறித்து அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று கருதி, இதற்கு என் அனுமதியை மறுக்கிறேன்.

## 4. அறிவிப்பு.

### அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இன்று நடந்த அலுவல் ஆய்வுக் குழுவில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி விபரம் முடிவு செய்யப்பட்டது :—

| | | |
|---|---|---|
| [illegible]—2—1980 | — | ஆளுநர் உரையின் மீது விவாதம். |
| [illegible]—2—1980 முதல் | | |
| [illegible]—2—1980 வரை | — | கூட்டம் இல்லை. |
| [illegible]—2—1980 மாலை | — | அரசின் சட்டமுன்வடிவுகள். |
| [illegible]—2—1980 காலை | — | அரசின் சட்டமுன்வடிவுகள்— அவசியமானால். |
| மாலை | — | ஆளுநர் உரையின் மீது விவாதமும்— முதலமைச்சரின் பதிலுரையும். |
| [illegible]—2—1980 காலை | — | அரசின் சட்டமுன்வடிவுகள். |

## 5. கவன ஈர்ப்பு.

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகா, பூந்துறை கிராமத்தில் 15—1—1980 அன்று காவலர்கள் தாக்குதல் குறித்தும், நீதி விசாரணை நடத்த வேண்டுமென்ற கோரிக்கை குறித்தும்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

“கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகா, பூந்துறை கிராமத்தில் 15—1—1980 அன்று காவலர்கள் புகுந்து தாக்கி, பெண்களை அவமானப்படுத்தி பொருள்களுக்கும் பெரும் சேதம் ஏற்படுத்தியதால் சுமார் 500 வீடுகளிலுள்ள மக்கள் பீதியடைந்து ஊரைவிட்டு ஓடி, ஊருக்குத் திரும்பாத நிலையில் ஊரே காலியாக உள்ளதாலும், இதுபற்றி நீதி விசாரணை நடத்த வேண்டுமென்று அவ்வட்டாரத்திலுள்ள சர்வ கட்சியினரும் தினமும் ஊர்வலம், பொதுக் கூட்டங்கள் போன்ற நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாலும் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து”

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவர் அவர்களே, 11—1—1980 அன்று கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள எரவையம்மன் துறையில் உள்ள மீனவர்களுக்கும் அருகிலுள்ள பூந்துறை கிராமத்திலுள்ள மீனவர்களுக்கும், பிடித்த மீன்களைப் பங்கிட்டுக்கொள்ளும் பிரச்னைபற்றிச் சண்டை மூண்டது. இச்சண்டையில், பூந்துறை மீனவர்கள், எரவையம்மன் துறை மீனவர்களைத் தாக்கியதாகத் தெரிகிறது. இத்தகராறு, பஞ்சாயத்து மூலமாக 13—1—1980 அன்று தீர்க்கப்பட்டது. ஆனால், எரவையம்மன் துறை மீனவர்கள் பஞ்சாயத்து முடிவை ஏற்க மறுத்தனர். இதன் தொடர்பாக பூந்துறை மீனவர்கள், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்றினை நிறுத்தி, அதில் பயணம் செய்துகொண்டிருந்த எரவையம்மன் துறையைச் சேர்ந்த மீனவர் சிலரைத் தாக்கியுள்ளனர். காவல்துறை அதிகாரிகள் அவ்விடம் விரைந்து சென்று, மறுபடியும் சண்டை ஏற்படாமல் தடுத்தனர். இரு கோஷ்டிகளிடையே சமரசம் செய்வதற்கான பேச்சு வார்த்தைகளும் தொடரப்பட்டது.

2. இந்நிலையில், 14—1—1980 அன்று பூந்துறை கிராமத்தைச் சேர்ந்த 500 மீனவர்களும், எரவையம்மன் துறையைச் சார்ந்த 300 மீனவர்களும் பயங்கர ஆயுதங்களுடன் கடற்கரையில் கூடி ஒருவரையொருவர் தாக்கிக் கொள்ள ஆரம்பித்தனர். பூந்துறையைச் சார்ந்த மீனவர்களில் ஒரு சிலர், மாதா கோவில் மணியை அடித்து தம் கிராம மக்களை சண்டைக்காக அழைக்க முயற்சித்தனர். மேலும் சாலைகளின் குறுக்கே தடைகளை வைத்து, சாலையை மறித்துவிட்டனர். இதனையறிந்த காவல்துறை அதிகாரிகள், அவ்விடத்திற்கு விரைந்தனர். அவர்கள்மீதும் அவர்கள் சென்ற வேன்கள் மீதும் கற்களைக் கொண்டு தாக்கினர். இதனால் போலீஸ் வேன் சேத-



## கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகா, பூந்துறை கிராமத்தில் 15—1—1980 அன்று காவலர்கள் தாக்குதல் குறித்தும், நீதி விசாரணை நடத்த வேண்டுமென்ற கோரிக்கை குறித்தும்



மடைந்தது, காவல்துறையினர் அவர்களை விரட்டிச்சென்று, ஒன்பது பேரைக் கைது செய்தனர். மேற்படி கலவரத்தில், எரவையம்மன் துறையைச் சேர்ந்த 32 பேர்களும், பூந்துறையைச் சார்ந்த 16 பேர்களும் காயமடைந்தனர். இதன் தொடர்பாக, நான்கு வழக்குகள் கொல்லங்கோடு காவல் நிலையத்தில், குற்ற எண் 13-80, 14-80, 15-80 மற்றும் 16-80-ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், போலீஸ் பந்தோபஸ்துகள் முக்கிய இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இருபிரிவினர் மீதும் குற்றவியல் பிரிவு 107-ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுவரை 57 பேர்கள் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

3. மேற்படி கலவரத்தினைத் தடுப்பதற்காகவும், பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்காமல் தடுப்பதற்காகவும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும், கலவரம் செய்தோரைப் பிடிப்பதற்காகவும், அவர்கள்மீது குறைந்த அளவு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

4. இதன் தொடர்பாக, இரு பிரிவினரையும் கொண்ட ஒரு சமரசக் குழு, நாகர்கோவில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், 26—1—1980 அன்று கூட்டப்பட்டது. அப்பகுதியில், தாங்கள் இனி அமைதியைக் கடைப்பிடிப்பதாக இரு பிரிவினரும் ஒத்துக்கொண்டுள்ளனர். இரு பிரிவினர்களுக்கும் ஒரு சமரசத்தை, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தினார். இதுவரை, இப்பகுதியில், இதன் தொடர்பாக அனைத்துக் கட்சிகளின் சார்பாக, எந்தவிதமான கண்டனப் பொதுக்கூட்டமோ, ஊர்வலமோ நடத்தப்படவில்லை. தற்பொழுது அங்கு அமைதி நிலவி வருகிறது. இப்போது சட்டம் ஒழுங்குப் பிரச்னை எதுவும் அப்பகுதியில் இல்லை. எனவே இது குறித்து அவையில் விவாதிக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய நீண்ட அறிக்கையில், எரவையம்மன் துறையில் உள்ள மீனவர்களுக்கும், பூந்துறை கிராமத்திலுள்ள மீனவர்களுக்கும் இடையே ஏற்பட்ட சண்டையை அமைதிப்படுத்தியாகிவிட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். அமைதி ஏற்பட வேண்டுமென்ற எண்ணம் உடையவர்கள்தான் நாம் அனைவருமே. இதிலே எந்தச் சாராருக்கும் கருத்து வேறுபாடில்லை. ஆனால் சென்ற மாதம் பொங்கல் அன்று, அதாவது 14 ஆம் தேதியன்று

இரவும், 15 ஆம் தேதியன்று காலையிலும் அமைதிப்படுத்தச் சென்ற போலீசார் பூந்துறை ஊருக்குள் புகுந்து 500 வீடுகளில் வாழ்கிற பெண்கள், குழந்தைகள் ஆகியவர்களைத் துன்புறுத்தி, அடித்து உதைத்திருக்கிறார்கள் அதனால் 50 பேர் காயமுற்று மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றிருப்பதாக அரசுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்களில் பலர் மீது வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. பெண்கள் அவமானப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். ஆகவே கிராமத்தில் உள்ள அனைவரும் வெளியேறியிருக்கிறார்கள். அந்தக் கிராமமே 'டெசர்டட் வில்லேஜாக' இருந்தது. மாவட்ட ஆட்சித் தலைவர் 21 ஆம் தேதி, "இனிமேல் பயப்பட வேண்டாம். ஊருக்குத் திரும்பி வாருங்கள்" என்று ஒரு அறிக்கையின் மூலம், கேட்டுக்கொண்டிருக்கிறார். அந்த அறிக்கை 'தினமலர்' பத்திரிகையிலே வந்திருக்கிறது. 26 ஆம் தேதி கலெக்டர் அலுவலகத்தில் நடந்த கூட்டத்தில் உணவு அமைச்சர் அவர்களிடத்தில் இது தெரிவிக்கப்பட்டது. அவர் ஊருக்குள்ளே போய் பார்க்காமல், உண்மை நிலையை அறிந்தால் என்ன செய்வது என்ற பிரச்சினை வருமே என்று அஞ்சி மக்களை சமாதானப்படுத்தியிருக்கிறார். இதுவரையில் அவர்கள் சமாதானப்படவில்லை. இன்று காலை அந்தத் தொகுதி எம்.பி. திரு. டென்னிஸ் எனக்கு அனுப்பிய தந்தியில் "போலீசார் அட்டூழியம் நடத்திக் கொண்டிருக்கிறது" என்பதைத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். இது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சில சம்பவங்களைக் குறிப்பிட்டு, அங்கே இன்னும் அமைதி ஏற்படவில்லை, பதட்ட நிலை நிலவுகிறது என்று கூறியுள்ளார்கள். குறிப்பாக காவலர்கள் அத்துமீறிய செயல்களைச் செய்துள்ளதாகக் குறிப்பிட்டார்கள். 26 ஆம் தேதியன்று மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் அங்கு சென்றிருந்தார்கள். அவர்கள் சென்றதற்குப் பிறகு நானும் வேறு ஒரு அலுவல் காரணமாக, அந்த குறிப்பிட்ட இடத்திற்குச் செல்லவில்லை என்றாலும், அங்கே சென்றிருந்தேன். மாவட்ட ஆட்சித் தலைவர் காவல் துறை அதிகாரிகளைக் கலந்து பேசி முடிந்த அளவிற்கு மக்களுக்கு பயம் இல்லாத வகையில் எதாவது நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு தந்தி வந்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு தந்தி இன்னும்



அரசுத் தரப்புக்கு வரவில்லை. அந்தத் தந்தியை இங்கே கொடுத்தால், உடனடியாக இங்கே இருக்கக் கூடிய ஐ.ஜி.யுடன் தொடர்பு கொண்டு மேலும் இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படாதவண்ணம், மக்களுக்கு உரிய பாதுகாப்பு கொடுக்க அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிக்கையிலே, சர்வ கட்சி கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறவில்லை என்று சொன்னார்கள். சர்வ கட்சிக் கூட்டத்திலே யார் யார் கலந்துகொண்டார்கள் என்ற விவரத்தை, தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியோடு அமைச்சர் அவர்களிடம் ஒப்படைக்கிறேன். உணவுத் துறை அமைச்சர் அவர்களுக்குக் கொடுத்த மனுவில் யார் யார் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த மனுவை 40 பெண்கள் நேரிடையாக மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரிடம் கொடுத்தார்கள். அந்த மனுவின் நகலும், அந்தப் பட்டியலும் என்னிடம் இருக்கிறது. அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் உங்கள் அனுமதியோடு அளிக்கிறேன். கடந்த 21 ஆம் தேதி "ஊரே காலியாக இருக்கிறது. அச்சம் தேவையில்லை. நீங்கள் மீண்டும் வாருங்கள்" என்று மாவட்ட ஆட்சியாளர் அளித்த அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்னும்

(பிற்பகல் 4-10)

30 ஆம் தேதி, 31 ஆம் தேதி 'தீக்கதிர்' பத்திரிகையிலே, உங்களோடு தொடர்பு கொண்டுள்ள கட்சியினரின் பத்திரிகையிலே, வெளியிட்டிருக்கிறார்கள். இதை அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்ததாகச் சொல்லக்கூடாது. உணவு அமைச்சர் அவர்கள் கலெக்டர் ஆபீஸிலே இருந்தார்கள். அப்போது அவர் அங்கே போயிருந்தால், நன்றாக இருந்திருக்கும். அமைச்சர்களில் வேறு யாராவது ஒருவர் போக வேண்டும் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட செகிரட்டரி போர்டு மெம்பர் போல ஒருவரை அங்கு அனுப்பி மக்களைக் கூட்டிப் பேசி ஒரு நல்ல நிலைமையை ஏற்படுத்த வேண்டும். தலைவர் அவர்களின் அனுமதியோடு மற்ற குறிப்புகளோடு, திரு. டென்னிஸ், எம்.பி. அவர்கள் அனுப்பிய தந்தியையும் அமைச்சர் அவர்களிடம் கொடுக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களின் உரைகளிலே நான் பயன் பெறுகின்றேன். அவர் கொடுத்திருக்கின்ற தகவல்களை வைத்து உடனடியாக என்னென்ன

(திரு. க. இராசா முகமது) [1980 பிப்ரவரி 7

நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமோ, அவைகளை தீவிரமாக எந்தவிதமான தாமதமும் இல்லாமல் அரசு எடுக்கும் என்ற உறுதியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

(எல்லா குறிப்புகளையும், தந்தியையும் அமைச்சர் அவர்களிடம் கொடுத்தார்.)

### 6. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

Thiru A. R. DAMODARAN: *Hon. Chairman, Sir, the Governor's Address in this session, is over-shadowed by the results of the recent Parliamentary poll and many views have been expressed regarding the results of the poll and claims have been made by Members of the Opposition, principally of the D.M.K. and the Congress (I), that in view of the Parliamentary poll, it is necessary that the Government should resign and face an Assembly election. Sir, I wish to state—I am very clear on this subject and there is no confusion whatsoever—that the Parliamentary poll has nothing to do with the existence of a State Government. Constitutionally speaking, it would be wrong for us to ask the State Governments to resign every time a Parliamentary poll is in favour of the Opposition. We must remember that from 1952 onwards—in 1952, 1957 and 1962 when Pandit Nehru was the Prime Minister in the Central Government and later on in 1967 when Thirumathi Indira Gandhi herself was in charge of the Central Government, Parliamentary polls were combined with the Assembly polls and the people of India had an opportunity of voting both for the State Governments and the Central Government at the same time. In 1971 one year before the Parliamentary poll and the Assembly polls were due the then Prime Minister of India, Thirumathi Indira Gandhi stated that she did not want the Parliamentary poll to be mixed up with Assembly poll because the issues in these two elections were totally different and that in having a Parliamentary poll, she wanted the attention of the people focussed on Parliamentary issues and issues concerning the entire Nation. In 1971, the Parliamentary poll was held and after that, owing to strange combination of circumstances, our national elections have become rather fluid in the sense that we have not been able to have polls every five years as was anticipated in the Constitution.*



1980 பிப்ரவரி 7] [Thiru A. R. Damodaran]

In my opinion, whatever may be the moral and ethical aspects with which I shall deal later, constitutionally speaking, if we are going to demand that because of a by-election or half a dozen by-elections a State Government or a Central Government should resign based on these poll results, then we are doing violence to the Constitution, not only violence to the Constitution, but plunging our Nation and our people into unnecessary costly elections which take a heavy toll of developmental work. Constitutionally speaking, neither this Government nor other State Governments have to resign because of the results of the Parliamentary poll. I only want to say this because I find that my Friends on the opposite side, the Ministers as well as others occuping the Treasury Benches, are strangely discouraged by the results of the recent Parliamentary Poll. There is no reason for us to feel discouraged if we hold on to certain principles which we hold dear. Although I do not belong to any political party and although I cannot say that I have millions or lakhs of people behind me to support, what I have to say is that I find myself in strong agreement with what has ben stated by the hon. Member Thiru Nallasivan who belongs to the CPM Party. Hon. Members of this House will realise that when a person like A. R. Damodaran agrees with Thiru Nallasivan of the CPM Party, it is not because both of us desire that anarchy should prevail in the country but because we hold firm to those principles which I have always been stating since 1966 when I entered this House as a Member of the Legislative Council, that we must get into proper perspective our understanding of the Constitutional relationship between the Central Government and a State Government. In stating this, I am not trying to egg on my Friends in the Treasury Benches into postures of antagonism with the Central Government. By no means, Sir, I have never advocated it even when the DMK was in power nor would I do it when the AIADMK is in power. But, if it is felt that State Governments are like local bodies, Panchayats and Municipalities to be treated like subordinates by the Central Government, I wish to state emphatically that that is neither my understanding of the feelings of the people nor of the writ of the Constitution as it was made in 1950.

Sir, I referred to the fact that there were certain moral and ethical aspects of the question involved a part from Constitutional aspects. The question has been raised whether, because 37 seats out of 39 have been captured by the Opposition Parties the people of the State still continue to support the ruling Party or not. As I said, I am not prepared to offer an opinion in view of the fact that local issues have not been dealt with in this Election. I feel

that the ruling party does have all chances of continuing to be in the Government. But, while I state this, I hope my Friends will forgive me if I take this opportunity to point out what I consider to be certain lapses on their part which have led to this very deplorable situation in our State. I have also made it clear that I am one with Thiru Nallasivan when I say that democracy will have to survive in our country, that the forces of authoritarianism cannot once again be allowed to rear their ugly heads and that an election victory does not mean defeat for those principles which we have always held dear to our hearts. And I would like to say that in spite of the massive victory that any political party may achieve in an Election, there are people who still believe that democratic traditions will be maintained and that unnecessary discriminatory processes will not be started against those Parties and against those State Governments which may not see eye to eye with the Central Government.

I state that I belong to the business community. I belong to a community of middle class people. I am speaking of the class from which I come and not the class which I represent. We want stability, we want law and order to be maintained; but nonetheless it would be a mistake for us to consider that law and order is far more important than allowing people certain fundamental democratic rights that have been granted in the Constitution—the right of assembly, the right of freedom of speech, the right to practise one's religion, the right to associate and form Unions to agitate for legitimate causes, however unpleasant it may be for some sections of the society. These basic rights can never be allowed to be eroded if we want democracy to survive in our country. I know that there are many people who believe that it is a matter of inconvenience that people start agitating go on hunger strike putting up a tent on the Marina and spoil the beauty of the Marina by these hunger strikes and marches. May I state that the convenience of a few cannot preclude the other groups from expressing their opinion in a legal and legitimate manner? I wish to state that this Government made a very brave campaign in the elections and they fought for certain principle with which many of us were in agreement, to put it very frankly; for the first time, Sir, I may confess in all honesty that I did vote for the A.I.A.D.M.K. alliance, not because I believed that the Government would be able to solve all the problems that existed in our State,



but because there was something far more important for us to consider from the point of view of the preservation of Indian democracy and we did not want the ugly resurgence of old causes which would establish themselves as extra-constitutional centres of power and quell the spirit of the Indian people. I am likely to be misunderstood when I state this objective. I believe that the very purpose for which I have been elected to this body, the very purpose for which I have stood once again to represent certain classes of opinion in this Council would be belied, if I were to fall in line with others and shout hysterically demanding that the Government should step aside and allow fresh elections to be held.

Having said this, may I point out that some of the tragic consequences of the recent election were in part due to the halting, hesitating, weak and vacillating policy of the present Government? As I said, I do not deny their right to rule the State of Tamil Nadu but we certainly expect the Government to move resolutely and with courage especially when they consider some principles dear which they have enshrined in their party manifesto. May I refer to the fact—I have mentioned this in the past also—that the postponement of elections to local bodies and municipalities has worked havoc in the rural areas? For 3 1/2 years, we have had representative bodies in these local bodies and in the recent elections that were held, one of the great handicaps that must have been felt by every political party was the absence of representative party workers who form the back-bone of the democratic structure in the State. We seem to be under the impression that if we elect 234 members to the Assembly and 41 Members to the Legislative Council, the entire democratic structure of our State can be preserved by the few representatives we have in these two Houses. This is a colossal mistake that we have made. I think the Government have also realised it in that soon after the poll, they have announced that elections would be held to local bodies. May I request them not to change their attitude in regard to the local body elections, irrespective of the results? Whether the D.M.K. Congress (I) alliance will be swept to power or whether the A.I.A.D.M.K. will be able to regain the confidence of the people is only something that the people have to decide by their votes. May I say that in such matters indecision and delay has cost the ruling party dear? It is in the interests of preserving the democratic fabric of all institutions in our State that I request the Government to have the elections as early as possible and on the due dates as announced.

May I also mention, with some reservation, although many political parties may not agree with me, that again a tragic mistake is being committed in enlarging the poll to all those who are of 18 years of age? It must be realised that in extending adult franchise to boys and girls of 18 years of age, we are creating more problems for our Education Minister and for future Education Ministers. I am very frank on this subject. It is not because I do not want people of 18 years of age to be given this franchise. A time may come in 1990 A.D., 2000 A.D. or 2010 A.D., I cannot say, but this is certainly not the time for us to extend the franchise to young people of 18 years of age, especially considering the fact that all these young people will be studying in our High Schools and in the 'plus two' courses. Are we going to get all these people involved in politics? It took the United Kingdom more than seventy years to extend adult franchise to women and even in the continent of Europe there were many countries which did not extend the franchise to women until the late 1920s and 1930s. I am only nervous that in the shock of the Parliamentary poll many extreme decisions are likely to be taken by the Government under the impression that only these extreme decisions are likely to swing back the support of the people to them. Of course, the Hon. the Chief Minister has mentioned this and specially at this stage I do not expect him to go back on his word because he will again invite the criticism of the Opposition parties that he is wobbling. But, personally I consider it to be a very unfortunate decision. I know that the young people will be angry with me, but young people are not interested in elections to that extent. It is a mistake for us to think that young people are interested in politics to this extent. They are not interested. They want jobs and they want opportunities for growth. It is also a mistake for us to think that all of us are interested in elections. We may be interested for a week or two weeks but we have our own work to attend to.

Sir, the political problems of our country may have been solved by elections, but there are very grave economic and social problems facing our State and I would like to highlight a few important points which I feel that the Government should consider. I am speaking in the general interest. I know that all political parties have been highlighting the alleged atrocities against the Scheduled Castes and the Scheduled Tribes. Newspapers have highlighted incidents that have taken place not only in our State but also in other States. An atmosphere is being built up in India whereby an impression is created that there is a big conflict between



the Scheduled Castes and Tribes and the Caste Hindus. I would like all political parties to consider the dangerous consequences of our promoting the worst form of disintegration that we have set in motion. When once we bring the Scheduled Castes and the Scheduled Tribes into the political arena and kick them about like a foot-ball between political parties, the dangers of disintegration in our country are more real than imaginary. I would request political parties to treat this matter as an issue apart from politics and to try to solve the problem having a consensus approach, because this is one of the most dangerous games that political parties have started playing during the recent past and it spells disaster for any effort that we may make in bringing about the integration that we need so badly in our country.

Sir, I cannot but refer to certain decisions which have been taken by Government which are good, but, for which the original decisions were extremely bad. One such decision was the reservation that was extended to the Backward communities. Probably, twenty or thirty years hence, the policy that was announced by the Government of Tamil Nadu prescribing an income-limit for the Backward communities may have been acceptable to the Backward communities in this State.

(பிற்பகல் 4.50)

The politics of Tamil Nadu—at least to my limited knowledge—from 1922 has been the politics of a fight between the less privileged sections of society and the more forward sections of society. From 1925 ever since the Communal G.O. was issued, the politics of Tamil Nadu has been governed by this relationship and the desire of the backward communities to gain more educational opportunities and more employment opportunities in the State. The Hon. the Chief Minister, in my opinion, made a very tragic mistake in announcing that there would be an income limit for such facilities. Having made the mistake, they have antagonised the backward communities. The Government have now revised their orders and increased the reservation from 31 per cent to 50 per cent. In other words, the ruling party had antagonised the backward communities and now they have antagonised the forward communities also. Then what are the communities which are going to support the ruling party in the future? I do not see any consensus approach on such radical issues. I do not know whether at this stage the Government will be able to re-think on this matter. But I may express my honest opinion, as a member of the backward

community—my community is also backward—that I do not think that the policy of extending backward community concession from 31 per cent to 50 per cent is fair to the other communities in our State. This may create a back-lash from the forward community. This has been done in other areas and it has created a back-lash later resulting in an agitation by the forward communities They are not small in number and they are not the Brahmin community only in Tamil Nadu. We have the Christians, certain classes of Muslims, we have Reddiars, we have certain classes of Naidus, Chettis and various other communities coming under the classification of 'forward communities'. I may state, although I may be misunderstood, that I think that this kind of somersault of removing the income restrictions and extending the reservation from 31 to 50 per cent is going to place the ruling party in a still more difficult position. But I leave this to the ruling party, with its mature political background, for being dealt with in the way they

(பாண்டிச்சேரி பேரவைத் தலைவர் தலைமை)

deem fit. I will only plead that in such matters the Government should follow a decisive policy. They have been hesitant and halting in their approach to many issues. Even today I felt deep sympathy for our Hon. Education Minister. I have known him to be a very sincere Minister who has been trying to tackle the issues in the educational field and in spite of all the criticisms that my friends behind me have levelled, it is true that he has tried to solve many problems; but in trying to solve problems, he has given the impression that he will continue to hold discussion on issues which are absolutely non-negotiable. Why should the Government not say that out of 21 issues, one or two issues are absolutely non--negotiable and there can be no discussion over them? For example, the Government cannot claim that in response to any teachers' agitation, it will be able to change the management of a minority institution. Do the Government not know that there are difficulties, from the judicial point of view, in reinstating teachers who have been dismissed from minority institutions? Why carry on a discussion on these subjects which, in my opinion, are absolutely non-negotiable? I do not wish to say more on this because I do not have the full details of the various demands that have been placed by various sections of the teachers' community. Some may be negotiable and some cannot even be discussed. I think the people will appreciate if the Government take an honest and sincere stand and tell these people, "This is the limit to which the Government can go and beyond that limit, gentlemen, we



cannot even discuss the matter." This is decisiveness and this is what is required. On the other hand, they allow agitations to crop up, they allow these people to press their demands and then they sanction 14 or 15 demands and say, "We will think over the balance of eight or nine demands". Governments cannot function in this fashion. If the people take advantage and start agitations every week and every month, Government will find their generosity being taken advantage of. That is why I say, although I may be misunderstood, that the time for decisiveness has crept in. Whether they have the time now to frame decisive policies, it is not for me to say. But I would only request that decisive steps be taken to solve some of these problems.

Sir, one factor which has been highlighted and which has played a very large part in the recent Parliamentary poll has been the question of increase of the price of various commodities. Let me inform this Government that this is not only something of the past but something which is going to occur in 1980. A price increase of petroleum products, which is in the Central sector, is imminent. The Government of India cannot delay it any longer. Prices are going to increase for all petroleum products which, in turn, is going to fuel the fires of inflation. How do we control these prices? The old solutions have been offered — controls, more controls, Preventive Detention Act against traders and businessmen and various other punitive legislations that are expected to keep the trading community under control. For thirty years, we have been experimenting with controls, preventive detention and punitive measures. But, not one political party—I repeat, not one political party — has ever gone in for the economic concept of trying to improve production in all fields to lessen the prices of essential commodities. For the past three years, to whomsoever the credit may be due, there is no denying the fact that we have had no shortage of fertilisers in Tamil Nadu or in any other part of India. There has been no blackmarketing of fertilisers. In fact, Urea has been selling at two rupees or three rupees below the official price per bag fixed by the Government. How was such a situation possible? On the other hand, all Governments have vested interest in controls and the bureaucracy have vested interest in controls. They want the Essential Commodities Act and also the Preventive Detention Act. On this question of preventive detention, I would like to express my very honest opinion. I expressed it when the Lok Dal was in power in the Centre and when the AIADMK supported the preventive detention measure and I say it now when the Congress (I) introduces this Preventive Detention Act. The Lok Dal, the Janata and other parties are criti-

cising it but even the DMK has supported the Preventive Detention Act. There is no consistency in the philosophy of political parties. We are in for a decade of opportunism in politics and principles have been given up.

(பிற்பகல் 5-00)

திரு. ஆ. நல்லசிவன்: உறுப்பினர் அவர்கள் எல்லாக் கட்சிகளையும் சேர்த்து பொத்தபாகச் சொல்கிறார்கள், எங்கள் கட்சியைப் பொறுத்த வரை . . .

THIRU A. R. DAMODARAN: I would like to state that again I am in the strange company of Thiru Nallasivan and I give his Party full credit. The CPM was against the Preventive Detention Act before the Parliamentary poll and it is against the Preventive Detention Act. As I said, although I am not a member of his Party, I have great admiration at least for their steadfast principle on certain issues. I would tell all political parties that it is absolutely unnecessary for them to have the Preventive Detention Act to take action to control prices or the traders. They have got the Essential Commodities Act and the Preventive Detention Act is only an Act to blackmail businessmen and traders into brutal submission. It is to bludgeon the business community into giving further donations for the Assembly elections and I make this charge knowing fully well how the Preventive Detention Act was used prior to the Parliamentary poll. We should be ashamed that, instead of promoting honest businessmen, we are making every businessman a dishonest man by making him contribute to political parties and encouraging him to blackmarket, hoard and profiteer with Government support. If the Government are really interested in freeing our country from the social evils, I can assure them that there is a responsible section of the business community which wants to co-operate with the Government in this regard. We are not black-marketing and we are not excess profiteers. I will rather give up my business which I have been running for thirty years than resorting to any such practices. I challenge all political parties in South Arcot — the D.M.K., the Congress (I) or the A.I.A.D.M.K. — to point their finger of scorn and say that in any of the institutions with which I am connected, there has been black-marketing, even in these days of acute shortage of petroleum products and there are hundreds of dealers like me. But we cannot survive unless we become parties to corruption. The Taluk Supply Officer has to be greased and



lubricated. Where could we get the money to lubricate the people unless we black-market the products? I have pleaded with the Hon. the Minister for Civil Supplies and I would like to say that of all the Ministers the Hon. the Transport Minister alone gave me a hearing and tried to understand the problems of petroleum distribution. I wrote a letter to the Hon. the Chief Minister in July 1979, outlining all the problems of the petroleum trade and I requested him to kindly grant us an interview and to have a State Advisory Committee for petroleum products. Six months later, I got an acknowledgment from the Superintendent of the Civil Supplies Department on behalf of the Commissioner of Civil Supplies, on behalf of the Chief Minister that the Government have considered the suggestions made by the Member of the Council and have come to the conclusion that sufficient arrangements exist to ensure supply and distribution of petroleum products and it is the Government's considered opinion that the State Advisory Committee should not be had. May I ask one thing? Is it really the contention of the Government that even an Advisory Committee is going to deprive them of their functions and understanding of the situation? I have given up in despair. I said, "Let it go to dogs. I am not interested in petroleum distribution. If the Government want to take their own steps, let them accept the responsibility." The shortage of kerosene and diesel was responsible for the debacle in Parliamentary poll in the North. If the Government want the same situation to develop in the South, let them entrust these matters to the Deputy Secretaries and Secretaries and accept the responsibility for the result. I hope that in dealing with such requests at least by Members of the Legislature, the Hon. Ministers will give due consideration to the fact that we are not persons to dash in a dozen letters a day to Ministers asking for any personal favour. I have asked for no personal favour. I have only requested the Government to consult the trade, the consumers, the tractor owners, the agriculturists, the powerloom sector and find out what they want and then frame proper regulations that will be acceptable to them. I only wanted to mention this because it is the wooden approach of the bureaucrats that will bring the Government into disrepute. I would request the Government to think on these matters. Nothing was lost in 1977 when Thirumathi Indira Gandhi was swept out of power; in 1980 she has been swept back to power. Elections are like the swing of the pendulum and we cannot stop the pendulum which will swing one way this year and another way next year. We can only halt the amplitude of the swing; and I hope on this occasion, the Government will take stock of the situation that prevails in our State and take effective

steps to see that public opinion is consulted on all these matters before they take decisions which are likely to place them in difficult situations.

(பிற்பகல் 5-10)

டாக்டர் எச். வி. ஹண்டே : மதிப்பிற்குரிய மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இங்கே ஏறத்தாழ நான்கு, ஐந்து நாட்களாக இந்தத் தீர்மானத்தின்மீது பேசிய மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் அத்தனை பேரும் குறிப்பாக பிரதான எதிர்க் கட்சியாக இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்களும், அதற்கு அடுத்தபடியாக காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் இங்கே மிக வேகமாக, இந்த கவர்னர் உரையின் மீது பேசுகின்ற நேரத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பாராளுமன்றத்திலே 37 இடங்களை இழந்திருக்கிறது, எதிர்க் கட்சியாக இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழக-காங்கிரஸ் அணிக்கு 37 இடங்கள் கிடைத்திருக்கின்றன, ஆகவே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இந்த ஆட்சி இருப்பதற்கு லாயக்கற்றது என்ற வாதத்தை இங்கே எழுப்பினார்கள். அதுமட்டுமல்ல. இன்னும் பல குறைகளை நம்முடைய ஆளும் கட்சி மீது சுமத்தியிருக்கிறார்கள். மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. திண்டிவனம் இராமமூர்த்தி அவர்கள் பேசுகின்றபோது, இன்றைய ஆளும்கட்சி குறிப்பாக தொழில் துறையிலே எந்தவிதமான கவனமும் செலுத்தவில்லை என்று கூறினார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பேசும்போது, தமிழகத்திலே சட்டம், ஒழுங்கு, அமைதி இல்லை என்று சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில், இந்த வாதங்கள் எல்லாம் நியாயமற்ற வாதங்கள் என்று சொல்வதற்கு சில காரணங்களை நான் கூறுவது கடமை என்று கருதுகிறேன். நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலைப் பொறுத்தவரையில், நம்முடைய மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்களும் திரு. நல்லசிவன் அவர்களும் சொன்னதுபோல, மத்திய அரசைப் பொறுத்தவரையில், அங்கு ஒரு நிலையான ஆட்சி தேவையா, இல்லையா என்ற ஒரு 'ரெஃபரண்டம்' என்றுதான் இந்தத் தேர்தல் என்று நான் கருதுகிறேன். ஏற்கெனவே 2½ ஆண்டுக் கால மத்திய ஆட்சியிலே—2 ஆண்டு காலம் ஜனதா ஆட்சி, அதற்குப் பிறகு சில மாதங்கள் லோக் தள் கட்சி ஆட்சி—இப்படி ஒரு நிலையான ஆட்சி இல்லை, ஆகவே ஒரு கட்சியின் கையிலே ஆட்சியை ஒப்படைத்தால், நிலையான ஆட்சி





ற்பட வாய்ப்பிருக்கிறது என்ற அடிப்படையில், இந்தத் தேர்தல் நடந்தது ன்றுதான் நான் கருதுகிறேன். அந்த அடிப்படையிலேதான் எந்த டத்திலே சென்றாலும் பேசப்பட்டது. மக்களிடத்திலே கேட்டபோது, த்தியிலே இந்திரா காந்தி அம்மையார் வரட்டும் என்று சொன்னார்களே விர, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், அனைத்திந்திய அண்ணா ராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் ஏற்பட்ட ஒரு போட்டியாக இந்தத் தேர்தலை மக்கள் கருதவில்லை. இன்னும் ஒரு வாதத்தைச் சொல்கிறேன், 'நடந்து முடிந்த தேர்தலிலே இத்தனை இடங்களை நீங்கள் இழந்து இருக்கிறீர்கள், ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் ராஜிநாமா செய்ய வேண்டும், அதோடு இங்கே இருக்கக்கூடியவர்களும் இறங்க வேண்டும்" என்று சொல்வது எவ்வளவு பொருத்தமாக இருக்குமென்றால்,—1979 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலே நடைபெற்ற பாராளுமன்ற இடைத் தேர்தலிலே நாம் பெற்ற முடிவு இங்கே இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவிலே இருக்கும் என்று நான் கருதுகிறேன்—நாகைத் தொகுதியிலே 6 சட்டமன்றத் தொகுதிகள், அதுமாதிரி தஞ்சைத் தொகுதியிலே 6 சட்டமன்றத் தொகுதிகள் இருக்கின்றன. இந்த 12 தொகுதிகளிலேயும் நடந்த தேர்தலிலே 9 தொகுதிகளிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அணி வெற்றி பெற்றது. அதிலே என்ன வேடிக்கை என்றால், அதற்கு முன்பு 1977 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலே நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலிலே அந்த 9 தொகுதிகளில் 8 தொகுதிகள் நாம் இழந்த தொகுதிகள். அப்போது அந்தத் தொகுதிகளிலே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய, அல்லது வேறு தோழமைக் கட்சிகளுடைய அணி வெற்றி பெற்றது. இவைகள் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஞாபகத்திலே இருக்கும் என்று நினைக்கிறேன். வெற்றி பெறாமல் இருந்திருக்கக்கூடிய அந்தத் தொகுதிகளிலே, எதிர்க் கட்சிகளின் கையிலே இருந்த அந்தத் தொகுதிகளிலே, மீண்டும் தேர்தல் வந்தபோது, நாம் வெற்றி பெற்றோம். அப்போது அதற்குப் பின் வந்த சட்டமன்றக் கூட்டத்திலே அந்தத் தொகுதிகளைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜிநாமா செய்ய வேண்டுமென்று நாம் சொல்லவில்லை. அப்படிச் சொல்வது நியாயமற்ற வாதம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, 'ரெஃபரண்டம்' என்று சொல்லப்படுகின்ற இந்தத் தேர்தலுக்குப் பிறகு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய செல்வாக்கு குறைந்திருக்கிறது என்று சொல்வது பொருத்தமற்ற வாதம் என்று சொல்லிக் கொள்கிறேன்: 50 லட்சம் வாக்குகளை நாங்கள் பெற்றிருக்கிறோம். பல இடங்களிலே நடைபெற்ற ஆய்வுகளிலே இருந்தும், நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களுக்கு எந்தவிதமான செல்வாக்குக் குறைவும் ஏற்பட

யில்லை என்பதை நடுநிலைமை வகிக்கும் பலபேர் புள்ளிவிவரங்களோடு சொல்லியிருக்கிறார்கள். எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், ஆட்சியிலே ஒட்டிக்கொண்டிருக்க வேண்டும் என்று நாங்கள் இருக்கவில்லை. எதிர்க்கட்சியாக வரவேண்டும் என்று எந்த நேரத்திலே மக்கள் விரும்பினாலும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க் கட்சியாக வரத் தயாராக இருக்கிறது. எப்படியாவது ஆட்சியிலே ஒட்டிக் கொண்டிருக்க வேண்டும் என்ற நினைப்பிலே, ஆசையிலே நாங்கள் இல்லை என்பதை மிகவும் ஆணித்தரமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த ஆட்சிப் பீடத்திலே இருந்

(பிற்பகல் 5-20)

தால்தான் சமுதாயத்தில் நமக்கெல்லாம் செல்வாக்கு இருக்கும், மக்கள் மத்தியில் புகழ் இருக்கும் என்ற அடிப்படையில் நான் இதைப் பேசவில்லை. We are prepared to face the people and we are prepared to shoulder the responsibilities of the opposition whenever called upon. ஆக எந்த நேரத்தில் கூப்பிட்டாலும், நாங்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஆனால் அதே நேரத்தில் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஒருமுறை எங்களிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட பிறகு, அந்தக் கடமையிலிருந்து தவறுவது நியாயமாக இருக்காது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1972 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, திண்டுக்கல் பாராளுமன்ற இடைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் தோல்வியுற்றது. அப்போது நான் எதிர்க் கட்சியில் உறுப்பினராக இருந்தேன். அப்போது முதலமைச்சராக இருந்த மதிப்பிற்குரிய கலைஞர் அவர்கள் எடுத்துச் சொன்ன வாதங்களை மீண்டும் தம்முடைய மதிப்பிற்குரிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கு நான் நினைவுபடுத்துவது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

இன்னொரு வாதத்தையும் இங்கே எழுப்பினார்கள். இந்தச் சட்டசபையைக் கலைத்துவிடலாம் என்று பரவலாகப் பேசப்படுகிறதே, அதற்கு என்ன செய்யலாம் என்று கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த எங்களைப் பொறுத்தவரை, மிகத் தெளிவாக இருக்கிறோம். அதாவது மத்தியில் ஒரு முறை 'ஆட்சி



மாறுகிறது என்ற காரணத்திற்காக, சட்ட சபையைக் கலைக்க வேண்டாம் என்பதுதான் அது. இதைச் சுட்டிக் காட்டுவதற்குக் காரணம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுபற்றிய கருத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். "There is no consistency" இதை நான் பொதுவாகச் சொல்லுகிறேன். "The only consistency is in the question of inconsistency." என்று ராஜாஜி அவர்கள் சொன்னது என் நினைவுக்கு வருகிறது. 1977 ஆம் ஆண்டு இதைப் போன்ற பிரச்சினை ஜனதா கட்சியால் பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்டபோதே, நாங்கள் இதில் தெளிவாக எங்கள் கருத்தைச் சொல்லியிருக்கிறோம். அப்போது ஏறத்தாழ 9 மாநிலங்களிலுள்ள சட்ட சபைகளைக் கலைக்க வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்தார்கள். அப்போது அதை மிகக் கடுமையாக நாங்கள் எதிர்த்தோம். எங்கள் வாதத் திறமையையெல்லாம் பயன்படுத்தி எதிர்த்தோம். இந்திரா காங்கிரஸ் கட்சி ஆட்சி நடத்தும் பீகார், ராஜஸ்தான், உத்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் உள்ள ஆட்சிகளைக் கலைக்க வேண்டாம் என்று நாங்கள் மிகத் தெளிவாக அந்த நேரத்தில் எடுத்துச் சொன்னோம். அதே கருத்தைத்தான் நாங்கள் இப்போதும் சொல்லுகிறோம் என்பதை இந்த அவையில் உள்ள அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். "There is no consistency in the question of prohibition policy" என்று அவர் இங்கே குறிப்பிட்டார். அதாவது மதுவிலக்குப் பிரச்சினையில் ஆளும் கட்சிக்கு எந்தவிதமான ஒரு தெளிவான நிலையோ கொள்கையோ கிடையாது என்று அவர் குறிப்பிட்டார். நான் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கு இது சம்பந்தமாக ஒன்றை நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். மரியாதைக்குரிய கலைஞர் அவர்கள் 7, 8 ஆண்டுகளுக்கு முன்பு முதலமைச்சராக இருந்த போது, சட்டமன்றத்தில் இதே போன்ற பிரச்சினை கிளப்பப்பட்டது. 1972 ஆம் ஆண்டில் என்று நினைக்கிறேன். இதே அவையிலும் அந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டது என்று நான் நினைக்கிறேன். அப்போது நான் சட்டப் பேரவையில் கலைஞரைப் பார்த்துக் கேட்டேன். "ஏன் திடீரென்று தற்காலிகமாக இந்த மதுவிலக்கைத் தளர்த்துகிறேன் என்ற தீர்மானத்தை இங்கே கொண்டு வருகிறீர்கள்?" என்று நான் கேட்டேன். அது மதிப்பிற்குரிய திரு. திராவிடமணி அவர்களுக்குக் கூட நினைவு இருக்கும் என்று நம்புகிறேன். அப்போது மதிப்பிற்குரிய கலைஞர் அவர்கள் "சூழ்நிலை காரணமாக நான் இதைத் தளர்த்த வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறேன்" என்றார்.

திரு. ஆ. திராவிடமணி: அவர் அப்படிச் சொல்லவில்லை. சுற்றிலும் இருக்கிற மாநிலங்களில் மதுக்கடைகளைத் திறந்து வியாபாரம் செய்கிறார்கள். அதையும் அழகான தமிழில் சொன்னார். "சுற்றிலும் நெருப்பு, நாம் மட்டும் கொளுத்தப்படாத கற்பூரமாக இருக்கிறோம். சுற்றிலும் வேங்கை, நடுவிலே வெள்ளாடு போல் தமிழகம் இருக்கிறது" என்றுதான் சொன்னார்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: "வெள்ளாடு அல்ல; செம்மறியாடு" என்று சொன்னார்.

டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு உறுப்பினருடைய இனிய குரலில் அந்தக் கருத்துக்கள் வர வேண்டும் என்றுதான் அதை இப்போது குறிப்பிட்டேன். எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், அப்போது கலைஞர் அவர்கள் சொன்ன கருத்து இதுதான். "அன்றிருந்த சூழ்நிலையின் காரணமாக இப்படி ஒரு முடிவிற்கு வர வேண்டியிருந்தது" என்றார். அப்போது நான் அதை எதிர்த்து உணர்ச்சிவசப்பட்டுப் பேசினேன். அறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கையாயிற்றே, இதைத் தளர்த்தலாமா என்று மிக வேகமாகப் பேசினேன். விவாதம் மிகவும் காரசாரமாக நடைபெற்றது. அதற்குப் பிறகு மீண்டும் மதுவிலக்கு தமிழ் நாட்டில் கொண்டுவரப்பட்டது. இதுதான் மாண்புமிகு உறுப்பினர்கள் மிக முக்கியமாக கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மதுவிலக்கைத் தளர்த்தி 2, 3 ஆண்டுகளுக்குப் பிறகு மதுவிலக்கைத் தீவிரமாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியே கொண்டு வந்தது. அப்போதும் நான் சட்ட மன்றத்தில் கலைஞர் அவர்களைப் பார்த்துக் கேட்டேன். "மதுவிலக்கை ரத்து செய்தீர்கள், இப்போது மீண்டும் கொண்டு வந்திருக்கிறீர்களே, தேவையில்லாமல் 2, 3 ஆண்டுகளுக்குத் தமிழகத்தைச் சோதனைக்கு உள்ளாக்கிவிட்டீர்களே" என்று கேட்டேன். அப்போது அவர் சொன்ன வாதத்தை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். "ஹண்டே, உங்களுக்குத் தெரியாது. அன்றையதினம் மதுவிலக்கை ரத்து செய்யவில்லை என்றால், தமிழகம் பொருளாதாரத்தில் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கும். அந்த அளவுக்கு அப்போது பொருளாதார நெருக்கடி இருந்தது. எனவே அப்போது அது தவிர்க்க முடியாததாகி விட்டது. ஆனால் மதுவிலக்கை ரத்து செய்த பிறகு ஏற்பட்ட அனுபவம் வேறு மாதிரியாக இருக்கிறது. எனவே அதை இப்போது மாற்றியமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது" என்றார்கள். எதற்காக இதைச் சொல்லுகிறேன் என்றால், ஆளும் கட்சியாக யார் இருந்தாலும் சரி, எதிர்க் கட்சியாக யார் இருந்தாலும் சரி, மதுவிலக்கைப் பொறுத்தவரை, ஒரு தெளி



வான, நிரந்தரமான கொள்கையை எந்த ஒரு அரசாங்கமும் ஒழுங்காகக் கடைப்பிடிக்க முடியாத அளவுக்கு நிலைமை மிகக் கஷ்டமாக இருக்கிறது என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். அன்றைக்கு ஆளும் கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் இருந்தபோதும் சரி, இன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியாக இருக்கிறபோதும் சரி, இனி எதிர்காலத்தில் வேறு எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் சரி, மதுவிலக்குப் பிரச்சினையைப் பொறுத்தவரை அவ்வப்போது இருக்கிற சூழ்நிலைக்கு ஏற்ப ஒரு முடிவெடுக்க வேண்டிய ஒரு துர்ப்பாக்கியமான நிலையில்தான் இருக்கும் என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மதுவிலக்கைப் பொறுத்த வரையில், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதன் சட்ட விதிகளைக் கடுமையாக்கி தாய்மார்களுக்குப் பாது காப்பு அளிக்க வேண்டும் என்ற நிலையைத்தான் விரும்புகிறார்கள். ஆனால் காலப் போக்கில் என்ன ஏற்பட்டது என்றால், ஏழை எளிய மக்கள் குறிப் பாகத் தாழ்த்தப்பட்டவர்கள், சமுதாயத்தில் பின்தங்கிய நிலையில் இருப்ப வர்கள், எந்த வகையிலும் சமுதாயத்தில் செல்வாக்கு இல்லாதவர்கள்தான் இதன் காரணமாகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படிப் பட்ட ஒரு துர்ப்பாக்கியமான நிலைதான் உருவாகியது.

ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறவர்கள் சில நல்ல நிலைமைகளை உருவாக்க வேண்டும் என்றுதான் உத்தரவைப் போடுகிறார்கள். ஆனால் அத்தகைய உத்தரவுகளை நடைமுறைக்குக் கொண்டுவரும்போது, ஏற்படுகிற சிக்கல் களையும் துன்பங்களையும் காணும்போதுதான், மீண்டும் அதை மறுபரிசீலனை செய்யவேண்டிய நிலைமைக்கு வருகிறார்கள் என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பல தாய்மார்கள் ஆரம்பத்தில், "எங்கள் கணவன் மார்கள் தினமும் குடித்துவிட்டு வருகிறார்கள். இதன் காரணமாக நாங்களும் எங்கள் குடும்பத்தவர்களும் மிகவும் அவதிப்படுகிறோம்", என்று சொல்லி முதலமைச்சரிடம் அழுதார்கள். இதைப் பொறுக்க முடியாத முதலமைச்சர் அவர்கள் உடனே மதுவிலக்குச் சட்டத்தைக் கடுமையாக்கினார்கள். ஆனால் அதே தாய்மார்கள் பிறகு வந்து, "எங்கள் கணவன்மார்கள் குடித்துவிட்டு வந்தாலும் பரவாயில்லை, நாங்கள் பொறுத்துக் கொள்கிறோம்; அவர்களைப் பிடித்து சிறையில் போட்டு எங்களைப் பட்டினி போடாதீர்கள்" என்று முதல மைச்சரிடம் முறையிட்டார்கள்.

"I would rather have my husband drunk in our home than to see him not drunk in the jail."

[1980 பிப்ரவரி 7

திரு. ஆ. திராவிடமணி: தாய்மார்கள் அப்படிச் சொல்லவில்லை. மது விலக்குச் சட்டம் கடுமையாக்கப்பட்டதன் காரணமாக, குடித்தவர்களை ஜாமீனில்கூட எடுக்க முடியாது என்ற நிலை உருவாயிற்று. முதல் முறை குடித்தால் 3 மாதம் சிறை. இரண்டாம் முறை குடித்தால் 6 மாதம் சிறை என்று சட்டம் கடுமையாக்கப்பட்டபோது, "சாதாரணமாகக் கை வண்டி இழுக்கும் தொழிலாளிகூட நாள்தோறும் 10 ரூபாய் சம்பாதிக்கிறான். அதில் 8 அணாவுக்குக் குடித்துவிட்டு வருகிறான் என்பதற்காக அவனைப் பிடித்து சிறைக்குள் போட்டுவிட்டால், அந்தக் குடும்பம் என்ன ஆவது? எனவே சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்து மதுவிலக்குக் குற்றம் புரிந்தாலும் அவர்களை ஜாமீனில் வெளியே எடுக்க அனுமதியுங்கள் என்றுதான் அவர்கள் கேட்டார்கள். அரசாங்கம் அதைச் செய்வதற்குப் பதிலாக 25 ரூபாய் கட்டினால் குடிப்பதற்கு அனுமதி வழங்கப்படும் என்று அரசாங்கம் ஒரு முறையைக் கொண்டு வந்தது எப்படி சரி என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

டாக்டர் எச். வி. ஹண்டே: அதைத்தான் நானும் சொல்லுகிறேன். முதலில் சட்டத்தைக் கடுமையாக்க வேண்டுமென்று பலரும் கேட்டார்கள். அப்படி சட்டம் கடுமையாக்கப்பட்ட பிறகு ஏற்பட்ட துன்பங்களின் விளைவாக அதைத் தளர்த்த வேண்டுமென்று முறையிட்டுக் கொண்டார்கள். இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நமது அரசாங்கம் மட்டுமல்ல, மதுவிலக்குக் கொள்கையில் நம்பிக்கை வைத்திருப்பவர்களின் நிலைமையிலேகூட ஒரு மாற்றம் இருக்கிறது என்பதற்காக இதைச் சொல்லு கிறேன். இன்றையதினம் பிரதமராக வந்திருக்கிற திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் மதுவிலக்கைப் பொறுத்தவரையில், மிகத் தீவிரமாக இருப்பேன் என்றுதான் சொன்னார்கள். இப்போது கொஞ்சம் வேறு

(பிற்பகல் 5.30)

வகையில் கருத்து (slightly different idea and approach) இருப்பதாகப் பத்திரிகையில் பார்க்கிறோம். It requires a realistic approach என்று இரண்டு மூன்று முறை பேசியிருக்கிறார்கள். காலப்போக்கில் நடைமுறைப்படுத்துகிறபோது அதிலே ஏற்படுகிற சிக்கலைப் பார்த்து, அனுபவத்தின் அடிப்படையிலே சில மாறுதல்கள் வேண்டும் என்று தமிழகத்தினுடைய முதலமைச்சர் மட்டும் கருதவில்லை, அகில இந்தியப் பிரதமர் கூட கருதுகிறார்கள்.

இந்திரா காங்கிரஸ் கட்சியின் செகரட்டரி-ஜெனரலாக இருக்கக்கூடிய திரு. பகுகுணா அவர்கள் பிராக்டிக்கலாகக் கவனிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். "There should be a reappraisal of, and re-approach





, the whole problem." என்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் மட்டுமல்ல, பல மாநிலங்களும் மதுவிலக்கைத் தீவிரமாகக் கொண்டுவர வேண்டுமென்று விரும்பித்தான் கொண்டு வந்தார்கள். பிறகு மீண்டும் அதைத் தளர்த்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. மதுவிலக்கைப் பொறுத்தவரையில், யார் ஆட்சியில் இருந்தாலும், இந்தத் துர்ப்பாக்கியமான நிலைமை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியது என்னுடைய கடமையாக இருக்கிறது.

அடுத்தபடியாக, வேறு ஒன்றையும் சொன்னார்கள். There is a halt to industrialisation. Industrialisation approach கிடையாது என்று சொன்னார்கள். தொழில் வளத்திற்காக எந்தவிதமான ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை என்று சொன்னார்கள். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் தொழில் கொள்கையில் தீவிர கவனம் செலுத்தவில்லை என்று சொன்னார்கள். தொழில் வளத்தைப் பொறுத்தவரையில், மூன்றாவது இடத்திலிருந்து 13-வது இடத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறது நம்முடைய மாநிலம் என்ற கருத்தையும் சொன்னார்கள். இதைப்பற்றிய கருத்தை குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். 1976 ஆம் ஆண்டு "ஹிண்டு", 'எக்ஸ்பிரஸ்" பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்தால், ஒன்று மிகத் தெளிவாகத் தெரியும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: திராவிட முன்னேற்றக் கழக நண்பருக்கு என்று சொல்ல வேண்டும்.

திரு. எச். வி. ஹண்டே: துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அவர் ஒருவர்தான் அவையில் இருக்கிறார் என்றாலும், அவர் 10 பேர்களுக்குச் சமம் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். 1976 ஆம் ஆண்டு சனவரி மாதம் 13 ஆம் தேதியன்று பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் சென்னைக்கு வந்தார்கள். அப்போது வேதனையோடு ஒரு அறிக்கையை சென்னையிலே வெளியிட்டார் பிரதமர். அந்த ஆண்டில் கலைஞர் முதலமைச்சராக இருந்தார். அந்த நேரத்தில் சென்னைக்கு வந்த பிரதமர் இந்திரா காந்தி சொன்ன கருத்து என்னவென்றால், "வேதனைக்குரிய நிலைமைக்கு தமிழ் நாடு கடந்த நான்கைந்து ஆண்டுகளாகத் தள்ளப்பட்டிருக்கிறது. அதாவது 13-வது இடத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறது" என்று சொன்னார்கள். 13-வது இடத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறது என்ற கருத்து இன்றைக்குச் சொல்லப்பட்ட கருத்தல்ல. 1976 ஆம் ஆண்டு சனவரி மாதம் 13 ஆம் தேதி சொல்லப்பட்ட கருத்து. இது

எப்படி எனக்கு நினைவில் இருக்கிறதென்றால், இந்தக் கருத்து மறுநாள் 14 ஆம் தேதி பொங்கல் அன்று பத்திரிகைகளில் வெளியாகியிருந்தது, அதை நான் படித்தேன்:

மூன்றாவது இடத்திலிருந்து 13-வது இடத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிற துர்ப்பாக்கியமான சூழ்நிலையின் காரணமாக தனி நபர் சராசரி திட்டச் செலவு (per capita planning expenditure) குறைந்திருக்கிறது. உதாரணத்திற்கு 150 கோடி என்று வைத்துக் கொள்ளலாம். நம்முடைய மாநிலத்திற்கு அன்றைய தினம் 150 கோடி ரூபாய் அளவுக்குத்தான் திட்டச் செலவு இருந்தது. இப்போது 300 கோடி ரூபாய் அளவிற்குச் செலவழிக்கப் படுகிறது. இந்தச் செலவை மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்தில், தமிழகத்திலே per capita planning expenditure has come down very much என்று அன்றையதினமே பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் சொன்னார்கள். அந்தக் கருத்தை ஆதரித்து அப்போது நானும் ஓர் அறிக்கையைத் தயார் செய்து கொடுத்திருக்கிறேன். அது பத்திரிகையில் வந்திருக்கிறது. இதே கருத்தை சட்டமன்றத்திலேயும் பல முறை சொல்லியிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல், தமிழகத்தில் தனி நபர் வருமானமும் கூட குறைந்திருக்கிறது என்று அன்றைய தினமே சொல்லியிருக்கிறேன். இது இன்றையதினம் ஏற்பட்ட சூழ்நிலை அல்ல என்பதைக் குறிப்பிடுவதற்காகத் தான் நான் இவைகளைச் சொல்லுகிறேன். இது 1976 ஆம் ஆண்டே அப்போதும் இப்போதும் பிரதமராக இருக்கக்கூடிய திருமதி இந்திரா காந்தி அவர்களால் சொல்லப்பட்ட கருத்து என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தனி நபர் திட்டச் செலவின் இப்போதைய நிலை என்னவென்றால், கடந்த மூன்றாண்டுகளுக்குள்ளே இது இரண்டு மடங்காக உயர்ந்திருக்கிறது. பட்ஜெட் வரும்போது இதைத் தெரிந்துகொள்ளலாம். சென்ற ஆண்டு பட்ஜெட் புள்ளிவிவரத்தைக் கூட்டிக் கழித்து சராசரி போட்டுப் பார்த்தால், நம்முடைய மாநிலத்தில் திட்டச்செலவு மற்ற மாநிலங்களில் இருக்கக்கூடியதை விட மிகவும் அதிகமாக இருப்பதை உணரலாம். இப்போது 13-வது இடத்திலிருந்து நாம் ஏழாவது அல்லது எட்டாவது இடத்திற்கு வந்திருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன். இதைப் புரிந்துகொள்ள வேண்டும். தொழிற்சாலைகளைத் துவக்கவில்லை என்றால், அதற்குக் காரணம் என்ன ? நாமும் தொழிற்சாலைகளைத் துவங்கியிருக்கிறோம். ஓரளவிற்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறோம். ஆனால் நாம் எதிர்பார்த்த அளவிற்கு ஏன்



முன்னேறவில்லை என்று பார்த்தால், அதற்கான மிக முக்கியமான காரணம் என்னவென்பது நம்முடைய மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஒரு தொழிற்சாலையை அமைப்பதற்கு மிக முக்கியமான தேவை மின்சாரம்தான். The most important ingredient to attract any industrialist to a State is the competitive rate of power. இதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் ஒத்துக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். மலிவான விலையில் மின்சாரத்தைக் கொடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. ஆனால் உள்ள நிலைமை என்ன ? மேலவையில் பேசுகிற நேரத்தில், தீவிர கட்சி உணர்வுகளைத் தள்ளி வைத்துவிட்டு விவரங்களில் நுழைவது கடமை. அந்த அடிப்படையிலே அத்தனை உறுப்பினர்களும் கொஞ்சம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். மின்சாரத்தின் நிலைமை தலைகீழாக இருப்பதற்கு என்ன காரணம் ? இரண்டு செக்டர்கள் இருக்கின்றன, ஒன்று அக்ரிகல்சர், மற்றொன்று இன்டஸ்ட்ரீஸ். அரசியல்வாதிகள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் ? இன்டஸ்ட்ரியல் செக்டரைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. ஒரு குறிப்பிட்ட கட்சியைப்பற்றிச் சொல்லவில்லை. எல்லாக் கட்சிகளும் அப்படித்தான். நான்கூட எதிர்க் கட்சியில் இருந்தபோது, மின்சாரத்தைப் பொறுத்த வரையில், அக்ரிகல்சர் செக்டருக்குத்தான் முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். அதற்காக ஊர்வலத்தில்கூட கலந்துகொண்டிருக்கிறேன். ஆகவே சற்று மனம் விட்டுப் பேச வேண்டும் agricultural sector is sought to be pampered. இதை மாநிலத்தில் இருக்கக்கூடியவர்கள் சொல்லவில்லை. மத்திய அரசாங்கம் சொல்லிக்கொண்டிருக்கிறது. இன்றையதினம் பயங்கரமான பிரச்சினை விவசாயப் போராட்டம்தான். விவசாயப் போராட்டத்திற்கும், இன்டஸ்டிரியல் செக்டருக்கும் இணைப்பு இருக்கிறது. அதையொட்டித்தான் பிரச்சினை இருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. இதைப் பெரிய பிரச்சினையாக விவசாயிகள் ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. ஆ. திராவிடமணி: துணைத் தலைவர் அவர்களே, தொழில் வாய்ப்பைப்பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹண்டே அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். கலைஞர் ஆட்சிக் காலத்தில், இராணிப்பேட்டையில் வார்ப்படத் தொழிற்சாலை, விருத்தாசலத்தில் பீங்கான் தொழிற்சாலை, சேலத்தில் உருக்காலை, தூத்துக்குடியில் ஸ்பிக் உரத் தொழிற்சாலை, மதுரையில் அலுமினியத் தொழிற்சாலை, ஒத்தக்குடியில்

பொட்டாசியம் குளோரைட் தொழிற்சாலை, மணலியில் உரத் தொழிற்சாலை ஆகியவற்றை அமைத்தார்கள். ஆனால் கடந்த இரண்டரை ஆண்டுக் காலத்தில் இவர்கள் ஆட்சியால் அமைக்கப்பட்ட தொழிற்சாலைகள் என்ன வென்றுதான் நாங்கள் கேட்கிறோம்.

டாக்டர் எச். வி. ஹண்டே : பெரிய லிஸ்ட் நாளைக்கு வரப் போகிறது அப்போது படித்தால் புரியும். நான் கொஞ்சம் அப்ஜெக்டிவாகச் சொல்லு கிறேன். விவசாயிகள் சங்கங்களைப் பொறுத்தவரையில், ஒரு "ஹார்ட் ஹிஸ்டரியைச்" சொல்லுகிறேன். 1972 ஆம் ஆண்டு விவசாயப் பிரச்சினைகள் கிளப்பப்பட்டன. அப்போது மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டு மென்று கோரப்பட்டது. அன்றையதினம் எதிர்க்கட்சியிலே இருக்கும்போது மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று சட்டசபையிலே நானும் வாதாடினேன். என்னோடு சேர்ந்து திரு. கே. டி. கே; தங்கமணி அவர்களும் வாதாடினார்கள். அப்போது திராவிட முன்னேற்றக்

(பிற்பகல் 5.40)

கழகம் ஆட்சி நடத்திக்கொண்டிருந்தது. அப்போது 16 பைசாவாக இருந்த நேரத்திலே, அப்போது இருந்த முதலமைச்சர் அவர்கள் சட்ட மன்றத்திலே "இதைவிட குறைக்க முடியாது" என்று சொன்னார்கள். அதற்கு என்ன காரணம் என்று கேட்டார்கள். மத்திய அரசிலிருந்து தாக்கீது வந்துகொண்டிருக்கிறது. 'நீங்கள்தான், இந்த மாநிலம்தான் குறைத்துக்கொண்டிருக்கிறதே தவிர, மற்ற மாநிலங்களிலே குறைக்கவில்லை. ஏன் அப்படி குறைத்துக்கொண்டிருக்கிறீர்கள் ? உங்கள் பர்சென்டேஜ் ஆப் ஹைடல் பவர் குறைவாக இருக்கிறது. கேரளாவிலே அதிகமாக ஹைடல் பவர் இருக்கிறது, அங்கே குறைக்க முடியும். இங்கே நிலப்பரப்பு ஏராள மாக இருக்கிறது' என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். நம் மாநிலம் அப்படி குறைவாக இருக்கின்ற ஹைடல் பவரில்தான் மின்சாரத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறது. அன்று இருந்த மதிப்பிற்குரிய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் சொன்ன கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். அன்று படிக்கப்பட்டதைத்தான் இப்போது இங்கே பேசுகிறேன். அன்று அவர்கள் சொன்ன அந்த வாதத்தையெல்லாம் இன்று பிளானிங் கமிஷன் நம்மிடம் சொல்லிக்கொண்டிருக்கிறது. பைனான்ஸ் கமிஷன் 'டெவலூஷன் ஆப் பண்ட்ஸ்' பண்ணுகிறபோது சரியாகச் செய்யவில்லை. இதை நான் சொன்னதாகச் சொல்லவில்லை. அன்று இந்திரா காங்கிரஸ் ஆட்சியில் இருந்த நேரத்திலே, மதிப்பிற்குரிய திருமதி இந்திரா காந்தி அவர்கள் பிரதமராக இருந்தபோது திரு. ஓய். பி. சவான் பைனான்ஸ் மினிஸ்டராக





ருந்தார்கள். அவர் அன்று இருந்த முதலமைச்சருக்குக் கடிதம் எழுதி ருக்கிறார். அந்தக் கடிதத்தைப் படித்தார்கள். 'நீங்கள் அக்ரிகல்சுரல் சக்டாரை பேம்பர் பண்ணுகிறீர்கள். இதனாலே மின்சாரத்திலே ஒரு யங்கரமான துண்டு விழுகிறது, அதனால் நீங்கள் சப்சிடைஸ் செய்ய வண்டியிருக்கிறது' என்று எழுதியிருந்தார்கள். ஆகவே அன்றைய லைமையில் குறைக்க முடியவில்லை. அதனுடைய விளைவாக பயங்கரமான பாராட்டம் ஏற்பட்டது. பெத்தநாய்க்கன்பாளையத்தில் மட்டும் 15, 16 பேர்கள் இறந்தார்கள். அதையெல்லாம் நான் இப்போது சொல்வதற்குக் ாரணம், விவசாயப் பிரச்சினை தமிழகத்திலே பெரிய பிரச்சினையாக இருந்து, அது இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. விவசாயப் பிரச்சினை அன்றே எழுந்த பிரச்சினைதான். அது புதிதாக வந்த ஒரு பிரச்சினையல்ல. Public memory is very short என்பதால் நான் அதை இப்போது நினைவுபடுத்த விரும்புகிறேன். அது என்னுடைய கடமை என்று சொல்லிக்கொள்கிறேன். அன்று 16 பேர்கள் பெத்த நாய்க்கன்பாளையத்திலே இறந்த பிறகு, அப்போது இருந்த மதிப்பிற்குரிய பெருந்தலைவர் காமராசர் அவர்கள், திரு. கல்யாணசுந்தரம் அவர்கள், நான் ஆகிய மூன்று பேர்களும் சேர்ந்து, "இது ஒரு பெரிய பிரச்சினையாக இருக் கிறது, விவசாயிகள் புறக்கணிக்கப்படுகிறார்கள்" என்று சொன்னோம். அதைத்தான் இப்போது இங்கே சொல்கிறார்கள். நான் அவர்கள் சொன்னதை ஒத்துக்கொள்கிறேன். ஓரளவுக்காவது கலைஞர் அவர்கள் சொன்னது நியாயம்தான் என்றுதான் சொல்கிறேன். அன்று நான் சொன்ன கருத்து தவறு என்று இப்போது தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க்கட்சியிலே இருந்தால், எந்தப் பிரச்சினைக்கும் தூபம் போடலாம் என்ற உணர்வு இயற்கையானதுதான். இந்த மாநிலத்தினுடைய நன்மைக்கு எந்தக் கெடுதலும் ஏற்படக்கூடாது என்பதற்காக, இந்த பயங்கரமான பிரச்சினை எழுந்தபோது, நாங்கள் ஒன்று சேர்ந்து போராடினோம். ஒரு ஜீப்பிலே கருப்பு பேட்ஜ் அணிந்து சென்றோம். தலைவர் காமராஜர் அவர்கள் கருப்புச் சட்டையே அணிந்திருந்தார்கள். தியாகராய நகரிலிருந்து பீச் வரை ஊர்வலத்திலே சென்றோம். பயங்கரமான வெள்ளமே போன்று கூட்டம் திரண்டிருந்தது. அந்தப் பயங்கரமான வேதனையைச் சொல்வ தற்கு அன்று கூட்டம் கூடினார்கள். விவசாயிகள் சங்கத்தை ஆதரித்து நாங்கள் அன்று பேசியிருக்கிறோம். அன்று அரசாங்கத்தைத் தாக்கி விவசாயிகள் சங்கத்தை ஆதரித்து நாங்கள் பேசியிருக்கிறோம். நம்முடைய மதிப்பிற்குரிய விவசாயிகள் சங்கத்தினுடைய தலைவராக இருக்கக்கூடிய திரு. நாராயணசாமி நாயுடுவைப் பொறுத்தவரையிலே, இந்த அமைச்சரவையில் உள்ள அத்தனை அமைச்சர்களையும் விட, நான் அவருக்குப் பலவகையிலே

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1980 பிப்ரவரி 7

உதவி செய்திருப்பவன். நன்கு பழக்கமானவனும்கூட. நான் எதிர்க்கட்சியிலே இருந்த காரணத்தினாலே, அந்தக் காலத்திலே, நான் அவருக்குப் பல வகையிலும் உதவி செய்திருக்கிறேன் என்பதற்காகத்தான் இப்போது இதை நான் சொல்லிக்கொள்கிறேன். சட்டசபையிலே ஏதாவது பிரச்சினைகளை எழுப்பிக் கேட்க வேண்டுமென்றால், என்னைத்தான் அணுகுவார்கள். அவர் மீது எனக்கு நிரம்ப மதிப்பு இருக்கிறது. இங்கே நான் சொல்ல விரும்புவது, அந்தப் பிரச்சினைகள் அப்போதும் நம்மாலே தீர்க்க முடியாததாக இருந்தன. ஊர்வலத்தில் சென்றோம். நம் உணர்வுகளைக் காட்டினோம். ஆனால் அந்தக் கட்டணத்தைக் குறைக்க முடியவில்லை. இன்றைக்கு இந்த அரசாங்கம் வந்த பிறகும், அந்தப் பிரச்சினை தொடர்ந்து நீடித்தது. நான் சொல்ல வந்தது எல்லாம், அந்த ஆட்சியிலே நம் விவசாயிகள் சங்கத் தலைவர் திரு. நாராயணசாமி நாயுடு அவர்களாலே பிரச்சினைக்குத் தீர்வு காண முடியவில்லை. இந்த ஆட்சி வந்த பிறகும் இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலே, மாநிலத்தில் அந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். பம்புசெட்டுகள் வைத்துப் பயன்படுத்துகின்ற விவசாயிகள் கட்டணத்தைக் குறையுங்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய ஆட்சி அதைக் குறைத்தது.

**திரு. ஆ. திராவிடமணி :** விவசாயிகள் சில கோரிக்கைகளை இங்கே வைத்து நியாயமாகப் போராடுகிறார்கள். ஏற்பட்டுவிட்ட அசம்பாவித நிகழ்ச்சிகளுக்கு மனம் வருந்தி, முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் விவசாய சங்கத் தளபதி கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்களையும் அவர்கள் குழுவையும் அழைத்து கலந்து பேசி, அவர்கள் கொடுத்த ஆறு நியாயமான கோரிக்கைகளிலே, விளைபொருள்களுக்கு விலை நிர்ணயிக்கின்ற உரிமை விவசாயிகளுக்குத்தான் இருக்க வேண்டும், உற்பத்திக்கு ஆகக்கூடிய பொருளுக்கு அதிகமான விலை கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள். மத்திய அரசு கொடுக்காவிட்டாலும், மாநில அரசு போனஸாக ஒரு பத்து ரூபாயும், வண்டிக் கூலியாக ஐந்து ரூபாயும் கையை விட்டுக் கொடுக்கலாம் என்ற கருத்துக்கள் இருப்பதாக சொல்லிப் பேசினார்கள். அதுபோல திரு. நாராயணசாமி நாயுடுவை தமது முதலமைச்சர் அவர்கள் அழைத்துப் பேசி இந்தப் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு காணலாம் அல்லவா? அதைத்தான் நான் சொல்கிறேன்.



1980 பிப்ரவரி 7]

**டாக்டர் எச். வி. ஹண்டே:** அப்படியிருந்தாலும்கூட நான் சொல்வது என்ன? விவசாயிகளுக்கு எவ்வளவு விலை போகிறதோ, மூலப் பொருள்களுடைய விலையை, இன்-புட்ஸ் காஸ்ட்டைக் கணக்கிட்டு, அதன் அடிப்படையில் விற்கலாம் என்று சொன்னார்கள். அப்படி கணக்குப் போட்டு பொருள்களை விற்கலாம் என்று அப்போது சொன்னாலும்கூட, அன்றையதினம் விவசாயிகளுக்கு வாங்கக்கூடிய சக்தியில்லை, விற்கக்கூடிய சக்தி இல்லை. அரசாங்கம்தான் வாங்கவேண்டியிருந்தது. அப்போதுகூட விலை கட்டுப்படியாகவில்லை என்றுதான் சொன்னார்கள். நிலைமைகள் அப்போதும் முழுக்க முழுக்க சீர்படவேயில்லை. விவசாயச் சங்கத்தைப் பொறுத்த வரையில், 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலே அந்தக் கட்சியை விவசாயிகள் சங்கம் ஆதரிக்கவில்லை என்று சொன்னார்கள்.

**திரு. ஆ. திராவிடமணி:** தேர்தலில் அவர்கள் ஆதரிக்கிறார்களா இல்லையா என்பது அல்ல பிரச்சினை. ஆளும் கட்சி கவனத்தோடு அவர்களைக் கூப்பிட்டு மதிப்பு கொடுத்து அவர்கள் சொல்கின்ற பிரச்சினைகளைக் குறித்துப் பேச வேண்டும். தேர்தல்களில் அவர்கள் ஆதரிக்கிறார்களா இல்லையா என்பது அவரவர்கள் அபிப்பிராயத்தைப் பொறுத்தது. அதற்காக அவர்கள் ஆதரிக்கவில்லை என்பதல்ல.

**டாக்டர் எச். வி. ஹண்டே :** ஆதரிக்கவில்லை. ஏனென்றால் அவர்களைப் பொறுத்தவரையில், திரு. நாராயணசாமி நாயுடுவைப் பொறுத்த வரையில் இழப்பு. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு எந்தவிதமான தீர்வும் கொடுக்கவில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அங்கத்தினர் அவர்கள் இட்டத்தட்ட 35 நிமிடங்களாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் ஒரு 10 நிமிடங்களில் முடித்துக்கொள்ள வேண்டும்.

**டாக்டர் எச். வி. ஹண்டே :** அப்போதும் எந்தவிதமான தீர்வும் காண முடியவில்லை என்றுதான் சொன்னார்கள். திரு. நாராயணசாமி நாயுடுவைப் பொறுத்தவரையில், அந்த ஆட்சியிலே அவருக்குத் தீர்வு காண முடியவில்லை. பரிகாரம் தேடினார்கள், கிடைக்கவில்லை. அவர்கள் சில கோரிக்கைகளை வைத்தார்கள், கவனிக்கப்படவில்லை. மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று கேட்டார்கள். அந்தக் குறைகளை ஏன் தீர்க்க முடியவில்லை?

(டாக்டர் எச். வி. ஹண்டே) [1980 பிப்ரவரி 7

மதிப்பிற்குரிய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அதைத் தீர்க்க முடியவில்லை. இங்கே தான் வருகிறது சிக்கல். எந்த விவகாரமாக இருந்தாலும், மத்திய அரசுக்குப் போகவேண்டியிருக்கிறது. கூட்டுறவுக் கடனை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். அந்த ஒன்றை மட்டும் எடுத்துக்கொள்ளுங்கள். எந்த ஒரு சமரசம் பேசினாலும்கூட, எந்த நேரத்தில் கூடிப் பேசினாலும், நானும் அங்கே இருந்திருக்கிறேன் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். திரு. திராவிடமணி அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். கோட்டையிலே நடைபெற்ற எந்தக் கூட்டமாக இருந்தாலும் சரி, அதில் நானும் கலந்துகொண்டிருக்கிறேன். திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் ஒரு சங்கம். திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் ஒரு சங்கம், இந்த இரண்டு சங்கங்களின் பிரதிநிதிகளும் பேசிய கூட்டத்திலும் அவர்களுடன் கலந்து பேசியிருக்கிறேன். திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் தீவிரமாக ஒரு சங்கத்தை நடத்தினார். அதற்குப் பிறகு திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களிடம் பேசினார்கள். இரண்டு சங்கங்களின் பிரதிநிதிகளுடனும் பேச்சு வார்த்தைகள் நடைபெற்ற நேரத்தில், நானும் அங்கே இருந்தேன். அப்போது கூட சொல்லப்பட்ட கருத்து என்ன ? கூட்டுறவுக் கடன் ரத்து செய்யப்பட வேண்டும் என்பது. இப்போது என்ன சொல்லப்படுகிறது ? கூட்டுறவுக் கடன்களுக்காக ஜப்தி செய்யக்கூடாது என்று சொன்னார்கள். அது யாராலேயும் முடியாது. அது நம் கையிலே இல்லை.

திரு. ஆ. திராவிடமணி : இப்போது மத்திய அமைச்சர் திரு. ஆர். வி. எஸ். அவர்கள் தமிழகத்தினுடைய விவசாயிகள் கடன் பளுவினால் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் என்று தமிழக அரசு எங்களுக்குத் தெரிவிக்குமானால், அந்தக் கடன் பொறுப்பை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும் என்று சொல்லியிருக்கிறார்கள். திரு. ஆர். வி. எஸ். பொறுப்போடு சொல்லியிருக் கிறார்கள். அதுபோல ஜனதா அரசிடம் இந்த ஆட்சியினர் சொன்னார்களா ? அவர்கள் அதை மறுத்தார்களா ? அதற்குப் பிறகு வந்த அரசிடம், ஆட்சியிலே பங்கு கொண்ட சரண்சிங் அரசிடம்தான் சொன்னார்களா ? சொல்லியும் அவர்கள் மறுத்தார்களா ? அல்லது சொல்லவே இல்லையா ? சொல்லி யிருந்தால், அவர்கள் ஏற்றுக் கொண்டிருப்பார்கள். ஏனென்றால் இன்று விவசாயிகளுக்குக் கடன் பளு இருந்தால், நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம் என்று திரு. ஆர். வி. எஸ். அவர்கள் சொல்கிறார்கள்; கடன் பளு இருக்குமானால், ஏற்றுக்கொள்கிறோம் என்று அமைச்சர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.



1980 பிப்ரவரி 7]

MR. DEPUTY CHAIRMAN : If the hon. Member wants to continue, let him not yield to the other hon. Member.

டாக்டர் எச். வி. ஹண்டே : இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண மதிப் பிற்குரிய திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் சொல்ல வேண்டும். அவர்தான் முக்கியம்; திரு. ஆர். வி. எஸ். சொன்னால் போதாது. அவர் சொன்னதும் நல்லதுதான். அவரிடம் எனக்கு நல்ல மதிப்பு இருக்கிறது. ஆனால் மதிப்பிற்குரிய திரு. ஆர். வி. எஸ். மட்டும் சொன்னால் போதாது. அதைச் சொல்ல வேண்டியவர்கள் மதிப்பிற்குரிய மாண்புமிகு அமைச்சர் திரு. ஆர். வி. அவர்கள். அவர் சொன்னால்தான் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியுமே தவிர, இல்லாவிட்டால் முடியாது. அதையே தான் அன்று மதிப்பிற்குரிய டாக்டர் கருணாநிதி அவர்களும் சொன்னார்கள். மாநில அரசில் மத்திய அரசிடம் எடுத்துச் சொன்னார்கள். ஜனதா ஆட்சியினரிடம் நம் ஆட்சியும் சொன்னது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார் கள். மதிப்பிற்குரிய திரு. கே. ஏ. கே. அவர்கள் சொன்னார்கள். நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பலமுறைகள் சொல்லியும் வற்புறுத்தியும் கேட்க வில்லை. ஏனென்றால் சட்டத்திலே இடம் கிடையாது. ஒரு மாநிலத்திற்கு மட்டும் விதிவிலக்கா என்று கேட்கிறார்கள். மத்திய வங்கியான ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவிற்கு என்று சில கோட்பாடுகள் உண்டு. அதை யாராலும் தடுக்க முடியாது. ரிசர்வ் வங்கி, உலக வங்கி இவைகளுக்கெல்லாம் சில கோட்பாடு கள் இருக்கின்றன. பாங்குகள் என்றால் சில விதிமுறைகள் இருக்கின்றன. நாட்டிலே இருக்கின்ற திரு. திராவிடமணி அவர்கள் சொன்னால் போதாது. ஹண்டே சொன்னால் போதாது, முதல்வர்கள் சொன்னால் போதாது. இன்னும் சொல்லப்போனால், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்னால்கூட முடியாது. கான்ஸ்டிடியுஷனை அமெண்ட் பண்ணினால் ஒழிய முடியாது.

(பிற்பகல் 5-50)

பெரிய சிக்கலான பிரச்சினையிலே நாம் மாட்டிக் கொண்டிருக்கிறோம். நம்முடைய திரு. நாராயணசாமி நாயுடு அவர்களைப் பொறுத்தவரையில், இதற்குத் தீர்வு காண வேண்டாமென்பதில்லை. பல முறை அந்த அடிப்படை யிலே பேசுவோமென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அழைத் திருக்கிறார்கள். அவர்கள், இதைத் தளர்த்துவதாக இருந்தால், இப்படி இப்படிச் செய்வதாக இருந்தால் என்று சில விதிகளை வகுத்தார்கள். இப் போதுகூட ஒரு சுமுக உணர்வு ஏற்பட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. இந்த விஷயங்களை ரிசர்வ் வங்கியிடம் சொல்லும்போது, "Are you prepared for overdrafts ?" என்ற கேள்வி கேட்டார்கள்.

" அப்படி நீங்கள் சொன்னதை ஏற்றுக்கொண்டால், ஓவர்-டிராப்ட் போகுமே, அப்போது என்னவாகும்? ஓவர்-டிராப்டில் இறங்கிவிட்டால் எப்படி?" சட்டசபையில் ஓவர்-டிராப்ட் ஜாஸ்தியாக வேண்டுமென்று கேட்டு, அன்றைய அரசாங்கத்திற்குத் தலைவலி ஏற்படுத்தப்பட்டது. ஓவர்-டிராப்ட் நிறைய வாங்கினால், மாநில ஆட்சியைக் கேள்வி கேட்கும் பயங்கரச் சூழ்நிலைக்கு ஆளாக்குகிறோம். ஓவர்-டிராப்ட் வாங்கும்போது, ஏன் ஓவர்-டிராப்ட் என்று கேட்டார்கள். அப்படியில்லாமல் இருந்தால், கடனை ரத்து செய்வோமென்று சொல்லவில்லையா என்று இவர்கள் கேட்பார்கள். ஆகவே,

caught between the two Vivasayee on the one side and the Reserve Bank of India on the other side

ஒரு அரசாங்கம் என்ன செய்ய முடியும்? இதைத்தான் சிந்தித்தாக வேண்டும். மதிப்பிற்குரிய திரு. நாராயணசாமி நாயுடு அவர்களை நான் தெரிந்திருப்பவன் என்பதால், இந்த அவையின் மூலமாக ஒரு வேண்டுகோளை விடுக்கிறேன். என்னைப் பொறுத்தவரையில், வேண்டுகோள் விடுவது இந்த ஆட்சியைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக அல்ல, இந்த ஆட்சி இருக்க வேண்டுமென்பதற்காக அல்ல. தமிழகத்தின் நலனுக்காகச் சொல்கிறேன். "விவசாயிகளுக்கு ஆசை காட்டி, நீங்கள் பணம் கட்ட வேண்டாம் என்று சொல்லி" எங்கள் சங்கத்தை ஆதரியுங்கள் என்று சொல்லி, அவர்களைக் கற்பனை உலகில் வைப்பதைவிட, பிரச்சினை தீர பேசி முடிவெடுக்க வேண்டும்". திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இதில் தீர்வு காண முடியவில்லை. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஓரளவிற்குத் தீர்வு காண முடிந்தது. 12 பைசாவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே ஓரளவிற்குத் தீர்வு காணப்பட்டிருக்கிறது. ஆனால் கட்டுவதற்கு கடனை ரத்து செய்ய வேண்டுமென்று இறங்கினால், எந்த ஆட்சி வந்தாலும் அது முடியாது. எனவே இந்தப் பிரச்சினைகளை நீட்டித்து, விவசாயிகளை அவதிக்குட்படுத்தாமல் இருக்க வேண்டும்.

Impassioned appeal through this House திரு. நாராயணசாமி நாயுடு அவர்களுக்கு விடுக்கிறேன். கொஞ்சம் உட்கார்ந்து பேசுவோம். என்னைப் பொறுத்தவரையில் I am prepared எந்த நேரத்திலும். ஆளுங்கட்சியிலே பொறுப்பு வாய்ந்த உறுப்பினராக இருப்பதால், இந்தப் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். பேசி, சட்டத்திலே எந்த அளவிற்கு இடம் இருக்கிறது என்று ஆராய்வோம். அந்த அளவிற்கு விவசாயிகளுக்கு நன்மைகள் செய்யத் தயாராக இருக்கிறோம். ஆகவேதான் இப்படிச் செய்வதன் மூலமாக—செய்வோம்— Industries electricity tariff ஜாஸ்தியாகும். You cannot have moustanle and also gruel. மீசைக்கும் ஆசை, கூழுக்கும் ஆசை. விவசாயிகளுக்கு மின் கட்டணத்தைக்



குறைக்க வேண்டும், தொழில்களுக்கும் மின் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று சொன்னால், அதில் ஏதாவது ஒன்றைச் செய்ய முடியும். Let us decide in this House Industries -க்கு அதிக Tariff போடுவோம். விவசாயிகளுக்குக் குறைப்போம் என்று சொல்லுவோம். Choice is very much limited as far as our state is concerned என்று சொல்லிக்கொள்கிறேன்

அடுத்தபடியாக, ஒரேயொரு விஷயம். இங்கேகூட ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. நம்முடைய மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் வேறொரு விஷயமாக வெளி நடப்புச் செய்தார்கள். ஆசிரியர்களைப் பொறுத்தவரையிலும், நான் ஒரு கோரிக்கை விடத் தயாராக இருக்கிறேன். ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், இங்கே ஏற்கெனவே பல முறை சொல்லியிருக்கிறோம். அதிலே இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. Professors, Assistant Professors என்ற இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. வந்திருக்கக்கூடிய பிரச்சினை என்ன? Professors- —U.G.C. Scales of Pay கொடுத்திருக்கிறோம். Assistant Professors களுக்குக் கொடுக்கவில்லை. Agitation of College teachers will be intensified . . .

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இப்போது அவர்கள் அதிகமாக வற்புறுத்துவது குறிப்பிட்ட காலம் பணியில் இருந்த அசிஸ்டண்ட்-பிரபுசர்களையெல்லாம் பிரபுசர்களாக்க வேண்டுமென்பதுதான். ஆனால் அனைவருக்கும் யு.ஜி.சி. ஸ்கேல் கொடுத்திருக்கிறோம்.

டாக்டர் எச். வி. ஹண்டே: The agitation of College teachers will be intensified from Thursday, as the Government have not reacted sensitively to indefinite fast. இதுதான் குறை. ஆளும் கட்சியில் உள்ள நான்கூட ஆசிரியர்களின் ஓட்டு வாங்கியிருக்கிறேன். Graduates Constituency -ல் அவர்கள் ஓட்டுப் போடவில்லை என்றால், நான் வந்திருக்க முடியாது. என்னைப் பொறுத்தவரையில், அவர்கள் நிறைய நம்பிக்கையோடு ஓட்டுப் போட்டிருக்கிறார்கள். அவர்களில் பல பேர்களைப் பார்த்துப் பேசியிருக்கிறேன். வைஷ்ணவா கல்லூரியில் இருக்கக்கூடிய உதவிப் பேராசிரியர் எழுதிக் கொடுத்தார்.

" The Government have already accepted the principle of upgradation. The difficulty in implementation is fixing the number of years of service for upgradation. ffl அதில்தான் ஒரு சின்ன கருத்து வேறுபாடு. Bureaucrats are giving interpretation . . . .

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இது தொடர்பாக நான் ஒரு வாக்குறுதி கொடுத்ததாக உறுப்பினர்கள் சொன்னார்கள். தெளிவிற்காக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அவர்கள், 4 ஆண்டுக்காலம் பணியில் இருந்த அசிஸ்டெண்ட் பிரபுசர்களையெல்லாம் பிரபுசர்களாக மாற்ற வேண்டுமென்று சொன்னார்கள். நான் அவர்களிடத்தில் சொன்னது, 4 ஆண்டுகள், 8 ஆண்டுகள், அல்லது 20 ஆண்டுகள் என்ற அடிப்படையில் தர வேண்டுமென்று கேட்டால், நிச்சயமாக இந்த அரசு தராது என்பதுதான். ஆனால் அதில் இருக்கிற ஒரு அநியாயம் புரிகிறது. இப்போது காமர்ஸ் டிபார்ட்மெண்ட்டில் துணைப் பேராசிரியராக ஒருவர் சேர்ந்துவிட்டால், சிக்கிரம் அவர் பேராசிரியராகி, பிரின்சிபாலாக வரும் நிலைமையில், பிசிக்ஸ் அல்லது தமிழ் துறைகளில் துணைப் பேராசிரியர்களாகச் சேர்ந்தவர்கள் அதே பதவியில் ரிடையர் ஆகும் நிலைமைகள் இருக்கின்றன. ஒரே தேதியில் சேர்ந்தாலும்கூட, ஒருவர் பிரின்சிபாலாகி, டைரக்டர் ஆகும் அளவிற்கு வந்துவிடுகிறார். அதோடு, மற்ற சப்ஜெக்டுகளில் சேர்ந்த துணைப் பேராசிரியர்கள் இன்னும் கூட துணைப் பேராசிரியர்களாக அப்படியே இருக்கக்கூடும். இது ஒரு டிஸ்கிரிமினேஷனாக இருக்கிறது. அதைத் தீர்க்க வேண்டும். அதைத் தீர்க்க முயற்சி செய்கிறோமென்று சொன்னேன். அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு, அந்த அடிப்படையிலே ஜாயிண்ட் கவுன்சில் சார்பாக ஒன்றைத் தந்திருக்கிறார்கள். நான் அவர்களிடத்தில் இன்னும் ஒன்றைக் குறிப்பாகச் சொல்லியிருக்கிறேன். பணம் சம்பந்தமாக எந்தப் பிரச்சினையும், இந்தக் கோரிக்கையில் வரக்கூடாது, அதை இந்த அரசு ஏற்றுக்கொள்ளாது, இந்த அநியாயத்தைப் போக்க ஒரு பார்முலாவை நாங்கள் கண்டுபிடிக்கிறோம் என்று சொன்னேன். அதை அவர்கள் ஒத்துக்கொண்டு, எழுதித் தந்தார்கள். இப்போது அதைப்பற்றி அரசுத் தரப்பில் பல கட்டங்களில் விவாதிக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். பல்கலைக் கழகத்தோடு விவாதிக்க வேண்டும். உயர் கல்வி சம்பந்தமாக இருப்பதால், கல்வித் துறை பல்கலைக் கழகத்தோடு விவாதிக்க வேண்டும். பல்வேறு கட்டங்களில் விவாதம் நடைபெற வேண்டியிருப்பதால், இது கொஞ்சகாலம் நீடித்துக்கொண்டிருக்கிறது. சொல்லிவிட்டு, இன்றைக்குச் செய்யவில்லை என்பதல்ல. சொன்னவுடனே செய்யும் நிலைமைகள் இருப்பதால், அவர்கள் யு.ஜி.சி. சம்பள விகிதங்களுக்காக 4 ஆண்டுக்காலம் கேட்டுக்கொண்டிருந்திருக்க வேண்டியதில்லை. கடந்த 2, 3 ஆண்டுகளில் அவர்கள் கேட்ட கோரிக்கைகள் எந்த அளவிற்கு நிறைவேறி இருக்கின்றன என்று பார்த்தால் தெரியும். இதற்கு முன்னாலே 30 ஆண்டுக் காலம் கல்வித் துறை செயல்பட்டதைவிட வேகமாக, விரைவாக இப்போது செயல்பட்டிருக்கிறது என்பதை உணர்வீர்கள். அந்த அடிப்படை



யிலே அவர்கள் ஒத்துழைப்பைக் கேட்கிறேன். மாணவர்கள் படிப்பை பாதிக்க வைத்து, அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய அளவிற்கு, இந்த அரசு இரண்டரை ஆண்டுகளில் தவறுகளைச் செய்யவில்லை. எந்தவிதமான அளவிற்கும் அலட்சியப் போக்கு காட்டியதில்லை. ஆகவே அந்த நல்லுணர்வின் அடிப்படையிலே நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதுவும் தேர்வு நெருங்கிக்கொண்டிருக்கும்போது, கல்லூரிகளில் இத்தகைய சூழ்நிலைகளை உருவாக்குவதானது, அதுவும் ஆசிரியப் பெருமக்கள் அப்படிச் செய்யும்போது, பொதுமக்கள் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்ற அடிப்படையிலே வேண்டுகோளை வைக்கிறேன். அதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்லவில்லை. இதற்கு முன்னாலே குறிப்பிட்டதுபோல, அவர்கள் ஒத்துழைப்பு தருகிறார்கள். வேலை நிறுத்தம் என்று வரும்போது, சூழ்நிலைகள் பாதிக்கின்றன என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6-00)

**திரு. க. அறிவழகன்:** On a point of clarification.

அமைச்சரவர்கள் டாக்டர் ஹண்டே அவர்களுக்குப் பதில் சொல்லும்போது, பல்கலைக் கழக ஆசிரியர்களுடைய பிரச்சினைகளைப் பற்றிச் சொன்னார்கள். கேரளா, கர்நாடகம் ஆகிய மாநிலங்களைப் போல இங்கேயும் துணைப் பேராசிரியர்களாக இருப்பவர்களை எல்லாம் பேராசிரியர்களாக ஆக்குவதால் எந்தவித பணச் செலவும் இருக்கக் கூடாது, இருக்காது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதுபோல் சம்பளத்தை நேரடியாகக் கொடுப்பதைப் பொறுத்தவரையிலும், பிரின்சிபாலிடமே கொடுக்கலாம். இடையிலே கரஸ்பான்டென்டிடம் அந்த அதிகாரத்தைக் கொடுக்க வேண்டாம். ஆகவே இதிலொன்றும் பணச் செலவு இல்லை. அந்த முறையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் இதை கவனிப்பார்களா? அவர்கள் பணச் செலவு இல்லாத கோரிக்கைகளைத் தான் வைத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** நேரடிச் சம்பளம் தருவதைப் பொறுத்தவரை, அவர்களுக்குள்ளே ஒரு கமிட்டியைப் போட்டு அந்தக் கமிட்டி எடுத்த முடிவிற்கேற்ப உத்தரவையும் அனுப்பிவிட்டோம். அதிலே ஒரு குறைபாட்டை இப்போது சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதெல்லாம் இன்றைக்கு இருக்கிற கல்லூரிகளில் பெரும்பான்மையான கல்லூரிகள் சிறுபான்மையினரால் தான் நடத்தப்படுகின்றன.

எந்த அளவிற்கு அவர்களுக்கு அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன, அவர்கள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றனர், செயல்படுத்த முடியாமல் இருக்கின்றனர் என்பதையெல்லாம் இன்றையதினம் ஆசிரியர்கள் நன்றாக உணர்வார்கள். மானேஜ்மென்டும் ஆசிரியர்களும் எந்த அடிப்படையில் ஒத்துழைக்கிறார்களோ அல்லது ஒத்துக்கொள்வார்களோ அந்த வகையில் அது நமக்குப் பெரிய வெற்றி என்று சொல்லலாம். அதற்கு அந்த இருசாராரும் நல்லமுறையில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒத்துக்கொள்ளவேண்டும். அதற்குப் பிறகு பிரச்சினைகள் வந்தால், நாம் தீர்க்க முடியும். முழுக்க முழுக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டால், அரசால் கூட இன்றையதினம் செய்ய முடியாது. அத்தகைய ஒரு நிலைக்கு பிரச்சினையை ஆசிரியர்கள் கொண்டு வந்தால், மேற்கொண்டு அதை நிறைவேற்ற முடியாத சூழ்நிலைக்கு அதைக் கொண்டு வந்தவர்களாவார்கள்.

டாக்டர் எச். வி. ஹண்டே: ஆசிரியர்களுடைய கோரிக்கைகளைப்பற்றி நான் சொன்ன சந்தேகங்களுக்கும் அதையொட்டி எழுப்பப்பட்ட குறுக்கீடு வினாவிற்கும் இம்மன்றத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆறுதல் தரக்கூடிய வகையில் பதிலளித்திருக்கிறார்கள். அதற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன். இந்த மன்றத்தில் மாண்புமிகு அமைச்சரவர்கள் பயங்கரமான ஒரு அஸ்யூரன்ஸை, வாக்குறுதியை அளித்திருப்பதை ஆசிரியர்கள் நம்பி அந்த அடிப்படையில் இங்கு ஆசிரியப் பிரதிநிதிகளாக மாண்புமிகு உறுப்பினர்கள் கொறடா உட்பட (சிரிப்பு) இருக்கக்கூடியவர்களை அணுகி பிரச்சினைகளை சுமுகமாக தீர்ப்பதற்கான வழி முறைகளைக் காண பாடுபட்டால், நம்முடைய மாணவ மாணவியரின் எதிர்காலம் மிக நன்றாக இருக்கும் என்கிற நம்பிக்கையுடன் இந்தப் பிரச்சினையை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

ThiruK. ARIVAZHAGAN : On a point of order . . .

Mr. DEPUTY CHAIRMAN : I hope the hon. Member Dr.Hande has concluded his speech. Is he going to speak again After the hon. Member concluded, the Hon. Minister gave some clarifications. The hon. Member cannot speak once again.

டாக்டர் எச். வி. ஹண்டே: ஸ்பீச்சை இன்னும் முடிக்கவில்லை. இன்னும் 5 நிமிடம் கேட்டிருந்தேன். I had not concluded the speech. I had asked for some more time — about 5 minutes. I may be allowed to have that time, since I speak only once in a way.

Mr. DEPUTY CHAIRMAN : I thought the hon. Member had concluded his speech.





டாக்டர் எச். வி. ஹண்டே: இன்னும் நான் கிளைமாக்சுக்கு வரவில்லை.

திரு. க. அறிவழகன்: ஆசிரியர்களுடைய பிரச்சினையைப் பற்றி வருவதால் ஒரு விளக்கம் பெற விரும்புகிறேன் On a point of information. மூத்த பேராசிரியர்கள் இன்றையதினம் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்த்துப் பேச இருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அவர்களுடன் நான் பேசுவதற்குத் தயாராக இருக்கிறேன். தாராளமாகப் பேசலாம். ஆனால் இப்பொழுது அதிகாரிகள் மட்டத்திலே சில விவரங்களைக் குறித்துப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

டாக்டர் எச். வி. ஹண்டே: அடுத்து, ஒரு பிரச்சினையைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் ஒரு பயங்கரமான குற்றச்சாட்டை அரசாங்கத்தின் மீது சுமத்தினார்கள். "மு. பாலு என்பவர் தொட்டியம் நகர அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைப்பாளர். அவர் முதலமைச்சருக்கு ஒரு புகார் எழுதினார். அதனுடைய நகலை சட்டப் பேரவை எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்கும் அனுப்பினார். அவருக்கு சட்டமன்ற உறுப்பினர் ஒருவரால் ஆபத்து இருக்கிறது" என்கிற விவரங்களை எல்லாம் கூட இங்கே எடுத்துக் காட்டி படித்தார்கள். சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது என்றும் சொன்னார்கள். அதற்காகத்தான் நான் சொல்ல வருகிறேன். அவைக் குறிப்பில் அவர் பேசியது இடம் பெற்றிருக்கிறது. அவர் ஒரு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைப்பாளர் என்று உறுப்பினர் சொன்னபடியால், நான் அவரைப் பற்றி விசாரித்தேன். அவர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஒரு மெம்பராக இருக்கிற காரணத்தால், எனக்கு அதைப்பற்றிக் கேட்க அதிகாரம் உண்டு. ஆகவே விசாரித்தேன். நான் விசாரித்தவரை மு. பாலு என்பவர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஒரு காலத்தில் இருந்தார். இப்போது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினராக இல்லை. ராஜிநாமா செய்திருக்கிறார். ஏனென்றால் அவர் எழுதிய கடிதம் என்னிடம் இருக்கிறது. அவருடைய மகனுக்கு மருத்துவக் கல்லூரியிலாவது விவசாயக் கல்லூரியிலாவது 'சீட்' வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினரைக் கேட்டார். அவர் எழுதிக் கொடுத்த கடிதம் என்னிடம் இருக்கிறது. அதில் இன்ன என் என்று கூட குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் அவருடைய மகனுக்கு மார்க் மிகவும் குறைவாக இருந்த காரணத்தால், எந்தச் சட்டமன்ற உறுப்பினராயிருந்தாலும், எந்த ஆட்சியாக இருந்தாலும், 'சீட்'

(டாக்டர் எச். வி. ஹண்டே) [1980 பிப்ரவரி 7

வாங்கிக் கொடுக்க முடியாது. அவருடைய மகனுக்கு 'சீட்' கிடைக்கவில்லை. அந்தக் கோபத்திலே கட்சியைவிட்டு விலகிவிட்டார். பழைய லெட்டர்பேடைப் பயன்படுத்தி ஒரு கடிதத்தை இப்பொழுது எழுதியுள்ளார். இதுபற்றி இங்கே உறுப்பினர் பேசினார். எவ்வளவு தூரம் எப்படிப்பட்ட தவறான பிரச்சாரம் இந்த ஆட்சியைப்பற்றி நடைபெறுகிறது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இந்த நேரத்தில் இந்த அவைக்கு இதைச் சொல்லி ஒரு வேண்டுகோளையும் விடுகிறேன். யாராக இருந்தாலும், எந்த ரூபத்தில் இருந்தாலும், தயவுசெய்து தவறான தகவலை இந்த அவைக்குத் தர வேண்டாம்.

"You can fool some people for some time, all people for some time but not all people for all time."

என்று சொல்லுவது மாதிரி தயவுசெய்து தவறான தகவல்களைத் தர வேண்டாம். அதுபோல் தவறான பிரச்சாரம் தேர்தலின்போது நடைபெற்றது. "தாலிக்குத் தங்கம் இல்லை, விலை ஏறியிருக்கிறது, அதற்குக் காரணம் முதலமைச்சர்" என்று அங்கே போனாலும் சொன்னார்கள்.

Gold spurts to 740 dollars an ounce. In the Indian Express of 17th January 1980, it is mentioned thus :

"A Zurich bullion dealer described the situation as madness and said the gold market had lost all sense of normal dealings. The latest upsurge is attributed to anxiety over the situation in Afghanistan and reports about the poor health of Yugoslavia President Tito apart from the statement today by the United States that it is suspending its periodic gold auctions."

இதற்கும் இங்கேயிருக்கிற நம்முடைய முதலமைச்சருக்கும் என்ன சம்பந்தம். இதை எப்படி நம்முடைய முதலமைச்சரோடு தேர்தலில் சம்பந்தப்படுத்தலாம் என்பதை இந்த அவை அறிய வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்.

நான் என்னுடைய உரையை முடிப்பதற்கு முன்னதாக a note of warning செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். நீங்கள் இந்த ஆண்டு பாருங்கள். பல நிலைமைகளை சமாளிக்க வேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். கெரோசின், டீசல், பெட்ரோல் இவற்றின் விலை உயர்வு காரணமாக எல்லாப் பொருள்களின் விலையும் உயர வாய்ப்பிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். "ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் பொருள்களை எடுத்துச் செல்வதற்கு டீசல், லாரி என்று விவகாரம் சம்பந்தப்பட்டிருக்கின்றது. இதன் விளைவாக விலைவாசி ஏறி, பொருள்களின் விலையும் ஏறப் போகிறது" என்று சொன்னார்கள். இந்த ஆபத்தான நிலையை நாம் தவிர்த்தாக வேண்டும்.



1980 பிப்ரவரி 7]

**திரு. ஆ. திராவிடமணி :** பொதுமக்களுடைய பிரதிநிதிகளாகிய நாம் விலை ஏற்றமாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். விலையேறிப் போகாமலிருக்க தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை எடுப்பதை விட்டு விட்டு, விலை ஏறப் போகிறது, பயங்கரமாக விலை ஏறப் போகிறது என்று சொல்லி, நாட்டு மக்களை எந்தக் காரணத்தைக் கொண்டும் பயப்படுத்தக் கூடாது, பீதியடையச் செய்யக் கூடாது. சப்ளை நிலைமை எப்படி இருக்கிறது, விலைவாசி எப்படி இருக்கிறது, எப்படி விலைவாசியைக் குறைக்கலாம் என்பதற்கான திட்டங்களைத் தீட்டி நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, பொதுமக்கள் பீதியடையும்படி, பயப்படும்படியான வார்த்தைகளைச் சொல்லக்கூடாது. இப்போது அம்மையார் அவர்கள் வந்திருக்கிறார்கள், பிரச்சினையை நல்ல முறையில் முடிக்கப் போகிறார்கள். ஆகவே உறுப்பினர் விஷயங்களை பயங்கரமாகச் சொல்லி பொதுமக்களுக்கு பயம் காட்டக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹண்டே :** உறுப்பினர் ஒன்றும் பயப்படத் தேவையில்லை. அதற்குள் அவசரப்பட்டு விட்டார்கள். நான் பேசுவதை கேட்டுவிட்டு அதற்குப் பிறகு பேசலாம். நான் பேசப் போவது இனிமேல்தான் வரப் போகிறது. அதற்குள் அவசரப்பட்டு விட்டார்கள். அங்கேதான் விஷயமே இருக்கிறது. விலைவாசியைக் கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கையாக இப்பொழுதிலிருந்தே ஒழுங்கான முறையில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். மக்களுடைய இறக்குமதியை தேவைக்கேற்ப செய்ய வேண்டும். விநியோகத்தை ஒழுங்கான முறையில் செய்ய வேண்டும். இவையெல்லாம் மிகவும் முன்னெச்சரிக்கையாகச் செய்ய வேண்டும். நாம் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொள்வதில் பயனில்லை. பயனுள்ள கருத்துக்களை எதிர்க் கட்சியில் உள்ளவர்களும் அரசுக்குச் சொல்ல வேண்டும். விலைவாசி ஏற்றத்துக்கு இந்த ஆட்சிதான் காரணம் என்று சொல்லுகிறார்கள். அங்கேதான் தவறு. Operative part யார் என்கிற விவகாரத்தையெல்லாம் நாம் கண்டு பிடித்து நடவடிக்கை எடுத்தால், நிச்சயம் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியும்.

இங்கே எதிர்க்கட்சி சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களை ஏற்றுக்கொள்கிற அதே நேரத்தில் உறுப்பினர் டாக்டர் ஜனார்த்தனம் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு சில திருத்தங்களை உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். ராஜ்ய சபையில் நாங்கள் இதுபோல் குடியரசுத் தலைவர் உரை

(டாக்டர் எச். வி. ஹண்டே) [1980 பிப்ரவரி 7

மீது திருத்தங்கள் கொடுத்திருந்தாலும், அதை நிறைவேற்றுகிறபோது, நாங்கள் திருத்தங்களை வற்புறுத்தவில்லை. அதைப்போல் இங்கேயும் வாக்கெடுப்புக்கு வரும்போது எதிர்க் கட்சியிலுள்ள மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி போன்றவர்களும் மற்றவர்களும் திருத்தங்களை வலியுறுத்தாமல் கவர்னர் உரையின் மீது கொண்டு வந்திருக்கக்கூடிய நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தினை ஏகமனதாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லி, எனக்குப் பேச வாய்ப்புக் கொடுத்ததற்காக மாண்புமிகு துணைத் தலைவரவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

7. அமைச்சரின் விளக்க உரை.

பெட்ரோலியம் பொருள்கள் ஆலோசனைக் குழு குறித்து.

THE HON. THIRU C. PONNAIYAN : Hon. Deputy Chairman Sir, the hon. Member Thiru A. R. Damodaran suggested the constitution of Petroleum Products Advisory Committee. The Government have gone into the suggestion and the Government have decided to constitute a Petroleum Products Advisory Committee with the following members :—

Representatives from department of Industries, Department of Agriculture, Department of Transport and State Transport Undertakings and also Civil Supplies Corporations, Oil Companies, Tamil Nadu Petroleum Dealers' Association, Tamil Nadu Small Scale Industries Association, Medium Industries Association, Large Scale Industries Association, Chambers of Commerce, Tamil Nadu Power-looms Association, Agriculturists Associations, Tamil Nadu Lorry Owners' Association and Tamil Nadu Bus Owners' Association.

* THIRU A. R. DAMODARAN : May I thank the Government on behalf of not merely all these Associations but on behalf of the consuming people because I think a great deal of benefit would be derived by the Government taking advice of these expert bodies. I am grateful to the Government for their very quick handling of the problem.



1980 பிப்ரவரி 7]

(பிற்பகல் 6-10)

6. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரையின் மீது நடைபெறுகின்ற இந்த விவாதத்தில் . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் அவர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். உறுப்பினர் அவர்கள் பேசி முடிந்த பிறகு, திரு. அப்துல் வகாப் அவர்கள் பேச இருக்கிறார்கள். ஏழு மணிக்கு அவை முடிய வேண்டும். ஆகவே, அதற்குள்ளாக முடித்து அவருக்கும் ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : அரசியல் கட்சி சார்பற்று, நான் சேர்ந்திருக்கின்ற அணியின் சார்பாக சில கருத்துக்களை நான் குறிப்பிடு கிறேன். மத்திய அரசுக்கு இந்த மாநில அரசின் சார்பாக, இந்த மாநில மக்களின் சார்பாக வாழ்த்துக்கள் ஆளுநர் அவர்களின் உரையிலே தெரிவிக்கப் பட்டிருக்கின்றன. அதை அனைவரும் பாராட்டுகிறார்கள், வரவேற்கிறார்கள். ஒரு குறிப்பை ஆளுநர் அவர்களின் உரையிலே சேர்த்திருக்க வேண்டும். மத்தியிலே பொறுப்பேற்றிருக்கின்ற கட்சிக்கு மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிட்டி கிடைத்திருக்கிறது. அந்தக் கட்சி இந்த நாட்டிலே சமுதாய சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டு வந்து செயல்படுத்த வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது. எனவே, இந்த நாட்டிலே மீண்டும் எமெர்ஜென்சியைப் பிரகடனப் படுத்தக்கூடாது என்று குறிப்பிட்டிருக்க வேண்டும். இவ்வளவு வலிமை பெற்றிருக்கும் கட்சியின் ஆட்சி மத்தியிலே பொறுப்பிலே இருக்கிறது. இந்த நாட்டிலே கடந்த காலத்திலே ஏற்பட்டது போன்ற நெருக்கடி நிலைமையைக் கொண்டுவந்து மக்களை வேதனைக்கும், கொடுமைகளுக்கும் மீண்டும் ஆளாக்கக்கூடாது என்று ஒரு கோரிக்கை இந்த உரையிலே இருந்தால், நான் மகிழ்ச்சியடைந்திருப்பேன்.

நாடாளுமன்றத் தேர்தல் அமைதியாக நடந்தது பற்றிக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அந்தத் தேர்தலில்பெற்ற வாக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலே இந்த மன்றத்திலே வீற்றிருக்கக்கூடிய கட்சிகள் தங்களுடைய கட்சியின் வலிமையைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். அந்தக் கருத்து வேறுபாட்டிலே புக நான் விரும்பவில்லை. ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது. ஒவ்வொரு கட்சியும் வாங்கும் வாக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலே இன்றைய தேர்தல்களின் அமைப்பு முறையிலே, சரியான பிரதிநிதித்துவம் இல்லை என்ற உண்மை இந்தத் தேர்தல் மூலமாக மட்டு

மல்ல, இதற்கு முன்பு நடந்த தேர்தல்கள் மூலமாகவும் நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. வாங்குகின்ற வாக்குகளின் அடிப்படையிலே கட்சிகளுக்கு இடங்கள் அமைவதில்லை. ஆகவே, இந்தத் தேர்தல் முறை சீர்திருத்தி அமைக்கப்பட வேண்டும். விகிதாச்சார அடிப்படையிலே இப்போது இருக்கின்ற தேர்தல் முறை மாற்றியமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை மாநில அரசுகளும், அனைத்து கட்சிகளும் மத்திய அரசிடம் வற்புறுத்த வேண்டிய நிலையிலே நாம் இருக்கிறோம் என்பதை அனைத்துக் கட்சிகளும் மறந்துவிடக்கூடாது. இன்னொரு தேர்தல் வந்தால், அப்போது கூட இந்த நிலைமை ஏற்படக்கூடும். மிக அதிகமான வாக்குகள் பெறும் ஒரு கட்சி மிகக் குறைவான இடங்களைப் பெறக்கூடிய சூழ்நிலை ஏற்படும். இது இன்றைய தேர்தல் முறையின் குறை என்பதை நாம் உணர்ந்து, இந்தக் குறையைச் சீர்திருத்துவதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ள நிவாரணப் பணிகளைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இங்கே இதற்கு முன்பும் நான் குறிப்பிட்டிருக்கிறேன். நெடுஞ்சாலைத் துறை பற்றிய கொள்கைக் குறிப்பின்மீது நான் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறேன். வெள்ளமும், புயலும் தமிழகத்திலே தொடர்ந்து ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. இவைகளால் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தொடர்ந்து இப்படிப்பட்ட இயற்கை சீற்றங்கள் நடப்பதால், சாலைகள் மிகவும் சேதமடைவதுடன் பெரும்பல பாதிப்புகளும் ஏற்படுகின்றன. அதனால், நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையில் Natural Calamities இயற்கை பாதிப்புப் பணிகளைக் கண்காணிக்க ஒரு தனி டிவிஷன், அமைப்பு இருக்க வேண்டும் என்று சொன்னேன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் அந்தக் கருத்தை வரவேற்று அது குறித்து நிச்சயமாக அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்யும் என்று சொன்னார்கள். இனிமேலாவது—நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த வரையில், இயற்கையின் சீற்றத்திற்கு ஆளாகும் நிலைமை அடிக்கடி ஏற்படுவதால்—நெடுஞ்சாலைத் துறையிலே அப்படிப்பட்ட ஒரு அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். அண்மையிலே சில மாதங்களுக்கு முன்பு நெடுஞ்சாலைத் துறையும், போக்குவரத்துத் துறையும் ஒரே அமைச்சரிடம் இருந்தன. நான் இதிலே கருத்துவேறுபாட்டிற்கு உட்பட்டுப் பேசவில்லை. ஒரு Technical Point ஐச் சொல்ல விரும்புகிறேன். நெடுஞ்சாலைத் துறையும் போக்குவரத்துத் துறையும் மிக நெருங்கிய தொடர்பு உள்ள துறைகள். Inter-related துறைகள். இந்த இரண்டு துறைகளும் ஒரே அமைச்சரிடம் இருந்தால், நல்லமுறையில் காரியங்களைச் சாதிக்க





முடியும், சீர்திருத்தங்களைச் செய்ய முடியும். இப்போது இரண்டு துறைகளும் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, நெடுஞ்சாலைத் துறைக்கு ஒரு அமைச்சரும், போக்குவரத்துத் துறைக்கு வேறொரு அமைச்சரும் இருக்கிறார்கள். இதற்கு என்ன பின்னணி என்பது எனக்குத் தெரியாது. இரண்டு துறைகளும் ஒரே அமைச்சரிடம் இருந்தால், நல்ல காரியங்கள் பல செய்ய முடியும். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கூட சொன்னார்கள். போக்குவரத்துத் துறையிலே கிடைக்கின்ற லாபத்தை நெடுஞ்சாலைத் துறை அபிவிருத்திக்காக உபயோகப்படுத்தப்படும் என்று சொன்னார்கள். ஆகவே, இந்த இரண்டு இலாக்காக்களும் ஒரே அமைச்சரிடம் இருந்தால், நல்லபல காரியங்களைச் சாதிக்க முடியும் என்ற கருத்தை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இரண்டு துறைகளும் ஒரே அமைச்சரிடம் இருக்கும்படியாக மாற்றியமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை விடுகின்றேன்.

நீர் வசதியைப் பயன்படுத்துவதுபற்றி ஆளுநர் அவர்களது உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. பருவமழை கடந்த நான்கு, ஐந்து ஆண்டுகளாக தவறாமல் இருக்கிறது. நான் ஆராய்ச்சியாளர்களிடத்திலே கூட கேட்டேன். அவர்கள் சொன்னார்கள், இந்தியாவிலேயே தமிழகம் தான் சொட்டு தண்ணீரைக் கூட வீணாக்காமல் பயன்படுத்தும் கட்டாயத்திலே இருக்கிறது என்று சொன்னார்கள். பொறியியல் துறையிலே இருப்பவர்களும் அப்படிச் சொன்னார்கள். அவர்கள் இன்னொரு கருத்தையும் சொன்னார்கள், ஒவ்வொரு ஆண்டும் நீர்த் தேக்கங்களிலே இருந்து சுமார் 4 அடி தண்ணீர் ஆவியாகிப் போகிறது. அப்படித் தண்ணீர் சேதமாவதைத் தடுக்க முடியாது. தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்தால், மிக அதிகமான செலவாகும். ஆகவே, நாம் பல நீர்ப்பாசனத் திட்டங்களை வகுத்து, வீணாகும் தண்ணீரை அதிக அளவில் பயன்படுத்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இந்தக் கருத்தை நிபுணர்களும் சொல்லியிருக்கிறார்கள். மழைக் காலங்களிலே கிடைக்கின்ற தண்ணீர் கூட பலமுறைகளிலே வீணாகிறது. அதைச் சேர்த்து வைத்தால், சேர்த்து வைக்க திட்டங்களை வகுத்தால், அதிலே நாம் கவனத்தைச் செலுத்தினால், அந்தச் சேதமும் தடுக்கப்படும், தண்ணீரும் சேமித்து வைக்கப்பட்டு நீர்ப்பாசனத்திற்கும், குடிதண்ணீருக்கும் பயன்படுத்தப்படும் சூழ்நிலை உருவாகும். ஆகவே, அதற்கு அரசு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் ஆசிரியர்கள் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதுபோல இன்றைக்கு நான்கு லட்சமாக ஆசிரியர் சங்கங்களுடைய பொறுப்பாளர்கள், மிகப் பொறுப்புள்ள

கடமையுணர்ச்சியுள்ள பேராசிரியர்கள் எல்லாம் காலவரையறையற்ற உண்ணா விரதம் இருந்துகொண்டு, உயிருக்கு ஆபத்தான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதைத் தொடர்ந்து இன்று தமிழகம் முழுவதும் உள்ள கல்லூரிகள் காலவரையறையின்றி வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதாக பல்கலைக் கழக, கல்லூரி ஆசிரியர்கள் சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு அறிவித்திருக்கிறது. அப்படி அறிவித்திருப்பது சரியா, தவறா என்ற விவாதத்திற்குப் போகாமல், ஏன் இந்தப் பிரச்சினை வந்தது என்று பார்க்க வேண்டும். இன்று இங்கே ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குப் பதிலளிக்கும்போது, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், கல்லூரிக் கல்வி இயக்குநரும், ஆசிரியர்களின் பிரதிநிதிகளும் பேச்சுவார்த்தை நடத்துவதாகத் தகவல் வந்திருப்பதாகச் சொன்னார்கள். அப்படி பேச்சுவார்த்தை எதுவும் நடக்கவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். கல்லூரிக் கல்வி இயக்குநர் ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகளை அழைத்துப் பேசவில்லை. திருச்சியிலே செயின்ட் ஜோசப் கல்லூரியில் ஆசிரியர் ஒருவர் பணிநீக்கம் செய்யப்பட்டார். மாவட்ட ஆட்சித் தலைவர் கல்லூரிக் கல்வி இயக்குநரோடு தொடர்புகொண்டு பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார். அந்த சம்பவத்திலே பாதிக்கப்பட்ட ஆசிரியரின் பிரதிநிதிகள் இங்கே பேசுகிறார்கள். பல்கலைக் கழக ஆசிரியர்களின் பொதுவான கோரிக்கைகள்பற்றி பேச்சுவார்த்தை நடத்துவதாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். It is a misleading information அவைக்கு ஒரு தவறான தகவலை அதிகாரி அளித்து அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை அளித்திருக்கிறார்கள். ஆசிரியர்கள் பிரச்சினைபற்றிப் பேச்சுவார்த்தைகள் நடக்கின்றன என்றும் ஆனால் side by side போராட்டங்களும் நடத்துகிறார்கள் என்று பார்க்கின்ற பொதுமக்கள் தவறாக எண்ணுவதற்கு இது வழிவகுக்கும். ஆக, பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கக் கோரிக்கை

(பிற்பகல் 6-20)

களைப் பொறுத்தவரையில், இந்தப் போராட்டம் துவங்கியதிலிருந்து இன்று வரை எந்த ஒரு அதிகாரியும் எந்தவிதமான பேச்சுவார்த்தையும் தொடங்கவில்லை. இது உண்மை. இதைச் சபைக்கு அறிவிக்க வேண்டியது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். அதே நேரத்தில் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதையும் இங்கே வற்புறுத்தக் கடமைப்பட்டுள்ளேன். மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் ஒரு அழைப்பை விடுத்தார்கள். கல்வியமைச்சர் அவர்களிடம் ஆசிரியர் சமுதாயத்திற்குள்ள மதிப்பை இங்கே சொல்வது என்பது நல்ல மரபாக இருக்காது என்றாலும், ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அவரைப் போன்ற கல்வியமைச்சர் இனி கல்வித் துறைக்குக் கிடைப்பாரா என்ற சந்தேகம் இருக்கிறது. கல்வி அமைச்சரைப் பொறுத்த



வரையில், அவர் ஆசிரியர்களிடம் மிகப் பொறுமையாக அவர்கள் குறைகளைக் கேட்டு, அவைகளைத் தீர்க்க வேண்டும் என்று மேற்கொள்ளுகிற முயற்சியைப் போல், வருங்காலத்தில் எந்த ஒரு கல்வி அமைச்சராவது எடுப்பாரா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. இதை எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள்கூட ஒப்புக்கொள்கிறார்கள். அப்படிப்பட்ட ஆற்றல்படைத்த, மனப்பான்மை படைத்த கல்வியமைச்சர் அவர்கள் இன்றைக்குத் தமிழகத்திற்குக் கிடைத்திருக்கிறார்கள். மிகுந்த பரிவுடன் அவர் பிரச்சினைகளைக் கேட்கிறார். பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்றுதான் அவர் விரும்புகிறார். அதன் காரணமாகவே கல்வித் துறை அதிகாரிகளைக் கலந்து மேற்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்கிறார். கல்வித் துறை அதிகாரிகளும் அமைச்சர் அவர்களின் விருப்பப்படியே நடவடிக்கை மேற்கொள்கிறார்கள். ஆனால் அந்த முயற்சிகள் எங்கே போய்த் தடைப்படுகின்றன என்றால், நிதித் துறைக்குப் போய்த் தடைப்படுகின்றன. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நிதித் துறையின் ஒப்புதலோடு ஒரு ஆணை வெளியிடப்பட்டது. தமிழகத்தில் 'புரொபசர்ஸ் ஃபோரம்" 'Professors' Forum என்ற ஒரு அமைப்பு இருக்கிறது. யு.ஜி.சி.-யில் துணைப் பேராசிரியர்கள், பேராசிரியர்கள் ஆகிய இரு சாரார்களுக்கும் ஒரேவிதமான ஊதிய விகிதம் கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. அதை மூன்றாவது ஊதியக் குழுவும் ஒப்புக்கொண்டு தனது அறிக்கையை வெளியிட்டது. ஆனால் அதற்குப் பிறகு 5—3—1979-ல் ஒரு ஆணை வெளியிடப்பட்டது. அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால்

"Several representations have been received from the Professors' Forum for upward revision of their pay-slales. These representations have been examined by the Government in detail and in partial modification of the orders issued in G.O. first cited above, the following amendments are ordered . . . "

அதாவது பேராசிரியர்கள் ஊதியம் ரூபாய் 900 என்று தொடங்கப்பட வேண்டும் என்று நிர்ணயித்து, 3-வது ஊதியக் குழுவும் அதை ஏற்று தனது அறிக்கையை வெளியிட்ட பிறகு, இந்த ஆணை வெளியிடப்பட்டது. இதில் முக்கியமானது என்னவென்றால், 1—1—1974-ல் பழைய ஊதியம் ரூ. 680 வாங்கிய துணைப் பேராசிரியர் புதிய விகிதத்திற்கு வரும்போது ரூ. 780 பெறுகிறார். அதாவது மாதம் 100 ரூபாய், புதிய விகிதத்தின் காரணமாகத் துணைப் பேராசிரியருக்கு உயர்வு கிடைக்கிறது. ஆனால் துணைப் பேராசிரியரின் ஊதியத்தைவிட அதாவது ரூ. 680-க்கும் குறைவாக 1—1—1974-ல் வாங்கிய பேராசிரியர் புதிய விகிதத்தின் அடிப்படையில் மாதம் ரூ. 1,100

வாங்க அனுமதிக்கப்படுகிறார். அதாவது மாதம் ரூ. 600 அல்லது ரூ. 640 மட்டுமே வாங்கிக் கொண்டிருந்த பேராசிரியரின் ஊதியம், புதிய ஊதிய விகிதம் காரணமாக ரூ. 1,100-ல் நிர்ணயம் செய்யப்படுகிறது. மாதம் அவருக்குக் கிடைக்கிற ஊதிய உயர்வு 320 ரூபாய். இது ஒரு மிகப் பெரிய முரண்பாடு. Anomaly இந்த anomaly யைப் போக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுக்கிறார்கள். இதைவிட வேறு சிறந்த உதாரணம் தேவையில்லை. பேராசிரியர்களாக இருப்பவர்கள் திடீரென்று மாதம் ரூ. 320 உயர்வு பெறுகிறார்கள். இப்படி ஒரு anomaly யை உருவாக்கும் வகையில் அரசாங்க ஆணை ஒன்று பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாகவே கல்லூரி ஆசிரியர்கள் ஒரு கோரிக்கை வைத்தார்கள். அது எந்த வகையில் நியாயமற்றது என்று சொல்ல முடியும்? அவர்களும் இதை ஓராண்டுக் காலமாகக் கேட்கிறார்கள். இதுவரை இந்த anomaly களைப் போக்கவேண்டும் என்ற வகையில் நடவடிக்கை எதும் மேற்கொள்ளப்படவில்லை. anomaly யைப் போக்கும் வகையில் அவர்கள் ஒரு கோரிக்கை வைத்தார்கள். அதாவது ஒரு குறிப்பிட்ட ஆண்டுக் காலத்திற்குப் பிறகு துணைப் பேராசிரியர்கள் அனைவரும் பேராசிரியர்கள் பதவிக்கு உயர்த்தப்படவேண்டும். அதற்கு அரசாங்கம் ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று **கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.**

துணைப் பேராசிரியர்களுக்கும் பேராசிரியர்களுக்கும் ஒரே ஊதிய விகிதம் இருக்க வேண்டும் என்று U.G.C. -யும் 3-வது ஊதியக் குழுவும் ஒப்புக் கொள்கிறார்கள். ஆனால் இந்த ஆணையில் என்ன சொல்லப்படுகிறது என்றால்

"In column (3) of Annexure 1 of G.O. Ms. No. 2106, Education, dated 21st September 1977, against the category of Professors, in Serial No. 14, the following shall be added:

'The initial fixation shall start from Rs. 1,100'.

The scale of Degree College Principals will be the same as that of Professor of Degree Colleges with a special pay of Rs. ..."

கல்லூரி முதல்வர்களையும், கல்லூரிப் பேராசிரியர்களையும் இணையாக வைத்து இந்த ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. கல்லூரித் துணைப் பேராசிரியர்கள் இந்த முக்கியமான கோரிக்கையை எழுப்பியதற்கு முக்கியமான காரணம் அல்லது பின்னணி என்னவென்றால் இதுதான். அவையில் தற்போது மாண்புமிகு முன்னவர் அவர்கள் இருக்கிறார்கள். பிரச்சினையை மிக நல்ல முறையில் புரிந்துகொள்கிற திறன் படைத்தவர்கள். எனவே அவர்கள் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் வேறு வேலையாக வெளியே சென்றிருந்





தாலும், இந்த வகையில் அவருக்கு எடுத்துச் சொல்லி, போராட்டத்தை நிறுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். ஆசிரியர்களும் போராட்டத்தை நிறுத்தத் தயார். ஆனால் கடந்த ஓராண்டுக்கு மேலாகக் கொடுக்கப்பட்ட உறுதிமொழிகள், வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப்படாமலேயே இருக்கின்றன என்பதையும் நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தப் போராட்டம் அரசுக்கு எதிரான போராட்டம் அல்ல. மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் அப்படி நினைக்கவில்லை என்பது எனக்குத் தெரியும். ஆசிரியர்கள் இதைப்போலவே வேறு 2, 3 கோரிக்கைகளையும் வைத்திருக்கிறார்கள். இந்தப் பிரச்சினை தீராமல் நீண்ட நாட்களாக திரிசங்கு நிலையில் தொங்கியிருக்கிறது. எனவே அரசு உடனடியாக இதில் தலையிட்டு இந்தப் பிரச்சினையைத் தீர்க்கிற வகையில் உரிய ஆணை வெளியிடுவதன் மூலம் போராட்டத்தை நிறுத்த உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கத் தரப்பிலிருந்து மீண்டும் மீண்டும் பரிசீலிக்கப்படும் என்றால், ஆசிரியர்கள் சோர்வடைகிறார்கள். எனவே இந்தப் பிரச்சினையில் அரசு முறையான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அநேகமாக எல்லா உறுப்பினர்களும் பல பிரச்சினைகளைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். எனவே அவைகளையே மீண்டும் நான் விரிவாகப் பேச வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன். மேலும் கல்வி மானியக் கோரிக்கையில் நான் எனது கருத்துக்களையெல்லாம் சொல்லிக்கொள்ளலாம் என்று இருக்கிறேன். என்றாலும் ஒரு கருத்துக்களை மட்டும் நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆசிரியர்களின் ஓய்வு வயதை 60 ஆக ஆக்க வேண்டும் என்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதனால் அரசாங்கத்திற்கு நிதிச் சுமை எதும் ஏற்பட்டுவிடாது. ஆசிரியர்களுக்கும் அரசாங்க ஊழியர்களுக்கும் இடையில் ஒரு வித்தியாசம் இருக்கிறது. ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு வாய்ப்புகள் குறைவு என்ற காரணத்திற்காக அவர்களுக்கு ஓய்வு பெறும் வயதை 58 என்று வைத்தார்கள். அரசாங்க அலுவலர்களுக்குப் பதவி உயர்வு வாய்ப்பு அதிகம் என்ற காரணத்தால், அதை 55 என்று வைத்தார்கள். ஆனால் இப்போது எல்லோருக்கும் 58 வயதுதான் ஓய்வு பெறும் வயது என்று சொல்லிவிட்ட பிறகு, ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்கள்

ஓய்வு பெறும் வயதை 60 ஆக ஆக்க வேண்டுவது நியாயமான கோரிக்கையாகும். எனவே அரசாங்கம் இதை ஏற்று ஆணையிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 3-வது ஊதியக் குழுவின் பரிந்துரைகளிலுள்ள முரண்பாடுகளைக் களைய ஒரு நபர் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவின் அறிக்கையை மிக விரைவாகச் சமர்ப்பிக்க வேண்டும் என்று கேட்டு, அந்தக் குழு எடுத்துச் சொல்லும் முரண்பாடுகளை விரைவில் களைய வேண்டும், அதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளில் இப்போது தொழிற் கல்வி போதிக்கப்படும் நிலை உருவாகியிருக்கிறது. மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் கல்வி சொல்லித் தரப்படும் பல இடங்களில் இக் கல்விக்குத் தேவையான உபகரணங்கள் அல்லது மற்ற பொருள்கள் இல்லாமல் இருக்கின்றன. அப்பள்ளிகளுக்கெல்லாம் தொழிற் கல்வி போதிக்கத் தேவையான அனைத்துப் பொருள்களையும் அரசாங்கம் வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதைச் செய்தால், ஆசிரியர்கள் தொழிற் கல்வி போதிப்பதை நிச்சயமாக வெற்றிகரமாக நடத்திக் காட்டுவார்கள். எனவே அரசாங்கம் இதில் விரைவு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மேல்நிலைக் கல்வி, இடைநிலைக் கல்வி, S.C.E.R.T. என்ற மாநிலக் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம் ஆகிய 3 பிரிவுகளுக்கும் சேர்த்து ஒரு கல்வி இயக்குநர் இருக்கிறார். அவர் கட்டுப்பாட்டில் இந்த மூன்று துறைகளும் செயல்படுகின்றன. முக்கியமான இந்த மூன்று துறைகளும் ஒரே அதிகாரியின் கட்டுப்பாட்டில் இருந்தால், அங்கே நிர்வாகம் சரியாக இருக்காது என்பது உண்மையாகும். தற்போது ஏற்படும் பல்வேறு கால தாமதங்களுக்கு இந்த நடைமுறையே ஒரு முக்கிய காரணமாகும் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். ஆகவே மேல்நிலைக் கல்விக்கு என்று ஒரு தனி இயக்குநரும், இடைநிலைக் கல்விக்கு என்று ஒரு தனி இயக்குநரும், அதைப் போலவே மாநிலக் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிலையத்திற்கு என்று ஒரு தனி இயக்குநரும் நியமிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நிர்வாக தாமதத்தைத் தவிர்க்கவும், நிர்வாகச் சீர்திருத்தத்தை வலுப்படுத்தவும் இதைச் செய்ய வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.





நிர்வாகச் சீர்திருத்தம் ஏற்படுத்தவும், அரசு அலுவலகங்களில் ஏற்படும் கால தாமதத்தைத் தவிர்க்கவும் மதிப்பிற்குரிய திரு. அம்புரோஸ் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு அமைக்கப்பட்டு பல மாதங்களாகிவிட்டன. அந்தக் குழுவின் பணி என்னவாயிற்று என்று தெரியவில்லை. அந்தக் குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்துவதன் மூலம் பல நிர்வாகச் சீர்கேடுகளைச் சரி செய்ய முடியும் என்று நம்புகிறேன். எனவே அந்தக் குழுவின் அறிக்கையைப் பெறுவதை விரைவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6-30)

(மாற்றுத் தலைவர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி தலைமை.)

அரசுத் தலைமை அலுவலகங்களை பல்வேறு மாவட்டங்களுக்கு மாற்ற ஆவன பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்று சென்ற ஆண்டு ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது மிகவும் முக்கியமான, நியாயமான சீர்திருத்தம். எத்தனை அலுவலகங்கள் கடந்த ஓராண்டுக் காலத்திலே இவ்வாறு மாற்றப்பட்டிருக்கின்றன என்று எனக்குத் தெரியவில்லை. இதுவரையில் அப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றால், இதை விரைவாகச் செயல்படுத்த வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றைச் சொன்னால், ஆளுகின்ற தரப்பில் இருப்பவர்கள் வருத்தப்படக் கூடாது. கலைஞர் ஆட்சிக் காலத்திலே, பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிக் காலத்திலே, ஒரு கோரிக்கையைச் சொன்னால், விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டது. காரியங்கள் வேகமாக நடைபெற்றன என்ற உணர்வு எல்லோரிடமும் இருக்கிறது. இதைக் கேட்கும்போது, இப்போது உள்ளவர்களுக்குக் கசப்பாக இருக்கலாம். ஆனால் இது உண்மை. ஒரு கோரிக்கையைச் சொன்னால், அதை நிவர்த்தி செய்ய உடனடியாக அப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டது உண்மை. இப்போது அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. தாமதமாகிறது. சட்டமன்றத்திலே கூட ஒன்றைச் சொன்னால், முன்பெல்லாம் பத்து நாட்களுக்குள் நடவடிக்கை எடுப்பார்கள் என்று மூத்த உறுப்பினர்கள் கூட சொல்லுகிறார்கள். இப்போது ஒரு பிரச்சினையைப்பற்றி சட்டமன்றத்தில் சொன்னால், நடவடிக்கை எடுக்க பல மாதங்கள் ஆகின்றன. அதனால்தான் ஒரே பிரச்சினையைப்பற்றி நாங்கள் மீண்டும் மீண்டும் பேச வேண்டிய கட்டாயமும் ஏற்படுகிறது. நிர்வாகத் தாமதத்தைத் தவிர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த காலத்திலே செய்ததைப் போல இப்போது ஏன் செய்யக்கூடாது?

அரிசனங்களுக்காக சிதம்பரத்தில் நடத்தப்படுகிற பள்ளி நந்தனார் பள்ளி அங்குள்ள விடுதியில் சேர்க்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை அனுப்பி 6 மாதங்களுக்கு மேலாகின்றது. ஆனால் இது வரையிலும் அதற்கான அனுமதி தரப்படவில்லை. அரிசன நலத் துறை என்ற ஒரு துறை இயங்குகிறதா என்பது சந்தேகத்திற்குரியதாக இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை இருந்தால், அவர்களை எப்படி முன்னேற்றப் போகிறோம்? மாநிலத்தில் சிறப்பாக நடைபெறும் பள்ளிக்கூடம் அது. இன்னும் அதற்கான ஆணை வரவில்லை. ஆகவே கடந்த ஆறு மாதங்களாக விடுதிகள் வாய்ப்பு இல்லாமல் மாணவர்கள் அவதிப்படுகிறார்கள். அவர்கள் எங்கே செல்வார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே விரைந்து ஆணையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். தாமதத்திற்கு இதை ஒரு உதாரணமாகச் சொல்லுகிறேன்.

தாமதமாகக் காரியங்கள் நடைபெறுகின்றன என்பதற்கு இன்னுமொரு உதாரணம். எங்களுக்காகக் கேட்பதாக எண்ண வேண்டாம். சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தொலைபேசி இணைப்புக்கான செலவை அரசு ஏற்கும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் இன்று வரை ஆணை வரவில்லை. சட்டமன்ற உறுப்பினருக்கே இந்த கதி என்றால், மக்களுக்கு என்ன கதி என்ற கேள்விக்குறி எழுகிறது. மாண்புமிகு உறுப்பினர்களை அலட்சியப்படுத்துகிறார்களா? நிதியமைச்சர் அவர்கள் அறிவித்த பிறகு, தாமதம் ஏன்? அதற்கான காரணம் என்ன? தாமதத்திற்கு **யார் காரணம்?** இதை ஏன் ஆராயவில்லை? கண்ணுக்குப் பட்ட இப்படிப் பட்ட குறைபாடுகளை மட்டும் சொன்னேன். இப்படிப்பட்ட குறைபாடுகளைக் களைய அரசு தீவிரமாக முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறு தொழில்களைப்பற்றிச் சொன்னார்கள். பஞ்சாப் மாநிலத்தைப் போல சிறு தொழில்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுக்கிற மாநிலம் வேறு எதுவுமில்லை என்று சொல்கிறார்கள். Small Scale Industries Advisory Committeeயில் நானும் மாண்புமிகு திரு. எ. ஆர். தாமோதரன் அவர்களும் கலந்துகொண்டோம். அங்கே பெரிதும் சொல்லப்பட்ட குறைபாடு என்னவென்றால், லைசென்ஸ் கொடுப்பதற்குப் பல மாதங்கள் ஆகின்றன; Town Planning Approval கிடைக்க பல மாதங்கள் ஆகின்றன என்பதுதான். இதற்கே இவ்வளவு காலதாமதமானால் எப்படி சிறு தொழில்கள் மாநிலத்தில் வளர்ச்சி யடையும்? சிறு தொழில்கள் வளர்ச்சி அடைய வேண்டுமானால், லைசென்ஸ் வழங்குவதில் தாமதம் தவிர்க்கப்பட வேண்டும். நகராட்சி அதிகாரிகளிடமிருந்து கிடைக்க வேண்டிய ஆணைகள் விரைவில் கிடைக்க வேண்டும். மேலும்



சிறு தொழில் ஆரம்பிக்க படித்த இளைஞர்கள் முனைப்பாக இருக்கிறார்கள். ஆனால் நிதியுதவி கிடைக்கவில்லை. அப்படிப்பட்ட நிதியுதவியை வழங்க பஞ்சாப் மாநிலத்தில் கையாளும் முறையை நம்முடைய மாநிலத்திலும் கையாண்டால், தொழில் வளர்ச்சியில் நாம் மறுமலர்ச்சியைக் காணலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேலையில்லாப் பிரச்சினைபற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

“An empty mind is a devil's workshop” என்று சொல்வார்கள். அதைப்பற்றி மூத்த உறுப்பினர்கள் சொல்லிவிட்டார்கள். வேலையின்மைப் பிரச்சினையைத் தீர்க்க வேலைக்கு உணவு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். Empioyment Guarantee Scheme சென்ற ஆண்டு அறிவித்தார்கள். இத்திட்டத்தின் கீழ் எத்தனை இளைஞர்களுக்கு வேலை கொடுத்திருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரம் ஆளுநர் உரையில் இல்லை. வருகிற ஆண்டில் இன்னும் எத்தனை பேருக்கு வேலை கொடுக்கப் போகிறார்கள் என்ற புள்ளி விவரத்தைக் கொடுத்திருந்தால், எங்களுக்கும் பொது மக்களுக்கும் நம்பிக்கை ஏற்பட்டிருக்கும். அந்தத் திட்டத்தின் கீழ் ஏராளமான இளைஞர்களுக்கும் கிராமப்புற மக்களுக்கும் வேலை வாய்ப்பை ஏற்படுத்தலாம். ஆகவே இதை விரைந்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

யாரும் சொல்லாத ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். வேலை வாய்ப்பு நிறுவனத்தில் பதிவு செய்திருப்பவர்களுடைய பெயர்களை பல அலுவலகங்களுக்கு இன்டர்வியூவிற்காக அனுப்பும்போது, பணம் கொடுக்காமல் பட்டியலில் பெயரைச் சேர்க்க முடியவில்லை. அங்கே பரவலாக இலஞ்சமும், ஊழலும் இருக்கின்றன. 250 ரூபாய், 500 ரூபாய், ஆயிரம் ரூபாய் என்று ரேட்டையே வைத்திருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். தகுதி உடையவர்கள் கூட பணம் கொடுத்தால்தான், பட்டியலில் சேர்க்கப்படுவார்கள். மாநிலம் முழுவதும் அப்படிப்பட்ட நிலை வேலை வாய்ப்பு நிறுவனத்தில் உள்ளது. அந்த structure சரியாக இல்லை. ஆகவே பட்டியலை அனுப்பும் போது, இன்னின்ன தகுதிகள், வரைமுறைகள் உள்ளவர்களைத்தான் சேர்க்க வேண்டுமென்று அரசு தெளிவாகச் சொல்லி, அதை மீறி பட்டியலில் சேர்க்கப் பட்டால், அந்த வேலை வாய்ப்பு நிறுவன அதிகாரியின்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு அறிவித்தால், நிலைமையில் கொஞ்சம் மாறுதல் ஏற்படலாம். அந்த அளவிற்கு ஊழல், இலஞ்சம் அந்தத் துறையில் இருக்கிறது. அதைப் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1980 பிப்ரவரி 7

சட்டமன்றங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் பல புகார்களைச் சொல்கிறார்கள், குற்றச்சாட்டுக்களைச் சொல்கிறார்கள், ஆலோசனைகளைச் சொல்கிறார்கள், கோரிக்கைகளை வைக்கிறார்கள், விமர்சனம் செய்கிறார்கள். அப்படிப் பேசுகிற கருத்துக்களின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பது எங்களுக்குத் தெரியவில்லை. நாங்கள் கூறும் ஆலோசனைகள் செயல்படுத்தப்பட்டனவா இல்லையா என்று தெரியவில்லை. நாங்கள் கூறும் கருத்துக்கள் அலட்சியப்படுத்தப்படுகின்றனவோ என்ற உணர்வு எங்களுக்கு ஏற்படுகிறது. சட்டமன்ற உறுப்பினர் என்றால், மரியாதை இருக்க வேண்டும். அவர்கள் ஏதாவது முறையீட்டைச் சொன்னால், அதற்கு மதிப்பு அளிக்க வேண்டும். அப்படி மதிக்காத சூழ்நிலை இருக்குமானால் நிச்சயமாக அரசுக்கு பலவீனம் ஏற்படும். இன்றைய தினம் ஆளும் கட்சி பலவீனம் அடைந்திருப்பதற்கு இதுவும் ஒரு காரணம். ஆளும் கட்சி உறுப்பினர்களைக்கூட அதிகாரிகள் மதிப்பதில்லை. தனிப்பட்டவர்கள் சிலருக்கு அதிகாரிகள் மத்தியில் மரியாதை இருக்கலாம். ஆனால் பெரும்பாலான உறுப்பினர்களுக்கு மரியாதை கிடையாது. பேரவை உறுப்பினராக இருந்தாலும், மேலவை உறுப்பினராக இருந்தாலும் சரி, முறையீடுகளைச் சொல்லும்போது, அவர்களுக்கு உரிய மரியாதை கிடைப்பதில்லை. அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என்ற அளவிற்கு முட்டுக்கட்டை இருந்தால், எப்படி அரசு பலமாய் இருக்கும்? ஆளும் கட்சிக்கு ஏற்பட்ட தோல்விக்கு இதுவும் முக்கியமான காரணம். இது உண்மை. ஆகவே ஆளும் கட்சி உறுப்பினராக இருந்தாலும், எதிர்க் கட்சி உறுப்பினராக இருந்தாலும் அல்லது அரசியல் சார்பு இல்லாத என்னைப் போன்றவர்களாக இருந்தாலும், முறையீடுகளைச் சொல்லும்போது, அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அனைத்து அதிகாரிகளுக்கும் ஆணை அனுப்பப்பட வேண்டும். இது ஒரு முக்கியமான கோரிக்கை. இதை இந்த அரசு கடந்த இரண்டரை ஆண்டு காலமாகச் செய்யவில்லை. இதையெல்லாம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையின் மீது கட்சி சார்பற்ற முறையில் என்னுடைய கருத்துக்களைச் சொன்னேன். ஆளுநர் உரையில் நல்ல அம்சங்கள் இருக்கின்றன. நானும் என்னைச் சேர்ந்த அணியும் நல்லவைகளைப் பாராட்டத் தயங்கமாட்டோம். அதே நேரத்தில் சுட்டிக்காட்டிச் சொல்ல வேண்டிய கருத்துக்கள், கடுமையான கருத்துக்களாக இருந்தாலும், அவற்றையும் சொல்லத் தயங்கமாட்டோம் என்ற வகையிலே சில கருத்துக்களை எடுத்துச் சொன்னேன் என்று தெரிவித்துக்கொண்டு, ஆளுநர் உரையின்மீது பேச வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன்.



1980 பிப்ரவரி 7]

(பிற்பகல் 6-40)

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : மதிப்பிற்குரிய சபையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது நடந்து கொண்டிருக்கும் விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநருடைய உரைமீது ஒவ்வொரு ஆண்டும் நான் பேசுவது வழக்கம். ஆளும் கட்சி சார்பில் இருந்தாலும், எதிர்க் கட்சியிலே இருந்தாலும் சரி, அந்த உரையிலே உள்ள சிறப்புகளைப் பாராட்டி, குறைகளை விமர்சித்துப் பேசுவதைத்தான் என்னுடைய மரபாக நான் இதுகாறும் கையாண்டு வந்திருக்கிறேன். இந்த ஆண்டு ஆளுநருடைய உரையைப் படித்துப் பார்த்தேன். அதிலே பாராட்டிப் பேசுவதற்கு ஒன்றும் அங்கு காணவில்லை. உருப்படியான திட்டங்களோ யோசனைகளோ எங்கே இருக்கிறது? சாதாரண ஒரு 'அட்மினிஸ்ட்ரேஷன் ரிப்போர்ட்' என்று சொல்லக்கூடிய அளவுக்குத்தான் அதில் சில கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன என்பதை நான் முதற்கண் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆளுநர் உரையில் பாராட்டுதற்குரிய கருத்துக்கள் இல்லை என்றாலும், நம்முடைய மதிப்பிற்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் சில அறிவிப்புகள் செய்திருக்கிறார்கள். அவைகளை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நியாயப்படி அந்த அறிவிப்புகள் ஆளுநர் உரையில் வந்திருக்கலாம். ஏன் தனிப்பட்ட முறையில் அறிவிப்புக் கொடுத்தார்கள் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அந்த அறிவிப்புகளிலே இரண்டு அறிவிப்புகளை நான் பாராட்டுகிறேன்.

இரண்டிலே ஒன்று 9 ஆயிரம் ரூபாய் வருமானத்துக்கு மேல் உள்ள பிற்பட்டவர்களுக்கு சலுகைகள் இல்லை என்று இருந்த ஒரு அறிவிப்பை அவர்கள் வாபஸ் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். பிற்பட்டவர்கள் 9 ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஆண்டு வருமானம் இருந்து முன்பு சலுகைகளைப் பெற்றுக் கொண்டிருந்தவர்களுக்கும் இனி சலுகைகள் கிடைக்கும் என்று அறிவித்ததை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். ஆனால் முன்பு இருந்த அந்தச் சலுகையை ஒரு வருட காலம் நிறுத்தி இல்லாமல் செய்தது மிகவும் வருந்தத்தக்க ஒரு நிலையாகும். அதனால் பலர் தங்களுக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய சலுகைகள் கிடைக்காமல் இழந்திருக்கிறார்கள், நஷ்டப்பட்டிருக்கிறார்கள், கஷ்டப்பட்டிருக்கிறார்கள். இதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நான் பாராட்ட விரும்பக்கூடிய இரண்டாவது அறிவிப்பு என்னவென்று சொல்ல விரும்புகிறேன். முதல்வருடைய அந்த அறிவிப்பு எது என்றால், நான் பத்திரிகையிலே பார்த்தேன். அடுத்த ஏப்ரல் முதல் தேதியிலிருந்து 'இமயத்தின் உச்சியில்' என்ற படத்தில் அவர் நடிக்கப் போவதாகவும், சட்டம் அனுமதிக்காவிட்டால், முதலமைச்சர் பதவியை ராஜிநாமா செய்யப் போவதாகவும் அறிவித்துள்ளார்கள். இந்த அறிவிப்பை நான் பாராட்டுகிறேன். இந்த அறிவிப்பை வெளியிட்டதற்காக அவருக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அறிவிப்பு ஒரு நல்ல அறிவிப்பு, ஒரு பொருத்தமான அறிவிப்பு. நான் இன்றைக்குத்தான் அதைச் சொல்கிறேன், பாராட்டுகிறேன் என்று நினைக்க வேண்டாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்த சட்டசபையில் வைத்துக்கொண்டு நான் சொன்னேன். "முதல்வர் அவர்களே, நடிப்புக்கும் போய்விடுங்கள். முதலமைச்சராக இருந்துகொண்டு நடிக்க முடியாது" என்று சொன்னேன். அப்போது அவர்கள், "முதலமைச்சராகவும் இருப்பேன், நடிக்கவும் செய்வேன்" என்று சொன்னார்கள். அப்போது நான் சொன்னேன். "If you run after two hores you will catch none" என்பதுபோல, இரண்டிலும் இருந்தால், இரண்டிலும் கெட்ட பெயர் வரும் என்று சொன்னேன். "முதலமைச்சர் பதவியை விட்டு நடிக்கப் போய்விடுங்கள். கோடிக்கணக்கில் சம்பாதியுங்கள்" என்ற கருத்தை அவர் முன் வைத்து, ஆணித்தரமாகச் சொன்னேன். அவர்கள் ஒப்புக் கொள்வார்கள் என்ற நினைவில்தான் அவருக்குச் சொன்னேன். நான் குத்தலாகவோ கிண்டலாகவோ சொல்ல வேண்டுமென்று சொல்லவில்லை. நல்ல யோசனை என்பதால், அன்றைக்கு நான் அதைச் சொன்னேன். அந்தக் கருத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. நான் சொன்ன கருத்தை மனதில் வைத்துக்கொண்டுதான் இன்றைக்கு அவர் சொல்லியிருக்கிறார். "சட்டம் அனுமதிக்காவிட்டால், நான் முதலமைச்சர் பதவியை ராஜிநாமா செய்துவிட்டு, 'இமயத்தின் உச்சியில்' என்ற படத்தில் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து நடிக்கப்போகின்றேன்" என்று பேசியிருக்கிறார்கள். இந்தச் செய்தி பத்திரிகையிலே வந்திருக்கிறது. அதுதான் சரியான முடிவு. அது தாமதித்துச் செய்கின்ற முடிவாக இருந்தாலும், அது சரியான முடிவு.

Though late it is welcome. 'Coming late is better than absenting' என்று சொல்வார்கள். தாமதித்துச் செய்தாலும் முடிவு நல்ல முடிவு என்று நான் சொல்கிறேன். அந்த முடிவுக்காக நான் அவரைப் பாராட்டுகிறேன். அவர் தாமதித்துத்தான் முடிவு எடுக்கிறார் என்ற கருத்தை இன்றைக்குப் பத்திரிகையிலே பார்த்தேன். திரு. தேவராஜ் அர்ஸ், முன்னாள் கர்நாடக





முதலமைச்சர் அவர்கள்கூட, "Whenever he decides the decision is too late" என்றார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பற்றி பத்திரிகையிலே வந்த கருத்தை நான் படித்தேன். அவர்கள் எந்த முடிவைச் செய்தாலும், தாமதித்துத் தான் முடிவு செய்வார்கள். இந்த முடிவை அவர் தாமதித்துச் செய்திருந்தாலும், இந்த முடிவை நான் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். பாராளுமன்றத் தேர்தல் முடிந்தது. தேர்தலில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, ஒரு பயங்கரமான பெரும் தோல்வியைக் கண்டது. அதே போன்று கர்நாடக மாநிலத்திலே, திரு. தேவராஜ் அர்ஸ் அவர்கள் முதலமைச்சராக இருந்த அமைச்சரவையும் ஒரு பயங்கரமான தோல்வியைக் கண்டது. உடனடியாக அடுத்த நாள் திரு. தேவராஜ் அர்ஸ் அவர்கள் முதலமைச்சர் பதவியை ராஜிநாமா செய்தார்கள். நான் செய்தியைப் படித்தவுடன் என் நண்பர்களிடத்தில் சொன்னேன். "திரு. தேவராஜ் அர்ஸ் அவர்கள் ராஜிநாமா செய்துவிட்டார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மிகவும் ரோஷக்காரர். அடுத்த நாளே நிச்சயமாக அவர்கள் ராஜிநாமா செய்வார்கள்" என்று நான் எதிர்பார்த்துச் சொன்னேன். ஆனால் நான் எதிர்பார்த்தது நடக்கவில்லை. அந்த அம்சத்திலே நான் அவரைத் தவறாகக் கணித்துவிட்டேனோ என்று நினைக்கக்கூடிய அளவுக்கு அது எனக்கு ஒரு ஏமாற்றத்தை அளித்தது.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது**: மாற்றுத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்காக உறுப்பினர் அவர்கள் தவறாக நினைத்துக்கொள்ளக் கூடாது. திரும்பத் திரும்ப இந்தக் கருத்தையே பல பேர் சொல்லி வருகின்ற காரணத்தினாலே, ஒரு நிலையை விளக்க வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேன். கர்நாடகத்தில் திரு. தேவராஜ் அர்ஸ் அவர்கள் ஆரம்பத்தில் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் தலைமையில் இருந்த கட்சியிலே போட்டியிட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டு முதலமைச்சராக இருந்து, அப்படி இருந்துகொண்டே அந்த அம்மையாருக்கும், அவருக்கும் இடையே கருத்து வேறுபாடு இருந்து, காங்கிரஸ் கட்சி சார்பிலே தேர்ந்தெடுக்கப்பட்ட மெஜாரிட்டி உறுப்பினர்களை வைத்துக்கொண்டு, அவர் ஆட்சி நடத்திக் கொண்டிருந்தார். அப்படி ஒரு கட்சியிலே இருந்துகொண்டு, அனைத்திந்திய அளவிலே ஒரு தலைவியினுடைய தலைமையிலே செயல்பட்டுக்கொண்டு வந்த நேரத்திலே, இடையே வந்த தேர்தலிலே அவர்கள் தோல்வியுற்று பிறகு அங்குள்ள மக்கள் காங்கிரஸ் எது என்பதைத் தீர்மானித்திருக்கிறார்கள். ஆகவே அவர்கள் ராஜிநாமா செய்வதைவிட, அவருக்கு வேறு வழியில்லை. அதனால் ராஜிநாமா செய்திருக்கலாம். தமிழகத்தைப் பொறுத்த அளவிலே, அனைத்திந்திய திராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரஸ் கட்சியின்

ஒத்துழைப்புடனோ அல்லது மற்ற கட்சிகளின் ஒத்துழைப்புடனோ வராமல், முடிந்த அளவுக்கு மிகப் பெரிய மார்க்சிஸ்ட் கட்சி என்று சொல்லக்கூடிய ஒரு கட்சியோடு சேர்ந்து, இந்த அமைச்சரவையிலே நாங்கள் இடம் பெற்றிருக்கிறோம். கர்நாடகாவிலே நடந்ததைப் பார்த்து, 'அதை இவர்கள் பின்பற்ற வேண்டும், அவர்களுக்கு ரோஷம் இருக்கிறது, மானம் இருக்கிறது' என்றெல்லாம் ஏதோ பேசலாம். அங்கத்தினர் அவர்கள் பேசுகின்றபோது, பாராட்டுவது போல பாராட்டி இதை இடைச்செருகலாகச் சொல்லவேண்டிய வார்த்தைகளை எல்லோரும் பேசிவிடலாம். 'நகையுள்ளும் இன்னா நிகழ்ச்சியில்லை' என்பதுதான் பண்பாடு. இந்த வாதம் பொருந்தாத ஒன்று. கர்நாடக நிலைமை வேறு. தமிழக நிலைமை வேறு. இங்கே எப்படிச் செயல்பட வேண்டும் என்பது ஒரு கட்சியினுடைய கொள்கை. அது குறித்து உரிய காலத்திலே, நிலவுகின்ற நிலைமைகளுக்குத் தக்கபடி, அந்தத் தலைமை முடிவு எடுக்குமே தவிர, இதிலே நாம் வருத்தப்படுவதுபோல், "முதலமைச்சர் அவர்கள் வீரமுள்ளவர்கள். ரோஷம் உள்ளவர்கள், அவர்கள் ராஜிநாமா செய்திருப்பார்கள் என்று எதிர்பார்த்தேன், இன்னும் செய்யவில்லை, ரோஷம் இல்லை" என்ற பாணியிலே அந்தக் கருத்தைத் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருக்க வேண்டாம் என்று கூறிக்கொள்கிறேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** கர்நாடகாவிலுள்ள நிலைமை வேறு, இங்கேயுள்ள நிலைமை வேறு என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு எனக்கு முன் பேசிய சில பேர்கள் சில புள்ளிவிவரங்களை எடுத்துச் சொன்னார்கள். "திராவிட முன்னேற்றக் கழகம் வாங்கிய வாக்குகள் எத்தனை? அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வாங்கிய வாக்குகள் எத்தனை? 'சீட்டு'களை வைத்துக் கணக்குச் சொல்வார்கள். பதிவான வாக்குகளைப் பார்த்தால், உங்களை விட எங்கள் மீதுதான் மக்கள் அதிக நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்" என்று சொன்னதைக் கேட்கும்போது, கொஞ்சம் நியாயமான வாதமாகத்தான் அதை நான் எடுத்துக் கொள்கிறேன். ஆனால் கொஞ்சம் ஆழமாகக் கவனித்தால், அது அர்த்தமற்ற வாதம். வாக்குகளை அணிக்கு அணி கணக்குப் போடவேண்டுமே தவிர்த்து, தனிப்பட்ட, பிரித்தெடுத்த கட்சிகள் வாரியாக வாக்குகளைக் கணக்கிடக் கூடாது. இந்த அணிக்கு எவ்வளவு, அந்த அணிக்கு எவ்வளவு? இந்தக் கூட்டணிக்கு எவ்வளவு, இந்தக் கூட்டணி எந்தெந்தக் கட்சிகளைக் கொண்டது என்று அத்தனையையும் சேர்த்துதான் கணக்கெடுக்க வேண்டும். அது அல்லாமல் 16 ஸ்தானங்களில், ஒரு கட்சியினர் போட்டியிட்டு, இவர்கள் 25 ஸ்தானங்களில் போட்டி போட்டு அதிகமாக வாங்கிவிட்டால், அது சரியான கணக்காகாது என்பதைத்தான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மொத்தத்





திலே அந்த அணிக்குத் தலைமை வகித்த கட்சி, இந்த அணிக்குத் தலைமை வகித்த கட்சி என்று பார்க்கும்போது, இந்தக் கட்சிக்கு முன்பு இருந்த செல்வாக்கு போய்விட்டது, இந்த ஆட்சி பின்தங்கிவிட்டது, மக்கள் நம்பிக்கையை இழந்துவிட்டது. இந்த நிலையில் மக்கள் ஆதரவை, நம்பிக்கையை இழந்துவிட்ட அரசு நீடிப்பது நியாயமில்லை. இதை ஒரு உதாரணத்திற்காகத் தான் சொன்னேனே தவிர, வேறு அல்ல. மக்களுடைய பெருவாரியான வாக்குகளை இந்த அரசு பெறவில்லை. அந்த அர்த்தத்தில்தான் நான் பேசினேன்.

(திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி தலைமை)

(பிற்பகல் 6-50)

நம்முடைய முதலமைச்சரவர்கள் தேர்தல் சமயத்திலே ஒரு வாதத்தைச் சொன்னார்கள். இந்திரா காங்கிரஸ், திராவிட முன்னேற்றக் கழகம், முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் சேர்ந்த கூட்டணி ஏற்பட்டது. ஜனதா, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், மற்றவர்கள் சேர்ந்து ஒரு அணி. இந்த நிலையில் முதலமைச்சரவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். நான் அதைப் படித்தேன். இந்திரா காங்கிரஸ், திராவிட முன்னேற்றக் கழகம், முஸ்லிம் லீக் கூட்டணி பதவிக்காக கூட்டு சேர்ந்த அணி, எங்கள் அணி கொள்கைக்காகச் சேர்ந்த அணி என்று பேசினார்கள். இப்போது தேர்தல் முடிந்துவிட்டது. தேர்தல் முடிந்த பிறகு, எப்படி எப்படியெல்லாம் குத்தலான, கிண்டலான பேச்சுகளைப் பேசுகிறார்கள் என்று சொல்லி, பதவியைத் தூக்கி எறிந்துவிட்டுப் போய்விட்டார்களா என்றால், இல்லை. எனவே அவர்கள் கொள்கைக்காக சேர்ந்த அணியா, பதவிக்காகச் சேர்ந்த அணியா என்பது அவர்களுடைய செயலைப் பார்த்தால், போக்கைப் பார்த்தால், அது அவருடைய வாதத்தைப் பொய்ப்பிப்பதாக இருக்கிறதென்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

என்னுடைய நண்பர், மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்களுடன் நான் நேற்று பேசிக்கொண்டிருந்தேன். அப்போது ஒரு வார்த்தைக்கு விளக்கம் கேட்டேன். அதாவது ' எனக்கு ஒரு வார்த்தை தெரியவில்லை, உங்களுக்குத் தெரியுமா' என்று கேட்டேன். ஒரு மனிதன் sick ஆகி, உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கும்போது, அவருக்குப் பேச்சில்லை, உடலில் அசைவில்லை, ஆனால் மூச்சு மட்டும் இருக்கிறது. அதற்கு ஆங்கிலத்தில் 'கோமா' என்று சொல்லுவார்கள். உருதுவில் 'சக்ராத்' என்று சொல்லுவார்கள். தமிழில் அதற்கு என்ன வார்த்தை என்று தெரியவில்லை. நான் நீட்டி விளக்கிவிட்டேன். ஒரே வார்த்தையில் என்ன என்பது தெரியவில்லை என்றேன். அதை ஒரே வார்த்தையில் எப்படிச் சொல்லுவது என்று நண்பர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்களிடம் கேட்டேன். அவர், " நாளை நீங்கள் அதை சொல்லப் போகிறீர்களா?" என்று கேட்டார்கள். ஆமாம் என்றேன். அவர் அதைக் கேட்டு விழுந்து விழுந்து சிரித்தார். நல்ல உதாரணம், பாய், என்றார்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாற்றுத் தலைவரவர்களே, நல்ல உதாரணம் என்று சொல்லவில்லை. ஆளுநர் அவர்கள் உரையிலே இதைக் குறிப்பிடப்போகிறீர்களா என்றுதான் கேட்டேன்.

VICE-CHAIRMAN (THIRUMATHI MANDAKINI KRISHNAMURTHI) : I would like to bring to the notice of the hon. Member that the House will have to adjourn at 7 O'clock. Many hon. Members may be leaving for their places and there may be no quorum. It also seems that the Treasury Benches may not oblige the hon. Member in the matter of extending the timing of the House. I would,t therefore, request the hon. Member to offer only constructive suggestions and conclude his speech.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் எந்த அர்த்தத்தில் புரிந்து கொண்டாரோ ? இங்கே நம்முடைய அமைச்சர்களைப் பார்க்கும்போது, அவர்கள் புரிந்து கொண்ட அர்த்தம், உறுப்பினரவர்களும் புரிந்துகொண்டிருப்பாரோ என்று நினைக்கத் தோன்றுகிறது. நினைத்தது என்ன என்பதை விளக்கிச் சொல்வது அவ்வளவு முறையாக இருக்காது என்பதால் விட்டுவிடுகிறேன்.





இந்த ஆட்சி நாட்களை எண்ண வேண்டியிருக்கிறது என்று உறுப்பினர்கள் பேசினார்கள். நானும் பத்திரிகையில் பார்க்கிறேன், கவனமாகப் பார்க்கிறேன். எனக்கு ஏற்பட்டுள்ள அபிப்பிராயம் உடனடியாக இந்த ஆட்சிக்கு ஆபத்து இல்லை என்பதுதான். சிலருக்கு நான் சொல்லுவது வியப்பாக இருக்கலாம். இன்றைக்கு மதியம் நான் ரேடியோ கேட்டுக்கொண்டிருந்தேன். திருமதி இந்திரா அம்மையாரிடம் பத்திரிகையாளர்கள் காங்கிரஸ் அல்லாத ஆட்சிகளைக் கலைப்பது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன என்று கேட்டபோது, அந்தப் பிரச்சினையை நான் பரிசீலனை செய்யவில்லை என்று பதில் சொன்னதாக அறிந்தேன். அது பத்திரிகையில் மாலை வரும் அல்லது நாளைக் காலை வரும். அவர்கள் இதைப்பற்றி எப்போது பரிசீலனை செய்து, எப்போது முடிவெடுப்பது? அதனால் நாட்களை எண்ணக்கூடிய நிலையில் இந்த ஆட்சி இல்லை என்பதைத் தெரிந்துகொண்டதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது, இந்திரா அலை நாடு பூரா வீசியது, தமிழகத்தில் இந்திரா அலை இல்லை யென்று சொன்னார்கள். நான் அவர் சொன்ன அபிப்பிராயத்தை ஏற்றுக் கொள்கிறேன். இந்திரா அலை நாடு பூரா வீசியது. 3, 4 மாநிலங்களில் இந்திரா அலை வீசவில்லை. மேற்கு வங்கம், கேரளா போன்ற மாநிலங்களில் இந்திரா அலை இல்லை. தமிழகத்தில் பாராளுமன்றத் தேர்தலில் இந்திரா காங்கிரசுக்குக் கிடைத்த அளவிற்கு மற்ற கட்சிகளுக்கு இடம் கிடைக்கவில்லை. ஆனாலும் தமிழ்நாட்டில் இந்திரா அலை சுத்தமாக இல்லை. இங்கே ஒரு அலை இருக்கிறது. அந்த அலைக்கு வித்திட்டவர் தந்தை பெரியார் அவர்கள். அதை வளர்த்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அண்ணா அலை தமிழகத்தில் இருக்கிறது. அண்ணா அலை தமிழகத்தில் இரண்டு பகுதியாகப் பிரிந்திருக்கிறது. ஒன்று அண்ணா

திராவிட முன்னேற்றக் கழகம், இன்னொன்று திராவிட முன்னேற்றக் கழகம். இந்த இரண்டு அலைகள் அண்ணா என்ற பெயரில் இயங்குகின்ற அலைகள். அண்ணா தி.மு.க. ஆளும் கட்சி, தி.மு.க. ஆளும் கட்சியாக இருந்த கட்சி. இந்த இரண்டு கட்சிகள்தான் தமிழகத்தில் பெரிய கட்சிகள். மூன்றாவது கட்சியாக இருக்கும் காங்கிரஸ் கட்சி ஆளும் கட்சியாக இருந்தது. ஆனால் இப்போது அது பலம் இழந்துவிட்ட கட்சி. தமிழகத்தில் அது மூன்றாவது கட்சியாக இருந்தாலும், அதற்கு பலம் இல்லை. பூஜ்யத்தைப் பார்க்கிறோம். அதனுடன் ஒன்று சேர்த்தால் பத்து ஆகிறது. ஒன்று சேராதவரைக்கும் அது பூஜ்யம்தான். இந்திரா காங்கிரஸ், அண்ணா தி.மு.க. அல்லது தி.மு.க.வுடன் சேரும்போது, பூஜ்யத்திற்கு முன்னால் ஒன்று போட்ட மாதிரி; அப்படி சேராமல் இருக்கும்போது அதன் மதிப்பு 'பூஜ்யம்தான்". அவர்கள் இந்த இரண்டு கட்சிகளையும் ஆட்டி வைக்கிறார்கள். பேரம் இங்கும் பேசுகிறார்கள், அங்கும் பேசுகிறார்கள். யாரிடத்தில் அதிக ஆதாயம் கிடைக்கிறதோ அவர்களைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஆங்கிலேயர்கள் Divide and Rule என்று கொண்டு வந்து, இந்துக்களையும், முஸ்லிம்களையும் பிரித்து வைத்து, அடிமைப்படுத்தி ஆண்டுகொண்டிருந்த நிலையைப் பார்த்தோம். History repeats itself இங்கே உள்ள மற்ற நண்பர்கள் தேசிய அலை புகுந்து விட்டதென்று சொன்னார்கள். நான் சொல்கிறேன், "இங்கே திராவிடர் அலைதான் இருக்கிறது, தேசிய அலையும் இருக்கிறது. இருந்தாலும் அது மேலோங்கி விடவில்லை" என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வர இருக்கிறது என்று திரு. இளைய பெருமாள் பேசியிருக்கிறார். அதை நான் ஏற்கவில்லை. என்னுடைய சொந்த அபிப்பிராயம், காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வரக்கூடாது என்பது தான். அண்ணா தி.மு.க ஆட்சி நீடிக்கட்டும், இல்லாவிட்டால் திமுக ஆட்சி வரட்டும். இவர்கள் இரண்டு பேரும் சண்டை போட்டுக்கொண்டு, காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வரவேண்டுமென்ற கருத்து நான் வரவேற்க வில்லை. அந்த நிலையை உருவாக்கக் கூடாது. இந்த இரண்டு





ட்சிகளையும் ஒன்றுபடுத்த வேண்டுமென்ற கருத்தையும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், புரட்சித் தலைவர் அவர்களுக்கும் உள்ள அபிப்பிராய பேதங்கள், கருத்துக்களில் முரண்பாடுகள் ஆகியவற்றால்தான் இந்த நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த இருவரும் ஒன்றுபட வேண்டுமென்பது என்னுடைய ஆசை. இரண்டு பேரும் ஒன்றுபட்டுவிட்டால், மற்றவர்கள் இருக்கும் இடம் தெரியாது. அதற்கு அவர்கள் முயல வேண்டுமென்று சொல்லிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

VICE-CHAIRMAN (Thirumathi Mandakini Krishnamurthi) : The House will now adjourn and meet again at 4 p.m. on Monday, the 11th February 1980.

The House then adjourned.

(பிற்பகல் 7-00)

# தமிழ்நாடு சட்டமன்ற மேலவை

திங்கட்கிழமை, 1980 பிப்ரவரி 11.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

*மாண்புமிகு மேலவைத் தலைவர்:* வினாக்கள் 51, 52 ஆகியவை ஒத்தி வைக்கப்படுகின்றன.

### *Delay in Payment of salaries to Teachers.*

* 53 *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Government are aware that the payment of salaries to the regular teachers, who have been appointed in temporary posts in Government 'B' Wing High Schools in South Arcot District, was delayed during the past two years ; and

(*b*) whether the Government would take steps to ensure regular payment on a permanent basis ?

### ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குவதில் தாமதம்.

*திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :* மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் அரசு 'பி' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில், தற்காலிகப் பதவிகளில் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர ஆசிரியர்கள் பலருக்கு, கடந்த இரண்டு ஆண்டுகளில் ஊதியம் வழங்குவதில் தாமதம் நிகழ்ந்தது அரசுக்குத் தெரியுமா ?

(இ) நிரந்தரமாக, ஒழுங்காக ஊதியம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

என்றும், Inducted Graduate Teachers என்றும் வைக்கலாம், ஆகவே Inducted Graduate Teachers என்று அழைப்பதிலும் சிக்கல் ஏதுவும் இல்லை. இது பற்றிப் பரிசிலிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** உறுப்பினருடைய கருத்தை அரசு பரிசீலிக்கும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆசிரியர்களை அனுப்பும்போது, பொதுவாக அவர்களை Inducted ஆசிரியர்கள் என்றுதான் சொல்லுகிறார்கள். ' Unqualified ' என்று சொல்லுவதில்லை. தமிழில் மொழி பெயர்க்கும்போது, தவறாக மொழி பெயர்த்திருக்கிறார்கள். Inducted ஆசிரியர்கள் என்பதற்கு தற்காலிகமாக நிலை நிறுத்துகிற ஆசிரியர்கள் என்று பொருள். ஆகவே ' தகுதியில்லாத ஆசிரியர்கள் ' என்று இப்பொழுது இருக்கின்ற பெயர் உடனடியாக மாற்றப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** உரிய பதத்தை நாம் கண்டுபிடித்தால், இந்தப் பிரச்சினைக்கே இடமிருக்காது. ஆசிரியர்களுக்கும் இதனால் ஒரு மனக்குறை இருந்துகொண்டிருக்கிறது என்பதையும் நாம் உணர்கிறோம். என்னிடத்தில் கூட அவர்கள் சொன்னார்கள். ஆகவே, இந்தப் பெயரை மாற்ற வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. எப்படி மாற்றுவது என்பதைக் குறித்து அரசு முயற்சித்து உரிய நடவடிக்கை எடுக்கும்.

## *Closure of Colleges in Madurai City.*

* 55 *Q.*—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM) Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of days during which all the Colleges in Madurai City were closed from 1st September 1978 to 1st November 1978 under the orders of the District Collector and under the orders of the Government ; and

(*b*) the reasons for such closure ?



## மதுரை மாநகரில் கல்லூரிகள் மூடல்.

**திரு. பா. ரா. தாமஸ் (திரு. த. சந்தோஷம் சார்பில்) :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஆணைகளின் கீழும், அரசு ஆணைகளின் கீழும் 1-9-1978 லிருந்து 1-11-1978 வரை மதுரை மாநகரில் அனைத்து கல்லூரிகளும் எத்தனை நாட்கள் மூடியிருந்தன ?

(இ) அவ்வாறு மூடியிருந்ததற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) மாவட்ட ஆட்சியாளரின் ஆணைக்கு இணங்க மூடிவைக்கப்பட்ட காலம் சுமார் 15 நாட்கள். அரசு ஆணைக்கு இணங்க மூடிவைக்கப்பட்ட காலம் சுமார் 10 நாட்கள்.

(இ) மாணவர்களுக்கும், பஸ் ஊழியர்களுக்கும் ஏற்பட்ட தகராறின் காரணத்தினாலும், சில அரசியல் கட்சிகள் தமிழகம் முழுவதும் பொது வேலை நிறுத்தம் செய்ய அறிவித்திருந்ததாலும், அதனால் மாணவர்கள் இன்னலுக்கு உள்ளாகக்கூடாது என்ற காரணத்தினாலும் கல்லூரிகள் மூடிவைக்கப்பட்டன.

**திரு. ம. சங்கரலிங்கம் :** இப்படி ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் கல்லூரிகளை அரசு சொல்லி மூடி வைப்பது, அல்லது ஆங்காங்கு இருக்கக் கூடிய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அந்தந்த மாவட்ட நிலைமைக்கு ஏற்ப கல்லூரியை மூடச் செய்வது, அல்லது கல்லூரி நிர்வாகம் அவர்களுடைய சூழ்நிலைக்கு ஏற்ப மூடுவது இப்படிப்பட்ட நிலைமைகள் இன்றையதினம் இருக்கின்றன. இதனால், இந்தக் கல்லூரிகள் ஏறத்தாழ 100 நாட்கள்தான் செயல்பட முடிகிறது. 180 நாட்களாவது கல்லூரிகள் செயல்பட வேண்டுமென்று விதிமுறை இருக்கிறது. அதற்கு நேர்மாறாக இப்போதுள்ள நடைமுறை இருக்கிறது. ஆகவே மாணவர்களின் நலனைக் கருதி, கல்லூரிகளை மூடுகிற நேரங்களில் மாணவர்களுக்கு வானொலி மூலம் பயிற்றுவிக்க இந்த அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** கல்லூரியை மூட வேண்டும் என்கிற நோக்கம் அரசுக்கு இல்லை. ஒருசில சூழ்நிலைகளில், கல்லூரியை மூடாமலிருப்பார்களானால், மூடியிருக்கக் கூடிய நேரங்களில் ஏற்படக் கூடியதைவிட, இழப்புகள், சங்கடங்கள், பாதகங்கள் அதிகமாக இருக்குமென இந்த அரசும் மற்றவர்களும் கருதுகிற காரணத்தால், கூடுமானவரை யோசித்துப் பார்த்து கல்லூரிகளை மூடுகின்றோம். ஆனால் அப்படி கல்லூரிகள் மூடப்படுகின்ற காலத்தில், மாணவர்களின் நலனுக்காக வேறு ஏதாவது

[1980 பிப்ரவரி 11

செய்யலாமா என்று யோசித்துப் பார்க்கலாம். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது போல், வானொலி மூலம் பாடம் நடத்துவது போன்ற விஷயங்களை பல்கலைக் கழகங்கள் பரிசீலித்தால், மாணவர்களுக்கு உண்மையாகவே மிகவும் உதவிகரமாக இருக்கும்.

திரு. க. இராமமூர்த்தி : கல்லூரிகளை மூடுகின்ற நிலையைப் பொறுத்த வரை, நிர்வாகங்களைப் பொறுத்தவரை, கடைசியாக கல்லூரிகளைத் திறந்தாக வேண்டிய கட்டாயம் அரசுக்கும், நிர்வாகங்களுக்கும் இருக்கிறது. கல்லூரிகளை மூடுகின்ற நிலை வருகின்றபொழுது, இன்றைய தினம் கல்லூரிகள் தொடர்ந்து பல மாதங்கள் மூடப்படுகின்றன. குறிப்பாக மதுரையில் ஒரு கல்லூரி 2 மாதங்கள் தொடர்ந்து மூடப்பட்டிருந்தது. இன்னும் பல இடங்களில் 3 மாதங்கள், 4 மாதங்கள் தொடர்ந்து கல்லூரிகள் மூடப்பட்டிருக்கின்ற நிலை இன்றைக்கு இருக்கிறது. அரசு இந்தப் பிரச்சினையை கொள்கைப் பிரச்சினையாக அணுகி, உடனடியாக இதனைத் தீர்ப்பது குறித்துப் பரிசிலனை செய்ய வேண்டும். அதிகபட்சமாக 10 நாட்களுக்கு மேல் கல்லூரிகள் மூடப்பட்டிருக்கின்ற நிலை இருக்கக் கூடாது என்கிற உணர்வோடு நடவடிக்கை எடுத்து இந்த அரசு செயல்படுமா? நிர்வாக இயந்திரம் சீர்திருத்தப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பிரச்சினையை, கூடியவரை உடனடியாகத் தீர்க்க அரசு முயற்சி செய்துகொண்டு வருகிறது. இருக்கின்ற சூழ்நிலையில் கல்லூரியை மூடாமலிருந்தால், அது வேறு பல விளைவுகளை ஏற்படுத்தும், அதனால் மாணவர்களுக்கு பாதகம் ஏற்படலாம், அமைதிக்கு பாதகம் ஏற்படலாம் என்கிற விஷயங்களையெல்லாம் பரிசிலனை செய்து பார்த்து, யோசித்துப் பார்த்து, சிந்தித்துப் பார்த்து, அதற்குப் பிறகுதான் எத்தகைய முடிவு எடுப்பது நல்லது என்பதுபற்றி இறுதி முடிவு எடுத்து செயல்படுகிறோம். எப்பொழுதுமே இந்த அரசைப் பொறுத்தவரை, பிரச்சினைகள் ஏற்பட்டால், அவைகளை உறுக்குடன் தீர்க்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில்தான் செயல்பட்டுக்கொண்டு வருகிறது. ஆகவே தவறான [illegible]த்திற்கு யாரும் இடம் கொடுக்க வேண்டாம். கல்லூரிகள் மூடப் [illegible] பிரச்சினையைப் பொறுத்தவரையிலும், பிரச்சினையை நல்ல [illegible] தீர்க்க வேண்டுமென்ற நல்ல எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிறது. [illegible] அதற்கு ஒத்துழைக்க வேண்டும். உறுப்பினர் அவர்கள் [illegible] அரசுக்கு விதிக்கிற கட்டுப்பாடாக இருக்கிறது. மற்றவர் [illegible] கட்டுப்பாடாக இல்லை. மற்றவர்களும் பேச்சுவார்த்தைக்கு [illegible]னையைத் தீர்க்க ஒத்துழைக்க வேண்டும். மேலும் பொது [illegible]டிருக்கின்றவர்கள் இன்றையதினம் இந்த விஷயத்தில் [illegible]ார்கள் என்பதும் [illegible]ப்பட வேண்டிய ஒன்று.



1980 பிப்ரவரி 11]

திரு. ம. சங்கரலிங்கம் : கேரளாவில் கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆளுகின்ற அவர்கள் இதற்கு ஒரு மாற்று வழி கண்டுபிடித்திருக்கிறார்கள். அங்குள்ள கிறிஸ்துவ நிர்வாகிகள் கல்லூரிகளை பல மாதங்களாக திறக்காமல் அடைத்து வைத்திருந்த காலத்தில், சயன்ஸ் தவிர மற்ற பாடங்களை எல்லாம் தனியாக டியூட்டோரியல்களில் படித்துத் தேர்வு எழுதலாம் என்று வழிவகை உருவாக்கப் பட்டது. அதைப்பற்றிப் பரிசீலிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கேரளாவில் Parallel Colleges என்கிற ஒரு முறை இருக்கிறது. அதாவது, டியூட்டோரியல் காலேஜ்கள் அங்கே பரவலாக இருக்கின்றன. இப்பொழுது நாம் நடத்துகின்ற காலேஜ்களில் மாணவர்கள் முறையாகப் படித்தால், அதில் ஏற்படுகின்ற அறிவு வளர்ச்சி, கல்வியின் தரம் போன்றவை டியூட்டோரியல் காலேஜ்களில் இருக்க முடியாது. ஆனால், கல்லூரிகளை அடிக்கடி தொடர்ச்சியாக மூடுகின்ற சூழ்நிலையில், 100 நாட்கள், 50 நாட்கள் என்று மூடப்படுகின்ற காரணத்தால், டியூட்டோரியல் காலேஜ் முறை சிறந்த முறை என்று சொல்லக் கூடிய நிலை இன்றையதினம் ஏற்பட்டிருக்கிறது. முறையாக இன்றையதினம் இயங்குகின்ற கல்லூரிகளை நல்லமுறையில் நடத்த மாணவர்களும், ஆசிரியர்களும், மற்றவர்களும் ஒத்துழைப்பு கொடுப்பதுதான் சிறந்த வழியாக இருக்க முடியும். மேலும், இப்பொழுது காரஸ்பான்டன்ஸ் கோர்ஸ் என்ற முறையிலும் மாணவர்கள் சேர்ந்து படித்துக்கொள்ள வசதி செய்யப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 4.10)

புலவர் புலமைப்பித்தன் : பஞ்சாலைகளில் வேலை நிறுத்தங்கள் நடைபெறாது தடுக்கவும், சிறப்பாக உற்பத்தி இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலும் ஒரு 'ஸ்டேன்டிங் கமிட்டி' இருக்கிறது. அதைப்போல, அடிக்கடி கல்லூரிகளை மூடுவது, பிள்ளைகளுடைய படிப்பு கெடுவது போன்ற நிலைமைகள் ஏற்படாமலிருக்க, அரசியலைச் சார்ந்தவர்கள், அரசு, ஆசிரியர்களுடைய பிரதிநிதிகள் எல்லோரும் கூடி, ஒரு 'ஸ்டேன்டிங் கமிட்டி' உருவாக்கப்பட்டு எந்தப் பிரச்சினையானாலும் அந்தப் பிரச்சினைகளை அந்த கமிட்டிதான் முடிக்க வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டால், அடிக்கடி கல்லூரிகள் மூடப்படும் நிலை ஏற்படாமலிருப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று கருதி, அத்தகைய முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1980 பிப்ரவரி 11

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** கல்லூரிகளைப் பொறுத்தமட்டில், கல்லூரிகளை மூடுவதற்கு ஆசிரியர்களுடைய வேலை நிறுத்தம் ஒரு காரணம். அதுபோல, மாணவர்களுடைய வேலை நிறுத்தமும் ஒரு காரணம். ஆகவே, இந்த இரண்டையும் நாம் மனதிலே வைத்து, சில முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். கல்லூரிகளிலே, ஆசிரியர்கள், மாணவர்கள், அதிகாரிகள் ஆகியோர் அடங்கிய ஒரு குழுவை அமைத்து, கல்லூரிகளிலே அவ்வப்போது ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதன் மூலம், கல்லூரிகளிலே ஏற்படும் வேலை நிறுத்தத்தைத் தவிர்க்க முயற்சி எடுக்க வேண்டும் என்று விரும்புகிறோம். அதற்கான நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். அதைப் போலவே, மாநிலம் தழுவிய அளவில் நடைபெறுகின்ற வேலை நிறுத்தங்களைத் தவிர்க்க ஆசிரியர்களின் பிரதிநிதிகள், அதிகாரிகள் அடங்கிய ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழு இரண்டு அல்லது மூன்று மாத காலத்திற்கு ஒருமுறை கூடிப் பேசி பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளும் வகையிலே ஒரு அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. ஆகவே, இந்த முயற்சிகள் நல்ல முறையிலே நடைபெற்றால், கல்லூரிகள் மூடப்படுவது ஓரளவிற்குக் குறையும் என்று அரசு கருதுகிறது.

**திரு. பா. ரா. தாமஸ் :** இந்த முறை கல்லூரி மூடப்பட்டிருந்ததற்குக் காரணம் பெருவாரியான போக்குவரத்து ஊழியர்கள் ஒன்று சேர்ந்து கொண்டு கல்லூரியிலே சென்று மாணவர்களைத் தாக்கியதும், மாணவர்கள் போக்குவரத்து ஊழியர்களைத் திரும்பத் தாக்கும் முயற்சியிலே ஈடுபட்டதும் தான். போக்குவரத்து ஊழியர்களுக்கும், மாணவர்களுக்கும் இடையிலே நல்லதொரு உறவு ஏற்படும் வகையில், மாவட்ட ஆட்சித் தலைவர், ஊழியர்கள், மாணவர்கள் அடங்கிய ஒரு குழுவை ஏற்படுத்தி, இத்தகைய பிரச்சினைகள் உருவாகாமல் தடுத்தால், நிச்சயமாக இந்தமாதிரி நிலைமைகள் ஏற்படாது. அந்த வகையிலே கல்வி அமைச்சர் அவர்கள் ஏதாவது நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனை, பிரச்சினைகள் ஏற்படும்போது கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அந்த அடிப்படையிலேதான் நல்லுறவை ஏற்படுத்தி வருகிறார்கள். ஆனால், ஒருவர் அடித்துவிட்டார் என்பதற்காக, இன்னொருவரும் பதிலுக்குப் பதில் அடிக்க இறங்கும் வழக்கம் இருக்கக்கூடாது. அதுவும் குறிப்பாக, பல ஊழியர்களுக்கும், மாணவர்களுக்கும் அந்த வழக்கம் இருக்கக்கூடாது. ஏதாவது ஒன்று நடந்து விட்டால், போலீசாரிடம் தகவல் தந்து, அவர்கள் மூலம் நடவடிக்கை எடுக்கும் முறை உருவாகுமானால், இந்தமாதிரிப் பிரச்சினைகள் இவ்வளவு தூரம் உருவெடுக்காது.



1980 பிப்ரவரி 11]

**திரு. க. இராமமூர்த்தி :** பிரச்சினைகள் எதுவாக இருந்தாலும், மாதக் கணக்கிலே, இரண்டு மூன்று மாதங்களுக்கு அதிகமாகக் கூட பல நேரங்களிலே, கல்லூரிகளை மூடும் நிலை ஏற்படுவதால், இனிமேல் அரசினுடைய அங்கீகாரத் தோடும், பல்கலைக் கழகத்தினுடைய அங்கீகாரத்தோடும் நிரந்தரமாக துணைக் கல்லூரிகளை, ட்யூட்டோரியல் காலேஜ்களை ஏற்படுத்தி, எப்போதும் நான்கு, ஐந்து ஆசிரியர்கள் நிரந்தரமாக அங்கே இருக்கும் வகையிலே ஏற்பாடு செய்தால், இப்படி 60 நாட்கள் அல்லது அதற்கு அதிகமாக வேலை நிறுத்தங்கள் நடைபெறும் காலங்களிலே மாணவர்கள் படித்ததை யெல்லாம் மறந்துவிடுகின்ற நிலைமையைத் தவிர்த்து, அவர்கள் படித்த படிப்பு மறக்காமல் இருப்பதற்கும், தேவைப்பட்டால் அங்கே தொடர்ந்து படிக்கவும் உதவியாக இருக்கும் என்பதால், இத்தகைய துணைக் கல்லூரிகளை ஏற்படுத்த அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாணவர்களுடைய படிப்பு இந்த முறையில், இப்படி வேலை நிறுத்தங்கள் ஏற்படுவதால் கெடாமலிருக்க ஆவன செய்ய வேண்டுமென்ற உணர்வை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெளியிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வை நான் பாராட்டுகிறேன். போராட்டங்களுக்கான ஒரு தீர்வு என்று வரும்போது, நாம் இதைக் கடைப்பிடிப்பதற்கான வாய்ப்பு இல்லை. கேரளாவிலே parallel கல்லூரி, டியூட்டோரியல் காலேஜ் என்று இருக்கிறது. இங்கேயும் டியூட்டோரியல் காலேஜ் யார் வேண்டுமானாலும் நடத்தலாம். தடுக்கும் வகையில் எந்தவிதமான காரியத்தையும் நாம் செய்யவில்லை. அதுபோன்று கல்லூரிகளையும் நடத்தலாம். ஆனால் ஒன்று, பரீட்சை எழுத என்ன வாய்ப்பு இருக்கிறது என்பதையும் பார்க்க வேண்டும். இங்கே படிக்கின்ற மாணவர்கள் கல்லூரிக்குப் போகாத நேரங்களில், அவற்றைப் பயன்படுத்துவதற்கு எந்தவிதமான தடையும் இல்லை.

**திரு. ஆ. நல்லசிவன் :** துணைக் கல்லூரி அல்லது டியூட்டோரியல் காலேஜ் அமைக்க வேண்டும் என்ற கருத்து, ஆசிரியர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கு எதிராக இருப்பதால், இந்தக் கருத்தை அரசு ஏற்றுக்கொள்ளாமல் இருக்குமா ? ஆசிரியர்களுக்கு சில குறைகள் இருப்பதால்தான் அவர்கள் கிளர்ச்சியில் ஈடுபடுகிறார்கள். ஆகவே, அவற்றைத் தீர்ப்பதற்குப் பதில், இக்கல்லூரிகளை அமைத்தால், அவர்களுக்கு எதிராக அமையாதா !

திரு. க. இராமமூர்த்தி: கேள்வி நேரத்திலே 'motive attribute' பண்ணுகிறார்கள். என்னுடைய கேள்விக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'motive attribute' பண்ணுவது முறையல்ல, நாகரிகமுமல்ல.

திரு. ஆ. நல்லசிவன்: அந்தக் கருத்தை அரசு ஏற்றுக்கொள்ளாமல் இருக்குமா என்றுதான் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அரசு அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளாது என்பதைத்தான் நான் சொல்லியிருக்கிறேன். அதாவது, துணைக் கல்லூரிகள் என்று நாங்கள் நடத்த முடியாது. நாங்கள் நடத்தினால், அங்கேயும் இதுபோன்று வேலை நிறுத்தங்களும், தகராறுகளும் ஏற்படும். அதுவும் அரசுக் கல்லூரி போல ஆகிவிடும். அப்படிச் செய்ய முடியாது என்பது மட்டுமல்ல, கேரளாவிலே தனிப்பட்டவர்கள் அந்தக் கல்லூரிகளை நடத்துகிறார்கள். இங்கேயும் தனிப்பட்டவர்கள் டியூட்டோரியல்கள் நடத்துகிறார்கள், அப்படி நடத்த இங்கே தடையில்லை. மாணவர்கள் அங்கே போய் படித்துப் பயன்பெறுவதை நாங்கள் தடுப்பதும் இல்லை. அந்த நிலைமையிலே, மாணவர்கள் யார் வேண்டுமானாலும் டியூட்டோரியல் காலேஜ்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

திரு. ம. சங்கரலிங்கம்: 1977-க்கு முன்பு யாரெல்லாம் ஆசிரியர்களாக இருந்தார்களோ அவர்களுக்கெல்லாம் பதவிப் பாதுகாப்பு கொடுக்கப்பட்ட பிறகு, ஆசிரியர்களுக்கு இந்தக் குறை என்பது இல்லை. ஆனால், கல்வி பயில்வதிலே கல்லூரிகளிலே வாய்ப்பு இருப்பதுபோல parallel கல்லூரிகளிலேயும் இருக்கிறது. கேரளாவிலே இருக்கும் parallel கல்லூரிகள் பல்கலைக் கழகத்தின் மேற்பார்வையில் இருக்கின்றன. மாணவர்களுக்கு மிகவும் வசதியாக இருக்கிறது. ஆசிரியர்களுக்கு அவைகள் எந்தவிதத்திலும் எதிராக இல்லை. மாணவர்களுக்கு அவைகள் நன்மை பயக்கும் நிலையிலே இருப்பதால், நம்முடைய அரசு, அதிகாரிகளை அங்கே அனுப்பி அங்குள்ள முறையைப் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நடைபெறுகிற கல்லூரி மூடப்படுவதால், கல்வி பாதிக்கப்படுகிறது என்பதுதான் இப்போதுள்ள பிரச்சினை. கல்லூரிகளை நல்முறையில் நடத்த முயற்சிகளை மேற்கொள்ளும்போது, அந்த பாதிப்புகள் ஏற்படாது. நன்றாக நடைபெறும் சூழ்நிலை உருவாகும். Parallel கல்லூரி நடத்த அரசு முயற்சிக்குமா என்று கேட்டால், அரசு முயற்சிக்காது.





## *Improving George Town Area*

* 56 Q.—THIRU E. S. VENKATESAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to regulate the traffic flow in George Town area in Madras City, without bottle-necks and hindrances by attending to repairs of the Roads; and

(*b*) if so, the stage at which the matter now stands?

## ஜார்ஜ் டவுன் பகுதியை சீர்செய்தல்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை நகரில், ஜார்ஜ் டவுன் பகுதியிலுள்ள சாலைகளை செப்பனிட்டு, சீர்செய்து நெரிசல்கள் மற்றும் இடைஞ்சல்கள் இல்லாமல், போக்குவரத்து சீராக நடைபெறச் செய்ய அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(இ) 24 தெருக்களில் பள்ளங்கள் செப்பனிட்டும், 5 தெருக்களில் ஓரச் சாக்கடைகள் அமைக்கப்பட்டும் இருக்கின்றன. மேலும் 20 தெருக்களுக்கு ஓரச் சாக்கடைகள் அமைக்கும் பணி விரைவில் மேற்கொள்ளப்படும். நேதாஜி சாலையில் தானாக இயங்கும் சைகை காட்டி பொருத்தப்பட்டும், நடைபாதை செப்பனிடப்பட்டும் வாகனங்கள் தனித்தனியே செல்ல வழிவகை செய்யும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: கொத்தவால்சாவடி பகுதியிலே காலை நேரங்களிலே நடந்து போவதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இந்தக் கஷ்டத்தை நீக்க என்ன நடவடிக்கை அரசு எடுக்க இருக்கிறது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: துரித வாகனங்களையும் மெதுவாகச் செல்லும் வாகனங்களையும் தனித்தனியே பிரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. அந்த வகையிலே அரசு நடவடிக்கை எடுக்கும்.

THIRU G. VASANTHA PAI : Sir, will the Government consider whether the area between Kuralagam and the Police Station and Loane Square and the Fruit Market Road can be declared as a non-traffic road ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** உத்தேசமில்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** பாதைகளிலே கூட மின்சார இலாக்காவினரும், டெலிபோன் இலாக்காவைச் சார்ந்தவர்களும் ஆங்காங்கே அவர்களது பணிகளை நிறைவேற்றும்போது, பெரிய பெரிய குழிகளைத் தோண்டிவிட்டு, அவைகளை மூடாமல் அப்படியே விட்டுவிடுகிறார்கள். அவர்கள், அவைகளைச் சரிசெய்ய தம்முடைய அரசுக்குப் பணம் தருகிறார்கள் என்று அறிகிறேன். இருந்தாலும், அந்தக் குழிகளை மூடும் பணியை அவர்களே செய்ய வேண்டும் என்றோ, அல்லது சம்பந்தப்பட்ட துறைக்குத் தெரியப்படுத்தி உடனடியாக நிரப்பச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றோ தெரிவிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** இந்தக் கருத்து நடைமுறைக்கு ஒத்துவராது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** ஜார்ஜ் டவுன் பகுதியிலே உள்ள சாலை ஓரங்களிலே ஏராளமாக கடைகள் இருப்பதால், நடந்து போகின்றவர்களுக்குத் தொல்லையாக இருக்கிறது. சாலை ஓரத்திலே இருக்கும் நடைபாதையிலே செல்ல முடியாமல், ரோட்டிலேயே நடந்து செல்லும் நிலைமை இருக்கிறது. இதனால் போக்குவரத்திற்குப் பெரிய தொல்லையாக இருக்கிறது. எனவே, நடைபாதையிலே வியாபாரம் செய்கின்றவர்களுக்கு தக்கதொரு மாற்று இடத்தை அமைத்துக் கொடுத்து, தற்போது இருக்கும் சூழ்நிலையை அரசு மாற்ற முன்வருமா ?

(பிற்பகல் 4.20)

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** அவ்வாறு அவர்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்ட பிறகும், கடைக்காரர்கள் அங்கே போவதற்கு மறுக்கிறார்கள். அவர்களுக்கு தற்போது இருக்கும் இடத்தில்தான் நன்றாக



வியாபாரம் நடக்கிறது என்ற கருத்தைக் கூறுகிறார்கள். ஆகவே அவர்களுடைய இந்தக் கோரிக்கையையும் நாம் மனிதாபிமானத்தோடுதான் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது.

**புலவர் புலமைப்பித்தன் :** மின்சார இணைப்புக்கு ஒருமுறை, தொலைபேசி தொடர்பு அமைக்க ஒரு முறை, குடி தண்ணீர் வசதிக்காக ஒரு முறை என்று பல நேரங்களில் அடிக்கடி குழி தோண்டப்படுகிறது. அடிக்கடி குழி தோண்டாமல் பார்த்துக்கொள்ள அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** வேலைகள் நடக்க வேண்டுமானால், குழிகளைத் தோண்டித்தான் தீர வேண்டும். (சிரிப்பு)

**திரு. சி. இராமலிங்கம்:** சாலைகளில் பேருந்துகள் அதிகமாக ஓடுவதால் தான், விபத்துகள் ஏற்படுகின்றன. எனவே பேருந்துகளையெல்லாம் பாதாளப் பாதைகள் மூலமாக, சுரங்க வழிகளில் ஓட்டுவதற்கான செயல்முறைத் திட்டமேதும் அரசிடம் உள்ளதா ? அத்தகைய திட்டத்தை அரசு பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கேள்வி விரிவடைந்து கொண்டே போகிறதே.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** அப்படிப்பட்ட திட்டமேதுமில்லை.

## *Panchayat Union School Teachers, Under Suspension*

*57 *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of Thiru K. MEENAKSHISUNDARAM) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the number of cases of suspended Panchayat Union School Teachers, pending for more than six months without completion of enquiry as on 1st November 1978 ; and

(*b*) the reasons therefor ?

[1980 பிப்ரவரி 11

**பணிநீக்கம் செய்யப்பட்ட ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளின் ஆசிரியர்கள்.**

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்):** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் இருந்து தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களில், 6 மாதங்களுக்கு மேலாகியும் விசாரணை நடத்தி முடிக்கப்படாமல் உள்ள வழக்குகள் 1—11—1978 ஆம் நாளன்றுள்ளபடி எத்தனை ?

(இ) அவைகளுக்குரிய காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** (அ) இருபத்து நான்கு (24).

(இ) நீதி மன்றத்தில் தொடரப்பட்ட சில கிரிமினல் வழக்குகளின் தீர்ப்பு இன்னும் வழங்கப்படாமல் இருப்பதாலும், சில வழக்குகளில் செசன்ஸ் கோர்ட் வழங்கிய தண்டனைகள் மீது மேல் முறையீடு செய்திருப்பதாலும், இன்னும் சில வழக்குகளில் விசாரணை முடியாதிருத்தல் மற்றும் சிலவற்றில் துறை அதிகாரிகளின் விசாரணையில் உள்ளதாலும் மேற்கண்ட 24 ஆசிரியர்கள் தொடர்ந்து 6 மாதத்திற்கு மேல் பணி நீக்கத்தில் உள்ளனர்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** 24 ஆசிரியர்களில், துறையின் விசாரணை 6 மாத காலத்திற்கு மேலாகவும் முடியாமல் இருக்கும் வழக்குகள் எத்தனை ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** மாவட்ட வாரியாகத்தான் எனக்கு இங்கே கணக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தனியாகக் கேள்வி கேட்டால், இந்த விவரத்தை நான் சேகரித்துத் தருகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** 24 ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், 6 மாதங்களுக்கு மேல் பணி நீக்கத்தில் உள்ளார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதில் சில வழக்குகளில் கிரிமினல் கோர்ட்டுகளின் தீர்ப்பு வழங்கப்படாமல் இருக்கின்றன என்றும், சிலவற்றில் உயர் நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்திருக்கிறார்கள் என்றும் அறிவித்தார்கள். ஆனால் துறையின் விசாரணை காரணமாக 6 மாதத்திற்கு மேலாக அந்தத் துறை விசாரணை முடியாமை காரணமாக, பணி நீக்கத்தில் உள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக எவ்வளவு என்று தெரிவிப்பார்களா ?



1980 பிப்ரவரி 11]

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** மாவட்ட வாரியாக மொத்தமாகத் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே தனிக் கேள்வி போட்டால், விவரம் தரப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

*Irregularities in Appointments.*

* 58 *Q.*—THIRU Ku. Ma. BALASUBRAMANIAM (on behalf of THIRU V. THANGAPANDIAN): Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government have received any complaint about the irregularities committed in the appointment in the Madurai Corporation during the year 1977-78; and

(*b*) if so, the action taken thereon ?

**வேலை நியமனங்களில் முறைகேடுகள்.**

**திரு. கு. மா. பாலசுப்ரமணியம் (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்):** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1977-78 ஆம் ஆண்டில், மதுரை மாநகராட்சியில், வேலை நியமனங்களில் முறைகேடுகள் நடந்துள்ளதாக அரசிற்குப் புகார் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** (அ) ஆம்.

(இ) புகார் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** கொடுக்கப்பட்ட புகார் என்ன ? அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** மதுரை மாநகராட்சியில் 1977 ஆம் ஆண்டில் இளநிலை உதவியாளர்கள் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டதில் முறைகேடுகள் நடந்தனவென்றும், அதை நிவர்த்தி செய்ய வேண்டுமென்றும், மாநகராட்சி எழுத்தர்கள் சங்கத்திடமிருந்து 3—5—1978 தேதியிட்ட மனுவில் அரசுக்கு ஒரு புகார் வந்ததன் பேரில், மதுரை மாநகராட்சி ஆணையரின் குறிப்புரை கேட்கப்பட்டது. அந்த அடிப்படையில்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் புகார் வந்ததால், தவறுதலாகச் செய்யப்பட்ட நியமனம் குறித்து தீவிர விசாரணை மேற்கொள்ளுமாறு, லஞ்ச

[1980 பிப்ரவரி 11

ஒழிப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர் (டைரெக்டர் ஆஃப் விஜிலன்ஸ் ஆண்டு ஆன்டி-கரப்ஷன்) கேட்டுக்கொள்ளப்பட்டார். அவர் அறிக்கையின்மீது அவ்வாறு பணியில் அமர்த்தப்பட்ட 13 நபர்களில் 3 பேர்கள் பணியில் நீடிக்கலாமென்றும், மற்ற 10 பேர் பணி நீக்கம் செய்யப்பட வேண்டும் என்றும், அவர்கள் பணியிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்றும் அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. ம. சங்கரலிங்கம் : 3 பேர் பணியில் நீடிக்கலாமென்றும், 10 பேர் பணியிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்றும் ஆணை பிறப்பித்ததாக அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். நியமனத்தில் முறைகேடுகள் என்றால், நியமனம் செய்தவர்கள்தான் தவறு செய்திருக்க வேண்டும். எனவே, அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : வேலை தேடித் தரும் நிறுவனம், நியமனம் செய்தவர்கள் ஆக இரண்டு சாரார் மீதும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

## *Loan to Physically Handicapped Persons.*

* 59 *Q.*—Thiru Ku. Ma. BALASUBRAMANIAM (on behalf of Thiru N. SUNDARESA THEVAR) : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) the number of Physically Handicapped persons to whom loan has been given under the Self-Employment Scheme and the amount so given during the year 1977-78 ; and

(*b*) the condition on which loan is given to them ?

## உடல் ஊனமுற்றோர்களுக்கு கடன்.

திரு. கு. மா. பாலசுப்ரமணியம் (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்) மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1977-78 ஆம் ஆண்டில் உடல் ஊனமுற்றோர்கள் எத்தனை பேர்களுக்கு எவ்வளவு தொகை 'சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்' அடிப்படையில் கடன் வழங்கப்பட்டுள்ளது ?

(இ) கடன் என்ன நிபந்தனையின் அடிப்படையில் கொடுக்கப்படுகிறது?



1980 பிப்ரவரி 11]

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : (அ) உடல் ஊனமுற்றோர்களுக்கு சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் அரசு கடன் ஏதும் வழங்குவதில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாநில அரசின் நிறுவனங்களில் உடல் ஊனம் உற்றவர்கள் பதவியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்களா ? அதோடு பெட்டிக்கடை வைப்பதற்கு உடல் ஊனமுற்றவர்களுக்கு எவ்வளவு கடன் தொகை வழங்கப்படுகிறது ? இப்படி எத்தனை பேர் இதுவரை பயனடைந்திருக்கிறார்கள் ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பல்லவன் போக்குவரத்து நிறுவனத்தில் 78 உடல் ஊனமுற்றவர்களும், அரசு அச்சகத்தில் 140 உடல் ஊனமுற்றவர்களும், தலைமைச் செயலகத்தில் 47 உடல் ஊனமுற்றவர்களும் பணியாற்றுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், உடல் ஊனமுற்றவர்களுக்கு பெட்டிக் கடை வைக்க அளிக்கப்படும் உதவிபற்றிக் கேட்டார்கள். அவர்களுக்கு அரசு நேரடியாகக் கடன் கொடுக்கவில்லையென்றாலும்கூட, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக உடலூனமுற்றவர்கள் கடன் பெறுவதற்கான வசதியை அரசு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. வங்கிகள் மூலம் அவர்களுக்கு ரூபாய் 4,000 வரை 4 சதவீத வட்டியில் கடன் உதவி அளிக்கப்படுகிறது. ஒரு பெட்டிக்கடை வைக்க தோராயமாக ஆகும் செலவு ரூ. 2,800. மூலதனமாக ரூ. 1,200 கொடுக்கப்படும். பொதுவாக வருட வருவாய் ரூ. 500-க்குக் குறையாமல் இரண்டு பேர் பொறுப்புறுதி அளித்தாக வேண்டும். இவ்வாறு வழங்கப்படும் கடன் 60 சுலபத் தவணைகளின் மூலம் 75 ரூபாய் வீதம் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். இது சமூக நலத் துறை மூலமாக ஏற்பாடு செய்யப்படுகிறது. இதுவரை சென்னையில் 168 பேர்களுக்கு இவ்வாறு பெட்டிக்கடை வைப்பதற்கு கடன் வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. திருச்சியில் 115 பேர்களுக்கும் பெட்டிக்கடை வைப்பதற்கு இத்தகைய உதவி அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசின் எண்ணம் எல்லாம், இன்னும் ஆயிரம் பேருக்காவது கொடுக்க வேண்டும் என்பதுதான். இந்த வகையில்தான் சமூக நலத் துறை நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது.

திரு. ம. சங்கரலிங்கம் : கன்னியாகுமரி மாவட்டத்தில் 'சால்வேஷன் ஆர்மி' (ரட்சண்ய சேனை) என்ற பெயரில் ஒரு அமைப்பு ஆரல்வாய் மொழியில் செயல்பட்டு வருகிறது. இவ்வமைப்பின் மூலமாக உடலூனமுற்றவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்படுகிறது. இவ்வமைப்பு உடல் ஊனமுற்றவர்களின் மறுவாழ்வுக்காக என்று பல திட்டங்களை அமுல்படுத்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 4—2—1980 அன்றைய வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்ட வினாக்கள்.

## *Assistant Public Prosecutors' Grade II.*

@ * 21 *Q.*—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTHOSHAM) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether, according to the recommendations of the Third Tamil Nadu Pay Commission, two different scales of pay have been fixed, for the Assistant Public Prosecutors, Grade II, one for those working in the Metropolis and the other for those working in the Mofussil ;

(*b*) the basis on which this fixation has been made ; and

(*c*) whether there is any other Department, in which such different scales of pay have been fixed, for the same cadre of officials working in the Metropolis and Mofussil ?

### இரண்டாம்தர அரசு உதவி வழக்கு நடத்துநர்கள்.

திரு. பா. ரா. தாமஸ் (திரு. த. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின்படி, இரண்டாம்தர அரசு உதவி வழக்கு நடத்துநர்களுக்கு இரு வெவ்வேறு சம்பள விதங்கள், அதாவது, பெரு நகரங்களில் பணியாற்றுபவர்களுக்கு ஒரு சம்பள விதமும், வெளியூர்களில் பணியாற்றுபவர்களுக்கு மற்றொரு சம்பள விதமும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதா ?

(இ) எந்த அடிப்படையில் இந்த சம்பள விதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது ?

(உ) பெருநகரங்களிலும், வெளியூர்களிலும் பணியாற்றும் ஒரே பதவித் தரத்தில் உள்ள அதிகாரிகளுக்கு, இத்தகைய வேறுபட்ட சம்பள விதங்கள் நிர்ணயிக்கப்பட்ட வேறு துறைகள் ஏதும் உள்ளனவா ?

---

@ 4—2—1980 அன்றைய வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.



மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு நிதி அமைச்சர் சார்பில்): (அ), (இ) பணித்தன்மைகளை ஆய்வு செய்த பின்னரும், சம்பந்தப்பட்ட சங்கங்களின் பிரதிநிதிகள் கூறியவற்றைக் கேட்ட பின்னரும், மாநகர், வெளியூர்களிலுள்ள அரசு வழக்கு உதவி நடத்துனர் முதல்நிலை, இரண்டாம் நிலை ஆகிய பதவிகளுக்குத் தகுந்த சம்பள விதங்களைத் தமிழ்நாடு மூன்றாவது சம்பளக் குழு பரிவுரை செய்துள்ளது. தமிழ்நாடு மூன்றாவது சம்பளக் குழு பரிவுரை செய்த சம்பள விதங்களை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. வழக்கு நடத்தும் பணியாளர்களின் (prosecution staff) பல்வேறு வகைகளுக்கான சம்பள விதங்களில் காணப்படும் வேறுபாடு, அவர்கள் மாநகரில் பணி புரிகிறார்களா, வெளி ஊரில் பணி புரிகிறார்களா என்கிற இட அமைப்புக் காரணத்தை மட்டுமே பொறுத்தல்லாமல் பதவிகளின் பணித்தன்மைகளையும் பொறுத்துள்ளது. பதவிகளின் பணித்தன்மைகளின் அடிப்படையிலேயே புதிய சம்பள வித அமைப்பு வகுக்கப்பட்டுள்ளது. மாநகரிலுள்ள வழக்கு நடத்தும் பணியாளர்கள் வெளியூர்களுக்கும், வெளியூர்களிலுள்ள வழக்கு நடத்தும் பணியாளர்கள் மாநகருக்கும் இட மாற்றம் செய்யப்படுவதில்லை.

(உ) இவ்வினா எழவில்லை.

திரு. பா. ரா. தாமஸ் : ஒரே பதவித்தரத்திலுள்ள அதிகாரிகள் இரண்டு வெவ்வேறு இடங்களில் பணியாற்றும்போது ஊதிய விகிதத்தில் இத்தகைய வேறுபாடு தேவைதானா ? எனவே, அரசு இதை மறுபரிசீலனை செய்து ஒரே ஊதிய விகிதத்தை அனைவருக்குமே வழங்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : அவர்களுடைய பதவி நிலை ஒன்றாகத் தெரிந்தாலும், பதவியிலுள்ள கடமை, அவர்களுக்கு இருக்க வேண்டிய அனுபவம், தேவைப்படும் பயிற்சி, ஆகியவை மாநகரிலும், மாநிலத்தின் மற்ற பகுதிகளிலும் பணியாற்றுகிறவர்களிடையே பெரிதும் வேறுபடுகிறது. அதன் காரணமாகவே மாநகரில் பணியாற்றக் கூடியவர்களுக்கு இந்தச் சம்பள விகிதத்தில் வேறுபாடு இருக்க வேண்டும் என்று அவர்களுடைய சங்கத்தின் சார்பிலேயே கேட்டிருக்கிறார்கள். ஆக, அவைகளையெல்லாம் பரிசீலித்துப் பார்த்துத்தான் முதல், 2-வது மற்றும் 3-வது ஊதியக் குழுக்கள் அதே நிலையை மேற்கொண்டிருக்கின்றன.

122003

(பிற்பகல் 4-30)

**திரு. ம. சங்கரலிங்கம்:** அரசு வழக்குகளை நடத்துகிற வழக்குரைஞர்களில் முதல் தர வழக்குரைஞர், இரண்டாம் தர வழக்குரைஞர் என இருவகைப்பட்டவர்கள் உள்ளனர். அவர்களுள் முதல்தர வழக்குரைஞர்களை பெருநகரங்களிலும், இரண்டாம் தர வழக்குரைஞர்களை தாலுக்காத் தலைநகரங்களிலும் நியமிக்கிறார்கள். அப்படி நியமிக்கிறபோது, இரண்டாம் தர வழக்குரைஞர்களில் இருந்து குறிப்பிட்ட கால அளவிற்குப் பணிபுரிந்தவர்களுக்கு முதல்தர பதவியுயர்வு அளிக்கப்படுமானால், அது முறையாக அமைந்திருக்கும். ஆனால் கிரேட் 1 பப்ளிக் பிராசிகியூட்டர், கிரேட் 2 பப்ளிக் பிராசிகியூட்டர் என்று சொல்லி விண்ணப்பம் வாங்கி, 3 வருடங்கள் பணிபுரிந்தவர்களுள் சிலரை இங்கே, சிலரை அங்கே என்று நியமிப்பதில் உள்ள வேறுபாட்டுக்குத்தான் எதிர்ப்பு இருக்கிறது. முதலில் கிரேட் 2 பப்ளிக் பிராசிகியூட்டர்களாக நியமிக்கப்பட்டவர்களுள் பத்து வருடம், 5 வருடம் பணிபுரிந்தவர்களை பதவி உயர்த்தினால், இந்த நிலைமை ஏற்படாது. ஆகவே இதுபற்றி அரசு பரிசிலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் சொன்ன கருத்தை அரசு பரிசிலிக்கும்.

**திரு. பா. ரா. தாமஸ்:** பெரு நகரங்களிலும், ஏனைய நகரங்களிலும் உள்ள அரசு ஊழியர்களுக்கு வழங்கும் விட்டு வாடகைப் படி, நகர ஈட்டுப் படி ஆகியவைகளில் வேறுபாடு பொதுவாகவே அமைந்திருக்கும். ஆனால் ஒரே பதவியில் பணியாற்றும்போது, இந்த வேறுபாடு இருப்பதில்லை என்ற கருத்து பொதுவாக நிலவுகிறது. எனவே அரசு மீண்டும் பரிசிலனை செய்து பெரு நகரத்திலும், சிறு நகரத்திலும் இருக்கக்கூடிய ஒரே பதவியைச் சேர்ந்தவர்களுக்கு ஒரே விதமான ஊதிய விகிதத்தை வழங்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, பெருநகரங்களில் பணியாற்றக்கூடியவர்கள், எதிர்த்து வழக்காடத் திறமை பெற்ற பெரிய வழக்கறிஞர்களைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு மிகுந்த அனுபவம் தேவைப்படுகிறது. பணியிலும் கடுமை இருக்கிறது. வெளியூர்களில் உள்ளவர்களுக்கு அப்படிப்பட்ட நிலைமை இல்லை. ஆகவே அவர்களுடைய சங்கங்களைச் சேர்ந்தவர்களேகூட இப்படிப்பட்ட வேறுபாடு இருக்க வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அரசு இந்த வேறுபாடு இருக்க வேண்டுமென்று கருதுகிறது.



## Sea erosion

* 22 Q.—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Finance be pleased to state the places and the nature of damages that occurred due to sea erosion in and around Madras City ?

## கடல் அரிப்பு

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னை நகரிலும் அதனை ஒட்டியுள்ள பகுதிகளிலும் கடல் அரிப்பினால் எங்கெங்கு என்ன வகையான சேதம் ஏற்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு நிதி அமைச்சர் சார்பில்):** வட சென்னையில் ராயபுரம் மீன்பிடி துறைமுகத்தை ஒட்டிய பகுதிகள் கடந்த பருவகாலத்தில் கடல் அரிப்பால் மிகவும் பாதிக்கப்பட்டன. இவ்வாறு பாதிப்பு ஏற்பட்டதால் கடற்கரையை ஒட்டிய சுமார் 75 மீனவக் குடியிருப்புகள் பாதிக்கப்பட்டன. மேலும் எண்ணூர் அருகே நெடுஞ்சாலையில் சுமார் 800 மீட்டர் நீளத்திற்கு கடல் அரிப்பால் பாதிக்கப்பட்டுள்ளது.

தென்சென்னையில் பட்டினப்பாக்கத்தில் இருந்து புதிய கலங்கரை விளக்கத்திற்குப் போகும் மாற்றுப் பாதையில் இரண்டு மூன்று பகுதிகள் கடல் அரிப்பால் பாதிக்கப்பட்டுள்ளன.

* 23 Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Tamil Nadu Government have prepared any scheme to prevent sea erosion ;

(b) if so, the areas in which the Government have decided to implement this scheme ; and

(c) whether any financial assistance has been sought for from the Central Government for the above scheme ?

---

@4—2—1980 அன்றைய வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப் பட்டவை.

[1980 பிப்ரவரி 11]

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கடல் அரிப்பைத் ( Sea erosion ) தடுக்க தமிழ்நாடு அரசு திட்டம் ஏதும் தயாரித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எந்தெந்தப் பகுதிகளில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முடிவு செய்துள்ளது?

(உ) மத்திய அரசிடமிருந்து இதற்கான நிதி உதவி ஏதும் கோரப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு நிதி அமைச்சர் சார்பில்) :** (அ) ஆம்.

(இ) & (உ) கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவன்கோடு தாலுகாவில் உள்ள 14 கிராமங்களையும், கல்குளம் தாலுகாவில் 12 கிராமங்களையும் அகஸ்தீஸ்வரம் தாலுகாவில் 13 கிராமங்களையும் சேர்த்து 30 கிலோமீட்டர் நீளத்திற்கு அரபுக் கடலோரமாக ஓர் கடலரிப்புத் தடுப்புச்சுவர் ஒன்றினை எழுப்புவதற்கான ஒரு திருத்தப்பட்ட பெருந்திட்டம் நிதி உதவியை பெறும் பொருட்டு, மத்திய அரசுக்கு அனுப்புவதற்காக இவ்வரசின் பரிசீலனையில் உள்ளது.

(2) மத்திய அரசின் உதவியைப் பெறும் முன்னதாக கடலரிப்பைத் தடுக்கும் பொருட்டு ஒரு துரித கால நடவடிக்கையாக ரூ. 32.235 லட்சம் செலவில் கன்னியாகுமரி மாவட்டத்தில் நீச்சல்குளத்திற்கும், காந்தி மண்டபத்துக்கும் இடையே 433 மீட்டர் நீளத்திற்கும் முள்ளூர் துறையில் 325 மீட்டர் நீளத்திற்கும் காடியா பட்டினத்தில் 365 மீட்டர் நீளத்திற்கும், எனையத்தில் 135 மீட்டர் நீளத்திற்கும், ராசாக்கமங்கலத்தில் 220 மீட்டர் நீளத்திற்கும் கடலரிப்புத் தடுப்புச்சுவர் கட்டவும் பல்லம்துறை கிராமத்தில் 90 மீட்டர் நீளத்திற்கு பழுதடைந்த தடுப்புச் சுவர்களை புதுப்பிக்கவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. வட சென்னையில் 1,100 மீட்டர் அளவிற்கும், தென் சென்னையில் 500 மீட்டர் அளவிற்கும் கடலரிப்புத் தடுப்புச்சுவர் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

(3) கடலரிப்புத் தடுப்பு வேலைகளுக்காக மத்திய அரசிடமிருந்து நிதி உதவி பெற இவ்வரசு உத்தேசித்துள்ளது.



**திரு. க. இராமமூர்த்தி:** எண்ணூர் பகுதியில் ஏற்பட்டுள்ள கடல் அரிப்பைப் பொறுத்தவரையில், பெரும் முதலீடு செய்து ஏற்பட்டுள்ள தொழிற்கூடங்களுக்கு ஆபத்து வரும் அளவுக்கு நிலை வளர்ந்து கொண்டிருக்கிறது. இவற்றைத் தடுக்க ஏற்கெனவே மத்திய அரசின் திட்டம் இருந்தாலும்கூட, அதற்காகக் காத்திருக்காமல் உடனடியாக ஒரு மாஸ்டர் பிளான் போட்டு செயல்படுத்த இந்த அரசு முன்வருமா?

அதைப்போலவே அரிப்பு ஏற்பட்டுள்ள கடற்கரைப் பகுதியில், துறைமுகப் பகுதியில் தடுப்புச் சுவர்கள், மற்றும் பாறைகளைப் போட்டு நிரப்புவதால், மற்றொரு பகுதியிலே கடல் அரிப்பு வேகமாக இருக்கிறது என்று ஒரு வாதம் இருக்கிறது. அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்ததா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** எண்ணூர் பகுதியில் கடல் அரிப்புக்கான தடுப்புப் பணிகளை விரைவுபடுத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிறார்கள். அரசு இப்போது இந்தப் பணியைத் துரிதப்படுத்த வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறது.

கடல் அரிப்பைப் பொறுத்தவரையில், துறைமுகப் பகுதியில் கற்களைப் போட்டு கடலை பின்னுக்குத் தள்ளுகிறபோது, அதனால் அழுத்தம் அதிகமாகி, வேறு பகுதிகளில் கடல் அரிப்பு உண்டாகாமலிருக்க அரசு ஆராய்ந்து பார்த்ததா என்று கேட்டார்கள். இது ஒரு தொழில் நுட்ப அடிப்படைக் கேள்வியாக இருக்கிறது. இதைக் கணக்கில் கொண்டு அது சம்பந்தமான அறிக்கையை விரைவிலே இங்கே தகவலுக்காக அரசு வைக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** கடற்கரைப் பகுதிகளில் கடல் அரிப்பைத் தடுக்க பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துகிறபோது, சென்னைப் பகுதியில் அப்படிப்பட்ட வேலைகள் நடக்கின்றன. ஆனால் மகாபலிபுரம் போன்ற கடற்கரைப் பகுதிகளில் உள்ள மணலை கட்டுமானப் பணிகள் போன்றவற்றிற்காக எடுத்துக்கொண்டு செல்கிறார்கள். இதனால் கடல் அரிப்பு ஏற்படும் ஆபத்து இருக்கிறது. இதைப்பற்றிய செய்திகூட "இந்து" இன்னும் மற்ற பத்திரிகைகளிலும் நேற்று வந்திருக்கிறது. இதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** கடற்கரை மணலை என்ன காரணத்திற்காக எடுத்துச் செல்கிறார்கள் என்று தெரியவில்லை. கட்டுமானப் பணிகளுக்கு அந்த மணலைப் பயன்படுத்துவதில்லை. ஆற்று மணலைத்

தான் பயன்படுத்துகிறார்கள். வேறு காரணங்களுக்காக எடுத்துச் செல்வதாக இருந்தால், அதனால் கடல் அரிப்பு போன்ற ஆபத்து வருமானால், அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** கடல் அரிப்பைத் தடுக்க ஒரு தீவிரத் திட்டம் தீட்டி, மத்திய அரசினுடைய உதவியை நாடியிருப்பதாக சென்ற ஆண்டே இந்த அவைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதாக அறிகிறேன். இப்போது அமைச்சர் அவர்கள், மத்திய அரசின் உதவியை நாடுவது குறித்து பரிசிலனை செய்வதாகச் சொன்னார்கள். சென்ற ஆண்டு மத்திய அரசின் நிதியுதவியைக் கோரியதற்கு, இல்லையென்று அவர்களிடமிருந்து பதில் வந்திருக்கிறதா? நிதியுதவி கோரியிருந்தால், எவ்வளவு என்பதை அரசு தெரிவிக்குமா? கன்னியாகுமரி மாவட்டத்தில் 30 கிலோமீட்டர் நீளத்திற்கு அரபுக் கடலோரமாக கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டும் சிறப்புத் திட்டம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அத்திட்டம் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டுவிட்டதா? அல்லது இன்னும் செயல்பட வேண்டியிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** 30 கிலோமீட்டர் நீளத்திற்கு கடல் அரிப்புத் தடுப்புச் சுவர் எழுப்புவதற்காக 590 இலட்சம் ரூபாய்க்கான பெரும் திட்டம் ஒன்றை மாநில அரசு தயார் செய்து மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறது. அத்திட்டம் இன்னமும் மத்திய அரசின் பரிசிலனையில் இருக்கிறது. இதற்கிடையே, சிங்கப்பூர் போன்ற பகுதிகளில் கடல் அரிப்பை எப்படித் தடுக்கிறார்கள், ஆழத்தைக் குறைத்து கடலை பின்னுக்குத் தள்ளி எப்படி பயன்படுத்துகிறார்கள் என்பதைப்பற்றிய செய்திகளை பத்திரிகைகளில் பார்த்திருக்கிறோம், சென்று வந்தவர்களும் சொல்லக் கேட்டிருக்கிறோம். அதைக் கண்டறிந்து வர வேண்டுமென்பதற்காக தொழிலாளர் நல அமைச்சர் தலைமையில் ஆய்வுக் குழு சென்று வர வேண்டுமென்று அரசு முடிவு செய்து, மத்திய அரசினுடைய அனுமதியைக் கேட்டபோது, அப்படிப்பட்ட குழு செல்ல வேண்டாம் என்ற கருத்தை அவர்கள் தெரிவித்தார்கள். அப்படிப்பட்ட குழு செல்லாமலேயே இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று அரசு முடிவு செய்திருக்கிறது.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்:** கிழக்கு இராமநாதபுரத்தில் உள்ள கடற்கரைக்கும், ஆற்று கழிமுகப் பகுதிக்கும் இடையே உள்ள பகுதிகள் புயலால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பகுதிகள் பத்திரிகை நிருபர்களும், மற்ற அமைச்சர்களும் வரக்கூடிய பகுதிகள் இல்லை. ரொம்பவும் புறக்கணிக்கப்பட்ட பகுதி மாதிரி உள்ள இடங்கள். தம்முடைய மாண்புமிகு



முதலமைச்சர் அவர்கள் கூட வந்து பார்த்துவிட்டு, எப்படியாவது ஒழுங்குபடுத்த வேண்டுமென்று மனம் நொந்து சொன்னார். அப்படியெல்லாம் சொல்லியும், இதுவரைக்கும் அங்கே நடவடிக்கை எடுக்கப்படாததால், அபாயகரமாக நிலை இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** 'ஆகவே அரசு கவனிக்குமா' என்று கேட்டு கேள்வியை முடிக்க வேண்டும்.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத்தேவர் :** கவனிக்குமா என்றுதான் எப்போதும் கேட்கிறோம். ஆனால் ஒன்றும் நடப்பதில்லை. காலம் குறிப்பிட்டு அதற்குள் முடிக்க வேண்டுமென்று முடிவு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** அரசு விரைவிலே நடவடிக்கை எடுக்கும்.

THIRU G. VASANTHA PAI : Sir, are the Government aware that the Foreshore Road, right from the Foreshore Estate down to the Fishermen Colony, has been affected by erosion, despite the fact that there has been a wall which has been protecting it, since the wall has given way because of the low quality cement used? That is Number one. Number two is: Are the Government aware. . . .

(பிற்பகல் 4-40)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** துணைக் கேள்வி கேட்கும்போது ஒவ்வொரு கேள்வியாகக் கேட்க வேண்டும். ஒன், டூ, த்ரீ என்று கேட்டுக் கொண்டிருக்கக்கூடாது.

THIRU G. VASANTHA PAI : I am asking this because it is also connected with the same subject. Are the Government aware that in the beach near Chola Mandal, there is quick sand, and recently one person — a Chemical Engineer from Mangalore aged about 25 years — lost his life, because he was sucked in by quick sand in the beach?

[1980 பிப்ரவரி 11

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அதற்கு ஒன்று, இரண்டு, மூன்று சொல்ல வேண்டாம். கேள்வியைத் தொடர்ந்து கேட்டுக்கொண்டு போகலாம்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தெரிவித்த அந்தப் பகுதிகளிலே உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்காக அரசு 16 லட்சம் ரூபாய் ஒதுக்கி துரித நடவடிக்கை எடுத்து வருகிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** வருகின்ற 16 ஆம் தேதி, சூரிய கிரகணத்தின் போது கடல் கொந்தளிப்பு ஏற்படும் என்று ஆருடம் சொல்கின்றார்களே, அப்படி ஏதாவது கொந்தளிப்பு ஏற்பட்டு அரிப்பு ஏற்படாமலிருக்க, அரசு முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்குமா? அத்தோடு சிங்கப்பூருக்கு மீண்டும் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தலைமையிலே மேலவை உறுப்பினர்கள் சென்று அங்கே எப்படி கடல் அரிப்பைத் தடுக்கிறார்கள் என்பதைத் தெரிந்து வருவது பற்றி அரசு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** சூரிய கிரஹணத்தின்போது கடல் கொந்தளிப்பு ஏற்படலாம் என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அதற்கு ஆருடம் தேவையில்லை என்று கருதுகிறேன். அது நடக்கக்கூடும். மாண்புமிகு அங்கத்தினர்கள் அந்தப் பகுதிக்குச் செல்லாமல் இருந்தால், நல்லது. காரணம் சூரிய கிரஹணத்தின்போது சூரியனைப் பார்த்தால், கண் கெட்டுவிடும் என்று சொல்கிறார்கள். எனவே நாம் எல்லாம் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU D. V. D'MONTE : Sir, have the Government taken any steps to reclaim the land lost due to erosion ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** ஏற்கெனவே ஒரு பெரும் திட்டத்தின் மூலமாக ஒரு பெரும் நிதியை மத்திய அரசிடமிருந்து உதவியாகப் பெற காலதாமதம் ஆயிற்று. இப்போது எண்ணூர் பகுதிக்கு ரூ. 30.80 லட்சத்திற்கு மேலும், சென்னை பட்டினப்பாக்கம் பகுதிக்கு 16 லட்சம் ரூபாய் அளவிலும் உடனடியாக ஒதுக்கி அந்த நடவடிக்கைகளை நாம் எடுத்துக்கொள்ள இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் **முடிவுற்றன.**



1980 பிப்ரவரி 11]

## உடுக்குறியிடாத வினாக்கள்.

### சிறைச்சாலைகளில் நக்சலைட்டுகள்.

1. **கே. திரு. ம. சங்கரலிங்கம் & திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் சட்டமன்ற மேலவையில் 1—3—1978 ஆம் நாளன்று வினா எண். 157-க்கு அளிக்கப்பட்ட விடையினையொட்டி, கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) 27—4—1978 ஆம் நாளன்றுள்ளபடி தமிழ்நாடு சிறைச்சாலைகளில் நக்சலைட் இயக்கத்தைச் சேர்ந்த எத்தனை பேர் கைதிகளாக இருக்கிறார்கள்?

(இ) எந்தெந்த சிறைச்சாலைகளில் எத்தனை பேர் உள்ளனர்?

(உ) இவர்களில் ( ) 30 வயதுக்கு உட்பட்டவர்கள், (ii) 30 வயதுக்கு மேல் 50 வயதுக்கு உட்பட்டவர்கள் ( ) 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் எத்தனை பேர்?

(எ) இவர்களில் (i) பட்டதாரிகள், (ii) தொழில் நுட்பக் கல்வி பயின்றவர்கள், (iii) பிற மாநிலத்தவர் எத்தனை பேர்?

ப.—(அ) இருபத்தாறு.

(இ) அவைகள் கீழே தரப்பட்டுள்ளன:—

| | | |
|---|---|---|
| 1. | மத்திய சிறை, கோயம்புத்தூர் | 3 |
| 2. | மத்திய சிறை, திருச்சிராப்பள்ளி | 7 |
| 3. | மத்திய சிறை, சேலம் | 4 |
| 4. | மத்திய சிறை, பாளையங்கோட்டை | 2 |
| 5. | மத்திய சிறை, மதுரை | 4 |
| 6. | மத்திய சிறை, வேலூர் | 5 |
| 7. | மாநில மகளிர் சிறை, வேலூர் | 1 |

(உ) இவர்களில்

| | | |
|---|---|---|
| 1. | 30 வயதுக்கு உட்பட்டவர்கள் | 16 |
| 2. | 30 வயதுக்கு மேல் 50 வயதுக்கு உட்பட்டவர்கள். | 8 |
| 3. | 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் | 2 |

[1980 பிப்ரவரி 11

(எ) பட்டதாரிகள் 3

2. தொழில் நுட்பக் கல்வி பயின்றவர்கள். இல்லை

3. பிற மாநிலத்தவர் இல்லை

## *Income derived from Courts*

2. *Q.*—THIRU E. S. VENKATESAN: Will the Hon. the Minister for Law be pleased to state:

(*a*) the various types of Courts administering Criminal Law; and

(*b*) the total income by way of collection of fine, court fees, etc., during the year 1978 from each type of Courts?

ப.—(அ) குற்றவியல் செசன்ஸ் நீதிமன்றங்கள், உதவிக் குற்றவியல் செசன்ஸ் நீதிமன்றங்கள், மாவட்ட முதன்மை குற்றவியல் நீதிமன்றங்கள், சப்டிவிஷனல் குற்றவியல் நீதிமன்றங்கள், குற்றவியல் முதல் வகுப்பு நீதிமன்றங்கள், குற்றவியல் இரண்டாம் வகுப்பு நீதிமன்றங்கள், நீதித்துறை தனி நீதிமன்றங்கள்.

| (இ) நீதிமன்ற வகைகள். | தொகை. |
|---|---|
| | ரூ |
| (1) குற்றவியல் செசன்ஸ் நீதிமன்றங்கள் (சென்னை செசன்ஸ் நீதிமன்றம் நீங்கலாக). | 8,33,336.60 |
| (2) சென்னை செசன்ஸ் நீதிமன்றங்கள் | 52,800.50 |
| (3) உதவி செசன்ஸ் நீதிமன்றங்கள் | 21,32,710.30 |
| (4) மாவட்ட முதன்மைக் குற்றவியல் நீதிமன்றங்கள். | 6,16,696.22 |
| (5) சப்டிவிஷனல் குற்றவியல் நீதிமன்றங்கள் | 13,93,926.82 |
| (6) குற்றவியல் முதல் வகுப்பு நீதிமன்றங்கள் | 26,82,777.13 |
| (7) குற்றவியல் இரண்டாம் வகுப்பு நீதிமன்றங்கள் | 1,91,20,187.14 |
| (8) குற்றவியல் தனி நீதிமன்றங்கள் | 31,182.25 |
| (9) பெருநகர் குற்றவியல் நீதிமன்றங்கள் | 60,14,572.[illegible] |



1980 பிப்ரவரி 11]

## *Technical Teachers Certificate Course Centres.*

3. Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) the places where Technical Teachers Certificate Course s being conducted in Tamil Nadu;

(*b*) whether there is any such centre in Thanjavur District;

(*c*) if not, the reason therefor?

ப.—(அ) தொழில் நுட்பக் கல்வி ஆசிரியர் சான்றிதழ் பயிற்சி, சென்னை நகரம், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் நடத்தப்படுகிறது.

(இ) இல்லை.

(உ) இந்தப் பயிற்சியில் சேருவதற்கான மாணவர்களின் எண்ணிக்கை தஞ்சாவூர் மாவட்டத்தில் மிகக் குறைவாக இருப்பதால் அங்கு அந்த நிலையம் இல்லை.

## *Transfer of Tamil Pandits.*

4. Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that a representation has been received by the Government recently, from some of the Tamil Pandits with Post-Graduate qualification, who have been transferred from Thanjavur District to Kanyakumari District to permit them to work in the Higher Secondary Schools in that District; and

(b) if so, whether the Government would consider their transfer back to any of the Higher Secondary Schools in Thanjavur District?

ப.—(அ) ஆம்.

(இ) 1978-79-ல் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அரசு மேல் நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர்களாக நியமிக்க தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து 8 தமிழாசிரியர்கள் மாற்றப்பட்டார்கள். அவர்களில் 2 தமிழாசிரியர்கள் மாறுதல் மூலம் தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களுக்கு

திரும்பவும் வந்துள்ளனர். மீதமுள்ள தமிழாசிரியர்களில் அவர்களின் முந்துரிமைப்படி இனி தஞ்சாவூர் மாவட்டத்தில் அரசு மேல்நிலைப்பள்ளி களில் தமிழாசிரியர்கள் பணியிடங்கள் காலி ஏற்படும்பொழுது மாற்றப்படு வார்கள்.

### *Engineering Diploma Holders.*

5. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether there is any proposal with the Government to permit candidates, who have passed S.S.L.C. and possess ten years of experience as engineering diploma holders, to write the qualifying examination for B.E., of the Perarignar Anna University of Technology as private candidates; and

(*b*) If so, the stage at which the matter now stands ?

ப.—(அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

### *Raising Age of Retirement of College Librarians*

6 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that College Librarians have been classified as Teachers in the Tamil Nadu Private Colleges (Regulation) Act, 1976 (Act No. 19 of 1976) ;

(*b*) if so, whether it is a fact that the age of retirement of Librarians is 55, while it is 58 for other teaching staff members;

(*c*) the reasons for discrimination ; and

(*d*) whether Government have any proposal to raise the age of retirement to 58 in the case of Librarians also ?



ப.—(அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) அரசு கல்லூரிகளில் பணிபுரியும் நூலகர்கள், ஆசிரியால்லாதோராகக் கருதப்பட்டு, அவர்கள் ஓய்வு பெறும் வயது 55 ஆக இருந்த காரணத்தினால் அதே விதிமுறைகள் தனியார் கல்லூரி நூலகர்களுக்கும் பின்பற்றப்பட்டது.

(எ) 25—4—1979-க்குப் பிறகு தனியார் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர் அல்லாத ஊழியர்களுக்கும் ஓய்வு பெறும் வயது 55-லிருந்து 58 ஆக உயர்த்தியிருப்பதால், நூலகர்களுக்கும் அவர்களை ஆசிரியர்களாகவோ அல்லது ஆசிரியரல்லாதோர்களாகவோ கருதினாலும் ஓய்வு பெறும் வயது 58 ஆகத்தானிருக்கும்.

### தமிழ்க் கல்லூரி ஆசிரியர்களுக்கு பல்கலைக்கழக நல்கைக்குழு ஊதியம்.

7. கே. திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1979 மே மாதத்தில் தமிழகத் தமிழ்க் கல்லூரி ஆசிரியர் மன்றத் திடமிருந்து, கலைக் கல்லூரி ஆசிரியர்களுக்குப் பல்கலைக்கழக நல்கைக் குழு ஊதியம் (University Grants Commission Scales of Pay) அளித்த அதே நாளிலிருந்து, தமிழ்க் கல்லூரி ஆசிரியர்களுக்கும் அதே வித ஊதியம் வழங்க வேண்டும் என்ற வேண்டுகோள் ஏதும் வரப்பெற்றுள்ளதா?

(இ) ஆமெனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது?

ப.—(அ) & (இ) இதற்கான ஆணை அரசாணை எண். 1579, கல்வி, நாள் 24—8—1979-ல் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாணையின் கீழ் கலைக் கல்லூரி ஆசிரியர்கள் போன்று 1—1—1974 முதல் அமுல்படுத்தி 1—1—1977 முதல் பணப்பயன் வழங்கப்பட வேண்டும் என்று கல்லூரிக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

*Sales of "Poompuhar" Show Room, Thanjavur.*

8. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Rural Industries be pleased to state:

(*a*) the value of sales done at the sales showroom of "Poompuhar", Tamil Nadu Handicrafts Development Corporation Limited, in Thanjavur, during the last five years, year-wise ;

(*b*) the details of loss, if any, during that period;

(*c*) the reason therefor; and

(*d*) the action proposed to be taken in the matter ;

ப.—(அ) தஞ்சாவூர் பூம்புகார் விற்பனை நிலையத்தின் 1973-74 முதல் 1978-79 வரையுள்ள ஆண்டுகளுக்கான விற்பனையின் மதிப்பு பின்வருமாறு:

| ஆண்டு | விற்பனைத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|
| 1973-74 | 5.78 |
| 1974-75 | 7.73 |
| 1975-76 | 17.05 |
| 1976-77 | 11.55 |
| 1977-78 | 12.88 |
| 1978-79 | 11.22 |

(இ) & (உ) இவ்விற்பனை நிலையம், மூன்று ஆண்டுகளில் கீழ்க் கண்டவாறு நட்டமடைந்தது.

| ஆண்டு. | நட்டம். (ரூ. இலட்சத்தில்) |
|---|---|
| 1974-75 | 2.04 |
| 1976-77 | 1.62 |
| 1977-78 | 0.26 |

**நட்டமடைந்ததன் காரணம் பின்வருமாறு:—**

1974-75—தமிழ்நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனம் 1973-ம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் நிறுவப்பட்டது. நிர்வாக அமைப்பை பலப் படுத்துதல் போன்ற ஈடுபாட்டினால் இந்நிறுவனம் அலுவலக செயலமைப்புச் செலவினம் 1974-75-ல் அதிகமாயிற்று. இச்செலவினம் நிறுவனத்தின்



விற்பனை நிலையங்கள் அனைத்திற்கும் பகிர்ந்து ஒதுக்கப்பட்டது. இந்த வகையில் தஞ்சாவூர் பூம்புகார் விற்பனை நிலையத்தின் பங்குத் தொகை ரூ 0.52 இலட்சம் ஆகும். மேற்படி விற்பனை நிலையம் ரூ 0.48 இலட்சம் மட்டுமே இலாபம் ஈட்டியிருந்ததால், இதன் நிகர நட்டம் ரூ. 0.04 இலட்சமாகியது.

1976-77—இவ்வாண்டில் விற்பனை பெரும்பாலும் அரசு இலாக்காக் களுக்கே. மேலும் விற்பனையினாலான பலன் மிகக் குறைவே. இவற்றி னாலும் மற்றும் தலைமை அலுவலகச் செயலமைப்புச் செலவினம் பகிர்ந் தளிக்கப்பட்டதாலும் ரூ. 1.62 இலட்சம் நட்டமடைய வேண்டியதாயிற்று.

1977-78—விற்பனையில் குறிப்பாக அரசுத் துறைகள் அல்லாத விற்பனையில்—ஏற்றம், மற்றும் குறைக்கப்பட்ட செலவினங்கள் ஆகியவற்றி னால் முந்தைய ஆண்டில் ஏற்பட்ட நட்டமான ரூ. 1.62 இலட்சத்தை ஒப்பு நோக்கும்பொழுது இவ்வாண்டு நட்டம் ரூ. 0.26 இலட்சம் என்ற ஒரு கணிச மான அளவிற்குக் குறைக்கப்பட்டது.

(எ) பொருட்களை கைவினைஞர்களிடமிருந்து, நேரிடையாக வாங்கு தல், செயலமைப்புச் செலவுகளைக் குறைத்தல், விற்பனையாளர்களை ஊக்கு விக்கத் திட்டங்கள் வகுத்து அதன்மூலம் விற்பனையினைப் பெருக்குதல், தள்ளுபடி சலுகை சீட்டுகள் (Discount Coupons) வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் விற்பனையினை அதிகரிக்க எடுக்கப்பட்ட முயற்சிகளாகும். இம்முயற்சிகளின் பயனாக இந்நிறுவனம் 1978-79-ம் ஆண்டில் ரூ. 1.14 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.

*Government Hospitals.*

9 *Q.*—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Health be pleased to state the names of the Government Hospitals, which bear the donor's names and the Towns and Villages wherein they are situated?

ப.—ஓர் விவர அறிக்கை@ அவையின் பார்வைக்காக வைக்கப்பட் டுள்ளது.

@ 85-88 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

### Theft of Drugs from Government Hospitals.

10 *Q*.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Health be pleased to state:

(*a*) the steps taken by the Government to prevent theft of drugs from Government Hospitals; and

(*b*) whether there is any proposal to appoint an Export Committeo to study the matter in detail and make comprehensive recommendations to the Government ?

ப.—(அ) இம்மாநிலத்திலுள்ள எல்லா மருத்துவ நிலையங்களுக்கும் வழங்கப்படும் மருந்துகளும் மற்றும் மருந்து சம்பந்தப்பட்டவைகளும் தனிப்பட்ட முறையில் தயாரிக்கப்பட்டு, மாத்திரைகள், மருந்துகள், பாட்டில்கள் முதலியவற்றின் மீது குறிப்பிட்ட அடையாளங்களோ அல்லது முத்திரைகளோ சிறந்த முறையில் பொறிக்கப்பட்டுள்ளதாக இருக்க வேண்டுமென இம்மாநில அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. மேலும் ஒரு வரைவு மசோதா "தமிழ்நாடு மருந்துகள், மற்றைய பொருட்கள் (சட்ட விரோதமாக வைத்திருப்பது) மசோதா 1978" என்ற தலைப்பில் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது. மேற்படி மசோதாவின்படி அரசு அவ்வப்போது அறிவிக்கும் அடையாளங்களையோ, அல்லது முத்திரையையோ தாங்கிய அரசுக்குச் சொந்தமான அல்லது அரசின் பொறுப்பில் இருக்கும் மருந்துகள் அல்லது மற்றைய பொருட்கள் ஒருவரால் திருடப்பட்டோ அல்லது வேறு யாரிடமிருந்தாவது முறைகேடாக பெறப்பட்டோ சட்ட விரோதமாக கைவசம் உள்ளதாக ஒருவர் மீது ஆதாரப்பூர்வமாக சந்தேகிக்கப்பட்டால் அவர் இம்மசோதாவின் கீழ் குற்றவாளி என கருதப்படுவார்.

(இ) இதைக் குறித்த செயற்குறிப்பு அரசினால் பரிசீலிக்கப்பட்டு, அரசினர் மருத்துவக்கல்வி இயக்குநர், மருத்துவம் மற்றும் குடும்பநலத் துறை இயக்குநர் மற்றும் பொது சுகாதாரம் தடுப்பு மருந்து இயக்குநர்கள், அரசு மருத்துவமனைகளுக்கு மருந்துகள் வழங்கும் அரசு தனியார் நிறுவனங்களை 1—4—1979 முதல் அரசு அறிவித்த அடையாளத்தையோ அல்லது முத்திரையையோ உள்ள மருந்துகளை தயார் செய்யும்படி தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள்.

---

குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் ( * ) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)



## 2. அறிவிப்புகள்.

### (1) ஆளுநரிடமிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு 1930 ஆம் ஆண்டு கடன் நிவாரண சட்ட முன்வடிவை ஆய்விற்கு எடுத்துக் கொள்வதற்கு தனது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

### (2) பேரவையிலிருந்து செய்திகள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** பேரவையால் நிறைவேற்றப்பட்டு, மேலவையின் இசைவிற்காக பேரவைத் தலைவரின் கையொப்பத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகள் பேரவைத் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன—

(1) தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2 /1980).

(2) தமிழ் நாடு 1980 ஆம் ஆண்டு கடன் நிவாரண சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1980).

(3) தமிழ் நாடு 1980 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1980).

(4) தமிழ் நாடு 1980 ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1980).

(5) தமிழ் நாடு 1980 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரண) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1980).

(6) தமிழ் நாடு 1980 ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் பயிரிடும் குத்தகைதாரர்களது குத்தகை பாக்கி (நிவாரண) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1980).

## 3. தகவல் கோரல்.

### (1) அரசாங்கக் கொறடா ராஜிநாமா செய்ததாகக் கூறப்படுவது குறித்து

திரு. க. இராமமூர்த்தி: On a point of information, or on a point of order. தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் திரு. க. அறிவழகன் அவர்கள் அரசாங்கக் கொறடாவாகப் பணியாற்றி வருகின்றார்கள். ஆனால், அவர் ராஜிநாமா செய்துவிட்டதாகவும் பல்வேறு காரணங்களுக்காக பதவி துறந்துவிட்டதாகவும் வெளியிலே பத்திரிகைச் செய்தி வந்தது. அது சரிதானா என்று நாங்கள் அறிய விரும்புகிறோம். அந்தத் தகவலை அவர்களே பத்திரிகைகளுக்குத் தந்திருக்கிறார்கள் என்ற செய்தியும் வந்தது. இந்த அவையைப் பொறுத்தவரையிலே, இந்த அவை இயங்குவதற்கு அரசாங்கக் கொறடா மிகமிக முக்கியமானவர் என்பதையும், அந்தப் பதவி பொறுப்பான பதவி என்பதையும் அவையினர் அறிவார்கள். கொறடா இல்லாமலே பணியாற்றுகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். கொறடாவிற்கு என்று தனி இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அறிவழகன் அவர்கள் ராஜிநாமா செய்துவிட்ட பிறகும், அந்த இடத்திலே உட்கார்ந்து கொண்டிருக்கிறார். வேறு இடம் அவருக்குத் தரப்படுமா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் ஒரு சொற்பொழிவே ஆற்றுகிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி: இவ்வளவு விவரங்கள் அடங்கியிருக்கின்றன. பதவியின் முக்கியத்துவத்தின் காரணமாகக் கேட்கிறேன். அரசாங்கக் கொறடா ராஜிநாமா செய்திருக்கின்ற நிலைமையிலே புதிய கொறடா நியமனம் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன். அதைப்பற்றி இந்த அவைக்குத் தெரிவிக்காமல் இருப்பதற்கு என்ன காரணம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இது அரசு சம்பந்தப்பட்ட விஷயம். தலைவருக்குத் தகவல் வந்திருக்கிறது. அதுசம்பந்தமாக அரசிடமிருந்து தகவல் எதிர்பார்க்கிறோம். தகவல் வந்ததும் சொல்கிறேன்.



### (2) டீசல் பற்றாக்குறையைப் போக்க அரசின் நடவடிக்கை குறித்து.

திரு. ம. சங்கரலிங்கம்: இந்த அவையிலே, 3, 4 தினங்களுக்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் நம் மாநிலத்தில் உள்ள டீசல் பற்றாக்குறையைப் பற்றி எடுத்துச் சொல்லி, அத்துடன் மின் துறையில் ஏற்பட்டிருக்கக்கூடிய நிலைமைகளையும் எடுத்துச்சொல்லி, அதன் பேரில் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பதிலளித்திருக்கிறார்கள். ஆனால் இன்று வருகின்ற தகவல், குறிப்பாக சேலம், தென்னாற்காடு, வட ஆற்காடு போன்ற இடங்களில் கடந்த பத்து நாட்களாக கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்க முடியாமல் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டு, நெல் பயிர்களும், மற்ற விவசாயப் பயிர்களும் அழிந்துவிடக்கூடிய நிலையில் இருக்கின்றன. இதனால் பெரும் அளவில் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சேலம் மாவட்டத்தில் ஆத்தூரிலே இந்த மின்சாரத்தைப் பகிர்ந்து செய்கின்ற பவர் ஸ்டேஷனிலேயே விவசாயிகள் போய், சேர்ந்து கெரோ பண்ணி, போலீஸார் அவர்களை அகற்றியிருக்கிறார்கள் என்று தெரிகிறது. இது நாளாவட்டத்தில் சட்டம், ஒழுங்கையே குலைக்கின்ற பிரச்சினையாகப் போகக்கூடிய நிலையிலிருக்கிறது. இந்தப் பிரச்சினையில் அரசு அக்கறை எடுக்கக்கூடிய வகையிலே, எதிர்த்து அடையாளமாக வெளிநடப்பு செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினார்கள்.)

திரு. க. இராமமூர்த்தி: இந்தப் பிரச்சினையை, அவ்வப்போது அதனுடைய முக்கியத்துவம் கருதி, இந்த அவையிலேயே ஒத்தி வைப்புத் தீர்மானமாக, கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொண்டு வந்த பிறகும் கூட, இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற நிலைமைகள் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஒரு விவரம் மாண்புமிகு அங்கத்தினர் களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இதுபற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானமோ, பிரேரணையோ இல்லாமலேயே இது இப்போது எப்படி எழுகிறது ? ஒன்றும் இல்லாத நிலையிலே பேசப்படுகிறது.

திரு. க. இராமமூர்த்தி: தங்களுடைய கவனத்தை அப்போதுதான் ஈர்க்க முடியும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அப்படி இல்லை. நான் அதற்கு ஆட்சேபனை சொல்லவில்லை. கேள்வி நேரம் முடிந்துவிட்டது. வெளிநடப்பு பண்ணுகின்ற அளவுக்கு என்ன இருக்கிறது?

**திரு. க. ராமமூர்த்தி:** அந்தப் பிரச்சினையைப் பற்றி பல முறைகள் சொல்லியாகி விட்டன. இன்னும் இரண்டு நாட்களில் அவைக் கூட்டத் தொடர் முடியப் போகிறது. அவைக் கூட்டம் நடந்துகொண்டிருக்கின்றபோதே, கொண்டு வந்தும், அரசாங்கத்தின் மூலமாக அந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாத நிலை இருக்கிறது. அவைக் கூட்டத் தொடர் முடிந்த பிறகும், அந்தப் பிரச்சினை தொடர்ந்து நீடிக்காமல் இருப்பதற்காகவும், மக்களுடைய நலனைக் கருதியும், இந்த அவையிலே வெளிநடப்பு செய்யவேண்டிய கட்டாயத்திற்கு காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த நாங்கள் ஆளாகியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்திருந்தால், இதெல்லாம் தேவைப்பட்டிருக்காது.

[காங்கிரஸ் (இ) கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினார்கள்.]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** டீசல் பற்றாக்குறை ஏற்பட்ட போது, மாநில அரசு மத்திய அரசிடமிருந்து டீசல் கேட்டது. ஆனால் மத்திய அரசைப் பொறுத்தவரைக்கும், மத்திய அரசு 10 சதவிகிதம் டீசலைக் குறைத்துக் கொடுத்திருக்கிறது. அப்போது மத்திய அமைச்சர் திரு. சேத்தி அவர்களிடம் கேட்டோம். விவசாயிகளுக்காக அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டோம். ஆனால் அவர்கள் டெக்ஸ்டைல்ஸுக்காக 50 லட்சம் லிட்டர் ஒதுக்குகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்று நாங்கள் கோரியபோதும்கூட, டெக்ஸ்டைல்ஸுக்குத்தான் ஒதுக்க வேண்டுமென்று மத்திய அமைச்சர் திரு. சேத்தி அவர்கள் கூறிவிட்டார்கள் என்பதையும் கூறிக்கொள்கிறேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** டீசல் பற்றாக்குறை மக்களை வெகுவாகப் பாதிப்பதாக இருப்பதன் காரணமாக. . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** நானும் பார்த்தேன். இன்னும் ஒன்றும் பேசாமல் உட்கார்ந்திருக்கிறீர்களே என்று பார்த்தேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** இன்றைக்கு இருக்கக்கூடிய நிலை டீசல் கிடைக்கவில்லை. லாரிக்காரர்கள், டாக்சிக்காரர்கள், ஆட்டோ ரிக்ஷாக் காரர்கள் எல்லோரும் இரட்டிப்பாக வாடகை கேட்கக்கூடிய நிலை ஏற்பட்



டிருக்கிறது. இன்றைக்கு எழும்பூரிலிருந்து, மவுண்ட் ரோடுக்கு 3½ ரூபாய் வாடகை கொடுத்து வருவதற்குப் பதிலாக 7 ரூபாய் கொடுத்து வரவேண்டிய தாகிவிட்டது. இந்த நிலைமைகளை மாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் இதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தோம். அப்படியும் அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவேதான் அரசாங்கம் இதிலே தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைக் கவனத்திற்குக் கொண்டுவருவதற்காக, நானும் இந்த அவையிலே இருந்து வெளிநடப்புச் செய்கிறேன்.

(திரு. கே. அப்துல் வகாப் அவையிலிருந்து வெளியேறினார்.)

## 4. ஒத்தி வைப்புத் தீர்மானம்.

**(1) மத்திய அரசின் பெட்ரோலியம் அமைச்சர், திரு. பி. சி. சேத்தி,** 7—2—1980 அன்று சென்னையில் ஒரு பொதுக்கூட்டத்தில் குறிப்பிட்டதாகக் கூறப்படும் கருத்து குறித்து.

* **திரு. ஆ. நல்லசிவன்:** மாண்புமிகு தலைவரவர்களே, மிகவும் கவலை அளிக்கத்தக்க ஒரு பிரச்சினை பற்றி உங்கள் கவனத்திற்கும், அதன்மூலம் சபையின் கவனத்திற்கும், தமிழகத்தின் கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன்.

7—2—80 தேதியன்று சென்னையில் நடந்த பொதுக் கூட்டத்தில், மத்திய அரசின் பெட்ரோலியம் அமைச்சர் திரு. பி. சி. சேத்தி அவர்கள், "தமிழக முதல்வர் தாமாக வெளியேறாவிட்டால், அவரைத் தூக்கி எறிய வேண்டும்" என்று பகிரங்கமாகச் சொல்லி, பொது மக்களை தமிழக அரசுக்கு எதிராக வன்முறைக் கலகம் செய்யத் தூண்டிவிட்டதன் மூலம் ஏற்பட்டுள்ள ஆபத்தான நிலைமைபற்றி விவாதிக்க நான் ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப்பற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அவர் பேசியிருக்கிற பேச்சை இங்கே நான் படித்துக் காட்ட விரும்புகிறேன். 'திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தாமாகப் பதவியிலிருந்து வெளியேறாவிட்டால், அவரை வெளியேற்ற மக்கள் தயாராக இருக்க வேண்டும், திரு. எம். ஜி. இராமச்சந்திரனுக்கு தன்மான உணர்ச்சி இருந்தால், மக்கள் அளித்த தீர்ப்பை மதித்து பதவியிலிருந்து வெளியேற வேண்டும்' என்று தமிழில் இருக்கிறது. அதை ஏற்கெனவே நான் சொல்லியிருக்கிறேன். 8 ஆம் தேதி 'இந்து' பத்திரிகையில் அவர் பேசியது ஆங்கிலத்தில் வெளியாகியிருக்கிறது.

அவர் பேசியது ஆங்கிலத்தில் பிரசுரம் ஆகியிருக்கிறது. "If the Chief Minister does not go by himself you will have to throw him out" அவர்கள் பேசியிருக்கிறார்கள். இது பொது வாழ்வு மரபுக்கே பாதகமாக இருக்கிறது. அவர் ஒரு அமைச்சர், இவரும் ஒரு அமைச்சர், இவர் ஒரு மாநில முதல் மந்திரியுங்கூட. இப்படி ஒரு அமைச்சரே பேசினால், மற்றவர்கள் எப்படிப் பேசுவார்கள்? அவர் காங்கிரஸ் கட்சியின் ஒரு தலைவர் என்ற முறையிலும் பேசியிருக்கலாம். அப்படிப் பேசினாலும், ஒரு மாநில முதலமைச்சர் பற்றிப் பேசும்போது, பொது வாழ்க்கையில் ஒரு நியதியைக் கடைப்பிடிக்க வேண்டியிருக்கிறது. அதுவும் இல்லாமல், அவர் பேசியிருக்கிறார். "தூக்கி எறிதல்" என்றால் கலகம் பண்ணத் தூண்டுதல் என்று அர்த்தம் ஆகிறது. அப்படி கலகம் வந்த பிறகு, சட்டம் ஒழுங்கு குலைந்து விட்டது என்று சொல்லி, மத்திய அரசு தலையிட்டு மாநில சர்க்காரைக் கலைக்கலாமென்ற நோக்கம் இருப்பதாகத் தெரிகிறது. 1976-ல் இதே அமைச்சர் இங்கே வந்து, அன்று இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கலைப்பதற்கு முன்பு, அன்றைக்கு இருந்த முதல் மந்திரியை 'கிரிமினல்' என்று பேசினார். இப்போது மூன்று வருடங்கள் கழித்து வந்து, தன்மானம் இருக்கிறதா, மான உணர்வு இருக்கிறதா என்று கேட்கிறார். அங்கே பிரதம மந்திரி அவர்கள் எதிர்க் கட்சிகளின் ஒத்துழைப்பு வேண்டுமென்று சொல்லுகிறார். ஆனால் அவர்களுடைய கேபினெட் அமைச்சர் இங்கே வந்து நேரடி மோதல் நடத்துகிறார். மாநில அதிகாரிகளை செயலற்றுப் போகும்படி செய்வதற்கும் இந்த முயற்சி நடக்கிறது. தமிழ்நாட்டு அரசை, "கட்சி விட்டு கட்சி தாவுதல்" முறை மூலமாக கவிழ்க்கலாமென்று முதலில் நினைத்தார்கள். அது முடியாத போது, பலாத்கார முறையில் கவிழ்க்க நினைக்கிறார்கள். 1959-ல் அன்றைக்கு கேரளாவில் இருந்த கம்யூனிஸ்ட் மந்திரி சபையை இப்படித்தான் கவிழ்க்க முனைந்தார்கள். எனவே இதனால் ஏற்படக்கூடிய நிலைமைகளைப் பற்றி விவாதிக்க, அவையின் மற்ற நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: தலைவரவர்களே, மத்திய அமைச்சர் திரு. பி. சி. சேத்தி அவர்கள் 7—2—1980 அன்று சென்னையில் பல்வேறு பிரச்சினைகளில் எழுந்துள்ள நிலை குறித்துப் பேசிய பேச்சுக்கள் குறித்து விவாதிக்க அவையின் நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



மத்திய அமைச்சர் திரு. சேத்தி அவர்கள் மிகத் தெளிவாக, அவர்கள் கலந்துகொண்ட அரசியல் கூட்டங்களில், அரசியல் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் மட்டுமல்ல, பிற மாநிலங்களிலே பொறுப்பேற்றிருக்கிற கம்யூனிஸ்ட் அமைச்சர்கள் உட்பட, பல பேர்கள், பல நேரங்களில் இந்த மாநிலத்திற்கு வந்து, தங்களுடைய கருத்துக்களை மிகத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், கடந்த காலங்களிலே, இங்கே இயங்கிக் கொண்டிருக்கிற மாநில அரசின் முதல்வரானாலும் அல்லது அரசானாலும், தனிப்பட்ட அமைச்சர்களானாலும் அவர்கள் செய்யத் தவறியவைகளை—அவர்கள் கோணத்தில் தவறு என்று நினைப்பவைகளை—மிகத் தெளிவாகச் சொல்வதற்குத் தயங்கியதில்லை. மிகக் கடுமையாகச் சொல்லியிருக்கிறார்கள், கடந்த காலத்திலே என்பது மட்டுமல்ல, அரசியல் மேடைகளில் பேசுகின்ற அரசியல் வாதங்கள், அரசியல் பேச்சுக்கள் மாநில அரசைப்பற்றி விமர்சனம் செய்யும் ஒன்றாக அமைவது தேவையான ஒன்று. அதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் இன்றைக்கு எழுந்துள்ள ஒரு நிலை, மத்திய அமைச்சர் இங்கே வருகின்றபோது, அவர்கள் மாநில அரசு முறையாகச் செயல்படவில்லை என்றால், இங்கே எழுந்திருக்கிற, இந்த மாநிலத்தில் எழுந்திருக்கிற புதிய அரசியல் விளைவுகள் காரணமாக, மாற்றங்கள் காரணமாக ஏற்பட்டுள்ள நிலைமையை விமர்சிக்க, இந்தியக் குடிமகன் என்ற அளவில் உரிமை இருக்கிறது. அத்தனை பேருக்கும் உரிமை இருக்கிறது. அதிலும் காங்கிரஸ் தலைவர் என்ற முறையில் அந்த உரிமை . . . .

(திரு. ஆ. நல்லசிவன் எழுந்தார்)

I am not yielding. I am not yielding.
காங்கிரஸ் கட்சியினுடைய தலைவருக்கு அந்த உரிமை அதிகம் இருப்பதாக காங்கிரஸ் கட்சிக்காரர்களாகிய நாங்கள் கருதுகிறோம். ஆக அந்த அளவிலே அரசியல் மேடைகளிலே தெரிவித்துள்ள அரசியல் கருத்துக்களை, விமர்சனங்களை விவாதிக்க இந்த அவையை ஒரு இடமாகப் பயன்படுத்தும் நிலை முறையானதல்ல. அப்படிப் பயன்படுத்த முனைவதன் மூலமாக மத்திய அமைச்சர்கள்மீது, அதுவும் அவர்கள் இல்லாதபோது அவர்களைப் பற்றி பல்வேறு கருத்துக்களைத் தெரிவிக்க, மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் சண்டை வந்துள்ளதைப் போல, இந்த அவையைப் பயன் படுத்த . . . .

[1980 பிப்ரவரி 11

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, on a point of order ...............

Thiru K. RAMAMOORTHY : Sir, I am not yielding.

*மாண்புமிகு மேலவைத் தலைவர் :* அவருக்காக நான் உறுப்பினரவர்களை ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 'பாயின்ட் ஆஃப் ஆர்டர்' என்று 'ரெய்ஸ்' பண்ணிவிட்டால், அவரை அனுமதிக்க வேண்டும். எனவே தயவு செய்து உட்காருங்கள்.

*திரு. க. இராமமூர்த்தி :* ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் 'பாயின்ட் ஆஃப் ஆர்டர்' கிடையாது. விதிகளில் அப்படி இருக்கிறது. . .

*மாண்புமிகு மேலவைத் தலைவர் :* அவருக்காக நான் உறுப்பினரவர்களை உட்காரச் சொல்லவில்லை. அவர் என்ன சொல்கிறார் என்பதைத் தெரிந்து கொண்டு, பின்னர் ரூலிங் கொடுக்கலாம். எனவே அவர் சொல்லட்டும். உறுப்பினர் உட்கார வேண்டும்.

THIRU G. VASANTHA PAI : On a point of order, one Member cannot reply to another Member.

*மாண்புமிகு மேலவைத் தலைவர் :* இது ஒன்றும் 'பாயின்ட் ஆஃப் ஆர்டர்' அல்ல.

*திரு. க. இராமமூர்த்தி :* தலைவரவர்களே, மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இருக்கின்ற உறவையே இங்கே கொண்டுவர முயல்வது கூடாது. ஒரு கட்சி அரசியலிலே—திரு. சேத்தி அவர்கள் காங்கிரஸ் அமைச்சர், காங்கிரஸ் தலைவராக மேடையிலே பேசுகிறார். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதலமைச்சரைப்பற்றிப் பேசுகின்றபோது— அண்ணா தி.மு.க.வைப் பற்றி விமர்சனம் செய்யும்போது, அந்தக் கட்சியைச் சார்ந்தவர் முதலமைச்சராக இருக்கிறார் என்ற காரணத்தால், அவரைப் பற்றிப் பேசுகிறார். ஆகவே இந்த அவையின் மூலமாக அரசியல் கட்சிகளைப் பற்றிய அரசியல் வாதங்கள், அரசியல் விமர்சனங்கள் மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் ஒரு பெரிய பிணக்கு ஏற்பட்டிருக்கிறது, பிரிவு ஏற்பட்டிருக்கிறது, சண்டை ஏற்பட்டிருக்கிறது என்ற நிலைக்கு உருவகப் படுத்த, அதற்கென்றே தன்னைத் தயார்படுத்திக்கொண்டிருக்கும் நிலைக்கு இதை விடக்கூடாதென்று சொல்லி, அந்த நிலை பற்றி விரிவாக விவாதிக்க இந்த அவையின் மற்ற நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1980 பிப்ரவரி 11]

*மாண்புமிகு மேலவைத் தலைவர் :* மாண்புமிகு உறுப்பினரவர்களிடமிருந்து ஒரு தகவல் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். தாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம்தான் கொடுத்திருக்கிறீர்கள். அது இயற்கையான உரிமை. எதற்காக நான் அதையும் கேட்க விரும்புகிறேன் என்றால், பின்னால் ரூலிங் கொடுக்க அது தேவைப்படும். எனவே இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்க உறுப்பினர் அவர்களுக்கு என்ன அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

*திரு. க. இராமமூர்த்தி:* தலைவரவர்களே, நான் காலையிலே பேரவையின் நடவடிக்கைகளை, இந்த அவையின் உறுப்பினன் என்ற முறையில் பார்த்துக் கொண்டிருந்தேன். என்னுடைய மனதிலே பட்டது, மாலையில் இந்த அவையும் அதுபோன்ற நிலைமைக்குப் பயன்படுத்தப்பட ஒரு வாய்ப்பு இருக்குமோ என்ற அச்சத்தின் காரணமாக. என்னுடைய ஒத்திவைப்புத் தீர்மானம் தள்ளுபடியாகுமென்ற நம்பிக்கையோடு, இதைக் கொண்டு வந்தேன். மற்ற கட்சிகள் இதைப் பயன்படுத்தக் கூடாது என்று சொல்லும் போது, அதற்குப் பதிலளிக்கும் வாய்ப்பை என்னுடைய காங்கிரஸ் கட்சி இழந்துவிடக் கூடாது என்பதற்காக இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருந்தேன்.

*திரு. ப. மாணிக்கம்:* தலைவரவர்களே, 'ஆன் எ பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷன்' . . .

*மாண்புமிகு மேலவைத் தலைவர்:* ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மேல் உறுப்பினர் அவர்களை அனுமதிக்க மாட்டேன். தயவுசெய்து உட்காருங்கள்.

*திரு. ப. மாணிக்கம்:* ஒரு 'இன்சின்யுவேஷன்' வந்திருக்கிறது. உண்மையை வெளிப்படுத்தியாக வேண்டும். . .

*மாண்புமிகு மேலவைத் தலைவர்:* பின்னாலே சொல்லலாம்.

(திரு. ஆ. நல்லசிவன் எழுந்தார்)

*மாண்புமிகு மேலவைத் தலைவர்:* உறுப்பினர் அவர்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லியாகிவிட்டது. உட்காரவேண்டும்.

*திரு. ப. மாணிக்கம்:* இதைப்பற்றி பின்னாலே சொல்வதற்கு வாய்ப்பு இல்லை. எனவே . . . .

# மத்திய அரசின் பெட்ரோலியம் அமைச்சர் திரு. பி. சி. சேத்தி 7—2—1980 அன்று சென்னையில் ஒரு பொதுக் கூட்டத்தில் குறிப்பிட்டதாகக் கூறப்படும் கருத்து குறித்து

[1980 பிப்ரவரி 11

**திரு. ஆ. நல்லசிவன்:** ஒத்திவைப்புத் தீர்மானம் நான் கொடுத்திருக்கிறேன். ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்காதபோது, உறுப்பினர்களை அனுமதித்திருக்கிறீர்கள் . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவரும் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். எனவே நான் பேச அனுமதித்துத்தான் ஆக வேண்டும்.

(பல உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

**திரு. ஆ. நல்லசிவன்:** நாங்கள் ஒரு கட்சி . . .

**திரு. க. இராமமூர்த்தி:** நாங்களும் ஒரு கட்சி . .

**திரு. ப. மாணிக்கம்:** நாங்களும் ஒரு கட்சி . . .

**திரு. கோ. சி. மணி:** நாங்களும் ஒரு கட்சி . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன்னவரவர்களைப் பேச விட வேண்டும். ஒத்திவைப்புத் தீர்மானத்தில் இவ்வளவு உணர்ச்சிவயப்பட வேண்டாம். திரு. மாணிக்கம் அவர்கள் உட்கார வேண்டும்.

**திரு. ப. மாணிக்கம்:** கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் பேசாததை உறுப்பினரவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி:** ஒத்திவைப்புத் தீர்மானத்தின் இடையிலே பேசுவதற்கும், இதில் மற்றவர்கள் பதில் சொல்லவும் வாய்ப்பு கிடையாது.

(பிற்பகல் 5-00)

(திரு. நல்லசிவன், திரு. மாணிக்கம், திரு. இராமமூர்த்தி, திரு. கோ. சி. மணி ஆகியோர் இருக்கையிலிருந்து எழுந்து நின்றார்கள்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன்னவரைப் பேச விட வேண்டும். இதர உறுப்பினர்கள் உட்கார வேண்டும்.

(மாண்புமிகு திரு. கா. இராசா முகமது இருக்கையிலிருந்து எழுந்தார்.)

**திரு. க. இராமமூர்த்தி:** மற்றவர்கள் இந்த விதியின்கீழ் குறுக்கிட முடியாது. யாராக இருந்தாலும் இந்த விதியின்கீழ் குறுக்கிட முடியாது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் சொல்வதைத் தான் நானும் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அவை முன்னவர் பேசப் போகிறார்கள். அவரைப் பேச விடவேண்டும். உறுப்பினர் உட்கார வேண்டும்.

மத்திய அரசின் பெட்ரோலியம் அமைச்சர் திரு. பி. சி. சேத்தி 7—2—1980 அன்று சென்னையில் ஒரு பொதுக் கூட்டத்தில் குறிப்பிட்டதாகக் கூறப்படும் கருத்து குறித்து 

1980 பிப்ரவரி 11]

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. நல்லசிவன் அவர்களும், திரு. இராமமூர்த்தி அவர்களும் அண்மையிலே சென்னைக்கு வந்து உரையாற்றிச் சென்ற மத்திய அமைச்சருடைய உரையைப்பற்றியும், அதனால் ஏற்பட்டிருக்கின்ற அரசியல் நிலைமைகள் பற்றியும் இங்கே ஒத்திவைப்புத் தீர்மானம் மூலம் பேச முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அவையை ஒத்திவைக்க வேண்டுமென்ற காரணத்தையும், அதற்காக ஏற்பட்டிருக்கின்ற அவசர சூழ்நிலைகளையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் ஒரு கண்ணோட்டத்திலிருந்து தெரிவித்தார்கள். இன்னொரு கோணத்திலிருந்து அவையை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லையென்று அரசின் சார்பிலேயிருந்து நானே சொல்லலாம் என்று இருந்தேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களே அதை நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறார்கள். இதற்கு மேலே உள்ளே சென்று நிலைமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டாம். ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கென்று சில மரபுகளும், முறைகளும் இருக்கின்றன. ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுப்பதாக இருந்தால், அதற்கான காரணங்களைச் சொல்ல வேண்டும். முன்னால் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் அதற்கான காரணங்களைச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இது அரசியல் ரீதியாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று அவர்களின் கருத்தின் அடிப்படையிலே அவர்களே காரணங்களையும் சொல்லி, பதிலையும் சொல்லியிருக்கிறார்கள். எதிர் காலத்திலாவது இப்படிப்பட்ட கருத்துக்களை ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலம் கொண்டுவராமல் இருக்க வேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய பெட்ரோலிய அமைச்சர் உயர்திரு. சேத்தி அவர்கள் தமிழக முதல்வரைப்பற்றியும், தமிழகத்தில் இருக்கின்ற அரசியல் நிலைமைபற்றியும் பேசிய கருத்துக்களை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அவர் தெரிவித்த பல கருத்துக்கள் மக்களைத் தூண்டி விடுகின்ற விதத்திலே இருந்தன என்றும், அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்தும் விதத்திலே இருந்தன என்றும் கூறி, அவ்வாறு மத்திய அமைச்சர் சொன்ன கருத்துக்கள் எந்த விதத்தில் நியாயம் என்பதை திரு. நல்லசிவன் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். "மத்திய அமைச்சர் இங்கே இப்படிப்பட்ட கருத்துக்களைச் சொல்லலாமா? அது துரதிருஷ்டவசமானது" என்பதை இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு.

[திரு. கா. இராசா முகமது] [1980 பிப்ரவரி 1:

நல்லசிவன் தெரிவித்திருக்கிறார். இந்த விஷயத்தைப் பொறுத்தவரை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்முடைய பாரதப் பிரதம திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு, "மத்திய அமைச்ச இப்படிப் பேசலாமா? சரிதானா?" என்று கடிதம் எழுதுகிற நடவடிக்கை யில் ஈடுபட்டிருக்கிற காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர்கள் இதை இந்த சந்தர்ப்பத்தில் பெரிய பிரச்சினையாக ஆக்க வேண்டாமென்று கேட்டுக்கொள் கிறேன். ஆகவே இதை விவாதிக்க அவையை ஒத்திவைக்க வேண்டிய அவசிய மில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இதுபற்றி விவாதிக்க அவையை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதுவதால், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான அனுமதியை மறுக் கிறேன்.

(2) சென்னை செல்லம்மாள் மகளிர் கல்லூரி மூடியுள்ளது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சென்னை செல்லம்மாள் மகளிர் கல்லூரி மூடியுள்ளதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்புக் கொடுத்திருக் கிறார்கள். அது எவ்வாறு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான விதிகளின்கீழ் வருகிறது என்பதை உறுப்பினர் சுருக்கமாக விளக்கக் கோருகிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** நானும் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்புக் கொடுத்திருந்தேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திரு. நல்லசிவன் அவர்கள் கொடுத்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானம் இன்றைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** செல்லம்மாள் மகளிர் கல்லூரி மாணவிகள் இரண்டு முக்கிய கோரிக்கைகளை வற்புறுத்தி கடந்த சில நாட்களாக கால வரையறையற்ற வேலை நிறுத்தம், உண்ணாவிரதம், மற்றும் பல நடவடிக்கை களில் ஈடுபட்டிருக்கிறார்கள். பல்கலைக் கழகத்தின் சார்பில் பேராசிரியர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையை வெளியிட வேண்டுமென்றும், கல்லூரி முதல்வர் மீதுள்ள லஞ்சப் புகார்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கோரி, தீவிரமான நடவடிக் கைகளில் அவர்கள் இறங்கியிருப்பதாக செய்தித்தாள்களில் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இதற்கு முன்புகூட அவர்கள் வேலை நிறுத்தத்தில்



1980 பிப்ரவரி 11] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

டுபட்டு, கல்லூரி சில நாட்கள் மூடியிருந்தது. இப்போதும் மூடியிருக்கிறது. இதுபோல் வேறு சில இடங்களிலும் மாணவர்கள் ஈடுபடக் கூடிய நிகழ்ச்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. இதனால் கல்லூரி மாணவர்களிடையே அமைதிக் குலைவு ஏற்பட்டு, படிப்பும், எதிர்காலமும் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் மாணவர்களின் இந்த அவசரநிலை குறித்து விவாதித்து, தீர்வு காண, அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, சென்னை செல்லம்மாள் மகளிர் கல்லூரி மாணவிகள், கல்லூரி முதல்வரின் மேல் லஞ்ச ஊழல் போன்ற பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சுமத்தியும், மேலும் தங்களுக்கு அடிப்படை வசதிகள்கூட தரப்படவில்லை என்றும் கூறி, ஆகஸ்ட் மாதம் 1979, போராட்டம் நடத்தினர். 22—8—1979 அன்று கல்லூரிக் கல்வி துறை இயக்குநர் மேற்படி கல்லூரிக்குச் சென்று மாணவிகளின் குறைகளைக் கேட் டறிந்து, அரசுக்கு அறிக்கை அனுப்பினார். கல்லூரி முதல்வர், அக்டோபர் மாதம் விடுப்பில் சென்றதைத் தொடர்ந்து, வேறு ஒரு முதல்வர் தற்காலிகமாக நியமிக்கப்பட்டார். மேற்படி கல்லூரியை நிர்வகிக்கும் பச்சையப்பன் அறக் கட்டளை, கல்லூரி முதல்வரின் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரிக்க, மாநிலக் கல்லூரி முன்னாள் முதல்வரைக் கொண்ட ஒரு நபர் விசாரணைக் குழுவை அமைக்க வேண்டியது. அவ்வாறே அக்குழு அமைக்கப்பட்டது. அது தீவிர விசாரணைக்குப் பிறகு, தன்னுடைய அறிக்கையை பச்சையப்பன் அறக்கட்டளைக்கும், பல்கலைக் கழகத்திற்கும், கல்லூரிக் கல்வி இயக்குந ருக்கும் அனுப்பியுள்ளது. இந்த அறிக்கையின் மேல் சம்பந்தப்பட்ட துறைகள் நடவடிக்கை எடுக்கும். இம் மாதத் தொடக்கத்தில் மாணவிகளில் சிலர் வன் முறையில் ஈடுபட்டு, கல்லூரி உடைமைகளுக்கு சேதம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, கல்லூரியை மூட அரசு உத்தரவிட்டுள்ளது. ஆகவே இதை விவாதிக்க அவை யின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இதுபற்றி விவாதிக்க அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதுவதால், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான அனுமதியை மறுக்கிறேன்.

## 5. கவன ஈர்ப்பு.

### மாயூரம் ஏ. வி. சி. கல்லூரி மூடப்பட்டது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திருவாளர்கள் சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்களும், பா. ரா. தாமஸ் அவர்களும் மாயவரம் ஏ. வி. சி. கல்லூரி மூடப்பட்டுள்ளது குறித்து கவன ஈர்ப்பு முன்னறிவிப்பு கொடுத்துள்ளார்கள்.

**திரு. ப. மாணிக்கம் :** ஒத்திவைப்புத் தீர்மானத்தின்போது இடையிலே விவாதம் இல்லாததால் நான் அமர்ந்துவிட்டேன். என்னுடைய கட்சியைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் அமைச்சர்கள் பேசியிருக்கிறார்கள் என்று சொல்லி மத்திய அமைச்சர் திரு. சேத்தி அவர்கள் பேசிய கருத்துக்கு ஒத்த முறையில் பேசியதாக உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கருத்து சரியல்ல.

(திரு. இராமமூர்த்தி இருக்கையிலிருந்து எழுந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திரு. இராமமூர்த்தி அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். தலைவர் என்ன சொல்கிறார் என்பதைக் கேட்ட பிறகுதான் தாங்கள் எழ வேண்டும். உறுப்பினர் பேசியதற்கு பிறகு நீங்கள் பேசலாம்.

**திரு. க. இராமமூர்த்தி :** உறுப்பினர் பேசுவது ரெக்கார்டு ஆகிறது. அதற்காகத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவசியப்பட்டால் ரெக்கார்டிலிருந்து நீக்க எனக்கு உரிமையுண்டு.

**திரு. ப. மாணிக்கம் :** கம்யூனிஸ்ட் அமைச்சர்கள் பேசினார்கள் என்று உறுப்பினர் சொன்னதை ' எக்ஸ்பன்ஞ் ' பண்ண வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திரு. மாணிக்கம் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்கிறேன். எந்த விதியின்கீழ் இப்போது அவர்கள் இதை எழுப்பினார்கள்? இப்போது சந்தர்ப்பம் கிடையாது. உட்கார வேண்டும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

" 7—1—1980 முதல் மாயவரம் ஏ. வி. சி. கல்லூரி காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளதால், மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது குறித்து ".







**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, மாயூரம் ஏ.வி.சி. கல்லூரிக்கு 16-11-1979 முதல் 12-12-1979 வரை விடுமுறை (விண்டர் வெக்கேஷன்) விடப்பட்டது. பிறகு விடுமுறை 17-12-1979 வரை நீட்டிக்கப்பட்டது. 17-12-1979 முதல் 20-12-1979 வரை கல்லூரி நன்றாகப் பணியாற்றியது. என்றாலும் எல்லா மாணவர்களும் 7-1-1980 வரை விடுப்பு கேட்டு ஆர்ப்பரித்தனர். 21-12-1979 மேலும் விடுப்புகளைக் கேட்டு மாணவர்கள் வகுப்புகளுக்கு வரவில்லை. எனவே மாணவர்களின் கோரிக்கை ஏற்கப்பட்டு கல்லூரியை 31-12-1979 அன்று திறக்க தீர்மானிக்கப்பட்டது. ஆனால் 31-12-1979 அன்றும் மாணவர்கள் வரவில்லை. கல்லூரிப் பேரவையின் சார்பில் 18-1-1980 அன்றுதான் கல்லூரி திறக்கப்படும் என்று மாணவர்களே அறிவித்துள்ளனர். கல்லூரி முதல்வர் மாணவர்களை கல்லூரிக்கு வரக் கோரி 4-1-1980 அன்று ஒரு சுற்றறிக்கை அனுப்பினார். இதன் பயனாக 7-1-1980 அன்று சில மாணவர்கள் கல்லூரிக்கு வந்தனர். எனவே 8-1-1980 முதல் பட்டப்படிப்பு வகுப்புகளை மட்டும் மூடிவிட்டதாக முதல்வர் அறிவித்துள்ளார். முதுகலைப்பட்ட வகுப்புகளைக் கொண்டு கல்லூரி நடைபெற்றதாகவும் முதல்வர் தெரிவித்துள்ளார். மேலும் முதல்வர் தமது கடிதத்தில் அதிகமாக விடுமுறை கோர வேண்டாம் என்று தமது கோரிக்கையை எவ்வளவு வலியுறுத்தியும் மாணவர்கள் ஏற்காததினால்தான் இந்நிலை ஏற்பட்டது என்றும் கூறியுள்ளார். மூடியிருந்த காலங்களிலும் முதுகலை வகுப்புகள் நடைபெற்றன. எனினும் கல்லூரி 24-1-1980 அன்று திறக்கப்பட்டு தற்போது ஒழுங்காக நடைபெற்று வருகிறது.

(பிற்பகல் 5-10)

## 6. மேலவை விதி 82-ன் கீழ் அமைச்சரின் விவர அறிக்கை.

### வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட காவல் துறையினர் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன்னவர் அவர்கள் விதி 82-ன் கீழ் ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பில் சில முக்கியமான அறிக்கைகளை வெளியிட அனுமதிக்க வேண்டுகிறேன். காவல் துறையைச் சார்ந்த ஒரு பிரிவினர் அண்மையில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதும், அதன் காரணமாக அவர்கள்

வேலை நீக்கம் செய்யப்பட்டதும் அவை உறுப்பினர்கள் அறிந்ததே. அவர்களில் பெரும்பான்மையோர் மீண்டும் வேலையில் எடுத்துக்கொள்ளப் பட்டார்கள். இன்னும் மீதம் உள்ள ஏறத்தாழ 700 பேர் வேலை நீக்கத்தில் இருந்து வருகிறார்கள். மிகக் கடுமையான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான சிலரைத் தவிர, மற்ற அனைவரையும் ஏறத்தாழ 600-க்கு மேற்பட்டவர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்த அரசு முடிவு செய்துள்ளது. அவர்கள்மீது உள்ள குற்றங்களைப் பரிசீலனை செய்து முடிவு எடுக்க டைரக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ், மூன்று இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ் ஆகியோர் அடங்கிய, நான்கு பேர்களை உள்ளடக்கிய குழு ஒன்று நியமிக்கப்படுகிறது. அந்தக் குழு ஆய்வு செய்து தக்க முடிவுகள் எடுக்கும். காவலர்கள் கிளர்ச்சி நடைபெற்றபோது, அதில் ஈடுபடாமல் கடமையுணர்வோடு பணியாற்றிய காவலர்களுக்கு ஊதிய உயர்வு, அட்வான்ஸ் இன்கிரிமென்ட் போன்றவை அளிக்க அரசு முடிவு செய்திருக்கிறது. இந்த அறிவிப்பை மன்ற உறுப்பினர்கள் மனதார வரவேற்பார்கள் என்று நம்புகிறேன். மாண்புமிகு தலைவர் அவர்களுடைய அனுமதியோடு இங்கே இந்த அறிவிப்பை வெளியிடுகிறேன்.

### 7. 12—2—1980 ஆம் நாளன்று கேள்வி நேரம் கைவிடப்படல்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டமன்ற மேலவை விதி 22-ன் கீழ், 12-2-1980 ஆம் நாளன்று கேள்வி நேரம் கைவிடப்படலாம்"

என்று முன்மொழிகிறேன்.

**மண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்ற மேலவை விதி 22-ன் கீழ், 12-2-1980 ஆம் நாளன்று கேள்வி நேரம் கைவிடப்படலாம்".

**தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.**



### 8. அரசின் சட்ட முன்வடிவுகள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கடன் நிவாரணம்பற்றி இரண்டு சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்யப்பட இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு சட்ட முன்வடிவுகள் மீதும் பொதுவாகப் பேசலாம். ஆய்வு செய்த பிறகு, தனித்தனியாக எடுத்துக்கொண்டு நிறைவேற்றலாம்.

**(1) தமிழ் நாடு 1980 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 2/1980.)**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1980 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1980) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1980) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

ஆறு சட்ட முன்வடிவுகள் இன்று விவாதிக்கப்பட இருக்கின்றன. உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைத்து எல்லா சட்ட முன்வடிவுகளும் இன்று நிறைவேற்றப்பட வேண்டும்.

**திரு. கோ. சி. மணி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த இரண்டு கடன் நிவாரணச் சட்டங்களுமே ஏறத்தாழ ஒன்றையொன்று தழுவியிருப்பதால், இரண்டு சட்ட முன்வடிவுகளின் மீதும் என்னுடைய கருத்துக்களை ஒன்றாகச் சொல்கிறேன். இந்த சட்ட முன்வடிவுகளின் அடிப்படையே தவறாக அமைந்திருக்கிறது என்று குறிப்பாக நான் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு குடும்பத்தில் ஐந்து பேர் இருந்தால், எத்தனை பேர் வருவாய் உடையவர்களாக இருந்தாலும், அத்தனை பேர்களுடைய வருவாயையும் ஒன்றாகக் கூட்டி, அதை ஆண்டு வருமானமாகக் கணக்கிட்டு, 4,799 ரூபாய் ஆண்டு வருமானம் அந்தக் குடும்பத்திலுள்ள அங்கத்தினர் எல்லோருமே சேர்ந்து வருவாய் பெறும் நிலை இருந்தால், அவர்கள் நிவாரணம் பெற தகுதி பெறுவதாகவும், 4801 ரூபாய் வருமானம் இருந்தால், அவர்கள் அந்தத் தகுதியை இழந்து விடுவதாகவும் நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிறது. இன்னொன்று, இதற்கு நிவாரணம் தேடி மனு கொடுக்கவேண்டியது வழக்கம்போல் தாசில்தாரிடம்தான். மனு எதற்காக இருந்தாலும், ஒரு தாசில்தார் அந்தஸ்துக்குக் குறையாதவர்கள் அதை விசாரிப்பார்கள் என்று சட்டத்திலே போட்டுவிட்டு, அதற்கென்று தனியாக

@ 183 192 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

ஒரு தாசில்தார் போடாமல், எல்லாவற்றையுமே ஒரு தாசில்தார் கவனிக்கும் நிலைமைதான் இப்போது இருக்கிறது. கள்ளு சாராயம் குடிக்க பெர்மிட் வழங்குவதும் அதே தாசில்தார், கடன் நிவாரணம் அளிக்க மனுவைப் பெற்றுக் கொண்டு உத்தரவிடுவதும் அதே தாசில்தார், ரெவின்யூ வசூல் செய்வதும் அதே தாசில்தார், டியான்ட் கட்டுவதும் அதே தாசில்தாரிடம், கர்ணத்திடம் சென்று கணக்கைப் பரிசீலிப்பதும் அதே தாசில்தார், ஊரிலே யாராவது வெட்டினால் 144 தடையுத்தரவு அனவுன்ஸ் பண்ணி அமுல்படுத்துவதும் அதே தாசில்தார். இப்படி எல்லாவற்றையும் தாசில்தாரே பார்க்கும் நிலை இருக்கிறது. சட்டம் இயற்றும்போது, எல்லாவற்றையும் தாசில்தாருக்குக் குறையாத அந்தஸ்து உடையவர்கள் விசாரிப்பார்கள் என்று போட்டுவிட்டு, அந்த அந்தஸ்து உடையவர் ஒருவரை மட்டும் வைத்துவிட்டு, அவரே இந்த வேலைகள் அனைத்தையும் செய்ய வேண்டும் என்று எதிர் பார்ப்பது எப்படி? 'ஓல்ட் ஏஜ் பென்ஷன்', கடன் நிவாரணம் இப்படி வேறு எந்த வேலையாக இருந்தாலும், வருவாய்த் துறையிலே இருக்கும் தாசில்தார்தான் பொறுப்பு என்று இருக்கிறது. ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக அந்தஸ்து குறையாத தாசில்தார்களைப் போட்டிருக்கிறோமா என்றால் இல்லை. லோன் தாசில்தார் என்று ஒருவர் இருக்கிறார், இல்லையென்று சொல்லவில்லை. அரசாங்கம் கொடுக்கும் லோனைக் கொடுக்கவும், அரசாங்கம் கொடுத்த லோனைத் திரும்ப வாங்கவும் அவர் இருக்கிறார். ஆனால், வெளியே இருப்பவர்கள் வாங்கிய வட்டிக் கடன் இருக்கிறதே, அதற்கு அவர் தாசில்தார் இல்லை. அதற்கு அந்த வட்டிக் கடைக்காரன்தான் தாசில்தார். அப்படிச் செய்வது சரியா, தவறா என்பதை நீதிபரிபாலனம் செய்ய வேண்டிய அதிகாரத்தை தாசில்தாருக்குக் கொடுக்கிறோம். ஒரு நீதிமன்றத்திலே, ஒரு சிவில் கோர்ட்டிலே விசாரிக்க வேண்டிய காரியத்தை அவருக்குக் கொடுக்கிறோம். ஏற்கனவே இருக்கும் எல்லா வேலைகளையும் அவரே செய்யும்போது, இதையும் ஒரு வேலையாகக் கவனிக்க அவரிடம் கொடுக்கிறோம். இதற்கிடையிலே அதற்கு நிர்ணயிக்கப் படுகிற கெடு காலாவதியாகி விடுகிறது. அதோடுகூட இந்தச் சட்டம் அமுல் படுத்தப்படும்போது, அதை அமுக்கியும், திருத்தியும், அதற்கு முன்னாலே அவர்கள் உங்களிடம் அதற்கு மனு கொடுத்து, நீங்களும் அவர்களும் ஒன்றாக உட்கார்ந்து பேசி, இதை இப்படிச் செய்யலாமா, அதை அப்படிச் செய்யலாமா என்றெல்லாம் யோசித்து அவ்வப்போது சட்டங்கள் திருத்தப்படுகின்றன. இது எனக்குக் கிடைத்த தகவல். இல்லை என்றுகூட மறுக்கலாம். இப்படி ஒரு சட்டத்தை எத்தனை தரம் திருத்துவது, எத்தனை தரம் போடுவது? இருப்பது ஒரே பிரச்சினை, கடன்சுமை தாங்க முடியவில்லை, முதலுக்கு மேலே வட்டியை வாங்கிவிட்டார்கள், வட்டிக்கு வட்டி அதிகமாகப் போகிறது. முதல் எவ்வளவு வாங்கினானோ அதைப்போல இரண்டு மடங்கு வட்டி வாங்கி விட்டான். இவ்வளவு வட்டி கொடுத்து, இனி முதலும் கொடுக்க வேண்டுமா?



வேண்டாமா? இதுதான் பிரச்சினை. இந்தப் பிரச்சினைக்கு சட்டம். ஆனால், ஒரு தடவை ஒன்று சொல்வது, இன்னொரு தடவை வேறொன்று சொல்வது. வட்டியைக் கொடுத்துவிட்டு, முதலைக் கொடுக்க வேண்டாம் என்று சொல்வதா? அல்லது முதலைக் கொடுத்துவிட்டு வட்டியைக் கொடுக்க வேண்டாம் என்று சொல்வதா? எத்தனை திருத்தம்? இப்போது கொண்டு வரப்பட்டிருக்கும் இந்தத் திருத்தம் கூட பஞ்சாமிருதம் போலத்தான் இருக்கிறது. வெளிப்படையாகப் பார்த்தால், 'ஒரு கடன் நிவாரணம்' என்று தோன்றுகிறது. பத்திரிகைகளுக்கு நல்ல விளம்பரம். வானொலிக்கு நல்ல செய்தி. ஒரே தித்திப்பாக இருக்கிறது. ஆனால் உள்ளே புகுந்து பார்த்தால், மறுபடியும் அந்தத் தாசில்தாரிடம்தான் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. எத்தனை வட்டிக் கடைகள் ஒரு தாலுக்காவிலே இருக்கின்றன? அத்தனை கடைகளிலேயும் போக ஒரு தாசில்தாரால் முடியுமா? லோன் தாசில்தாருக்கே இப்போது இருக்கும் வேலைப்பளு அதிகம். தக்காவிக் கடன் தள்ளப்பட்டிருக்கிறது. அந்த வேலையை அவர் பார்க்கவில்லை. வோட்டர் லிஸ்ட் தயாரிப்பதும் தாசில்தார்தான். அதற்குப் பிறகு எலக்ஷன் வந்தால், அந்த வேலையையும் அவர்தான் பார்க்கிறார். நான் ஒன்று சொல்கிறேன், 'தாசில்தார் அந்தஸ்துக்குக் குறையாத' என்ற வரி இருக்கிறதே, அதை மாற்றினால் நல்லது என்று சொல்லிக்கொள்கிறேன். தாசில்தார் அந்தஸ்துக்குக் குறையாதவர் யார் என்று ஒருவரை நிர்ணயம் செய்து, அவரிடம் இந்த வேலையை ஒப்படைக்க வேண்டும். ஆர்.டி.ஓ., டெபுடி கலெக்டர் அந்தஸ்துக்குக் குறையாமல் இருக்க வேண்டும் என்று போட்டு, அப்படி ஒரு அதிகாரியை நியமித்து, இந்த வேலை முடியும் வரையில் அவர்தான் இருக்க வேண்டும், முடிந்த பிறகு அவர் போய்விடுவார் என்ற நிலைமையை உருவாக்க வேண்டும். இல்லாவிட்டால், இதனால் எந்தவிதமான நன்மையும் ஏற்படாது. பொதுத் துறையிலே இருக்கும் நாங்கள் அத்தனை பேரும் இப்போதிருக்கும் நிலைமையில் தாசில்தாரிடம் செல்ல வேண்டியிருக்கிறது. அவரைப் பார்க்க எங்களுக்குப் பாவமாக இருக்கிறது. 'ஓல்ட் ஏஜ் பென்ஷன்', இதற்கு, அதற்கு என்று இப்படி எல்லாவற்றுக்கும் அவரிடம்தான் போவோம். எல்லாவற்றையும் அவர் எப்படிச் செய்ய முடியும்? ஆகவே ஆர்.டி.ஓ. அல்லது டெபுடி கலெக்டர் அந்தஸ்துக்குக் குறையாமல் இருப்பவர்களிடம் இந்த மனுவைக் கொடுக்கலாம் என்று இருக்க வேண்டும். 4,800 ரூபாய் என்று என்ன மதிப்பை அடிப்படையாகக் கொண்டு போடுகிறார்கள்? சதாரணமாக இப்போது காப்பி 50 காசு விற்கிறது. ஒரு சட்டை சலவை செய்ய 50 காசு. ஐந்து காசுக்கும், 10 காசுக்கும் சட்டை சலவை செய்த காலத்திற்கும் இன்றைக்கும் எவ்வளவு வித்தியாசம்? அவ்வளவுதூரம் பணத்திற்கு

மதிப்பு இல்லாமல் இருக்கிறது. ரூ. 4,800 என்று வைத்தால், ஒரு வாத்தியார் இருந்தால், அவர் வாங்கும் வருமானம் அவருடைய செலவுக்குச் சரியாகிவிடும். அதற்குப் பிறகு இருக்கிற வட்டியை அவர் எப்படி கொடுக்க முடியும்? அவருக்கு நிவாரணம் கிடையாது. வருமான அளவு இவ்வளவு குறைவாக இருப்பது நல்லதல்ல என்பதை நான் சார்ந்திருக்கிற இயக்கத்தின் சார்பாக இங்கே தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதே நேரத்தில் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன், அரசு சட்டம் போடுவதால் கூட புண்ணியம் இல்லை. சட்டம் போடும்போது, அதைச் சிறப்பாக அமுல்படுத்த வேண்டும். ஆனால், ஆமை வேகத்தில்தான் காரியங்கள் நடைபெறுகின்றன. இந்தச் சட்டங்களை அமுல்படுத்துவதற்குள் நாங்கள் அலுத்துப்போய், நாங்களே பேரம் பேசி முடிவு செய்யும் நிலைமை தான் இருக்கிறது. இந்தக் கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு, இப்படிச் சட்டம் போடுவது இது மூன்றாவது முறை. இந்தச்

(மாற்றுத் தலைவர் டாக்டர் இரா. சனார்த்தனம் தலைமை.)

(பிற்பகல் 5-20)

சட்டமாவது அமுல்படுத்தப்படுமா என்பது கூட சந்தேகம். இப்படி நெருக்கி நெருக்கி, சட்டம் போட்டு, சட்டம் போட்டு, பிறகு அதில் மாற்றம் வந்து வந்து, இப்போது ஒரு 'காம்பரமைஸ்' ஆகி இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். பவுன் விலை அதிகமாக விற்கிற காலத்தில் அடகு வைத்த நகைகளைத் திரும்ப வாங்கி, பலர் இன்றைய தினம் விற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் ஒரு குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ. 4,800 இருந்தால், இந்தச் சலுகை இல்லை என்று போட்டிருப்பதை அரசு மறு பரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வருமான வரம்பை உடனடியாக மாற்றியமைக்க வேண்டும். ஒருவருக்கு ஆண்டு வருமானம் ரூ. 4,800 என்று போட்டால்கூட, அது அதிகமானது என்று கருதுகிறேன். காரணம் இந்தத் தொகை ஒருவரின் ஆண்டுச் செலவுக்கேகூட போதாது. அது மட்டுமல்ல, இந்த அளவு வருமானம் வந்தும், அது போத வில்லை என்ற காரணத்தால்தானே, அவர்களெல்லாம் கடன் வாங்குகிறார்கள் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். சக்தி இருக்குமானால் அவர்கள் ஏன் கடன் வாங்கப் போகிறார்கள்? அதோடு திருப்பிக் கொடுக்க சக்தி இருந்தால், இதுவரை கொடுக்காமல் இருக்க மாட்டார்கள். இப்படிப்பட்ட சட்டம் வருவதற்கு முன்பே அவர்கள் கொடுத்திருப்பார்கள். அவர்களால் கொடுக்க முடியாது என்பதை நாமெல்லாம் உணர்ந்ததால்தானே, இந்தப் பிரச்சினையை எடுத்துக்கொண்டு ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே இவைகளையெல்லாம் அனுசரித்து சரியான நிவாரணம் காணவேண்டும்



என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். குறைந்தபட்சம், இதுவரை அவர்கள் செலுத்திய வட்டியைக் கணக்கிட்டு, முதலுக்கும் வட்டிக்கும் சரியாகி விட்டிருந்தால், அவர்களுக்கெல்லாம் நகைகளைத் திருப்பித் தரும்படி உத்தரவிட வேண்டும். அல்லது வட்டியைச் செலுத்தாமல் முதலை மட்டும் செலுத்தி, நகைகளைத் திரும்பப் பெறுகிற நிலையை உருவாக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். இவைகளைச் செய்து இந்தச் சட்டத்தை உடனடியாக அமுல் நடத்த சிறப்பு அதிகாரிகளை நியமித்து, அவர்களுக் கெல்லாம் அலுவலக வசதியைச் செய்து கொடுத்து, அவர்களுக்கெல்லாம் தனி அலுவலகத்தை உண்டாக்கி, ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் இந்தப் பணிகளை யெல்லாம் முடித்துவிட வேண்டும் என்று அரசு உத்தரவு போட வேண்டும். இவைகளையெல்லாம் இந்தச் சட்டத்தில் இடம் பெறச் செய்ய வேண்டும் என்று தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

* **திரு. ஆ. நல்லசிவன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, அவையின் முன்னுள்ள 2/1980 மற்றும் 13/1980 ஆகிய இரண்டு மசோதாக்களையும் நான் பொதுவாக வரவேற்கிறேன். அதே நேரத்தில் சில திருத்தங்களையும் அந்த இரண்டு மசோதாக்களைப் பொறுத்தவரையில், கூறிக்கொள்ளவும் விரும்புகிறேன்.

2/1980 என்ற மசோதாவைப் பொறுத்த வரையில், உண்மையில் கடன் கொடுக்க வேண்டுமா இல்லையா என்பதைப்பற்றி நடத்த வேண்டிய விசாரணையை தற்போது நீக்கியிருப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால் ஏற்கெனவே, விசாரணைக்கு உட்பட்டிருக்கும் மொத்த வழக்கு எண்ணிக்கை 70 லட்சம் என்று சொல்லப்படுகிறது. இந்த 70 லட்சம் கேஸ்களும் தற்போது நிலுவையில் உள்ளன. இந்த நிலையில், புதிய சட்டத் திருத்தத்தில் 70 லட்சம் கேஸ்களிலும் கடன்பட்டவர்கள் 'அபிடவிட்டு' தாக்கல் செய்து, தங்களுடைய வருமானம் பற்றிய சர்ட்டிபிகேட்டையும் தாக்கல் செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியென்றால், இந்த 70 லட்சம் கேஸ்களிலும் இன்கம் சர்ட்டிபிகேட் கொடுப்பதற்கு எத்தனை ரெவின்யூ அதிகாரிகள் தேவையாக இருக்கும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, இது அவசியமில்லாத ஷரத்து என்றுதான் நான் நினைக்கிறேன். இந்தச் சட்டத்தின்படி, தனக்கு நிவாரணம் கிடைக்க வேண்டிய பாத்தியதை உண்டு என்று கடன்பட்டவர் ஒருவர் மனுப்போட்டால், அப்படிக் கடன் பெற்றவருக்கு அதிகமான வருமானம் இருக்கிறது என்று நிரூபிக்கும் பொறுப்பு கடன் கொடுத்தவருக்குத்தான் இருக்க வேண்டும் என்று மாற்ற வேண்டும். இப்படிச் செய்துவிட்டால், 70 லட்சம் கேஸ்களிலும் 'இன்கம் சர்ட்டிபிகேட்' தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் இருக்காது. விசாரணையைக் கைவிட்டு

விட்டோம் என்று சொல்லிவிட்டு, 'அபிடவிட்டு' தாக்கல் செய்ய வேண்டும், 'இன்கம் சர்ட்டிபிகேட்' வாங்கி வந்து தாக்கல் செய்ய வேண்டும் என்று கடன் பெற்றவர்களின்மீது பொறுப்பைச் சுமத்துவதால், மீண்டும் மீண்டும் அவர்களை நாம் இழுத்தடித்துக் கொண்டிருப்பதாகத்தான் பொருள்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள், தாசில்தார்களுக்குள்ள பல்வேறு வேலைகளைப்பற்றி மிக விளக்கமாக இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

பல்வேறு பொறுப்புகளைக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கும் தாசில்தார் பொறுப்பிலேயே இதையும் கொண்டுபோய் வைக்க வேண்டும் என்றால், சீக்கிரமாக எந்த வேலையும் நடக்காது என்பதுதான் உண்மை. எனவே 2, 3 தாலுக்காக்களைச் சேர்த்து இதற்கென்று ஒரு தனி அதிகாரியைப் போடுவதே நல்லது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதைப் போலவே விசாரணையைக் கைவிட்டதன் காரணமாக 'இன்கம் சர்ட்டிபிகேட்' தாக்கல் செய்யும் பொறுப்பிலிருந்து கடன்பெற்றவர்களை விடுவித்து அதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பை கடன் கொடுத்தவர்கள்மீது சுமத்த வேண்டும். இல்லாவிட்டால், இத்தனை வழக்குகளும் சீக்கிரத்தில் பைசல் ஆகாது.

அடுத்து, 13/1980 இலக்கமிட்ட மசோதாவைப் பொறுத்த வரையில், ஒரு குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ. 4,800 என்று போட்டு அந்த வருமானத்திற்கு மேற்பட்டவர்களுக்கு இந்தச் சலுகை இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவையின் முன் தற்போது இரண்டு மசோதாக்களை அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது. அதில் ஒன்றில் (2/1980-ல்) வருஷ வருமானம் ரூ. 2,400-க்குக் குறைவாக இருப்பவர்களுக்கு மட்டும் சலுகை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த 13/1980 மசோதாவில் ஒரு குடும்பத்திற்கு ஆண்டு வருமானம் ரூ. 4,800-க்குக் குறைவாக இருந்தால் மட்டும் சலுகைகள் உண்டு என்று சொல்லப்பட்டிருக்கிறது. கேட்டால், 2/1980 மசோதா 1976 ஆம் ஆண்டில் ஜனாதிபதி ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட சட்டத்தின் தொடர்ச்சி என்று சொல்வது சரியில்லை. என்னைப் பொறுத்த வரையில், இரண்டு சட்டத் திருத்தங்களிலும் ஒரு குடும்பத்திற்கு ஆண்டு வருமானம் ரூ. 6,000-க்குக் குறைவாக இருந்தால், இந்த நிவாரணங்கள் உண்டு என்று அரசு சொல்ல வேண்டும். ரூ. 6,000 ஆண்டு வருமானம் என்பது மிகக் குறைந்தபட்ச வருமானம் ஆகும். ஒரு குடும்பத்தில் இரண்டு பேர் வேலை செய்தால், இந்த வருமானம் வந்துவிடும். முனிசிபாலிடியில் துப்புரவுத் தொழில் செய்யும் ஒரு கணவன் மனைவியின் ஆண்டு வருமானம் ரூ. 6,000-க்கு மேலேதான் இருக்கும். எனவே உச்சவரம்பு ரூ. 4,800 என்றிருப்பதை ரூ. 6,000 என்று உயர்த்த வேண்டும். அதைப்போலவே ஜனாதிபதி காலத்திய சட்டம்





என்று சொல்லிக்கொண்டு, முந்தைய சட்டத்தில் உச்சவரம்பு ரூ. 2,400 என்று வைத்திருப்பதையும் மாற்ற வேண்டும். ஜனாதிபதி காலத்தில் போடப்பட்ட சட்டம் என்றால், அதை மாற்றக்கூடாது என்று சொல்ல முடியாது. எனவே அந்தச் சட்டத்தில் உள்ள உச்ச வரம்புத் தொகையான ரூ. 2,400-யும் ரூ. 6,000 என்றே உயர்த்த வேண்டும். அந்த வகையில் இரண்டு மசோதாக்களிலும் ஒரே தொகையையே குறிப்பிட வேண்டும். அதைச் செய்யாமல் பிடித்து வைத்த பிள்ளையார் போல் 2,400 ரூபாய் என்பது அப்படியே இருக்க வேண்டும் என்பது சரியல்ல.

அடுத்து, அவசரச் சட்டம் அமுலுக்கு வந்த தேதியான டிசம்பர் 13 ஆம் நாளிலிருந்து 6 மாத காலத்திற்கு இந்தச் சட்டம் இருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை மாற்றி, இந்த மசோதா சட்டமான காலத்திலிருந்து 6 மாத காலத்திற்கு அமுலில் இருக்கும் என்று திருத்தியமைக்க வேண்டும்.

அதோடு, மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் சொன்ன மாதிரி, இவைகளைக் கவனிப்பதற்கு என்று தனி அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்பதையும் வற்புறுத்த விரும்புகிறேன். அதைப்போலவே ரூ. 6,000 வரை விதிவிலக்கு அளிக்கப்படும் என்று இந்த மசோதாவில் வழிவகை செய்யப்பட வேண்டும். 'அஃபிடவிட்டு' மற்றும் வருமான சர்ட்டிபிகேட்டைத் தாக்கல் செய்வதையும் கடன் கொடுத்தவர்களின் பொறுப்பில் விட வேண்டும் என்று இப்படிப்பட்ட ஷரத்துக்களை இந்த மசோதாவில் சேர்க்க வேண்டும் என்று சொல்லி, பொதுவாக வரவேற்று, அமைகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : மேலவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மசோதா ஒரு நல்ல பலனைக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டிருக்கிறது. சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கிற ஏழை எளிய மக்களுடைய சங்கடங்களைப் போக்குவதற்கு வழி வகை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மசோதாவை வரவேற்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

ஆனால் அதே நேரத்தில், இந்த மசோதாவின் செயல் முறைகளையும், இந்த மசோதாவின் மூலம் நாம் எதிர்பார்க்கிற நன்மைகளை ஏழை எளிய மக்கள் பெறுவதற்கு வாய்ப்பில்லாமல் செய்யப்பட்டிருக்கிற நடைமுறைகளையும் பார்க்கும்போது, இந்த மசோதாக்கள் பாதிக்கப்பட்ட மக்களின் குறைகளை, சங்கடங்களைப் போக்குவதில் அதிகமாக உதவப் போவதில்லை என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியது என்னுடைய பொறுப்பு என்று கருதுகிறேன்.

[திரு. க. இராமமூர்த்தி] [1980 பிப்ரவரி 11

இந்த மசோதாவைப் பொறுத்தவரையில், இது நெருக்கடி காலத்தில் கொண்டுவரப்பட்டது என்பது மட்டுமல்ல, பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் 20 அம்சத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்ற எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளில் இதுவும் ஒரு அரிய நடவடிக்கை என்ற வகையில், தமிழகத்தில் ஏழை எளிய மக்கள் கடன் பளுவிலிருந்து மீள்வதற்காகவும், வட்டிக் கடைக்காரர்களிடம் தங்கள் பொருட்களை அடகு வைத்துவிட்டு தவித்தவர்களுக்கு துணை செய்வதற்காகவும் கொண்டுவரப்பட்டது என்பதை இந்த நேரத்தில் பெருமிதத்தோடு நான் எண்ணிப் பார்க்கிறேன்.

இந்த மசோதாவில் இருக்கிற மிகப் பெரிய சங்கடம் கடன்பட்டவர்கள் 'அஃபிடவிட்டு' போட வேண்டும் என்பதுதான். இப்போது அடகு வைக்கப்பட்ட பொருள்கள் குறித்து மார்வாடிக் கடைக்காரர் அல்லது அடகுக் கடைக்காரர் தரும் சிட்டு அல்லது ரசீது தொலைந்து விட்டால், சுலபமாக ஊர் மணியக்காரரிடமிருந்து சர்ட்டிபிகேட் வாங்கி வந்தால், போதுமானது என்று இருக்கிறது. சில இடங்களில் சட்ட மன்றப் பேரவை அல்லது மேலவை உறுப்பினர்கள் அல்லது வேறு பொறுப்பானவர்களிடம் சர்ட்டிபிகேட் வாங்கித் தந்தால் போதும் என்று ஏற்றுக்கொண்டு நகைகளைத் திரும்பக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இப்போது நகையை மீட்க, அல்லது கடனிலிருந்து மீட்பதற்கு ஒரு 'அஃபிடவிட்' தாக்கல் செய்ய வேண்டும் என்று சொல்லுகிறபோது, குறைவான தொகைக்கு அடகு வைக்கிற ஏழை எளிய மக்கள் தங்கள் நகைகளை மீட்பதற்கு மேற்கொள்ள வேண்டிய சங்கடத்தை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். 'அஃபிடவிட்' தாக்கல் செய்வதற்கு அவர்களுக்கெல்லாம் எவ்வளவு செலவாகும் என்பது மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்

(பிற்பகல் 5-30)

அவர்களுக்கே மிக நன்றாகத் தெரியும். ஆகவே இந்த 'அஃபிடவிட்' முறை அவசியம்தானா, இதை வலியுறுத்த வேண்டுமா என்பதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். 'அஃபிடவிட்' என்பது, ஒருவருடைய வருமானம் இவ்வளவுதான் என்பதை உறுதிப்படுத்துவதற்கான ஒரு சான்றிதழ். ஒருவர் தன்னுடைய கணக்[illegible]க் காட்டுகிறார். அவருடைய வருமானக் கணக்குச் சில நேரங்களில் தவறா[illegible]ப் போவதுண்டு. அப்படித் தவறாகப் போனால், எற்கெனவே கடன்கார[illegible] இருந்த அவன் தன்னுடைய வருமானத்தைக் குறைத்துப் போட்டுவிட்[illegible]ர் என்பதற்காக தண்டனை அளிப்பது என்பது எவ்வளவு தூரம் நியாயம[illegible]இருக்கும் என்பது எனக்குப் புரியவில்லை. ஆகவே ஒருவன் தப்பா[illegible] அஃபிடவிட்'டைப் போட்டு



1980 பிப்ரவரி 11] [திரு. க. இராமமூர்த்தி]

விட்டால், அதற்காக இந்த மசோதாவின் பிரிவு 5-ன்படி தண்டனை அளிக்கக் கூடிய நிலை இருப்பது அவசியம்தானா என்பதை இந்த நேரத்திலே சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மசோதா 1979 ஆம் வருடம் டிசம்பர் மாதம் 13 ஆம் தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்கு உயிருடன் இருக்குமென்றும் அதற்குப் பிறகு முடிவடைந்து விடும் என்றும் அறிவித்திருக்கிறார்கள். சட்டங்களை நாம் படித்தவர்களுக்காக மட்டும் உருவாக்குவதில்லை. சட்டம் என்றால், என்னவென்றே தெரிந்து கொள்ளாமல் நடமாடுகின்ற மக்களுக்காகவும் சேர்த்துத்தான் சட்டங்களை நிறைவேற்றுகிறோம். ஆகவே அக்கடமிக் (Academic) என்ற அளவிலே வார்த்தைக்கு வார்த்தை இப்படித்தான் இருக்க வேண்டுமென்ற அளவிலே சட்டங்களை உருவாக்குவது நல்லதல்ல. மனிதர்களுக்காகத்தான் சட்டங்கள்; சட்டங்களுக்காக மனிதர்கள் அல்ல. ஆகவே அந்தத் தேதியை இந்த மசோதாவிலே குறிப்பிட்டிருக்கலாம். ஆனால் அப்படி அறிவிக்கவில்லை. ஆறு மாதங்களுக்கு மட்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இனிமேல் இதை அரசுத் தரப்பிலே மாற்றிக்கொள்ள மாட்டார்கள். ஆகவே தயவு செய்து தேதியை விளம்பரப்படுத்துங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். 1979 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ஆம் தேதியிலிருந்து ஆறு மாதங்கள் என்று சொல்லிவிட்டால், கிராமப்புறங்களில் இருக்கக் கூடியவர்களுக்குத் தெளிவாகத் தெரியாது. ஆகவே முறையாக விளம்பரப்படுத்துவது அவசியம் என்று கருதுகிறேன். அமைச்சர் அவர்கள் இதை ஏற்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, இந்தப் பொறுப்பை தாசில்தாரிடத்தில் ஒப்படைத்திருக்கிறார்கள். அவர்கள் மேல் எனக்கு எந்தவிதமான கோபமோ, வருத்தமோ கிடையாது. அவர்களிடம் இந்தப் பணியை ஒப்படைத்தால், நிச்சயமாக அவர்களால் சிறப்பாக, முறையாக, நாம் எதிர்பார்க்கிற அளவுக்கு நிறைவேற்ற முடியாத சூழ்நிலைகள், சங்கடங்கள் இருக்கின்றன. மனம் விட்டுப் பேசுவதானால், என்னால் அதற்கான காரணங்களைச் சொல்ல முடியும். பல ஊர்களில், எலெக்ட்ரிசிட்டி லோன், இன்னும் மற்ற (லோன்கள்) கடன்கள் தேவைப்படுகிறபோது, வேறு ஏதாவது நிதியுதவி தேவைப்படுகிறபோது, அரசாங்க அதிகாரிகள் திடீரென்று சில செலவுகளைச் சந்திக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறபோது, தாசில்தார்தான் ஏற்பாடு செய்ய வேண்டிய அதிகாரியாக இருக்கிறார். அப்போது, எப்படியாவது ஏற்பாடு செய்ய வேண்டுமென்று, கையைவிட்டு பணத்தைச் செலவு செய்து, ஏற்பாடு செய்ய வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் அந்தந்த ஊர்களில் உள்ள பெரும்

பொறுப்பை வகிக்கக்கூடிய வட்டிக் கடைக்காரர்கள் சங்கத்தினர்தான், பெருமளவில் பல ஆயிரக்கணக்கான ரூபாய் அரசாங்கத்திற்குக் கடன் கொடுக்கிறார்கள். இது அரசாங்கக் கணக்குகளில் வர முடியாது. ஆனால் அவர்கள்தான் அரசாங்க சம்பந்தப்பட்ட செலவுகளுக்குக் கடன் கொடுக்கிறார்கள். பல நேரங்களில் இதை நான் நேரிடையாகவே கண்டிருக்கிறேன். இப்படி யார் வசூல் செய்கிறார்களோ அந்த அதிகாரிகளையே, அவர்கள் விரும்பத்தகாத தவறுகளைப் புரியும்போது நடவடிக்கை எடுக்கும் பொறுப்பை அந்த அதிகாரிகளிடமே ஒப்படைத்தால், அதை அவர்கள் முறையாகச் செய்ய முடியுமா ? ஆகவே டெபுடி தாசில்தாரிடம் இந்தப் பணியை ஒப்படைப்பதன் மூலம் நாம் நினைக்கிற பலன் ஏற்படுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்து, இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். நேரிடையாகவே அந்தச் சங்கடத்தை அனுபவித்தவன் என்ற முறையில் சொல்லுகிறேன். நகையை மீட்க விசாரணைக்காக வருகிறபோது, கிராமத்திலேயிருந்து வரும் கூலி வேலை செய்கிற ஏழை விவசாயி நாள் முழுக்கக் காத்துக் கிடந்த பிறகு, கடைசியாக இன்னுமொரு நாளைக்கு ஒத்தி வைக்கப்படுகிறபோது, இதைப் போல பத்து தடவைகள் ஒத்தி வைக்கப்படுகிறபோது, வட்டிக் கடைக்காரன் கேட்ட பணத்தைக் கொடுத்தே மீட்டுக்கொள்ளலாம் போல இருக்கிறதே என்ற எண்ணம் ஏற்படுகிறது. ஆகவே இந்த மசோதாவினுடைய நோக்கமே நிறைவேற இயலாமல் போகிறது. ஆகவே இந்த நிலைமைகளை மாற்ற முனைப்புத் தேவை. நெருக்கடி காலத்திலே ஆறு மாத காலம் தொடர்ந்து ஒரு தாசில்தாரிடம் நடந்து கொண்டிருந்தேன் ஒரு அரிசன பெண்மணிக்காக. ஆனால் முடியவில்லை. வாய்தா போடுகிற வகையில் அவர்களுக்கே சலிப்பு ஏற்பட்டு, கடைசியாக "வேறு வழியில்லை, ஆகவே நாங்களே பார்த்துக்கொள்ளுகிறோம்" என்று சொல்லி அவர்களாகவே போய்விட்டார்கள். நெருக்கடி காலத்திலேயே இந்த நிலை என்றால், இப்போது எப்படி இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே சில காரியங்களைச் செய்கிறபோது, முழுமையாகச் சட்டம் செயல்படுகிற வகையிலே செயல்படுத்த வேண்டும். வாய்தாக்கள் இத்தனை முறைதான் போட வேண்டுமென்ற உச்ச வரம்பு வைத்தாக வேண்டும். ஏனென்றால், தாசில்தாரிடம் இந்தப் பணியை ஒப்படைக்கிறபோது, அவர் விசாரணை செய்கிற வேளையில் திடீரென்று அமைச்சர் அந்த ஊருக்கு வந்துவிட்டார் என்றால், அல்லது வேறு சம்பவம் நடைபெற்றுவிட்டதென்றால், அவர் இந்தப் பணியை விட்டுவிட்டு அங்கு ஓட வேண்டிய நிலை ஏற்படும். வேறு வேலைகள் வருகிறபோது, அந்த வேலைகளை அவர்களால் விட்டுவிட முடியாது.



இந்தப் பொறுப்பைத்தான் ஒத்தி வைக்க முடியும். ஆகவே இந்த அளவிலே காரியங்கள் நடைபெறுகின்றன. மிகப் பெரும் அளவிலே கடன்பட்டவர்கள் இன்றைக்குத் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இதற்கென்றே ஒரு தனி அதிகாரியை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, ஒரு குறிப்பிட்ட கால வரம்பிற்குள் இந்தக் கடன் முடிந்து போக வேண்டும் என்ற அளவிற்குச் செயல்படுத்தினால்தான்; சிறந்ததாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடகு வைத்த பொருள்களை விற்பது என்பதைப் போல, வேறு ஒரு ஏமாற்று வேலை இருக்க முடியாது. கடையில் அடகு வைத்த மறு நிமிடமே விற்றுவிடுகிறார்கள். அதற்குப் பிறகு, ஆறு மாதங்கள், ஒரு வருடம், மூன்று வருடங்கள் கழித்து மீண்டும் நகையை மீட்கப் போனால், "உன்னுடைய நகை இவ்வளவுதான் இருந்தது. அதனுடைய மதிப்பு இவ்வளவுதான். வேண்டுமானால் வாங்கிக்கொள். இல்லையென்றால் போ" என்று சண்டைக்கு இழுத்து அவனை உதைத்து, பிறகு அந்தப் பணத்தை அவர்கள் வாங்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். நானும் இதைப் போல சந்தித்திருக்கிறேன் என்பதை மிகுந்த வேதனையோடு சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட தலையை அசைக்கிறார்கள். பல இடங்களில் மார்வாடிகள் நகையை விற்றுவிட்டு ஓடிப்போய்விடுகிறார்கள். அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கவே முடியாது. ஆகவே அடகு வைத்த பொருள்களை விற்றால், தண்டிக்கக் கூடிய அளவுக்குச் சட்டத்திலே வழிவகை செய்ய வேண்டும்.

அடகு வைத்த நகைகளை விற்றால் விசாரணை செய்ய சட்டபூர்வமாக லைசென்ஸ் பெற்ற அப்ரைசர்கள் வைத்து விசாரிக்க வேண்டும் என்ற அளவிற்கு இருக்கிறது. அதிலே மிகப் பெரிய அநீதி நடைபெறுகிறது. திண்டிவனத்திலே நான் பார்த்திருக்கிறேன். அப்படிப்பட்ட அப்ரைசர்களை கைக்குள்ளே போட்டுக்கொண்டு, பல நகைகளை உருக்கி வேறு வகையாக மாற்றி மார்க்கெட்டில் வந்து விற்கப்படுவதைப் பார்த்திருக்கிறேன்.

(பிற்பகல் 5-40)

ஆகவே இந்த ஆபத்திலேயிருந்து ஏழைகளை நாம் காப்பாற்றியாக வேண்டும். ஏழைகள் ஏதோ வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி குழந்தைகளுக்காக ஒரு பவுன், அரை பவுனில் நகைகள் செய்து வைத்திருக்கிறார்கள். பெண்கள் கல்யாணத்திற்காக என்று நகைகள் செய்து வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நகைகளை தவிர்க்க முடியாத காரணங்களுக்காக, சங்கடம்

களுக்காக அவர்கள் அடகு வைத்துவிடுகிறார்கள். அந்த முழு முதலையே அவர்கள் மீட்க முடியாமல் போய்விடுகிறது. அந்த நகையையே பார்க்க முடியாத நிலைமையும் ஏற்படுகின்றது. அந்த நிலைமை இன்று தமிழகத்திலே பரவலாக இருந்து கொண்டு வருகிறது. ஆகவே (பிளட்ஜ்ட் கூட்ஸ்)-ஐ அடகு வைக்கப்பட்ட நகைகளை விற்பது என்ற நிலை வரும்போது, அதை முறையாகத் தெரிவிக்காமல் ஏலம் விடுவதை சட்டபூர்வமாக, கடுமையான முறையில் தண்டிக்க அரசு முன்வர வேண்டும்.

அதோடு மட்டுமல்ல, எவ்வளவுதான் வங்கிகள் இன்றைக்கு நேரிடையாகக் கடன் கொடுத்து வந்தாலும்கூட, 100-க்கு 90 பான் புரோக்கர்ஸ், வட்டிக் கடைக்காரர்கள நகைகளை வாங்கிக்கொண்டு அப்போதே கொண்டு போய் வங்கிகளிலே வைத்து மேலும் கடன் வாங்கி வந்து, மேலும் பணத்தை வாங்கி, அதைத்தான் மற்றவர்களுக்குக் கொடுக்கிறார்களே தவிர, வேறல்ல. இப்படி ரோலிங் பிசினஸ்தான் நடந்து கொண்டிருக்கிறது. இப்படி பல இடங்களிலே நடந்துகொண்டிருக்கிறது. பல இடங்களில் நகைகளைச் சாப்பிட்டு விடுகிறார்கள். திருப்பிக் கொடுப்பதில்லை. பல இடங்களிலே வங்கிகளிலே குறைந்த வட்டிக்கு வாங்கிக்கொண்டு போய் ஏழைகளுக்குக் கொடுத்து ஏழைகளை தண்டித்துக்கொண்டிருக்கின்ற முறை இருந்துகொண்டிருக்கிறது. எங்காவது 'பான் புரோக்கர்ஸ்' சொந்தப் பணம் இல்லாமல், அரசாங்கத்தினுடைய பணத்தை, வங்கியினுடைய பணத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்றால், அந்த நிமிடத்திலே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். 'பர்டன் ஆப் ப்ரூப்ஃ' அவர்களுக்கு இருக்கிறது. அவர்கள் வங்கியிலிருந்து பணம் வாங்கவில்லை, அப்படி பணம் வாங்கி இந்த நகைகள் ஒப்படைப்புக்குக் கொடுக்கவில்லை என்று அவர்கள் நிரூபித்துக் கொண்டு வரட்டும். இதிலே குற்றம் சாட்டுபவர்கள் 'ப்ரூப்ஃ' கொண்டுவர வேண்டும் என்று வந்தால், அவர்களால் கொண்டுவர முடியாது. அப்படிப்பட்ட நிலைமைகளில் அவர்கள் இருக்கிறார்கள். அந்த முறையிலே தவறு செய்கின்ற 'பான் புரோக்கர்ஸ்' பற்றிக் குற்றச்சாட்டுகள் வந்தால், அவர்களைத் தண்டிப்பதற்கு ஏற்ற வகையிலே இந்தச் சட்டம் உருவாக வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

(மாற்றுத் தலைவர் அவர்கள் அங்கத்தினர் அவர்கள் பேச்சை சீக்கிரம் முடிக்க வேண்டும் என்று சைகை செய்தார்கள்).

திரு. க. இராமமூர்த்தி: மாற்றுத் தலைவர் அவர்களே, இதிலே நான் ரொம்ப அவதிப்பட்டவன். எங்கள் மக்கள் அவ்வளவு ஏழைகள்.



**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: உங்கள் மக்கள் என்று சொல்கிறீர்களா?**

திரு. க. இராமமூர்த்தி: எங்கள் மக்கள் என்று நான் சொல்வது எங்கள் பகுதி மக்கள், அந்தப் பகுதியிலே வாழ்கின்றவர்கள் என்றுதான் சொல்கிறேன். அவர்களும் நமது மக்கள்தான். அந்த மாதிரி நீங்களும் நினைத்துச் செயல்பட வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேன். ஆகவே நான் இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இத்தோடு மட்டுமல்ல, அந்த செக்ஷன் 6 . . . . .

"( The Tahsildar ……… … has to conduct an enquiry in the prescribed manner before directing the return of the movable property or the release of the mortgaged property."

இந்த என்குயரியைப் பொறுத்தவரையில், அதை நிர்ணயிக்க வேண்டும். அஃபிடவிட்'ஐப் பொறுத்தவரையிலே, அதற்கு ஒரு மணியக்காரரோ, ஒரு எம்.எல்.ஏ.வோ, அல்லது நகர பஞ்சாயத்துத் தலைவர் அவர்களோ கையெழுத்திட்டால் போதும் என்று நினைக்கிறேன். அதாவது பொது வாழ்வில் முக்கிய பொறுப்பிலே இருப்பவர்கள் அந்த 'அஃபிடவிட்'டில் கையெழுத்திடலாம். அது போதும் என்ற அளவிலே மிக எளிமையாக ஆக்கப்பட வேண்டும். ஒரு பஞ்சாயத்துத் தலைவர் அல்லது முன்னாள் பஞ்சாயத்துத் தலைவர் கையெழுத்திட்டாலும் போதும் என்று இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த அடகு வைத்த பொருட்களை மீட்க அஃபிடவிட்' போட்ட காலத்திலிருந்து ஒரு மாதம் அல்லது 6 வாரங்களுக்குள்ளாக அந்த நகையைப் பற்றி, அதைப்பற்றிய முடிவை சம்பந்தப்பட்ட அதிகாரிக்குத் தெரிவித்தாக வேண்டும் என்று கட்டாயப்படுத்தி இது சட்டமான பின்னர், அதற்கு ஏற்றவாறு விதிகளை வகுக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு, இந்த நல்ல மசோதா முழுமை பெறுவதற்கான முயற்சிகளை அரசு மேலும் மேற்கொண்டு அதற்கேற்ற வகையில் மற்ற நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்று கேட்டு, என் உரையை முடிக்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: மாற்றுத் தலைவர் அவர்களே, கடன் நிவாரண மசோதா நல்ல நோக்கத்துடன் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதன் மீது பேசும்போது, சில உறுப்பினர்கள் சில திருத்தங்களைச் சொன்னார்கள். அந்தத் திருத்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன் என்பதை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். சில ஆண்டுகளாக எமர்ஜென்சி அடிப்படையிலோ, வேறு அடிப்படையிலோ நகைகளை 'பான் ப்ரோக்கர்ஸ்' இடத்திலுள்ள நகைகளை ஏலம் போடக்கூடாது என்று தடை உத்தரவு

இருந்து வந்தது. என்ன காரணமோ சில மாதகாலமாக அந்தத் தடை உத்தரவு விலக்கப்பட்டு, ஆங்காங்கே ஏழை மக்களுடைய நகைகள் ஏலம் போடப்படக்கூடிய காட்சியை நாம் பார்க்கிறோம். இது மிகவும் வருந்தத்தக்க நிலை. அநியாயமாக ஏலம் விடப்படக்கூடிய நிலையை நாம் பார்க்கிறோம். என்னுடைய குறையை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்று காலையிலே பத்திரிகையிலே பார்த்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பதாகப் பார்த்தேன். ஏலம் விடுவதை இன்னும் 6 மாத காலம் ஒத்தி வைப்பதாக பத்திரிகையிலே பார்த்தேன். அப்படியிருந்தால் அதை நான் வரவேற்கிறேன். அந்தமாதிரி தடை உத்தரவைப் போட்டு கட்டுப்படுத்தி, ஏலங்கள் போடுவதை உடனடியாகத் தடுக்க வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை. ஐந்து ஆறு மாத காலமாக எம்.எல்.ஏ. ஆஸ்டலில் எலக்ட்ரிசியனாக வேலை செய்து கொண்டிருக்கின்ற ஒருவர்—திரு. ஷெரிப் என்பவர் ஒரு கதையை என்னிடம் சொன்னார். அவர் ஓரிரு பவுன் நகையை அடகு வைத்ததாகவும், அதை ஏலம் விட்டுவிட்டார்கள் என்றும் என்னிடம் சொன்னார். ஏன் என்று கேட்டேன். அவர் வட்டி அதிகமாகக் கேட்டார். நான் தாசில்தாரிடம் போய் சொல்லிக் கேட்டேன் என்றார். அந்த நகையைத் திருப்பிக் கொடுத்துவிடுங்கள் என்று கேட்டிருக்கிறார். அவர் அடகு வைத்த பான் புரோக்கர் மூல்தான் சேட்டோ, மூல்சந்த் என்றோ அந்த ரசீதில் பெயர் இருந்தது. அந்த சேட்டுக்கு தாசில்தார் அவர்கள்கூட லெட்டர் எழுதியிருக்கிறார். நியாய வட்டிப்படி பணத்தைப் பெற்றுக்கொண்டு நகையைக் கொடுக்கும்படியும், அவரை திரும்ப நகையைப் பெற்றுக்கொள்ளும்படியும் ஒரு தபால் கொடுத்து அனுப்பியிருக்கிறார்கள். அவர் அந்த தபாலைக் கொண்டு சென்று அந்த சேட்டிடம் கொடுத்திருக்கிறார். அந்த சேட் இரண்டு நாட்கள் கழித்து வரும்படி சொல்லியிருக்கிறார். அதன்படி இரண்டு நாட்கள் கழித்துப் போய் கேட்டிருக்கிறார். நகை ஏலம் போடப்பட்டுவிட்டதாக அவர் சொல்லிவிட்டார். ஏலம் போட்டாகி விட்டது என்று சொல்கிறார் என்று திரும்பவும் தாசில்தாரிடம் அவர் மகஜர் கொடுத்திருக்கிறார். இரண்டு நாட்கள் கழித்து வந்து வாங்கிக்கொள்ளச் சொல்லிவிட்டு, பிறகு ஏலம் போட்டுவிட்டதாகச் சொல்கிறார் என்று சொல்லி, போலீசிலும் அவர் தகவல் கொடுத்திருக்கிறார். உடனடியாக அவர்களுக்குத் தகவல் கொடுத்திருக்கிறார். அவர் போலீசுக்கும் ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார். தாசில்தார் அவர்களிடமும் ரிப்போர்ட் செய்திருக்கிறார். இதுவரையில் ஒரு நடவடிக்கையும் இல்லை. அவர்கள் அந்த அளவுக்கு அரசாங்க உத்தரவைத் துச்சமாக மதிக்கிறார்கள். அப்படி துச்சமாக மதிப்பதற்கு என்ன காரணம்! அதைப்பற்றி அரசாங்கம் ஆராய வேண்டும். அரசாங்க உத்தரவைத்



துச்சமாக மதிப்பவர்களுக்கு வெறும் தண்டனை கொடுக்கக்கூடாது, அவர்களை 'அரஸ்ட்' செய்ய வேண்டும். அப்படி ஒரு நடவடிக்கை எடுத்தால் தான், மற்றவர்களுக்கும் பயம் இருக்கும். இதைப்பற்றித் தீவிரமாக கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

**திரு. ப. மாணிக்கம்:**

Sub-section (*c*) of section 6(1) அதிலே ஒன்று

"Every such application shall be made before the expiry of the period o fsix months from the date of the commencement of this Act"—(13th December 1979).

என்று போட்டிருக்கிறது. இதிலே 6 மாதம் என்று இருக்கிறது. இப்போதே 2 மாதம் போய்விட்டது. இதிலே பின்னர் வருவதிலே 4 மாதம் தான் வருகிறது. இதிலே 'கிரேஸ் டைம்' என்ற முறையிலே, 2 வாரம் அவகாசம் கொடுக்க வேண்டும். இதற்கு வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டும். இது சம்பந்தமான சட்டங்கள் புதிதாக வருகின்றபோது, அந்த அறிவிப்புகளை கிராமங்களிலே சாவடிகளிலே, தாலுக்காக்களில் மட்டுமல்ல, ஒட்டுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், அதற்காக ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். முடிந்தால் கிராம அளவிலே 'டாம் டாம்' செய்ய ஏற்பாடு செய்யலாம். இப்படி வருகின்ற சட்டங்கள் சில நேரங்களிலே கிராமங்களில் இருப்பவர்களுக்குத் தெரியாமலேயே போய் விடுகிறது. அவர்கள் பத்திரிகை படித்தால்தான் தெரிகிறது. இல்லையென்றால் அந்த விவரங்கள் தெரியாமலேயே போய்விடுகிறது.

இன்றைக்கு புதிதாக வந்திருக்கக்கூடிய சட்ட முன்வடிவுகள் இரண்டையும் சேர்த்து, 4 அம்சங்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன். ஒன்று வருமான வரம்பு பற்றியது. எனக்கு முன்னர் பேசிய மாண்புமிகு அங்கத்தினர் திரு. நல்லசிவன் அவர்கள் கூட சொன்னார்கள். வருடத்திற்கு ரூ. 4,800, மாதம் ரூ. 400 என்று வருமான வரம்பு இருப்பது குறைவு. நகரங்களில் இருப்பவர்களுக்கு அது பொருந்தாது. அதன் அளவை உண்மையிலேயே ரூ. 6,000 என்று திருத்திக்கொள்வது உதவிகரமாக இருக்கும்.

இன்னொன்று, இந்த வருமானம் சம்பந்தமாக நிரூபிக்கவேண்டிய பொறுப்பு கடன் தருபவர்களின் பொறுப்பாக இருக்க வேண்டும். அது தான் சரியாக இருக்கும். ஏனென்றால் கடன் வாங்கியவர் வருமானத்தைப் பற்றி சர்டிபிகேட் வாங்குவதற்குள்ளே அவருக்கு இடுப்பு ஒடிந்துபோகும். அது அவரால் முடியாமலும் போகும். இது அனுபவம். அதனாலே 'ஓனஸ் ஆப் புரூஃப்' அவர்களிடத்திலே இருப்பதுதான் நல்லது. இது போக இன்னொன்றும் இருக்கிறது. இந்த 'அஃபிடவிட்'டிலே தவறு

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1980 பிப்ரவரி 11

கிராம மக்கள் பயன்பெற முடியும். 4,800 ரூபாய்வரை வரும்படி உள்ளவர்கள் இதனால் பயன் பெற முடியுமென்று சொல்கிறபோது, அதைவிட, இந்தச் சட்டம் மூன்று மடங்கு நாட்டு மக்களுக்கு நன்மை அளிக்கிறது. இதுமட்டுமா? இதைவிட முற்போக்கு எண்ணங்களை இதே அவையில் நான் சொன்னேன். நாளுக்கு நாள், நேரத்திற்கு நேரம்கூட கருத்துக்கள் மாறுகின்றன. முற்போக்குக் கருத்துக்கள் வருகின்றன. அப்படி வரும்போது, நாம் இன்றைக்குக் கொண்டு வந்து நிறைவேற்றுகிற சட்டம், 2 ஆண்டுகளுக்குப் பிறகு பழமையாகிவிடும். ஆனால் இன்றைக்கு அந்தப் பழைய சட்டத்தையும், இதையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அதைவிட இது முற்போக்கான எண்ணமுடையது என்பதை உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்வார்களென்று கருதுகிறேன்.

இப்படி வழக்கு முறையில் எக்ஸ்பீரியன்ஸ் வருவதை ஏற்றுக் கொள்வது தான் நமக்கு நல்லதென்பதால் தான் ஏற்றுக்கொள்கிறேன். முதலிலே இருந்த சட்டத்தைவிட இது சீர்திருத்தமானது என்று நான் சொன்னேன். ஆக அந்தச் சட்டத்தைத் தெரிந்துகொண்டேன் என்பதிலே தவறில்லை. சட்டங்கள் முதலிலேயே இருக்கும்போது, அந்தப் பழைய சட்டங்களைப் படித்துப் பார்த்து, அதிலே இருக்கும் குறைபாடுகள் என்ன, நன்மைகள் என்ன என்பதைப் பார்த்து, புதிய சட்டத்தைக் கொண்டு வருகிறோம். அந்த முறையிலே இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறேன் என்று சொல்லி, இது சீர்திருத்தமான சட்ட முன்வடிவு என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிலையில், முதலிலே ஒரு சட்டம், இரண்டாவது ஒரு சட்டம் ஏன் என்று கூடக் கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களுக்கு அந்தச் சந்தேகம் வந்தது. இப்போது கொண்டு வந்துள்ள சட்டத்தில் 4,800 ரூபாய்வரை வரும்படி உள்ளவர்களுக்கு விதி விலக்கென்று இருக்கிறது. இது எல்லோருக்கும் உண்டு. 1—1—1980க்கு முன்னால், எந்த ஆண்டு கடன் வாங்கியிருந்தாலும், அவர்களுக்கு இந்தச் சட்டத்தின் மூலம் விதி விலக்கு உண்டு. ஆனால் முதலிலே இருக்கும் சட்டத்தின்படி 1976-க்கு முன்னாலே கடன் வாங்கியவர்களுக்கு மட்டும்தான் விதிவிலக்கு உண்டு. அதுவும் 2,400 ரூபாய்க்குக் குறைவாக வருமானம் உள்ளவர்களுக்கு மட்டும்தான் அது செல்லும், கிராமப்புறத்து மக்களுக்கு மட்டும்தான் அது செல்லும். ஆனால் 1—1—1980க்கு முன்னால் 4,800 ரூபாய்க்குக் குறைவாக வருமானமுள்ள குடும்பத்தினர் கிராமங்களிலே இருந்தாலும் சரி, நகரங்களிலே இருந்தாலும் சரி, எப்போது வாங்கியிருந்தாலும் சரி—முன்கால அளவு குறிப்பிடவில்லை—செல்லுமென்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



1980 பிப்ரவரி 11] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

இந்த மசோதாவின் மீது பேசும்போது, நல்ல நோக்கத்துடன் பலர் பல கருத்துக்களைச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் சொல்கிறபோது, இதை நான் வரவேற்கிறேன், ஆனால் இதை நன்றாகச் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். உண்மைதான். 1976-ல் அவசரச் சட்டம் கொண்டு வந்தார்கள். அதன்மூலம் நாட்டு மக்கள் முழுமையாகப் பயன்பெறாததற்குக் காரணம், கிராம மக்களுக்கு அதுபற்றித் தெரியவில்லை. அது மட்டுமல்ல. அந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறபோது, 2 மாதங்களில் மனுப் போட வேண்டுமென்று சொல்லியதால், அப்படிப் போட முடியவில்லை. 70 லட்சம் பேர்கள் மனுப் போட்டார்கள் என்றாலும், அது முழுமையாகிவிடவில்லை. இருந்தாலும், இது குறித்து அவர் சொன்ன கருத்தை ஏற்றுக்கொள்கிறேன். 'டாம்-டாம்' போட்டு, அறிவிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதை ஏற்றுக்கொள்கிறேன். இது குறித்து அரசு விளம்பரம் கொடுத்து, என்னென்ன செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல. இதைக் கட்சிப் பிரச்சினையாக யாரும் கருதாமல், சமுதாயப் பிரச்சினையாகக் கருத வேண்டும். பொதுக் கூட்டங்களில் நீங்கள் பேசுகிறபோது எங்களைப்பற்றி வழக்கம்போல் எது வேண்டுமானாலும் பேசலாம், அது அரசியல் கட்சிகளுக்குத் தேவை. அப்படிப் பேசிவிட்டு, சமுதாயப் பிரச்சினையான இதைப் பற்றியும் மக்கள் நலன் கருதி ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். ஒரு சட்டத்தை அரசு கொண்டு வந்திருக்கிறது—இந்த அரசு கொண்டு வந்ததாகச் சொல்ல வேண்டியதில்லை—அதை எல்லோரும் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று மட்டும் நீங்கள் சொன்னால், சமுதாயத்திற்காகப் பாடுபடுகிறோம், பணியாற்றுகிறோம் என்பதாகும். அதை நீங்கள் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் திரு. மாணிக்கம் அவர்கள் சொன்னார்கள். தண்டனை அதிகமாக இருக்கிறதென்று சொன்னார்கள். தண்டனை அதிகமாக இருப்பதை நான் ஆராய்ந்து பார்க்கிறேன். ஆராய்ந்து, கடன் பட்டவர்களுக்குத் தண்டனை அதிகமாக இருந்தால், அதைக் குறைக்க எப்படி வழிவகை செய்ய முடியுமோ அப்படிச் செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 6-00)

நம்முடைய உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களும் கிட்டத்தட்ட இதைத்தான் சொன்னார்கள். விளம்பரம் செய்ய வேண்டுமென்றும், நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1980 பிப்ரவரி 11

திரு. அப்துல் வகாப் அவர்கள் "கைது" செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். 'பான் புரோக்கர்ஸ் ஆக்ட்' இன்றைக்குக் கொண்டுவரப்பட்டதல்ல. முன்னாலேயே இந்த 'ஆக்ட்' இருக்கிறது. 1976 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டம், எந்த சட்டம் என்றெல்லாம் கொண்டு வருவதற்கு முன்னாலேயே 'பான் புரோக்கர்ஸ்' சட்டம் இருக்கிறது. பொதுவாக 'பான் புரோக்கர்ஸ்' கடை வைக்க வேண்டுமென்றால், ஒரு குறிப்பிட்ட ரூபாய், அதாவது 100 ரூபாய் முதலில் கொடுத்து, லைசன்ஸ் வாங்க வேண்டும். லைசன்ஸ் வாங்கியவர்கள்தான் கடை வைத்து நகையை அடகு பிடிக்க முடியும். நகையை அடகு வைத்தவர்கள் திருப்பி வாங்க வேண்டிய குறிப்பிட்ட நாள் வந்ததற்குப் பிறகும், 7 நாட்களுக்குள் அல்லது 10 நாட்களுக்குள் அவர்கள் நகையை ஏலம் போடக்கூடாது. அதற்குள் அவர்கள் ஏலத்தில் கொடுக்கக்கூடாது. குறைந்தது ஒரு வருடத்திற்கு அடகு வைத்தவர்கள் நன்மை பெற வேண்டுமென்பதற்காகத்தான் கடன் வழங்குகிறார்கள். ஏலம் போடுவதற்கு முன்னால், சென்னையைப் பொறுத்தவரையிலும், இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமும், மாவட்டங்களைப் பொறுத்தவரை, ஆர்.டி.ஓ. மூலமும்தான் அவர்கள் நகையை ஏலம் போடுவதற்கு மனு செய்ய வேண்டும். அவர்கள்தான் ஏலம் போட அனுமதி தர வேண்டும். அனுமதி தருவதற்கு முன் அதுபற்றி அவர்கள் ஆராய வேண்டும். அனுமதி தந்தாலும், டெபுடி தாசில்தாருடைய அந்தஸ்துக்குக் குறையாத ஒருவர் முன்னிலையிலே ஏலம் போட வேண்டும். 20 ஆம் தேதி ஏலம் என்றால் 1 ஆம் தேதி ஒரு தடவையும் மறுபடியும் 10 ஆம் தேதி ஒரு முறையும் கட்டாயம் விளம்பரம் செய்ய வேண்டும். அதாவது 10 நாள் இடைவெளி விட்டு இரண்டு தடவை விளம்பரம் செய்ய வேண்டும். ஏலம் போடுகிற இடத்திலும், அதாவது கடை இருக்கும் இடத்திலும், அந்தப் பகுதியிலிருக்கின்ற காவல் துறை அலுவலகத்திலும் இதைப்பற்றி நோட்டீஸ் ஒட்ட வேண்டும். இதையும் மீறி காரியங்களைச் செய்கிறார்கள் என்று சொல்கிறார்கள். செய்யவில்லையென்று நான் சொல்லமாட்டேன். 4 ஆயிரம் பேர்கள், 10 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் செய்யக்கூடும். சம்பந்தப்பட்டவர்களை நாங்கள் கேட்டுக்கொள்வதெல்லாம் அனுமதி பெறாமல், டெபுடி தாசில்தார் முன்னிலையில் ஏலம் போடாமல் ஏதாவது அவர்கள் செய்திருந்தால், நடவடிக்கை எடுங்கள் என்பதுதான். இந்த அரசு அவர்களுக்கு உறுதுணையாக இருக்கும். இதுகுறித்து எல்லாம் இங்கே உறுப்பினர்கள் குற்றங்குறைகளைச் சொல்வது நல்லதுதான். இதையெல்லாம் செய்தித்தாள்களில் இங்கே சொன்னால்தான் போடுவார்கள். "மூடிவிட்டார்கள்"



1980 பிப்ரவரி 11] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

என்று சொல்வதெல்லாம்கூட குறிப்பெடுக்கப்பட்டு, செய்தித்தாள்களில் அது வந்தால் நல்லதுதான். கைது செய்யப்படுவார்கள். நடவடிக்கை எடுக்கப்படும் என்றெல்லாம் சொன்னாலாவது அவர்கள் பயப்படுவார்கள். அதற்காகத்தான் இதையெல்லாம் நான் சொல்கிறேன். இப்படிப்பட்ட செய்கைகளையெல்லாம் போக்குவதற்கு அரசு நிச்சயம் முனைந்து செயல்படும். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொன்ன இரண்டு சட்டங்களைப்பற்றியும் நான் சொல்லிவிட்டேன்.

மேலும் இங்கே உறுப்பினர்கள் சொல்கிறபோது, இதை உடனடியாகச் செய்ய வேண்டும், உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்றெல்லாம் சொன்னார்கள். 'ரிலீப்' கேட்டு மனு போட்ட 70 லட்சம் கேஸ்கள் இருக்கின்றன என்றால், 70 லட்சம் கேஸ்களில் எவை நல்ல கேஸ்கள், எவை கெட்ட கேஸ்கள் என்று தெரியவில்லை. 210 கோடி ரூபாய்க்கு மேல் கடன் வாங்கியிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் உடனடியாகச் செய்ய வேண்டுமென்று சொன்னால், அதை நியாயமாக ஏற்றுக் கொள்கிறேன். எந்த அளவிற்கு விரைவாகச் செய்ய முடியுமோ அந்த அளவிற்கு விரைவாகச் செய்ய அலுவலர்களைப் போட வேண்டுமென்று சொன்ன உறுப்பினர்களுடைய யோசனையை இந்த அரசு பரிசீலிக்கும். போடப்படுகிற அலுவலர்கள் இதை மட்டும்தான் கவனிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதிலே அரசு கவனம் வைத்துக்கொண்டு அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யுமென்று நான் முன்னாலேயே சொல்லியிருக்கிறேன். அவர்களும் அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தச் சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னாலேயே கூட அப்படிப்பட்ட நல்ல நிலைமைகள் வந்துவிடும். இவைகளையெல்லாம் நல்ல முறையில் நடைமுறைப்படுத்துவோம். இன்றைக்கு தாசில்தார் அவர்கள்தான் பொறுப்பு அதிகாரி. அவர் இதைப் பார்க்கிறபோது சில சங்கடங்கள் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். இவற்றையும் இந்த அரசு யோசிக்கும். தாசில்தார் இது நியாயம்தான், வருமானம் நியாயம்தான், இதை ஏற்றுக் கொள்ளலாம் என்று தீர்ப்பு சொல்கிற அதிகாரியாக இருந்தாலும், குறைகள் எதுவும் இல்லாமல் மீண்டும் பரிசீலித்து என்ன செய்ய முடியுமோ அதை இந்த அரசு நிச்சயம் செய்ய முன்வரும்.

இந்தச் சட்ட முன்வடிவைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த பெரும்பாலானவற்றுக்கு நான் பதில் சொல்லியிருக்கிறேன். எந்தெந்த நேரத்தில் கடன் பெற்றவர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமோ அந்தந்த நேரத்தில் சட்டத்தைத் திருத்தி அல்லது தேவையான நன்மைகளைச் செய்ய

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1980 பிப்ரவரி 11

இந்த அரசு நிச்சயம் உறுதுணையாக இருக்கும். நான் இந்தச் சமயத்தில் மாண்புமிகு உறுப்பினர்களையெல்லாம் ஒன்று கேட்டுக்கொள்கிறேன். என்னென்ன சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன, எப்படி எப்படி ஏழையெளிய மக்களிடமிருந்து பொருள்களை வாங்கிக்கொண்டு ஏமாற்றுகிறார்கள் என்பதை உறுப்பினர்கள் தயவுசெய்து என்னிடம் சொல்லவேண்டும். எப்படிச் சட்டம் போட்டாலும், ஏமாற்றும் திறமை அவர்களுக்கு இருக்கிறது. ஏமாற்றுகிற திறமை அவர்களுக்கு இருந்தாலும், சட்டத்தின் பிடியிலிருந்து அவர்கள் தப்பித்துக்கொள்ளாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது இந்த அரசின் கடமை. ஏழையெளிய மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டியது இந்த அரசின் கடமை என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது. முன்பு இருந்ததைவிட 3, 4 மடங்கு முன்னேறிய கருத்துக்களைக் கொண்டுள்ள சட்டங்களை நான் இங்கே கொண்டு வந்திருக்கிறேன் என்பதை இந்த அவைக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (டாக்டர் இரா. சனார்த்தனம்):** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1980 ஆம் ஆண்டு, கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1980) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 9 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாற்றுத் தலைவர் அவர்களே—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1980 ஆம் ஆண்டு, கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1980) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.



1980 பிப்ரவரி 11]

**மாற்றுத் தலைவர் (டாக்டர் இரா. சனார்த்தனம்):** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1980 ஆம் ஆண்டு, கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1980) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 9. அரசின் தீர்மானம்.

### அலுவல் வரிசையில் மாற்றம் குறித்து.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** மாற்றுத் தலைவரவர்களே,

"மேலவை விதி 21 (3)-ன் கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ள சட்ட முன்வடிவுகளில் 14-வது இனமான கடன் நிவாரண சட்ட முன்வடிவு இரண்டாவது இனமாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாற்றுத் தலைவர் (டாக்டர் இரா. சனார்த்தனம்):** அவை முன் உள்ள பிரச்சினை—

"மேலவை விதி 21 (3)-ன் கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ள சட்ட முன்வடிவுகளில் 14-வது இனமான கடன் நிவாரண சட்ட முன்வடிவு இரண்டாவது இனமாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 8. அரசின் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

### (2) தமிழ் நாடு, 1980 ஆம் ஆண்டு கடன் நிவாரண சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1980).

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாற்றுத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1980 ஆம் ஆண்டு, கடன் நிவாரண சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1980) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

---

@ 194—206 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**மாற்றுத் தலைவர் (டாக்டர் இரா. சனார்த்தனம்):** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1980 ஆம் ஆண்டு, கடன் நிவாரண சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1980) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 13 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாற்றுத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு, கடன் நிவாரண சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1980) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாற்றுத் தலைவர் (டாக்டர் இரா. சனார்த்தனம்):** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1980) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாற்றுத் தலைவர் (டாக்டர் இரா. சனார்த்தனம்):** அடுத்து வரும் 4 சட்ட முன்வடிவுகள் மீது பொதுவாக உறுப்பினர்கள் பேசலாம். பிறகு சட்ட முன்வடிவுகளை தனித் தனியாக ஆய்விற்கு எடுத்துக் கொண்டு நிறைவேற்றலாம்.



(பிற்பகல் 6.10)

**(3) தமிழ் நாடு 1980 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப் படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1980).**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1980 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1980) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாற்றுத் தலைவர் (டாக்டர் இரா. சனார்த்தனம்):** முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1980 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1980) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

*** திரு. ஆ. நல்லசிவன்:** மாற்றுத் தலைவர் அவர்களே 5, 6, 10, 11/80 ஆகிய இந்த நான்கு மசோதாக்களையும் சேர்த்து எடுத்துக்கொள்வதால், அவைகளின்மீது மொத்தமாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பில் 10-லே 1973-க்கு முன்பு உள்ள வார பாக்கி முழுவதும் செலுத்தப்பட வேண்டும் என்று இருக்கிறது. 1973-76-லே கொடுக்க வேண்டியதற்கு 1/3 பங்கு கொடுத்தால் போதும் என்று இருக்கிறது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 1973 முதல் 1978 வரையில் உள்ள 5 வருஷங்களுக்கு உள்ள பாக்கிக்கு 1/5 பங்கு கொடுத்தால் போதும் என்று இருக்கிறது. நான் அரசுக்குச் சொல்லும் யோசனை என்னவென்றால், 1980 ஆம் வருடம் வரை மொத்தத்திலே ஒரு வருஷத்திற்கு உண்டான பாக்கியைக் கட்டினால் மீதி எதுவும் கட்டத் தேவையில்லை, எல்லாம் தீர்ந்துவிட்டது என்று எடுத்துக் கொண்டால், சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன். அந்த ஒரு வருஷ பாக்கிக்குமே பல தவணைகள் கொடுக்க வேண்டும். இன்னொன்று, இந்த பாக்கியைக் கணக்கிடுகிறபோது, தானியத்திற்குப் போடும் விலையை மார்க்கெட் ரேட்டிலே போட வேண்டும் என்று இருக்கிறது. அது சரியில்லை. கவர்ன்மென்ட் அப்போதைக்கப்போது நிர்ணயிக்கும் ரேட்டிலேதான் தானியத்

@ 2 7 ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. ஆ. நல்லசிவன்] [1980 பிப்ரவரி 11

தினுடைய விலை நிர்ணயிக்கப்பட்டு, அந்தப் பாக்கியை 5 தவணைகளில் கொடுக்க வேண்டும் என்று திருத்த வேண்டும். இந்த இரண்டுவிதமான மசோதாக்களிலும் 1/3 பங்கு, 1/5 பங்கு என்று இருப்பதற்குப் பதிலாக, 1980 வரை ஒரு வருஷ வார பாக்கியைக் கொடுத்தால், மற்ற பாக்கி அனைத்தும் தீர்ந்துவிட்டது என்ற முறையிலே நிவாரணம் அளிக்க வேண்டும் என்றும், மார்க்கெட் ரேட் இல்லாமல், அரசாங்கம் நிர்மாணிக்கும் ரேட்டிலே தொகை நிர்மாணிக்கப்பட வேண்டும் என்றும் இந்த இரண்டு திருத்தங்களோடு இந்த மசோதாக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோ. சி. மணி: மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இங்கே நம்முடைய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களால் விவசாய நிலச் சீர்திருத்த அடிப்படையில் கொண்டு வரப்பட்டிருக்கும் சட்டங்கள் 5, 6, 10, 11 ஆகிய நான்கு சட்டங்களில் விஷயங்கள் மாறுபட்டிருந்தாலும், அவர் சொல்லும் கருத்துக்கள் நிலச் சீர்திருத்தத்தை ஒட்டியும், உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தையொட்டியும், கொண்டுவரப்பட்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், நான் சார்ந்திருக்கின்ற கட்சியின் சார்பாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புவதெல்லாம் 1977 ஆம் வருஷத்தில் நவம்பர் மாதத்திலே புயல் வந்து, வெள்ளம் வந்து, அதற்குப் பிறகு மூன்று மாதம் கழித்து, நீர்ப்பாசன வசதி தஞ்சை மாவட்டத்திலே சரியானபடி கிடைக்க முடியாததால், பயிர்கள் அழிந்தன. அதற்குப் பிறகு அங்கே கல்லணையில் உடைப்பு எடுத்ததால், பாசன வசதி கிடைக்காமல் பயிர்கள் அழிந்தன என்பதை அரசாங்கம் ஒத்துக்கொண்டிருக்கிறது. "வெள்ளத்தால் பாதிப்பு" என்பதற்கு நோட்டிப்பிக்கேஷன் செய்திருக்கிறார்கள். எல்லாச் சட்டங்களிலேயும் தலைப்பிலேயே "வெள்ளத்தால், புயலால் பாதிக்கப்பட்ட கிராமங்கள்" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அரசாங்கத்தினுடைய நிர்வாக முறைகேடால் ஏற்பட்ட தவறுகளைச் சுட்டிக்காட்டியபோது, அதற்கான ஆதாரங்களை அளித்தபோது, அவைகள் சரியாகப் பட்டாலும்கூட, தஞ்சாவூரைப் பொறுத்தவரையில், ஒரே வருஷத்தில் வெள்ளமும், வறட்சியும் இருந்தும், "வெள்ளத்தால் பாதித்ததைக் குறிப்பிட்டு நோட்டிபிகேஷன் செய்யப்பட்டிருக்கிறது. எந்தெந்த கிராமங்கள் வெள்ளத்தால், புயலால் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று நோட்டிபிகேஷன் இருக்கிறது. ஆனால் நம்முடைய குற்றத்தால், அணை உடைந்ததால் பசலி முழுவதும் வெள்ளம் வராமல் காப்பாற்ற முடியாத நிலை ஏற்பட்டது. தஞ்சை மாவட்டத்தில் காவிரி பாசனப்



1980 பிப்ரவரி 11] [திரு. கோ. சி. மணி]

பகுதிகள் அனைத்தும் பாதிக்கப்பட்டன என்பதை அனைவரும் அறிவார்கள். இந்த மன்றத்திலேயும், சட்டமன்றப் பேரவையிலேயும் இது எடுத்துப் பேசப்பட்டிருக்கிறது. அதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. பிறகு கரை உடைந்ததைச் சீர்திருத்தி தண்ணீர் விடப்பட்டது. அதற்கு இடைப்பட்ட காலத்தில் சாகுபடி செய்ய முடியவில்லை. என்னுடைய வேண்டுகோள் எல்லாம், வெள்ளம், புயல் என்று குறிப்பிட்டிருப்பதில் ஏறத்தாழ ஒரு தாலுக்காவை எடுத்துக்கொண்டால், 160 அல்லது 180 கிராமங்கள் போக பாக்கியிருப்பவை, அதாவது பாக்கியிருக்கும் 20 அல்லது 30 கிராமங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்படாத கிராமங்கள் என்று நோட்டிபிக்கேஷன் வந்திருக்கிறது. இது தவறு. "இந்த நோட்டிபிக்கேஷன் தவறு" என்று ஆரம்பத்திலேயே சொன்னோம். பாதிக்கப்பட்டிருக்கிற கிராமங்கள் என்பதை அரசாங்கம் ஆய்வுசெய்து எடுத்ததில் தவறு இருக்கிறது என்று சொன்னோம். இதிலே சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொண்டோம். அதற்கு சில காரணங்களையும் சொன்னோம். தாலுக்கா அலுவலகங்களிலே பணியாற்றிய அரசு ஊழியர்களுக்கு வெள்ள நிவாரணத்தையொட்டி அரசாங்கத்திடமிருந்து அட்வான்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன்களிலே பணியாற்றியவர்களுக்கும் அட்வான்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. அதுபோல வாழை சாய்ந்துவிட்டால், புயலால் விழுந்துவிட்டால், ஏக்கருக்கு இவ்வளவு உதவித் தொகை தருகிறோம் என்று சில இடங்களில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஊரில் புயலால், வெள்ளத்தால் வாழை மரம் அழிக்கப்பட்டபோது, அரசாங்கம் அதை ஏற்றுக்கொண்டு அதற்கு நிவாரணம் அளித்திருக்கிறது. அப்படி வாழைக்கு உதவித் தொகை அளித்த அதே கிராமத்திலே நெற்பயிர் அழிந்துவிட்டால், அதற்கு நோட்டிபிக்கேஷன் இல்லை. வாழை மரம் பயிர் செய்பவர்கள் பாதிக்கப்பட்டார்கள். ஆனால், நெற்பயிர் சாகுபடி செய்பவர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்படவில்லை, புயலால் பாதிக்கப்படவில்லை. இது என்ன நியாயம்? வாழை மரம் மட்டும் தான் வெள்ளத்தால், புயலால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், வந்த புயல் அல்லது வெள்ளம் வாழையை மட்டும் பார்த்து அடித்துவிட்டு, நெற்பயிரிலே இறங்காமல் அடுத்த ஊருக்குப் போய்விட்டதா? அல்லது பக்கத்து பகுதியிலே இருக்கும் வயலுக்குப் போகாமல் போயிருக்க முடியுமா? நெற் பயிர் புயலால், வெள்ளத்தால் பாதிக்கப்படவில்லை. தாலுக்கா அலுவலகங்களிலே பணியாற்றும் ஊழியர்கள் புயலால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று நோட்டிபிக்கேஷன் போட்டு, அவர்கள் உதவித் தொகை பெறுகிறார்கள். ஆனால், விவசாயிகள் சம்பந்தப்பட்ட

[திரு. கோ. சி. மணி] [1980 பிப்ரவ

மட்டில் அந்த கிராமத்திலே வெள்ளம் வரவில்லை, புயல் அடிக்கவில்
என்று சொன்னால், அவர்களுக்குக் கொஞ்சநஞ்சம் இருக்கிற நிவாரணம்
கிடைக்கும் என்று அரசு நம்புகிறதா? அந்த வாய்ப்பு வசதி இந்த
அவர்களுக்குக் கொடுக்கிறதா, தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்
என்று கேட்டுக்கொள்கிறேன். புயல் வெள்ளம் என்று வரும்போது, ஏறத்
பாதிக்கப்பட்ட இடங்கள் 80 சதவீதத்தைத் தாண்டியிருந்தால்,
அப்படியும், இப்படியும் இருந்தால், மீதியிருக்கும் 20 சதவீதத்திற்
சேர்த்துத்தான் பாதுகாப்பு அளிக்க வேண்டுமே தவிர, இவ்வளவு துல்லியம
கணக்கெடுத்துச் சொல்கிற காரணத்தால், அந்த வாய்ப்பு வசதிக
20 சதவீதத்தினர் பெற்றுக்கொள்ள முடியாமல் செய்யும் இந்த நிலைமை
மாற்ற வேண்டும். காரணம் அரசு கணக்கு எடுத்ததிலே தவறு இருக்கி
அரசு நிவாரணம் கொடுத்ததிலே தவறு இருக்கிறது. வாழைக்கு நிவாரண
தந்திருக்கிறார்கள். அரசு அலுவலர்களுக்கு முன்பணம் கொடுத்தி
கிறார்கள். ஆனால் அந்தத் தாலுக்காவிலேயே விவசாயிகளுக்கு நிவாரண
அளிக்க முடியாத நிலையில் நோட்டிபிக்கேஷன் போடப்பட்டிருக்கிற
ஆகவேதான் அடிப்படையில் தவறு இருக்கிறது என்று சொல்கிறேன். அ
மாற்றி நோட்டிபிக்கேஷன் செய்தால்தான் இந்தச் சட்டத்திலே இருக்
பலனை அவர்கள் பெற முடியும். முன்பு பல தடவை பல கிராமங்க
விடப்பட்டிருக்கின்றன என்று எடுத்துச்சொல்லியிருக்கிறோம். அப்போ
தெல்லாம் வாக்குறுதி தந்திருக்கிறார்கள். ஆனால் இதுவரையில் நோட்டிபி
கேஷனுக்கு அமென்ட்மென்ட் வரவில்லை. அப்படி வராமல் இந்தச் சட்ட
வந்ததனால் எந்தவிதமான பயனும் இல்லை. அதைத்தான் திரும்பத் திரும்
இந்த மன்றத்திலே நான் சொல்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பின
எனக்கு முன்பு பேசிய திரு. நல்லசிவன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்க
இந்தப் பசலிக்கு உரியதைச் செலுத்துகிற வாய்ப்பு வேண்டும், மீதியிருப்பவை
ரத்து செய்து வாய்ப்புக் கொடுத்தால், பரவாயில்லை என்று சொன்னார்கள்
இன்னொன்றையும் சொன்னார்கள். இந்தப் பசலியைப் பொறுத்தவரையி
கூட, தவணையில் தந்தால் போதும் என்று சொல்ல வேண்டும் என்
சொன்னார்கள். அதற்கு என்ன காரணம் என்று பார்க்க வேண்டு
நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தஞ்சை
மாவட்டத்திலே கொஞ்ச நாள் சுற்றுப்பிரயாணம் செய்தார்கள். அவர் இதிலே
கொஞ்சம் பயப்படுகிறார் என்று கருதுகிறேன். காரணம் அரசாங்கத்திலே
கூட்டுப்பொறுப்பு இருந்தாலும் கூட, அவரைப்போல கொஞ்சம் செய்ய
வேண்டும் என்று மற்றவர்கள் விரும்பவில்லையோ, என்னவோ எனக்குட



980 பிப்ரவரி 11] [திரு. கோ. சி. மணி]

ரியவில்லை. இப்படிச் செய்தால், அந்தப் பயன் எப்படிப் போய் அமையும்
ன்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இதுவரையிலே ரெவின்யூ
கார்ட்டுக்குப் போயிருக்கிறார்கள். 1977-லேயிருந்து சொல்லிவருகிறோம்.
கு அமென்ட்மென்ட் கொடுத்தார்கள். அதிலே 1980 ஆம் வருஷம் ஜனவரி
ாதம் 15 ஆம் தேதி வரை குத்தகைதாரர்களை வெளியேற்றக்கூடாது என்று
சான்னார்கள். இப்படி இந்த ஆட்சி வந்ததிலிருந்து 6 மாதத்திற்கு ஒரு
மறை மூன்று-நான்கு முறை ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் போன
றை ஒத்திவைக்கும்போது, அதிலே ஒரு வரியைச் சேர்த்தார்கள். சென்ற
ருஷம், அதாவது 1979 ஆம் வருஷத்திற்கு பாக்கியிருந்தால் ரெவின்யூ
கார்ட்டுக்குப் போகலாம் என்று அதிலே ஒரு வரியைச் சேர்த்தார்கள்.
தன்படி கும்பகோணத்திலே இருக்கிற ரெவின்யூ கோர்ட்டிலே மட்டும்
றத்தாழ நாலாயிரத்துச் சொச்சம் வழக்குகள் பதிவாகியிருக்கின்றன.
றத்தாழ முன்னூற்று சொச்சம் வழக்குகள் முடிவு பெற்று கும்பகோணத்திலே
ட்டும் நில வெளியேற்ற மனு போடப்பட்டிருக்கிறது. அவர்களுடைய நிலை
ன்ன? அதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டாமா? அது சென்ற பசலியில்.
தற்கு இதிலே பரிகாரமே கிடையாது, ஒரு வாய்ப்பு வசதி இல்லை. போன
ருஷம் கடுமையான நிலை இருந்தாலும், அவர்கள் செலுத்திவிட வேண்டு
மென்ற நிலை உருவாக்கப்பட்டது. இந்த வருஷம் விளைச்சலில்

(பிற்பகல் 6-20)

ள்ளபடியே ஒரு நோய் முற்பட்டுவிட்டது. இதன் காரணமாக கிராமங்கள்
முழுவதுமே பல இடங்களில் பாதிக்கப்பட்டு அழிந்து போயிருக்கின்றன.
அந்த நோய்க்கு இதுவரையில் மருந்து கண்டுபிடிக்கப்படவேயில்லை.
வேளாண்மைத் துறை சொன்ன மருந்துகளையெல்லாம் விவசாயிகள்
போட்டுப் பார்த்து விட்டார்கள். அறுவடையானால் என்ன லாபம் வருமோ
அதையும் தாண்டுகிற அளவுக்கு மருந்துக்குச் செலவு செய்து அடித்துவிட்டு,
அந்த நோயைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்று சொல்லுகிறார்கள்.
வேளாண்மைத் துறையே இப்போது "எங்களால் இதற்குரிய மருந்தைக்
கண்டுபிடிக்க முடியவில்லை, எங்களுக்குத் தெரிந்த எல்லா மருந்துகளையும்
போட்டுப் பார்த்துவிட்டோம், இனி இதற்காகப் புதிதாக மருந்து கண்டு
பிடிக்கத்தான் வேண்டும்" என்று சொல்லிவிட்டது. அந்த அளவுக்கு
'வைரஸ்' என்ற இந்த வகையான பயிர் நோய்க்கு இதுவரை மருந்தே
இல்லை. இதன் காரணமாக பல கிராமங்களில் வைக்கப்பட்ட பயிர்கள் முழுவது
ாக நாசமாகி அழிந்து விட்டன. இனிமேல் கண்டு முதல் காணும் என்று

[திரு. கோ. சி. மணி] [1980 பிப்ரவரி 11

பார்க்க வேண்டிய அவசியமே இல்லை. பல கிராமங்களில் விவசாயிகள் இந்தப் பயிர்களையெல்லாம் அழித்துவிட்டு வேறு பயிரை நட்டிருக்கிறார்கள். ஆகவே தான் 'மன்னியாறு' பகுதியில் மட்டுமாவது தண்ணீரை 15 அல்லது 20 நாட்களுக்கு அதிகமாக விட வேண்டும் என்றும், அங்கெல்லாம் புதிதாக பயிரை மாற்றி நட்டிருக்கிறார்கள் என்று முன்பு பேசும்போதே, நான் குறிப்பிட்டேன். இன்றையதினம் அவர்களுக்கெல்லாம் இந்தச் சட்டத்தில் என்ன பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்றுதான் தெரியவில்லை.

அடுத்து, 1973 ஆம் ஆண்டு ஜூன் 1 ஆம் தேதியிலிருந்து 1978 ஆம் ஆண்டு ஜூன் 30-க்குப் பின்னால் உள்ள காலம் வரை—அதாவது இந்த இடைப்பட்ட காலத்தில் இருக்கும் வருஷங்களுக்கான குத்தகை பாக்கியை நிர்ணயிக்கும்போது, அதைத் திருப்பிச் செலுத்த தவணை தந்திருக்கிறீர்கள். ஆனால் அந்தத் தவணையைக்கூட 1980 ஆம் ஆண்டு ஜூன் 30-க்குள் 4-ல் ஒரு பங்கு, 3-ல் ஒரு பங்கு முதல் தவணையாகக் கட்ட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் கேட்கிறேன், இந்தப் பசலிக்கான குத்தகையையே செலுத்த முடியாமல் இருக்கிற விவசாயியைப் பார்த்து, பழைய பாக்கிக்கான குத்தகையில் முதல் தவணையையும் சேர்த்துக் கட்டு என்றால், என்ன அர்த்தம்? இந்த வருஷ குத்தகைக்கே நிவாரணம் கேட்கிற விவசாயியால் பழைய பாக்கியைச் சேர்த்து எப்படிக் கட்ட முடியும்? தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்னொரு சட்டத்தையும் கொண்டு வந்திருக்கிறார்கள். குத்தகை வாரத்தை, அதாவது நியாய வாரம் 25 சதவீதமாக ஆக்கியிருக்கிறார்கள். இதைப்பற்றி முதலமைச்சர் எப்போது அறிவித்தார்? சென்ற பசலியின்போது அறிவிக்கப்பட்டது இந்தப் பசலியின்போதுதான் அமுலுக்கு வருகிறது. சட்டத்தில் அப்படித்தான் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் அமுலுக்கு வந்த நாளிலிருந்துதான் 25 சதவீத நியாய வாரம் கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் பாக்கியைச் செலுத்துவதற்கு மட்டும் பழைய விகிதத்திலேயே செலுத்த வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அந்தப் பழைய குத்தகை பாக்கித் தவணையையும் இந்தப் பசலியிலேயே செலுத்த வேண்டும் என்றால், எப்படி முடியும்? வாரத்தை 40 சதவீதத்தி லிருந்து 25 சதவீதமாகக் குறைத்து என்ன பயன்? 25 சதவீதம் என்று அறிவித்துவிட்டு, 60 சதவீதமாக அல்லவா உண்மையில் ஆக்கியிருக்கிறார்கள். இதைத்தானே மறைமுகமாகச் செய்திருக்கிறார்கள். குத்தகை கொடுப்பதை அதிகரித்துவிட்டு, விவசாயிகளுக்குச் சாதகமாகக் குறைத்திருக்கிறோம்



1980 பிப்ரவரி 11] [திரு. கோ. சி. மணி]

என்றால், அதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? இந்தப் பசலியிலேயே விளையவில்லை என்று விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள், இந்தப் பசலிக்கான குத்தகையையே தள்ளுபடி செய்யுங்கள் என்று கேட்கிறார்கள். இந்த நிலையில் அவர்கள் ஏற்கெனவே செலுத்த வேண்டிய குத்தகை பாக்கியை தயவுசெய்து ரத்து செய்ய முன்வர வேண்டும் என்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே ஒன்றைத் தெரிவித்தார்கள். "சட்ட மன்றத்தில் பேசும்போதே நான் 1—8—1972-ல் திராவிட முன்னேற்றக் கழகம் இப்படிப்பட்ட சட்டம் கொண்டு வந்தது என்பதைச் சுட்டிக் காட்டினேன்" என்று இங்கே தெரிவித்தார்கள், நான் வரவேற்கிறேன். அப்படிச் சுட்டிக் காட்டியவர், அப்போது அதை ஏற்றுக்கொண்டவர், இப்போது வந்திருக்கிற புதிய சட்டத்தில் அதை அப்படியே ஏற்றுக்கொண்டு திறம்பட அமுல் நடத்துவதில் என்ன சங்கடம் இருக்கிறது என்பதைத்தான் கேட்க விரும்புகிறேன். ஏன் அதைச் செய்ய முன்வரவில்லை? அதைச் செய்யாததற்கு என்ன காரணம்? அந்தக் காரணத்தை தமது முகப்புரையிலும் சொல்லவில்லை, முன்னுரையிலும் சொல்லவில்லை, பின்னுரையிலாவது சொல்வார்கள் என்று எதிர்பார்த்துத்தான் நான் இதைக் குறிப்பிடுகிறேன்.

இந்தச் சட்டத்தைப் பார்க்கும்போது, ஏதோ விளம்பர நோக்கத்திற்காகக் கொண்டு வரப்பட்டதாகத் தெரிகிறதே தவிர, இதனால் விவசாயிகளுக்கு உண்மையிலேயே ஏதேனும் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் கொண்டு வரப்பட்டதாகத் தெரியவில்லை. விளம்பரம் செய்வதில் மிகவும் கைதேர்ந்தவர்கள் நீங்கள். உங்களுடைய விளம்பரம் போதாது என்று எங்களையும் பார்த்து விளம்பரம் செய்யுங்கள் என்று கேட்கிறீர்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் எங்களைப் பார்த்துக் கேட்டார்கள். "நீங்களும் உங்களுடைய பொதுக்கூட்டங்களில் இந்த நல்ல சட்டத்தைப்பற்றி விவசாயிகளுக்குத் தெரிவியுங்கள்" என்று சொல்லி மறைமுகமாக எதிர்க் கட்சிகளையும் ஆளும் கட்சிக்கு ஒரு ஒலிபெருக்கியாகப் பயன்படும்படி மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இங்கே கேட்டுக்கொண்டார்கள். இப்படிப்பட்ட நல்ல யோசனைகளை வழங்குவதில் மிகவும் சாமர்த்தியசாலி நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள். எதிர்க் கட்சிகள் மூலமாகவும் தங்கள் கட்சிக்கு விளம்பரத்தைத் தேடிக்கொள்ள அமைச்சர் அவர்கள் விரும்புகிறார்கள். இந்தச் சட்டத்தில் என்ன நன்மை இருக்கிறது என்று நாங்கள் இதை உங்களுக்காக விளம்பரப்படுத்த வேண்டும் என்று எண்ணுகிறீர்கள்? உங்களுடைய இந்தச் சாதனையை நாங்கள்

[திரு. கோ. சி. மணி] [1980 பிப்ரவரி 11

எடுத்துச் சொல்லும்போது, வேதனையையும் சேர்த்துச் சொல்லுகிற பொறுப்பு எங்களுக்கு இருக்காதா? அதைச் சொல்ல மறந்து விடுவோமா அல்லது தவறி விடுவோமா? அதையும் நிச்சயமாகச் சேர்த்துத்தானே சொல்லப் போகிறோம். அந்தச் சட்டத்தில் இருப்பது என்ன? இருக்க வேண்டியது என்ன? அவைகளை இங்கேயும் எடுத்துச் சொல்வோம், வெளியேயும் எடுத்துச் சொல்வோம். எடுத்துச் சொல்லித்தான் ஆக வேண்டும். இந்தச் சட்டத்தை அமுல்படுத்தும்போது நிலத்திலிருந்து வெளியேற்றம் செய்யப்பட்டவர்களுக்கு எந்த நிவாரணமும் இல்லை. கையகப்படுத்தியிருந்தால், அவர்களுக்கும் எந்த நிவாரணமும் இல்லை. அவர்களெல்லாம் தங்கள் பழைய பாக்கிகளைச் செலுத்த வேண்டும். அதுவும் ஜூன் 30-க்குள் செலுத்த வேண்டும். விவசாயி எப்படிச் செலுத்துவான் என்று எதிர்பார்க்கிறார்கள்? 1973 முதல் 1978 வரை ஒரு விவசாயிக்கு குத்தகை பாக்கி இருந்தால், அந்தப் பாக்கிகளுக்கான முதல் தவணையையும், 1978, 1979, 1980 ஆகிய பசலிகளுக்கான தவணையையும் இந்தப் பசலிக்கான 25 சதவீத வாரத்தையும் விவசாயி செலுத்த வேண்டும் என்றால், எப்படி முடியும் என்று தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

அது மட்டுமல்ல. 25 சதவீதம் நியாய வாரம் நிர்ணயிக்க வேண்டும் என்றாலும், அதற்காக 'ஃபேர் ரெண்ட் ஆக்ட்'படி சமரசத் தாசில்தாரிடம் மனு போட வேண்டும். அதற்குப் பிறகுதான் அது நிர்ணயிக்கப்படும். ஏற்கெனவே இருந்த 40 சதவீதத்திலிருந்து 15 சதவீதம் குறைத்து 25 சதவீதமாகக் கொடுக்கலாம் என்று சட்டம் போடப்படவில்லை. இந்த வாரத்தை நிர்ணயிக்க வேண்டியவர் அதிகாரி. அந்தத் தாசில்தார் என்றைக்கு நிர்ணயிக்கிறாரோ அந்தத் தேதி முதல்தான் 25 சதவீத வாரம் அமுலுக்கு வரும். ஆனால் பாக்கியைச் செலுத்துவது மட்டும் பழைய அடிப்படையிலேயே என்றால் என்ன அர்த்தம்? இப்போது எவ்வளவு குத்தகை பாக்கி இருக்கிறதோ அதைத்தானே கட்ட வேண்டும் என்று கேட்பார்கள். 25 சதவீதம் நியாயவாரம் நிர்ணயம் செய்வதற்கு ஒரு வழி செய்துவிட்டு, குத்தகை பாக்கியை வசூலிப்பதற்கு மட்டும் பழைய முறையை வைத்துக் கொண்டால், அது எப்படி நியாயமாகும்? இதன் மூலம் நிலச்சுவான்தார்களுக்கு நல்லதைச் செய்கிறோமா அல்லது ஏழை எளிய விவசாயிகளுக்கு நல்லதைச் செய்கிறோமா? எனவே இதுவரையில் விவசாயிகளின் மீதிருந்த பளுவைக் குறைத்துக் கொண்டே போய் கடைசியாக மொத்தமாக அவன் தலையில் இப்போது சுமத்திக் கொண்டிருக்கிறோம் என்றால் அது எப்படி நியாயமாகும்?



1980 பிப்ரவரி 11] [திரு. கோ. சி. மணி]

ஆகவேதான் சொல்லுகிறேன், குருவி தலையில் பனங்காயைச் சுமத்தாதீர்கள். குதிரை தலையில் வேண்டுமானால் சுமத்துங்கள், அது தாங்கும். குருவியின் தலையில் பனங்காயைச் சுமத்தினால், பனங்காயும் கீழே விழுந்துவிடும், குருவியும் செத்துவிடும். இந்தச் சட்டத்தில் விவசாயிகளுக்குக் கடன் நிவாரணம் என்று பெயரளவில்தான் இருக்கிறதே தவிர, சட்டத்தில் அப்படி ஏதுமில்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். உள்ளபடியே இந்தச் சட்டம் வந்தபோது, நான் இதைப் பாராட்டுவதாகத்தான் இருந்தேன். ஆளும் கட்சி கொண்டு வரும் சட்டத்தைப் பாராட்டக் கூடாது என்ற எண்ணம் உள்ளவன் அல்ல நான். அவ்வளவு பலகீனமான இயக்கத்தில் நான் இடம் பெற்றிருக்கவில்லை. நல்லது இருந்தால் பாராட்டவும் செய்யலாம், குறைகள் இருந்தால் அதை எதிர்த்தும் பேசலாம். அப்படிப்பட்ட கருத்துக் கொண்டதுதான் திராவிட முன்னேற்றக் கழகம். ஆகையினாலேதான் நான் இந்தச் சட்டத்தைத் துருவித் துருவிப் பார்த்தேன். ரொம்பக் கெட்டிக்காரத்தனமாக இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். விளம்பர மன்னர்களாக அவர்கள் விளம்பரத்திற்காகவே இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்கு ஒரு எடுத்துக்காட்டுதான் இந்தச் சட்டம். மிகவும் சாமர்த்தியமாக சொல்லையெல்லாம் மாற்றம் செய்திருக்கிறார்கள். "சகலமும்" என்ற சொல்லை மாற்றி "அனைத்தையும்" என்று போட்டிருக்கிறார்கள். இதற்கு ஒரு திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த ஆட்சியில் இருப்பவர்களுக்கு மொழியின்மீது இருக்கிற பற்றை வேண்டுமானால் பாராட்டலாமே தவிர, இந்த சட்டத்தைப் பொறுத்த வரையில், ஒன்றுமில்லை என்பதை நான் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆக, கூட்டிக் கழித்துப் பார்த்தால், இதிலே விவசாயிகளுக்கு ஒன்றுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பசலிக்கே நிவாரணம் கேட்கிற விவசாயியைப் பார்த்து, பழைய பாக்கிக்கான முதல் தவணையை ஜூன் 30-க்குள் செலுத்த வேண்டும் என்று கேட்பதிலே நியாயமில்லை. இப்போது நீங்கள் கொண்டு வந்திருக்கிற சட்டம் அமுலுக்கு வந்தால், உண்மையிலேயே எந்த விவசாயியும் பயன்பெறப் போவதில்லை. எனவேதான் மீண்டும் மீண்டும் சொல்லுகிறேன், பழைய பாக்கிகளை ரத்து செய்வதற்கு ஏற்பாடு செய்யுங்கள். அதோடு வெள்ளம் புயல் காரணமாகப் பாதிக்கப்பட்ட கிராமங்களின் பட்டியலை மறுபரிசீலனை செய்து, அவைகளின் எண்ணிக்கையை அதிகரித்து அந்த கிராம மக்களுக்கும் நிவாரணம் போய்ச் சேருகிற வகையில் சட்டத்தில் ஒரு வழிமுறையைச் செய்யுங்கள். இவைகளை

யெல்லாம் விதிமுறைகளில் மாற்றம் செய்வதன் மூலமாகச் செய்ய வேண்டும். அப்போதுதான் இந்தச் சட்டம் ஓரளவுக்காவது பயன்படும் என்று சொல்லி அமைகிறேன். வணக்கம்.

திரு. க. இராமமூர்த்தி: மாற்றுத் தலைவர் அவர்களே, அவையின் முன்னுள்ள 4 மசோதாக்களில் முதலில் 2 மசோதாக்கள் மீது மட்டும் என்னுடைய கருத்துகளைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த முதல் 2 மசோதாக்களும் மிகத் தெளிவாகவும் விளக்கமாகவும் இருக்கின்றன. ஆனால் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குத்தகைதாரர்களுக்கு நிவாரணம் அளிப்பதைப் பொறுத்த வரையில், என்ன காரணத்தாலோ அமைச்சர் அவர்கள் தம்முடைய பொறுப்பை நிறைவேற்றுகிறபோது, சுதந்திரமாக இயங்க முடியாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்றுதான் நான் கருதுகிறேன்,

(பிற்பகல் 6.30)

பொதுவாகவே ஏழைகளுக்கு உதவுகின்ற முன்னேற்றக் கருத்துக்கள் கொண்ட நடவடிக்கைகளை எடுப்பதிலே அமைச்சர் அவர்கள் கொஞ்சம்கூட தயக்கம் காட்டுவதில்லை. ஆனால் இந்த மசோதாவைப் பொறுத்த வரையில், திரும்பத் திரும்ப 6 மாதங்களுக்கு ஒரு தடவை இதே மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். திரும்பத் திரும்ப இதைப் போன்ற மசோதாவைக் கொண்டு வருவதைவிட நிரந்தரமாக ஒரு முடிவை எடுக்க வேண்டுமென்று பலமுறை கேட்டுக்கொண்டுள்ளோம். ஆனால் நிரந்தர முடிவை எடுப்பதிலே தயக்கம் இருப்பதைக் காண்கிறோம். இந்தத் தயக்கம் ஏன் வருகிறது? பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ வேண்டுமென்று எண்ணு கின்றபோது, உண்மையிலேயே அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய சட்டத்தை ஏன் கொண்டுவர முடியவில்லை? பாதிக்கப்பட்டவர்களுக்கு பலன் அளிக்கின்ற சட்டத்தைக் கொண்டுவர முடியாமல் தவித்துக்கொண்டிருக் கிறார்கள் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. இதனுடைய விளைவு, அதனால் பாதிக்கப்பட்ட ஏழை விவசாயிகள் நிரந்தரமாக இந்தக் கடன் சுமை இருக்குமோ என்று பயப்பட வேண்டிய நிலையிலே இருக்கிறார்கள். என்றைக்குத்தான் தீரப் போகிறதோ என்று காத்திருக்க வேண்டிய கட்டா யத்திற்கு ஆளாகிறார்கள்.

புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிலங்களைப் பொறுத்த வரையில், நாம் நன்றாக அறிவோம். எப்படி தொடர்ந்து இரண்டு, மூன்று முறை புயலும், வெள்ளமும் வந்தது என்பதை அமைச்சர் அவர்களும் நன்றாக அறிவார்கள். அமைச்சர் அவர்களே கூட சென்று பார்த்தார்கள். அப்படிப்



பட்ட நிலைமையிலே உள்ளவர்கள், அந்த நிலங்களில் இருந்து விளைகிற பொருள்களை வைத்து ஏற்கெனவே உள்ள கடன் பாக்கியை எப்படிக் கட்ட முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்த நிலங்களை மீண்டும் விவசாயத்திற்கு தகுதியுடைய நிலங்களாக மாற்ற செலவு செய்ய வேண்டும். அப்படியே மாற்றினாலும்கூட, நட்டம் இல்லாமல் பயிரிடுகிற அளவுக்கு நிலத்தின் தரம் உயர ஏறத்தாழ இரண்டு, மூன்று ஆண்டுகள் ஆகும். இந்த சூழ்நிலையில் ஏற்கெனவே உள்ள பழைய பாக்கிகளைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லும்போது, ஏற்கெனவே ஏற்பட்ட நட்டத் தையும் இடியென்று அவர்களுடைய தலையின் மேல் சுமத்துகிற கொடிய காரியத்தை அமைச்சர் அவர்கள், அவர்கள் விரும்பாமலேயே செய்கிறார்கள் என்று தெரிகிறது. அந்த அளவுக்கு அவர் சிறைக் கைதியாக, சுதந்திரமாக இயங்க முடியாமல் அமைச்சரவையிலோ, மற்ற இடங்களிலே இருக்கின்றார் களோ என்ற அச்சம் ஏற்படுகிறது. ஆகவே இதுதான் கொள்கை என்று தெளிவாக வர வேண்டும்.

நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் (இ) இயக்கத்தைப் பொறுத்த வரையில், மிகத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். புயலால் பாதிக்கப்பட்ட குத்தகை தாரர்களுக்கு நிரந்தரமான நிவாரணத்தைக் கொடுத்தாக வேண்டும். ஏற்கெனவே உள்ள கடன் எவ்வளவாக இருந்தாலும், அதைத் தள்ளுபடி செய்ய வேண்டும். அந்த அளவுக்குத் தாங்காது என்று நிலை இருக்கு மானால், நிலச்சுவான்தார்களுக்குத் தள்ளுபடி செய்ய முடியாது என்ற நிலை இருக்குமானால், வருமானம் இல்லாதவர்கள் என்று கருதுபவர்களுக்கு அரசு மானியமாகக் கொடுத்து அவர்களுடைய கடனைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொடர்ந்து வந்திருக்கிற மற்ற ஆண்டுகளிலும் விளைச்சல் சரியில்லை என்பதைத் தெளிவாகக் காண்கிறோம். தொடர்ந்து விவசாயிகள் கடனிலிருந்து மீளவில்லை என்பதை தமிழகத்திலே தொடர்ந்து நடந்து வருகிற விவசாயிகள் போராட்டத்தின் மூலம் அறிய முடிகிறது. கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் கொடுக்கிற அத்தனை சங்கடங்களையும் அரசு சந்தித்தேயாக வேண்டும் என்ற நிலையும், நாள்தோறும் ஒரு அறிவிப்பைச் செய்தாக வேண்டுமென்ற கட்டாயத்திற்கு அரசு ஆளாகி யிருக்கும் நிலையும், சரியல்ல.

இந்தச் சட்டத்திலே சொல்லியிருப்பது . . . .

"subject to the condition that the cultivating tenant has paid or pays the arrears of rent accrued due to the landlord or public trust, as the case may be, before the 30th June 1973 and outstanding on the date of the publication of the proposed Legislation,

and one-third of the rent for each fasli year during the period commencing on the 1st July 1973 and ending with the 30th June 1976, within the time limit specified in the said proposed Act.".

இதை நிதானமாகப் படிக்கிறபோது கொஞ்சம் கொஞ்சமாக ஆனால் ஒட்டுமொத்தமாக ஒரு விவசாயி எவ்வளவு கட்ட வேண்டியது வரும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படி வருகிறபோது ஏற்கெனவே ஏற்றிருக்கிற குத்தகையையும் தந்தாக வேண்டும். இப்படி எந்த அளவிற்கு மேலும் மேலும் விவசாயிகளின் மீது சுமையைச் சுமத்து கிறோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒட்டகத்தின் மீது சுமையை எல்லாம் ஏற்றிவிட்டு. பிறகு ஒரு சிலவற்றை மட்டும் எடுத்துவிட்டு, ஏமாற்றுவதைப் போல இருக்கிறது. ஒட்டகத்தை ஏமாற்றுவதைப் போல மனிதர்களை ஏமாற்ற முடியாது. ஆகவே விவசாயிகள் மீது இந்தக் கடும் சுமையைச் சுமத்துவதால் பலன் இல்லை. தெளிவாகப் பிரச்சினை களை உணரவில்லையென்றால், அந்தச் சங்கடத்தைப் புரிந்து கொள்ள முடியும். ஆனால் இவர்கள் பிரச்சினைகளை முழுவதுமாக உணர்ந்திருக் கிறார்கள். அதை ஏற்றுக்கொண்டும் இருக்கிறார்கள். முதலில் பேச மாட்டேன் என்றாலும், பிறகு அவர்களை அழைத்து வைத்துப் பேசுகிறார்கள். கொஞ்சம் கொஞ்சமாக அவர்களுடைய கோரிக்கைகளுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஓராண்டு, இரண்டாண்டு என்று காலம் கடந்தாலும் கூட, தேர்தலைச் சந்திக்க வேண்டுமே என்ற நிலை வருவதற்கு முன்னாலே சில சலுகைகளை அறிவிக்க வேண்டுமென்ற அளவிற்கு சில காரியங்களைச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. கொஞ்சம் நிவாரணம் அளிக் கிறோம் என்ற நம்பிக்கையை அவர்கள் மத்தியில் ஏற்படுத்தினால்தான் நல்லது என்ற உணர்வு இருக்கிறது என்பதை உணர்ந்திருக்கிறோம். ஆனாலும்கூட சட்ட பூர்வமாகப் பாதுகாப்பு அளிக்க மறுக்கிறோம், தயங்குகிறோம் என்பது இந்த மசோதாவின் மூலமாகத் தெளிவாகத் தெரிகிறது.

தெளிவாக வேண்டுகோள் ஒன்றை இந்த அரசுக்கு விடுக்க விரும்புகிறேன். கடன் இவ்வளவுதான் என்று வரையறுத்து, தாங்கக் கூடியவர்களுக்குச் சலுகை கிடையாது என்று தள்ளுபடி செய்யட்டும். தாங்க முடியாதவர் களுக்கு விவசாயத்தில் ஈடுபட்டு நட்டத்திலே இருப்பவர்களுக்கு, மானியமாகக் கொடுக்கப்படும். எத்தனையோ கோடி ரூபாயை தொழில் நிறுவனங்களுக்குக் கொடுத்து, பிறகு தள்ளுபடி செய்திருக்கிறோம். ஏழை விவசாயிகளுக்காக, அவர்களுடைய வாழ்வு வளத்திற்காக அவர்களுடைய கடனை இந்த அரசு



ஏற்றுக்கொண்டு செயல்படுவதிலே நியாயம் இருக்கிறது, அதில் தவறில்லை என்று சொல்லி அந்த உணர்வோடு இந்த மசோதாவைச் செயல்படுத்த வேண்டுமென்று அமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்து விடை பெறுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே நான்கு மசோதாக்கள் வந்திருக்கின்றன. அதிலே இரண்டு மசோ தாக்கள், புயலால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள குத்தகை தாரர்களை வெளியேற்றுவதிலிருந்து பாதுகாக்கும் சட்ட முன்வடிவுகளாகும். முதலிலே இருக்கின்ற சட்டம் 15—1—1980 வரையில் உள்ளது. அதற்குப் பிறகு அவசரச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்த அவசரச் சட்டம் இங்கே சட்டமாக ஆக்கப்படுவதற்காக வந்திருக்கிற சட்ட முன்வடிவு ஒன்று. நிரந்தரமாகச் சலுகையைக் காட்ட வேண்டுமென்று ஒரு சட்டத்தைக் கொண்டு வரவிருக்கிறோம். நிரந்தரமாகச் சலுகையைக் காட்ட வேண்டு மென்று சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்றால், அது மத்திய அரசுக்குச் சென்று நிறைவேற்றப்பட வேண்டும். இந்த இடைக்காலத்திலே விவசாயிகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே மிகவும் நன்றாக எல்லோரும் பேசினார்கள். அதிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் பேசுகிறபோது, எனக்கு

(பிற்பகல் 6-40)

இருக்கிற சாமர்த்தியத்தைப்பற்றிப் பேசினார்கள். நான் ஒன்றும் அவ்வளவு சாமர்த்தியசாலி இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. இராம மூர்த்தி அவர்கள் பேசுகின்றபோது, வெகு சாமர்த்தியமாகப் பேசினார்கள். என்னுடைய கை கால் கட்டிப் போடப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அந்த வார்த்தையைச் சொல்லவில்லை. சுதந்திரமாக நான் இயங்க முடியவில்லை என்று சொன்னார்கள். அதற்கு அதுதான் அர்த்தம். சிறையிலே வைத்த கைதி மாதிரி இருக்கிறேன் என்று சொன்னார்கள். நான் இங்கு தவித்துக் கொண்டிருக்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் நான் எங்கேயும் தவிக்கவில்லை. சிறைக் கைதியாகவும் இருக்கவில்லை. இங்கு என்னால் முழுச் சுதந்திரமாக இயங்க முடியவில்லை என்றெல்லாம் சொன்னார்கள். இப்படியெல்லாம் மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சட்ட மேலவையிலேயே பேசுவது நல்லதல்ல என்று நான் கருதுவதற்குக் காரணம் இருக்கிறது.

இன்றைக்கு இருக்கின்ற சமுதாயத்திற்கு, இங்கே இருக்கின்றவர்களுக்கு திரு. இராமமூர்த்தி யார் என்று தெரியும், சோமசுந்தரம் யார் என்று தெரியும். ஆனால் 20 ஆண்டுகள், 30 ஆண்டுகள், 40 ஆண்டுகள் அல்லது நூறு ஆண்டுகளுக்குப் பிறகு இதை யாராவது, இந்தச் சட்டமன்றக் குறிப் பேட்டைப் படித்தால், " ஓஹோ இராமமூர்த்தி உண்மையைத்தான் சொல்லி யிருப்பாரோ ? யார் அந்த சோமசுந்தரம், சிறைக் கைதியாக இருந்து கொண்டிருந்தான், சுதந்திரம் இல்லாமல் இருந்திருக்கிறான், அவனால் ஒன்றும் முடியவில்லை" என்றெல்லாம் எதிர்கால சந்ததிகள் தவறாகக் கருத மாட்டார்களா என்றுதான் சொல்கிறேன். அங்கத்தினர் அவர்கள் சற்று முன்கூட்டியே யோசித்துச் சொல்லியிருந்தால், நல்லது என்று சொல்கிறேன். நான் இதைச் சொல்வதற்குக் காரணம் இப்படியெல்லாம் சொல்லுவதை ஒரு பத்து, இருபது ஆண்டுகளுக்குப் பிறகு வருபவர்கள் படிப்பார்கள். இங்கே பேசப்படுவதெல்லாம் குறிப்பேடுகளிலே ஏறுகிறது. அவைகள் பத்திரமாகக் காப்பாற்றப்படுகின்றன. ஆகவேதான் அப்படி எழுதப்படுகின்றபோதே, குறிப்பேட்டிலே சிலவற்றை எடுக்க வேண்டும் என்றும் ஒரு வரைமுறையை வைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காகத்தான் நான் இதை உங்களுக்குத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள் கிறேன். அதுமட்டுமல்ல, நாங்கள் இங்கே ஒரு சட்டம் கொண்டுவருவது என்றால், நான் மட்டுமல்ல அதைக் கொண்டு வருவது. அந்தப் பொறுப்பு என்னிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசு கொண்டுவருகிறது என்பதுதான் பொருள். முதலமைச்சர் அவர்கள் கொண்டுவருகிறார்கள். எல்லா அமைச்சர்களும் கொண்டுவருகிறார்கள். அரசின் சார்பில் அதைக் கொண்டு வருகிறோம் என்பதை நான் இங்கே சொல்கிறேன். அதைத்தான் நான் இங்கே பேசுகிறேன். அவ்வளவுதான். எந்த முடிவு எடுத்தாலும், அந்த முடிவுக்குப் பூரண பொறுப்பாளி, இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுடைய தலைவர், எங்கள் ஆளும் கட்சியினர், முதலமைச்சர் அவர்கள், மற்றும் அமைச்சர்களாகிய நாங்கள் எல்லோரும்தான் என்பதைச் சொல்லிக்கொள் கிறேன். அதே மாதிரி எனக்கு மனதார சரி என்று என்ன மனதிற்குப் படுகிறதோ அதைத்தான் நான் பதிலில் சொல்கிறேன். எங்கள் மனதார சரி எது என்று பட்டதோ அதைத்தான் நான் இங்கே எடுத்து சொல்லிக்கொண் டிருக்கிறேன். அதுவே, மற்ற எல்லோருக்கும் சரி என்று படுமானால், அதைத் தான் நாம் கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



இங்கே பேசுகின்றபோது சுமை ஏறியிருக்கிறது, அந்தச் சுமையை இன்றைக்கு இறக்க வேண்டுமென்றெல்லாம் சொன்னார்கள். நான் இங்கே ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அங்கத்தினர்கள் இந்தச் சட்ட முன்வடிவைப் பூராவாக நன்றாகப் படித்திருக்கிறார்கள். ஆனால் ஏன் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. நானும் அவர்களைப்போல் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன்தான். தஞ்சை மாவட்டத்திலே இருப்பவர்களையெல்லாம் பார்த்துப் பேசியவன்தான். அங்கே சிறு விவசாயிகள் இருக்கிறார்கள். அங்கே கணவனை இழந்த கைம்பெண்கள் இருக்கிறார்கள். மைனர்கள் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் பார்க்கிற போது, யாருக்கு நிவாரணம் என்றால், யார் யார் வெள்ளத்தால் பாதிக்கப் பட்டிருக்கிறார்களோ அவர்களுக்குத்தான் நிவாரணம் கொடுக்கப்படுகிறது. ஆனால் புயலால். வெள்ளத்தால் பாதிக்கப்படுகிறபோது, எப்படி நிவாரணம் கொடுக்கப்படுகிறது என்றால், நாங்கள் அங்கே சொன்னதையே மாண்புமிகு அங்கத்தினர் திரு. கோ. சி. மணி அவர்கள் சொன்னார்கள். நான் சார்ந் திருக்கின்ற கட்சி கொண்டு வந்தது என்பதை நானும் இங்கே பெருமையாகச் சொல்ல வேண்டும். மற்றவர்கள் யாரும் கொண்டுவரவில்லை என்பதை கடைசியிலே பேசிய மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு இருக்கின்ற நிலையில் புயலால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களிலேதான் 5 ஆண்டுகளுக்கு, இந்த 5 பசலிகளுக்கு நிவாரணம் கொடுப்பது நியாயம் என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள். அப்படிக் கொடுக்கப்படுகின்ற நிவாரணத்தை நாங்கள் வந்தவுடனே கொடுத்திருக்கலாமே என்று சொல்வார்கள். ஆனால் இன்றைக்கு இவ்வளவு காலம் கடத்து கொண்டு வருகிறார்களே என்று சொல்வார்கள்.

(அங்கத்தினர் திரு. கோ. சி. மணி அவர்கள் பேசவேண்டுமென்று சைகை காட்டினார்கள்.)

இப்போது வேண்டியதில்லை. உறுப்பினர் சந்தேகங்களை பிறகு கேட்க லாம். நான் பேசி முடிக்கிறவரைக்கும் குறுக்கே பேசாமல் இருக்கலாம். இன் றைக்கு 5 ஆண்டுகள் என்றால், ஏதாவது ஒரு ஆண்டு கட்டினால் போதும் என்று சொல்லிவிட முடியும். ஏதாவது ஒரு ஆண்டு என்றால், எந்த ஆண்டு என்று கேட்பார்கள்? 1383 ஆம் பசலியா, 1384 ஆம் பசலியா, 1385 ஆம் பசலியா, 1386 ஆம் பசலியா, 1387 ஆம் பசலியா என்றால், எந்தப் பசலி என்று சொன்னால், விவசாயிக்கு குத்தகைதாரருக்கு எது நன்மை என்று ஆராய்ந்து பார்த்தேன், எனக்குத் தெரியவில்லை. உறுப்பினர்க்கு நான்

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1980 பிப்ரவரி 11

இப்போது ஒன்றைத் தெரிவித்துக்கொள்வேன். அது விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் தெரியும், குத்தகைதாரராக இருந்தாலும் தெரியும், குத்தகைக்கு விட்டவர்களாக இருந்தாலும் தெரியும். குத்தகைதாரர்கள் கொஞ்சம் சாமர்த்தியசாலிகளாக இருந்திருந்தால், வாங்கிக்கொண்டிருப் பார்கள். குத்தகை எடுக்கிறபோது, அந்த விவசாயி கொஞ்சம் பஞ்சையாக இருந்தால், அவன் நிலத்தையே வாங்கிக்கொண்டிருப்பார்கள். குத்தகை எடுத்தவன் சாமர்த்தியசாலியாக இருந்தால், அவன் கொடுக்காமல் இருப்பான். இதைப் பார்க்கிறபோது, எந்த பசலிக்கானாலும், எல்லா பசலிக்கும் தள்ளு படியானாலும், மொத்தமாகக் கட்டியிருந்தாலும், கட்டவேண்டியது ஒரு வருடத்திற்குக் கட்டினால் போதும். அந்த வருடம் எந்த வருடம் என்பதை என்னால் தெரிந்துகொள்ள முடியாத காரணத்தினால்தான், நான் என்ன செய்தேன் என்றால், இந்த 5 பசலியில் ஒருவர் வெள்ளத்தால், புயலால் பாதிக்கப்பட்டிருந்தால், ஒவ்வொரு பசலியிலும் ஐந்தில் ஒரு பங்கு விதம்கூட வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லிக்கொள்கிறேன். இன்றைக்கு எப்படி கட்டவேண்டுமென்றால், எந்தப் பசலிக்கு கட்டியிருந்தாலும் அதை வரவு வைத்துக்கொள்வது என்று இருக்கிறது. 1386 ஆம் பசலிக்கு மட்டும் கட்ட வேண்டுமென்று ஒரு குறிப்பிட்ட பசலி என்று போட்டுவிட்டால், அவர்களுக்கு நன்மை இல்லை. அவர்கள் 1385-லே கொஞ்சம் கட்டியிருந்தாலும், 1384 ஆம் பசலிக்கு ஏதோ ஒரு பகுதி கட்டியிருந்தாலும், அந்தத் தவணை முடியாது. அவர்கள் ஒரு தடவை கட்டியிருந்தாலும், அதுவும் வரவு வைத்துக்கொள்ளப் படும் 5 பசலியில் அல்லது 3 பசலியில் அல்லது 1 பசலியில் கட்டியிருந்தாலும், அதையெல்லாம் கட்டினதாக எடுத்துக்கொள்ள வேண்டும். அவைகளை யெல்லாம் ஒன்றாகக் கூட்டி ஒரு வருடத்திற்கு, ஒரு பசலிக்கு வருகிறதா என்று பார்க்க வேண்டுமென்று சொல்கிறேன். ஒரு பசலிக்கு ஒரு தாம், இரண்டு தாம் என்று கட்டியிருந்தாலும், அதையெல்லாம் ஒன்றாகக் கூட்டி, ஒரு பசலிக்கு வைத்துக்கொள்ளலாம். கட்டாமல் இருந்தால், ஒரு பசலிக்குக் கட்ட வேண்டும். 5 ஆண்டில் ஒரு பசலிக்குத்தான் கட்ட வேண்டும். இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறபோது, நான் ஆளும் கட்சியிலே இருந்தேன். 1972-ல் 1382 ஆம் பசலிக்கு கட்ட வேண்டுமென்று சொன்னார்கள். இதனால் நன்மை அடைந்தவர்களும் உண்டு, அடையாதவர்களும் உண்டு. சில பேர்கள் சில பசலிகளுக்குக் கட்டிவிட்டார்கள். அந்த 5 பசலியில் எதற்குக் கட்டி இருந்தாலும், அவைகளை எல்லாம் ஒன்றாகக் கூட்டி, மீதி கட்டவேண்டி யிருப்பதைக் கட்ட வேண்டும். கட்டியது போக மீதியைத்தான் கட்ட வேண்டும் என்று இந்தச் சட்டம் சொல்கிறது. எல்லாவற்றையும் ஒன்றாக,



1980 பிப்ரவரி 11] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

ஒரே மொத்தமாகக் கட்ட வேண்டும் என்று அப்போது சட்டம் கொண்டு வந்தோம். அப்போது அப்படிக் கொண்டு வந்தோம். ஆனால் இன்றைக்கு ஒரு பசலிக்கு 3 ஆண்டுகளிலே கட்ட வேண்டும் என்று தவணை கொடுத்திருக் கிறோம். அதிலேயே ஒரு திருத்தம். ஒரு முற்போக்கான முயற்சி. ஒரு நல்ல முறை. அதிலும் கணக்கு என்னவென்றால், கட்டியதையெல்லாம் வரவில் வைத்துக்கொண்டு, கட்டவேண்டியதை 3 ஆண்டிலே கட்ட வேண்டும் என்றுதான் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம் என்ப தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்போது எவ்வளவு கட்டியிருக்கிறார்கள்? வேண்டுமென்றால் குறித்து வைத்துக்கொள்ளுங்கள். நான் முதலில் சொல்லி விடுகிறேன். பிறகு வேண்டுமானால் சந்தேகம் கேட்டுக்கொள்ளுங்கள். என்னிடத்தில் பதில் கேட்க விரும்புகிறீர்கள். நீங்கள் கேட்பது பதிவாக வேண்டும் என்று நினைக்கிறீர்கள். பதிவானால் மட்டும் போதாது. நீங்கள் விளம்பரத்திற்காகக் கேட்கிறீர்களா ? நீங்கள்தான் விளம்பரத்தை விரும்ப மாட்டீர்களே. அப்போது எவ்வளவு என்று நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தள்ளிக் கொடுக்கப்பட்டது எவ்வளவு தெரியுமா ? ஏறக்குறைய 3 கோடி ரூபாய்தான் அன்றைக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் இன்றைக்கு இருப்பது எவ்வளவு தெரியுமா ? 30 கோடி ரூபாய். ஆனால் அந்த 30 கோடி ரூபாயில் தள்ளுபடி கொடுப்பது எவ்வளவு தெரியுமா ? ஏறத்தாழ 22 கோடி ரூபாயிலிருந்து 23 கோடி ரூபாய் வரையில் இன்றைக்குத் தள்ளுபடி கொடுக்கப்படுகிறது. அதைவிட இப்போது முற்போக்காக இது இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது மற்றவர்களுக்கும் தெரிகிறது. மீதி 7½ கோடி ரூபாய்தான் வருகிறது. பாதிக்கப்பட்டிருக்கின்ற சிறிய விவசாயிகள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதாவது சிறிய விவசாயிகள், அதே நிலத்தையே நம்பியிருக்கின்ற சிறிய விவசாயிகள் இருக்கிறார்கள். அந்த நிலத்தையே நம்பியிருக்கின்ற விதவைகள் இருக்கிறார்கள். எல்லாவற்றையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். இந்த நிலத்தையே நம்பியிருக்கின்றவர்களுக்கு எவ்வளவு சங்கடங்கள் ஏற்படும்? பூராவாகவே தள்ளுபடி செய்துவிட்டால், அவர்கள் சங்கடத்திற்கு ஆளாவார்கள் என்பதைப் பார்க்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 6-50)

ஒத்திவைப்பதென்பது, ஒட்டகத்தின் மேலே சுமையை ஏற்றியதென்று சொன்னார்கள். ஒட்டகத்தின் மேலே சுமையை ஏற்றவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். எந்தப் பசலிக்கு வந்தது என்ப[illegible] நான் படித்துக்

காண்பித்தேன். 1972 ஆம் ஆண்டு, 1973 ஆம் ஆண்டு, 1974 ஆம் ஆண்டு, 1975 ஆம் ஆண்டு, 1977 ஆம் ஆண்டு—இந்த ஆண்டுகளில் யார் ஆட்சியில் இருந்தார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒட்டகத்தின் மேலே சுமையை அரசு ஏற்றி வைத்திருக்கிறது என்றால், 1972-ல் ஏன் சுமையை ஏற்றினார்கள்? 1973-ல் ஏன் சுமையை ஏற்றினார்கள்? 1974 ஆம் ஆண்டு ஏன் சுமையை ஏற்றினார்கள்? 1977-ல் எமர்ஜன்சி நிலைமை இருந்தது. எந்தச் சட்டம் போட்டாலும், கேட்பாரில்லை. ஏன் அப்போது ஏற்றினார்கள்? இந்தமாதிரி ஏற்றினது பூரா நீங்கள். 5 வருஷம், 6 வருஷம் குத்தகை பாக்கி இருக்கிறது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்து 2½ ஆண்டுகள்தான் ஆகின்றன. 7 ஆண்டுகள் நீங்கள் சுமையை ஏற்றி யிருக்கிறீர்கள். ஒட்டகத்தின் மேலே சுமையை ஏற்றிய நீங்கள், ஏன் அதை இறக்கவில்லை என்று எங்களைக் கேட்கிறீர்கள். இன்றைக்கு 1389வது பசலி. ஆனால் 1382-வது பசலிக்கு யார் ஏற்றியது? 1393-வது பசலிக்கு யார் ஏற்றியது? 1384-வது பசலிக்கு யார் ஏற்றியது? 1385-வது பசலிக்கு யார் ஏற்றியது? இதையெல்லாம் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல. ஒட்டகத்தின் மேல் சுமையை ஏற்றிவிட்டீர்களென்று சொல்கிற திரு. இராமமூர்த்தியை ஒன்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். 1955-ல் என்ன புயல் அடித்தது தெரியுமா? இரண்டு முறை புயல் அடித்தது. தஞ்சையிலே அடித்தது. ஆனால் குத்தகை தள்ளு படியாகவில்லை. 1963-லே கடலூரிலே புயல் அடித்தது. திரு. இராமமூர்த்தி அவர்களுடைய ஊரிலே அடித்தது. அது தஞ்சைக்கும் வந்தது. அப்போதும் குத்தகையைத் தள்ளிக் கொடுக்கவில்லை. 1964-லே புயல் அடித்தது. குத்தகையைத் தள்ளிக் கொடுக்கவில்லை. 1966-லே மறுபடியும் அடித்தது. 1966-லே கடலூரில் அடித்தது. நாகையிலும் அடித்தது. குத்தகையை யாரும் தள்ளிக் கொடுக்கவில்லை. சேர்த்துக் கொடுத்தார்கள். இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம், நாங்கள் இதைச் செய்தோம், இந்த அரசு என்ன செய்தது என்று நீங்கள் கேட்டால் நாட்டு மக்கள் அதை ஏற்றுக்கொள்வார்கள், அது உங்களுக்குப் பெருமையாக இருக்கும். உங்கள் வாதத்திலே அப்போது நியாயமிருக்கும். அந்தக் காலத்தில் சொல்வார்கள். எப்போதும் பிச்சை போட்ட மூதேவி இன்றைக்கு ஏன் பிச்சை போடவில்லை, எப்போதும் பிச்சை போடாத மகராசி இன்றைக்கும் போடவில்லை என்று. அதுபோல நீங்கள் மகராசியாக இருக்கிறீர்கள், நாங்கள் மூதேவியாக இருக்கிறோம் (சிரிப்பு). கணக்கு இருக்கிறது, அதைப் பாருங்கள். எத்தனை வருஷங்கள் புயல் அடித்திருக்கிறது என்பதைப் பாருங்கள். 1955-லிருந்து வருஷா வருஷம்



புயல் அடித்திருக்கிறது. ஒட்டகத்தின் மேலே சுமையை ஏற்றியவர் திரு. இராமமூர்த்தி அவர்கள். 1975-76-லே அவர் கட்சி ஆட்சி இருந்தது. குடியரசுத் தலைவர் ஆட்சி இருந்தது. அப்போது, இந்தியப் பேரரசின் முடி சூடா மன்னனாக—மன்னியாக—(சிரிப்பு) இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இருந்தார்கள். ஏன் செய்யவில்லை? எனக்குத் தெரியும், அவருக்குத் தெரியும். தஞ்சை மாவட்டத்தில் யாரிடத்தில் நிலமிருக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்களுக்குத் தெரியும். ஆனால் இதுவரைக்கும் செய்யாத அவர்கள், நீங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டிருக் கிறார்கள். இப்போதாவது அந்த உணர்வல்ல, அந்த விவசாயக் குத்தகை தாரர்கள்மீது அவர்களுக்கு நல்லெண்ணம் வந்ததற்காகப் பாராட்டுகிறேன். நிரந்தரமாக அந்த எண்ணம் அவர்களுக்கு இருக்க வேண்டுமென்று நான் வேண்டிக்கொள்கிறேன். ஆனால் இன்றைக்கு இதற்கு முன்பு செய்ததைவிட திறம்பட நன்றாகச் செய்திருக்கிறோம். ஒரு ஆண்டில் கொடுக்க வேண்டிய தில்லை, மூன்று ஆண்டுகளில் கொடுக்கும்படியாக இந்தச் சட்டமுன்வடிவில் வகை செய்திருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. சி. மணி: மாற்றுத் தலைவரவர்களே, அமைச்சரவர்களை நான் கேட்பது ஒரு விளக்கம்தான். பேசுவதற்காக அல்ல. இந்தச் சட்டத்திலே வெள்ளம், புயலால் பாதிக்கப்பட்டது நிலங்களா, வருஷங்களா? அந்த நிலங்களிலே சாகுபடி செய்கிற குத்தகைதாரர்களுக்கு நிவாரணமா அல்லது அந்தப் பசலிக்கு நிவாரணமா? இது தெரிய வேண்டும். அமைச்சரவர்கள் 5 வருஷங்களுக்கு வெள்ள நிவாரணமென்று சொன்னார்கள். தமிழ் நாட்டில் இருக்கிற அத்தனை குத்தகைதாரர்களுக்கு அது பொருந்தும் இல்லையா? அடுத்து, நாங்கள் போட்ட சட்டம், அதாவது நீங்களும், நானும் ஒன்றாக இருந்து, நாம் போட்ட சட்டம் எந்தப் பசலிக்கு என்று தெரியாமல் தடுமாறுவதாகச் சொன்னார்கள். நான் அதற்கு விளக்கம் கூற விரும்புகிறேன். 1972 ஆம் வருஷத்திலே நடப்புப் பசலிக்குரிய குத்தகை பூராவும் செலுத்தினால், அதற்கு முந்தியிருக்கிற அனைத்து பாக்கிகளும் ரத்தாகுமென்பது அந்தச் சட்டத்தின் நோக்கம். அதுபோல 1980 ஆம் வருஷத்தில், இந்த வருஷத்துக்குரிய குத்தகை அனைத்தையும் செலுத்தினால், இதற்கு முந்தியிருந்த குத்தகை பாக்கிகள் அத்தனையும் ரத்து என்று அரசு சொன்னால் என்ன? மொத்தம் 30 கோடியில் 22½ கோடி ரூபாயைத் தள்ளி விட்டோமென்று அரசு சொல்லுகிறது. இன்னும் இருப்பது 7½ கோடி ரூபாய் தான். ஏற்கெனவே அதிகமாகத் தள்ளிக் கொடுத்திருக்கிற அரசு, இதற்காக ஏன் பயப்பட வேண்டும்? 5 வருஷத்தையும் ஒன்றாகக் கூட்டி—சட்டத்தில் அப்படி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை—நீங்கள் படியுங்கள் . . . .

[1980 பிப்ரவரி 11

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாற்றுத் தலைவரவர்களே, மன்னிக்க வேண்டும். நான் முதலிலேயே தெரிவித்துக்கொண்டேன். எங்களுடைய எண்ணங்களைத்தான் சட்டங்களாக்கித் தருகிறோம். எங்களுடைய எண்ணங்களுக்கு சட்ட உரு கொடுப்பதுதான் செயலாளர் களுடைய பணி. இப்படி இருக்கிறது, அப்படி இருக்கிறது, அதை நீங்கள் படியுங்கள் என்று சொல்லுவது, யாரோ எழுதி வைத்திருப்பதைப் படிப்பது என்று சொல்லுவது தவறான கருத்தாகும். அப்படிச் சொல்வது நல்லதல்ல.

**மாற்றுத் தலைவர் (டாக்டர் இரா. சனார்த்தனம்) :** அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** எனக்குக் கிடைத்த தகவலை மட்டும் தான் நான் அவைக்குத் தெரிவிக்க முடியும்.

**திரு. செ. முத்துசாமி :** திரு. அறிவழகன் அவர்கள் எதற்காக கைது செய்யப்பட்டார் என்று சொல்லப்படவில்லை என்பதை மட்டும் சுட்டிக் காட்டுகிறேன்.

## 2. தகவல் கோரல்.

## ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து.

**திரு. சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். அதுபற்றிய நிலையை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அது பரிசீலனையில் இருக்கிறது. அது பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமானால், உறுப்பினர் என்னுடைய அறைக்கு வந்து தெரிந்துகொள்ளலாம்.

**திரு. சோ. ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, நேற்றைய தினம் தலைவர் அவர்கள் இல்லாத நேரத்தில் என்னுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பை அவையின் செயலாளர் அவர்களிடம் கொடுத்தேன். அந்தத் தீர்மானம் அனுமதிக்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்ற தகவல் எனக்குத் தரப்படவில்லை என்பதால்தான் அதை இங்கே எழுப்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இதற்கு மேல் அவையில் அறிவிப்பது வழக்கமில்லை. எனவேதான், உறுப்பினர் அவர்கள் என்னுடைய அறைக்கு வந்தால் தகவல் கிடைக்கும் என்று சொன்னேன்.





**திரு. சோ. ஆறுமுகம் :** அந்த ஒத்திவைப்புத் தீர்மானம் மிகவும் அவசரமானது . . . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திருப்பித் திருப்பிக் கேட்டுக் கொண்டிருந்தால், என்ன பொருள்? இல்லைதான் வழக்கம். அதற்குமேல் கேட்டுக் கொண்டே போனால் என்ன செய்வது ?

**திரு. சோ. ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, உறுப்பினர்களுக்கு சில நேரங்களில் தலைவரின் அறைக்குச் சென்று சந்திக்க வாய்ப்பில்லாமல் இருக்கலாம் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அப்படி ஒரு நாளும் நினைக்க வேண்டிய அவசியமில்லை.

**திரு. சோ. ஆறுமுகம்:** உறுப்பினர்களாகிய நாங்கள் அவையில்தான் இந்தப் பிரச்சினைகளை எழுப்புகிறோம். அதுபற்றி எந்தத் தகவலும் எனக்குக் கிடைக்கவில்லை. எனவேதான் . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மீண்டும் மீண்டும் அதையே கேட்டுக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம் ? அந்தத் தீர்மானம் பரிசீலனையில் இருக்கிறது என்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். தயவு செய்து உறுப்பினர் அவர்கள் உட்கார வேண்டும்.

**திரு. சோ. ஆறுமுகம் :** முக்கியமான பொருள் என்பதால்தான், ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொடுக்கிறோம். அதைப்பற்றி எந்தத் தகவலும் எங்களுக்குக் கொடுக்கவில்லை என்றால், அது எப்படி முறையாகும் ? இப்படிச் செய்தால் சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் எப்படி எங்கள் பணியைச் செய்ய முடியும் ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதைத்தான் முதலிலேயே சொன்னேன். அந்தத் தீர்மானம் பரிசீலனையில் இருக்கிறது என்றால், அது ரத்தாகவில்லை என்றுதான் பொருள். அது அவை முன் வருவதற்காகத்தான் அப்படிச் சொல்லப்படுவது வழக்கம்.

## 3. ஒத்தி வைப்புத் தீர்மானங்கள்.

### (1) சென்னை, இராயப்பேட்டைப் பகுதியில் வாழும் மக்களின் உடைமைக்கும், உயிருக்கும் பாதுகாப்பற்ற நிலை உருவாகியிருப்பது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள், சென்னை இராயப்பேட்டைப் பகுதியில் வாழும் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பற்ற நிலை உருவாகி இருப்பது குறித்து ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு ஒத்திவைப்புத் தீர்மான விதிகளின் கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாக விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு வாரத்திற்கு முன்பாக, சென்னை, இராயப்பேட்டை பகுதியில் ஒரு தெருச் சண்டை—அது தெருச் சண்டை அல்ல, ஒரு பிரிவினரும், இன்னொரு பிரிவினரும் கோஷ்டியாகப் பிரிந்துகொண்டு—ஒரு நாள் முழுவதும் நடைபெற்றிருக்கிறது. காலையில் துவங்கிய சண்டை பகல் முழுவதும் தொடர்ந்து நடந்து, இரவு முழுவதும் நடந்திருக்கிறது. அதுவரையில் யாருடைய தலையீடும் இல்லாமல் அது நடைபெற்று, அடுத்த நாள் காலையில்தான் அங்கே போலீஸ்காரர்கள் வருகிற நிலை ஏற்பட்டிருக்கிறது.

சென்னையைப் பொறுத்தவரையில், பல நேரங்களில் காவல் துறையினர் இது போன்ற சம்பவங்கள் நடைபெறும்போது, உடனடியாகச் செயல்படுவதில்லை. இதற்கு முன்பு இதைப்போன்ற சம்பவங்கள் பீட்டர்ஸ் ரோடு போன்ற மற்ற இடங்களில் நடைபெற்றபோதும் காவல் துறையினர் அதை அடக்க விரைவில் வருவதில்லை. இப்படிப்பட்ட பகுதிகளில் உள்ள ஒரு 40, 50 பேர் ஒன்றாகக் கூடி, தங்கள் இஷ்டம் போல் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்கிற நிலையை உருவாக்கிவிடுகிறார்கள். அது குறித்து இங்கே ஒன்றைக் குறிப்பிடுவது தவறல்ல என்றே கருதுகிறேன். "அண்டர்கிரவுண்ட் ஆக்டிவிட்டீஸ்" என்று சொல்லுகிற அளவில் கள்ளச் சாராயம் போன்ற தொழிலில் ஈடுபட்டுள்ள சமூக விரோதிகள் பெரும்பாலும் காவல் துறையோடு வேறு பல நிலைகளில் தொடர்புள்ளவர்களாக இருப்பதால் தைரியமாக, காவல் துறையினர் நம்மீது நடவடிக்கை எடுக்கமாட்டார்கள் என்ற உணர்வோடு, இப்படிச் செயல்படுகிறார்கள். அவர்கள் அப்படிச் செயல்படுகிறபோது, காவல் துறையினர் தலையிட்டு அதைத் தவிர்க்க முடியவில்லை என்றால், அதன் விளைவாக அந்தப் பகுதியில் குடியிருக்கும் மக்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் ஆபத்தாக முடிகிறது.



இப்படிப்பட்ட சம்பவம் ஜாயிட்ஸ் காலனியில் என்னுடைய வீட்டிற்கு எதிரிலேயே நடைபெற்றிருக்கிறது. இதுவே என்னுடைய கிராமமாக இருந்திருந்தால், அதைச் சுலபமாக என்னால் சமாளித்திருக்க முடியும். ஆனால் சென்னை நகரைப் பொறுத்த வரையில், இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறும்போது, இந்தச் சம்பவங்களைப் பார்ப்பவர்கள்கூட காவல் துறைக்குத் தகவல் கொடுக்க மிகவும் அஞ்சுகிறார்கள். காரணம், காவல் துறைக்குத் தகவல் கொடுத்தால், அதைத் தொடர்ந்து இந்தச் சமூக விரோதிகள் அப்படித் தகவல் கொடுப்பவர்களுக்கு நேரடியாகத் தொந்தரவுகளை உருவாக்குவார்கள் என்று அஞ்ச வேண்டியிருக்கிறது. காவல் துறையாலும் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க முடியவில்லை. மேலும், சென்னை நகரில் பொது மக்களிடமிருந்து காவல் துறைக்கு ஒத்துழைப்பு எதுவுமில்லை என்று சொல்லப்படுகிறது. இதன் காரணமாக காவல் துறை செயல்பட முடியவில்லை என்றும் சொல்லப்படுகிறது. ஆனால், என்னைப் பொறுத்த வரை, ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சென்னை நகரில் இருப்பவர்கள் அநேகமாக 100-க்கு 99 பேர் அலுவலகங்களுக்குச் செல்கிறார்கள் . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் இவ்வளவு நேரம் எடுத்துக்கொண்டு பிரச்சினையை விவாதித்துக் கொண்டிருக்கக் கூடாது. தீர்மானத்தினுடைய அவசியத்தை மட்டும் விளக்குவதற்குப் பதில், சென்னை நகரம் முழுவதிலுள்ள மக்கள் பற்றிப் பேசிக்கொண்டிருப்பது நல்லதல்ல.

**திரு. க. இராமமூர்த்தி :** ஆகவே, அவர்கள் கம்ப்ளெயின்ட் கொடுக்கவோ, கோர்ட்டுக்கு சாட்சி சொல்லவோ வருவதில்லை. அவர்களை அப்படி வர வேண்டுமென்று எதிர்பார்ப்பதும் சரியல்ல. காரணம் அவர்களுடைய வேலைக்கு இதனால் குந்தகம் ஏற்படும். நான் இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம், தற்போது இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறும் போது, காவல் துறை உடனடியாக இயங்காமல் இருந்துகொண்டிருக்கிறது. நகரில் இப்படிப்பட்ட நிலைமை தொடர்ந்து கொண்டிருக்கிறது. இராயப்பேட்டையில் நடைபெற்றதைத் தொடர்ந்து, பீட்டர்ஸ் ரோடில் நடைபெற்றிருக்கிறது, அதற்கு முன்னாலே வேறு ஒரு பகுதியில் நடைபெற்றிருக்கிறது. இதற்கு பெரும்பாலும் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்களே காரணமாக இருக்கிறார்கள். ஒரு ஏரியாவிலே இருப்பவர்கள் இன்னொரு ஏரியாவிற்குச் சென்று தங்கள் கள்ளச் சாராயத்தை விற்று விடுகிறார்கள் என்பதைத் தொடர்ந்து இப்படிப்பட்ட சண்டைகள் நடைபெறுவதாக

எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அதன் காரணமாகவே இந்தச் சம்பவங்கள் சென்னை நகரெங்கும் தொடர்ந்து நடைபெறுகின்றன. காவல் துறையின் போக்கு காரணமாகவும், சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுவதன் காரணமாகவும், பொது மக்களுக்குப் பாதுகாப்பற்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மேலும் நகரின் பல்வேறு பகுதிகளில் இந்த நிலைமை தொடர்ந்து பரவக்கூடிய ஆபத்து இருப்பதான அச்ச உணர்வு பொது மக்களிடத்திலே இருப்பதால், பொதுமக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்புத் தருகிற தன்மையைப்பற்றி விவாதிக்க வாய்ப்பளிக்கும் வகையில் அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-10)

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** மாண்புமிகு தலைவர் அவர்களே, 31—1—1980 அன்று மதியம் 1 மணி அளவில் ஐஸ் அவுஸ் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட முத்தையா முதலி தெருவில் ஸ்ரீதரன், அவருடைய சகாக்களான மாரியப்பன் மற்றும் குமாருடன் இருந்த சமயம் மணிமாறன் என்கின்ற மன்று தன்னுடைய சகாக்களான பழநி மற்றும் நாராயணன் ஆகியோர்களுடன் ஸ்ரீதரனையும் அவருடைய சகாக்களையும் தாக்கினார். இத்தாக்குதலை ஸ்ரீதரன் எதிர்த்த சமயம் எதிரிகள் கத்தியால் அவரைத் தாக்கி, காயங்களை ஏற்படுத்திவிட்டு ஓடிவிட்டனர். தகவல் வரப்பெற்றதும் காவல் துறையினர் சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து ஒழுங்கைப் பராமரித்தனர். மேற்கொண்டு இத்தகு நிகழ்ச்சிகள் நடவாது இருந்திட காவல் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீதரன் கொடுத்த புகாரின் பேரில் டி-3 ஐஸ் அவுஸ் காவல் நிலையத்தில் இ. பி. கோ. 324 பிரிவின் கீழ் வழக்கு ஒன்று குற்ற எண் 183/80 ஆகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகள் தலைமறைவாக இருப்பதால் அவர்களைக் கைது செய்வதற்குத் தனிக் குழு ஒன்று ஐஸ் அவுஸ் காவல் நிலைய ஆய்வாளரின் தலைமையின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. தற்சமயம் அப்பகுதியில் அமைதி நிலவுகிறது. இம்மாதிரியான குற்றங்கள் நிகழாமலும் தடுப்பதற்கான ரோந்து சுற்றுப் பணியில் 12 ரோந்து வண்டிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. தற்சமயம் அந்தப் பகுதியில் சட்டம், ஒழுங்கு நிலைமை சீராக ஒழுங்குபடுத்தப்பட்டு வருகின்றது. எனவே, இதற்காக இந்த அவையில் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் விளக்கத்திற்குப் பிறகு, இந்தப் பொருள் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்று கருதி என் அனுமதியை மறுக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் அவையில் இல்லாததால் அவர் கொடுத்திருந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பு தள்ளப்படுகிறது.

**(2) வடாற்காடு மாவட்டத்தில் ஆரணி, திமிரி கிராமங்களில் மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பது குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் வடாற்காடு மாவட்டத்தில் திமிரி கிராமத்தில் மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதைக் குறித்து ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு விதிகளுக்குட்பட்டு வருகிறது என்பதைச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில், ஆரணி, திமிரி போன்ற பகுதிகளிலும், மற்ற பல பகுதிகளிலும் மின்சாரத் தடை மிக அதிகமாக இருப்பதால், விவசாயப் பணி சீர்கெடுகிறது. சில நேரங்களில் தவிர்க்க முடியாத சூழ்நிலையின் காரணமாக மின்சாரத் தடை ஏற்படுவது வழக்கம் என்றாலும், கடந்த பல நாட்களாக நாள் முழுதும் விவசாயத்திற்கு மின்சாரம் கிடைக்காத நிலை இருக்கிறது. இதன் காரணமாக விளைந்த பயிர் கூட சாவியாகிப் போய்விடுமோ என்ற அச்சமும் நிலவி வருகிறது. இப்படிப்பட்ட நிலைமை வட ஆற்காடு மாவட்டத்தின் பல பகுதிகளில், அதிலும் குறிப்பாக ஆரணி, திமிரி போன்ற பகுதிகளில் இருக்கிறது. இதனால் பெருமளவிற்கு விவசாயத்திற்குத் தீங்கு ஏற்படுகிற நிலை இருக்கிறது. இதைத் தவிர்ப்பது மிகவும் அவசியம். மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலைமையை மாற்ற, நடவடிக்கைகளை எவ்வாறு எடுக்கலாம் என்பதுபற்றி விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கோருகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு வாரமாக குறிப்பாக மின் உற்பத்தியில் ஏற்பட்ட பற்றாக்குறையின் காரணமாக, பல்வேறு இடங்களில் மின் நிறுத்தத்தை மின்

வாரியம் கையாள வேண்டி வந்தது. குறிப்பாக, நெய்வேலி அனல் மின் நிலையத்திலிருந்து நமக்குக் கிடைக்க வேண்டிய அளவு மின்சாரம் கிடைக்காதது மிகப் பெரிய குறையாக இருந்து வருகிறது. சுமார் 600 மெகாவாட் கொடுக்க வேண்டிய நெய்வேலி மின்சார நிலையம் 200 மெகாவாட் அளவு கூட கொடுக்காமல் இயங்கி வருகிறது. இந்த நிலை குறித்து மத்திய அரசினுடைய அமைச்சகத்திற்குக் கடிதம் ஒன்று எழுதப்பட்டிருக்கிறது. நெய்வேலி நிர்வாகத்தில் என்ன தடங்கல் என்பதைப்பற்றி அந்த நிர்வாகத்தினரோடு பேசுவதாக இருக்கிறேன். இந்தப் பற்றாக்குறையின் காரணமாகத்தான் இந்தச சங்கடங்கள் ஏற்பட்டன.

ஆனால் நேற்றும் அதற்கு முன் தினமும், கேரள மாநில அரசோடு பேசி கேரளாவிலே இருந்து எந்த அளவுக்கு அதிகமான மின்சாரத்தைப் பெற முடியுமோ அந்த அளவுக்குப் பெற அது குறித்துப் பேசப்பட்டிருக்கிறது. கேரள மாநில அரசும் அவர்களுடைய சொந்தத் தேவையையும், ஏற்கெனவே கர்நாடகாவுக்குத் தருவதாக உறுதியளித்திருக்கிற தேவையையும் உறுதி செய்துகொண்டு, அதற்குப் பிறகு எவ்வளவு மிச்சம் இருந்தாலும், அதை தமிழகத்திற்கு அனுப்புவதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக ஓர் ஒப்பந்தத்தை அந்த அரசோடு தமிழக அரசு செய்துகொண்டிருக்கிறது. அந்த ஒப்பந்தத்தின்படி, 3 ஆண்டுகளுக்கு கேரள அரசு அதனுடைய உபரி மின்சாரத்தை தமிழகத்திற்குத் தரும். யூனிட் ஒன்றுக்கு 28 பைசா என்று தமிழக அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது. கேரள அரசு தருகின்ற அந்த மின்சாரத்தை வைத்துக்கொண்டு, அதே போல வருங் காலத்திலே நெய்வேலியில் கொஞ்சம் தீவிரமாக மின் உற்பத்தியைப் பெருக்குவோமானால், அதனையும் வைத்துக்கொண்டு, ஏற்பட்டிருக்கிற நிலைமையைச் சமாளிக்க முடியும் என்று அரசு நம்புகிறது. தொடர்ந்து நடைமுறையில் ஏற்பட்டு வருகிற பிரச்சினையாக இது இருப்பதாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல திடீரென்று ஏற்பட்டுவிடவில்லை என்பதாலும், இந்தப் பிரச்சினை நீண்ட நாட்களாகவே இருப்பதாலும், இதற்காக இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்துப் பேசுவதால், உடனடியாகத் தீர்வு காணும் வாய்ப்பு இல்லாததாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று வற்புறுத்த மாட்டார்கள் என்று தெரியும். ஆகவே அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டியது அவசியமில்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு, இந்தப் பொருள் குறித்து அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று கருதி, என் அனுமதியை மறுக்கிறேன்.

(3) சென்னை நகரில் பெரும்பாலான கல்லூரிகள் மூடப்பட்டிருப்பது குறித்தும், கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம் குறித்தும், ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டிருப்பது குறித்தும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள், திரு. க. இராமமூர்த்தி, திரு. பி. சா. லெட்சுமிகாந்தன், திரு. பா. சா. தாமஸ், திரு. ஆ. நல்லசிவன், திரு. செ. முத்துசாமி, திரு. ப. மாணிக்கம், திரு. க. மீனாட்சிசுந்தரம் ஆகியோர், சென்னை நகரில் உள்ள பெரும்பாலான கல்லூரிகள் மூடப்பட்டிருப்பது குறித்தும் கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம் குறித்தும், ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டிருப்பது குறித்தும் ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பைக் கொடுத்துள்ளார்கள்.

மேலவை உறுப்பினர் திரு. க. அறிவழகன் அவர்களும் மற்றும் பல்லாயிரக் கணக்கான ஆசிரியர்களும் கோட்டையை நோக்கி அமைதியான முறையில் வந்தபோது, போலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளதால், ஏற்பட்டுள்ள பதட்ட நிலைமை குறித்து விவாதிக்க மற்றொரு ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பை திரு. செ. முத்துசாமி அவர்கள் கொடுத்துள்ளார்கள். இவை எவ்வாறு விதிகளுக்குட்பட்டு வருகின்றன என்பதைச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, என்னுடைய இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தைப் பொறுத்த வரையில், திரும்பத் திரும்ப இந்த அவையிலே சொல்லி வருகின்றேன். சென்னை நகரத்தில் உள்ள பல்வேறு கல்லூரிகள் நீண்ட நாட்களாக அவ்வப்போது போராட்டத்திலே ஈடுபடுகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. சென்னையிலே உள்ள சில கல்லூரிகளைப் பொறுத்த வரையில், சென்ற ஆண்டு அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்து அதன் அடிப்படையிலே பத்துப் பதினைந்து நாட்களுக்கும் மேலாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதற்குப் பிறகு அரசு தலையிட்டு, நிர்வாகம் தலையிட்டு, சில மத்தியஸ்த ஏற்பாடுகளைச் செய்து சுமுகமான தீர்வுகளை ஏற்படுத்தியது. ஆனால் ஏற்கெனவே ஏற்கப்பட்ட

கோரிக்கைகள் நிறைவேறவில்லை என்ற அடிப்படையிலே, அவர்கள் மீண்டும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகிற நிலைமை இன்று ஏற்பட்டிருக்கிறது. அரசைப் பொறுத்த வரையில், கல்லூரிக் கல்வியினுடைய அவசியத்தை, அதனுடைய இன்றியமையாத தன்மையை உணர்ந்த நிலையிலே, அதைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுத்தாக வேண்டும். ஏற்கெனவே ஏற்கப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் நிர்வாகப் பொறுப்பை ஏற்றிருப்பவர்கள் தயக்கம் காட்டுவதினால்தான், இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனால் முதலில் ஏற்பட்ட மத்தியஸ்தம் அர்த்தமற்றதாகி விடுகிறது. ஆகவே பாதிக்கப்பட்டவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற முயற்சிகளை எடுத்தாக வேண்டும். பிரச்சினைகள் வந்த பிறகுதான், அதை அணுகுவது என்பதும், போராட்டமாக வெடித்தால்தான் தீர்வு காண்பது என்பதும் கல்வியையே கெடுக்கும். ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், அவர்களுடைய கோரிக்கைகள் இதே சூழ்நிலையில்தான் உருவாகி வெடித்திருக்கின்றன. அவர்களுடைய கோரிக்கைகள் இன்றைக்கு நிறைவேற இருக்கின்றன என்று கருதுகிறேன். அதனால் எந்த அளவுக்குக் கொந்தளிப்பு அடங்கும் என்பது எதிர்காலத்தில் தான் தெரியும். ஆனாலும் இன்று பிரச்சினைகள் இருந்துகொண்டுதான் இருக்கின்றன. சென்னையில் கல்லூரிகள் மூடப்பட்டிருக்கின்றன. சில உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லையென்றால், மேலும் பல கல்லூரிகள் மூடப்படுகிற நிலை ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சுகிறேன். இந்தச் சூழ்நிலையில் அவர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது நல்லதல்ல. இதனால் மாணவர்களுடைய கல்வி பாழாகிறது. இது சமுதாயத்தைப் பாதிக்கிறது. இதைப் போக்க அவ்வப்போது நடவடிக்கைகளை எடுக்கிறோம் என்று அரசு வாக்குறுதிகளைத் தந்தாலும், நடைமுறையில் சரியாக வருவதில்லை. ஆகவே இது குறித்து சரியான முடிவை எடுப்பதற்கு அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்து இதனை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கோருகிறேன்.

(பிற்பகல் 4-20)

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கல்லூரி ஆசிரியப் பெருமக்கள் ஏற்கெனவே அரசு ஏற்றுக்கொண்ட தங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று கோரி ஊர்வலம் வந்தபோது, நேற்று பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்களும், இன்றைக்கு ஆயிரக்கணக்கான ஆசிரியர்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்சள். தங்களுடைய கோரிக்கையை



அரசிடம் கொடுப்பதற்காக கோட்டையை நோக்கி அமைதியாக வந்தபோது அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்தப் போராட்டத்தில் சட்டமன்ற ஆசிரியர்கள் தொகுதியைச் சேர்ந்த, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினரும், ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஆசிரியர்களும் கூட இது நியாயமான கோரிக்கை என்று இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர், அவர்களும், கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையில் கல்வித் துறை இன்றைக்கு எடுத்த நடவடிக்கை சரியல்ல. ஏற்கெனவே அரசு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. அவற்றை நிறைவேற்ற வேண்டுமென்று சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். கோரிக்கைகள் நியாயமானவை என்று வலியுறுத்தச் சென்றிருக்கிறார்கள். கொள்கை ரீதியிலே கல்வித் துறை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டவைகளை, அரசு நிறைவேற்ற வேண்டும். துணைப் பேராசிரியர்களுக்கு ஊழியக் கால அடிப்படையிலே பேராசிரியர்களாகப் பதவி உயர்வு கொடுப்பதுபற்றிக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் விவாதமே இல்லை என்று எத்தனை முறை சொன்னாலும் இந்த அளவுக்கு உறுப்பினர்கள் பேசிக்கொண்டே இருக்கிறார்கள். எனவே சுருக்கமாகச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** பிரச்சினையில் உள்ள முக்கியத்துவம் காரணமாக விளக்கமாகச் சொல்லவேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்னும் 7, 8 பேர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொருவரும் பிரச்சினைகளை முக்கியமானது என்று பேச இருக்கிறார்கள். ஒரே பிரச்சினை அடுத்தடுத்த நாட்களிலே வரக்கூடாது. இந்தப் பிரச்சினையிலே இருக்கின்ற முக்கியத்துவத்தைக் கருதி அனுமதிக்கிறோம். அங்கத்தினர்கள் நேரத்திலேகூட ஒத்துழைக்க வேண்டாமா என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** வந்திருக்கின்ற நோயைத் தீர்க்க வேண்டும். அந்த அடிப்படையில் பேசுகிறோம். வியாதி நீடிக்காமல், மேலும் தொடராமல் இருக்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அந்த நோய் தீர்வதற்கு 7 டாக்டர்கள் பேசுவதற்கு இருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** மேலவையின் தலைவர் அவர்களே டாக்டராக இருக்கின்ற காரணத்தினால் சொல்கிறேன். தாங்கள் சொன்னதற்கு இணங்க சீக்கிரம் முடித்துக்கொள்கிறேன். இந்தக் கல்லூரி ஆசிரியர்களுடைய பிரச்சினையைப் பொறுத்த வரையிலே, இன்று சட்டப் பேரவையில் அமைச்சர் அவர்கள் ஒன்றை அறிவித்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அரசு ஏற்கெனவே தந்த வாக்குறுதிகள் சரியாக நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. மீண்டும் இன்னொரு போராட்டம் வருவதற்கு முன்னால், இதைப்பற்றிப் பேசி தீர்வு காண வேண்டும் என்றும், இந்தப் பிரச்சினைகளுக்குப் பொதுவாக கல்வித் துறை தீர்வு காண, அரசு வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டுமென்றும் கேட்டு இன்றைக்கு சென்னையிலே உண்ணாவிரதம் இருந்து ஆசிரியர்கள் செத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இது குறித்து அரசு என்ன கொள்கை வைத்திருக்கிறது என்று விவாதிப்பதற்கும், இது பற்றி தீர்வு காணுவதற்கும் இந்த அவையினுடைய மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து இப்பொருள் குறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

***திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, பல்கலைக் கழக மான்யக் குழு பரிந்துரைத்த ஊதிய விகிதத்தை அமுல்படுத்துவதில் உள்ள குறைபாடுகளை, முரண்பாடுகளை நீக்கக் கோரியும், துணைப் பேராசிரியர்களைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்வு செய்யக் கோரியும், தனியார் கல்லூரி ஆசிரியர்கள் பணிப் பாதுகாப்பு விஷயத்தில் ஏற்பட்டுள்ள குறைகள் தீர்க்கப்படவில்லை என்றும், மற்றும் இது போன்ற மிக முக்கியமான பிரச்சினைகளை வற்புறுத்தியும், கல்லூரி ஆசிரியர்கள் கடந்த சில நாட்களாக உண்ணாவிரத நடவடிக்கையிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அரசின் சார்பில் மாண்புமிகு முதல் அமைச்சரையும், மாண்புமிகு கல்வி அமைச்சரையும் எளிதில் அடிக்கடி சந்தித்துப் பேசக் கூடிய வாய்ப்பினைப் பெற்ற ஆளுங்கட்சி கொறடா அவர்கள்கூட இந்தப் போராட்டத்திலே கலந்துகொண்டு சிறை சென்றிருக்கிறார்கள் என்றால், பிரச்சினை எத்தகைய தன்மையது என்பதைப் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அது எனக்குத் தெரியும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** அவர்கள் அமைச்சரிடம் பேசிவிட்டு பின்பு சிறை சென்றார்களா பேச்சு வார்த்தை நடத்தாமலே சிறை சென்றார்களா என்று தெரியாது. இந்தப் பிரச்சினை எவ்வளவு சீரியசானது முக்கிய



மானது என்று இந்த நிகழ்ச்சி மூலம் தெரியவருவதால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதற்காக, அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பா.ரா. தாமஸ் :** நம்முடைய மாநிலத்திலே கல்லூரி ஆசிரியர்கள் கூட்டமைப்பின் சார்பாக மாநில முழுவதும் பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்கள் சிறை சென்றிருக்கிறார்கள். அதனால் அவர்களுடைய குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மேல்நிலை ஊதியம் வேண்டும், அவர்களுக்கிடையே இருக்கின்ற ஏற்றத்தாழ்வுகள் அகற்றப்பட வேண்டும், தற்காலிகப் பணியில் இருப்பவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அவற்றைப் பற்றியெல்லாம் விவரமாகப் பேச வேண்டுமென்று இருந்தேன். நேரம் இல்லை என்ற காரணத்தினால், இத்துடன் முடித்துக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினையினைப்பற்றி இந்த அவையில் பேசி, அவைகளுக்குத் தீர்வு காணும் வகையில் இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

**திரு. ப. மாணிக்கம் :** சென்ற ஆண்டு கல்லூரி ஆசிரியர்களுடைய போராட்டத்தின் தொடர்பாகவும், அதனுடைய மிச்ச சொச்சம் காரணமாகவும் இப்போது போராட்டம் நடக்கிறது. இதனாலே கல்வி பாதிக்கப்பட்டிருக்கிறது. இப்போது ஆளுநர் அவர்கள் உரையும், மாநில அரசின் வரவு செலவுத் திட்டமும், மாணவர்களுக்குத் தேர்வு நேரமும் ஒன்றன்பின் ஒன்றாக வருகின்ற நேரத்தில்தான், இந்தப் போராட்டங்கள் எல்லாம் வருகின்றன. இப்படிப்பட்ட சிக்கல்கள் ஏற்படாதவாறு இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், குறிப்பாக யுனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் செய்த சிபாரிசுகளை நிறைவேற்றுவதில் ஏற்பட்டுள்ள சில சிக்கல்கள் காலத்திலே தீர்க்கப்படாததனால்தான் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்று நான் கருதுவதனால், அதுபற்றிய விவரங்களை எடுத்துப் பேசி தீர்வு காணும் வகையில், இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்துப் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** கல்லூரி ஆசிரியர்களுடைய போராட்டம் பற்றி இதற்கு முன்னாலே பேசிய நண்பர்கள் பேசியதை அப்படியே நான் வழிமொழிந்து, காலையிலே நிதியமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையிலே இரண்டு அறிவிப்புக்கள் தந்திருக்கிறார்கள். . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மேலவை உறுப்பினர்கூட நம் அவையை மறந்துவிட்டால், வேறு யார் நினைக்கப் போகிறார்கள் ?

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** வெளியிடப்படுகின்ற அறிவிப்புகள் எல்லாம் பேரவையில் கொடுக்கப்படுகின்றன. அதனால்தான் பேரவை நினைப்பாகவே இருக்கிறேன். 10 ஆண்டுகளில் பதவி உயர்வு தரப்படும் என்றும், பத்து ஆண்டுக்காலம் துணைப் பேராசிரியர்கள் பதவியில் பணியாற்றியவர்களுக்கெல்லாம், பேராசிரியர் பதவி உயர்வு அளிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதுபற்றி அரசின் கவனத்திற்கு ஒரு விஷயத்தைக் கொண்டுவர விரும்புகிறேன். பேராசிரியர்களுக்குச் சம்பள விகிதம் ரூபாய் 1,100—1,600, துணைப் பேராசிரியர்களுக்கு ரூபாய் 700—1,100 என்று இருக்கிறது. இந்த 10 ஆண்டுக் காலத்தில் துணைப் பேராசிரியர்களுக்கு இயல்பாகவே அந்த ஊதியம் வந்துவிடுகிறது. ஆகவே இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டதாகக் கருதவில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இப்படி விளக்கமாகப் பேசுவதை விவாதத்திற்கு அனுமதித்த பிறகு சொல்வதற்கு என்று வைத்துக் கொள்ளலாம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** இந்த அவையிலே சம உரிமை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எனக்கு முன்னால் பேசியவர்கள் சற்று நேரம் அதிகம் எடுத்துக்கொண்டு பேசியபோது தலைவர் அவர்கள் அமைதியாக இருந்தார்கள். அதுபோல நான் சொல்கின்றபோதும் கொஞ்சம் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

10—2—1980 அன்று நம் கல்வி அமைச்சர் அவர்கள் கோவைக்குச் சென்றிருக்கிறார்கள். அங்கே கல்வி அமைச்சர் அவர்களிடம் கல்லூரி ஆசிரியர்கள் தங்களுடைய கோரிக்கையைத் தரச் சென்றிருக்கிறார்கள். அப்போது அங்கேயிருந்த ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.வும் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும் லாரிகளிலே வந்து இந்த ஆசிரியர்களைத் தாக்க வந்ததாகவும், ஆசிரியர்கள் அமைச்சர் அவர்களிடம் மகஜரைக் கொடுக்க முடியாதபடி தாக்குதல் நடத்தியதாகவும், கோஷங்களிட்டதாகவும் அங்கேயிருந்து தந்தி வந்திருக்கிறது. அதைப் பற்றித் தகவல் தரப்பட்டிருக்கிறது. ஜனநாயகத்தைக் காப்பாற்றும் வகையிலே, இந்த நடவடிக்கைகள் எல்லாம் இருக்கக்கூடாது என்று சுட்டிக் காட்டிப் பேசவும், ஆசிரியர்களை எதிரிகளாகக் கருதக்கூடாது என்பதைச்



சுட்டிக் காட்டவும், இப்படிப்பட்ட நிலைமைகளை அரசு மாற்ற வேண்டும் என்பதற்காகவும் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இப்பொருள் குறித்துப் பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-30)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவரவர்களே, கல்லூரி ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் அவர்கள் கோரிக்கைகள்பற்றி நானும், கல்வித் துறைச் செயலாளரும் பேச்சு வார்த்தைகள் நடத்தினோம். அக்கோரிக்கைகளை அரசு கவனத்துடனும், பரிவுடனும் ஆய்வு செய்தது. கல்லூரி ஆசிரியர்கள் விடுத்த 21 கோரிக்கைகளை அரசு ஆய்வு செய்து, அவற்றில் 18 கோரிக்கைகளை ஏற்று, திட்டவட்டமான ஆணைகளை ஏற்கெனவே வெளியிட்டுள்ளது.

நிறைவேற்றப்பட்டுள்ள 18 கோரிக்கைகளில் முதன்மையானவை பற்றி சிறிது விளக்குவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

பணிப் பாதுகாப்பைப் பொறுத்தவரையில், கல்லூரிகளில் 26—2—1979 அன்று பணியிலிருந்த எந்த ஆசிரியரும் பின்வரும் காரணங்களினால் அதாவது, 1979-80 முதல் புகுமுக வகுப்பு நீங்கியது, அல்லது கல்லூரிகளில் மாணவர் எண்ணிக்கை குறைந்து ஆசிரியர் வேலைப் பளு குறைந்தது, அல்லது பாட வகுப்புக்கள் மூடப்படுதல், புதிய கல்வித் திட்ட அமுல் ஆகிய காரணங்களினால் பணியிழக்க நேராதவாறு பணிப் பாதுகாப்பு அளித்து அரசு தக்க வழிமுறைகளில் அதனை நிறைவேற்றியும் உள்ளது. பணிப் பாதுகாப்புக்காக ஒரு கல்லூரியிலிருந்து மற்றொரு கல்லூரிக்கு மாற்ற நேரும் ஆசிரியர்களுக்கு பணியில் சேரும் அவகாசம் அளிக்கப்படும்.

உபரியாக உள்ள 500-க்கு மேற்பட்ட கல்லூரி ஆசிரியர்களை அரசு தன் செலவிலேயே எம்.ஃபில். பட்டப் படிப்பிற்கு அனுப்பியுள்ளது. தனியார் கல்லூரி ஆசிரியர்களுடைய பணி நிலைமைகளை மேம்படுத்துவதற்காக அக் கல்லூரிகளுக்கு நேரடியாகச் சம்பளம் வழங்குதல், தனியார் கல்லூரிகளிலிருந்து முறைகேடாகப் பதவி நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு வேறு கல்லூரிகளில் வேலை தருதல் முதலியவை பற்றியும் ஆணைகள் வெளியாகியுள்ளன. தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கும் சிறு விடுப்பு 20 நாட்கள் தரப்படும்.

[திரு. செ. அரங்கநாயகம்] [1980 பிப்ரவரி 12

சரிவர இயங்காத சில தனியார் கல்லூரிகளை தற்காலிகமாக அரசு ஏற்று நடத்தி வருகிறது. இவ்வாறு அரசு நிர்வாகத்தின்கீழ் அவை இயங்கும் காலத்தை நீட்டிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கல்லூரி ஆசிரியர்களுக்குப் பல்கலைக் கழகச் சம்பள விகிதங்கள அமுலாக்கும்பொழுது ஏற்படும் முரண்பாடுகளைச் சீராக்கி, அனைவருக்கும் உரிய சலுகைகள் காலத் தாழ்வின்றி கிடைக்கச் செய்வதற்காக, கல்லூரிக் கல்வி இயக்குநகரத்துக்கு வட்டார அலுவலகங்கள் 5 ஒவ்வொன்றும் ஒரு துணை இயக்குநரின்கீழ் தேவையான பிற பணியாளர்களுடன் அமைக்கப்பட்டுள்ளன. ஆணைகளைச் செயல்படுத்துவதில் நிகழும் ஐயப்பாடுகளைத் தீர்த்து, அவ்வப்பொழுது உரிய விளக்கங்கள் தரப்பட்டு வருகின்றன. இப்பணியைத் துரிதமாகவும், நல்ல முறையிலும் வழி நடத்துவதற்காக கல்விச் செயலாளர், நிதிச் செயலாளர், கல்லூரிக் கல்வி இயக்குநர் ஆகியோரைக் கொண்ட உயர் மட்டக் குழு ஒன்று தலைமைச் செயலகத்தில் அமைக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பயிற்றுநர்கள், விளக்குநர்கள் ஆகியோருள் உரிய தகுதி பெற்றவர்கள் அனைவரையும் துணைப் பேராசிரியர்களாக உயர்த்தும் பணியும் துரிதமாக நடந்துள்ளது. 31—1—1980 வரை அவ்வாறு துணைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்வு பெற்ற பயிற்றுநர்கள், விளக்குநர்கள் ஆகியோர் எண்ணிக்கை 1,697 ஆகும். சி பிளஸ் தகுதி பெற்ற பயிற்றுநர்கள், விளக்குநர்கள் ஆகியோருக்கும் இச்சலுகை விரிவாக்கப்பட்டுள்ளது. கல்லூரிக் கல்வித் துறையைச் சார்ந்த விளக்குநர்கள், பயிற்றுநர்கள் சுமார் 40 பேர்கள் அரசு மருத்துவக் கல்லூரிகளில் பணி செய்து வந்தனர். அவர்களும் பேராசிரியர்களாக உயர்த்தப்பட்டுள்ளனர். பட்டப் படிப்புத் தகுதி மட்டும் உள்ள பயிற்றுநர்கள், விளக்குநர்கள் ஆகியோர் பட்ட மேற்படிப்புத் தகுதியைப் பெற்று துணைப் பேராசிரியர்களாக உயர்வு பெற அவர்களுக்கு உதவுவதற்காக அரசே அவர்களைப் பட்ட மேற்படிப்புக்கு அனுப்ப முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசுக் கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்தவரை, 26—2—1979 அன்று நிரந்தரமான காலியிடங்களில் தற்காலிகமாகப் பணியாற்றி வந்த ஆசிரியர்களைப் பணி வரன்முறை செய்ய அவர்களுக்கென்றே ஒரு தனித் தேர்வை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு மூலம் நடத்த அரசு ஏற்பாடு செய்துள்ளது.



1980 பிப்ரவரி 12] [திரு. செ. அரங்கநாயகம்]

நிறைவேற்றிய 18 கோரிக்கைகள் போக எஞ்சியுள்ள மூன்று கோரிக்கைகளுள் ஒன்று, உடற்பயிற்சி இயக்குநர்களையும், நூலகர்களையும் ஆசிரியப் பணியாளர்களாகக் கருத வேண்டும் என்பதாகும். இதுபற்றி உடனடியாக ஒரு முடிவு எடுக்க இயலவில்லை. ஊதிய விகிதங்களிலுள்ள முரண்பாடுகளைக் களைய தமிழக அரசு திரு. சி. வி. ஆர். பணிக்கர் அவர்கள் தலைமையில் ஒரு நபர்க் குழு ஒன்றை நியமித்திருக்கிறது. எனவே, இந்தப் பிரச்சினையை நன்கு ஆராய்ந்து பரிந்துரை செய்யும்படி ஒரு நபர்க் குழுவைக் கேட்டுக் கொள்ள அரசு தீர்மானித்துள்ளது.

மற்றொரு கோரிக்கை, அரசு 'பி' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து அரசுக் கல்லூரிகளில் நியமிக்கப்பட்டவர்களின் பணியை முறைப்படுத்துவது பற்றியதாகும். அரசு உயர்நிலைப் பள்ளிகளில் 'ஏ', 'பி' ஆகிய இரு பிரிவுகளையும் இணைத்ததுபற்றி டெல்லி தலைமை நீதி மன்றத்தில் தீர்ப்பு அண்மையில்தான் வந்துள்ளது. எனவே. இவ்வாசிரியர்களுடைய நியமனங்களை முறைப்படுத்த இனி விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

எஞ்சியுள்ளதும் முதன்மையானதுமான ஒரு கோரிக்கை, அரசு ஊழியர்களைப் போலவே குறிப்பிட்ட ஆண்டுகள் பணி செய்த உதவிப் பேராசிரியர்கள் பேராசிரியர்களாகப் பதவி உயர்வு பெற வேண்டுமென்பது. இதை அரசு ஏற்று 10 ஆண்டுக் காலம் உதவிப் பேராசிரியர்களாகப் பணி புரிந்தவர்கள் 1—4—1980 லிருந்து பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட வேண்டுமென்று முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். பல்வேறு பாடங்களைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களின் பதவி உயர்வு வாய்ப்புகளில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைச் சரிப்படுத்தும் வகையில் இனிமேல் 10 ஆண்டுகள் பணி செய்தவர்கள் மட்டுமே இவ்வாறு பதவி உயர்த்தப்படுவார்கள் என்றும் அரசு முடிவு செய்துள்ளது.

இம்முடிவின் காரணமாக ஒரே துறையில் பல பேராசிரியர் பதவிகள் இருக்கக்கூடும். அப்போது அவர்களுள் பணி மூப்பு உடையவரே துறைத் தலைவராகக் கருதப்படுவார். அவருக்கு இருக்கும் நிர்வாகப் பொறுப்புகள் காரணமாக அவருக்கு சிறிது குறைந்த அளவு வேலைப் பளு இருக்கலாம்; ஆனால் இந்த வேலைப் பளு பல்கலைக் கழகம் நிர்ணயித்ததைவிடக் குறைவாக இருக்கக்கூடாது. துறைத் தலைவருடைய பயிற்றுவிப்பு வேலைப் பளு போக மீதமுள்ள பளுவை மற்றவர்கள்—பேராசிரியர்களும், உதவிப் பேராசிரியர்களும்—பகிர்ந்துகொள்ள வேண்டும்.

எதாவது ஒரு துறையில் 10 ஆண்டுக் காலம் பணி முடித்த உதவிப் பேராசிரியர் இல்லாவிட்டால், அத் துறையின் தலைமைப் பொறுப்பு, இருக்கும் உதவிப் பேராசிரியர்களுள் பணி மூப்பு உடையவருக்குத் தரப்படும். அவருக்கு 10 ஆண்டு பணிக்காலம் முடியும்வரை பேராசிரியர் பதவி உயர்வு கிடைக்காது.

இனிமேல் பேராசிரியர் பதவிக்கு நேரடி நியமனம் செய்யும்போது, குறைந்த அளவுத் தகுதி 10 ஆண்டுகள் பயிற்றுவிப்பு அனுபவமும், பி.எச்.டி. பட்டமும் இருக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்படும். 10 ஆண்டுப் பணிக் காலத்தின் அடிப்படையில் நூற்றுக் கணக்கான உதவிப் பேராசிரியர்கள் பேராசிரியர்களாகப் பதவி உயர்வு பெறுவதால், பேராசிரியர்களாக நேரடி நியமனம் பெறுவதற்கு வாய்ப்புகள் அதிகம் இருக்காது.

மேற்சொன்ன பல்வேறு அரசாணைகளை அமுல்படுத்தும்போது எழும் நடைமுறைப் பிரச்சினைகளைப்பற்றி இப்பொழுது நடந்த பேச்சு வார்த்தைகளில் கூறப்பட்டது. அவையனைத்தும் ஆய்வு செய்யப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும். "தனியார் கல்லூரிச் சட்டத்தில்" திருத்தங்கள் செய்வதுபற்றி அரசுக்கு ஆலோசனை கூற ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. தனியார் கல்லூரி ஆசிரியர்களுடைய ஓய்வு காலச் சலுகைகளை மேலும் தாராளமாக்குவது பற்றிய கோரிக்கை குறித்தும், அக்குழுவின் பரிந்துரையைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

கல்லூரிக் கல்வி இயக்குநரகத்தின் வட்டார அலுவலகங்கள் அமைந்துள்ள ஒவ்வொரு வட்டாரத்திற்கும் கல்லூரிக் கல்விபற்றி ஆலோசனை கூற வட்டாரக் குழுக்கள் அமைக்கப்பட இருக்கின்றன. ஆசிரியர்களின் பிரதிநிதிகளும் அக்குழுக்களில் இடம் பெறுவார்கள். அக் குழுக்கள் அவ்வப்பொழுது கூடி விவாதித்து கல்லூரி ஆசிரியர்களின் பிரச்சினைகள் உடனுக்குடன் தீர்க்கப் படும்.

இப்போது வேலை நிறுத்தம் காரணமாக மூடியிருக்கின்ற கல்லூரிகள் 18—2—1980 ஆம் தேதி திறக்கப்படுமென்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. அறிவழகன் அவர்களைப்பற்றி ஒரு கருத்தைச் சொன்னார்கள். இங்கே எதிர்க்கட்சியிலே அமர்ந்திருக்கும் உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வருவதன் மூலமாக, போராடுகின்ற ஆசிரியர்களுக்குத் தங்கள் ஆதரவை, அனுதாபத்தைக் காட்ட வாய்ப்பு இருக்கிறது. ஆனால் ஆளும் கட்சியிலுள்ள மாண்புமிகு உறுப்பினர்



திரு. அறிவழகன் அவர்கள் தன்னுடைய அனுதாபத்தைக் காட்ட இப்படிப் பட்ட நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் ஹண்டே போன்றவர்கள், டாக்டர் சனார்த்தனம் போன்றவர்கள் எல்லாம் இந்த நடவடிக்கையில் ஈடுபடவில்லை என்றாலும், அவர்கள் இந்தப் பிரச்சினையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்ற தவறான கருத்து ஏற்படக்கூடுமென்று அஞ்சுகிறேன். ஆளுங் கட்சியில் இருக்கிறவர்கள் இதிலே அக்கறை எடுத்துப் பேசுகிறார்கள். முதலமைச்சரவர்களிடத்தில் பேசுகிறார்கள், நிதி அமைச்சரவர்களிடத்தில் பேசுகிறார்கள். அதிலே திரு. அறிவழகன் அவர்கள் கொஞ்சம் அதிகமான ஆர்வத்தின் காரணமாக இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர் எங்கள்மீது நம்பிக்கை இழக்க வில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதை ஆளும் கட்சியில் இருக்கும் அவர் தனக்கு இருக்கும் ஆர்வத்தைக் காட்டுவதாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

கோவை நிகழ்ச்சிபற்றி இங்கே குறிப்பிட்டார்கள். உண்மையிலேயே அதற்காக நான் வருத்தப்படுகிறேன். ஆசிரியர்களாக இருக்கின்றவர்கள் அரசியல்வாதிகளுடைய தொடர்பு காரணமாக ஒருசில பேர், அங்கே இருக் கின்ற எந்த ஆசிரியர் குழுவிற்கும் சம்பந்தமில்லாத தொடர்பு இல்லாத போராட்டம் நடத்தக்கூடிய கூட்டுக் குழுவின் அனுமதி பெறாது, அங்கே வந்து, 'கல்வி அமைச்சர் ஒழிக' என்று கூறுவது உண்மையிலேயே கண்டிக்கத் தக்கது என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். அங்கே வந்தவர்கள் ஆசிரிர்கள்தானா என்ற சந்தேகத்தை மற்ற நண்பர்கள் சொன்னார்கள். அங்கே வந்தவர்கள் சோடா பாட்டில்கள் கொண்டு வந்தார்கள். கற்களைக் கொண்டு வந்தார்கள், மோசமான வார்த்தைகள் பேசினார்கள் என்று சொல்லு வதால்—நான் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறேன் என்றால், வந்தவர்கள் ஆசிரியர்கள் என்று நினைத்துக்கொண்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சொல்லும்போது, ஆசிரியர்கள் வந்தார் களென்று திட்டவட்டமாகக் கூறுகிறார்கள். இதைப்பற்றி விசாரித்து, தெரிந்து கொள்ள வேண்டும். எங்கள் தரப்பில் தவறு நடந்தால், உண்மையிலேயே கண்டிக்கவும், அதற்காக வருத்தம் தெரிவிக்கவும் தயாராக இருக்கிறேன். ஆசிரியர் தரப்பில், இதைப் பற்றிக் கேள்விப்பட்டு, வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள். அவர்களுடைய நல்லெண்ணத்தைப் பாராட்டுகிறேன். இதைத்தான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனவே மேற்படி

வேண்டுகோள்கள், அறிக்கைகளுக்குப் பிறகு, மதிப்பிற்குரிய ஆசிரியப் பெருமக்கள் தங்களுடைய போராட்டத்தைக் கைவிட்டு, அரசுக்கு நல்ல ஒத்துழைப்பைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிப் போராட்டங்கள் நடைபெறுவதால், மாணவர்களின் படிப்பு கெடுகிறது என்பது உண்மை. அதை அரசு அறிந்துள்ளது. அதை மறுக்க வில்லை. அந்தப் படிப்பை அளிப்பதில் அரசு மட்டும்தான் பொறுப்பு ஏற்று நிறைவேற்ற வேண்டுமென்ற நிர்பந்தத்தைத் திணித்தால்—இன்று நாங்கள் இருக்கலாம், நாளை ஆட்சியில் வேறு ஒருவர் இருக்கலாம்—எந்தக் கட்சியும் ஆட்சியை நடத்த முடியாத சூழ்நிலையை ஏற்படுத்தியவர்களாவோம். இதில் எல்லோருடைய ஒத்துழைப்பும் தேவைப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள், ஆசிரியப் பெருமக்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எல்லோருடைய ஒத்துழைப்பும் இருந்தால்தான், இப்படிப்பட்ட நிலைமைகளை உண்மையி லேயே தவிர்க்க முடியும். இதிலே மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்வதன் காரணமாக அவர்களுடைய படிப்பு கெடுகிறதென்று சொன்னார்கள். அவர் களைக் கேட்டுக்கொள்வது, எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், கலந்து பேசி—இப்போது கல்லூரிக் கவுன்சில் வைப்பதாக அறிவித்திருக்கிறேன்— எனவே, எந்தப் பிரச்சினையாக இருந்தாலும்—அவற்றைத் தீர்த்துக்கொள்ள மாணவர்கள் முன் வர வேண்டும். வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதன் மூலமாக அவர்கள் எதிர்காலத்தைக் கெடுத்துக்கொள்ள வேண்டாம். அதில் எல்லோ ருக்கும் அக்கறை இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது ஒரு அமைதியான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆசிரியர்களும்

(பிற்பகல் 4-40)

போராட்டத்தைக் கைவிடுவார்கள் என்கிற நம்பிக்கை அரசுக்கு இருக்கிறது. ஆகவே, அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இதை விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : ஒரு விளக்கம். அமைச்சரிடம் கேட்கவில்லை. தலைவரிடம் தான் விளக்கம் கேட்கிறேன். அமைச்சர்கள் இப்படிப்பட்ட ஸ்டேட்மெண்டுகளைக் கொடுக்கும்போது, எங்களுக்கு அதன் நகல்களைத் தருவதில்லை.



மாண்புமிகு மேலவைத் தலைவர் : அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இதுபற்றி விவாதிக்க அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதுவதால்; இந்த ஒத்திவைப்புத் தீர்மானத் திற்கான என் அனுமதியை மறுக்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : இப்படிப்பட்ட ஸ்டேட்மெண்டுகளைக் கொடுக்கும் போது, ஸ்டேட்மெண்டுகளின் நகல்கள் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுவ தில்லை. அதை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். கடைசி நேரத்தில் அறிக்கை அவசர அவசரமாகத் தயாரிக்கப்படுவதாக இருந்தாலும்கூட, விவாதம் முடிந்து, சபை நடவடிக்கைகள் முடிவதற்குள்ளாக நகல்கள் உறுப்பினர் களுக்குக் கொடுக்கப்பட்டால், மிகவும் வசதியாக இருக்கும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : விதி 82 படி அவர்கள் வைக்கிற அறிக்கையாக இருந்தால், தரலாம். ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து அமைச்சர் பதில் கொடுக்கிறபோது, நகல் கொடுக்க முடியாது. கல்வி அமைச்சர் ஏதாவது சொல்வதாக இருந்தால் சொல்லலாம்.

(கல்வி அமைச்சர் ஒன்றும் சொல்லவில்லை).

டாக்டர் எச். வி. ஹண்டே : பதில் கொடுப்பதாக இல்லாமல் அதே ரூல் 82 என்ற வகையில் ஒரு அறிக்கை அன்றைக்கோ அல்லது மறுநாளோ கொடுத்தால், பயனுள்ளதாக இருக்கும்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : டாக்டர் ஹண்டே அவர்கள் சொல்லுகின்ற கருத்து நடைமுறையில் சரியாக வராது. ஒத்திவைப்புத் தீர்மானத்தின்போது பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருக்கின்றன, பின்னால் சொல்கிறேன் என்று பதிலளித்தால், பிறகு முழு அறிக்கையையும் விவரமாக வைக்கலாம். இப்போது விவரம் எல்லாம் சொன்ன காரணத்தால், அறிக்கையாக வைக்க முடியாது. ஒத்திவைப்புத் தீர்மானம் என்பது ஒரு முன் அறிவிப்பு என்ற முறையில் நம்பிக்கொண்டு உறுப்பினர்கள் அவை நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைக்கத் தேவையில்லையென்று தலைவர் அவர்கள் தீர்ப்புக் கூறுகிறார்கள். ஒத்தி வைப்புத் தீர்மானத்தினுடைய பதில் சம்பந்தமான நகல்களை முன்கூட்டிக் கொடுப்பது என்பது சாத்தியமல்ல. கவன ஈர்ப்புத் தீர்மானம் வருகிறது. விளக்கமான அறிக்கையாக இருந்தால், அவையில் வைக்கிறோம். இதுதான் மரபு.

டாக்டர் எச். வி. ஹண்டே : ஒரு விளக்கம்.

The Honourable the Leader of the House has probably misunderstood me. ரூல்ஸ் தெரியாமல் நான் இந்த அவையில் வேலை செய்யவில்லை. இந்தப் பொருளைப் பொறுத்தவரையில், அமைச்சர் என்ன நினைக்கிறார் என்பது குறித்து—இன்றைய தினம்கூட அல்ல. நாளைய தினம் விரிவான அறிக்கையாக அன்டர் ரூல் 82—ஏற்கெனவே பேசியிருந்தாலும்—ஏன் வைக்கக்கூடாது? அப்படி வைக்கக்கூடாது என்று சட்டத்தில் ஒன்றும் சொல்லவில்லையே. அரசாங்கம் என்ன கருதுகிறது என்கிற இறுதி முடிவை அவையில் அறிக்கையாக வைத்தால், 90 பெர்சன்ட் அமைச்சர் இப்பொழுது பேசியது அதில் வரும். அது உறுப்பினர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். ஆகவே அவை முன்னவர் அவர்கள் நான் பேசியதை தயவுசெய்து தவறாக நினைக்கக்கூடாது. அதில் எந்தவித ஆட்சேபணையும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : முன்பு ரூல் 82-ன் படி அறிக்கை வைக்கிற உரிமையைப் பயன்படுத்தி, ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுக்காமல் இருக்கிற ஒரு முறை இருந்தது. பிறகு ரூல் 82-ன் படி உறுப்பினர்கள் 4 வார்த்தைகளாவது பேசுவதற்கான வாய்ப்பு இல்லை என்ற காரணத்தால், ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலம் அவ்வாய்ப்பு வழங்கப்பட வேண்டுமென்று சொல்லி, அதன் பிறகு அந்த உரிமையை தலைவரவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இப்போது தாராளமாக அந்த வாய்ப்பைத் தருகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : நாங்கள் கேட்டதன் பேரில் இப்போது அதற்கான வாய்ப்பைத் தந்திருக்கிறார்கள். விதி 82-ன் படி அறிக்கையையும் அளித்தால், ஒத்திவைப்புத் தீர்மானத்தின்போது உறுப்பினர்களுடைய உரிமை பாதிக்கப்பட்டு விடும். ஆகவே மிக முக்கியமான பிரச்சினையாக இருந்தால், வெள்ளை அறிக்கையாக வைக்கலாம் என்கிற என்னுடைய கருத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அடுத்து, அரசின் தீர்மானம். மாண்புமிகு அவை முன்னவர்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : ஒத்திவைப்புத் தீர்மானத்தில் பேசும்போது எனக்கு வந்திருக்கின்ற உண்மையான தகவலின் அடிப்படையில் கருத்துக்களைச் சொன்னேன்.



மாண்புமிகு மேலவைத் தலைவர் : அந்த அறிக்கை மீது மேற்கொண்டு விவாதம் கிடையாது. அது ஒத்திவைப்புத் தீர்மானம். அதன்பேரில் மேற்கொண்டு பேசக்கூடாது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : நான் சொல்ல வேண்டிய கருத்துக்களைச் சொல்லி விட்டு வெளியேற இருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அது உறுப்பினர் அவர்கள் இஷ்டம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : * * * என்றெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : உறுப்பினர் இப்போது இங்கே தெரிவித்த வார்த்தைகளை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் சொன்ன வார்த்தை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து அகற்றப்படுகிறது. உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரத்தை நான் கேட்டுக்கொள்வதெல்லாம் இவ்வளவு வியாக்கியானத்திற்குப் பிறகும் உறுப்பினர் அவர்கள் பேசிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? அரசின் தீர்மானம். மாண்புமிகு அவை முன்னவர்.

## 4. அரசின் தீர்மானங்கள்.

(1) மேலவை விதி 42(5)-ல் உள்ள வரம்பை நிறுத்தி வைத்தல் குறித்து.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவரவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 42-வது விதி அதன் (5) துணை விதியினால் கொடுத்துள்ள வரம்பைப் பொறுத்த வரையில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதுடன் அவ்விதியின்படி இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை இன்று எழுப்ப அனுமதிக்கப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 42-வது விதி அதன் (5) துணை விதியினால் கொடுத்துள்ள வரம்பைப் பொறுத்த வரையில், தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதுடன் அவ்விதியின்படி இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை இன்று எழுப்ப அனுமதிக்கப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

5. கவன ஈர்ப்பு.

(1) சிதம்பரம், கோவில்பட்டி, மேட்டுப்பாளையம், பரமக்குடி, சிவகாசி, திண்டிவனம் ஆகிய நகரங்களின் அந்தஸ்தை உயர்த்தி அங்கு வாழும் அரசு ஊழியர்களுக்கு விட்டு வாடகைப் படியை உயர்த்தி வழங்குவது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திருவாளர்கள் சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்களும் பா. ரா. தாமஸ் அவர்களும் ஒரு கவன ஈர்ப்பு முன்னறிவிப்பு கொடுத்துள்ளார்கள். திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்:—

"சிதம்பரம், கோவில்பட்டி, மேட்டுப்பாளையம், பரமக்குடி, சிவகாசி, திண்டிவனம் ஆகிய நகரங்களின் அந்தஸ்தை உயர்த்தி அதன் மூலம் விட்டு வாடகைப் படியை உயர்த்தி அண்மையில் மத்திய அரசு வெளியிட்டுள்ள ஆணையின் பலன் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் வாழும் மாநில அரசு ஊழியர்களுக்கும், உள்ளாட்சித் துறை, தனியார் பள்ளி ஆசிரியர்கள், அலுவலர்களுக்கும் வழங்குவது குறித்து".

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, இந்த சந்தர்ப்பத்தில் விளக்கம் கோர விரும்புகிறேன். சென்ற வாரம் கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்று கொடுத்திருந்தேன். அதாவது கலைக் களஞ்சியம் தொடர்பாக ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அப்போது சம்பந்தப்பட்ட அமைச்சர் தான் அதுபற்றி அறிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தெரிவித்தார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இதில் விளக்கம் ஒன்றும் இல்லை முன்னால் கூட இப்படி நடந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** அவை முன்னவர் என்ற முறையில் தான் அரசாங்கத்தின் சார்பில் பதில் சொல்ல எனக்கு உரிமை இருக்கின்றது. கொள்கை சம்பந்தமான சில கேள்விகள் அன்றைக்கும் கேட்க

@ 319-321 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



பட்டதால் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவையில் இருந்தால் விளக்கமாக, சரியான பதில் சொல்வதற்கு உதவிகரமாக இருக்கும் என்ற அர்த்தத்தில்தான் அப்படிச் சொன்னேன். சம்பந்தப்பட்ட அமைச்சர் அவசியம் என்று நான் சொல்லவில்லை. இங்கே இன்று அவர்கள் என்ன கேட்டாலும் நான் சொல்லக்கூடிய நிலையில் இருக்கிறேன். அதனால்தான் சொல்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** கோரிக்கை அரசினுடைய பரிசீலனையில் இருப்பதாக இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசு எந்தத் தேதியிலிருந்து இந்த நகரங்களின் அந்தஸ்தை உயர்த்தியதோ அதே தேதியிலிருந்து இந்த நகரங்களில் பணியாற்றுகிறவர்களுக்கு இந்த மாநில அரசு விட்டு வாடகைப் படியை உயர்த்துமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** எந்தத் தேதியிலிருந்து இந்த நகரங்களின் அந்தஸ்து உயர்ந்ததோ அந்தத் தேதியிலிருந்து விட்டு வாடகைப் படியை உயர்த்திக் கொடுப்பது பற்றி இந்த அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மத்திய அரசு இந்த குறிப்பிட்ட ஆணை தொடர்பாக இன்னொரு ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. சுற்றுலா பயணஸ்தலங்கள் என்று சில இடங்களை அறிவித்து, அங்கு விலைவாசி அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தால், காம்பென்சேட்டரி அலவன்ஸ் (Cost Compensatory allowance) என்கிற முறையில் அங்கு பணியாற்றுபவர்களுக்கு 5 சதவீதம் அதிகமாக ஊதியத்துடன் வழங்கப்படுகிறது. அதுகுறித்தும் பரிசீலிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** உறுப்பினருடைய கோரிக்கையை அரசு கவனிக்கும்.

**திரு. பா. ரா. தாமஸ் :** பொதுவாக இவ்வாறு சிதம்பரம், கோவில்பட்டி, மேட்டுப்பாளையம், பரமக்குடி, சிவகாசி, திண்டிவனம் ஆகிய நகரங்களிலுள்ள அரசு அலுவலர்களுக்கு மட்டும் தான் விட்டு வாடகைப் படி வழங்கப்படுகிறது. பொதுவாக விட்டு வாடகைப் படியை வழங்கும்போது, அரசு அலுவலர்களுக்கு மட்டும் வழங்குகிறார்கள்; ஆசிரியர்களுக்கு வழங்குவதில்லை. மாநிலம்

முழுவதும் இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. எந்த வகையில் வீட்டு வாடகைப் படியை வழங்கினாலும், அது ஆசிரியர்களுக்கும் பொருந்தும், வழங்கப்படும் என்கிற முறையில் அரசு ஆணை வெளியிடுமா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** இப்படிப்பட்ட கோரிக்கைகளை ஆசிரியர்களுடைய பிரதிநிதிகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் சொல்லியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் அரசு கவனத்தில் கொண்டு எந்த வகையில் அவற்றை நிறைவேற்ற முடியும் என்பதை யோசிக்கும்.

**(2) மதுரை பாலிடெக்னிக் கல்லூரி ஆசிரியர்களுக்கு ஜனவரி மாத ஊதியம் வழங்கப்படாதது குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திருவாளர்கள் டி. சந்தோஷம், பா. ரா. தாமஸ் மற்றும் சி. ரா. லெட்சுமிகாந்தன் ஆகியோர் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

"மதுரை பாலிடெக்னிக் கல்லூரி ஆசிரியர்களுக்கு ஜனவரி மாத ஊதியம் வழங்கப்படாததால் எழுந்துள்ள நிலைமை குறித்து."

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஒரு விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

**(3) சென்னை, தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கம், தென்னாற்காடு மாவட்டம், கடலூர் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்திற்கு கடன்களை வழங்குவதில் ஏற்பட்டுள்ள கால தாமதம் குறித்து.**

THIRU A. R. DAMODARAN: Sir, I invite the attention of the Hon. the Minister for Labour to a matter of urgent public importance, namely,

"the delay in sanction of loans by the Tamil Nadu Co-operative Housing Society Limited, Madras of the Cuddalore Co-operative Housing Society Limited, South Arcot

---

@ 321–322 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



District in respect of drawal proposals sent amounting to Rs. 4,70,000 as on 30th January 1980 and the tremendous hardship caused to applicants who have not been able to proceed with construction of houses due to non-receipt of loan amounts."

(பிற்பகல் 4-50)

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

THIRU A. R. DAMODARAN : The hon. Members of the House are aware of the fact that he has changed the procedure for sanction of loans to persons who wish to construct houses. Nowadays they mortgage the house before approaching the Society for loans. Formerly we used to approach the Central Society and then the parties would execute the mortgage. Now that the mortgages have been given to the Cuddalore Society, there is a delay of four to five months causing hardship and this procedure has to be looked into by the Government, because the parties have to wait for four or five months. May I know whether the Government will take up this matter and try to expedite the grant of loans ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** இதிலுள்ள கஷ்டங்களைப் பற்றி விரிவாக உறுப்பினர் அவர்கள் எழுதித் தந்தால், பரிசீலனை செய்து ஆய்வு செய்யப்படும்.

**(4) தமிழ் நாடு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சுப் பணியாளர் அலுவலர் சங்கம், தங்களது கோரிக்கையை வலியுறுத்தி போராட்டத் திட்டத்தை அறிவித்துள்ளது குறித்து.**

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கீழ்க்காணும் நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன் :—

"தமிழ் நாடு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சுப் பணியாளர் அலுவலர் சங்கம், கால்நடை பராமரிப்புத் துறை அலுவலகங்களுக்குக் கூடுதலாக அமைச்சுப் பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி பிப்ரவரித் திங்கள் 2 ஆம் தேதி முதல் தொடர்ச்சியாக கறுப்புச் சின்னம் அணிதல், ஆர்ப்பாட்டம் நடத்துதல், விதிப்படி

---

@ 322–323 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

254 தமிழ் நாடு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சுப் பணியாளர் அலுவலர் சங்கம், தங்களது கோரிக்கையை வலியுறுத்தி போராட்டத் திட்டத்தை அறிவித்துள்ளது குறித்து

(திரு. க. மீனாட்சிசுந்தரம்)

[1980 பிப்ரவரி 12

வேலை செய்தல் போன்ற போராட்டத் திட்டத்தை அறிவித்து செயல்படத் தொடங்கியுள்ளது குறித்து" மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கிறேன்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:** தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** இந்த அறிக்கையிலே ஒரு கோரிக்கை ஏற்கப்பட்டிருக்கிறது. அதற்கு உடனடியாக ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அலுவலகங்களிலே பணித் தேக்கம் இருப்பதைக் குறைக்கவும், வேலை வாய்ப்பை அளிக்கவும் உடனடியாக மற்ற கோரிக்கைகளை ஏற்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:** இப்போது ஏற்கப்பட்டிருக்கிற கோரிக்கை குறித்து 1980-81-ல் தான் ஆணை பிறப்பிக்கப்படும். கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் அவர்கள் 6—2—1980 அன்று சங்கத்தின் தலைவரிடமும், பிரதிநிதிகளிடமும் இந்தக் கோரிக்கைகள்பற்றி விவாதம் நடத்தியிருக்கிறார். அது குறித்து அரசு பரிசிலிக்கும். புதுக் கோரிக்கைகளில் 5 ஆய்வில் இருக்கின்றன. மூன்றின் மீது சாதகமான உத்தரவுகள் கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் அவர்களால் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. மற்ற கோரிக்கைகள் கூடிய விரைவில் பரிசிலிக்கப்படும்.

4. அரசின் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(2) அலுவல் வரிசையில் மாறுதல் குறித்து.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** தலைவர் அவர்களே,

"இன்றைய நிகழ்ச்சி நிரலில் நான்காவது இனமான சட்ட முன்வடிவுகளை இப்போது எடுத்துக் கொள்ளலாம், ஆளுநர் உரையின் மீது விவாதத்தை நாளை எடுத்துக்கொள்ளலாம்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

@ 323 ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1980 பிப்ரவரி 12] [மாண்புமிகு மேலவைத் தலைவர்]

"இன்றைய நிகழ்ச்சி நிரலில் நான்காவது இனமான சட்ட முன்வடிவுகளை இப்போது எடுத்துக் கொள்ளலாம், ஆளுநர் உரையின் மீது விவாதத்தை நாளை எடுத்துக் கொள்ளலாம்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

6. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1980.)

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1980) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு 12/1980) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

* THIRU G. VASANTHA PAI: Hon. Chairman, I would like to make some submissions in regard to this Bill because I feel that the Bill, as it stands, some of its provisions are *ultra vires* the provisions of the Constitution as well as the Representation of the People Act, 1951. I have given notice of amendments to this Bill for this reason, namely, that the Bill seeks to restrict the provisions of the Constitution and the Representation of the People Act, 1951. Explanation I to section 12 B says: "For purposes of sub-section (1), the expression "one term" shall mean a period of not less than one year and not more than five years of member-

@ 324–326 ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[Thiru G. Vasantha Pai] [1980 பிப்ரவரி 12

of the composite State went away. In my own Constituency, the Graduates Constituency, there were many divisions owing to the delimitation of Constituencies and there were persons who had served only for 6 months or 9 months. What about those persons who were Members at that time? They may go to a Court and say, "This is *ultra vires* the Constitution and we are entitled to be considered as Members for a "term". For this reason also, I would suggest that this amendment should be accepted. It is in accord with your proposed scheme and I am putting it only in a legalistic manner.

(பிற்பகல் 5-00.)

Then, Sir, I would like to say one more thing. It is stated in section 12-B (1) as follows:

"There shall be paid a pension of two hundred and fifty rupees per mensem to every person who after the first day of March 1952, had been or is a Member of the Legislative Assembly or of the Legislative Council or of both, for one term."

Pension cannot be paid to a Member because he is drawing a salary. The wording should be "has been a Member" and it cannot be "had been or is a Member". It should be "has served as a Member" because a Member is drawing salary and will not be entitled to pension. Explanation III itself says that salary includes salary received by a Member of Parliament or any other State Legislature, Minister, Deputy Minister, Chairman, Deputy Chairman, Speaker or Deputy Speaker. So, if he continues to be a Member, he cannot receive a pension. Pension can be given only to a past Member. When he is drawing a salary, he cannot receive a pension. I would therefore, suggest that for the words "had been or is a Member" in section 12-B (1), the words "has served as a Member" should be substituted.

Then, I would suggest one more amendment for the consideration of the Hon. Minister. What I suggest is that the pension amount should be computed for each term, viz., term by term, or it might be a certain amount for the first term, irrespective of the period, the number of months or years during the first term a Member has served plus a sum of Rs. 50 or Rs. 100, or whatever it may be for every subsequent year served. I request the Hon. Minister to accept this suggestion.



1980 பிப்ரவரி 12] [Thiru G. Vasantha Pai]

Then, Sir, there are persons who were elected Members of the House but who were subsequently disqualified by an Election Tribunal on an Election Petition. They should not be allowed to claim pension by reason of their having participated in the discussion of this House. In this view, I have given notice of an amendment in the following terms:

"Provided, however, no person elected as a member shall be entitled to any pension in the event of his election having been set aside by judgment in an Election Petition, despite he having participated in the House during the pendency of such proceedings."

There are several cases where a Member elected to this House was disqualified by a judgment of an Election Tribunal on an Election Petition but had been allowed to take part in the proceedings of the House during the interregnum. The setting aside of the election takes effect from the date of election. Such a Member cannot be allowed to claim pension. Under the present provisions, he can also claim pension because of his participation in the proceedings of the House. He can show the number of speeches he has made in the House and he can claim pension. Such persons should not be allowed to claim pension and I suggest that my amendment to add the particular proviso might be accepted.

My last amendment is that Explanations I and II to section 12-B should be omitted. These are my submissions on this Bill. With these observations, I whole-heartedly support this Bill.

Mr. Chairman, one more important matter I want to mention in this connection.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: பிறகு சரியாக எடுத்துக் கொள்ளும் போது, மற்றவற்றைப் பேசலாமே?

THIRU G. VASANTHA PAI: Sir, I want to make a general observation. Members are paid a salary of Rs. 250 and Rs. 500 by way of compensatory allowance. This means an annual income of Rs. 9,000. Let not any Member of this House be under the illusion that this is free from income-tax. It is not. As far as Members of Parliament are concerned, section 10(17) of the Income-tax Act has a provision saying that any daily allowance received by any person by reason of his Membership of Parliament or any State Legislature or any committee thereof or any

allowance received by any Member of either House of the Parliament under the Members of Parliament (Additional Facilities) Rules, 1975 are exempted. So, nothing is stated about the Members of the Legislature. Let us not do what one Minister did there by not filing a return. We have to file a return for the full amount of Rs. 9,000 in which case we will be liable today on the entire amount of salary and allowance. Therefore, I request the Hon. Minister to take this up with the Central Government before the Budget Session and ask for a clarification why the exemption should be restricted only to the Members of Parliament and why our compensatory allowance should also not be excluded under section 10(17) of the Income-tax Act. This is a general observation which I wanted to make.

THIRU G. SWAMINATHAN : Sir, I would like to make a few observations on this Bill in the light of the remarks made by the hon. Member Thiru Vasantha Pai who is an eminent lawyer.

Regarding Income-tax, I think that many of the hon. Members here may not be as much worried about it as the hon. Member Thiru Vasantha Pai who, perhaps, has to pay as income-tax more than 50 per cent of what he gets here.

The hon. Member Thiru Vasantha Pai also said that for the word ' term ', the definition in the Payment of Salaries Act, the definition in the Constitution and the definition in the Representation of the People Act should all tally. Even though I have not gone very deeply into this, my own feeling is that the definition in the Payment of Salaries Act is self-contained and that the term as defined in the Act need not coincide with the term as defined either in the Constitution or in any other Act. So, I think that there need not be any amendment on that account. Last year, in Karnataka, they passed an amendment to their Payment of Salaries Act under which they have stipulated that any person who has been elected as a Member of the House, even in case the House has been dissolved before one year and even if he has held office for two or three months, will be considered to have served the full term of five years and that he will be entitled to a pension admissible for a full term of five years. In Karnataka also. . . .

THIRU G. VASANTHA PAI : Sir, since the Deputy Chairman has referred to me, I would like to make a clarification. I have not said that it is invalid to say that by having served for two months



a member will be deemed to have served for the whole term. I have said that the statement that a person who has not served for one full year shall not be entitled to the pension is wrong. I have said that that takes away his right and, therefore, he will be able to agitate it in a Court of law.

THIRU G. SWAMINATHAN : The hon. Member Thiru Vasantha Pai knows law more than I. Even in Parliament they have passed an Act regarding pension to Members of Parliament wherein they have stated that pension would be given only to those Members who have served for five years. I feel that we have the right to define the term as we like in so far as this particular Act is concerned. We need not correlate our Act with any other Act.

Regarding the Members from Kerala or Karnataka and who served in this House in 1952 or 1954, I think those people also would be entitled to the pension. That is what I understand it to be.

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்தவரையில், இதனை நான் பொதுவாக வரவேற்று, ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். பொது வாழ்க்கையில் ஈடுபட்டு பணியாற்றுகிறவர்களுக்குச் சில வசதிகள் தேவை என்பதையும், பல நேரங்களில் இப்படிப் பணியாற்றுகிறவர்கள் இந்தப் பணியிலிருந்து விடுபடுகிற நிலை ஏற்படும்போது, பல்வேறு சங்கடங்களுக்கு உள்ளாகிறார்கள் என்பதையும் மனதிற் கொண்டு, இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதால் நான் இதனை வரவேற்கிறேன்.

கடந்த காலத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையில் பேசும் போது, ஒரு கருத்தை வலியுறுத்தினார்கள். ஆனால் இப்போது அதை வற்புறுத்தவில்லை என்றாலும், அதைப்பற்றி நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதாவது நமது மாநிலத்தில் அரசுப் பேருந்துகளில் பயணம் செய்யும்போது, உறுப்பினர்கள் தங்களுக்குத் துணையாக யாரையாவது அழைத்துச் செல்ல வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறார்கள்

(பிற்பகல் 5-10)

அதைப் பொறுத்த வரையில் இதை ஏற்பதில் சங்கடம் இருக்கிறது என்று கூறுகின்றார்கள். ஆனால் நாளடைவிலே அதை ஏற்பதில் உள்ள நியாயத்தை

உரை முடியுமென்று கருதுகிறேன். இப்போதுகூட அந்த நியாயத்தை மீண்டும் பரிசீலனை செய்ய வாய்ப்பு இருக்குமானால், பரிசீலனை செய்வது நல்லது என்று வலியுறுத்த விரும்புகிறேன். நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் துணைவியோடு மற்றொருவரையும் அழைத்துச் செல்லும் வாய்ப்பு இருக்கிறது. இங்கேயும் இது தேவையின் அடிப்படையிலே எழுப்பப்படுகிறதே தவிர, வேறு ஒன்றும் அல்ல. ஆகவே மீண்டும் இதைப் பரிசீலனை செய்வது நல்லதாக இருக்குமென்ற கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

பல்வேறு உறுப்பினர்களுடைய நிலைகளையெல்லாம் ஆராய்ந்த பின்னர், இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை எண்ணுகிறபோது, இன்னொரு ஆலோசனை சொல்லுவது அவசியமென்று கருதுகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள், விடுதியில் இல்லாமல் சென்னையில் உள்ள பல்வேறு வீட்டு வசதி வாரியத்தின் வீடுகளில் குடியிருக்கின்ற சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்களுக்கு, அரசு அலுவலர்களுக்குத் தரப்படுகிற வாய்ப்பைப் போலவே அவர்கள் பெறுகிற ஊதியத்தின் அடிப்படையிலே அதற்கான வாடகையை நிர்ணயிக்கிற நிலையை ஏற்படுத்தினால், சென்னையில் தங்குபவர்களுக்கு பலன் அளிக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன். உறுப்பினர்களுக்கு இருக்கிற பல்வேறு சங்கடங்களையெல்லாம் உணர்ந்துதான் பென்ஷன் தரவேண்டுமென்று எண்ணுகிறோம். ஒரு சிலரைத் தவிர பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்கள் வசதி படைத்தவர்களாக இருப்பதில்லை என்பதை நாம் அறிவோம். ஆகவே சென்னையில் தனியாக ஹவுசிங் போர்டு வீடுகளில் குடியிருப்பவர்களுக்கு, அரசு அலுவலர்களுக்கு வாடகை நிர்ணயிப்பதைப் போலவே நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை அரசு நிச்சயமாகப் பரிசீலனை செய்யுமென்று எதிர்பார்க்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் தருகின்ற இந்த நடவடிக்கையை மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், இது அவசியம்தானா என்ற சந்தேகம் எனக்கேகூட ஏற்பட்டது. நிரந்தரமென்று ஒரு 'டேர்ம்' இருந்துவிட்டுச் செல்பவர்களுக்குப் பெரிய அளவிலே செய்யக்கூடிய காரியமாக இருக்குமோ என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டது. ஆனால் பலவற்றை எண்ணிப் பார்க்கிறபோது, மொத்தத்திலே ஒன்றிரண்டொருவருக்கு அப்படி இருக்கும் என்றாலும்கூட, பெரும்பாலானவர்களுக்கு தேவையானதாகவும், பலன் அளிக்கக் கூடியதாகவும் இருப்பதால், இந்த மசோதாவை வரவேற்று, நான் சொல்லிய கருத்துக்களை இந்த அரசு பரிசீலனை செய்யுமென்ற நம்பிக்கையோடு அமைகிறேன்.





**திரு. சி. இராமலிங்கம் :** தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்கிற மசோதாவை வரவேற்றுப் பேசுகிறேன். நீண்ட நாட்களாக பல காங்கிரஸ் கட்சியிலே எம். எல். ஏ.வாக இருந்து சென்ற சட்டமன்ற உறுப்பினர்களோடு நான் பழகிய காலங்களில், "எம்.எல்.ஏ.வாக இருந்தபோது சம்பாதிக்கத் தெரியாமல், நன்மைகளைப் பெற வருகிறவர்களிடம் அன்பளிப்பைப் பெறத் தெரியாமல் இருந்த காலத்திலே இருந்து விட்டோம். இப்போது எங்கள் குழந்தை, குட்டிகள் கஷ்டப்படுகின்றன" என்று பலர் சொன்னார்கள். அந்த அளவிற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் குறைகள் நிறைய இருந்தன. ஆகவே என்னைப் போன்ற சாதாரண ஏழைகள் அரசியலில் வந்து பின்பு 'அம்போ' என்று போகிறான் என்ற சொல்லுக்கு இடம் இல்லாமல், அரசியலில் இருந்து ஓய்வு பெறும் நேரத்தில் ஓய்வூதியமாக 250 ரூபாயைப் பெறுகிற அளவிற்கு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்ததற்காக மனதாரப் பாராட்டுகிறேன்.

இந்தச் சட்டத்தில், ஓய்வு பெறும் உறுப்பினர்களுக்கு வைத்திய வசதி செய்து தரவும் வழிவகை செய்திருக்கிறார்கள். அதைப் போலவே சர்க்கார் பேருந்துகளில் செல்லும் உறுப்பினர்களுக்கும் சலுகையைத் தர வேண்டும். சர்க்கார் பேருந்துகளில் செல்லுகிற நேரத்தில் பாஸ் கொடுக்க வேண்டுமென்று நான் விரும்பவில்லை. முன்னாள் சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர் என்று சொன்னால், அரசுப் பேருந்துகளில் முக்கியத்துவம் அளித்து வி. ஐ. பி. சீட்டுகளில் உட்கார வாய்ப்பு அளிக்க வேண்டும். நான் ஒரு முறை கன்னியாகுமரிக்குச் சென்றிருந்தபோது, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் கும்பலோடு கும்பலாக இடம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தார். அவருக்கும் பின்னாலே சென்ற எனக்கு இடம் கொடுத்தார்கள். அவர் என்னை இரகசியமாக அழைத்து, "நான் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர். இடம் வேண்டுமென்று இரண்டு நாட்களாக கண்டக்டரைக் கேட்கிறேன். தரமாட்டேன் என்று சொல்கிறார்" என்று சொன்னார். ஆகவே, "நான் ஒருவன்தான் இருக்கிறேன். இரண்டு சீட்டுக்கள் இருக்கின்றன. ஆகவே நீங்களும் வாருங்கள்" என்று அழைத்துச் சென்றேன். இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே அந்த வாய்ப்பைப் பெற்றுத் தர வேண்டுமென்று சொன்னார்கள்.

[திரு. கே. எஸ். அப்துல் வகாப்] [1980 பிப்ரவரி 12

(பிற்பகல் 5-20)

அடுத்தபடியாக, 'டெலிபோன் இன்ஸ்டலேஷன்' உறுப்பினர்களுக்குக் கொடுப்பது பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கத்தின் சார்பிலே வைக்கப்படும் என்று 29—4—1979 அன்று சட்டமன்றப் பேரவையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள். இன்றைக்கு பத்து மாதங்களுக்குப் பிறகு இதை அமுல்படுத்துவதாக சட்ட முன்வடிவு வருகிறது. அதே போன்று பெமிலிக்கு ட்ரீட்மெண்ட் பற்றி 12—9—1978-லே அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள். இன்றைக்கு ஒரு வருடம் 4 மாதங்கள் ஆகின்றன. சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்களுக்குக் கொடுக்கக்கூடிய வசதிகளை இத்தனை வருடங்கள் தாமதித்து அளிப்பதாக இருந்தால், அது மிகவும் பெரிய தாமதமாகும். இனியாவது அப்படியில்லாமல் அரசு உடனுக்குடன் இது மாதிரி காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொனனார்கள். நான் அதைச் சொல்ல வேண்டும் என்று இருந்தேன். ரிட்டையர் ஆகின்ற உறுப்பினர்களுக்கு பஸ்ஸில் வருவதற்கு 'பாஸ்' கொடுத்தால் இன்னும் ரொம்ப உதவியாக இருக்கும். அவர்களுக்கு இந்த வசதி செய்து கொடுப்பதால், அரசாங்கத்திற்கு ரொம்பத் தொகை போய் விடாது. அவர்களுக்கு பஸ்ஸில் இடம் கிடைக்க, ரிசர்வ் செய்வதற்குக் கூட ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. அதற்கு வழிவகை செய்தால், அது பெரிய உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்கு 'சீட்' கிடைப்பதற்கு வழி செய்வதே பெரிய உதவியாகும், அவர்களுக்கு லட்ச ரூபாய் கொடுத்ததுபோல இருக்கும். இருந்த இடத்திலேயிருந்தே டெலிபோனிலே நான் இன்று வருகிறேன், பஸ்ஸிலே இடம் வேண்டும் என்று சொல்லிவிட்டால், போதும். அந்த 'பெசிலிட்டி' கிடைத்து விடுகிறது. நான் திருச்சியைச் சார்ந்தவன். திருச்சியிலிருந்து வருவதற்கு ரூபாய் 16½ ஆகி விடுகிறது. பஸ் பாஸ் இருக்கிறது என்பதனால் மட்டும் எத்தனை தரம் போகப் போகிறோம்? சுண்டைக்காய் கால் பணம், சுமைக்கூலி முக்கால் பணம் என்பதுபோல, பிரயாணச் செலவு, பஸ் சார்ஜ் செலவு குறைவாக இருந்தாலும், மேற்கொண்டு வேறு செலவுகள் வருகின்றன. பிரயாணச் செலவு குறைவாக இருக்கிறது என்பதற்காக மட்டும் பஸ்ஸில் போக முடியாது. ஏதாவது வேலை இருந்தால்தான், அவர்கள் பஸ்ஸில் போவார்கள். ஏதோ மாதத்திற்கு ஒரு தடவை வரலாம். உறுப்பினராக இருந்தால், 3, 4 தடவைகள் வரலாம். ஆகவே அவர்களுக்கும் பாஸ் கொடுப்பதால் அரசாங்கத்துக்கு



1980 பிப்ரவரி 12] [திரு. கே. எஸ். அப்துல் வகாப்]

'பைனான்சியல் இம்பிளிகேஷன்ஸ்' அதிகமாக இருக்காது. அதையும் பரிசீலனை செய்து அவர்களுக்கும் பிரயாணச் சலுகையைக் கொடுத்தால், அது அவர்களுக்குப் பெரிய உதவியாக இருக்கும் என்று கூறிக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

* திரு. நீலநாராயணன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சட்டமன்ற மேலவை பேரவை உறுப்பினர்களுடைய சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவிலே பேசும்போது, மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல பல கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளோடுகூட முக்கியமான ஒரே ஒரு கருத்தை மட்டும் மேலவையில் தங்கள் மூலமாக இந்த அரசுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் நாம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற உறுப்பினர்கள் என்ற முறையிலே பொது மக்களுடைய தொண்டர்களாக விளங்கிக் கொண்டிருக்கிறோம். பொதுத் தொண்டுக்காக பல இடங்களுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவேண்டிய கடமைகள் நமக்கு இருந்து கொண்டிருக்கின்றன. அந்தத் தொலைபேசி வசதியை அமைத்துக் கொடுப்பதற்கு சட்டத்திலே வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். ஆனால் தொலைபேசிக் கட்டணமாக, அது லோகல் கால்ஸ் ஆக இருந்தாலும், எஸ். டி. டி. கால்ஸ் ஆக இருந்தாலும் சரி, இன்றைய தினம் ரூபாய் 300, ரூபாய் 400 வரையிலே ஒவ்வொரு உறுப்பினருக்கும் செலவு ஆகிக்கொண்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். என்னைப் பொறுத்த வரையிலும், இந்த நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது. அதுவும் ஹாஸ்டலிலே ரூம் எடுத்துக்கொண்டு தங்குபவர்களுக்கு அந்த வசதி ஓரளவுக்குக் கிடைக்கிறது. ஆனால் வீட்டிலே ஃபோன் வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு அத்தகைய வசதியில்லை என்று கருதுகிறேன். ஆகவே இந்தச் சட்டத் திருத்தத்தில் இந்த சார்ஜில் நூறு ரூபாய், இருநூறு ரூபாய் வரையில் ஃபோன் சார்ஜுக்கு என்று ஒதுக்குவதற்கு திருத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமைகிறேன். வணக்கம்.

* திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் அவர்களே, மேலவை உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பல வசதிகளை அளிக்கின்ற இந்த மசோதாவில் எனது சொந்தக் கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேனே தவிர, நான் சொல்கின்ற கருத்துக்கள் நான் பிரதிநிதித்துவம் வகிக்கின்ற என்னுடைய கட்சியினுடைய கருத்து அல்ல என்பதை நான் முதலிலேயே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால், என்னைப்

பொறுத்த அளவில், சட்டமன்ற அங்கத்தினர்களிலே வசதி குறைந்தவர்களுக்கு இந்த வாய்ப்பை எல்லாம் செய்து கொடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். 'இன்கம் டாக்ஸ்' என்று யார் யாரெல்லாம் செலுத்தவில்லையோ அவர்களுக்கு இந்த வசதியெல்லாம் செய்து கொடுக்க வேண்டும். சட்டமன்றத்திற்கு வருகின்ற அத்தனை பேர்களும் ஏழைகள் அல்ல, அத்தனை பேர்களும் பணக்காரர்களும் அல்ல. சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்து ஓய்வு பெற்றவர்கள் அத்தனை பேர்களும் தொல்லைக்குட்பட்டவர்கள் அல்ல. அவர்கள் அத்தனை பேர்களும் செழிப்பாக இருக்கிறார்கள் என்பதுமல்ல. ஆகவே பொது வாழ்க்கைக்கு ஏழை எளிய குடும்பத்திலிருந்து வந்தவர்கள், உணர்ச்சியாலும், பொதுத் தொண்டு உணர்வினாலும், மக்களுக்காகப் பொதுத் தொண்டாற்றி ஓய்வு பெற்று வேறு வழியிலே ஊதியம் தேடிக்கொள்ள முடியாமல் இருப்பவர்கள், நிலபுலன் இல்லாமல் இருப்பவர்கள், இவர்களுக்கெல்லாம் இந்த வசதிகளை நாம் செய்து கொடுக்க வேண்டும். இன்னும் கொஞ்சம் வசதிகளை அதிகரித்துக் கொடுத்து அவர்களும் செழிப்பாக இருக்கக்கூடிய ஒரு நிலையை உருவாக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. அதைப்பற்றி நாம் சிந்திக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். இப்போது எல்லோருக்குமே இவ்வசதி என்று போட்டிருக்கிறார்கள். 'இன்கம் டாக்ஸ்' 50 பெர்சன்ட் கட்டுகின்றவர்களும், ஓய்வூதியம் வாங்கிக்கொண்டுதான் இருக்கிறார்கள். அதைப்பற்றிக் கேட்டால், நான் இன்னொரு தர்மத்திற்குக் கொடுக்கிறேன், அதற்குக் கொடுக்கிறேன், இதற்குக் கொடுக்கிறேன் என்று சொல்லுவார்கள். ஆகவே, நம்முடைய எண்ணமெல்லாம், செயல் எல்லாம் நலிந்தவர்களுக்கு, மெலிந்தவர்களுக்கு—அது சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்தாலும் சரி, நாட்டிலே வாழ்கின்ற மக்களானாலும் சரி—உதவி செய்கின்ற நிலையிலேயே இருக்க வேண்டும். எனக்குச் சொந்தக் கார் இருக்கிறது. அரசாங்கம் கொடுத்திருக்கின்ற காரும் இருக்கிறது. அப்படி இருந்தாலும்கூட மாவட்டத்திலே பல பகுதிகளிலே நான் நடந்தே செல்வேன். எங்கேயாவது என் காரை நிறுத்திவிட்டு, நடந்தே அலைந்து திரிந்து கொண்டிருப்பேன். அப்படிப் போகின்றபோதுதான் என்ன பேசுகிறார்கள் என்பது தெரியும். அங்கத்தினர்களும் அப்படிப் போய்ப் பார்த்தால் தெரியும். சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம், பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் சாதாரணமானவர்கள், கட்சி சார்பில்லாதவர்கள் இருக்கிறார்கள். அவர்களைப்பற்றிக்கூட எவ்வளவு மட்டமாகப் பேசுகிறார்கள் என்பதை நான் தெரிந்துகொண்டிருக்கிறேன். அவர்கள் என்ன சொல்கிறார்கள் ? எல்லாம் அவனவன் காரியமாகத்தான் போகிறான் " என்று சொல்கிறார்கள். இந்த மசோதா இப்போதுதான் 'பாஸ்'



ஆகிறது. அதிலேயும் நாம் ஏழைகளுக்குத்தான் உதவி செய்கிறோம், நலிந்தவர்களுக்குத் தான் உதவி செய்கிறோம் என்று சொன்னால், அவர்களும் நம்மைப்பற்றிக் குறை சொல்ல மாட்டார்கள். பலர் நல்ல வசதியுடன் இருந்தாலும், அவர்களும் இந்த பென்ஷன் வாங்குவதற்கு ஏற்ற நிலையிலே இந்த சட்டத் திருத்தம் இருக்கிறது. இதை நான் குறை சொல்லவில்லை. இதையெல்லாம் திருத்த வேண்டும். மக்கள் குறை சொல்வார்கள். "ஒரு வருடம் சட்டசபை உறுப்பினராக இருந்தாலும் ஓய்வூதியம் கொடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். பார் என்ன அநியாயம் ?" என்று நாட்டிலே இருப்பவர்கள் சொல்லத்தான் சொல்வார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது 'உறுப்பினராக இரண்டு தடவை' இருந்தால் ஓய்வூதியம் உண்டு என்று சொல்லப்பட்டிருந்தது. இப்போது அதை நாம் 'ஒரு தடவைக்கு' என்று கொண்டு வருகிறோம். இனி அதைவிடக் குறைந்த காலமாக ஒரு வருடம் இருந்தாலும் கொடுப்போம் என்று கொண்டு வருகிறீர்கள். அதில் கஷ்டப்படுகிறவர்களுக்கு மட்டும் என்று சொன்னால், நாம் மக்கள் மத்தியிலே சொல்ல எவ்வளவு எளிதாக இருக்கும் என்பதைச் சிந்திக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

பஸ் பாஸ் பற்றி இங்கே சொன்னார்கள். அதைக் கட்டாயம் கொடுக்க வேண்டும். பஸ்ஸில் முன்னாலேயே இரண்டு சீட்டுக்கள் கொடுக்கிறோம். அந்த இரண்டு சீட்டுகளில் நாம் போய் உட்காருகிறோம். அப்போது பின்னால் உட்கார்ந்து கொண்டிருப்பவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதையும் நாம் சற்று காது கொடுத்துக் கேட்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் பற்றி அவர்கள் அங்கே என்ன சொல்கிறார்கள் என்பதைக் கேட்க வேண்டும். "அவர் என்ன பெரிய கொம்பு ? சட்டமன்ற உறுப்பினர் என்றால் என்ன" என்று கிண்டலாகச் சொல்வார்கள். அப்படிச் சொல்கிறார்களா இல்லையா என்பதை நீங்கள் கேட்க வேண்டும். நாம் காரிலே போய்க் கொண்டிருக்கும்போதும் நம்மைச் சுற்றி என்ன பேசுகிறார்கள் என்று நாம் கேட்க வேண்டும். உதாரணத்திற்கு ஒன்று செய்யுங்கள். ஒரு நல்ல ஜங்க்ஷனில், கூட்டமாக இருக்கக்கூடிய, அதிகமாக ஆட்கள் இருக்கக்கூடிய பகுதியிலே, சாயங்காலம் 6 மணி அளவில் சொந்தக்காரர் ஒருவரை கீழே இறக்கிவிட்டுவிட்டு, நாம் காரில் போக வேண்டும். அப்போது அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை அவர் மூலம் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். நம்மை நேரில் பார்க்கும்போது, கை எடுத்து கும்பிடுவான், சர்டிபிகேட் வேண்டுமென்று வருவான், சிபாரிசுக்கு வருவான், நம்மைக்கூடவே அழைத்துக்கொண்டு போவான். ஆனால் பின்னாலே என்ன சொல்வான் ? நம் வரிப்பணத்திலே வாழ்கிறான் என்று சொல்வான். அப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம்

இருக்கின்றன என்பதை நாம் உணர்ந்து நம்முடைய சட்டங்களை உருவாக்க வேண்டும். அப்படியெல்லாம் சொல்லக்கூடிய நிலைமைகளை மாற்றுவது போல் சட்டங்கள் உருவாக்கிக்கொண்டு வருவது நல்லது. மக்களும் சகித்துக் கொள்ளும் முறையில் அமைய வேண்டும். இப்போது சாதாரண மக்களுக்கு ஜனநாயகத்திலே நம்பிக்கை இல்லாமல் போகிறது. ஜனநாயகத்தை இயக்கிக் கொண்டிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களையே எதிரிகள் என்று சொல்லக் கூடிய அளவுக்கு நிலைமை உருவாகிறது. அந்த நிலையை வளர்க்காமல் பொதுவாழ்வில் நலிந்தவர்களுக்கு என்னவெல்லாம் செய்ய வேண்டுமென்பதைச் சிந்திக்க வேண்டுமென்று, தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக இந்த மன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இதிலே நான் ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். 195[illegible] லிருந்து, தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள் ஓய்வூதியம் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. காம்போசிட் மெட்ராஸ் ஸ்டேட் என்று ஆந்திரம், கேரளத்தில் ஒரு பகுதி, கன்னடத்தில் ஒரு பகுதி எல்லாம் சேர்ந்து இருந்த பழைய சென்னை மாநிலத்திலிருந்து மாறி தமிழகம் அமைந்தது. அது 1956 நவம்பர் 1 ஆம் தேதியன்று அமைந்தது. 1956-ல் தான் நாங்களே கன்னியாகுமரியிலிருந்து இங்கே வந்தோம். 1952-லே சட்ட மன்றத்திலே உறுப்பினர்களாக இருந்தவர்களுக்கு ஓய்வூதிய வசதிகள் கொடுக்கப்படுகின்றன. 1952-ல் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்து இப்போது ஆந்திர மாநிலத்திலே சேர்ந்திருப்பவர்களுக்கு என்றால், இந்த வசதி உண்டு. 1952-ல் சட்டமன்ற உறுப்பினராக இருந்து, பாலக்காட்டிலே பிறந்து, கேரளத் திற்குப் போயிருந்தால், அவருக்கும் உண்டு. கர்நாடகப் பகுதிக்குப் போய் இருந்தால் அவருக்கும் உண்டு. நாம் 1947-ல் சுதந்திரம் அடைந்தோம். அதுவரை அந்தப் பகுதியிலே இருந்த அத்தனை பேர்களும் பொதுத் தொண்டர் களாக இருந்து சுதந்திரத்திற்காகப் போராடினோம். என்று சுதந்திரம் வந்ததோ, அன்று தனித் தமிழகத்தோடு சேர்வது, ஐக்கியத் தமிழகத்தை அமைப்பது, தமிழ் இனத்தோடு சேர்வது என்று ஒரு போராட்டத்தை ஆரம்பித்து, 1956 வரை போராடினோம். 1952-ல் யார் உறுப்பினர்களாக இருந்தார்களோ அவர்களுக்கு, இந்த வசதிகளைக் கொடுக்கிறோம்.

(பிற்பகல் 5-30)

1952-க்கு முன்னாலே திருவிதாங்கூர் சட்டமன்றத்திலே உறுப்பினர்களாக இருந்தவர்கள் உண்டு. அவர்களுக்கு இந்த உதவியை நான் கேட்கவில்லை. ஏனென்றால் இங்கிருக்கிறவர்களுக்கே கொடுக்கவில்லை. 1952-லே யார் சட்ட





மன்ற உறுப்பினர்களாக இருக்கிறார்களோ அவர்களுக்குக் கொடுக்கிறோம். ஆனால் 1952-லே திருவிதாங்கூர்-கொச்சி சமஸ்தானத்தில் சட்டமன்ற உறுப் பினராக இருந்தால், 12 மாதங்களில் 6 மாதம் அவர்கள் ஜெயிலில் இருந்தார்கள். பல தடவை அவர்கள் அடித்துத் துன்புறுத்தப்பட்டிருக்கிறார்கள். திரு. குஞ்சன் நாடார்—இப்போது அவர் இல்லை, இறந்துவிட்டார்—நமது பேரவையிலும் உறுப்பினராக இருந்தார். இரவு 1 மணிக்கு 150 போலீசார் அவருடைய வீட்டுக்குச் சென்று, கதவை உடைத்து, அவரை அடித்த அடியில், பக்க வாதத்தோடு அவர் அலைந்து கொண்டிருந்தார். எத்தனையோ கொடுமைகள் இழைக்கப்பட்டன. அத்தனை கொடுமை களையும் தலைவரவர்களுக்குப் போன் பண்ணி, உங்களுக்குத் தகவல் தெரிவித்து, உங்களது உதவியையும் பெற்றிருக்கிறோம். உங்களை சாட்சி யாகச் சொல்லிக்கொள்கிறேன். அப்படி அந்தப் பகுதி தமிழகத்தோடு சேர வேண்டுமென்று போராடி, 1952-லே சட்டமன்ற உறுப்பினராக அங்கே இருந்தவர்களுக்கு, அப்பகுதி இங்கு சேர்க்கப்பட்டதால் இங்கே வந்த அவர்களுக்கு இல்லை, கேரளப் பகுதியில் அவர்கள் தொடர்ந்து இருந்தால், ஓய்வூதியம் கிடைத்திருக்கும். 1956-க்கு முன்னாலேயே சட்டமன்றக் காலம் அவர்களுக்கு முடிந்துவிட்டது. அவர்களுக்கு ஓய்வூதியம் இல்லை. அதனையும் கொஞ்சம் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு சேர்ந்த பகுதி. அதாவது ஸ்டேட் ரி-ஆர்கனை சேஷன் ஆக்ட்-படி சேர்ந்த பகுதி. பாராளுமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட சட்டப்படி அந்தப் பகுதியை இணைத்திருக்கிறார்கள். அதில் மிகத் தெளிவாக, 21-வது பிரிவு என்று நினைக்கிறேன், அதிலே சொல்லியிருக்கிறார்கள். காலை யிலே இருந்து நம்முடைய நூலகத்திலே அதைத் தேடினேன். எவ்வளவு அழகாக நம்முடைய நூலகத்தை வைத்திருக்கிறார்கள்? எந்தச் சட்டத்தைக் கேட்டாலும் கிடையாது. பாராளுமன்றத்தில் எந்த மசோதாவைக் கேட்டா லும், என்ன கேட்டாலும் உடனே தருகிறார்கள். அதற்காக தனி ரெபரன்ஸ் செக்ஷன் வைத்திருக்கிறார்கள். இங்கே எதைக் கேட்டாலும் கிடைக்காது. தமிழர்கள் வளம் மிக்கவர்கள், கற்பனையில் பேச வேண்டும். நமக்கெல்லாம் பாராயணம் பண்ணும் பழக்கம் இருக்கிறது. எனவே நான் 21-வது பிரிவு என்று நினைக்கிறேன். தவறு இருந்தால் திருத்திக்கொள்ளுங்கள். நாங்கள் மாற்றப்பட்ட பிரதேசத்தை—டிரான்ஸ்பர்ட் டெரிட்டரி—சேர்தவர்கள், அந்தப் பிரதேசத்திலுள்ள சலுகைகளையெல்லாம் எங்களுக்குக் கொடுக்க வேண்டும். அவர்கள் ' சர்விஸ் 'ல் இருக்கிறார்கள் என்று சொல்லுகிறோம். இப்போது பென்ஷன் கொடுப்பதால், இதையும் ஒரு 'சர்விஸ்' ஆக நினைக்கிறோம்.

எனவே அங்கே இருக்கிறவர்களுக்கு என்னென்ன சலுகைகள் உண்டோ, அவை அப்படியே கொடுக்க வேண்டும். அதற்கு மேலே இங்கே என்னென்ன சலுகைகள் உள்ளதோ அதையும் கொடுக்க வேண்டும். மேலும், அந்தப் பிரதேசத்தில்—கேரளாவில் தொடர்ந்து இருந்தால் என்னென்ன சலுகைகள் கிடைத்திருக்குமோ அவைகளையும் தர வேண்டும். இது பாராளுமன்றச் சட்டம். அதை மாற்ற வேண்டுமென்றால், மத்திய அரசின் முன் அனுமதி பெற்றுத்தான் மாற்ற வேண்டும். அது மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே பல அரசு ஊழியர்கள் சார்பாக 1957-ல் 'ரிட்' போட்டு, வெற்றி பெற்றிருக்கிறோம். இந்த அரசாங்கம்—இப்போது இருக்கும் அரசாங்கத்தைச் சொல்லவில்லை—தமிழகத்தில் இருந்த அரசாங்கம், திரு. பி. எஸ். காலத்திலிருந்து இன்றுவரை உள்ள அரசாங்கங்கள், அந்த உரிமையைக் கொடுக்கக்கூடாது என்று சொன்னாலும், நீதி மன்றத்திலே போய் 57 ரிட் மனுக்களில் ஜெயித்தோம். அங்கே சட்ட மன்ற உறுப்பினராக 1952-ல் இருந்து, இங்கு வந்து விட்டதால், இப்போது உயிரோடு வாழ்கிறவர்களுக்கும் ஓய்வு ஊதிய வசதியைக் கொடுக்க வேண்டும். அப்படி நான் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். 3, 4 பேர்கள்தான் இருக்கிறார்கள். இன்னும் 5, 6 வருடங்கள்தான் இருப்பார்கள். அவர்கள் இன்னும் 20 வருடங்கள் இருக்க வேண்டுமென்று நான் வாழ்த்துகிறேன். அவர்களையும் இதில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். முதலிலே நான் சொன்ன கருத்தாகிய வசதி படைத்தவர்களுக்கு ஓய்வூதிய வசதி எட்டாமல் செய்ய என்ன செய்யவேண்டுமென்று இப்போது இல்லை என்றாலும், இனி மேலாவது சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** மாண்புமிகு தலைவரவர்களே, சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டிருக்கிற சம்பளம் வழங்கும் திருத்தச் சட்ட முன்வடிவு மீது மாண்புமிகு மேலவை உறுப்பினர்கள் அவர்களுடைய எண்ணங்களையும், கருத்துக்களையும் மிக அழுத்தமாக இங்கே தெரிவித்திருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, இங்கே கருத்துக்களைத் தெரிவித்த மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் இதை வேண்டாமென்று சொல்லவில்லை என்று நினைக்கிறேன். இதை எந்த அளவிற்கு இன்னும் பயனுள்ளதாக ஆக்கிக்கொள்ள வேண்டுமென்ற கருத்தைத்தான் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் மட்டும் அவர்களுடைய தனிப்பட்ட கருத்தாக ஒன்றைச் சொன்னார்கள். வசதி குறைவான உறுப்பினர்களுக்கு மட்டும் இதைக்



கொடுப்பது பற்றித் தீர்மானிப்பது நல்லதென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். இந்த நேரத்திலே நான் என்னுடைய தனிப்பட்ட கருத்து ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொருளாதார ரீதியில் வரக்கூடிய சிந்தனைகளை, அவரவருக்கு இருக்கும் பின்னணியை வைத்துத்தான் கூறுவார்கள். வசதி உள்ளவர்கள் வேண்டாமென்று சொல்லுவதும், வசதி இல்லாதவர்கள் வேண்டுமென்று சொல்லுவதும் தவிர்க்க முடியாதது. ஆனால் ஒன்றை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். வசதி என்பது நிரந்தரமானதல்ல. அந்த ஆபத்தையும் எண்ணிப் பார்க்க வேண்டும். ஓரளவிற்கு இன்றைக்கு வசதியாக இருக்கக்கூடியவர்கள்கூட காலப் போக்கில் சில சூழ்நிலைகளின் காரணமாக வசதியிழந்தவர்களாக வரக்கூடிய நிலைமைகள் ஏற்படும். எனவே ஒரு சட்டம் என்று வரும்போது, எல்லோருக்கும் அது பொதுவாக இருப்பதுதான் நல்லதென்பது இந்த அரசாங்கத்தின் கருத்தாக இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பை அவர்கள் சட்டப் பிரச்சினைகளை மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அவருக்குள்ள கவலை எல்லாம், இப்படி மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கொடுக்கக்கூடிய இந்த ஊதியச் சலுகைகள் வழக்குமன்றத்திலே சென்று அங்கே இந்தச் சட்டம் செல்லாதென்ற அளவிற்கு அல்லது திருத்தங்கள் வேண்டுமென்ற அளவிற்கு வந்துவிடக்கூடாதென்ற நல்லெண்ணத்தில் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட அச்சம் அவர்களுக்கு எந்த அடிப்படையிலே இருந்தாலும், நான் என்னைப் பொறுத்த அளவில் சொல்லிக்கொள்வது, இந்தச் சட்ட முன்வடிவில் இந்தந்த வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும், —I consider all his observations as merely drafting suggestions-- இது எப்படி இருக்க வேண்டும், எப்படியிருந்தால் கோர்ட்டுக்குப் போனாலும் அடிபட்டுப் போகாது என்ற எண்ணத்தில் சொல்லியிருப்பதாக எடுத்துக்கொள்கிறேன். நான் நிச்சயமாகச் சொல்கிறேன், இந்தச் சட்டம் ஊதியச் சலுகைகளை வழங்குவதற்கான வசதிகளை அமைத்துக் கொள்வது என்ற அளவிலேதான் இருக்கிறது. ஒரு உறுப்பினருடைய பதவிக் காலம்—'டேர்ம்' என்பதை 5 ஆண்டுகள் பதவிக் காலத்தைக் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கருதுகிறேன். ஓர் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றால் 5 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இது அவருடைய தேவைக்காக வழங்கக்கூடிய ஊதியம். அந்த முறையிலே பல சூழ்நிலைகளின் காரணமாக, அவர் 5 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், இரண்டு ஆண்டுகள் அவை நடக்க முடியாவிட்டால் அல்லது திரும்ப ஒரு முறை அவரால் உறுப்பினராக

வர முடியாவிட்டாலும்கூட, அவருக்குள்ள நிர்பந்தம், சூழ்நிலை ஆகியவற்றை வைத்து, ஓராண்டு என்றிருந்தாலும் இன்றைக்குக் கொடுக்கிறோம். அது ஜனநாயகத்தில் தேவை என்று கருதுகிறேன். மற்றவர்கள் எப்படி நினைக்கிறார்களோ, நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு இப்படிப்பட்ட பாதுகாப்பு இருப்பது நல்லதாக இருக்கும். மக்களுக்குச் சேவை செய்கிறோம். பல யதார்த்தமான வழிகளில் செல்லலாம். அரசியல்வாதியாக, அதுவும் குறிப்பாக சட்டமன்ற உறுப்பினராக வந்ததற்குப் பிறகு, யாரிடத்திலும் கடன் வாங்க முடியுமா என்றால் முடியாது. யாரும் தர மாட்டார்கள். அதுவும் அதிகாரத்தில் இருக்கும்போது தரலாம் என்று நினைத்தாலும், பிறகு ஆளைப் பார்த்தாலே ஒதுங்கும் நிலைதான் இருக்கிறது. எனவே அவர்களுடைய பாதுகாப்புக்கு ஒரு ஊதியம் தேவை. அதை வைத்துக்கொண்டு, அவர்களால் வாழ்க்கை நடத்த முடியும். ஒரு தொழில் செய்ய வேண்டுமென்றாலும், ஏதோ வருமானம் வருகிறது என்று அவர்களை நம்பி 10,000 ரூபாய் கடன் கொடுப்பார்கள் என்ற நிலை ஏற்படும். அதையெல்லாம் மனதிலே வைத்துத்தான் இந்த மாற்றங்களைச் செய்து இங்கே சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம்.

குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் ஒரு வேண்டுகோளை விடுத்திருக்கிறார்கள். அதாவது அரசு ஊழியர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் வீடுகள் கொடுத்து, அவர்களுடைய அடிப்படைச் சம்பளத்தின் அடிப்படையிலே வாடகை நிர்ணயிக்கப்படுவது போலவே சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வீடுகளைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அது ஒரு நல்ல யோசனையாகப் படுகிற காரணத்தால், அதை அரசு பரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறது. அதைச் செய்து கொடுக்க அரசு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாவதாக, திரு. நீலநாராயணன் அவர்கள் தொலைபேசி வசதி பற்றிக் குறிப்பிட்டார்கள். தொலைபேசியைப் பொறுத்த அளவிலே சட்டமன்றப் பேரவையிலும் இந்தக் கருத்தைச் சொன்னார்கள். தனிப்பட்ட முறையில் இல்லங்களில் தொலைபேசி வைத்துக்கொண்டிருக்கும்போது, அதை எந்த அளவிற்குப் பயன்படுத்தும் நிலைமைகள் இருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். நாம் விரும்பாவிட்டாலும்கூட, பொது வாழ்க்கையில் எவ்வளவோ நிர்பந்தங்கள் இருக்கின்றன. அவரவர்கள் வருவார்கள், எஸ்.டி.டி. கால் என்று போடுவார்கள். எனவே அதன் காரணமாக பெருமளவிற்கு



அரசாங்கத்தில் செலவு செய்ய வேண்டுமென்ற சூழ்நிலை வருமென்பதால், அதைப்பற்றிப் பரிசீலனை செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-40)

மற்றப்படி அனைவரும் இந்த சட்ட முன்வடிவை வரவேற்றிருக்கிறார்கள். உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்றும், தாமதம் கூடாது என்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் வகாப் அவர்கள் சொன்னார்கள். நிச்சயமாக காலதாமதங்கள் இனிமேல் தவிர்க்கப்படும். எல்லாவற்றையும் நிறைவேற்ற நல்ல வாய்ப்பு இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பை அவர்கள் சொன்னதைப் போல், மற்ற திருத்தங்களை எல்லாம் " Drafting suggestion " என்கிற அடிப்படையில் சொல்லியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் மனதில் கொள்வோம். யாரும் வழக்கு மன்றத்திற்குச் செல்லக்கூடிய நிலைமையில் இல்லை. ஆகவே உறுப்பினர் அவர்களின் திருத்தங்களை தயவுசெய்து வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய மாவட்டத்தில் தமிழகத்தோடு சில பகுதிகள் இணைய வேண்டுமென்று போராடிய காலத்திலிருந்த, இங்கே பாடுபட்ட, அன்றைய தமிழகத்திலே இடம் பெறாத பகுதிகளான திருவாங்கூர், கொச்சி ஆகிய பகுதியிலிருந்த உறுப்பினர்களுடைய பிரச்சினையைப் பற்றிச் சொன்னார்கள். அந்தப் பகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்களுக்கு இந்தச் சட்டத்தின்படி எந்தவிதமான நன்மையும் இல்லையென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பேரவையிலும் அந்தக் கருத்தை வலியுறுத்தினார்கள். நிச்சயமாக அதை இந்த அரசு பரிசீலிக்கும் என்று அரசு உறுதி கொடுத்திருக்கிற காரணத்தால், 3, 4 உறுப்பினர்கள் என்பது கூட முக்கியமல்ல. செய்ய வேண்டுமென்ற உணர்வு, நியாயங்கள் எல்லாம் இருக்கிற காரணத்தால், எத்தனை உறுப்பினர்களாக இருந்தாலும், அதைச் செய்வது அவசியம் என்று அரசு முடிவு செய்திருக்கிறது. நிச்சயமாக அரசு அதைப் பரிசீலிக்கும் என்ற உறுதியையும் நான் கொடுப்பதால், மற்ற திருத்தங்களை வலியுறுத்தாமல் சட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1980 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1980) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.'

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 4.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பிரிவு 4-க்கு திருவாளர்கள் வசந்த பை, சங்கரலிங்கம் ஆகியோர் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. வசந்த பை திருத்தத்தைப் பிரேரேபிக்கிறாரா ?

* THIRU G. VASANTHA PAI : Sir, in view of the elucidation given by the Hon. Minister, I would like to say only one thing. I suggest that he might delete Explanation I, which says "For purposes of sub-section (1), the expression 'one term' shall mean a period of not less than one year and not more than five years of membership in the Legislative Assembly or in the Legislative Council or in both, whether continuous or not." I want this explanation to be deleted because the Hon. Minister has mentioned that some Members have served only for six months, and the explanation seeks to exclude them from eligibility for pension. I think the Hon. Minister will agree that the pension should be payable even to a member who has served only for six months.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: திருத்தத்தை பிரேரேபித்துவிட்டு பிறகு உறுப்பினர் பேசலாம்.

THIRU G. VASANTHA PAI : Sir, I move the following amendments :—

"In the proposed section 12-B, sub-clause (1) :

(i) for the words 'had been or is,' *substitute* the words 'has served as'.

(ii) *delete* the words 'or of both',





(iii) *Add* the following words after the words 'for one term":—

"that is to say, in the case of a member of the Legislative Assembly, the duration of that House after a General Election or in the case of a member elected or nominated in a casual vacancy unexpired period of the former member ; and in the case of the Legislative Council, the period as determined under Sections 156 and 157 of the Representation of the People Act, 1951 or in the case of casual vacancy unexpired period of the former member."

(iv) *Add* the following as new sub-clause (1) (*b*) and re-number the existing sub-clause (1) as sub-clause (1)(a) :

"(*b*) there shall be paid an additional pension of Rs. 150 per month to every person who has served an additional term as member either in the Legislative Assembly or in the Legislative Council for each such additional term subject, however, to an overall maximum of Rs. 500:

Provided, however, no person elected as a member shall be entitled to any pension in the event of his election having been set aside by judgment in an Election Petition, despite he having participated in the House during the pendency of such proceedings."

(v) *Delete* the Explanations I and II under sub-clause (3) and re-number the existing Explanation III as Explanation I."

THIRU K. RAMAMOORTHY : Sir, I second the amendments.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கொஞ்ச நேரம் விவாதம் நடக்க வேண்டுமென்று திரு. இராமமூர்த்தி விரும்புகிறார்.

THIRU G. VASANTHA PAI : If the original provision of the Act, which is now sought to be amended, is looked into, it will be seen that what I have stated now has been correctly incorporated in the original section. Explanation II to original section 12-B, as introduced by the Tamil Nadu Act 52 of 1975, stated like this :

"If the Legislative Assembly is dissolved before the expiration of the period of five years, for the purpose of computing the period as Member of the Legislative Assembly the period commencing with the date of the constitution of the Legislative Assembly after the general election and ending with the date of dissolution, shall be deemed to be five years." I go back to this

provision and say that even a Member who has served for a period of less than a year should be entitled to pension. Let me make one thing very clear, despite the observation made by our Hon. Deputy Chairman Thiru Swaminathan buttressed by my hon. Friend Thiru Sankaralingam.

THIRU G. SWAMINATHAN : May I know from the hon. Member what the meaning of the word 'buttressed' is.

THIRU G. VASANTHA PAI : Sir, 'buttressed' means giving active support. A suggestion was made that 50 per cent of my income had been assessed to income-tax. That is what the Deputy Chairman says. I do not know when he became the Income-tax Officer dealing with my assessment.

THIRU G. SWAMINATHAN : That observation was made by the hon. Member Thiru Vasantha Pai during one of his casual conversations with me in the lounge.

THIRU G. VASANTHA PAI : If such casual conversations relating to my income-tax are mentioned here, I think I must take exception to it. I have never mentioned that I have been assessed to 50 per cent by way of tax to the Deputy Chairman. By mentioning so and by recording it in the records of this Council, he is leading his own evidence against me on my supposed admission which, I think, should not be accepted.

Explanation II clearly says that anything less than one year is not exempt under the original section. Now, they are trying to lay down that persons who do not hold office for one year can never be classed as persons who have served for a term. The Hon. Minister may at least accept that it should be deleted. There are a number of such persons who held office as legislators between 1952 and 1957. I can mention the names of such persons who served in the Graduates' Constituency. They served only for 6 months or 9 months because the Delimitation of Constituencies came in. In 1954, Dr. John, Thiru Srinivasan, Thiru Santhosham and I stood for the election. Between 1952 and 1957, the person who was elected was made to retire and Dr. Cherian came in. There was also a Writ Petition in the High Court. These are all matters known to the House. Therefore, I request the Government not to lead to a situation where some Member who served in the post and who is more in need of pension than any of us may contest this. Therefore, I request that the portion stipulating 'less than one year' may be deleted.



மாண்புமிகு மேலவைத் தலைவர் : திரு. சங்கரலிங்கம் கொடுத்துள்ள திருத்தத்தைப் பிரேரேபிக்கிறார்களா ?

திரு. ம. சங்கரலிங்கம் : என் பெயரிலுள்ள கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்—

"In clause 4, in sub-clause (1)—

*add* the following proviso :

'Provided further that the period served as a member of the Legislative Assembly of the erstwhile Travancore-Cochin State by any person representing any constituency from the Kanyakumari District during the years 1952-57 shall also be taken into consideration for the payment of pension under this Act".

திரு. ஆற்காடு நா. வீராசாமி : நான் வழிமொழிகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : நான் என்னுடைய பெயரில் 2 திருத்தங்களைக் கொடுத்திருக்கிறேன். அதில் வேண்டிய திருத்தம் கொண்டு வந்து நிறைவேற்றப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் நம்புகிறேன். அதற்கு என் பெரிய காலதாமதம் ? ஒரு பகுதியில் 1952 என்று சொல்லியிருக்கும்போது, "தமிழகத்தினுடைய எல்லையில் எந்தப் பகுதியில் அவர்கள் பணியாற்றியிருந்தாலும்" என்ற ஒரு வார்த்தையைத்தான் சேர்க்க வேண்டும். அப்படிச் செய்வதில் சிக்கல் ஒன்றும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனாலும் அமைச்சர் அவர்கள் சொல்வதை நான் ஏற்று, விரைவில் அதைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : விரைவிலே செய்வதற்கான முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளும்.

ஏற்கெனவே நான் தெரிவித்ததைப் போல், திரு. வசந்த பை அவர்கள் இப்போது இரண்டாவதாக ஒரு சிறிய பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற சட்ட முன்வடிவில்

Explanation I to sub-clause (3) defines that 'one term' shall mean a period of not less than one year and not more than five years.

என்று இருக்கிறது. சட்டப்படி இந்தமாதிரியான ஒரு விளக்கத்தைக் கொடுக்க வாய்ப்பிருக்கிறதா என்று இங்கே ஒரு கேள்வியை எழுப்பினார்கள். 6 மாத காலம் பணியாற்றியிருந்து டேர்ம் முடிந்திருந்தால், அவர் ஒரு புல் டேர்ம்

பணியாற்றியிருக்கிறார் என்று கருத வாய்ப்பிருக்கிறது என்றும் எனவே அதை மாற்ற வேண்டுமென்றும் குறிப்பிட்டார்கள். இந்தச் சட்ட விதிகளின்படி தகவலுக்காக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

This Act is not restricting the term of office of a Member of either House.

(பிற்பகல் 5-50)

இந்த அவையிலே 6 வருடங்கள் ஒரு டேர்ம் என்று இருக்கின்றது. பேரவையிலே 5 வருடங்கள் ஒரு டேர்ம் என்று இருக்கின்றது. அதை இந்தச் சட்ட முன்வடிவு தடுத்துவிட முடியாது. ஆனால், ஓய்வு பெற்ற பிறகு செய்த பணியின் அடிப்படையிலே ஓய்வூதியச் சலுகைகளை யாருக்கு வழங்க வேண்டும் என்று பார்க்கிறபோது, இன்றைக்கு ஒரு வரையறை வைத்திருக்கிறோம். நிச்சயமாக சட்டப்படி செய்யக்கூடியதைச் செய்வோம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருத்தத்தை வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்**: உறுப்பினர் அவர்கள் திருத்தத்தை வலியுறுத்துகிறாரா ?

* THIRU G. VASANTHA PAI : It will be a privilege of a Member, just like any Government servant, to get a pension if this Bill is passed. He has got this privilege along with his other privileges, as a Member. So, how can the Hon. Minister say that it is not the privilege of a Member, and not therefore within the ambit of the Representation of the People Act 1951 and the Constitution ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது** : ஒரு வருடம் என்று சொல்லியிருக்கிறோம். முதலிலே 10 வருடங்கள், 12 வருடங்கள் என்று இருந்தது. 5 வருடங்கள் என்று கூட ஆக்கலாம் என்று பார்த்தோம். எல்லோருடைய கருத்துக்களையும் அறிந்துதான் குறைந்தபட்சம் ஒரு வருடம் இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். இப்படியே குறைத்துக்கொண்டு போனால், 1 மாதம், 15 நாட்கள் என்று கூட வரலாம். இன்றைக்கு உள்ள அரசியல் சூழ்நிலையிலே 15 நாட்களிலேயே ஆட்சி போகக்கூடிய சூழ்நிலை கூட வந்தாலும் வரலாம். அப்போதெல்லாம் இந்தப் பிரச்சினை வரக்கூடாது என்பதற்காகத்தான் 'ஒரு ஆண்டு' என்று வைத்திருக்கிறோம்.



**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : உறுப்பினர் அவர்கள் திருத்தத்தைத் திரும்பப் பெறுகிறாரா ?

THIRU G. VASANTHA PAI: I press it, Sir.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அவைமுன் உள்ள பிரச்சினை—

" In the proposed Section 12-B, sub-clause (1) :

(i) *for* the words ' had been or is ' *substitute* the words ' has served as '.

(ii) *delete* the words ' or of both '.

(iii) *add* the following words after the words ' for one term ' :

" that is to say, in the case of a member of the Legislative Assembly, the duration of that house after a General Election or in the case of a member elected or nominated in a casual vacancy unexpired period of the former member ; and in the case of the ' Legislative Council ', the period as determined under Sections 156 and 157 of the Representation of the People Act, 195' or in the case of casual vacancy unexpired period of the former member."

(iv) *Add* the following as new sub-clause (1) (*b*) and re-number the existing sub-clause (1) as sub-clause (1) (*a*) :

" (*b*) there shall be paid an additional pension of Rs. 150 per month to every person who has served an additional term as member either in the Legislative Assembly or in the Legislative Council for each such additional term subject however to an over-all maximum of Rs. 500:

Provided, however, no person elected as a member shall be entitled to any pension in the event of his election having been set aside by Judgment in an Election Petition, despite he having participated in the house during the pendency of such proceedings."

(v) *Delete* the Explanations I and II under sub-clause (3) and renumber the existing Explanation III as Explanation I."

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

## தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1980)

[1980 பிப்ரவரி 1

**திரு. ம. சங்காலிங்கம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய உறுப்பி யின் அடிப்படையில் நான் என்னுடைய திருத்தத்தை வலியுறுத்தவில்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சங்காலிங்கம் அவர்களின் திருத்தம் அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 4, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1980 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1980) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1980 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1980) நிறைவேற்றப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அடுத்து இரண்டு சட்ட முன்வடிவுகள் இருக்கின்றன. இரண்டு சட்ட முன்வடிவுகள் மீதும் மொத்தமா உறுப்பினர்கள் பொதுவாகப் பேசலாம். நிறைவேற்றும்போது, தனி தனியாக எடுத்துக் கொள்ளலாம்.

(2) தமிழ் நாடு 1980 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1980).

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1980 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1980) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

---

@ 327-328 ஆம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது

## தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1980



1980 பிப்ரவரி 12]

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1980 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1980) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** இரண்டு சட்ட முன்வடிவுகள் இருக்கின்றன. இரண்டையும் ஒன்றாக எடுத்துக்கொண்டு பேசலாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதைத்தான் சொல்லிவிட்டேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை முன்மொழிந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில கருத்துக்களைச் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். அந்தக் கருத்துக்களையொட்டி என்னுடைய கருத்துக்களைச் சொல்லலாம் என்று எண்ணியிருந்தேன். ஆனால் அவர் தம்முடைய கருத்துக்களை முடிவாகச் சொல்லலாம் என்று எண்ணியிருப்பதாகத் தெரிகிறது. இந்த, பயிரிடும் குத்தகைதாரர்கள் நியாய வாரம் செலுத்துதல் திருத்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், கடந்த 10 ஆண்டுக் காலமாக இந்த மாதிரிச் சட்ட முன்வடிவு வருகிறபோது, எல்லோரும் மணிக்கணக்காகப் பேசி, கடைசியிலே இப்படிப் பேசுவதாலே எந்தவிதமான பயனும் இல்லை என்ற முடிவுக்கு வந்திருப்பவர்களில் நானும் ஒருவன். ஆகவே, நீண்ட நேரம் இந்தச் சட்ட முன்வடிவின் மீது பேச வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். இந்தச் சட்ட முன் வடிவைப் பொறுத்தவரையில், இதுவரையில் 60/40 என்று இருந்த நியாய வாரத்தை இனிமேல் 75/25 என்ற விகிதத்தில் நிலவுடைமையாளர்களுக்குக் கொடுத்தால் போதும் என்ற முடிவை அரசு அறிவித்து, அந்த அறிவிப்பை இப்போது சட்ட முன்வடிவாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதிலே உள்ள பிரச்சினை என்னவென்றால், 40 என்று வாரம் இருந்தபோது, அது யாருக்குமே கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒவ்வொரு முறையும், ஆண்டாண்டு காலமாக இதற்கு மாரட்டோரியம் போடுவதாலும், தள்ளிப் போடுவதாலும், பின்னாலே கொடுக்கலாம் என்று சொல்லுவதாலும், முன்னாலே 25 சதவிதம் கொடுத்தால் பின்னாலே குறைத்துக் கொடுக்கலாம் என்று சொல்லுவதாலும், தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், ஏன் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் கூட, பல ஆண்டுக்

காலமாக சிறு நிலச்சுவாந்தார்களுக்கு எந்தவிதமான குத்தகையும் கிடைக்காமல் இருக்கிறது. அவர்கள் பஞ்சாயத்து யூனியன் செஸ், கிஸ்தி போன்றவைகள் கட்ட வேண்டிய அவசியத்திற்கு உள்ளாக்கப்பட்டு மிகவும் துயருற்று இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, இதுபற்றி சட்ட முன்வடிவு ஒன்று கொண்டு வந்து, அதற்கு ஆய்வுக் குழு ஒன்று போடப்பட்டு, இதைப்பற்றி பல உறுப்பினர்கள் ஆறு மாத காலம் தீவிரமாக ஆய்வு நடத்தி, குத்தகைதாரர்களுடைய நிலங்களை அவர்களுக்கே உரிமையாக்கும் சட்ட முன்வடிவு ஒன்றைக் கொண்டு வந்தார்கள். அப்போது அந்த ஆய்வுக் கமிட்டியிலே நானும் உறுப்பினராக இருந்தேன். அப்போது கிட்டத்தட்ட தமிழ் நாட்டிலே 8 லட்சம் பேர் குத்தகைதாரர்கள் இருந்தார்கள் என்று சொன்னால், அதில் 3 லட்சத்திலிருந்து 4 லட்சம் பேர் வரையில் குத்தகை விட்ட சிறு நிலச்சுவாந்தார்களாக இருந்தார்கள். ஆகவே, இந்தப் பிரச்சினையை ஏதோ ஏழைகளுக்கும், பணக்காரர்களுக்கும் இடையே நடைபெறுகிற பிரச்சினையாக தவறாகக் கருதக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேரவையிலே பேசுகிறபோது, குத்தகைக்கு விட்டிருக்கும் சிறு நிலச்சுவாந்தார்களிலே பல பேர் கைம்பெண்களாகவும், பல பேர் பென்ஷனர்களாகவும், ஏழைகளாகவும் இருக்கிறார்கள் என்று சொன்னதைப் பத்திரிகையில் பார்த்தேன். குத்தகைக்கு விட்டிருப்பவர்களிலே லட்சக்கணக்கான பேர் சிறு நிலச்சுவாந்தார்களாகவும், வேறு வசதி இல்லாதவர்களாகவும் இருக்கிறார்கள். முன்பு இருந்தபடி 40 என்றாலே, அந்த 40 சதவீதத்திலும்கூட வேறு எந்தவிதமான வருமானமும் இல்லாமல் அவர்கள் இருக்கும்போது, அவர்கள் கிஸ்தி, வரி, பஞ்சாயத்து செஸ் கட்ட வேண்டும் என்று சொன்னால், அவர்கள் என்ன செய்வது என்று கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்ற கருத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்கிறேன். முன்னாலே வந்த சட்டத்தில் இந்த நிலங்களைக் கையகப்படுத்தி, குத்தகைதாரர்களே இதற்கு உரிமையாளர்களாக ஆவதற்கு அவர்களுக்கு இந்த நிலங்களை வாங்க வசதி ஏற்படுத்திக் கொடுக்க முன்னாலே அமைச்சராக இருந்த திரு. ப. உ. சண்முகம் அவர்கள் 'டெனன்ட்ஸ் பைனான்ஸ் கார்ப்பரேஷன்' என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி, அதில் மாநில அரசும், மத்திய அரசும் முதலீடு செய்து, குத்தகைதாரர்களாக இருப்பவர்கள் அந்தக் கழகத்திடமிருந்து பணத்தை மொத்தமாகப் பெற்று அந்த நிலங்களுக்காக நிலச்சுவாந்தார்களுக்கு மொத்தமாகப்



பணத்தைக் கொடுக்கும் திட்டம் ஒன்றைக் கொண்டு வந்தார்கள். பிறகு 10 ஆண்டுக் காலத்தில் நிலச்சுவாந்தார்கள் குத்தகைதாரர்களுக்கு நிலத்தைக் கொடுத்துவிடுவது என்ற முறையிலே மாறுதல் செய்து திட்டம் கொண்டு வந்தார்கள். இந்தமாதிரி ஒரு முறையை ஏற்படுத்தி, நிலச்சுவாந்தார்களிடமிருந்து நிலத்தை எடுத்து, குத்தகைதாரர்களை நிலங்களுக்கு உரிமையாளர்களாக ஆக்க வேண்டும். இன்னொன்று, இப்போது 40 என்று இருந்ததை 25 என்று குறைக்கிறபோது, மறுபடியும் 25 சதவீதத்தையும் வாங்கிக் கொண்டு நிலச்சுவாந்தார்களே வரி கட்ட வேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. இப்படி வைத்தால் ஏழைகளாக இருப்பவர்கள் வரியை எப்படிக் கட்ட முடியும் என்பதைப் பார்க்க வேண்டும்.

மூன்றாவதாக, ஒரு கருத்து. நிலச்சுவாந்தார்களாக இருக்கக்கூடிய ஆயிரக்கணக்கானோர் இனிமேல் அவர்களிடம் குத்தகைதாரர்கள் இருக்க வேண்டிய தேவையில்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள். இப்போது குத்தகைதாரர்களாக இருக்கக்கூடியவர்களிடம் நிலம் இருக்கிறது. "நிலத்தை நாங்களே அரசுக்குக் கொடுத்து விடுகிறோம், நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள், அதற்கு பணத்தைக் கொடுங்கள்" என்று நிலச்சுவாந்தார்கள் கேட்கிறார்கள். 1952 ஆம் ஆண்டு சட்டம் வந்தபோது என்ன காம்பன்சேஷன் கொடுக்கப்பட்டதோ—30 ஏக்கர்களுக்கு மேலாக உள்ளவர்களுக்கு என்ன கொடுக்கப்பட்டதோ—அதைப்போல அரசாங்கமே எடுத்துக்கொள்ளட்டும் என்ற கருத்தை அவர்கள் சொன்னார்கள். இந்தக் கருத்தைச் சொன்னபோது, அப்போது சட்ட அமைச்சராக இருந்த திரு. மாதவன் அவர்கள், 'உறுப்பினர் அவர்கள் வேண்டுமானால் இந்தக் கருத்தைச் சொல்லலாம், ஆனால் மற்றவர்கள் கொடுக்கமாட்டார்கள்' என்று சொன்னார்கள். அப்போது இந்த அவையிலே இருந்த மூன்று மாண்புமிகு உறுப்பினர்கள், "நாங்கள் கொடுக்கிறோம், எடுத்துக்கொள்ளட்டும்" என்று சொன்னார்கள். இந்தச் செய்தியை என்னுடைய மாவட்டத்திலே இருக்கிற நிலச்சுவாந்தார்கள் எல்லாம் பத்திரிகையிலே பார்த்து நூற்றுக்கணக்கானவர்கள் அவர்களுடைய நிலத்தை எடுத்துக்கொள்ளச் சொல்லி கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, இந்த அரசு நிலச் சீர்திருத்தத்திலே மிகவும் அக்கறை கொண்ட அரசாக இருக்கிறது என்பதும், இரண்டாவது போதுமான நிலம் அரசுக்குக் கிடைக்கவில்லை என்பதுமாகும். நிலம் ஏழைகளுக்கும் கிடைக்க வேண்டுமென்ற நிலை இருப்பதால், நிலச் சீர்திருத்தத்திற்கு ஆதரவாக நிலச்சுவாந்தார்கள் எல்லாம் நிலத்தைக் கொடுத்தார்கள்.

[திரு. ஜீ. சுவாமிநாதன்] [1980 பிப்ரவரி 12

அந்தமாதிரி நிலைமை ஏற்பட்டால் அரசுக்குத் தேவையான நிலங்கள் கிடைக்கும். அதன் காரணமாக, பல குத்தகைதாரர்களுக்கு நிலங்களைக் கொடுக்கும் வாய்ப்பும் ஏற்படும். சிலிங்க்கு கீழே நிலத்தை வைத்திருப்பவர் கள், அதாவது 5 ஏக்கருக்கு உள்ளாக நிலத்தை வைத்திருப்பவர்கள், தங்களது நிலத்தை குத்தகைக்கு விட்டிருந்தாலோ அல்லது அவர்களாகவே அந்த நிலத்தை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள் என்று அரசுக்குக் கொடுத்தாலோ, அதை வாங்கிக்கொள்வதிலே அரசுக்கு ஆட்சேபணை என்ன? அப்படிச செய்தால், அரசுக்கு உபரி நிலம் கிடைக்கும், அதை குத்தகைதாரர்களுக்குக் கொடுக்கலாம், உடமையாளர்களுக்குப் பணமும் கிடைக்கும் என்ற கருத்தை நான் சொல்லிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6-00)

அடுத்தபடியாக, டிரஸ்ட் நிலங்கள் என்று சொல்லப்படும் பல, பொறுப்புக் கழகங்களின் நிலங்களைப் பொறுத்தவரையில், மாண்புமிகு அற நிலையத் துறை அமைச்சர் அவர்கள் கடந்த பல மாதங்களாக பல இடங்களிலே ஒரு கருத்தைச் சொல்லி வந்ததை நான் பத்திரிகையில் பார்த்து வந்தேன். அதாவது கோயில் நிலங்களைப் பொறுத்தவரையில், குத்தகைதாரர்களிட மிருந்து கோயில்களுக்குப் பல கோடிக்கணக்கான ரூபாய் அளவுக்கு குத்தகை பாக்கியிருக்கிறது என்றும், குத்தகைதாரர்கள் எல்லாம் அந்தக் கோயில் நிலங்களைத் தங்கள் சொந்த நிலங்களைப் போல் அனுபவித்துக் கொண்டு, கோயில்களுக்குத் தர வேண்டிய குத்தகையையும் கொடுக்காமலிருப் பதன் காரணமாக, கோயில்களின் வருவாய் பாதிக்கப்பட்டு, பொது டிரஸ்ட் களின் வருவாய் பாதிக்கப்பட்டு, அவைகளெல்லாம் அன்றாட திருவாகத் திற்கே பணமில்லாமல் கஷ்டப்படுகின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

பல டிரஸ்ட்கள் ஹாஸ்டல்களையும் மருத்துவ மனைகளையும் நடத்திக் கொண்டு வருகின்றன. அவைகளெல்லாம், தனிப்பட்ட குத்தகைதாரர் களிடமிருந்து வரக்கூடிய பணத்திலிருந்துதான் இப்படிப்பட்ட காரியங் களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பொது நிறுவனங் கள் சிரமப்படாமல் நடப்பதற்கு ஏற்பாடு செய்யப் போகிறேன் என்று அமைச்சர் அவர்கள் பேசியதாகப் பத்திரிகையில் பார்த்தேன். இவைகளைச் சீரமைக்க சரியான சட்டம் கொண்டுவரப்படும் என்று அவர்கள் பேசியதாகப் பார்த்தேன். இன்றைய தினம் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்



1980 பிப்ரவரி 12] [திரு. ஜீ. சுவாமிநாதன்]

அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற சட்டத்தைப் பார்த்தால், மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நேர் விரோதமான முறையில்தான் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். சோஷலிசம் என்றால், தனிப்பட்டவர்களின் நிலங்களையெல்லாம் எடுத்து, பொது நிறுவனங்களுக்குக் கொடுப்பதாகும். இப்போது கொண்டு வரப் பட்டிருக்கும் சட்டப்படி பார்த்தால், இது கேபிடலிசமாகத்தான் தெரிகிறது. காரணம் பொது நிறுவனங்களுக்குச் சொந்தமான அனைத்து நிலங்களையும் எடுத்து, தனியார்களுக்குக் கொடுத்து அவர்களையே அனுபவிக்கும்படி செய்யப்படுகிறது. இந்தச் சட்டம் காரணமாக பொது நிறுவனங்களுக்கு எந்தவிதமான லாபமும் இல்லாமல் செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள செங்கிப்பட்டி மருத்துவ மனைக்கு நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலங்களை அப்போது இருந்தவர்கள் நன்கொடையாகக் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். அதிலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டுதான் அந்த நிறுவனமே நடக்கிறது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். ஆனால் இன்றைய தினம் குத்தகை தாரர்கள் அந்த நிறுவனத்திற்காக குத்தகையைச் செலுத்தாத காரணத்தால், அந்த மருத்துவ மனை பொதுமக்களுக்குச் சேவை செய்ய முடியாத நிலைமை யில் இருந்து வருகிறது.

அதுமட்டுமல்ல, தமிழ் நாட்டில் தனிப்பட்ட ஜாதிகளின் அடிப்படையில் பல ஹாஸ்டல்கள் நடத்தப்படுகின்றன. திருச்சியிலே அப்படி ஒரு மாணவர் இல்லம் நடத்தப்படுகிறது. இந்த ஹாஸ்டல் மூலம் ஏழை எளிய மாணவர் களுக்கு உதவி அளிக்கப்படுகிறது. என்னுடைய வருப்பைச் சேர்ந்தவர்கள் மன்னார்குடியில் ஒரு மாணவர் இல்லம் நடத்துகிறார்கள். இப்படி நாட்டில் பல இடங்களில் பல கல்லூரிகள்கூட நடக்கின்றன. அவைகளெல்லாம் குத்தகை வருவாயை நம்பித்தான் நடத்தப்படுகின்றன. குத்தகை வர வில்லை என்றால், இத்தகைய பொது நிறுவனங்கள் எப்படிச் செயல்பட முடியும்? பொது நிறுவனங்கள் எப்படியாவது போகட்டும், அவைகளின் நிலங்களையெல்லாம் தனியார்களே அனுபவித்துக் கொள்ளலாம் என்று சொல்லுகிற சட்டம் எப்படி சோஷலிசச் சட்டமாக இருக்க முடியும் என்று நான் கேட்க விரும்புகிறேன். எனவே உண்மையான சோஷலிசத்தை நாட்டில் நிறைவேற்றுங்கள் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குத்தகைதாரர்களின் நியாய வாரத்தை 75 : 25 என்ற அளவில் நிர்ணயம் செய்து, கொண்டுவரப்பட்டிருக்கும் இந்தச் சட்ட முன்வடிவை நான் வரவேற்கிறேன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் நேற்று இங்கே பேசும்போது, மிக விரைவில் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வர இருக்கிறேன் என்று அறிவித்தார்கள். கொஞ்சம்கூட அதைத் தாமதப்படுத்தாமல் இன்றையதினம் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்த வரையில், மாண்புமிகு துணைத் தலைவர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் "ஆப்சென்டி லேண்ட்லார்ட்ஸ்" ( absentee landlords) சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்ற நிலை தெளிவாக்கப்பட்டிருக்கிறது. பல ஆண்டுகளாகக் குத்தகைதாரர்களும், குத்தகைக்கு நிலம் விடுபவர்களும் இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பது இதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது.

தேசிய அளவில் தரப்பட்ட 'கைடுலைன்ஸ்' படி இந்தச் சட்ட முன்வடிவு அமைந்திருக்கிறது என்று அரசுத் தரப்பிலிருந்து தெரிவித்திருக்கிறார்கள். பல்வேறு முற்போக்குத் திட்டங்களையெல்லாம் மாநிலங்கள் எவ்வாறு செயலாற்ற வேண்டும் என்று வலியுறுத்தி ஏற்கனவே தரப்பட்ட நெறி முறைகளின் அடிப்படையில், இன்றையதினம் இந்தியாவின் பிரதமராக மக்களுடைய பேராதரவோடு பொறுப்பேற்றிருக்கும் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், மிகுந்த வேகத்தோடும், ஆர்வத்தோடும் இந்தியாவினுடைய பொருளாதார நிலையில் ஒரு நல்ல மாற்றத்தை உருவாக்க வேண்டும் என்று கொண்டுவந்த 20 அம்சத் திட்டத்தின் அடிப்படையில் ஏற்பட்ட பல்வேறு முன்னேற்ற நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று என்பதை நினைவுபடுத்தி, அரசு இதைக் கொண்டு வந்திருப்பதற்காக என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு முன்னே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் "ஆப்சென்டி லேண்ட்லார்ட்ஸ்" absentee landlords) முறையின் சங்கடங்களையெல்லாம் விளக்கி அதன் விளைவாக "எங்களுக்கு குத்தகையே வருவதில்லை, எங்களையெல்லாம் விட்டால் போதும், எங்கள் நிலங்களையெல்லாம் அரசாங்கமே எடுத்துக்கொண்டு அதற்குரிய தொகையைக்



கொடுத்துவிட்டால்கூட போதும்" என்று குறிப்பிட்டார்கள். என்னைப் பொறுத்தவரையில், அரசாங்கம் இத்தகைய நிலங்களையெல்லாம் விரைவில் கையகப்படுத்த வேண்டிய ஒரு அவசர அவசிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் உணர்கிறோம் என்பதைத்தான் இந்தச் சட்ட முன்வடிவு நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

அப்படிக் கையகப்படுத்துவது என்னும்போது நிலங்களை யாருக்குத் தருவது என்ற வினாவும் எழுகிறது. கருநாடகத்தில் இதற்கு ஒரு குழு அமைத்து குத்தகைதாரர்களுக்கே நிலங்களைச் சொந்தமாக்கியிருக்கிறார்கள். அந்தக் குழுவில் வெறும் அதிகாரிகள் மட்டுமல்லாமல் பொது வாழ்க்கையில் ஈடுபட்டவர்களைக்கூட இடம் பெறச் செய்து அவர்கள் மூலமாக இதை வெற்றிகரமாகச் செய்ய முடியும் என்பதைக் கருநாடகத்தில் காட்டியிருக்கிறார்கள். ஓரளவுக்கு அது வெற்றிகரமாக நடைபெற்றிருக்கிறது. அதுபோன்ற நடவடிக்கையை நம்முடைய மாநிலத்திலும் மேற்கொண்டு, குத்தகைதாரர்களையெல்லாம் நிலச் சொந்தக்காரர்களாக மாற்றும் வாய்ப்பு நமக்கும் வந்திருக்கிறது என்றுதான் நான் கருதுகிறேன். அந்த நிலங்களுக்குரிய கிரயத்தைத் கொடுக்க வேண்டும் என்பதால் அதை முதலில் நிர்ணயம் செய்தாக வேண்டும்.

சில இடங்களில் குத்தகை நிலங்களின் கிரயத் தொகையை உடனடியாகக் கொடுப்பதற்குச் சங்கடம் இருக்குமானால், அவர்களெல்லாம் தவணை முறையில்—இரண்டு அல்லது 3 தவணைகளில்—அந்தத் தொகையைச் செலுத்துவதற்கான வாய்ப்பை நாம் உருவாக்கித் தர வேண்டும். அதோடு குத்தகை என்ற பெயரில் பெருமளவு நிலத்தை ஒன்றிரண்டு நபர்கள் மட்டுமே பகிர்ந்து கொள்வதையும் நாம் தவிர்க்க வேண்டும். இவைகளையெல்லாம் நாம் பரிசீலனை செய்ய வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம் என்பதைத்தான் இந்தச் சட்ட முன்வடிவின் விவரங்கள் நமக்குத் தெளிவாக்குகின்றன

மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் இங்கே இருப்பதால், ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். அறநிலையங்களுக்கு அல்லது மற்ற மத சார்பான காரியங்களுக்காக என்று எழுதி வைக்கப்பட்டிருக்கிற அறக்கட்டளைகளுக்குச் சொந்தமான நிலங்களை என்ன செய்வது என்ற கேள்வியும் இன்று பிறந்திருக்கிறது. ஆலயங்களுக்கு அன்றாடம் தேவைப்படுகிற அல்லது அன்றாட வழிபாட்டுக்குத் தேவைப்படுகிற பொருள்களை உற்பத்தி செய்துகொள்ளத் தேவையான நிலங்களை மட்டும் ஆலயங்களும் மற்ற அறக்கட்டளைகளும் விட்டுவிட்டு, மற்ற நிலங்களுக்கெல்லாம் கிரயம் விதித்து, அந்தக் கிரயத் தொகையை குத்தகைதாரர்களிடமிருந்து பெற்றுக்

கொள்ளலாம். நிலங்களையெல்லாம் குத்தகைதாரர்களுக்குச் சொந்தமாக்கி விட்டு, கிரயத் தொகையை வங்கிகள் அல்லது வேறு அரசு நிறுவனங்களில் முதலீடு செய்வதன் மூலம் கிடைக்கும் தொகையைக் கொண்டு ஆலயங்களின் நிருவாகத்தை நடத்தலாம். அதைப்போலவே அறக்கட்டளைகள் எதற்காக ஏற்படுத்தப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காக அந்தத் தொகையைச் செலவிடலாம் என்று கூறிக்கொள்கிறேன். பல நேரங்களில் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் "குத்தகைதாரர்கள் சரியாகக் குத்தகையைத் தருவதில்லை, இதனால் ஆலயங்களும் அறக்கட்டளைகளும் அவதிப்படுகின்றன, அவைகளுக்கெல்லாம் அன்றாட நிருவாகத்தைக்கூட நடத்த முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது, ஆண்டவனையே கடன்காரர்களாக்கிவிட்டார்கள்" என்று கூறி தன்னுடைய ஆற்றாமையை—சங்கடத்தை—வெளியிட்டிருக்கிறார்கள். அந்த வகையில் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்டிருக்கிற சங்கடங்களைத் தீர்ப்பதிலே ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். பல அறக்கட்டளைகளைப் பொறுத்தவரையில், அவைகளுக்குச் சொந்தமான நிலங்கள் எங்கே இருக்கின்றன என்பதேகூட தெரியாமல் இருக்கின்றன.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 6.10)

கும்பகோணம் அருகே சுந்தர பெருமாள் கோயில் என்கிற கிராமத்தில் இருக்கின்ற மருத்துவ மனைக்குச் சொந்தமான நிலம் இருக்கிறது. அந்நிலம் எங்கே இருக்கிறது என்று யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. அந்த நிலத்தினுடைய வருவாயிலிருந்துதான் அந்த மருத்துவமனை நடைபெற வேண்டும். பத்துப் பதினைந்து ஏக்கர் நல்ல விளைச்சல் தரும் நிலம் அந்த மருத்துவமனைக்கு எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலம் எங்கே இருக்கிறது என்று யாருக்கும் தெரியாமல் இருக்கிறது. அதைப்பற்றி யாரும் அக்கறை கொள்ளாத நிலை இருக்கிறது. இதைப்பற்றி இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவந்தபோது, அதைக் கவனிப்பதாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் முன்பு உறுதியளித்தார்கள். ஆனால் அது எந்த அளவிலே இருக்கிறது என்று தெரியவில்லை. இப்படிப்பட்ட அறக்கட்டளைகளுக்குச் சொந்தமான நிலங்களை, பல பேர் தவறாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கக் கூடியவற்றை, ஒரு 'லேண்ட் டிரிபியூனல்'



அமைத்து, கண்டுபிடித்து, உரியவர்களுக்கு, முறையானவர்களுக்கு, தேவையானவர்களுக்குத் தந்தால், அதற்கான கிரயத்தைப் பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தனியாரிடமிருந்து நிலத்தை எடுத்துக்கொண்டு அரசாங்கம் பல இடங்களில் மாநில விதைப் பண்ணைகளை நடத்திக்கொண்டிருக்கிறது. தனியாரிடமிருந்து இதற்காக நிலத்தை எடுப்பதை விட்டுவிட்டு, அறக்கட்டளைக்குச் சொந்தமான நிலங்களை ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டும். எங்கேயெல்லாம் அறக்கட்டளைகளுக்குச் சொந்தமான நிலங்கள் குத்தகைதாரதவர்களிடம் அகப்பட்டுக்கொண்டிருக்கின்றனவோ, தேவையற்றவர்களிடம் அகப்பட்டுக் கொண்டிருக்கின்றனவோ, பினாமிகளின் பேரில் இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் உடனே அரசாங்கம் கையகப்படுத்தி, விவசாயத் துறை அமைச்சர் அவர்களோடு கலந்து, அங்கே மாநில விதைப் பண்ணைகளை வைக்க ஏற்பாடு செய்தால், அது முறையாக இருக்குமென்று நினைக்கிறேன். இப்படிப்பட்ட சிந்தனைகளைத் தூண்ட இந்தச் சட்ட முன்வடிவு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கிறது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், "என்னுடைய கருத்துக்கு மேலாக முற்போக்கான கருத்தைச் சொன்னால், அடுத்த நாளே அந்தக் கருத்துக்களை நடைமுறைப்படுத்த ஒரு மசோதாவைக் கொண்டு வருவேன்" என்று வாக்குறுதி தந்திருக்கிறார்கள். ஆகவே நாட்களை நீட்டிக்க வேண்டாம், பல்வேறு சிந்தனைகள் பல்வேறு இடங்களில் இருப்பதால், இந்தக் கூட்டம் முடிவதற்கு முன்னால் . .

(மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் இருக்கையிலிருந்து ஏதோ கேட்க, உறுப்பினர் அவர்களும் ஏதோ சொன்னார்.)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** சந்தேகத்தை தனியாகப் பேசாமல் வெளிப்படையாகப் பேசுவது நலம்.

**திரு. க. இராமமூர்த்தி :** பல்வேறு வாக்குறுதிகள் அரசுத் தரப்பிலேயிருந்து வருவதால், ஒருவேளை சட்டமன்றம் கலைக்கப்பட்டுவிடுமோ என்ற சந்தேகம் உறுதியாகிக்கொண்டிருக்கிறது. விவசாயிகள் பிரச்சினைகள், ஆசிரியர்கள் பிரச்சினைகள் ஆகியவற்றைத் தீர்ப்பதில் அரசுத் தரப்பிலே காட்டப்படுகிற வேகத்தைப் பார்க்கிறபோது, ஒருவேளை இந்த அரசாங்கம் முடிந்து விடுகிறதோ, மக்களை சந்திக்கத் தயாராகிக்கொண்டு இருக்கிறதோ, அதற்காகத்தான் வேகவேகமாகக் காரியங்கள் . . .

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவிக்கிற சந்தேகத்தைப் பார்த்தால், இதற்கு முன் செய்தவர்கள் எல்லாம் அந்த நோக்கத்துடன்தான் செய்தார்களா என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சந்தேகம் வந்துவிட்டதால், அதனை நிறைவுபடுத்துவது முறையென்று கருதுகிறேன். பல ஆண்டுக் கணக்கில் தீர்க்கப்படாத பிரச்சினைகளையெல்லாம் தீர்க்க இன்று நடவடிக்கை எடுப்பதைப் பார்த்தால், சந்தேகம் எழுகிறது. விவசாயிகள் பிரச்சினைகளைப் பொறுத்த வரையில், அதிகாரிகளை வைத்துக் கொண்டு கூட்டாகப் பேசி இரவு பகலாகத் தூங்காமல் விவாதித்த பிறகும், கடந்த ஓராண்டுக் காலமாக நடவடிக்கை எடுக்காமல் இருந்துவிட்டு திடீரென்று இப்போது வேகமாக அறிவிப்புகள் வருகிறதென்றால், ஒரு 'சந்தேகம் ஏற்படுகிறது. வேறு ஒன்றும் இல்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் வேகமாக நடவடிக்கை எடுக்கிற அளவில் சட்ட முன்வடிவைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு பொதுவாக இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து, அமர்கிறேன்.

* THIRU A. R. DAMODARAN : Mr. Deputy Chairman, Sir, this is one of the progressive enactments of modern Governments and I think I have spoken often on this subject just as you have. I would like to mention to the Hon. Minister the practical difficulties that are likely to arise in the implementation of this measure.

Sir ever since 1961, I have been following the land reforms legislations, Cultivating Tenants Acts and the various amendments that were carried out to such Acts. Even in 1973, just before the Dindigul bye-election, two months before the election, an enactment was moved by the then D.M.K. Government giving ownership rights to cultivating tenants in respect of land, whether it was under private ownership or whether it was under public trusts. I remember it very vividly. It was moved during the Budget session and a few of us who evinced greater interest in legislation in those days than we do today pleaded with the Government that it was a measure which would have to be studied in great depth and we requested the Government to refer it to a Select Committee. Unfortunately, at that time, due to the pressures that were mounting, the Government did not find it possible to refer it to a Select Committee. Then ultimately the Bill died a death when it did not receive Presidential assent because of various Constitutional defects.





Now, we have this measure which. as I said, is very progressive because we can judge the progressiveness of modern measures by the degree of impoverishment they will cause to the people. For example, we have the Debt Relief Act. My view of such legislations brought forth not only by this Government but also by other Governments which claim to be progressive is that only private individuals and private debts are affected. In every one of these Acts. the debts which are sought to be protected are the debts of the Government, the co-operative societies, the Commercial Banks and the various financial institutions. In every Bill, only these debts are protected and private individuals are singled out because Governments believe that these people do not deserve to get equity and justice which they have every right to expect.

In this Bill, I am particularly worried to note that very serious amendments have been carried out in section 4 of the Act, in the definition of ' fair rent '. If we compare the definition that obtained in the past and the definition that obtains today, one significant factor is that the rent has been reduced from 40 per cent to 25 per cent. Of course, nothing that I am going to say will change the Government's attitude and I will accept it. But, I would like to say that even if this fair rent of 25 per cent could be collected by the landowners. it would be a great gain to them because, in our State, where right from 1973 various Acts granting moratorium have been passed delaying the collection of rent, no landowner has been able to collect rent except by using strong-arm methods which will continue even after this Bill comes into force. The point here is this. In the old Act, in cases where the landowner had provided a pumpset, the rent to be collected was taken to be 40 per cent. What the Government have now done is that they have altogether omitted sub-section (2) in section 4. I am very sincere in informing the Hon. Minister that I recognise that he wants to help the poor cultivating tenants. But, what is going to be the position of the cultivating tenants after this amendment is made ? As soon as this Bill is passed, these electric motor pumpsets will be disconnected and the tenant will have to pay the rent of 25 per cent for the land that he has taken from the owner. But, without the irrigation facilities, he will not be able to grow any

(பிற்பகல் 6-20)

type of wet crop on that land. What do the Government propose to do in this regard ? They have not stated that the tenant should pay 5 per cent more for irrigation facilities provided by the land-

lord. For the purpose of giving protection to the tenants, they have come out with the announcement of 25 per cent for every type of land in Tamil Nadu, whether the land is irrigated with a pump-set or not. The same type of amendment has been carried out in the Public Trusts Act. The Hon. Minister expects the temples to replace the motors and pumpsets and to meet the repair charges although he has reduced the rent payable to them. The temples will have to give water free of charge to the tenants. Now, Sir, just because he has introduced an enactment, does he really think that these things are going to take place in reality? Even in respect of the Tenancy Records Act, which was one of the first Acts the D.M.K. Government brought forth in 1969, four years later, when Thiru Badrinath gave a report on the Tenancy Records, it was pointed out that this Act had been rendered absolutely useless because very few tenants had come forward to record their tenancy rights. We are living in conditions where except in Thanjavur district and a few other districts where the Labour Union Movement is sufficiently strong among agricultural labour we have not been able to implement such Acts in other parts of the State at all. I am telling the Hon. Minister the honest truth. I want to tell him that by passing this Act, he is only creating greater difficulties for the defenceless poor tenants who know neither law nor how to approach the Courts in this regard, and by introducing an amendment whereby he has not specified about irrigation facilities which may be provided at the cost of the landowners, he has not only done disservice to the landlord but he has done the greatest disservice to the poor tenants whom he wants to help.

Another factor I want to bring to the notice of the Government is this. Mr. Deputy Chairman, Sir, you have also referred to it. It is about the plight of the religious institutions or Public Trusts which have lands. A distinction is always made between a Company and an individual in the levy of Wealth Tax, because a Company is not an individual and it is treated as a separate entity. Similarly in the case of Public Trusts, whether they are Hindu temples or other Public Trusts, we have always pleaded that the Government should deal with these Trusts in a fair and equitable manner. Actually what is happening in our country today is this. Because of certain rights that have been given to minorities, the non-Hindu charitable institutions like Wakfs and Christian Missionaries which own lands are exempted from so many enactments whereas our Hindu temples are not similarly exempted. Because



of the generosity of the Hindus, we allow our own people to denounce them in such vehement terms and we have come to a stage where nobody cares about the lands that are held by our Hindu temples. Sir, I realise that there is no point in arguing that these temples should be allowed to retain their lands, because from my experience as a Trustee of a temple, I have found that defrauding the temples has become a convention and there is no question of recovering any rent from the tenants. I would endorse the plea that was made by Thiru Swaminathan that the time has come for us to say that the land as a form of investment is absolutely worthless.

It has to be given to persons who can eke out a marginal existence from their 2 or 3 acres of land. In fact, the Hon. Minister has gone even further and has reduced the extent from 5 acres to 3 acres even in respect of the cultivating tenants and he is now being subjected to attack from the hon. Members belonging to the Communist Parties. But, what I wish to state is that the time has come for the Hon. the Minister for Religious Endowments to persuade all our temples to vest these lands in a separate statutory body, to value these lands and to pay the interest from that statutory body to our temples so that our temples are able to run. It is not a question of protecting temple lands but it is a question of protecting the income that is required by these temples for their maintenance. Because nowadays the State will not give any money, having resolved that it is being extremely secular, it is very necessary for us to think actively in terms of protecting the former endowments that were made to our temples. There is no point in saying that just because the tenant who is cultivating the temple land is poor, the temple should be made equally poor by denying to it the fair rent that it can receive.

Sir, I would like to mention one other point. You have very correctly mentioned it and we have mentioned it for years, but I do not know whether it has had any impact on Government. Probably, now, certain things are having an impact in the changed situation when decisions have to be taken quickly: I am glad that decisions are being taken quickly. I am glad that, after having known that public opinion has expressed that it is dissatisfied with the indecisive nature of many of our Parties, they are now decisive. Though this may hurt a considerable section of the people, I would request the Hon. Minister to be equally decisive on a matter on which we have been requesting the Government to take action for

a long time. One of the reasons why we are not able to judge the utility of such enactments is that even the Government do not have any idea about the number of people who will be affelted or benefited by these measures. There is no such thing as a statiscal record for us to judge the utility of these legislations. You have rightly pointed out, Mr. Deputy Chairman, that all people who have given land on lease are not necessarily rich people. I hope the Hon. Minister will agree with my suggestion. All that he has to do is to cause a random sample survey to be made in his own district of Thanjavur, probably leaving out the eastern and other areas where there is a rather difficult situation. If he makes an analysis of that survey, he will find that there are lakhs of small landholders who have not purchased land over the past twenty years. Sir, a person who purchases land would either be a fool or one who is very clever at getting away with things which normally people cannot get away with. These people got their 2 acres or 3 acres of land through hereditary succession. They are employed in Government service or in private service. They have not sold these lands because sale of land is also impossible in that the tenants refuse to allow any sale of land. So, there are lakhs of people who are prepared to give their lands to the Government, provided they get the compensation that was prescribed in the Act of 1961. I am not referring to the compensation which the Hon. Minister reduced, six months ago, to Rs. 3,000 an acre. That is certainly not acceptable. But, if he gives compensation according to the Act of 1961, all these small landholders will come forward to part with their lands. I am not even asking him to take lands from the big landholders. Let him forget that. They are, after all, very few in number, they do not have many votes and they would not count much. I am only referring to the small landholders who number about one lakh or two lakhs. The Hon. Minister has an eminent Secretariat behind him and he can collect these figures. He can find out how many of these small landholders are willing to give their lands which are below 5 acres in extent at the market value according to the Act of 1961, which has stipulated the compensation at ten times or twelve times the net annual yield. He can create a Tenancy Bank in the co-operative sector or any other type of financial institution and arrange to purchase these lands straightway from these landowners and give these lands to Scheduled Castes, Scheduled Tribes and the poor cultivating tenants even free of cost. The hon. Member Thiru Ramamoorthy was referring to the very revolutionary legislation in Karnataka. I would like to



tell him that they could not recover the cost of the land and so, three months ago, they made an amendment enabling them to write of, the cost fixing it at a nominal value of Rs. 100, and to give away the lands to all the tenants who were benefited by the earlier legislation. If our Government want to do that and if they have the finances, they can do that. But what I would like to plead is that, by granting all these moratoria, they cannot do justice to one section of the community and deny equity and justice to other sections of the community. However small these people may be in number and however weak they may be in their voting strength, we will have to go by norms of equity and justice. Therefore, I would make a plea to the Hon. Minister that he must incorporate two safeguards. First, the Government should protect the lands of our Public Trusts—not merely lands of the religious institutions because there may be Universities and other bodies which own lands—, fix a fair rent for those lands and give a guarantee that, that rent will be paid to those Public Trusts. Let the Government take upon themselves the role of an intermediary for collecting rent from the tenants, etc., so that there is not so much of social tension.

(பிற்பகல் 6-30)

Since he has now pointed out that he is thinking of making revolutionary changes like reducing from 25 to 20 per cent the rent payable by the tenant, may I make a very sincere plea on behalf of the small landholders in Tamil Nadu that we want a Tenants' Land Purchase Bank which should purchase lands from all small tenants who have below 5 acres of land and give them a fair value for the land so that they may invest the money in other forms of investment? Hundred years ago we used to invest in gold and jewels. Today it is not a popular form of investment. I always tell my friends, "Don't invest in land; it is not a sound investment", although in 1969 our Government said that they wanted to improve agriculture and asked our young people to take to agriculture, because I consider "Agriculture is a doomed profession". There is no question of any improvement. If there is no other alternative profession, then alone a person can take to agriculture. This is my honest opinion. I think the Government should be equally sincere and if they accept my suggestion, they will get 3-1|2 to 4 lakh acres. Otherwise, they will get only a puny extent of 40 thousand acres however much they may meddle with land reforms. They will never be able to get more extent through their enactments. The Hon. Minister has enough time and he has

[திரு. ப. மாணிக்கம்] [1980 பிப்ரவரி 12

இருக்கின்றன. குடும்ப டிரஸ்ட் என்று கோர்ட்டுக்குப் போனார்கள். அந்தக் குடும்பமே அதனால் அழிந்தது. கோவிலும் அழிந்தது. எனவே டிரஸ்ட் பற்றி அவ்வளவு விவரங்களுக்குப் போக வேண்டாம். இதிலே நியாயம் என்ன என்று பார்க்க வேண்டும். நிலத்திலே பாடுபடுகின்ற குத்தகை விவசாயி தான் அதிலே உழைத்துப் பயிரிடுகிறான். அவனுக்கு உத்தரவாதம் வேண்டும். அதற்குப் பாடுபட வேண்டும். அதற்கு அரசு நடவடிக்கை குறைவாக இருந்தால், அதை எடுத்துக்காட்ட வேண்டும். ஆனால், அதில் அடங்கியுள்ள சமூக நீதியும், இந்தியப் பொருளாதாரத்தைக் காப்பாற்றும் ஒரு விரிவான பரந்த நீண்டகால வரலாற்று நோக்கையும் நாம் நிராகரித்து விடக் கூடாது. எனவேதான் இக்கூட்டத்தில் வரக்கூடிய அம்சங்களை வரவேற்கிறேன். எந்தப் புதிய பிறப்புக்கும் வேதனை உண்டு என்று சொல்லு வார்கள். எது புதிதாகப் பிறந்தாலும் வேதனை உண்டு. எனவேதான் நம்முடைய சமுதாயத்திலே மாறுதல் வர வேண்டுமென்று சொல்லும்போது, பழைய உற்பத்தி முறை மாற வேண்டும். அப்படியில்லாமல், நம்முடைய விவசாயத்தைக் காப்பாற்ற முடியாது. அதற்கு இது ஊன்றுகோலாகப் பயன்படுகிறது. எனவே இதை வரவேற்கிறேன். அதை நிர்வாக மட்டத்திலே எப்படி நிறைவேற்றுவது, எப்படி இதை உத்தரவாதப்படுத்துவது என்பதில் அரசு கவனம் செலுத்த வேண்டும். இல்லாவிட்டால் இதனுடைய பலன்கள் கிடைக்காது. இதில் நானாக ஒன்றைக் கருதுகிறேன், மற்றவர்களுக்கு நோக்கம் கற்பிக்கவில்லை. இந்த அவை முடிவதற்கு முன்னாலே, இது தொடரலாம், கவுன்சிலைப் பொறுத்தவரையில் தொடர்கிறோம். பேரவை என்றால் வேறு பிரச்சினை. ஆனால், அரசியலில் என்ன மாற்றம் வந்த போதிலும், எந்தக் கட்சி வேண்டுமானாலும் வரலாம், இந்த நாட்டு விவசாயி களுடைய கொந்தளிப்பை யாரும் அடக்க முடியாது. அதை யாரும் மறக்க வேண்டாம். சோழ மன்னர்கள் காலத்திலேயே விவசாயிகள் கோவில் சுவரை இடித்திருக்கிறார்கள். காரணம் அதிலுள்ள தஸ்தாவேஜுகள். பழைய அதிகாரிகள் அவைகளை மாற்றி, கோவில் கல்லிலே பதித்திருக்கிறார்கள் விவசாயிகளின் உரிமையை மாற்றிப் பதித்தார்கள் என்பதனால் கோவில் மதில் சுவரை இடித்தார்கள். இன்றைக்குள்ள நாத்திகர்களை இதற்கு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டாம். எனவே நாத்திகர்கள் மட்டுமல்ல, இன்றைக்கு ஆத்திகர் களே திருடுகிறார்கள். ஆத்திகம், நாத்திகம் என்ற பிரச்சினை இதிலே கிடையாது. தெய்வத்தையே பலர் ஏமாற்றுகிறார்கள். எனவே டிரஸ்ட் நிலங்களென்று சொன்னால், கோவில் நிலங்கள் மட்டுமல்ல. இன்னும் சொல்லப் போனால், நிலச் சீர்திருத்தம் என்று வரும்போது, புதிய டிரஸ்டுகள் தோன் ஆரம்பித்தன. திடீரென்று பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள் வந்தன



1980 பிப்ரவரி 12] [திரு. ப. மாணிக்கம்]

அதற்கு முன்னாலே கிடையாது. வரலாற்று பூர்வமாக இதில் பல்வேறு அம்சங்கள் இருக்கின்றன. ஒன்று, இப்போதுள்ள குத்தகை விவசாயிகளை, பாடுபடுகின்ற விவசாயிகளைக் காப்பாற்ற உத்தரவாதம் செய்கிறோம். மறுபுறம், சிறிய அளவிலே நிலம் வைத்திருக்கிறவர்களுக்குப் பாதகம் இருக்கிறதா என்றால் இருக்கிறது. ஒருவருக்கு 3 ஏக்கர் தஞ்சையிலே இருக்கிறது, சென்னையிலே உத்தியோகம். 3 ஏக்கர் நெல்லையிலே இருக்கிறது, நல்ல வருமானம் உத்தியோகம் டெல்லியிலே, கல்லிடைக்குறிச்சியில் ஒரு ஏக்கர் இருக்கிறது, உத்தியோகம் டெல்லியிலே, அம்பாசமுத்திரத்தில் ½ ஏக்கர் இருக்கிறது, உத்தியோகம் செக்கஸ்லோவாகியாவில். அதுவும் இருக்கிறது. வாதத்துக்கு வாதம், விவரத்திற்கு விவரம் இருந்து கொண்டேதான் இருக்கிறது. உண்மை என்ன என்று சொன்னால், நம்முடைய இந்தியாவிலே, உழைக்கின்ற விவசாயிகளை வாழ வைக்க அவர்களுக்கு வரலாற்று பூர்வமாக நீதியை வழங்க இது உதவுகிறதா, இல்லையா ?

(பிற்பகல் 6.40)

உதவுகிறது. இதை நிறைவேற்றுவதால் என்ன உத்தரவாதம் இருக்கிறது ? அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நிர்வாகத் துறை மட்டுமல்ல. முற்போக்கான சட்டங்கள் வரும்போது, அவற்றை அரசு சரிவர நிறைவேற்ற வேண்டும். Implementing machinery தேவை. சரிவர அவை நிறைவேறினால் நாட்டுக்கும் அரசுக்கும் நல்லது. அதை விட்டு அவசரத்தில் கொண்டு வருகிறீர்களே என்று நோக்கம் கற்பிக்கக் கூடாது. நோக்கம் கற்பித்தால், அரசியலில் முடிவே இருக்காது. அப்படிப் பார்த்தால், இதுவரை இயற்றியுள்ள எல்லாச் சட்டங்களிலும் நோக்கம் கற்பிக்கலாம். 1969 ஆம் ஆண்டிலே, 1971 ஆம் ஆண்டிலே எல்லாம் கொண்டுவரவில்லையா என்று கேட்கலாம். அதுபோல் மன்னர் மானியம் வரவில்லையா ? பாங்கு தேசியமய மாக்குவதுபற்றி வரவில்லையா ? பொருளாதாரப் பிரச்சினைகள் சமுதாய கொந்தளிப்போடு சம்பந்தப்பட்டவை தான். அரசியலுக்கும் மக்களுடைய கொந்தளிப்புக்கும் அரசியல் மாற்றத்துக்கும் தொடர்பு இருக்கிறது. மக்களுடைய கொந்தளிப்பை திசை திருப்பலாம். அதனால் மட்டும் பிரச்சினை தீர்ந்து விடாது. இங்கே கை வைத்தால் அங்கேயும் அது தொடரும். இந்தச் சட்டங்கள் குத்தகைதாரர்களுக்கும் விவசாயிகளுக்கும் நன்மை பயக்கும் சட்டம் என்பதால், இந்தச் சட்டங்களை நான் வரவேற்கிறேன். ஆனால் கொண்டுவரக்கூடிய சட்டங்கள் விவசாயிகளுக்குப் பயனளிக்கும் வகையில் நல்லமுறையில் நிறைவேற்றப்பட வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

* திரு. ம. சங்கரலிங்கம்: துணைத் தலைவரவர்களே, அவையின் முன்னால் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டிருக்கின்ற பயிரிடும் குத்தகைதாரர்கள் நியாய வாரம் செலுத்துதல் மற்றும் பொதுப் பொறுப்புக் கழகங்கள், வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப்படுத்துதல் ஆகிய இரண்டு சட்டங்களையும் நான் வரவேற்கிறேன். இந்தச் சட்டங்களின் மீது பேசிய அத்தனை உறுப்பினர்களும் அவைகளை வரவேற்றுப் பேசினார்கள். ஒருவர்கூட எதிர்த்ததாக நான் கருதவில்லை. ஆனால் அவற்றை அமுல்படுத்துவதில் இருக்கிற ஐயப்பாடுகளையும், சங்கடங்களையும் எடுத்துச் சொன்னார்கள். 1961 ஆம் ஆண்டிலே குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது. பிறகு நியாய வாரச் சட்டம் கொண்டு வரப்பட்டது. பிறகு 40/60 என்ற நியாய வாரம் நிர்ணயிக்கப்பட்டு சட்டம் இயற்றப்பட்டது. இவற்றையெல்லாம் பார்க்கிறபோது, இன்றைக்கு 75/25 என்று நாம் கொண்டு வந்தது பெரிய நிவிரம் என்று நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளக்கூடாது. காரணம் இன்றைக்கு வளர்ந்து கொண்டிருக்கிற சமுதாய மாற்றத்திலே உழுபவனுக்கு நிலத்தைச் சொந்தமாக ஆக்க வேண்டும். அதுதான் அரசின் சிந்தனையாகவும் இருக்க வேண்டும். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் பேசும்போது, ஒன்றைச் சொன்னார்கள். 25 சதவிகிதமாவது உடைமையாளர்களுக்குக் கிடைக்குமா என்று கேட்டார்கள். நம் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக உழுபவர்கள் அனுபவித்து வருகின்ற தொல்லைகளைப்பற்றிச் சொன்னார்கள். எத்தனை பேர் வெளியேற்றப்பட்டார்கள்? எந்த அளவுக்கு அவர்கள் பாதுகாப்பு இல்லாமல் இருந்தார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். இப்போதாவது இந்தச் சட்டங்கள் வருகின்றனவே, அதற்காக மகிழ்ச்சி என்று கூட சொன்னார்கள். இப்போது நிலத்தை உழுபவனுக்கு நிலத்தைச் சொந்தமாக்குங்கள் என்று சொல்கிற நிலைமைக்கு வந்திருக்கிறோம். குத்தகைதாரர்கள் அல்லது நிலத்தை உழுபவர்கள் நிலத்தை "நிலச் சொந்தக்காரர்களிடம்" இருந்து குத்தகைக்கு எடுத்துக்கொள்கிறார்கள். ஆனால் எந்தச் சட்டம் போட்டாலும், அதன் பலன் அவர்களுக்குப் போய்ச் சேர்வதில்லை. நிலத்தை உழுபவனிடம் நிலம் இருக்காது. அவனுக்குச் சொந்தமாக அந்த நிலம் இருக்காது. 2 ஏக்கர் அல்லது 10 ஏக்கர் என்று நிலத்தை ஒரு அரசு ஊழியர் குத்தகைக்கு எடுத்துக் கொண்டு 'மாரட்டோரியம்' வருகிறதா என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பார். அப்படி 'மாரட்டோரியம்' வந்தால், அந்தப் பயனை அவர் அனுபவிப்பார். உண்மையிலேயே வயலிலே உழுபவனுக்கு அதன் பலன்



போய்ச் சேராது. ஆனால் உழுபவனிடமிருந்து கையெழுத்து வாங்கிக் கொள்வான். அறுவடை காலத்தில் நெல், வைக்கோல் எல்லாம் வாங்கிக் கொள்வான். இவ்வாறு இன்டர் மீடியட்டர்ஸ் இடைத்தரகர்களாக தமிழ் நாட்டில் நிறைய பேர் இருக்கிறார்கள். விவசாயிகளுக்கும் நில உடைமையாளர்களுக்கும் நடுவில் இருந்துகொண்டு இவர்கள் செயல்படுகிறார்கள். நாம் போடுகிற சட்டத்தின் பலன் எல்லாம் உண்மையான விவசாயிகளுக்குப் போய்ச் சேர்வதில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள்கூட பல்வேறு கருத்துக்களைக் குறிப்பிட்டார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் அண்மையில் ஒரு வழக்கு நடைபெற்றது. 25 வருடமாக ஒருவர் நிலத்தை உழுது பயிர் செய்துகொண்டிருந்தார். ஆனால் டெனன்சி ரெக்கார்ட் ஆக்ட்-படி அவர் போய் பெயரைப் பதிவு செய்யவில்லை. இதைப் பயன்படுத்தி அவனிடமிருந்த நிலத்தைப் பெற வழக்குப் பதிவு செய்து நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்கள். நிலச் சுவான்தார் அந்தக் குடியானவனுக்கு நெல்லை விற்று பணத்தைக் கொடு, அதைச் செய், இதைச் செய் என்று எழுதிய கடிதங்களை எல்லாம் கொண்டு போய் கோர்ட்டில் கொடுத்தார். நாகர்கோவில் நீதிமன்றத்தில் டெனன்சி ரெக்கார்ட் ஆக்ட்-படி பதிவு செய்யாவிட்டால்கூட பரவாயில்லை என்று சொல்லி, அவன் கொடுத்த கடிதங்களின் அடிப்படையில் அவனுக்குச் சாதகமாகத் தீர்ப்பு அளித்துவிட்டார்கள். அது இப்போது உயர் நீதிமன்றத்துக்கு வந்திருக்கிறது. எனவேதான் நாம் என்னதான் சட்டங்கள் கொண்டு வந்தாலும்கூட, அவற்றையெல்லாம் தடுத்து நிறுத்துகிற நிலைதான் இன்றைக்கு இருக்கிறது. நம்முடைய உண்மையான நோக்கமெல்லாம் உழுபவனுக்கு நிலத்தைச் சொந்தமாக ஆக்கிக் கொடுக்க வேண்டும் என்பதுதான். 25 சதவிகிதத்தைக் கொடுத்துவிட்டு பாக்கி 75 சதவிகிதத்தையும் நீயே வைத்துக்கொள் என்று குடியானவனிடம் சொன்னால்கூட, அவனுக்கு நஷ்டம் தான் வரும். விட்டால் போதும் என்று அவர்கள் சொல்கிறார்கள். இன்றைய தினம் நில உடைமையாளர்களையே நெல் உற்பத்தி செய்யச் சொன்னால்கூட, ஒரு ஏக்கருக்கு உற்பத்தி செய்யப்படுகின்ற பொருளின் விலையை விட 100 ரூபாய் கூடுதல் செலவாகும். காரணம் நெல்லின் விலை அவ்வளவு குறைவாக இருக்கிறது. அதே சமயத்தில் மற்ற விவசாய உற்பத்திப் பொருள்களின் விலை ஏறிக்கொண்டிருக்கிறது. அவனும் கடனில் போய்க்கொண்டிருக்கிறான். இதற்கு மாற்று வழி கண்டாக வேண்டும். நிலத்தை இழக்கிறவர்களுக்கு மானியமாக ஒரு நியாயமான தொகையைக் கொடுக்க வேண்டும். இப்போது நஷ்ட ஈடு என்பது இல்லை. மானியம்தான் கொடுக்கிறார்கள்

என்று நினைக்கிறேன். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் சொன்னதைப் போல 'பாண்ட்' எழுதி வாங்கக்கூட அவர்கள் தயாராக இருக்கிறார்கள்.

**திரு. ஏ. ஆர். தாமோதரன் :** அதுவல்ல பிரச்சினை. நியாயமான முறையில் விலை கிடைப்பதைத்தான் எல்லோரும் விரும்புகிறார்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** 10 ஆண்டுகளுக்குள் உள்ள வருவாயைக் கணக்கிட்டு விலை கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதை நல்ல முறையில் யோசித்துச் செயல்படுத்த வேண்டும்.

அடுத்து, பப்ளிக் டிரஸ்டுகளுக்கு உள்ள நிலங்களையெல்லாம் எடுத்து உழுபவனுக்குப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் டிரஸ்டுகள் நல்ல காரியங்களைச் செய்தால், அவற்றுக்கும் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்ற கருத்தும் சொல்லப்பட்டது. ஸ்ரீவைகுண்டத்தில் குமரகுருபரர் கல்லூரி ஒன்று இருக்கிறது. அதை ஏற்படுத்தியது திருப்பனந்தாள் மடம். அந்தக் கல்லூரிக்கு 567 ஏக்கர் நிலத்தை தஞ்சாவூரில் என்டோமென்ட் ஆகக் கொடுத்திருக்கிறார்கள். அந்த நிலத்திலிருந்து ஒரு கோட்டை நெல்கூட வருவதில்லை. முன்பு அரசாங்கம் கல்லூரிகளுக்கு முழு மானியம் கொடுப்பதில்லை. இப்போது அரசாங்கம் எல்லாக் கல்லூரிகளுக்கும் முழு மானியம் கொடுக்கிறது. அரசாங்கம் முழு மானியம் ஒன்றும் கொடுக்காத அந்தக் காலத்தில் கல்லூரி ஆசிரியர்கள் சம்பளம் கேட்டபோது, "நீங்களே தஞ்சாவூர் போய் ஒவ்வொரு ஏக்கர் நிலத்தை எடுத்து பாட்டம் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று சொன்னார்கள். இதையும் நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து, திருவனந்தபுரத்தில் அந்தக் காலத்தில் சர். டி. சக்தி மாதவ ராவ் என்பவர் திவானாக இருந்தார். அதாவது 150 வருடத்திற்கு ,முன்பு அவர் திவானாக இருந்தார். அவருடைய 'ஸ்டேட்யூ' சிலைகூட இன்றைய தினம் திருவனந்தபுரம் தலைமைச் செயலகத்துக்கு முன்னால் இருக்கிறது. 150 வருடங்களுக்கு முன்பு அவர் திவானாக இருந்தபோது, "ஜன்மி குடியான் புரக்ளமேஷன் ஆக்ட்" என்கிற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாங்கிப் படிக்க வேண்டும். அன்றைக்கு திருவாங்கூர் சமஸ்தானத்திலுள்ள அவ்வளவு நிலங்களும் கோயில்களுக்குத் தான் சொந்தமாக இருந்தன. அவை பத்மநாப சுவாமிக்குத்தான் சொந்தமாக இருந்தன. அவருடைய தாசன்தான் அப்போது இருந்த மகாராஜன்.



நிலத்தை உழுது பயிரிடுபவர்கள் 2½ கோட்டை அல்லது 3 கோட்டை என்று நெல்லை பண்டாரபாட்டமாக "ஜன்மி குடியான் புரக்ளமேஷன் ஆக்ட்" படி கோயில்களுக்குக் கொடுப்பார்கள். கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு சேர்ந்த பிறகுதான், பண்டாரப் பாட்டத்தை மாற்றி, பயிரிடுகிறவர்களுக்கு நிலத்தை உடைமையாக்கினோம். திருவாங்கூர் கோயில்களுக்குச் சொந்தமாக இருந்த நிலங்களையெல்லாம் எடுத்து உழுபவர்களுக்கே சொந்தமாக ஆக்கி, 2½, 3 மூட்டை நெல்லை பாட்டமாகக் கொடுக்கச் செய்தார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் 500 கோயில்களுக்கு மேல் இருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு சேர்ந்திருக்கிறது. இப்போது கோயில்களுக்கு நிலமில்லை. இங்காவது யாரிடமோ நிலமெல்லாம் இருக்கின்றது. யாரிடம் நிலம் இருக்கிறது என்று கண்டுபிடிக்க முயன்றுகொண்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 6-50)

கன்னியாகுமரி மாவட்டத்திலே நிலத்தைக் கண்டுபிடிக்க தேவையில்லை. தமிழகத்திலே சேருவதற்கு முன்பே யார் யார் உழுதுகொண்டிருந்தார்களோ அவர்களுக்குச் சொந்தமாக சர். டி. மாதவராவால் கொடுக்கப்பட்டது. அதனால் அரசாங்கத்திலே இருந்து கோயில் பராமரிப்புக்கு என்று தொகை கொடுக்கப்பட்டு வருகிறது. கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு சேர்ந்தபோது, 13½ லட்சம் ரூபாய் கோயில் பராமரிப்புக்காக என்று தமிழகத்துக்குக் கொடுக்க வேண்டும் என்ற விதியோடுதான் சேர்ந்தது. ஆகவே, நம்முடைய மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் சொன்னதைப் போல, 150 ஆண்டுகளுக்கு முன்னாலே—இவ்வளவு தூரம் ஜனநாயகப் பார்வை எல்லாம் போட்டு காரியங்கள் செய்வதற்கு முன்பே—திருவிதாங்கூர் சமஸ்தானத்திலே சர் டி. மாதவ ராவ் என்ற அட்மினிஸ்ட்ரேட்டர், அவர் பொதுவுடைமைவாதி கூட அல்ல, இந்தத் திட்டங்களைப் போட்டு அமுல்படுத்தியிருக்கிறார். நிலங்களையெல்லாம் பயிரிடுபவர்களுக்குக் கொடுத்து, நில உடைமையாளர்களுக்கு அரசாங்கம் நஷ்ட ஈடு கொடுத்து, அங்கிருந்த கோயில்களை அரசாங்கமே கவனித்துக்கொள்ளும் நிலைமையை உருவாக்கினார். அதற்காக ஒரு தனி இலாக்காவே ஏற்படுத்தப்பட்டது. நாம் இப்போது 13½ லட்சம் ரூபாய் அவர்களிடமிருந்து வாங்கிக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கு இருக்கும் பிரச்சினையெல்லாம் 20 வருஷத்திற்கு முன்பு 13½ லட்சம் ரூபாய் தந்தார்கள். 20 ஆண்டுகளுக்குப் பிறகும் இந்தத் தொகையை உயர்த்திக்கொடுக்கவில்லையே என்பதுதான். அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. இப்போது

என்று நினைக்கிறேன். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் சொன்னதைப் போல 'பாண்ட்' எழுதி வாங்கக்கூட அவர்கள் தயாராக இருக்கிறார்கள்.

திரு. எ. ஆர். தாமோதரன் : அதுவல்ல பிரச்சினை. நியாயமான முறையில் விலை கிடைப்பதைத்தான் எல்லோரும் விரும்புகிறார்கள்.

திரு. ம. சங்கரலிங்கம் : 10 ஆண்டுகளுக்குள் உள்ள வருவாயைக் கணக்கிட்டு விலை கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதை நல்ல முறையில் யோசித்துச் செயல்படுத்த வேண்டும்.

அடுத்து, பப்ளிக் டிரஸ்டுகளுக்கு உள்ள நிலங்களையெல்லாம் எடுத்து உழுபவனுக்குப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் டிரஸ்டுகள் நல்ல காரியங்களைச் செய்தால், அவற்றுக்கும் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்ற கருத்தும் சொல்லப்பட்டது. ஸ்ரீவைகுண்டத்தில் குமாரகுருபரர் கல்லூரி ஒன்று இருக்கிறது. அதை ஏற்படுத்தியது திருப்பனந்தாள் மடம். அந்தக் கல்லூரிக்கு 567 எக்கர் நிலத்தை தஞ்சாவூரில் என்டோமென்ட் ஆகக் கொடுத்திருக்கிறார்கள். அந்த நிலத்திலிருந்து ஒரு கோட்டை நெல்கூட வருவதில்லை. முன்பு அரசாங்கம் கல்லூரிகளுக்கு முழு மானியம் கொடுப்பதில்லை. இப்போது அரசாங்கம் எல்லாக் கல்லூரிகளுக்கும் முழு மானியம் கொடுக்கிறது. அரசாங்கம் முழு மானியம் ஒன்றும் கொடுக்காத அந்தக் காலத்தில் கல்லூரி ஆசிரியர்கள் சம்பளம் கேட்டபோது, "நீங்களே தஞ்சாவூர் போய் ஒவ்வொரு எக்கர் நிலத்தை எடுத்து பாட்டம் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று சொன்னார்கள். இதையும் நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து, திருவனந்தபுரத்தில் அந்தக் காலத்தில் சர். டி. சக்தி மாதவராவ் என்பவர் திவானாக இருந்தார். அதாவது 150 வருடத்திற்கு முன்பு அவர் திவானாக இருந்தார். அவருடைய 'ஸ்டேட்யூ' சிலைகூட இன்றைய தினம் திருவனந்தபுரம் தலைமைச் செயலகத்துக்கு முன்னால் இருக்கிறது. 150 வருடங்களுக்கு முன்பு அவர் திவானாக இருந்தபோது, "ஜன்மி குடியான் புரக்ளமேஷன் ஆக்ட்" என்கிற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாங்கிப் படிக்க வேண்டும். அன்றைக்கு திருவாங்கூர் சமஸ்தானத்திலுள்ள அவ்வளவு நிலங்களும் கோயில்களுக்குத்தான் சொந்தமாக இருந்தன. அவை பத்மநாப சுவாமிக்குத்தான் சொந்தமாக இருந்தன. அவருடைய தாசன்தான் அப்போது இருந்த மகாராஜன்.



நிலத்தை உழுது பயிரிடுபவர்கள் 2½ கோட்டை அல்லது 3 கோட்டை என்று நெல்லை பண்டாரபாட்டமாக "ஜன்மி குடியான் புரக்ளமேஷன் ஆக்ட்" படி கோயில்களுக்குக் கொடுப்பார்கள். கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு சேர்ந்த பிறகுதான், பண்டாரப் பாட்டத்தை மாற்றி, பயிரிடுகிறவர்களுக்கு நிலத்தை உடைமையாக்கினோம். திருவாங்கூர் கோயில்களுக்குச் சொந்தமாக இருந்த நிலங்களையெல்லாம் எடுத்து உழுபவர்களுக்கே சொந்தமாக ஆக்கி, 2½, 3 கோட்டை நெல்லை பாட்டமாகக் கொடுக்கச் செய்தார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் 500 கோயில்களுக்கு மேல் இருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு சேர்ந்திருக்கிறது. இப்போது கோயில்களுக்கு நிலமில்லை. இங்காவது யாரிடமோ நிலமெல்லாம் இருக்கின்றது. யாரிடம் நிலம் இருக்கிறது என்று கண்டுபிடிக்க முயன்றுகொண்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 6-50)

கன்னியாகுமரி மாவட்டத்திலே நிலத்தைக் கண்டுபிடிக்க தேவையில்லை. தமிழகத்திலே சேருவதற்கு முன்பே யார் யார் உழுதுகொண்டிருந்தார்களோ அவர்களுக்குச் சொந்தமாக சர். டி. மாதவராவால் கொடுக்கப்பட்டது. அதனால் அரசாங்கத்திலே இருந்து கோயில் பராமரிப்புக்கு என்று தொகை கொடுக்கப்பட்டு வருகிறது. கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு சேர்ந்தபோது, 13½ லட்சம் ரூபாய் கோயில் பராமரிப்புக்காக என்று தமிழகத்துக்குக் கொடுக்க வேண்டும் என்ற விதியோடுதான் சேர்ந்தது. ஆகவே, நம்முடைய மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் சொன்னதைப் போல, 150 ஆண்டுகளுக்கு முன்னாலே—இவ்வளவு தூரம் ஜனநாயகப் போர்வை எல்லாம் போட்டு காரியங்கள் செய்வதற்கு முன்பே—திருவிதாங்கூர் சமஸ்தானத்திலே சர் டி. மாதவ ராவ் என்ற அட்மினிஸ்ட்ரேட்டர், அவர் அரசியவாதி கூட அல்ல, இந்தத் திட்டங்களைப் போட்டு அமுல்படுத்தியிருக்கிறார். நிலங்களையெல்லாம் பயிரிடுபவர்களுக்குக் கொடுத்து, நில உடைமையாளர்களுக்கு அரசாங்கம் நஷ்ட ஈடு கொடுத்து, அங்கிருந்த கோயில்களை அரசாங்கமே கவனித்துக்கொள்ளும் நிலைமையை உருவாக்கினார். அதற்காக ஒரு தனி இலாக்காவே ஏற்படுத்தப்பட்டது. நாம் இப்போது 13½ லட்சம் ரூபாய் அவர்களிடமிருந்து வாங்கிக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கு இருக்கும் பிரச்சினையெல்லாம் 20 வருஷத்திற்கு முன்பு 13½ லட்சம் ரூபாய் தந்தார்கள். 20 ஆண்டுகளுக்குப் பிறகும் இந்தத் தொகையை உயர்த்திக்கொடுக்கவில்லையே என்பதுதான். அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. இப்போது

நாம் ஜனநாயக அமைப்பிலே தான் உழுபவனுக்கு நிலங்களைக் கொடுக்கிறோம் என்று சொல்கிறோம். ஆனால், நான் சொல்லிக்கொள்கிறேன், இன்னும் நாம் அதைச் சரிவரச் செய்யவில்லை. இன்னும் காலம் தாழ்த்திக் கொண்டு போவதிலே எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. 15 பர்சென்ட், 10 பர்சென்ட் என்று கூட கொண்டு வருவோம் என்று சொல்வது மேடையிலே பிரச்சாரத்திற்கு, பிரசங்கத்திற்குப் பயன்படுமே தவிர, வேறு ஒன்றும் அல்ல. நிலங்கள் உழுபவனுக்கே சொந்தம் என்று சொல்ல வேண்டும். உரிமையாளர்களுக்கு நஷ்ட ஈடு அளிக்க வேண்டும். உரிமையாளர்களுக்கு நஷ்ட ஈடு அளிக்க அந்தத் தொகையை உழுபவனிடமிருந்து உடனடியாக வாங்கக் கூடாது. அரசு ஒரு நிதியை ஏற்படுத்தி, அந்த நிதியிலிருந்து நஷ்ட ஈடு கொடுத்துவிட்டு, அதற்குப் பிறகு நிலத்தை உழுபவனிடமிருந்து அரசு அந்தத் தொகையை வசூல் செய்து கொள்ள வேண்டும். இத்தகைய நிலையிலே சிந்தித்து ஒரு நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டு, அதைக் கொண்டுவரும் முன்பு இதையாவது இப்போது கொண்டு வந்தார்களே என்று சொல்லி வரவேற்று, முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் வரவேற்றது மட்டுமல்லாமல், எல்லோரும் சுருக்கமாகப் பேசினாலும் விளக்கமாக பல கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களையெல்லாம் நான் எண்ணிப் பார்க்கின்றபோது, எனக்கு மிகவும் உற்சாகமாக இருக்கிறது என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். யார் எந்தக் கோணத்திலேயிருந்து பேசினாலும், பொதுப்படையாக உயர்ந்த கருத்துடன் சமுதாயக் கண்ணோட்டத்தோடு பேசினார்கள் என்று நான் மனதார ஏற்றுக்கொள்ளுகிறேன். குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள்—நான் அறிந்த மட்டில் அவர்கள் மிகவும் நன்றாக வசதி படைத்தவர்கள் என்றுதான் எண்ணுகிறேன், உண்மையோ, பொய்யோ எனக்குத் தெரியாது—அப்படி நன்றாக வசதி படைத்த அவர்கள் பேசுகின்றபோது, வசதி படைத்தவர்கள், மேல் தட்டிலே இருப்பவர்கள் இப்படி ஆழமான கருத்துக்களைச் சொல்கிறபோது, சமுதாயத்திலே அடித்தளத்திலே இருக்கின்ற மக்களுக்கு எது தேவை என்று அவர்கள் சொல்வதைத்தான் நான் பார்க்கிறேன். இந்தக் கருத்துக்களை சமுதாயத்திலே மேல் தட்டிலே இருப்பவர்கள் பேசுகிறார்களே என்று பார்க்கிறபோது, காலம் எவ்வளவு கனிந்து வந்திருக்கிறது என்பதை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன்.





**திரு. ஏ. ஆர். தாமோதரன் :** காலத்திற்குத் தகுந்தபடி நாங்கள் ஒன்றும் மாற்றிப் பேசவில்லை. முன்பே இந்தக் கருத்தைத்தான் சொன்னோம்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** காலம் கனிந்து வந்திருக்கிறது என்று சொல்லும்போது, நான் தவறாகப் பொருள் கொள்ளவில்லை. எனக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் மீது மிகுந்த மதிப்பு உண்டு. நீண்ட காலமாக எனக்கு அவரைத் தெரியும். 'ஸ்மால் லேண்ட் ஓனர்ஸ்'க்கு நஷ்ட ஈடு கொடுக்கிறபோது கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதிகமாகச் சொத்து உடையவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கிறபோது, அரசு எப்படி வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்று சொன்னார்கள். குறைந்த நிலம் உடையவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கிறபோது, கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும், மற்றவர்களைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்று சொல்கிறபோது, அவர்கள் எந்த அளவுக்கு உயர்ந்த இடத்திலே இருந்து சொன்னார்கள் என்று நான் ஏற்றுக் கொள்கிறேன். யாரைப் பார்த்தாலும், ஒரே மாதிரியான முறையிலே பார்க்க வேண்டும் என்ற கருத்தையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். அதைப்போல், நம்முடைய மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, இதுமாதிரி தான் நிலைமைகளையெல்லாம் சொன்னார்கள். சிறு விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள், காலம் கனிந்து இருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். ஆயிரக்கணக்கானவர்கள், நிலத்தை வைத்திருப்பவர்கள் எல்லாம் நிலத்தைக் கொடுப்பதற்குத் தயாராக ஆகிவிட்டார்கள் என்பதுதான் காலம் கனிந்துவிட்டது என்பதற்கு அர்த்தம். ஒரு விவசாயியிடம் இருக்கிற நிலத்தை எடுக்கிறபோது, அதற்கு நஷ்ட ஈடாக பணத்தைக் கொடுக்கிறபோது, அதிலே எவ்வளவு கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும் என்பதை உறுப்பினரவர்கள் எல்லாம் ஏற்றுக்கொள்வார்கள். பெரிய நிலச் சொந்தக்காரர்களிடத்திலே பணத்தைக் கொடுத்தால், அவர்கள் அதை பாங்கிலே போடுவார்கள், செலவழிக்க மாட்டார்கள். ஆகையால், பெரிய நிலச் சொந்தக்காரர்களுக்கு, வசதி படைத்தவர்களுக்கு எப்படி வேண்டுமானாலும் கொடுக்கலாம். சிறு நிலம் வைத்திருப்பவர்களுக்கு, பணத்தைக் கொடுக்கிறபோது தவணை முறையிலாவது கொடுத்து விடுங்கள் என்று திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். அதிலே இருக்கிற கஷ்டத்தைச் சொல்கிறேன். சிறிய நிலச்சுவான்தார்கள் என்றால், சாதாரணமாக, ஆதரவற்றவர்கள், விதவைகள், மைனர்கள் இவர்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் தவணை முறையில் கொடுத்தால், அதை அன்றாடச் செலவுக்குப் பயன்படுத்திச் சாப்பிட்டுவிட்டு, 10 ஆண்டு கழித்து

டிரஸ்ட்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். பப்ளிக் டிரஸ்ட் என்பது கோயில் அல்லது கல்வி நிலையங்கள் அமைத்துக் கொள்வதாகும். "டிரஸ்ட்ஸ் ஆப் ரிலிஜியஸ் நேச்சர்" என்றால், இது என்ன புதிதாக இருக்கிறதே என்று சந்தேகம் பலருக்கும் ஏற்படக்கூடும்.

'டிரஸ்ட்ஸ் ஆப் ரிலிஜியஸ் நேச்சர்' என்றால், திருவாரூர் தியாகராஜ சுவாமிக்கு உற்சவம் நடக்கும்போது, அங்கே வருகிற பக்தர்களுக்கு தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று சொல்லி ஒரு அறக்கட்டளையை ஏற்படுத்தி, அதற்கு 100 ஏக்கர் நிலத்தை எழுதி வைத்துவிடுவது; அல்லது ஒரு நாளைக்கு சுவாமிக்கு மண்டகப்படி செய்ய என்று சொல்லி அதற்கு ஒரு 500 ஏக்கர் நிலத்தை எழுதி வைப்பது. இப்படியெல்லாம் செய்வதைத்தான் "டிரஸ்ட்ஸ் ஆப் ரிலிஜியஸ் நேச்சர்" என்று பெயரிட்டிருக்கிறார்கள். நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வருகிறபோதே, இந்த நிலைமைகளை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வேண்டும் என்றுதான் இந்த அரசு நினைக்கிறது. அப்படி உண்டாக்கப்பட்ட பிரைவேட் டிரஸ்ட், டிரஸ்ட்ஸ் ஆப் ரிலிஜியஸ் நேச்சர் ஆகியவை தமிழ் நாட்டில் எவ்வளவு இருக்கின்றன, அவைகள் எல்லாம் எப்போது ஆரம்பிக்கப்பட்டன என்ற விவரம் எல்லாம் இந்தக் கோப்பில் இருக்கின்றன (அமைச்சர் கையிலே ஒரு கோப்பை (பைலை) வைத்துக்கொண்டிருந்தார்). அவைகளைப்பற்றிய விவரங்கள் எல்லாம் விரைவில் வர இருக்கின்றன. அது மட்டுமல்ல, 1957 ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சி வெளியிட்ட தேர்தல் அறிக்கையையே நான் கொண்டு வந்திருக்கிறேன். 1957ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையிலேயே நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வரப்படும் என்று சொல்லியிருக்கிறது. அதன் விளைவு என்ன ஆனது என்பதையெல்லாம்கூட இந்தக் கோப்பு விவரங்களின் வடிவில் வைத்துக் கொண்டிருக்கிறது. 1957 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் சொல்லிவிட்டு, 1962 ஆம் ஆண்டில் நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வந்ததன் காரணமாகத்தான், இந்த இடைப்பட்ட காலத்திலேதான், பல்வேறு விதமான டிரஸ்ட்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. 1957 ஆம் ஆண்டில் கேரளத்தில் நிலச் சீர்திருத்தச் சட்டம் வந்துவிட்டது. அப்போது காங்கிரஸ் கட்சி தமிழ் நாட்டில் ஆட்சி செய்து கொண்டிருந்தது. கேரளத்தில் உச்ச வரம்புச் சட்டம் வந்துவிட்டதன் காரணமாக, தமிழகத்தில் இருந்த காங்கிரஸ் கட்சி அன்றையதினம் தனது தேர்தல் அறிக்கையில் அதைச் சேர்த்தது. 1958 ஆம் ஆண்டு காரைக்குடியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் நிலத்திற்கு உச்ச வரம்பு விதிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை



முன் மொழிந்தார்கள். முன்மொழிந்தவர் யார் என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். தஞ்சை மாவட்டக் காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த திரு. கிருஷ்ணசாமி வாண்டையார் அவர்கள்தான் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்தார்கள். பெயரையே சொல்ல வேண்டாம், அந்த அளவுக்கு எல்லோருக்கும் தெரிந்தவர். அந்தத் தீர்மானத்தை வழி மொழிந்தவர் இராமநாதபுரம் ராஜா அவர்கள். இந்த நிலச் சீர்திருத்தச் சட்டம் கெட்டுப் போனதற்கே அதுதான் காரணம். . .

**திரு. க. இராமமூர்த்தி :** காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த வரையில், யார் பொறுப்பில் இருக்கிறார்கள் என்பது பிரச்சினையல்ல. நிலச் சீர்திருத்தக் கொள்கையைக் கட்சிக்குள்ளே யார் இருந்தாலும், நிறைவேற்றியே தீருவோம் என்று காங்கிரஸ் கட்சி கடந்த காலத்தில் நடைமுறைப்படுத்திக் காட்டியிருக்கிறது என்பதைத்தான் இது தெளிவாக்குகிறது.

20, 25 ஆண்டுகளுக்குப் பிறகும்கூட நம்மாலே இப்படிப்பட்ட முறையிலே தான் சட்டங்களைக் கொண்டுவர முடிகிறதே தவிர, வேறொன்றுமில்லை. இந்த நிலையில் நிலச் சீர்திருத்தச் சட்டம் கெட்டுப் போனதற்கே காரணம் காங்கிரஸ் கட்சிதான் என்று பேசுவது சரியில்லை. நிலச் சீர்திருத்தத்தைப் பொறுத்த வரையில், 30 ஆண்டுகளுக்குப் பிறகும்கூட, நம்மாலே இன்னமும் வேகமாகச் செயல்பட முடியவில்லை என்பதை ஒப்புக்கொள்கிறோம். இந்த நிலையில் 30 ஆண்டுகளுக்கு முன்பிருந்த அன்றைய சமுதாயத்தின் அடிப்படையில் காங்கிரஸ் கட்சி எந்த அளவுக்கு ஒரு புரட்சிகரமான திட்டத்தை நிறைவேற்றி யிருக்கிறது என்பதை இந்த நாடு நன்றியுணர்வோடு எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** காங்கிரஸ் கட்சி நிலச் சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்டு வந்தது என்று இந்த நாட்டு சமுதாயம் நன்றியுடன் நினைக்கக் கடமைப்பட்டிருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அதை நானே நன்றியுடன் ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் நான் சொல்ல வந்தது அதுவல்ல. நில உச்ச வரம்புச் சட்டம் பற்றி 1960-லிருந்து சொல்லப்பட்டு, 1962 ஆம் ஆண்டில்தான் நிறைவேறியது. ஆனால் அதற்கு முன்னாலேயே நிலச் சீர்திருத்தச் சட்டம் வர வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையிலேயே சொல்லப்பட்டது. அப்படி 1957-லேயே சொல்லப்பட்டதால்தான், பல ஆயிரக்கணக்கான ஏக்கர்

நிலங்கள் டிரஸ்ட்களில் போய் முடங்கிவிட்டன. இதுதான் காங்கிரஸ் அரசு கொண்டு வந்த சட்டம் கெட்டுப் போனதற்குக் காரணம். தேர்தல் அறிக்கை யில் முன்னாலேயே சொல்லிவிட்டு அதற்குப் பிறகு சட்டம் கொண்டு வந்ததால் தான், அது கெட்டு விட்டது என்றேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** அதுதான் கருத்தாக இருக்குமானால், அதற்குப் பிறகு கொண்டுவரப்பட்ட பல்வேறு நிலச் சீர்திருத்தச் சட்டங்கள், உச்ச வரம்புச் சட்டங்கள் ஆகியவற்றில் எத்தகைய (லூப்ஹோல்ஸ்) பலகீனங்கள் இருந்தன என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். அண்ணா தி.மு.க. ஆட்சிப் பொறுப்பை மேற்கொள்வதற்கு முன்பேகூட இந்தச் சட்டங்கள் எந்த நிலையில் கொண்டுவரப்பட்டன என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவார்கள். இப்போது நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் கொண்டு வந்த பிறகுகூட, எந்த அளவுக்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க முடியாமல் அரசு தத்தளித்துக் கொண்டிருக்கிறது என்பதையும் நாம் அறி வோம். நான் அண்ணா தி.மு.க. அரசின் மீது குற்றம் சாட்டுவதற்காக இதைச் சொல்லவில்லை. ஆனால் உச்ச வரம்புச் சட்டமும், நிலச் சீர்திருத்தச் சட்டங் களும் எத்தகைய சமுதாய மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன என் பதை நாம் எண்ணிப் பார்க்கும்போது, அனுபவ ரீதியாக நாம் பலவற்றைக் கண்டு அனுபவித்து திருத்தங்களைச் செய்து கொண்டிருக்கிறோம். எனவே, காங்கிரஸ் ஆட்சியில் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது, எத்தகைய சமுதாய சூழ்நிலை நிலவியது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மேலவை 7 மணிக்கு மேலாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** நிலச் சீர்திருத்தச் சட்டங் களைக் கொண்டு வந்து உழைப்பவனுக்கே நிலத்தைச் சொந்தமாக்க வேண்டும் என்று விரும்புகிறோம். இதைச் செய்யும்போது அடித்தளத்தில் இருக்கும் மக்களைப்பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். இப்படிப்பட்ட சட்டங்கள் கொண்டுவரப்பட்ட பிறகும், பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களை வைத்துக்கொண்டிருப்பவர்கள் தங்கள் நிலத்தைக் கொடுக்கத் தயாராக இல்லையே என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அந்த விவரம் எல்லாம் இங்கே இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்பினால், அதையெல்லாம் படித்துப் பார்க்கலாம்.



THIRU A. R. DAMODARAN: Sir, am I to take it that the Hon. Minister will be placing a statement on the table of the House ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** நான் சொன்னதெல்லாம் அந்தச் சட்டத்தின் மூலம் பெருமளவுக்கு நிலம் கிடைக்காமல் போனதற்குக் காரணம் நில உச்சவரம்புச் சட்டத்தைப்பற்றி முன்கூட்டியே காங்கிரஸ் கட்சி சொன்னதுதான் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிலைமை யையெல்லாம் போக்குவதற்கு இந்த அரசு விரைவில் உரிய சட்டத்தைக் கொண்டுவரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அந்தச் சட்டம் விரைவி லேயே வரவிருக்கிறது. புலி வருகிறது, புலி வருகிறது என்று சொல்லி, பின் னாலே பசுகூட வராத கதையாக இது இருக்காது. அதைப்போல நான் சொல்ல மாட்டேன். ஆனால் "இந்த அரசு விரைவில் கொண்டு வரும்" என்று நான் இப்போது சொல்வதற்குக் காரணம், இதைச் சொல்வதால் யாரும் எதையும் செய்துவிட முடியாது. ஏற்கெனவே எல்லாம் செக்கார்டாகி விட்டன. இனிமேல் யாரும் எதையும் செய்துவிட முடியாது என்று தெரிந்து கொண்டு சொல்லுகிறேன். இதற்கு முன்னாலே சொன்னால், ஆயிரம் ஏக்கர் வைத்திருப்பவர்கள் வேறு கையில் அவைகளை எழுதி வைத்துவிடுவார்கள். ஆனால் இப்போதோ எல்லாமே எழுத்து வடிவில் இருக்கிறது. ஆகவேதான் அறிந்து கூறுகிறேன்.

(பிற்பகல் 7-10)

இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரைக்கும், நிலத்தை உழுபவர்களுக்கு நிலம் சொந்தமாக வேண்டும் என்று நாங்கள் எண்ணியவாறு செய்வதற்காகக் கொண்டு வந்த மிக முக்கியமான நிலச் சீர்திருத்தச் சட்டம் என்பதை மன தார எல்லோரும் ஏற்றுக்கொள்கிறோம். இது ஒரு படி. இன்றைக்கு இருக்கிற நிலையில் 25, 75 என்பது முதல் படி முன்னேற்றம். 60, 40 என்று இருக்கும் போது, கரும்புக்கு விதிவிலக்கு இருந்தது. இன்றைக்கு இந்த விதிவிலக்கை எடுத்திருக்கிறோம். இது இரண்டாவது படி முன்னேற்றம் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

வாடகையில் ஐந்தில் ஒரு பகுதியைக் கொடுக்க வேண்டுமென்று இருக் கிறது. அதைக் கொடுக்கவில்லை. அதை அரசு சீர்திருத்தம் செய்திருக்கிறது. இப்படி இந்தச் சட்டம் முன்னேறியிருக்கிறது. மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களும், திரு. எ. ஆர். தாமோதரன் அவர்களும் சொன்ன கருத்துக்களை மனதார ஏற்றுக்கொள்கிறேன். நிலச்சுவாந்தார்களில், சிறு விவசாயிகள், ஊனமுற்றவர்கள், மைனர்கள், விதவைகள் ஆகியவர்கள் வாழ முடியவில்லை.

அவர்கள் தண்ணீர் தீர்வையைக் கொடுக்கிறார்கள், வாய்தா கொடுக்கிறார்கள். இருக்கிற கடைகளை அடகு வைக்கிறார்கள் என்பதையெல்லாம் நான் உணர்கிறேன். இதையெல்லாம் எண்ணிப் பார்த்துதான் அரசு எப்படிச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்பது ஒன்று. அப்படிச் சட்டத்தைக் கொண்டு வருகிறபோது, அப்படிப்பட்டவர்களுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் பணம் கொடுப்பது நியாயம் அல்ல. அது மட்டுமல்லாமல், நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்படி குறைந்த விலை கொடுப்பது நியாயம் அல்ல. மொத்தமாகக் கொடுக்க வேண்டும், அப்போதுதான் அவர்கள் வாழ்க்கையை நடத்த முடியும் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். இந்தக் கருத்து முதலில் அமைச்சரவையிலே பேசப்பட்ட காரணத்தால்தான், இங்கே சொல்ல முடிந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"பம்புசெட்டுகள் வைத்துக்கொண்டிருந்தால் அவர்கள் என்ன செய்வது?" என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் கேட்டார்கள். 60, 40 என்று இருக்கும்போதுகூட, பம்ப்செட்டுக்கள் இருந்தன. இன்றைக்கு 75, 25 என்று வரும்போது, அது வாராததற்குக் காரணம், முதலிலேயே தண்ணீர்த் தீர்வை கொடுக்க வேண்டிய வாய்ப்பு இருப்பதால், அப்படித்தான் இருக்கிறது. சங்கடங்கள் இருக்கக்கூடும். சாதாரணமாக நீர் பாய்ச்சும்போது தண்ணீர் தீர்வை குறைவாக வரும். பம்ப்செட் வைக்கும் போது கரெண்ட் சார்ஜ் மற்றும் முதலீடு அதிகமாக இருக்கிறது. அதையெல்லாம் அரசு யோசிக்கிறது. இல்லையென்று சொல்லவில்லை. அப்படிப்பட்டவர்களுக்கு என்ன செய்வது என்று இன்னமும் யோசிக்கிறோம் என்பதைக் கூறி, இந்தச் சட்டமுன்வடிவுகளை வரவேற்றுப் பேசியதற்காக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்து, நிச்சயமாக இதைவிட சீர்திருத்தச் சட்டம், யார் யார் எங்கே ஒளிந்து கொண்டிருக்கிறார்களோ அவர்களையெல்லாம் பிடிக்கிற அளவிற்கு, உழுபவர்களுக்கு நிலம் சொந்தமாகிற அளவிற்குச் சட்டம் வரும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1980 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1980) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.





சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, நெடுந்தலைப்பு, சட்டமியற்றும் முறை ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** அவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1980) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1980 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1980) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(3) தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1980).**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** அவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1980 ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1980) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

---

328-329 ஆம் பக்கங்களில் இணைப்பு VII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1980) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, நெடுந்தலைப்பு, சட்டமியற்றும் முறை ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1980) நிறைவேற்றப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1980) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மேலவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது

(பிற்பகல் 7.15)



7. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

*Nil.*

*B. Reports, Notifications and Other Papers.*

* 14. The Tamil Nadu Debt Relief (Amendment) Bill, 1980 (L.A. Bill No. 2 of 1980), as passed by the Assembly.

* 15. The Tamil Nadu Cultivating Tenants (Protection from Eviction) Amendment Bill, 1980 (L.A. Bill No. 5 of 1980), as passed by the Assembly.

* 16. The Tamil Nadu Cyclone and Flood Affected Areas Cultivating Tenants (Temporary Relief) Amendment Bill, 1980 (L.A. Bill No. 6 of 1980), as passed by the Assembly.

* 17. The Tamil Nadu Cultivating Tenants Arrears of Rent (Relief) Bill, 1980 (L.A. Bill No. 10 of 1980), as passed by the Assembly.

* 18. The Tamil Nadu Cyclone and Flood Affected Areas Cultivating Tenants Arrears of Rent (Relief) Bill, 1980 (L.A. Bill No. 11 of 1980), as passed by the Assembly.

* 19. The Tamil Nadu Debt Relief Bill, 1980 (L.A. Bill No. 13 of 1980), as passed by the Assembly.

20. The Tamil Nadu Payment of Salaries (Amendment) Bill, 1980 (L.A. Bill No. 12 of 1980), as passed by the Assembly.

21. The Tamil Nadu Cultivating Tenants (Payment of Fair Rent) Amendment Bill, 1980 (L.A. Bill No. 14 of 1980), as passed by the Legislative Assembly.

22. The Tamil Nadu Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Second Amendment Bill, 1980 (L.A. Bill No. 15 of 1980), as passed by the Assembly.

23. Return of Assets of the following Members of the Tamil Nadu Legislative Assembly placed on the Table in pursuance of the Resolution passed by the Tamil Nadu Legislative Assembly on the 27th August 1969 :

*Returns as on 31st March* 1978.

1. Hon. Thiru S. Ramachandran (Minister for Electricity).
2. Thiru R. Jebamani.
3. Thiru M. Annamalai.
4. Thiru Durai Muthusamy.

*Returns as on 31st March* 1979.

1. Hon. Thiru S. Ramachandran (Minister for Electricity).
2. Hon. Thiru G. R. Edmund (Minister for Food).
3. Thiru R. Krishnan.
4. Pulavar K. Govindan.
5. Thiru N. Sankariah.
6. Thiru R. E. Chandran Jeyapal.
7. Thiru R. Jebamani.
8. Thiru K. Ramani.
9. Thiru Durai Muthusamy.
10. Thiru H. G. Arumugam.
11. Thiru R. Venkedasamy alias Venkedu.

---

* Laid on the Table of the House on 11th February 1980.



இணைப்பு I

[250 ஆம் பக்கத்தில் இனம் 5 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

மத்திய அரசு, அரசுப் பணியாளர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்குவதற்காக, இந்தியாவிலுள்ள மாநகரங்களையும், நகரங்களையும் அவற்றின் மக்கள் தொகை, வாழ்க்கைச் செலவுப்புள்ளி ஆகியவற்றின் அடிப்படையில் 'A', 'B-1', 'B-2' 'C' என வகைப்படுத்தியுள்ளது என்பதை இது தொடர்பில் குறிப்பிடலாம். இம்மாநிலத்தில், சென்னைமாநகர், கோயம்புத்தூர், மதுரை, பிற 1 ஆம் நிலை நகராட்சிகள் மேற்சொன்ன வகைப்பாட்டின்கீழ் வருகின்றன. எனவே, வீட்டுவாடகைப் படிக்காக அவை நிலை 1, நிலை 1பி, நிலை 2 என வகைப்படுத்தப்படுகின்றன. மேற்சொன்னவற்றை தவிரவும், வருவாய்க் கோட்டத் தலைமையிடங்கள், வட்டத்தலைமையிடங்கள், பிற நகராட்சிகள் நிலை 3-ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. மத்திய அரசு விதிகளின்படி, இவற்றுக்கு வீட்டு வாடகைப்படி அனுமதிக்கப்படுவதில்லையாயினும், இந்த இடங்களில் வீட்டு வாடகைப்படி மாநில அரசால் கொடுக்கப்படுகிறது. இம்மாநிலத்தில் உள்ள அரசுப்பணியாளர்களுக்கு அனுமதிக்கத்தக்க வீட்டு வாடகைப்படியின் பல்வேறு வீதங்கள் வருமாறு:

| வரிசை எண். | சம்பள வீதம் (ரூபாய் திங்கள் ஒன்றிற்கு). | வீட்டு வாடகைத் தொகை (ரூபாய் திங்கள் ஒன்றிற்கு) | | | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 1(a) சென்னை மாநகரமும், மாநகர எல்லையிலிருந்து 32 கிலோ மீட்டர் சுற்றுவட்டாரத்திற்கு மேற்படாமல் உள்ள பகுதிகளும். | நிலை (b) மதுரையும், கோயம்புத்தூரும் மற்றும் அவற்றின் எல்லைகளிலிருந்து 16 கிலோ மீட்டர் சுற்றுவட்டாரத்திற்குள் அடங்கிய பகுதிகளும். | நிலை 2 மாவட்டத் தலைமையிடங்களும் 1 ஆம் நிலை நகராட்சிகளும். | நிலை 3ல் உள்ள இடங்கள். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | 400 கீழ் | 45 | 30 | 25 | 15 |
| 2 | 400—699 | 75 | 50 | 40 | 25 |
| 3 | 700—999 | 120 | 80 | 65 | 40 |
| 4 | 1,000—1,299 | 165 | 110 | 90 | 50 |
| 5 | 1,300—1,599 | 210 | 140 | 115 | 50 |
| 6 | 1,600—1,899 | 255 | 150 | 125 | 50 |
| 7 | 1,900-2,199 | 300 | 150 | 125 | 50 |
| 8 | 2,200-2,499 | 325 | 150 | 125 | 50 |
| 9 | 2,500-அதற்கு மேலும் | 350 | 150 | 125 | 50 |



மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி நிலை 3 உள்ள இடங்களுக்கு உரிய விதத்தில், சிதம்பரம், கோவில்பட்டி, மேட்டுப்பாளையம், பரமக்குடி, சிவகாசி, திண்டிவனம் நகரங்களில் உள்ள அரசு அலுவலர்களுக்கு வீட்டுவாடகைப் படி கொடுக்கப்படுகின்றது; சமீபத்தில் இடைக்கால மக்கள் தொகை கணக்கெடுப்புப்படி, மத்திய அரசு மேலே குறிப்பிட்ட நகரங்களை, வீட்டுவாடகை கொடுப்பது சம்பந்தமாக 'சி' வகுப்பு நகரங்களாக வகைப்படுத்தியுள்ளது. அந்த ஆணைகளின் அடிப்படையில் மேலே குறிப்பிட்ட அட்டவணையில் நிலை 2-ல் உள்ள விதத்தில் வீட்டு வாடகைப்படி வழங்குவது பற்றி அரசு தனியே பரிசிலனை செய்து வருகிறது.

## இணைப்பு II.

252ஆம் பக்கத்தில் இனம் 5 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

அரசு தொழிற் நுட்பக் கல்வி பயிலகங்களில் பணியாற்றும் ஒருசில ஆசிரியர்கள் சென்னை தொழிற் நுட்பக் கல்வி இயக்குநரின் அலுவலகத்தில் 21—1—1980 முதல் 25—1—1980 வரை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர். உண்ணாவிரதத்தில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு சிறு விடுப்பு அளிக்கக்கூடாது என எல்லா தொழில் நுட்பக்கல்வி நிலையங்களின் முதல்வர்களுக்கும் குறிப்புரை வழங்கி ஆணையிட்டுள்ளது. உண்ணாவிரதத்தில் ஈடுபடுவது விதிக்கு புறம்பானது ஆகும். மேலும் போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்களுக்கு சிறு விடுப்பு அளிக்க மறுத்தும் அது குறித்து முடிவெடுக்கும் வரை அவ்வாறு விடுப்பில் சென்ற நாட்களுக்கு பணியாளர்களுக்கு ஊதியம் பட்டுவாடா செய்யப்படவில்லை.

2. மதுரை தமிழ்நாடு பாலிடெக்னிக்கை சேர்ந்த ஒரு கூட்டு விரிவுரையாளர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டார். மேலும் அவர் 24—1—1980 மற்றும் 25—1—1980 ஆகிய இரு நாட்களுக்கும் சிறு விடுப்பும் மற்றும் 26—1—1980, 27—1—1980 ஆகிய இரு விடுமுறை நாட்களை விடுப்புடன் சேர்த்து அனுபவிக்க உத்தரவு கோரினார். மதுரை பாலிடெக்னிக் முதல்வர் அவர்கள் மேற்குறிப்பிட்ட விரிவுரையாளருக்கு சிறுவிடுப்பு மறுத்து மற்றும் உள்ள 27 நாட்களுக்கு மட்டும் உரிய சம்பளத்தையும் வழங்கினார். மேற்குறிப்பிட்ட பாலிடெக்னிக்கில் பணியாற்றும் போதகர்கள் மற்றும் கூட்டு விரிவுரையாளர்கள் (மொத்தம் 36 பணியாளர்கள்) 30—1—1980-ல் அன்று அவர்களுடைய சம்பளத்தை வாங்க மறுத்துள்ளனர். உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட கூட்டு விரிவுரையாளரைத் தவிர மற்ற ஊழியர்கள் யாவரும் 1—2—1980 அன்று சம்பளத்தைப் பெற்றுக்கொண்டனர்.

3. விருதுநகர் எஸ். வெள்ளைச்சாமி நாடார் பாலிடெக்னிக் நிருவாகத்தினருக்கும் அதன் ஆசிரியர் பணியாளர்களுக்கும் ஏற்பட்ட சுமுகமான உடன்பாட்டின் காரணமாக தொடர் உண்ணாவிரதத்தை ஏற்பாடு செய்தவர்கள் அதனை வாபஸ் பெறுவதாகவும் எனவே, அவ்வாறு உண்ணாவிரதத்தில் ஈடுபட்டவர்கள் மீது யாதொரு நடவடிக்கையும் மேற்கொள்ளக்கூடாது எனவும் கூறினார்கள். அரசு பாலிடெக்னிக் ஆசிரியர்கள் எடுத்த முடிவினை கருத்தில் கொண்டு, சிறுவிடுப்பு அளிக்குமாறும் அந்த விடுப்பு நாட்களுக்கு ஊதியம் வழங்குமாறும் பாலிடெக்னிக் முதல்வர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

4. மதுரை தமிழ்நாடு பாலிடெக்னிக்கைச் சேர்ந்த உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட கூட்டு விரிவுரையாளர் அவர்களுக்கும் உரிய ஊதியத்தை பிடித்தம் பாதுமின்றி வழங்குமாறு அப் பாலிடெக்னிக் முதல்வருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

## இணைப்பு III.

[253 ஆம் பக்கத்தில் இனம் 5 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

மாநிலத்திலுள்ள அனைத்து பிரதம வீட்டு வசதி சங்கங்களுக்கும், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் தலைமைச் சங்கமாக உள்ளது. இத் தலைமைச் சங்கம், ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து, நிதியுதவி பெற்று, தன்னுடன் இணைக்கப்பட்டுள்ள பிரதம சங்கங்களுக்கு கடன் உதவி அளித்து வருகிறது. தென்னாற்காடு, கடலூர் கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் மேற்படி தலைமைச் சங்கத்திடமிருந்து கடன் உதவி பெறும், பிரதம சங்கங்களில் ஒன்றாகும்.

2. கடலூர் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்திற்கு ரூ. 4.70 இலட்சம் கடன் தொகை பட்டுவாடா செய்யப்படாமல் தாமதிக்கப்பட்டது (30—1—1980 அன்றைய நிலையில்) என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன், எம்.எல்.சி. அவர்கள் கொடுத்துள்ள தகவல் சரியானதே என்று கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டு வசதி) அவர்கள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார். இதற்கு முக்கிய காரணம், தலைமைச் சங்கத்திடம் பணம் பட்டுவாடா செய்ய போதுமான நிதி வசதி இல்லை என்பதாகும்.

3. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கம், கடலூர் கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் உட்பட, பல நகர்ப்புற வீட்டு வசதி சங்கங்களுக்கு கடன் ஒப்பளிப்பு வழங்கவும், கடன் தொகையை விநியோகிக்கவும் நிதி வசதி வேண்டி, ஆயுள் காப்புறுதி கழகத்தை ரூ. 8 கோடி கடன் வழங்கும்படி கேட்டுள்ளது. இதனை அரசும் பரிந்துரை செய்துள்ளது. ஆயுள் காப்புறுதிக் கழகம், மேற்படி ரூ. 8 கோடியை தலைமைச் சங்கத்திற்குக் கடனாக வழங்க, சமீபத்தில் ஒப்புக் கொண்டுள்ளது. மேற்படி கடன் தொகையைப் பெறுவதற்கு முன்னர், தலைமைச் சங்கம் ஆயுள் காப்புறுதிக் கழகத்துக்கு அதன் நிபந்தனைகளுக்கிணங்க, சில பத்திரங்களையும், சான்றிதழ்களையும் வழங்க வேண்டியுள்ளது. அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து மேற்படி கடன் தொகையான ரூ. 8 கோடி பெறப்பட்டவுடன், கடலூர் கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் உட்பட, அனைத்து நகர்ப்புற வீட்டு வசதி சங்கங்களுக்கும் இயன்றவரை பணம் பட்டுவாடா செய்யும் பணி உடனடியாக மேற்கொள்ளப்படும்.





4. ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து கடன் தொகையைப் பெறுவதில் ஏற்பட்டுள்ள காலதாமதத்தால், தலைமைச் சங்கம், நகர்ப்புற வீட்டு வசதி சங்கங்களுக்கு உடனடியாக ஓரளவிற்கு பணம் பட்டுவாடா செய்யும் நோக்கத்தோடு, இடைக்கால நிதியுதவியாக, ரூ. 2 கோடி முன் பணமாக ways and Means Advance வழங்குமாறு அரசை அணுகியுள்ளது. இச் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

## இணைப்பு IV.

[254 ஆம் பக்கத்தில் இனம் 5 (4)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

தமிழ்நாடு கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சுப் பணியாளர் அலுவலர் சங்கம் பதினொரு கோரிக்கைகளை முன் வைத்துப் போராடுவதாகத் தெரிவித்துள்ளது. அக்கோரிக்கைகளுள் ஒன்றான கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் அலுவலகங்கள் 60-ல் கூடுதலாக 1 கண்காணிப்பாளர், ஒரு உதவியாளர், ஒரு பதிவறை எழுத்தர் ஆகிய பதவிகள் தரப்பட வேண்டும் என்னும் கோரிக்கை ஆய்வு செய்யப்பட்டு 1980-81 ஆம் ஆண்டில் முதல்பட்சமாக 30 கண்காணிப்பாளர்களையும் மீதி அலுவலர்களைப் படிப்படியாக அடுத்துவரும் ஆண்டுகளில் நியமிப்பதெனவும் அரசு முடிவு செய்துள்ளது.

2. பிற அலுவலகங்களில் அமைச்சுப் பணியாளர்களுக்கான கூடுதல் பதவிகளை ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கைகள் அரசின் ஆய்வில் உள்ளன.

இணைப்பு V.

[255ஆம் பக்கத்தில் இனம் 6 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 12 OF 1980.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Payment of Salaries Act, 1951.*

---

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-first Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Payment of Salaries (Amendment) Act, 1980.

(2) Clause (2) of section 3 shall be deemed to have come into force on the 29th day of April 1979.

2. *Amendment of section* 10, *Tamil Nadu Act XX of* 1951.—In section 10 of the Tamil Nadu Payment of Salaries Act, 1951 (Tamil Nadu Act XX of 1951) (hereinafter referred to as the principal Act), for the words "Chairman or the Deputy Chairman", the words, "the Chairman, the Deputy Chairman, the Chief Parliamentary Secretary or the Parliamentary Secretary" shall be substituted.

3. *Amendment of section* 12, *Tamil Nadu Act XX of* 1951.—In section 12 of the principal Act.—

"(1) in sub-section (4)—

(*a*) after the expression "Every Member referred to in sub-section (1) shall", the expression "for himself and the members of his family" shall be inserted.

(*b*) the following proviso shall be inserted, namely :—

Provided that every person who had been a Member of the Legislative Assembly or of the Legislative Council or of both, but had ceased to be such Member at any time, shall subject to such conditions and during such period as may be determined by rules made by the State Government, be entitled free of charge to accommodation in the hospitals maintained by the State Government and also to medical treatment and the benefits conferred by this proviso shall not be available to the members of the family of the person referred to in this proviso."



(2) after sub-section (4-B), the following sub-section shall be inserted, namely :—

"(4-C) Every Member of the Legislative Assembly or of the Legislative Council who does not hold any of the offices referred to in sections 3 to 6-A shall be entitled to have a telephone at his residence, the installation expenses of which alone shall be met with by the State Government.".

4. *Substitution of new section for section* 12-*B*, *Tamil Nadu Act XX of* 1951.—For section 12-B of the principal Act, the following section shall be substituted, namely:—

"12-*B. Pension.*—(1) There shall be paid a pension of two hundred and fifty rupees per mensem to every person who after the first day of March 1952, had been or is a Member of the Legislative Assembly or of the Legislative Council or of both, for one term :

Provided that where any person has served either as a Member of the Legislative Assembly or as a Member of the Legislative Council or as both for a priod exceeding five years, there shall be paid to him an additional pension of fifty rupees per mensem for every further period of one year as Member, so however that in no case the pension payable to such person shall exceed five hundred rupees per mensem.

(2) (i) If any person who has been paid any pension under this Act as in force before the date of publication of the Tamil Nadu Payment of Salaries (Amendment) Act, 1980, in the *Tamil Nadu Government Gazette*, becomes entitled to increase in the amount of pension so paid by virtue of the said Amendment Act, the increase shall be given effect only on and from the date of such publication and he shall not be entitled to any arrears of such increase.

(ii) If any person becomes entitled to pension for the first time by virtue of this section, he shall be paid such pension only with effect on and from the date of publication of the Tamil Nadu Payment of Salaries (Amendment) Act, 1980, in the *Tamil Nadu Government Gazette* and he shall not be entitled to any arrears of such pension.

(3) The State Government may make rules providing for the conditions and restrictions subject to which such pension may be granted:

Provided that no such pension shall be paid to any person for the period during which such person was or is in receipt of any salary or any emoluments other than Travelling Allowance either from any State or the Central Government or from any company or statutory body owned or controlled by any State or the Central Government and if any such income was or is received, the payment of pension shall be suspended for that period :

Provided further that no such pension shall be paid to any person who is in receipt of pension for having been a Member of the Parliament.

*Explanation-I.*—For purposes of sub-section (1), the expression " one term " shall mean a period of not less than one year and not more than five years of membership in the Legislative Assembly or in the Legislative Council or in both, whether continuous or not.

*Explanation-II.*—For the purpose of additional pension referred to in the proviso to sub-section (1), the period of membership in the Legislative Assembly or in the Legislative Council or in both need not be continuous.

*Explanation-III.*—For purposes of this section, salary includes salary received under this Act and salary received as—

(i) a Member of the Parliament or any other State Legislature,

(ii) a Minister or Deputy Minister of the Government of India or of any other State,

(iii) the Chairman or Deputy Chairman of the Council of States or the Legislative Council of any other State,

(iv) the Speaker or Deputy Speaker of the House of the People or of the Legislative Assembly of any other State.".



## இணைப்பு VI.

[382-ஆம் பக்கத்தில் இனம் 6 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

## L.A. BILL No. 14 OF 1980.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Cultivating Tenants (Payment of Fair Rent) Act,* 1956.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-first Year of the Republic of India as follows:—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Cultivating Tenants (Payment of Fair Rent) Amendment Act, 1980.

2. *Declaration.*—It is hereby declared that this Act is for giving effect to the policy of the State towards securing the principles laid down in Part IV, and in particular clause (*c*) of Article 39, and Article 46 of the Constitution.

3. *Amendment of section* 3, *Tamil Nadu Act XXIV of* 1956.—In sub-section (4) of section 3 of the Tamil Nadu Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956 (Tamil Nadu Act XXIV of 1956) (hereinafter referred to as the principal Act), for the expression " Subject to the proviso to sub-section (2) of section 4, all the cultivation expenses ", the expression " All the cultivation expenses " shall be substituted.

4. *Amendment of section* 4, *Tamil Nadu Act XXIV of* 1956.—In section 4 of the principal Act,—

(1) for sub-section (1), the following sub-section shall be substituted, namely :—

" (1) Fair rent shall be 25 per cent of the normal gross produce or its value in money." ;

(2) sub-section (2) shall be omitted.

5. *Amendment of section* 6, *Tamil Nadu Act XXIV of* 1956.—Section 6 of the principal Act shall be renumbered as sub-section (1) of that section and after sub-section (1) as so renumbered, the following sub-section shall be added, namely :—

" (2) Where fair rent has been determined under this Act, in respect of any land before the date of the publication of the Tamil Nadu Cultivating Tenants (Payment of Fair Rent) Amend-

ment Act, 1980, in the *Tamil Nadu Government Gazette*, and such fair rent is in excess of the fair rent specified in section 4, as amended by the said Amendment Act, then, notwithstanding anything contained in sub-section (1), on and from the said date, the fair rent so determined shall, in respect of that date and any period after that date, stand reduced to the fair rent specified in the said section 4, as amended by that Amendment Act.".

6. *Amendment of section 15, Tamil Nadu Act XXIV of 1956.*—In section 15 of the principal Act, the word "sugarcane" shall be omitted.

## இணைப்பு VII.

[315 ஆம் பக்கத்தில் இனம் 6 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

### L.A. BILL No. 15 OF 1980.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Act, 1961.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-first Year of the Republic of India as follows:—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Amendment Act, 1980.

2. *Declaration.*—It is hereby declared that this Act is for giving effect to the policy of the State towards securing the principles laid down in Part IV and in particular clause (*c*) of Article 39, and Article 46 of the Constitution.

3. *Amendment of section 23, Tamil Nadu Act 57 of 1961.*—In sub-section (4) of section 23 of the Tamil Nadu Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Act, 1961 (Tamil Nadu Act 57 of 1961) (hereinafter referred to as the principal Act), for the expression "Subject to the proviso to sub-section (2) of section 24, all the cultivation expenses", the expression "All the cultivation expenses" shall be substituted.



4. *Amendment of section 24, Tamil Nadu Act 57 of 1961.*—In section 24 of the principal Act,—

(1) for sub-section (1), the following sub-section shall be substituted, namely :—

"(1) Fair rent shall be 25 per cent of the normal gross produce or its value in money.";

(2) sub-section (2) shall be omitted.

5. *Amendment of section 26, Tamil Nadu Act 57 of 1961.*—Section 26 of the principal Act shall be renumbered as sub-section (1) of that section and after sub-section (1) as so renumbered, the folowing sub-section shall be added, namely :—

"(2) Where fair rent has been determined under this Chapter, in respect of any land before the date of the publication of the Tamil Nadu Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Amendment Act, 1980, in the *Tamil Nadu Government Gazette*, and such fair rent is in excess of the fair rent specified in section 24, as amended by the said Amendment Act, then, notwithstanding anything contained in sub-section (1), on and from the said date, the fair rent so determined shall, in respect of that date and any period after that date, stand reduced to the fair rent specified in the said section 24, as amended by that Amendment Act.".

6. *Amendment of section 31, Tamil Nadu Act 57 of 1961.*—In section 31 of the principal Act, the word "sugarcane" shall be omitted.

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

புதன்கிழமை, 1980 பிப்ரவரி 13.

சென்னை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (**திரு. ஜீ. சுவாமிநாதன்**) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Fisheries Development.*

* 61 Q.—THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Food be pleased to state :

(*a*) whether the Government have made any arrangement for distribution of ' fish seeds ' for the development of inland fisheries in Tamil Nadu; and

(*b*) if so, the details thereof?

### மீன் வளர்ச்சி.

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள், கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில், உள்நாட்டு மீன்வளத்தைப் பெருக்குவதற்காக, மீன் குஞ்சுகள் (Fish seeds) விநியோகத்திற்கு அரசு ஏற்பாடு ஏதும் செய்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** (அ) ஆம்.

(இ) உள்நாட்டு மீன்வளத்தைப் பெருக்குவதற்கு, இயற்கை முறையில் மீன் குஞ்சுகள் சேகரிப்பதோடு, செயற்கை முறையிலும் மீன் முட்டையிலிருந்து மீன் குஞ்சுகளை பொறிக்கச் செய்து, அவைகளை பெரிய நீர்த் தேக்கங்களில் வளர விடப்படுகிறது. இவ்வாறு சேகரிக்கப்பட்ட மீன் குஞ்சு

களின் ஒரு பாகத்தை, தனியார்களுக்கு மீன் பண்ணைகள் மூலம் குறிப்பிட்ட, நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் விற்கப்படுகிறது. மீன் வளர்ப்போர் அபிவிருத்திக் குழுக்களுக்கு மீன் குஞ்சுகள் விநியோகிக்கப்படுகிறது.

**திரு. க. இராமமூர்த்தி:** மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்பெல்லாம் பிங்கர்லிங்ஸ் மீன் குஞ்சுகளைத் தருவதிலே மிகவும் அக்கறை எடுத்துக்கொண்டு தனியார்களிடம் 'கேன்வாஸ்' செய்து வந்தார்கள். இந்த மீன் குஞ்சுகளைப் பெருக்குவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருந்தார்கள். பல்வேறு கிணறுகள், குளங்கள் என்று மீன் வளர்க்க பல்வேறு ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தார்கள். கடந்த 4, 5 ஆண்டுக் காலமாக அதிலே தொய்வு ஏற்பட்டிருக்கிறது. மீண்டும் ஊக்கம் தரும் வகையிலே இந்தத் துறை மேலும் நடவடிக்கைகளை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்:** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொல்வதைப்போல, இந்தத் திட்டத்திலே எந்தவிதமான தொய்வும் ஏற்படவில்லை. அதற்கு மாறாக விறுவிறுப்புத்தான் ஏற்பட்டிருக்கிறது.

**திரு. சி. இராமலிங்கம்:** நம் நாட்டிலே இறால் பண்ணைகள் ஏற்பட்டிருக்கின்றன. உள்நாட்டிலும், கடற்கரை ஓரப் பகுதிகளிலும் இறால் குஞ்சுகளைப் பெருக்குவதற்கு நடைமுறையிலே ஏதாவது திட்டம் இருக்கிறதா? அப்படி இல்லையென்றால், இனியாவது அந்தத் திட்டம் தொடங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்:** இறால் வளர்ச்சித் திட்டம் இன்றையதினம் தமிழகத்திலே அதிகமான அளவிலே பெருகி வருகிறது. அதிலே ஊக்கம் செலுத்தப்பட்டு, மீன் துறையிலேயிருந்து தேவையான அளவுக்கு குஞ்சுகளை விநியோகம் செய்கிறார்கள். அதற்கான நடவடிக்கைகளை அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** இந்தத் திட்டத்தைப் பெருக்குகின்ற வகையில் கல்லூரிகளுக்கு, பள்ளிகளுக்கு மீன் குஞ்சுகளை இலவசமாகக் கொடுத்து, இதைப் பெரிய அளவிலே பெருக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்:** கல்லூரிகளுக்கோ, பள்ளிகளுக்கோ இப்பேர்ப்பட்ட குஞ்சுகளைக் கொடுப்பதனால் எந்தவிதமான பயனும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்தக் குஞ்சுகளை வளர்ப்பதற்குப் போதுமான நீர்த் தேக்கங்கள் தேவையாக இருக்கின்றன. கல்விக் கூடங்களுக்கு இது தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்:** செயற்கை முறையில் முட்டை எப்படி தயார் பண்ணுவது என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்:** இது செயற்கை முறையில் முட்டை தயாரிக்கும் திட்டம் அல்லது குறிப்பிட்ட ஒரு கால வரம்புக்குள் அந்த மீன்கள் இடுகின்ற முட்டையினுடைய அளவை, அதாவது அதிகமான அளவுக்கு முட்டைகள் இடுவதற்கு வகை செய்யும் விஞ்ஞானத் திட்டமாகும். ஒரு கால வரம்புக்குள் எவ்வளவு முட்டைகள் இடுமோ, அந்த அளவைவிட அதிகமாக முட்டைகள் இடச் செய்வதாகும்.

THIRU D. V. D'MONTE: Sir, what is the fish harvest yield from inland fisheries in the State? Have the Government any information on this?

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்:** அதைப்பற்றிய தகவல் இப்போது என்னிடம் இல்லை.

**திரு. க. இராமமூர்த்தி:** மீன் வளத் துறையிலே வேகமாக வளர்கின்ற வகை மீன்கள், மூன்று மாத காலத்திலே, 4 மாத காலத்திலே முழுமையாக, பெரிய வளர்ச்சி பெறுகின்ற மீன் வகைகளை எல்லாம் கண்டுபிடித்திருக்கிறார்கள் அல்லது விநியோகம் செய்கிறார்கள். இத்தகைய மீன் குஞ்சுகளை எங்கே பெறுவது? அப்படி எத்தனை வகை மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்திருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்:** கட்லா, ரோகா, மிருகால் போன்ற மீன் வகைகள் அளிக்கப்படுகின்றன. அந்த வகை மீன்கள் இந்தத் திட்டத்தின் கீழ் பயன்படுத்தப்படுகின்றன.

## *Kerosene Sales*

*62 *Q.*—THIRU A. R. DAMODARAN: Will the Hon. the Minister for Food be pleased to state:

(*a*) the number of licences that have been issued under the Kerosene Control Order, 1973, to (i) wholesalers and (ii) retail dealers in the various districts of Tamil Nadu, District-war, as on 1st January 1979; and

(*b*) the quantity of Kerosene sold by the Oil Companies to the wholesalers in each district for the calendar year 1978 and during the first quarter of 1979?

### மண்ணெண்ணெய் விற்பனை

திரு. ஏ. ஆர். தாமோதரன்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—1—1979 ஆம் நாள் நிலவரப்படி, மாவட்ட வாரியாக, தமிழ் நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் உள்ள மொத்த விற்பனையாளர்களுக்கு (1) சில்லறை விற்பனையாளர்களுக்கு, 1973 ஆம் ஆண்டு மண்ணெண்ணெய் (வர்த்தகம் ஒழுங்குபடுத்தல்) ஆணையின் கீழ் வழங்கப்பட்டுள்ள உரிமங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) 1978 ஆம் ஆண்டிலும், 1979 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மொத்த விற்பனையாளர்களுக்கு, எண்ணெய் நிறுவனங்கள் விற்பனை செய்த மண்ணெண்ணெயின் அளவு என்ன?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: (அ) & (இ) விவர அறிக்கை@ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

THIRU A. R. DAMODARAN: Sir, from the reply furnished by the Hon. Minister, it is found that 13,856 retail dealers have been licensed in Tamil Nadu but only 3500 of them have been permitted to sell kerosene. May I know from the Hon. Minister whether any representation has been received from those retail dealers requesting that they may be permitted to sell in rural as well as urban areas?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இங்கே எழுப்பிய கேள்வியின்படி, ஆயிரக்கணக்கான மண்ணெண்ணெய் விற்கின்ற உரிமை பெற்றவர்கள் நாட்டிலே இருந்தாலுங்கூட, ஒரு சிலருக்கு மட்டுமே மண்ணெண்ணெய் விற்கும் உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. பலருக்கு மண்ணெண்ணெய் விநியோகம் செய்யக்கூடிய உரிமை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அவர்கள் தங்களுக்கும் உரிமை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய இந்தக் கோரிக்கையை, இப்போதிருக்கும் நிலைமைகளை உத்தேசித்து அரசு ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN: Is the Hon. Minister aware that the difficulties experienced by the consumers in Madras City are due to the fact that out of 2863 retail dealers only 500 and odd



dealers are distributing kerosene in Madras City today? In the rural areas the same difficulty is being experienced, because many of these retail dealers are not allowed to sell kerosene. May I know from the Hon. Minister whether he considers it legal after issuing a licence to suspend a licence without cancelling it and whether it is only because the poor retail dealers cannot go to Court on this issue?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: இந்த மண்ணெண்ணெய் விநியோகம் செய்கின்ற சிறிய வியாபாரிகள் நீதிமன்றத்திற்குப் போக முடியாத சூழ்நிலையைப் பயன்படுத்தி அவர்களுக்கு மண்ணெண்ணெய் விநியோக உரிமை கொடுக்கவில்லை என்று சொல்வது சரியல்ல. சட்டத்தின் அடிப்படையிலே அது நியாயம் இல்லைதான் என்று மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னாலும், தேவையின் அடிப்படையிலே இப்பேர்ப்பட்ட விநியோக முறையைத்தான் இந்தத் துறை கையாள வேண்டியிருக்கிறது. அத்தகைய தனிப்பட்ட வியாபாரிகள் நெருக்கடி ஏற்படும் நேரத்திலே, அந்த நெருக்கடியைப் பயன்படுத்தி, அதிகமான விலைக்கு மண்ணெண்ணெய் விற்பது போன்ற குறைபாடுகள் இந்த அரசின் கவனத்திற்கு வந்திருப்பதன் காரணமாகத்தான் இந்த முறை கொண்டுவரப்பட்டிருக்கிறது. இன்றையதினம் மண்ணெண்ணெய் விநியோகத்தைப் பொறுத்தவரையில், சென்னை நகரப் பகுதியில் நம்முடைய நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் அங்காடிகள் மூலமாகத்தான் விநியோகம் செய்யப்படுகிறது. அதுபோலவே, கைவண்டிகளில் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யும் ஏழை வியாபாரிகளுக்கும். அதை மட்டுமே வைத்து வியாபாரம் செய்து வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கக்கூடிய இக்கட்டான சூழ்நிலையில் இருக்கின்ற வியாபாரிகளுக்கும் இன்றையதினம் மண்ணெண்ணெய் கொடுக்கப்படுகிறது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மொத்த வியாபாரிகளுக்கு விற்பனை செய்யும் மண்ணெண்ணெயினுடைய அளவு சென்னையைப் பொறுத்தவரையில் 84,912 லிட்டர் என்றும், வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில், 27,207 லிட்டர், 27,356 லிட்டர் என்றும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் 56,781 லிட்டர் என்றும் புள்ளிவிவரங்கள் கொடுத்திருக்கிறார்கள். எந்த அடிப்படையிலே இந்த மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது? மாவட்ட அடிப்படையிலேயா, மக்கள் தொகை அடிப்படையிலேயா, தேவையின் அடிப்படையிலேயா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: ஒவ்வொரு மாவட்டத்திலேயும், இதற்கு முந்திய மாதங்களில் அந்தந்த மாவட்டங்களிலே பயன்படுத்தப்பட்ட

---

@ 0 – ஒ 02 ஆக அச்சிடப்பட்டுள்ளது.] [illegible] பக்கங்களில் இணைப்பு

மண்ணெண்ணெய் அளவையும், தேவையையும் உத்தேசமாகக் கணக்கிட்டு, இரண்டு நிலைமைகளையும் ஒத்திட்டுப் பார்த்து அதற்கேற்ப ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

(பிற்பகல் 4-10)

THIRU A. R. DAMODARAN : Sir, may I know from the Hon. Minister whether at least in the case of hand-cart vendors the Government have passed orders that 100 litres of kerosene should be issued in Madras City and 50 litres of kerosene should be issued to them in the mofussil? May I know whether the Government will re-consider this because the issue of 50 litres will give only a gross income of Rs. 3.25 per day per bullock cart, which is not at all economic for the hand-cart vendor?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** சென்னை மாநகரத்திலே விநியோகம் செய்கின்ற கை வண்டித் தொழிலாளர்களுக்கு 100 லிட்டர் மண்ணெண்ணெய் விநியோகிப்பது போன்று, பிற நகர்ப் பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும் வண்டி மூலம் மண்ணெண்ணெய் வியாபாரம் செய்யும் வியாபாரிகள், தங்களுக்கு 50 லிட்டர் போதாது, 100 லிட்டராகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாவட்ட வாரியாக வழங்கப்படுவதில், பெரியார் மாவட்டம் விடப்பட்டிருக்கிறதே. பழைய கோவை மாவட்டத்திலே அது அடங்கியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** அந்தக் குறிப்பிலே மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1978 ஆம் ஆண்டில் மாவட்ட வாரியாக எண்ணெய் நிறுவனங்கள் மொத்த வியாபாரிகளுக்கு விற்பனை செய்த மண்ணெண்ணெயின் அளவுதான் சொல்லப்பட்டிருக்கிறது. பெரியார் மாவட்டம் 1979-ல் தான் உருவானது.

**திரு. சி. இராமலிங்கம்:** மாவட்டங்களிலே கூட்டுறவு அங்காடிகள் மூலமாக மண்ணெண்ணெய் விற்கப்படுகிறது. அவர்கள் ஏதோ அலுவலகப் பணியாளர்கள்போல காலை 10 மணிக்குத் திறப்பதும், மாலை 5 மணிக்கு மூடுவதுமாக இருக்கிறார்கள். கிராமங்களில் இருக்கிற மக்களுக்கு 6, 7, 8 மணிக்கு மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது. எனவே அந்த நேரங்களில் அங்காடிகளைத் திறக்க உத்தரவு போடப்பட்டுள்ளதா? அப்படி இல்லையென்றால், இனியாவது அப்படி உத்தரவு போடப்படுமா?



**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கோரிக்கை சம்பந்தப்பட்ட அமைச்சரவர்களுடைய கவனத்திற்கு நிச்சயம் கொண்டுவரப்படும்.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்:** மாண்புமிகு அமைச்சரவர்கள் கணக்கு வைத்துத்தான் எண்ணெய் விநியோகம் செய்கிறோமென்று சொல்லுகிறார்கள். சில கிராமப் பகுதிகளிலே எண்ணெய் வாங்குவதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. சில பகுதிகளில் வாங்காத கணக்கு, வாங்கிய கணக்கு எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்துச் சொல்கிறார்கள். எனவே இன்றைக்கு நல்ல முறையில் கார்டுகளுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** கிராமங்களிலே மண்ணெண்ணெய் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது என்ற குறைபாடு வருவதற்கு எந்தவிதமான நியாயமும் இல்லை. காரணம் இன்றைய தினம் ஒவ்வொரு கிராமத்திற்கும் தேவையான மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்படுகிறது. சில கிராமங்களிலே சிலருக்கு மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை என்ற குறைபாடு இருக்கக் காரணம் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது என்பதல்ல. இப்போது குடும்பக் கார்டு வைத்திருப்பவர்களுக்குத்தான் கொடுக்கப்படுமென்ற நியதியை வரையறுத்துள்ளதால், குடும்பக் கார்டுகள் இல்லாதவர்கள் அதைப் பெற முடியவில்லை. ஆகையால் புதிதாக உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அட்டை இல்லாதவர்களும் கேட்டால் கொடுக்கலாமென்ற உத்தரவு இன்றையதினம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

THIRU A. R. DAMODARAN : In view of the statement of Thiru Sethi, the Hon. Minister of Petroleum of the Central Government that the quota of kerosene supplied to the State would be increased, may I know why the Government of Tamil Nadu are still continuing the supply of kerosene on Family Card system?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** மத்திய அமைச்சர் திரு. சேத்தி அவர்கள் மண்ணெண்ணெய் ஒதுக்கப்படுமென்றுதான் சொல்லியிருக்கிறார்கள். அப்படி ஒதுக்கப்படும் நேரத்தில் அதைப்பற்றிப் பரிசீலனை செய்யலாம்.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்:** கிராமங்களிலிருந்து மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை என்ற முறையீடு வரவில்லை என்று அமைச்சர்வர்கள் சொன்னார்கள். கிராமங்களிலே எது நடந்தாலும், அதைச் சொல்ல யார் இருக்கிறார்கள்? பத்திரிகைகளிலும் எழுதுவதில்லை. இங்கே

[1980 பிப்ரவரி 1

வரிசையாக உட்கார்ந்து எழுதுகிறார்கள், அங்கே யார் இருக்கிறார்கள் இங்கே ஒருநாள் சொல்லுகிறோம். அங்கே யார் இருக்கிறார்கள் சொல் வதற்கு? எந்த முறையைக் கையாண்டால், கார்டு இல்லாத ஜனங்களுக்கு மண்ணெண்ணெய் கிடைக்க ஏற்பாடு செய்ய முடியுமென்பதை அறி விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: கிராமங்களிலே உள்ளவர்க டைய குறைபாடுகளை எடுத்துச் சொல்ல யாருமில்லை என்பதல்ல. மாண் மிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் இருக்கிறார்க குறைபாடுகள் முன்னாலே இருக்கலாம். இப்போது அந்தக் குறைபாடு இல்லை. காரணம் போதுமான மண்ணெண்ணெய் விநியோகம் செய் படுகிறது என்பதுதான்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: நம்முடைய மண்ணெண்ணெய் தே எவ்வளவு? மத்திய அரசு அந்தத் தேவை அளவு தருகிறதா? நம்முடை தேவை அளவிற்குத் தராததன் காரணமாகத்தான் இந்தத் தட்டுப்பாடு துள்ளதா?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: நம்முடைய தேவை எவ் என்பதற்குப் புள்ளி விவரங்கள் என்னிடம் இல்லை. ஆனால் மத்திய அ இதுவரை கொடுத்து வந்த மண்ணெண்ணெய் நம்முடைய தேவைக் போதுமானதாக இல்லை என்பதுதான் நம்முடைய குறைபாடு.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மண்ணெண்ணெய், டீசல் போன்றவைக கெல்லாம் இன்றையதினம் தமிழ்நாட்டில் தட்டுப்பாடு இருப்பது உண் பல இடங்களிலே டீசல் கிடைக்கவில்லை. பல இடங்களிலே லாரிகள் ணெய் வாங்கக்கூடிய இடங்களிலே நின்று கொண்டிருப்பதைப் பார்த்தே மத்திய அரசு அமைச்சர் இந்தியாவிலேயே, தமிழகத்தில்தான் இப்படிப்பட தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். குடும்பக் கார் வாங்க வேண்டுமென்று ஏற்பட்டிருப்பதுதான் அதற்குக் காரணமா, அது உண்மையா? எந்த அடிப்படையிலே டீசல், மண்ணெண்ணெய் பற் குறை ஏற்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: இந்தியாவிலே, நம்மு தமிழகத்திலேதான் மண்ணெண்ணெய், டீசல் தட்டுப்பாடு இருக்கிறதெ மத்திய அரசு அமைச்சர் திரு. சேத்தி அவர்கள் சொல்லியிரு முற்றிலும் உண்மையல்ல. அதற்குப் பல்வேறு காரணங்கள் உண்டு. ணெய்யெய் தட்டுப்பாடு ஏற்பட்டதற்கு, தமிழகத்திலே அதிகமான



980 பிப்ரவரி 13]

லிண்டர்கள் பயன்படுத்துவதும் காரணமாக இருக்கிறது. இன்றைக்கு கஸ் சிலிண்டர்கள் கொடுப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், மண்ணெண் ணெய்க்கு அதிக கிராக்கி வந்துள்ளது. அதனால் தட்டுப்பாடு ஏற்பட்டிருக் றது. டீசலைப் பொறுத்தமட்டில், தமிழ்நாட்டில் மின்சாரப் பற்றாக்குறை ருப்பதால், விவசாயப் பம்புசெட்டுகள் வைத்திருப்பவர்கள், சினிமாத் யேட்டர்கள் நடத்துபவர்கள், இன்னும் சில தொழிற்சாலைகள் நடத்து வர்கள்கூட டீசலைப் பயன்படுத்தும் நிலைமை ஏற்பட்டுள்ளது. அதன் ரணமாக டீசலுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே தமிழ் ாட்டில் ஏற்பட்டுள்ள விசேஷ சூழ்நிலையை உத்தேசித்து, மத்திய அரசு திகமான ஒதுக்கீடுகளை, மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்காமல், மக்குத் தருவதற்கு முன்வர வேண்டுமென்று இந்த அரசு வலியுறுத்தி ருகிறது.

திரு. ம. சங்கரலிங்கம்: இருக்கிற மண்ணெண்ணெய் பற்றாக்குறையில், ருப்பதை விநியோகிக்க அரசு சில முறைகளை ஏற்பாடு செய்திருக்கிறது. தில் கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. கிராமங்களில் மின்சார ணக்குகள் இல்லாத வீடுகள் நிறைய இருக்கின்றன. நாம் இப்போது டிசைகளுக்கு விளக்குப் போடுவதற்கு ஏற்பாடு செய்கிறோம் என்று ாலும், செய்து கொண்டிருக்கிறோம். இன்னும் பல கிராமங்களில் மின்சார சதி இல்லை. அங்கு உள்ளவர்கள் மண்ணெண்ணெய் விளக்கு வைத்துத் ான் குழந்தைகள் படிக்க வசதி ஏற்படுத்த வேண்டும். ஆனால் இப்போது ராமங்களுக்கு மண்ணெண்ணெய் குறைவாகக் கொடுப்பதும், நகரங்களில் டுதலாகக் கொடுப்பதும் வழக்கமாக இருக்கிறது. இந்த முறையை மாற்றி, ண்ணெண்ணெய் அதிகம் தேவையான கிராம மக்களுக்கு கூடுதலாகக் டிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: கிராமங்களிலே உள்ளவர் ளுக்குப் போதுமான மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை என்று எதிர்க் ட்சித் தலைவரவர்களும், திரு. இராமகிருஷ்ணத் தேவர் அவர்களும் இங்கே றிச் சொன்னார்கள். நான் ஏற்கெனவே கிராமங்களில் தட்டுப்பாடு ஏற் ட்டதற்கான காரணங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இன்னொன்று. மாவட்டங்களில் கூட்டுறவுத் துறை அங்காடிகள் மூலமாக மண்ணெண் ணய், சர்க்கரை போன்ற அத்தியாவசியப் பொருள்கள் விநியோகம் செய் ாம், மாவட்டத்தில் மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டுக்குக் காரணமாகும். ட்டுறவு நிறுவனங்களில் தலைவர்களாக இருக்கிறவர்கள் இன்றையதினம் ருக்கும் மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டை அரசியலாக்கி விடுவதுதான், ந்த நிலைமை ஏற்பட்டதற்குக் காரணம். அதை அரசு கண்காணித்து ருகிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் அவர்களுக்கு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பார்வையாளர்களைப்பற்றி குறிப்பிடக் கூடாது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்:** பத்திரிகையாளர்கள் எழுத மாட்டார்கள் என்றுதான் சொன்னேனே தவிர, யாரைப்பற்றியும் குறையாகச் சொல்லவில்லை. அமைச்சரவர்கள், அங்கேயிருக்கிற குறைகளை எல்லாம் எடுத்துச் சொல்ல இராமகிருஷ்ணத் தேவர் அவர்களும், மற்றவர்களும் இருக்கிறார்களென்று சொன்னார்கள். அமைச்சரவர்கள் சுற்றுப்பயணம் வரும் போது, ஒவ்வொரு இடத்திலும் ஆயிரக்கணக்கான மகஜர்களைக் கொடுக்கிறார்கள். எங்களிடம் அவ்வளவு இல்லை என்றாலும், 50 மகஜர்களாவது ஒவ்வொரு இடத்திலும் கொடுக்கிறார்கள். ஏன் அப்படிக் கொடுக்கிறார்கள்? வந்ததால் கொடுக்கிறார்கள். ஆனால் அவர்கள் குறைகளை எடுத்துச் சொல்ல சரியான நிறுவனம் கிடையாது. யார் அவர்கள் குறைகளை எடுத்துச் சொல்ல இருக்கிறார்கள்? அப்படி இல்லாததால், கிராம மக்களுக்கு நன்மையான காரியங்களைச் செய்ய வழி இல்லாமல் போகிறது. அதைத்தான் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறைபாடு இருக்கிறது . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள். என்ன கேள்வி?

(பிற்பகல் 4-20)

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்:** பொதுமக்கள் கொடுத்துள்ள மனுக்கள்மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்:** உறுப்பினர் அவர்கள் பொதுமக்கள் எடுத்துச்சொன்ன குறைபாடுகளைப் பற்றிக் கேட்கிறார்கள். பொதுமக்கள் பல்வேறு குறைபாடுகளை எடுத்துச் சொல்லுகிறார்கள். மண்ணெண்ணெய் பற்றி கிராம மக்களிடமிருந்து இதுவரை எந்தவித முறையீடும் வ வில்லை.

**திரு. க. இராமமூர்த்தி:** அமைச்சர் அவர்கள் மண்ணெண்ணெயைப் பற்றி எடுத்துச் சொன்னதுடன், மத்திய அரசு தமிழகத்தினுடைய தேவைக்கேற்ப தரவில்லையென்றும் குறிப்பிட்டார்கள். தமிழகத்தினுடைய தேவை





ாவ்வளவு, மாதாந்திரப் பற்றாக்குறை எவ்வளவு, எத்தனை காலமாக அல்லது ாத்தனை மாதங்களாக மத்திய அரசு இந்தப் பற்றாக்குறையைப் பூர்த்தி 'சய்யவில்லை? பற்றாக்குறை நீருகின்ற அல்லது நிறைவு ஏற்படுகின்ற ாகையில் தேவைப்படும் அளவு மத்திய அரசிடமிருந்து மண்ணெண்ணெய் மக்குக் கிடைக்கவில்லையா?

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்:** தமிழகத்திற்கு மண்ணெண் ணய் மாதந்தோறும் எவ்வளவு தேவைப்படுகிறது என்பதற்கான குறிப்புகள் ன்னிடம் இல்லையென்று ஏற்கெனவே சொன்னேன். எவ்வளவு பற்றாக் றை என்பதையும் என்னால் புள்ளிவிவரங்களோடு இப்பொழுது சொல்ல யலாது. என்றாலும் நமக்குத் தேவைப்படுகிற அளவு மண்ணெண்ணெய் மக்குக் கிடைக்கவில்லை. இது இன்று நேற்று அல்ல, கடந்த 1979 ஆம் ண்டு மார்ச் மாதத்திலேயிருந்து நமக்குக் கிடைக்கும் மண்ணெண்ணெயின் ளவு தேவைக்குக் குறைவாக இருக்கிறது.

## *Office of Chief Educational Officer at Dharmapuri*

*63 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Iinister for Education be pleased to state:

(a) whether any representation has been received by the overnment to open an Office of the Chief Educational Officer at harmapuri; and

(b) if so, the action proposed to be taken thereon?

## தருமபுரியில் முதன்மைக் கல்வி அதிகாரி அலுவலகம்.

**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் ண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தருமபுரியில் முதன்மைக் கல்வி அதிகாரி அலுவலகம் ஒன்றைத் றக்க வேண்டுமென்று முறையீடு ஏதும் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அது குறித்து எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை ன்ன?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) ஆம்.

(இ) தருமபுரியில் தனியாக ஒரு முதன்மைக் கல்வி அலுவலர் அலு கம் 13—8—1979 முதல் திறக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றது.

**திரு. பா. ரா. தாமஸ்:** இந்தக் கேள்வி 1978 ஆம் ஆண்டிலே கேட்கப்பட்டது. இவ்வளவு காலம் கழித்துப் பதில் வந்திருப்பது குறித்து நான் வருந்துகிறேன். இதற்கு மேல் எனக்குக் கேள்வி கேட்க ஒன்றுமில்லை. (சிரிப்பு)

*Adult Education Scheme.*

*64 Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN: Will the Hon. the Minister for Education be pleased to state.

(*a*) whether any resolution to the effect that the power of implementing Audit Education Scheme should be vested with the State Governments only, was passed at the Education Ministers' Conference held in Delhi during the month of July, 1978; and

(b) if so, whether that resolution was accepted by the Central Government?

முதியோர் கல்வித் திட்டம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1978 ஜூலை மாதத்தில் டில்லியில் நடைபெற்ற கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் முதியோர் கல்வித் திட்டத்தை அமுல் நடத்தும் அதிகாரப் மாநில அரசுகளிடமே இருக்கவேண்டும் என்று தீர்மானம் ஏதும் நிறை வேற்றப்பட்டதா?

(இ) ஆம் எனில், இத் தீர்மானத்தை மத்திய அரசு ஏற்றுக்கொண்டதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** அப்படி என்றால் முதியோர் கல்வித் திட்டத்தை அமுல்படுத்துகின்ற பொறுப்பை மாநில அரசு தன்னிடமே வைத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறதா அல்லது அது மத்திய அரசிடமே இருக்கலாமென்று கருதுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** முதியோர் கல்வித் திட்டத்தை அமுல்படுத்துவதைப் பொறுத்தவரை, மத்திய அரசு ஒரு தீவிர முயற்சியை எடுத்து, ஒரு திட்டத்தை வகுத்து அதை நிறைவேற்றத் தொடங்கினார்கள்





அதன் மூலம் பல்வேறு தொண்டு நிறுவனங்களுக்கு பணத்தை அவர்கள் நேரடியாகத் தந்துகொண்டிருந்தார்கள். நாம், அந்தமாதிரி தரக்கூடாது, தமிழக கல்வித் துறையின் மூலம்தான் தர வேண்டுமென்கிற கருத்தைச் சொல்லி வலியுறுத்தி வருகிறோம். அதுதான் இதிலே இருக்கிற முக்கியமான அம்சம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** முதியோர் கல்வித் திட்டம் ஒரே சீரான முறையில், ஆர்வத்துடன் தொடர்ந்து அமுல்படுத்தப்படுகிறதா அல்லது அது தேவையில்லை என்ற முறையில் ஆர்வம் குறைக்கப்பட்டு அதன் காரணமாக அதை நடைமுறைப்படுத்துவதில், முயற்சியின் வேகம் குறைந்திருக்கிறதா? இந்த அரசு அதைப் புதிய வேகத்தோடு அமுல்படுத்த தீவிரமாக ஈடுபட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** முதியோர் கல்வித் திட்டம் தேவையில்லை என்கிற நிலைமை எப்போதும் இல்லை. அது தேவையான ஒன்று, வெற்றிகரமாக நடத்தப்பட வேண்டிய ஒன்று. அதுதான் இப்போது இருக்கின்ற கருத்து. நாம் அந்த முறையில் சென்ற ஆண்டு துவக்கப்பட்ட அந்த முதியோர் கல்வித் திட்டத்தை எல்லா முயற்சிகளையும் செய்து, வெற்றிகரமாக நிறைவேற்றி வருகிறோம். எந்தவிதமான ஆர்வக்குறைவும் இல்லை. அதை வெற்றிகரமாக நடத்த வேண்டிய பொறுப்பு அரசுக்கு மாத்திரமல்ல, அனைவருக்கும் இருக்கிறது. படிப்படியாக இந்தத் திட்டம் நாடு பூராவும் பரவலாக்கப்பட்டு வருகிறது. வெற்றிகரமாக அதை நிறைவேற்ற வேண்டும் என்கிற ஒரு விருப்பம்தான் இன்றைக்கு மாநில அரசிடம் இருக்கிறது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** முதியோர் கல்வித் திட்டம் என்பது மத்திய அரசால் தொடங்கப்பட்ட திட்டம். முதலில் மத்திய அரசே சில கல்வி ஸ்தாபனங்களுக்கு நேரடியாக அவற்றை நடத்த அனுமதி அளித்தார்கள். இப்போது மாநில அரசு மூலமும் நடத்துகிறார்கள். எத்தனை நிறுவனங்கள் இன்றையதினம் அரசு சார்பில் நடத்தப்படுகின்றன? எத்தனை நிறுவனங்கள் தொண்டு நிறுவனங்கள் சார்பில் நடத்தப்படுகின்றன? மேலும் இவற்றை மத்திய அரசு அதிகாரிகள் கண்காணிக்கிறார்களா, இல்லை மாநில அரசு அதிகாரிகள் கண்காணிக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இங்கே தரப்பட்டிருக்கின்ற விவரங்களைத் தருகிறேன். கல்வியறிவு இல்லாத முதியோருக்கு கல்வியறிவு புகட்ட முதியோர் கல்வித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 15—35 வயது வரம்பில் உள்ள சுமார் 65 இலட்சம்

எழுத்தறிவற்ற முதியோர்களுக்குக் கல்வியறிவு புகட்ட இலக்கு நிர்ணயிக்க ட்டுள்ளது. இவ்விலக்கினை கீழ்க்கண்டுள்ள நிறுவனங்கள் மூலம் நிறை வேற்ற முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். அரசுத் துறை 44 இலட்சம் பல்கலைக் கழகம் 5 இலட்சம், நேரு இளைஞர் மையங்கள் 1 இலட்சம் தொண்டு நிறுவனங்கள் 15 இலட்சம்.

தற்போது மாவட்டத்திற்கு 300 கிராம செயல்முறை எழுத்தறிவிப்பு மையங்கள் விதம் வட ஆற்காடு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சி, மதுரை திருநெல்வேலி, செங்கல்பட்டு, சேலம், கோயம்புத்தூர், தர்மபுரி, புது கோட்டை மற்றும் இராமநாதபுரம் ஆகிய 12 மாவட்டங்களில் மொத்த 3,600 கிராம செயல்முறை எழுத்தறிவிப்பு மையங்கள், மைய அரசு நி உதவியுடன் திறக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மையத்திலும் 15—35 வயது வரம்பிலுள்ள சுமார் 30 நபர்களுக்கு மாலை அல்லது இரவில் கல்வி கற்பிக்க படும். இதுபோலவே 6—14 வயது வரம்பில் உள்ள கல்வி அறிவு அற்றவ களுக்கு கல்வி கற்பிக்க ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 4 முறை சாராக் கல்வி மையங்கள் விதம், 374 ஊராட்சி ஒன்றியங்களில் மொத்தம் 1,496 மையங்கள் மாநில அரசால் நடத்தப்படுகின்றன. உபரிநிதி வசதியுள்ள சில ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் பொறுப்பில் மொத்தம் 982 முறை சாராக் கல்வி மையங் களை நடத்தி வருகின்றன. இது தவிர தொண்டு நிறுவனங்கள் எத்தனை என்கிற விவரம் என்னிடம் இல்லை. ஆனால் 1980 பிப்ரவரி மாதம்வரை ஏறக்குறைய 12 ஆயிரம் இருக்கும் என்பது என்னுடைய நினைவில் இருக்கிற விவரம். அவை ஒரே மாதிரியான வகையில் அமுல்படுத்தப்படவில்லை. ஒன்றிரண்டு வழிகளில் அவை அமுல்படுத்தப்படுகின்றன. புதிதாக சில முயற்சிகளையும் நாம் நம் மாநிலத்தில் மேற்கொண்டிருக்கிறோம். உதாரண மாக தொழிற்சாலைகளில் பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்குப் படிப்பறிவு இல்லையென்றால், அவர்களுடைய 8 மணி நேர வேலை நேரத்தில் ஒரு மணி நேரத்தை இதற்காக ஒதுக்கி, ஆசிரியரை வைத்து, முதியோர் கல்வித் திட் டத்தை அமுல்படுத்துவதற்காக அவர்களுக்கு கல்வி கற்றுத் தருகிறோம். இப்போது அந்த முறை நல்ல பலன் தந்திருக்கிறது. மற்ற மையங்களைவிட இது சிறப்பாக நடைபெறுகிறது என்ற தகவல் வந்திருக்கிறது. அதையும் விரிவுபடுத்துகிறோம். இப்படி பல்வேறு வழிகளில் ஒர்க்ஷாப், செமினார் போன்றவை மூலமும் முதியோர் கல்வித் திட்டத்தைப் பரப்பிக் கொண்டிருக் கிறோம். வெளிநாடுகளிலிருந்து வருகின்ற நிபுணர்களும் இதைப் பாராட்டி அவர்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். தமிழ் நாட்டிலே நாம் எடுத்திருக்கும் நடவடிக்கைகளால் இத்திட்டத்தில் ஒருவாறு வெற்றி பெற்றால், அதன் மூலம் பிற துறைகளிலும் நாம், முன்னேற அது உதவிகர மாக இருக்கும்.





**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு மாநில அரசுக்கு எவ்வளவு நிதி உதவி செய்திருக்கிறது? மாநில அரசு தன் பங்காக எவ்வளவு செலவு செய்திருக்கிறது? இதற்காக நியமிக்கப்பட்டிருக் கின்ற மாநில அளவிலான அதிகாரிகள் எத்தனை பேர்? மாவட்ட அளவிலான அதிகாரிகள் எத்தனை பேர்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இப்பொழுது என்னிடம் அது பற்றிய முழு விவரம் இல்லை. ஆனால், புதிதாக ஒரு ஜாயின்ட் டைரக்டரைப் போட்டிருக்கிறோம்.

**திரு. செ. முத்துசாமி:** மத்தியிலே ஜனதா அரசு இருக்கும்போது, ஒரு கொள்கை அளவில் முதியோர் கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடிவு செய்தது. இப்பொழுது மத்தியில் வந்துள்ள புதிய அரசு இந்தக் கொள்கை தேவையற்றது என்று கருதி ஏதாவது கருத்துத் தெரிவித்திருக்கிறதா? அல்லது மாற்றம் எதும் உருவாக்கியிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இதுவரையிலும் மாற்றம் ஏற்பட் டிருப்பதாக நமக்கு எந்தவிதச் செய்தியும் இல்லை. இதிலே மாற்றம் ஏற் படுத்த வேண்டுமென்ற எண்ணம் புதிதாக மத்தியில் வந்திருக்கிற மத்திய அரசுக்கு உண்டாகும் என்ற அபிப்பிராயம்கூட எனக்கு இல்லை. என்றாலும் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நாம் வற்புறுத்துவோம்.

**புலவர் புலமைப்பித்தன்:** எழுத்தறிவில்லாத முதியோர் தமிழகத்தில் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறதா? அப்படிப்பட்டவர்களுக்கு முதியோர் கல்வியை கட்டாயமாக அளிக்க அரசு முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இங்கே எவ்வளவு பேர் என்கிற விவரம் இல்லையென்றாலும், தமிழ் நாட்டைப் பொறுத்தவரை, 15 முதல் 35 வயது வரையிலுள்ள சுமார் 65 இலட்சம் எழுத்தறிவற்ற முதியோர்களுக்கு கல்வி அளிக்க வேண்டுமென்ற திட்டத்தை நாம் போட்டு, இப்பொழுது அதை நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம். முதியோர்களைக் கட்டாயப்படுத்த வேண்டுமென்ற ஒரு நிலைமை இன்றைக்கு இல்லை. கட்டாயப்படுத்தினால் எதிர்ப்புதான் வரும். அப்படி கட்டாயப்படுத்தினால், இந்தத் திட்டம் நிச்சயமாக நிறைவேறாது. ஆகவே, தங்களுக்கு இருக்கின்ற கல்வி அறிவில் லாமையை அவர்களாகவே உணர்ந்து முதியோர் கல்வியைக் கற்க அவர்கள் முன்வர வேண்டும். சாதாரணமாக பெண்களுக்கும் மற்றவர்களுக்கும் அவர்கள் செய்கின்ற தொழில் சார்பாக, அதை அடிப்படையாக வைத்து

எழுத்தறிவைத் தருவது அல்லது ஏதாவது தொழிலைக் கற்றுத் தந்த அங்கேயே இந்த எழுத்தறிவையும் கற்றுத் தருவதாக இருந்தால் வெற்றிகரமாக இந்த முதியோர் கல்வித் திட்டம் நடைபெறும். அந் முறையில் இந்த எழுத்தறிவைப் பரவலாகச் செய்யும்போது, இது வெற்றிக மாக நடைபெறும்.

(பிற்பகல் 4-30)

**திரு. பா. ரா. தாமஸ்:** மத்திய அரசு 200 கோடி ரூபாய் ஒதுக்கி செய்து, பத்தாண்டுக்கால அளவிலே இந்த முதியோர் கல்வித் திட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், சில வல்லு நர்கள், இவ்வாறு முதியோர் கல்வித் திட்டத்திற்காகச் செலவிடும் பணத்தை வைத்து, அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்க்கும் முயற்சி மேற்கொண்டால், பள்ளியில் படிக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கை உயரு என்று சொல்லியிருக்கிறார்களே, அது குறித்து மாண்புமிகு கல்வி அமைச் அவர்களின் கருத்து என்ன?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** முதியோர் கல்வி பற்றிய திட் தினுடைய அடிப்படைக் கருத்தாக வலியுறுத்துப்படுவதே குழந்தை படிப்பதற்கு, முதியோர்கள் படிக்க வேண்டுமென்பதுதான். இன்றை பெரும்பாலான குழந்தைகள் படிக்காததற்குக் காரணம், அவர்களுடை பெற்றோர்கள் படிக்காதவர்களாயிருப்பதுதான். ஆகவே, பெற்றோர் நல்ல முறையில் படித்தால்தான், குழந்தைகளைப் படிக்க வைக்க மு மென்ற அடிப்படையிலே, இதிலே எந்தவிதமான முரண்பாடும் இல்லை. சாராருமே படிக்க வேண்டியவர்கள்தான்.

## *Students of Professional Colleges*

* 65 *Q.*—Thiru M. Sankaralingam: Will the E the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that some students of Professi Colleges discontinued their studies due to ragging in 1978 and

(*b*) if so, the number of students who discontinued t studies in (i) Medical Colleges, (ii) Engineering Colleges and Agricultural Colleges respectively ?





## தொழில் கல்லூரி மாணவர்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் ண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1978-79 ஆம் வருடம் தொழில் கல்லூரிகளில் இழிவான முறை ல் கேலிகள் செய்யப்பட்டு தொல்லைக்குட்படுத்தப்பட்டதால் (Ragging) ல மாணவர்கள் படிப்பை விட்டுச் சென்றுவிட்டனர் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அவ்வாறு படிப்பை விட்டுச் சென்ற மாணவர்களில் ) மருத்துவக் கல்லூரி, (பொறியியல் கல்லூரி, (iii) விவசாயக் கல்லூரி ாணவர்கள் எத்தனை பேர்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம்:** ஒவ்வொரு கல்வியாண்டுத் தொடக்கத்திலேயும், ாழில் நுட்பக் கல்லூரிகளில் இவ்வாறு மாணவர்கள் துன்புறுத்தப்படுவதை ங்கிலத்திலே "Ragging" என்று சொல்லுகிறார்கள். இதில் இறந்தவர்கள் உண்டு. படிப்பை விட்டுவிட்டுப் போனவர்கள்கூட உண்டு. 1978-79ல் ல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எனக்குத் ியும், கோயம்புத்தூர் எஞ்சினியரிங் கல்லூரியில் இடம் கிடைத்த மாணவர் நவர், "Ragging" கொடுமையினால் படிப்பை விட்டு வந்திருக்கிறார். ்வர் அவர் ரயில்வேயில் வேலைக்குப் போயிருக்கிறார். இப்படிப்பட்ட லைமை எல்லா வருடங்களிலும் தொடர்ந்து இருந்து வருகிறது. ஆகவே, gging தொல்லைக்கு உள்ளாகி, கல்லூரிகளிலிருந்து வெளியே போகிற ாணவர்களைத் தனியாக வைத்து, அவர்களுடைய மனநிலைக்கு ஏற்ப ர்கள் படிப்பதற்கு வசதி செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** என்னிடம் இருக்கும் விவரப்படி, க்கிங்' காரணமாக படிப்பை விட்டுச் சென்ற மாணவர்கள் யாரும் இல்லை. ிநெல்வேலி மருத்துவக் கல்லூரியிலே திரு. ராஜன் என்பவர் 'ரேக்கிங்' ்யப்பட்டதாக ஒரு புகார் தந்து, அந்தப் புகாரின் அடிப்படையிலே ஒரு ட்டி அமைத்து விசாரித்து, மூன்று மாணவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப் ிருக்கிறது. ஆனால், அந்த மாணவர் கல்லூரியைவிட்டு நின்றுவிட்ட ் விவரம் இல்லை.

மூக்குக் கண்ணாடி வாங்கும் தொகையை ஈடுசெய்தல்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நிதித்துறையின் (படிகள் 1) 29—7—1978 நாளிட்ட அரசாணை எண் 759-ன்படி 'சி' மற்றும் 'டி' பிரிவு அரசு ஊழியர்களுக்கு மூக்குக் கண்ணாடி வாங்கிக்கொள்ள வழங்கப்பட்டுள்ள ரூ. 40-க்கும் மேற்படாத தொகையினை ஈடு செய்துகொள்ளும் சலுகை, உள்ளாட்சி மன்றங்களில் பணி புரியும் ஆசிரியர்களுக்குப் பொருந்துமா?

(இ) இல்லையெனில், அந்த ஆசிரியர்களுக்கு அச்சலுகை நீட்டிக்கப்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) & (இ) இச்சலுகை 21—9—1979 அன்று ஊ.வ.உ. துறையில் வெளியிடப்பட்ட ஆணை எண். 1475-ல், உள்ளாட்சி மன்றங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கும் (ஆசிரியர்கள் உட்பட) நீட்டிக்கப்பட்டுள்ளது.

திரு. செ. முத்துசாமி: இதோடு இன்னும் சில சலுகைகளும் தந்திருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்களிலும், நகராட்சிகளிலும் நிதி வசதிக்கு உட்பட்டுத் தரலாம் என்று இருப்பதால், பல பஞ்சாயத்து யூனியன்கள், நகராட்சிகள் பணம் இல்லாத நோயாளி பஞ்சாயத்து யூனியன்களாகவும், நகராட்சிகளாகவும் இருப்பதால், ஆசிரியர்களுக்குக் கிடைக்கவில்லை. ஆகவே, இதற்கென்று தனியாக நிதி வழங்க அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இதற்காக தனியாக நிதி ஒதுக்க இயலாது. அந்தந்த ஊராட்சி, நகராட்சி நிதிநிலையையொட்டித்தான் செய்ய முடியும்.

திரு. செ. முத்துசாமி: எல்லாச் சலுகைகளும் நீட்டித்துவிட்ட நிலையில், அரசுப் பள்ளிகளிலே பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுடைய பிள்ளைகள் கல்லூரியிலே படிப்பதற்கு 1000 ரூபாய் வட்டியில்லாத கடனும், பாலிடெக்னிக்கில் படிப்பதற்கு 600 ரூபாயும் என்று சலுகை அளிக்கப்பட்டிருப்பதை உள்ளாட்சித் துறையிலே இருக்கும் ஆசிரியர்களுக்கும் நீட்டிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அதைப்பற்றி யோசிக்கலாம்.



*Transfer of Teachers of Panchayat Unions*

* 67 Q.—THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Local Administration be pleased to state the names of the Panchayat Unions which are given the option in implementing the Government Order regarding transfer of Teachers?

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களின் பணியிட மாற்றங்கள்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

ஆசிரியர்களுடைய பணியிட மாற்றம் சம்பந்தமான அரசு ஆணையைச் செயல்படுத்துவதில் விருப்புரிமை அளிக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களின் பெயர்கள் யாவை?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: எந்த ஒன்றியத்திற்கும் அரசு ஆணையை அமுல் நடத்துவதற்கு விருப்பம் தெரிவிக்கும் நிலை என்கிற கேள்விக்கு இடமில்லை.

திரு. க. இராமமூர்த்தி: இந்த அரசு ஆணையை அமுல்படுத்துவதிலே விருப்பு-வெறுப்பு இருப்பதற்கு வாய்ப்பில்லை என்றாலுங்கூட, இந்த ஆணையை அமுல்படுத்தாமல் இருக்கின்ற ஒன்றியங்கள் இருக்கின்றன. அங்கே இருக்கின்ற அதிகாரிகள் அதற்குத் துணையாக இருப்பதாலும், அரசியல்வாதிகள் குறுக்கீடுகள் காரணமாகவும் இந்த நிலைமைகள் ஏற்படுகின்றன. அதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள்? பல முறை இந்த அவையிலே அங்கே இருக்கின்ற சூழ்நிலையைச் சொன்ன போதும், இந்த நிலைமைகள் தொடர்ந்து நடக்கின்றன. இது ஏன்? அரசாணையிலே கோளாறா அல்லது அதிகாரிகள் அப்படித்தான் இருப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: உறுப்பினர் அவர்கள் எத்தகைய ஆணையைக் குறிப்பிடுகிறார் என்று தெரியவில்லை. ஆசிரியர்கள் மாறுதல் பற்றிக் குறிப்பிடுகிறார் என்றால், ஆசிரியர்களை மாற்றுவது என்பது ஊராட்சி ஒன்றியங்களை மட்டும் சார்ந்தது அல்ல. மாவட்டக் கல்வி அதிகாரி, முதன்மைக் கல்வி அதிகாரி போன்றவர்களுக்கும் தொடர்புடையது அது. அப்படிப்பட்ட ஆணையை நடைமுறைப்படுத்துவதில் சில சிக்கல்கள் இருக்கும். அப்படிப்பட்ட சிக்கல்கள் என்ன என்பதை ஆராய்ந்து பார்க்க அரசு முற்படும்.

(பிற்பகல் 4-40)

**திரு. செ. முத்துசாமி:** ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களின் மாறுதல் குறித்து திட்டவட்டமாக அரசாணையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றிய ஆணையர் மாறுதல் குறித்த குறிப்பை மாவட்டக் கல்வி அதிகாரிக்கு அனுப்பி வைத்து, அது அவரால் அனுமதிக்கப்பட்டுவிட்டால், பிறகு அது தானாக அமுலுக்கு வருகிறது. ஆனால் ஊராட்சி ஒன்றிய ஆணையர் பிறப்பிக்கும் ஆசிரியர் மாறுதல் குறித்து மாவட்டக் கல்வி அதிகாரிகள் அனுமதி மறுக்கப்பட்டால்தான், அத்தகைய ஆணையை எதிர்த்து மாவட்ட வளர்ச்சியதிகாரியிடம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் செல்லலாம் என்று இருக்கிறது. ஆனால் நடைமுறையில் மாவட்டக் கல்வி அதிகாரி அளித்த அனுமதியை திடீர் திடீரென்று மாவட்ட வளர்ச்சி அதிகாரியே 'சஸ்பெண்டு செய்வதும், தற்காலிகமாக நிறுத்தி வைப்பதும் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். இதன் காரணமாக எழுகின்ற சிக்கல்களும் சட்டச் சிக்கல்களாகவே உண்டாகின்றன. ஊராட்சி ஒன்றிய ஆணையர்களைப் பொறுத்தவரையில், மாவட்டக் கல்வி அதிகாரியின் உத்தரவை அப்படியே அமுல்படுத்த வேண்டுமென்று விதி இருந்தும், மாவட்ட வளர்ச்சி அதிகாரியின் உத்தரவின் பேரில் ஆணையர்கள் செயல்படுவதைத் தடுத்து நிறுத்தி, மாவட்டக் கல்வி அதிகாரியின் உத்தரவைக் காரணமில்லாமல் நிறுத்தி வைக்கக்கூடாது என்று அரசே ஒரு குறிப்புரையை மாவட்ட வளர்ச்சி அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்குமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்திருப்பது ஒரு ஒட்டுமொத்தமான புகாராகும். குறிப்பாக எந்த வகையில் சிக்கல் வந்திருக்கிறது என்று தெரிந்தால்தான், அரசாங்கம் அதற்குரிய நிவாரணத்தைச் செய்ய முடியும்.

### *Old Building of Madurai Corporation.*

* 68 Q.—THIRU ARCOT N. VEERASAMI (on behalf of THIRU V. THANGAPANDIAN): Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(*a*) whether it is a fact that the Madurai Corporation has passed a resolution to demolish the old Corporation building belonging to it;

(*b*) if so, the name of the firm whose tender for demolishing the building was accepted; and



(*c*) the amount for which the tender was finalised;

(*d*) whether it is a fact that the Madurai Corporation Councillors had made appeal to the Government in this regard; and

(*e*) if so, the action taken thereon?

### மதுரை மாநகராட்சி பழைய கட்டிடம்

**திரு. ஆற்காடு நா. வீராசாமி, (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்):** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாநகராட்சிக்குச் சொந்தமான பழைய மாநகராட்சிக் கட்டிடத்தை இடிக்க, அம்மன்றம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், கட்டிடத்தை இடிக்க யாருடைய ஒப்பந்தப்புள்ளி (tender) ஏற்றுக்கொள்ளப்பட்டது?

(உ) என்ன தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யப்பட்டது?

(எ) மதுரை மாநகராட்சி உறுப்பினர்கள் இது சம்பந்தமாக அரசுக்கு மேல் முறையீடு செய்திருக்கிறார்கள் என்பது உண்மையா?

(ஐ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** (அ) ஆம்.

(இ) திரு. எம். ஜெர்மான்ஸ் என்பவரின் டெண்டர்.

(உ) ரூ. 3,02,006-க்கு.

(எ) இல்லை.

(ஐ) கேள்விக்கு இடமில்லை.

### *Drivers and Conductors of City Express Buses*

* 69 Q.—PULAVAR PULAMAIPITHAN (on behalf of THIRU E. S. VENKATESAN): Will the Hon. the Minister for Transport be pleased to state:

(*a*) whether it is a fact that drivers and conductors are reluctant to work in the City Express Buses run by Pallavan Transport Corporation;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) if not, the reasons for the drivers and conductors being changed frequently?

[1980 பிப்ரவரி 13

**நகர விரைவுப் பேருந்துகளில் பணிபுரியும் ஓட்டுநர்கள் & நடத்துனர்கள்**

**புலவர் புலமைப்பித்தன் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன் சார்பில்):** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழகத்தால் நடத்தப்படும் நகர விரைவுப் பேருந்துகளில் பணிபுரிய, ஓட்டுநர்களும், நடத்துநர்களும் விருப்பமின்றியுள்ளனர் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணங்கள் யாவை?

(உ) இல்லையெனில், ஓட்டுநர்களும், நடத்துநர்களும் அடிக்கடி மாற்றப்படுவதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** (அ) ஆம்.

(இ) முதலாவதாக நகரப் விரைவுப் பேருந்துகளில் பணிபுரியும் ஓட்டுநர்களும், நடத்துநர்களும் காலையிலும் மாலையிலும் இரு நேரங்களிலும் பணி புரிய நேரிடுகிறது. ஆனால் சாதாரணப் பேருந்துகளில் பணி புரிபவர்கள் காலையிலோ அல்லது மாலையிலோ தொடர்ந்து பணிபுரிந்து பிறகு ஓய்வு எடுத்துக் கொள்கின்றனர். இரண்டாவதாக ஒரு நாளைக்கு ஒரு பேருந்தின் சராசரி வருமானம் ரூ. 300 மட்டுமே என்பதனால் அவர்களின் 'வசூல் போனஸ்' குறைகிறது.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** ஒரு பேருந்துப் போக்குவரத்துக் கழகத்தி லிருந்து வேறொரு பேருந்துப் போக்குவரத்துக் கழகத்திற்கு மாறுதல் கோரி ஓட்டுநர்கள் அல்லது மற்ற ஊழியர்கள் விருப்பம் தெரிவித்தால், அதற்கு அனுமதி வழங்கப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** 'மியூச்சுவல் டிரான்ஸ்பர்' அனுமதிக்கப்படுகிறது.

**திரு. க. இராமமூர்த்தி:** நகர்ப்புறங்களில் பேருந்துகளில் ஓட்டுநர்களாகப் பணியாற்றுபவர்களைத் தொலைதூரப் பேருந்துகளுக்கும், விரைவுப் பேருந்துகளுக்கும் மாற்றுவதன் காரணமாக அடிக்கடி விபத்துக்கள் ஏற்ப இன்றன என்று சில நாட்களுக்கு முன்பு மாண்புமிகு அமைச்சர் அவர்களே இங்கே குறிப்பிட்டார்கள். அத்தகைய நிலையைத் தவிர்க்க போக்குவரத்துத் துறை உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?



1980 பிப்ரவரி 13]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** விரைவுப் பேருந்துகளில் ஓட்டுநர்களாகப் பணியாற்ற மாவட்டப் பேருந்துக் கழகங்களில் பல ஆண்டுகளாகப் பணியாற்றி, சிறந்த ஓட்டுநர் என்ற சான்றிதழைப் பெற்ற ஓட்டுநர்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அதற்குப் பிறகும்கூட அத்தகைய ஓட்டுநர்களுக்கு பிரத்யேகமான பயிற்சி அளிக்கப்பட வேண்டுமென்ற உத்தரவைக்கூட அண்மையில் போட்டதன் காரணமாக, அவர்களுக்குப் பயிற்சி கொடுத்த பிறகுதான் அவர்கள் விரைவுப் பேருந்துகளில் பணியாற்ற அனுமதிக்கப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** ஏற்கெனவே அண்ணா போக்குவரத்துக் கழகம் என்று செயல்பட்டுக் கொண்டிருந்த நிறுவனத்திலிருந்து ஒரு பகுதியை மட்டும் பிரித்தெடுத்து தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் உருவாக்கப்பட்டபோது, அண்ணா போக்குவரத்துக் கழக ஊழியர்களில் சிலர் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திற்கு அனுப்பப்பட்டார்கள். அதன் காரணமாக அவர்களெல்லாம் வடாற்காடு மாவட்டத்திலுள்ள அண்ணா போக்குவரத்துக் கழக டெப்போவிற்குச் செல்ல வேண்டிய நிலை உருவானது. தற்போது அண்ணா போக்குவரத்துக் கழகத்தில் இடங்கள் காலியாகும் போது, தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திற்கு அனுப்பப்பட்ட ஊழியர்களைத் திரும்ப எடுத்துக்கொள்வதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறதா? அப்படி இல்லையென்றால், அதற்குரிய வழிவகைகளை போக்குவரத்துக் கழகம் மேற்கொள்ள முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் துவக்கப்பட்டபோது, பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலிருந்து தான் தொழிலாளர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அண்ணா போக்குவரத்துக் கழகத்திலிருந்து தொழிலாளர்கள் அனுப்பப்படவில்லை. அண்ணா போக்குவரத்துக் கழகத்திலிருந்து சென்ற தொழிலாளர்கள் தங்களின் சொந்த விருப்பத்தின் அடிப்படையில்தான் சென்றிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு ஏதாவது சொன்னால், அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

**திரு. இளம்பரிதி:** விரைவுப் பேருந்துகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் பயணம் செய்வதற்கு என்று 5, 6 என்றுள்ள இருக்கைகளே ஒதுக்கப்படுகின்றன. ஆனால் இப்போது ஏற்படுகிற விபத்துக்களைப் பார்த்தால், அதன் காரணமாக அங்கே உட்காருகிறவர்களுக்குத்தான் ஆபத்தான நிலை உண்டாகும் என்பது தெரிகிறது. இத்தகைய அச்சம் தற்போது இருக்கிற

காரணத்தால், 5, 6 எண்ணுள்ள இருக்கைகளை மாற்றி அவைகளுக்குப் பதில் வேறு தகுந்த பாதுகாப்பான இடங்களைப் பேருந்தில் ஒதுக்கிட அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பேருந்துகளில் 5, 6 எண்ணுள்ள இருக்கைகள்தான் ஆபத்தானவை என்று அல்ல, மிகவும் பாதுகாப்பான இடம் என்று கருதப்பட்டு, அதன் காரணமாகவே அவை சட்டமன்ற உறுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பிட்ட சில விபத்துகளில் எதிர்பாராத விதமாக, வழக்கத்திற்கு மாறாக சிலருக்கு அந்த இடத்தில் காயம் ஏற்பட்டிருக்கிறது. பொதுவாக அந்த இடம் நல்ல இடம் என்றுதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** 5-வது இருக்கையை ஒதுக்கியிருப்பது, சட்டமன்ற உறுப்பினர்கள் அஞ்சாதவர்கள் என்ற கருத்திலா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** ஐந்துக்கும் ஐயத்திற்கும் வேறுபாடு இருக்கிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**புலவர் புலமைப்பித்தன் :** 5, 6 எண்ணுள்ள இருக்கைகள் பெரும்பாலும் பேருந்தின் இடதுபுறத்தில், முன்பகுதியில் இருக்கக்கூடிய இருக்கைகளாக இருப்பதால், கை கால்களை நீட்டி உட்கார வசதியாக இருக்கிறது. பேருந்துகளில் இருக்கைகளின் எண்ணைக் குறிப்பதில் மாற்றம் ஏற்படும் போது, 5, 6 எண்ணுள்ள இருக்கைகளே ஓட்டுநருக்குப் பின்புறத்தில் அமைந்து உட்காருவதற்கே நெருக்கமாக அமைந்து விடுகின்றன. ஆகவே எண்களை எப்படிப் போட்டாலும், பேருந்தின் முன் பகுதியில் இடதுபுறத்தில் இருக்கிற இரண்டு இருக்கைகளை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** இந்த இட ஒதுக்கீடு எண்ணின் அடிப்படையில் செய்யப்படுவதில்லை. குறிப்பிட்ட இடத்தின் அடிப்படையில்தான் ஒதுக்கப்படுகிறது. பேருந்தில் ஏறும்போது, முன்புறத்தில் இடப்புறத்தில் இருக்கும் இருக்கைகள் பாதுகாப்பானவை என்று கருதப்பட்டு ஒதுக்கப்படுகின்றன.

**திரு. செ. முத்துசாமி :** சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு 5 ஆண்டு காலம் பதவி என்பதாலும் மேலவை உறுப்பினர்களுக்கு ஆறு ஆண்டுக்கால பதவி என்பதாலும் பேருந்துகளில் 5, 6 எண்ணிக்கையுள்ள இருக்கைகள் அவர்களுக்காக ஒதுக்கப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன் (சிரிப்பு).





**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** அப்படிப்பட்ட அடிப்படையில் அல்ல.

*Fire Outbreak at Tuticorin Port*

* 70 Q.—THIRU M. SANKARALINGAM
DR. T. R. JANARTHANAM Will the Hon. the Minister for Transport be pleased to state :

(a) the amount of loss sustained in the outbreak of fire at Tuticorin Port during the first week of August, 1979 ; and

(b) the cause of this fire outbreak?

**தூத்துக்குடி துறைமுகத்தில் தீ விபத்து.**

**திரு. ம. சங்கரலிங்கம்**
**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) 1979 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் வாரத்தில் தூத்துக்குடி துறைமுகத்தில் தீ விபத்து ஏற்பட்டதில் உண்டான சேதம் எவ்வளவு?

(இ) இந்த தீ விபத்திற்குக் காரணம் யாது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** (அ) சுமார் ரூபாய் 7.03 லட்சம்.

(இ) கால்சியம் அமோனியம் நைட்ரேட் அடங்கிய சாக்கு மூட்டைகளில் இயற்கையாக ஏற்பட்ட அழுத்தத்தின் காரணமாக தீப்பொறி ஏற்பட்டு தீப்பிடித்திருக்கலாமென்று காவல் துறையினர் இந்திய உணவு கார்ப்பரேஷனிடம் தெரிவித்துள்ளனர். எனினும், இந்தப் பொருளை ரசாயன பரிசோதனைக்கென சென்னைக்கு அனுப்பியுள்ளனர். பரிசோதனையின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** இந்தத் தீ விபத்தில் ஏதேனும் உயிரிழப்பு உண்டா? இத் தீ விபத்தால் ஏற்பட்ட நட்டம் எவ்வளவு? அந்த நட்டத்தை ஈடு செய்ய ஏதாவது வழிமுறைகள் செய்யப்பட்டிருக்கின்றனவா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இந்த விபத்தினால் உயிரிழப்பு ஏதும் ஏற்பட்டதாகத் தகவலில்லை. உயிர்ச் சேதம் ஏற்படவில்லை என்றுதான் நான் கருதுகிறேன். ரூ. 7,03,000 மதிப்புள்ள பொருள்களுக்கு மொத்த இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இதற்கு அவர்கள் இன்ஷ்யூர் செய்திருக்கிறார்களா என்ற குறிப்புகூட இல்லை.

இன்றைக்குத்தான், ஐந்து நாள் கழித்து பதில் வருகிறது. இதை அப்போதே தெரிவித்திருந்தால், வேறு சந்தர்ப்பங்களில் அதைப்பற்றிப் பேசியிருப்பேன். அதை நிறைவேற்ற வேறு முயற்சிகளை எடுத்திருப்பேன். ஆனால் கடைசி நாளன்று அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் கொடுத்த தீர்மானம் ஐந்து நாட்களுக்குப் பரிசீலனை செய்ய வேண்டிய நிலையில் இருந்ததால், பரிசீலனை செய்திருக்கிறார்கள்.

**திரு. சோ. ஆறுமுகம் :** துணைத் தலைவர் அவர்களே, நான்கூட ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். நேற்றைய தினம் தலைவர் அவர்களைக் கேட்டபோது, ஆய்வில் இருப்பதாகச் சொன்னார்கள். அதனுடைய முடிவு என்னவென்று தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அவை கூடுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னதாக அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை குறித்து அறிவிப்புக் கொடுத்தால் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று விதி இருக்கிறது. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையைக் குறித்து அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகத்தான் நாங்கள் முன்னறிவிப்பைக் கொடுக்கிறோம். கடைசி நாள் அன்று எடுத்துக் கொள்ளப்படும் என்று நேற்றைய தினம் தலைவர் அவர்கள் சூசகமாகத் தெரிவித்தார்கள். ஆனால் இன்றைய தினம் அது தள்ளுபடி செய்யப்பட்டதாகச் சொல்கிறார்கள். அதுபற்றி எனக்குத் தகவலே வரவில்லை. மேலவை உறுப்பினர்களாக இருப்பவர்கள் இங்கே ஓய்வு பெறுவதற்காகவா வருகிறோம்? ஆகவே, துணைத் தலைவர் அவர்களே, தாங்கள்தான் தீர்ப்பை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டதாகவும், அதற்கான கடிதத்தை மாண்புமிகு உறுப்பினருக்குக் கொடுத்தபோது, அந்தக் கடிதத்தை வாங்க மறுத்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அனுமதி மறுக்கப்பட்ட கடிதம் கொடுக்கப்பட்டுவிட்ட காரணத்தால், அந்தப் பிரச்சினையைப்பற்றி இங்கே எழுப்ப இயலாது.

**திரு. சோ. ஆறுமுகம் :** துணைத் தலைவர் அவர்களே, எனக்குக் கடிதம் கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்படுவது உண்மைக்கு மாறானது. நேற்றைய தினம் தலைவர் அவர்கள் சொல்லுகிறபோது, செயலாளரைப் பாருங்கள் என்று சொன்னார்கள். கூட்டம் ஆரம்பிப்பதற்கு அரை மணி நேரத்திற்கு





முன் செயலாளர் அறைக்குச் சென்றபோதுதான், அவர் அந்தத் தகவலைச் சொன்னார். அதற்குப் பிறகு அவைக்கு வருகிற நேரத்தில் கடிதத்தைக் கொடுத்ததால், இடையிலே கொடுப்பது முறையல்ல என இங்கே வந்து அமர்ந்துவிட்டேன். காலையிலே அனுமதி மறுக்கப்பட்டிருந்தால், அந்தத் தகவலை காலையிலேயே கொடுத்திருக்க வேண்டும். அப்படிக் கொடுத்திருந்தால், இங்கே பிரச்சினையை எழுப்ப மாட்டேன்.

**திரு. செ. முத்துசாமி :** துணைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டத்தில் அவினாசியில் உள்ள பள்ளிக்கூடத்திலிருந்து வெளியே வரும் போது அடிபட்டு ஆசிரியருக்கு பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டிருப்பதைப்பற்றி ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். அதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. அனுமதி மறுக்க தலைவருக்கு உரிமையிருக்கிறது என்று சொல்கிறீர்கள். ஆசிரியருக்குப் பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டிருக்கிற மிக முக்கியமான இந்தப் பிரச்சினையைப்பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வர முடியாத நிலையில் அதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருப்பதால், நான் என்னுடைய உரிமையை நிலைநாட்ட இந்த அவையிலிருந்து வெளி நடப்புச் செய்கிறேன்.

(பின்னர் உறுப்பினர் வெளிநடப்பு செய்தார்).

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** ஒத்தி வைப்புத் தீர்மானத்தைப்பற்றிய விவரத்தைச் சொல்லிவிட்டார்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** துணைத் தலைவர் அவர்களே, கல்வித் துறையில் 'ஏ' பிரிவு ஊழியர்கள்-ஆசிரியர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தஞ்சையில் பி. வி. செல்வராஜ் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் தாக்கப்பட்டு, கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அங்குப் பள்ளிக்கூடம் எரிக்கப்பட்டு, காவலர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். திருச்சியில் உள்ள காசாமியான் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் இருவர் ஆற்றில் மூழ்கி இறந்திருக்கிறார்கள். குடவாசல் ஒன்றிய அரிசனப் பள்ளி ஆசிரியர், திரு. மருதையன் தாக்கப்பட்டிருக்கிறார். வேதாரண்யம் வட்டம், வாய்மேடு ஊர் மக்கள் பல கோரிக்கைகளை முன் வைத்து உண்ணாவிரதப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மேல் நிலைப் பள்ளி உடற்கல்வி ஆசிரியர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினைகளைக் குறித்து நான் கொடுத்த ஒத்தி

ஆளுநர் உரையின் மீது பேசிய மாண்புமிகு உறுப்பினர் புலவர் புலமைப் பித்தன் அவர்கள், "இந்த மாநிலத்தின் சட்டசபை கலைக்கப்பட வேண்டுமா என்ற கருத்து விவாதிக்கப்பட்டது என்றாலும், அந்தக் கருத்தைக் குறித்து ஒரு பட்டிமன்றமாக மாற்றியிருக்கிறார்கள்" என்று சொல்லி இந்தப் பட்டி மன்றத்திலே தன்னுடைய கருத்தைச் சொல்வதாகச் சொன்னார்கள். ஆளுநர் உரையின்மீது பேசுகிறபோது, நான் உண்மையிலேயே இதைப் பட்டிமன்றமாக கருதாமல், இந்த நாட்டு மக்களுடைய எதிர்காலத்தை உருவாக்குகின்ற, எதிர் காலத்தில் அக்கறை உள்ள, ஜனநாயகத்தை நிலை நிறுத்துகிற, பொறுப் புணர்ச்சியோடு கூடியிருக்கிற அவையின் உறுப்பினர் என்ற நிலையில் அணுக எண்ணுகிறேன். ஒரு பட்டிமன்றமாகக் கருதி, பொழுது போக்குக்காக கருத்துக்களை இங்கே எடுத்து வைக்க விரும்பவில்லை என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இடது கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக உள்ள மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் ஒரு நல்ல கருத்தைச் சொன்னார்கள்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி.

**திரு. ம. சங்கரலிங்கம் :** திருத்தத்திற்கு நன்றி. இந்த நாட்டில் ஜனநாயகம் தழைக்க வேண்டுமானால், பெரும்பான்மையான வாக்குகளை வாங்கினவர்கள்தான் ஆட்சியில் இருக்க வேண்டும். குறைந்த வாக்குகளைப் பெற்ற . . . .

**புலவர் புலமைப்பித்தன் :** துணைத் தலைவர் அவர்களே, பட்டிமன்றம் என்பது பொறுப்பில்லாமல் நடந்துகொள்கிற இடம் அல்ல. சிலப்பதிகாரத்தில், "பட்டிமன்றத்துப் பாங்கறிந்து ஏறுமின்" என்று சொல்லியிருப்பதைப் போல, பாங்கு அறிந்து ஏற வேண்டுமென்ற அடிப்படையிலே சொன்னேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அதற்கு என்ன அர்த்தம் என்று சொன்னால் எல்லோருக்கும் புரியும்.

**புலவர் புலமைப்பித்தன் :** பட்டிமன்றத்திலே கருத்து சொல்ல வருகிற போது, சான்றாண்மை கெடாதவண்ணம் பாங்கு அறிந்து ஏற வேண்டும் என்பது அதனுடைய கருத்து.

**திரு. ம. சங்கரலிங்கம் :** சிலப்பதிகாரத்தில், பாங்கறிந்து சான்றாண்மை கெடாதவாறு பேசினார்கள் என்று இருப்பதாகச் சொன்னார்கள். பட்டி மன்றம் என்று சொன்னால் இருபதாவது நூற்றாண்டில் நாடு முழுவதும் எந்த நிலையில் பட்டிமன்றம் நடக்கிறது என்பதை அதில் கலந்து கொண்டவர்களும், பார்த்தவர்களும் அறிந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் புலவர் புலமைப்பித்தன் அவர்கள் பட்டிமன்றமாகக் கருதுவதாகச் சொன்னால், இரண்டாம் நூற்றாண்டு கொள்கை வழியில் நடக்கிறவர் என்று எண்ணாமல் இருபதாவது நூற்றாண்டு வழியில் நடக்கிறார் என்று நினைப்பார்கள். ஆகவே பட்டிமன்றமாகக் கருதாமல், பொறுப்பு வாய்ந்த சட்டமன்ற உறுப்பினர் என்ற நிலையில், பொறுப்பு வாய்ந்த கட்சியின் பிரதிநிதி என்ற நிலையில், என்னுடைய கருத்துக்களைச் சொல்லுகிறேன் என்ற கருத்தில் சொன்னேனே தவிர, மாண்புமிகு உறுப்பினருடைய மனதைப் புண்படுத்த வேண்டுமென்றோ, பட்டிமன்றத்தின் பாங்கை, சிறப்பைக் குறைக்க வேண்டுமென்றோ எண்ண வில்லை.





மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள், "குறைந்த சதவித வாக்குகளை வாங்கியவர்கள் ஆட்சியில் இருப்பது ஜனநாயகத்திற்கு சரியான தல்ல என்று சொல்லி, இப்போது மத்தியில் இருக்கக்கூடியவர்கள் 42 சதவிதம் வாக்குகளைத்தான் பெற்றிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் எப்படித் தகுதி பெற்றவர்களாக ஆக முடியும்?" என்று கேட்டார்கள். அது நல்ல கருத்து. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள்கூட, "பிரதிநிதித்துவ முறையில் சட்டமன்றங்கள் அமைய வேண்டும்" என்ற கருத்தை எடுத்து வைத்தார்கள். நாங்களும் அதைச் சொல்லியிருக்கிறோம். அதே நேரத்தில், "கேரளாவில் அப்படியில்லை, தேர்தல் நல்ல முறையில் நடந்திருக்கிறது" என்று சொன்னார்கள். குறிப்பாக, "பிரதம அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்கள், பிரதமர் என்ற ஆரவார பலத்தோடு, முழு சக்தியோடு, பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி கண்டோம் என்ற பலத்தோடு சுற்றுப்பயணம் செய்தார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்த அளவு வாக்கு களைப் பெறவில்லை. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்காரர்கள் அதிக வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுவிட்டார்கள்" என்று சொன்னார்.

(பிற்பகல் 5-00)

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை).

நான் இந்தப் புள்ளிவிவரத்தை தங்களுக்கு மாத்திரம் அல்ல, இந்த அவைக்கும் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கேரளத்திலே நடந்த சட்ட மன்றத் தேர்தலில் பாராளுமன்றத் தேர்தல் அல்ல—மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் பெற்ற வாக்கு சதவிகிதம் 18.9 ஆகும். அவர்கள் போட்டியிட்ட இடம் மொத்தம் 50. அவர்கள் வெற்றி பெற்ற இடம் 35. அதே நேரத்திலே காங்கிரஸ் (இ) கேரளாவிலே . . .

(திரு. ஆ. நல்லசிவன் பேச எழுந்தார்).

[திரு. ம. சங்கரலிங்கம்] [1980 பிப்ரவரி 13

நான் என்னுடைய கருத்துக்கள் முழுவதையும் சொல்லி முடித்த பிறகு உறுப்பினர் அவர்கள் கருத்தைச் சொல்லலாம். நான் சொல்வது முழுவதையும் சொல்லி முடித்த பிறகு, அங்கத்தினர் அவர்கள் ஒன்றும் சொல்லத் தேவை இருக்காது என்று சொல்லிக்கொள்கிறேன் . . . .

**திரு. ஆ. நல்லசிவன் :** மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பற்றி மட்டுமல்ல. அதே பாராளுமன்றத் தேர்தலிலே வெற்றி பெற்ற பிறகு, தேசம் பூராவும் ஆளும் உரிமை பெற்ற கட்சி, பாராளுமன்றத் தேர்தலிலே பெரும்பான்மை பெற்ற இந்திரா காந்தியினுடைய கட்சியை, கேரள மக்கள் நிராகரித்திருப்பதாகக் கூறினேனே தவிர, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அணியைப் பற்றி நான் கூறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே. அந்தப் பொருளைப் பற்றி முழுக் கருத்தை அவர் தெரிந்துகொண்டால், இதைப்பற்றி விளக்கம் கேட்கும் தேவை இராது. இப்போது அவர்கள் என்ன சொல்ல நினைக்கின்றாரோ அதைத்தான் இப்போது பதிலாக அவருக்குச் சொல்லப் போகிறேன். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 18.9 சதவிகிதம் வாக்குகள் பெற்று, 35 இடங்களைப் பெற்றிருக்கிறது. காங்கிரஸ் (இ) 18.7 சதவிகிதம் பெற்று, 17 இடங்களைப் பெற்றிருக்கிறது. 0.2 சதவிகிதம் அதிகமாகப் பெற்றதனால்தான் அவர்கள் வெற்றி பெற்றார்கள். காங்கிரஸ் பெற்ற இடம் 17. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பெற்ற இடம் 35. ஆக எந்த நியாயத்தில் அவர்கள் ஆட்சியில் இருக்கிறார்களோ தெரியவில்லை. நான் இந்த அடிப்படைத் தத்துவத்தைப் பற்றித்தான் சொல்ல வந்தேன். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் குறுக்கிட வேண்டாம். I am not yielding அடுத்து, இன்னும்

(திரு. ஆ. நல்லசிவன் எழுந்தார்).

பார்த்தீர்கள் என்றால், கேரள காங்கிரஸ் (எம்) பெற்ற சதவிகிதம் 5,3. அவர்கள் அதனால் பெற்ற இடம் 8 இடங்கள். அதே நேரத்தில் கேரள காங்கிரஸ் ஜோசப் குரூப் பெற்ற சதவிகிதம் 5.3, அவர்கள் பெற்றது 6 இடங்கள். ஒரே சதவிகிதம்தான் இரண்டு கட்சியினரும் பெற்றிருக்கிறார்கள். ஒருவர் 8 இடங்கள். இன்னொருவர் 6 இடங்கள். இன்னும் சொல்லப் போனால். நேஷனல் டெமாகிரட்டிக் பார்ட்டி, காங்கிரஸ் (யு) தலைமையிலே இருந்த குரூப்போடு சேர்ந்து அவர்கள் பெற்ற சதவிகிதம் 3.6. அவர்களுக்குக் கிடைத்தது 3 சீட்டுகள். அதே நேரத்தில் ஆல் இந்தியா முஸ்லீம் லீக், அது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டோடு சேர்ந்து பெற்ற சதவிகிதம் 3.9 அவர்களுக்குக் கிடைத்த இடம் 5. 3.5 சதம் பெற்ற ஒரு கட்சி 5 சீட்டுகள் பெற்றிருக்கிறது. 5.3 சதம்



980 பிப்ரவரி 13] [திரு. ம. சங்கரலிங்கம்]

பெற்ற ஒரு கட்சி 8 சீட்டுகள். 19.9 சதம் பெற்ற ஒரு கட்சி 35 இடம் பெற்றிருக்கிறது. லெப்ட் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அணியிலுள்ள ...த்தனை கட்சிகளும் சேர்ந்து குறைந்த சதவிகிதம் பெற்று மிகக் கூடுதலான ...ட்டுகள் பெற்றிருக்கின்றன. காங்கிரஸ் அணியிலே இருந்தவர்கள் 18.7 சதவிகிதம் பெற்று 17 சீட்டுகள் பெற்றிருக்கிறார்கள். 5.3 சதவிகிதம் பெற்றவர்கள். 6 சீட்டுகள் பெற்றிருக்கிறார்கள். 3.6 சதவிதம் பெற்றவர்கள் ... சீட்டுகள். இப்படி இந்த 3 கட்சிக்குள்ளே அவர்கள் 50-க்கு மேல் ...டு, இவர்கள் 25 சீட்டுகளிலே இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சதவீத ...க்குகள் பெற்று, இப்போது இருக்கின்ற நிலைமையிலே அவர்கள் சொல்...ற தத்துவப்படி, கேரளாவிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஆட்சியிலே இருக்க ...டியாது. இப்போது இருக்கக்கூடிய இந்திரா காந்தி காங்கிரஸ் 42 சதம் பெற்று மத்தியிலே ஆட்சி அமைக்க முடிகிறதே. அதே சாதகமான சூழ்நிலை ...ல்தான் கேரளாவிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக் கூட்டணி பதவி...லே இருக்கிறது. இன்னும் அந்தத் தத்துவத்தைப்பற்றிச் சொல்கிறேன்.

(திரு. ஆ. நல்லசிவன் எழுந்தார்).

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்...க்குச் சொல்லிக்கொள்கிறேன். தத்துவம் சம்பந்தப்பட்ட சொற்பொழிவு ...ான். அதனாலே பொறுமையாகக் கேட்டுக்கொள்ள வேண்டும். அவர்கள் ...தாவது தவறாக, பாதிக்கின்ற அளவுக்குச் சொல்லும்போதுதான் எடுத்துச் ...ால்லலாம்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைமையிலே 7 கட்சி...ள் சேர்ந்த கூட்டமைப்பில், எல்லாக் கட்சிகளும் சேர்ந்து பெற்ற வாக்கு ...தவிகிதம் 49.7. காங்கிரஸ் தலைமையிலே 8 கட்சிகள் கூட்டமைத்து அது ...ற்ற வாக்கு சதவிகிதம் 51.3. ஆகவே இப்படித்தான் அங்கேயும் அமைந்...ருக்கிறது. அது மொத்தத்திலே ஏற்படுகின்ற குறையே தவிர வேறல்ல ...க்குச் சாதகமாக அமையும்போது பேசுகிறோம். அதுவே பாதகமாக வருகிற ...து வாயை மூடிக்கொண்டிருக்கின்ற நிலைமை இருக்கிறது. இப்படிப்...பட்ட நிலைமைகளை மனதில் கொண்டு, நாம் இந்தப் பிரச்சினைகளை அணுக ...வண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டுத் தேர்தலிலே அ.தி.மு.க. தலைமையிலே இருந்த அணி ...ற்றது 40.15 சதவிகிதம் வாக்குகள். மொத்த வாக்குகள் 73,92,655 என்று ...ருக்கிறது. அதே சமயத்தில் திராவிட முன்னேற்றக் கழக அணியின் கிழ

இருந்த கூட்டணி பெற்றது 55 சதவிகித வாக்குகள். மொத்த வாக் 102,90,515. இதையெல்லாம் பின்னணியாக வைத்துக்கொண்டு நம்மு தத்துவங்களை நாம் பேசுகிறபோது, நம்முடைய கருத்தை எடுத்து எ தற்கு சாதகமாக இருக்கும் என்று சொன்னேனே தவிர, மாண்புமிகு அ தினர் திரு. நல்லசிவன் அவர்கள் மனதைப் புண்படுத்த அல்ல என்பதைத் வித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** நானும் அந்தக் கருத்தைத்தான் செ விரும்புகிறேன். இந்த முறையிலே கோளாறு இருக்கிறது. இந்தப் நிதித்துவ முறையில், குறைந்த சதவிகித வாக்குகள் பெற்றவர்கள் சீட்டுகள் பெறுகிறார்கள். எங்களுடைய கட்சி விகிதாச்சாரப் பிரதி துவம் வேண்டுமென்பதைத்தான் வலியுறுத்தி வருகிறது. நீங்கள் ஆட் வருகின்ற நேரத்திலே, இதையே மனதில் வைத்துக்கொண்டு பஞ்சாய முனிசிபாலிட்டி தேர்தல்களில் செய்யலாம். இப்போது அதைச் செய்ய விட்டுவிட்டார்கள். ஒருகால் உங்கள் ஆட்சி பொறுப்பிலே இருக் நிலைமை வந்தால், பஞ்சாயத்து, முனிசிபாலிட்டி தேர்தலில் இந்த விகி சார பிரதிநிதித்துவ முறையைக் கொண்டு வருவார்களா என்பதுபற்றி அ விரும்புகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தி திரு. நல்லசிவன் அவர்கள் விகிதாச்சார பிரதிநிதித்துவம் வேண்டும் என்கி கள். இந்தத் தமிழக அரசு கலைக்கப்பட்டு விடுமென்று உணர்ந்து சொன் கள் என்று நினைக்கிறேன். அதை நான் பாராட்டுகிறேன். இதைத் முதன் முதலிலிருந்து சொல்லிக்கொண்டிருப்பவர்கள் நாங்கள். இப்போ நீங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். எத்தவிதமான மாற்றமும் தே யில்லை என்று இப்போதிருக்கின்ற ஆட்சியாளர்கள் இருக்கிறார்களா ? அ களுக்குப் பக்கபலமாக இருக்கக்கூடிய ஒரு கட்சியாக இருக்கிறீர்கள். அ களிடம் சொன்னால் செய்ய மாட்டார்களென்று கருதுகிறீர்களா ? நாங் வரும்போது கவனிக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு, அடுத்து சொ விழைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆனால் அது மாநிலத்தின் கைவ இல்லை என்று நினைக்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இப்போ இருப்பவர்கள் எத்தனை நாட்கள் இருப்பார்கள் என்று எண்ணிச் சொல் றார்களோ என்னவோ ? இப்போது நான் சொல்ல முடியாவிட்டாலும், உ உறுதி சொல்ல முடியாவிட்டாலும், பார்க்கிறோம் என்று சொல்கிறேன்.



தலைவர் அவர்களே, ஆளும் கட்சியினர் வெளியிலே இருந்துகொண்டு அரிய கருத்துக்களைச் சொல்லிவிடுகிறார்கள். அவர்கள் இந்த ஜனநாயகத்திலே எல்லோரும் பாராட்டுகின்ற ஒரு தத்துவத்தைச் சொன்னார்கள். அது மட்டு மல்ல, அவர்கள் அதை நடத்தவும் போகிறார்கள் என்று நான் நினைக் கிறேன்.

(பிற்பகல் 5.10)

அந்தத் தத்துவம் என்னவென்றால் "Right to recall" என்பதுதான். உயர்ந்த தத்துவமாக அதைச் சொன்னார்கள். அப்போது திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தது. இப்போதைய ஆளுங் கட்சியின் தலைவர், நமது மாண்புமிகு முதலமைச்சரவர்கள், அப்போது ஒவ்வொரு இடத்திலும் பேசும்போது, ஒருவரைத் தேர்ந்தெடுத்துவிட்டால், அவர் 5 ஆண்டுகளுக்கு சட்டமன்றத்தில் இருக்க வேண்டுமென்று குத்தகை கிடையாது, மக்கள் அவரைத் திரும்ப அழைக்க உரிமையுண்டு என்று சொல்லி, அந்தக் கொள்கையை அமுல்படுத்துகிற நிலையிலே அன்று ஆட்சியில் இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினரைப் பார்த்து, வெளியே வாருங்கள் என்ற கூறோடுதான் அந்தக் கட்சியைத் தோற்றுவித்தார்கள். அந்த இயக்கத்தைத் தான், இந்த மாதிரி ஆட்சிக்கு வருவதற்கு முன் நடத்தினார்கள். அதைப்பற்றி விளக்கமாகச் சொல்லத் தேவையில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் திண்டுக்கல் தேர்தலில் தோல்வியுற்றவுடன், அதாவது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் திண்டுக்கல்லில் பெற்ற வெற்றிக்குப் பிறகு, இந்தக் கருத்தை அமுல்படுத்த ஆரம்பித்தார்கள். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரின் வீட்டிற்கு முன்னும் அராஜகம் செய்தார்கள். ஆயிரக் கணக்கான ஊழியர்கள், சட்டமன்ற உறுப்பினர் மனைவி மக்களோடு வீட்டில் இருக்கும்போது, அவர் வீட்டிற்குப் போய் 'உனக்கு மானம் இருக்கிறதா, வெளியே வா' என்று கூக்குரலிட்ட இயக்கம் இது. அதன் தலைவர், அந்த ஜனநாயகத் தத்துவத்தின் அடிப்படை யிலே சொன்னார்கள். 5 ஆண்டுகள் ஆள மக்கள் அனுமதிக்கிறார்கள். 5 ஆண்டுகளுக்குப் பிறகு மக்கள், இவர்கள் மீண்டும் ஆள வேண்டுமா, இல்லை எதிர்க் கட்சி வரிசையில் இருக்க வேண்டுமா என்று மாற்றும் தத்துவத்தை நினைத்த நேரத்தில் பின்வலிக்கச் செய்யும் முறையைக் கண்டுபிடித்திருக் கிறோமென்று சொல்லி, அன்று 170 எம்.எல்.ஏ.க்களின், வீட்டிற்கும் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலிருந்து கூக்குரல் இட்டுக்கொண்டு சென்றார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலே திரு. ராஜா பிள்ளை திராவிட முன்னேற்றக் கழக எம்.எல்.ஏ.வாக இருந்தார். நீங்கள் போட்ட கூச்சல் காரணமாக அவர் உங்களிடமே வந்தார். அதற்குப் பிறகு அவரை ராஜினாமா பண்ணச் சொல்லவில்லை. அவர் திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது கூக்குரல் போட்டு, அதைக் கண்டு அவருடைய

மனைவி மக்கள் அந்நி, "அவர்கள் பக்கமே போய்விடுங்கள்" என்று அவர்கள் சொல்லி, அவர் உங்கள் பக்கம் வந்துவிட்டார். எனவே இனிமேல் 'ரிகால்' கிடையாது, எங்கள் பக்கம் வந்தால் கிடையாது, நீங்கள் இங்கேயே இனிமேல் இருக்கலாமென்று சொன்னார்கள். ஒருவேளை, மற்றவர்களை, எதிரிகளை வெளியேற்றச் சொல்கிற தத்துவமோ இது என்று நான் நினைத்தது உண்டு. அப்படியில்லாமல் 8—12—1979-ல் ஆளுங் கட்சியினர் தேர்தல் அறிக்கை வெளியிட்டார்கள், அதில் இதை முக்கியமான கொள்கையாகச் சொன்னார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மக்கள் நம்பிக்கையை இழக்கும்போது, அவர்களைத் திரும்ப அழைக்கும் உரிமை, தேர்ந்தெடுத்த தொகுதி மக்களுக்கு வேண்டுமென்று சொல்லி, அதை நாடு முழுவதும் பரப்பி, அவர்கள் சொன்ன போது, நான் ஒன்றை நினைத்தேன். என்னவென்றால், நாம் எல்லோரும் பல புத்தகங்களைப் படித்து, பல அரசியல் சட்ட நிபுணர்கள் எழுதியதைப் படித்து என்ன தெரிந்துகொண்டு அல்லது அறிந்து கொண்டிருக்கிறோமோ அதையெல்லாம் இந்த இயக்கத்தின் தலைவர், மாண்புமிகு முதலமைச்சரவர்கள், இயல்பாகப்—கிப்டட் டேலன்ட்—பெற்றுத்தான் சொல்கிறார்களென்று நான் நினைத்தேன். அதற்குக் காரணம் என்னவென்றால், அதையெல்லாம் நாம் படிக்கிறோம். இந்த நேரத்தில் ஒரு சம்பவத்தை நினைவிற்குக் கொண்டு வருகிறேன். நம்முடைய நாட்டில் நடந்த அரசியல் சம்பவம்தான் அது. இந்தியாவைப் பொறுத்தவரையில் நடந்த பெரிய சம்பவம். அதைப் பின்னணியில் வைத்துக் கொண்டு இந்தத் தத்துவத்தை ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜனதா அரசு 1977 மார்ச் கடைசி வாரத்தில் பொறுப்பேற்றது. ஏப்ரல் 18 ஆம் நாள் அன்றைய உள்துறை அமைச்சர்—உங்களுடைய கூட்டு மந்திரி சபையின் பிரதமர், நீங்கள் பிரதமராக இருக்கத் தகுதியுள்ளவர் என்று கருதி, அவருடைய மந்திரி சபையில் உறுப்பினராகச் சேர்ந்து, அந்த மந்திரி சபையின் செயல்கள் ஒவ்வொன்றுக்கும் பங்குதாரர்களாக இருந்தீர்களே, அந்தக் கூட்டு மந்திரி சபையின் பிரதமர்—திரு. சரண்சிங் அவர்கள்—இருந்தபோது, 9 மாநிலங்களுக்குக் கடிதம் எழுதினார். பஞ்சாப், அரியானா, இமாசலப் பிரதேசம், உத்திரப் பிரதேசம், பீஹார், மேற்கு வங்கம், மத்தியப் பிரதேசம், ஒரிஸ்ஸா, ராஜஸ்தான் ஆகிய 9 மாநில முதலமைச்சர்களுக்குக் கடிதம் எழுதினார். அதில் முக்கியமாகச் சொன்னது, மாநிலச் சட்ட சபைகளைக் கலைத்து, புதிய தேர்தல் நடத்தி, மக்களது ஆணை (Mandate) பெற்று, மக்களது அரசு அமைய வழி வகை செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அதற்குப் பல காரணங்கள் சொன்னார்கள். அதில் முக்கியமான இரண்டு காரணங்களைச் சொல்கிறேன். அது என்னுடைய கருத்தல்ல, மத்தியப் பிரதமருடைய கருத்து. "அரசியல் அமைப்புச் சட்டத்தில் புதைந்





திருக்கிற ஜனநாயகத்தின் முக்கிய அம்சமாவது, ஒரு அரசு மக்களது நம்பிக்கைக்குரியதாக இருப்பதுவரைதான் ஆட்சியில் இருக்கலாமே தவிர, மாநில சட்டசபையின் நம்பிக்கை மாத்திரம் போதுமானதல்ல." இது என்னுடைய கருத்தல்ல. உங்களுடைய பிரதமர் கருத்து. ஆங்கிலத்தில் எழுதியிருப்பதைப் படிக்கிறேன்.

"The basic democratic imperative underlying the Constitution was that a Government could remain in office only so long as it had and enjoyed the confidence of the people and not only that it merely enjoyed the confidence of the State Assembly."

என்று சொன்னார்கள். இது முதல் காரணம். இரண்டாவது காரணம், "இம் மாநிலங்களில் நிர்வாகத்தில் நிலையற்ற தன்மையும், நிர்வாகத்தில் எல்லா மட்டத்திலும் தடுமாற்றமும், தன்னம்பிக்கையற்ற தடுமாற்றமும் அதன் காரணமாக நிர்வாகத் தோல்வியும் அடங்கிய சூழ்நிலை உருவாகிவிட்டது" என்பதாகும்.

"The second reason for seeking the dissolution of the State Assemblies was that a climate of uncertainty and a diffidence at all levels of administration had come into existence in those States."

என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படிச் சொன்னவுடனே 6 மாநிலங்கள் அவருடைய கடிதத்தையே ஒரு இன்ஸ்ட்ருமெண்டாக, காரணமாகக் காட்டி உச்ச நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்கள். அதுமட்டுமல்ல. பஞ்சாப் மாநிலத்திலுள்ள 3 எம்.எல்.ஏ. க்கள் நாங்கள் 5 வருடங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறோம். அரசியலமைப்புச் சட்டம் 32வது பிரிவுப் படியும், 19(1) (எஃப்) படியும் எங்களுக்குத் தந்துள்ள அடிப்படை உரிமைப்படி 5 வருடமும் சட்டமன்ற உறுப்பினராக இருக்க உரிமை இருக்கிறது, சட்டமன்றத்தைக் கலைத்தாலும் எங்களுக்குச் சம்பளம் தர வேண்டுமென்று வழக்குப் பதிவு செய்தார்கள். அந்த 9 வழக்குகளையும் உச்ச நீதி மன்றம் விசாரித்தது. உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. எம். எச். பெக் தலைமையில், 7 நீதிபதிகள் அடங்கிய முழுமை பெற்ற நீதி மன்றம்—ஃபுல் பெஞ்ச்—விசாரித்தது. விசாரித்து, ஏப்ரல் 29 ஆம் தேதி ஏகமனதாகத் தீர்ப்பு வழங்கினார்கள். ஒருவருக்கும் difference of opinion இல்லை. அதனுடைய முழு விவரமும் மே மாதம் 6 ஆம் தேதி கொடுத்தார்கள். அதில் ஒவ்வொரு நீதிபதியும் ஒரு காரணத்தைச் சொல்லியிருக்கிறார். அதை எடுத்துச் சொல்வதானால் நேரம் பிடிக்கும். 2 நீதிபதிகள் தெரிவித்ததை மட்டும் சொல்கிறேன். நீதிபதி திரு. பகவதி அவர்கள் என்ன சொல்கிறார் என்பதைச் சொல்கிறேன். "பாராளுமன்றத் தேர்தலில் இந்த மாநிலங்களில் ஆளுங் கட்சி ஒரு சாதாரணத் தோல்வியை சந்தித்தது பற்றிய வழக்கல்ல. ஆளுங் கட்சியின்

அபேட்சகர்கள் மொத்தமாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள். இந்த நாட்டின் வரலாற்றிலேயே இதுபோன்ற தெளிவான, ஐயத்திற்கு இடமேயில்லாத மக்கள் தீர்ப்பு, ஆளுங் கட்சிக்கு எதிராக மக்களின் சக்தி வாய்ந்த நம்பிக்கையில்லாத வாக்குகள் பதிவானது கிடையாது. ஆளும் கட்சி இத்தகைய படுதோல்வி அடைந்தது, அம்மாநில மக்கள், அக்கட்சி அரசின் ஆளும் கொள்கைக்கு எதிராக அளித்த தெளிவான தீர்ப்பாகும். அரசுக்கு எதிராக மக்கள் இருக்கிறார்கள் என்பதற்குத் தெளிவான அடையாளமாகும், மக்களது நல்லெண்ணத்தையும், ஆதரவையும் பெறாத ஒரு அரசு, ஜனநாயக அமைப்பில், அரசியல் சட்டப்படி திறமையாகவும், சக்தி வாய்ந்ததாகவும் செயல்பட முடியாது என்பது விவாதமோ, ஆராய்ச்சியோ இல்லாமல் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகும்" என்று தீர்ப்பு அளித்திருக்கிறார்கள்.

"Never in the history of this country has such a clear and unequivocal veridict been given by the people. Never was a more massive vote of no-confidence in the ruling Party when there is such a crushing defeat suffered by the ruling Party and the people have expressed themselves categorically against the policies and it is symptomatic of complete alienation between the Government and the people. It is axiomatic that no Government can function efficiently and effectively in accordance with the Constitution in a democratic set-up unless it enjoys the goodwill and support of the people."

(பிற்பகல் 5.20)

என்று ஆங்கிலத்திலும் இருக்கிறது. இது அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் இடையே ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடு மாத்திரமல்ல மக்கள் அரசாங்கத்தைப் புறக்கணித்து விட்டார்கள் என்பதைத்தான் தெளிவாக்குகிறது. மக்களது நல்லெண்ணத்தையும், ஆதரவையும் பெறாத ஒரு அரசு, ஜனநாயக அமைப்பில், அரசியல் சட்டப்படி திறமையாகவும், சக்தி வாய்ந்ததாகவும், செயல்பட முடியாது என்பது விவாதமோ, ஆராய்ச்சியோ இல்லாமல் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகும். இது ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்கப்பட வேண்டிய ஒன்றல்ல. இது ஒரு சந்தர்ப்பம் வந்த போது உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின் மூலம் கூறப்பட்டதாகும். ஏப்ரல் 29 ஆம் தேதி உச்ச நீதிமன்றம் தன்னுடைய தீர்ப்பை வழங்கியது. அதே நாள் இரவு 8 மணிக்கு ஒன்பது மாநிலச் சட்ட சபைகளை, அரசியலமைப்புச் சட்டம் 356 பிரிவுப்படி, கலைக்க தனித் தனி ஒன்பது ஆணைகள் குடியரசுத் தலைவர் பொறுப்பிலிருந்த மாண்புமிகு திரு. பி. டி. ஜாட்டியிடம் ஒப்படைக்கப்பட்டது. 24 மணி நேரம் கழித்து அவர் கையெழுத்திட்டார். ஏப்ரல் 30 ஆம் நாள் ஒன்பது மாநிலச் சட்டசபைகளும் கலைக்கப்பட்டன. அப்போது நீதிபதி சொன்னதை யாரெல்லாம் ஆதரித்தார்கள் என்பதையும் நான் சொல்ல



விரும்புகிறேன். ஜனதா கட்சி, ஜனநாயகக் காங்கிரஸ், அகாலி தளம், இடது கம்யூனிஸ்ட் கட்சி அதாவது மார்க்சிஸ்ட் ஆகிய எல்லா கட்சிகளின் தலைவர்களும் அதை ஆதரித்தார்கள். அவர்கள் கொடுத்த அறிக்கைகள்கூட இருக்கின்றன. வேண்டுமானால் காட்டுகிறேன். அதுமட்டுமல்ல, கட்சி சார்பில்லாத தேசியத் தலைவர்களாகிய ஆச்சாரிய ஜே. பி. கிருபளானி, லோகநாயக் ஜெயபிரகாஷ் நாராயணன், விஜயலட்சுமி பண்டிட் ஆகியோர்களும் மற்றும் பத்திரிகைகளில் பெரும்பாலான பத்திரிகைகளும் இந்நடவடிக்கையை ஆதரித்தோடு பாராட்டின.

ஜூன் மாதம் 10, 12, 14 ஆகிய தேதிகளில் தேர்தல் நடைபெற்றது. ஏழு மாநிலங்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பெற்று, சட்ட சபைகளைக் கலைத்த ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தது. பஞ்சாபில் கலைப்பதை ஆதரித்த அகாலிதளமும், ஜனதாவும் ஆட்சி அமைத்தது. மேற்கு வங்கத்தில் கலைப்பதை ஆதரித்த இடது கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி அமைத்தது. கலைப்பதற்கு என்ன காரணங்கள் மத்திய அரசால் சொல்லப்பட்டதோ, அது உண்மையென மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. நீதிபதிகள் ஒருமித்த கருத்து மக்களது ஒருமித்த தீர்ப்பால், எழுதப்படாத அரசியலமைப்புச் சட்டமாக்கப்பட்டது. பாராளுமன்றத் தேர்தலில் வாக்களித்த அதே முறையில்தான் மாநில சட்டசபைத் தேர்தலிலும் மக்கள் வாக்களித்தனர். இது கொஞ்ச நாட்களுக்கு முன்பு நமது நாட்டில் நடைபெற்ற ஒன்று. நமக்கெல்லாம் தெரிந்த ஒன்று. இருந்தாலும் மேல் நாட்டு அரசியலமைப்புச் சட்ட நிபுணர்கள் இதுபற்றி எப்படி எப்படி எல்லாம் சொல்லியிருக்கிறார்கள் என்பதை நான் ஆராய்ந்து பார்த்தேன். உலகப் புகழ்பெற்ற அரசியலமைப்புச் சட்ட நிபுணர்கள், பல்வேறு இடங்களில், பல்வேறு சந்தர்ப்பங்களில் இதையேதான் வற்புறுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

ஜனநாயக அமைப்பில் பாராளுமன்றத்துக்குப் பொறுப்பு வாய்ந்த அரசு மக்கள் செல்வாக்கை இழந்துவிட்டால், இழந்துவிட்டதாக இறையாண்மையுள்ள அந்நாட்டுத் தலைமை (Sovereign Head) கருதுவதானால், பாராளுமன்றத்தைக் கலைத்து, பொதுத் தேர்தல் நடத்துவதுதான் ஜனநாயக முறை என்று உலகப் புகழ்பெற்ற அரசியலமைப்புச் சட்ட நிபுணர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள். இந்தியாவில் சாவரின் ஹெட் என்றால் குடியரசுத் தலைவர். பாராளுமன்றத்திற்குப் பொறுப்பு வாய்ந்த அரசு மக்கள் செல்வாக்கை இழந்துவிட்டால், பாராளுமன்றத்தை சாவரின் ஹெட் கலைத்து, பொதுத் தேர்தல் நடத்த உத்தரவிடுவதுதான் முறை என்று உலகப் புகழ்பெற்ற அரசியலமைப்பு சட்ட நிபுணர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள். ஒவ்வொரு இடத்திலும் இதைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நிறைய இருக்கின்றன. ஆனால் நேரம் போதாது. ஆகவே ஒன்றிரண்டை மாத்திரம் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1980 பிப்ரவரி 13

அதுபோல் சர் வில்லியம் ஆன்சன் என்ற ஆங்கில அரசியலமைப்புச் சட்ட நிபுணர் "பாராளுமன்றமும், மக்களும் மாறுபட்ட கருத்துடையவர்களாக இருக்கிறார்கள் என்று கருதுவதற்கு நியாயமான காரணங்கள் இருந்தால், இங்கிலாந்து மன்னர் பாராளுமன்றத்தைக் கலைப்பதை வற்புறுத்தலாம்" என்று கருத்து தெரிவித்திருக்கிறார்.

"Where the Crown could force dissolution of Parliament :— Whenever there was reason to suppose that a House of Commens and the majority of the electorate are at variance."

அடுத்து, ஏ.சி. டைசிராய் என்ற ஆங்கில அரசியலமைப்புச் சட்ட நிபுணர் தனது பிரிட்டிஷ் அரசியலமைப்புச் சட்டம், அதாவது British Constitution Law" என்ற நூலில் இதைப்பற்றி மிகவும் தெளிவுபடுத்தியுள்ளார் "பாராளுமன்றத்தின் கருத்து மக்களது கருத்துக்கு மாறுபட்டது என்று சூழ்நிலைகளாலும், சம்பவங்களாலும் மன்னர் கருதுவதானால், பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் பெற்ற அமைச்சரவையை வெளியேற்ற டிஸ்மிஸ் செய்ய மன்னருக்கு உரிமையுண்டு. அரசியலமைப்புச் சட்டப்படி ஒரு பாராளுமன்றம் அதிகாரத்தில் இருப்பதற்கும், நிலைத்திருப்பதற்கும் உரிமையிழந்து விட்டது என்று கருதுவதற்குரிய காரணம் பாராளுமன்றத்தின் கருத்து, மக்களது கருத்துக்கு மாறுபட்டது என்று நியாயமாகக் கருதுவதற்கு உரிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகும். சட்ட ரீதியான இறையாண்மையிலிருந்து, அரசியல் இறையாண்மையின் வேண்டுகோள்தான் கலைப்பதன் சாராம்சமாகும்" என்று ஆங்கில அரசியலமைப்புச் சட்ட நிபுணர் ஏ. சி. டைசிராய் கூறியுள்ளார்.

A. C. Dicay in his well-known book on British Constitutional Law says as follows—

"These are certainly features of circumstances under which the Crown has a right to dismiss a Ministry who command a Parliamentary majority and to dissolve the Parliament by which the Ministry is supported. The reason why a House could, in accordance with the Constitution, be deprived of power and of existence was that an occasion had arisen on which there was fair reason to suppose that the opinion of the House was not the opinion of the electorate. A dissolution was, in its essence, an appeal from the legal to the political sovereign."

இதேபோன்றே, சர் ஏ. பி. கெய்த் என்ற அரசியலமைப்புச் சட்ட நிபுணரும் "அரசர், மக்களின் முடிவுக்கு விடுவதுதான் சரியான வழி என்று கருதுவாரானால், அரசை வெளியேற்றி, பாராளுமன்றத்தைக் கலைக்கலாம் என்று கூறியுள்ளார்.



1980 பிப்ரவரி 13] [திரு. ம. சங்கரலிங்கம்]

"Sir A. B. Keith held the view that the Crown might force dissolution if necessary by dismissing the Government if it thought it necessary for giving the will of the people its just course."

இதை அவர் சொல்லி வைத்தது. இப்படி நிறைய சொல்லிக்கொண்டே போகலாம். மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் போதும் என்று சொல்கிறார்கள். ஆகவே இன்னும் இதுபற்றி ஒருசில விஷயங்களை மட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன்.

டாக்டர் யூஜின் ஏ. போர்சே என்ற கனடிய அரசியல் அமைப்புச் சட்ட நிபுணர் தனது "பிரிட்டிஷ் காமென்வெல்த் நாடுகளில் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்குரிய அதிகாரம்" (The Royal Power of dissolution of Parliament in the British Commonwealth) என்ற நூலில் மேற்கூறிய ஆன்சன், கெய்த், டைசி முதலானவர்கள் கருத்தினை வலுவாக ஆதரித்து எழுதியுள்ளார்கள், ஒப்புக்கொண்டுள்ளார்கள்.

எனவே இத்தகைய கருத்துகளுக்கு முன்னால் நான் இவற்றையெல்லாம் படித்த பிறகுதான் ஒரு மாபெரும் எல்லையில்லா மகிழ்ச்சியும், நம்பிக்கையும் நம்முடைய முதலமைச்சரிடம் எனக்கு ஏற்பட்டது. பெரிய பெரிய அரசியலமைப்புச் சட்ட நிபுணர்கள் எல்லாம் ஆராய்ந்து சொன்ன கருத்துக்களை நம்முடைய கட்சியின் லட்சியமாக வைத்திருக்கிறார். மக்கள் நம்பிக்கையை இழந்த பிறகு, விட்டுக்கு விடு போய், ஊர்வலமாகப் போய் இப்போது ஆதரவு தருகிறார்கள். கொயர்பின் என்று கூடச் சொல்லலாம். பெண்கள் எல்லாம் வருத்தப்படுகிறார்கள். அரசியல் அமைப்புச் சட்டத்தில் உள்ள நுணுக்கங்களை எல்லாம் படித்து, பல்கலைக் கழகங்களில் எல்லாம் படித்த அரசியலமைப்பு நிபுணர்கள் வெளியிட்ட கருத்துக்களை நம்முடைய முதலமைச்சர் மிக அழகாக 1973 ஆம் ஆண்டிலேயே சொன்னார்கள். திண்டுக்கல் தேர்தலில் அவர்களுக்கு வெற்றி என்று சொன்ன உடனேயே ராஜினாமா செய்யச் சொன்னார்கள். அன்று நீங்கள் சொன்னதை நான் இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். "தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை அவர்கள் பதவிக் காலம் முடியும் முன்னரே மக்கள் விரும்பினால் திரும்பி அழைக்கலாம்" என்று சொன்னீர்கள். ஆனால் அதை எவ்வளவு ஜாம் நாட்டிலே அமுல்படுத்திக்கொண்டிருக்கிறீர்கள் என்பதையும் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இவர்களுக்கெல்லாம் நாளும் ஜனவரி 7 ஆம்

(பிற்பகல் 5-30)

தேதி வரை மதிப்பு அளித்தேன். ஜனவரி 7 ஆம் தேதி, அவர்கள் சொன்ன அந்த உயர்ந்த தத்துவத்தைச் செயல்படுத்திக் காட்டுவதற்கு ஒரு நல்ல வாய்ப்பு அவர்களுக்கு வந்தது. அப்படித்தான் செய்வார்கள், அதிலே என்ன

அதுபோல் சர் வில்லியம் ஆன்சன் என்ற ஆங்கில அரசியலமைப்புச் சட்ட நிபுணர் "பாராளுமன்றமும், மக்களும் மாறுபட்ட கருத்துடையவர்களாக இருக்கிறார்கள் என்று கருதுவதற்கு நியாயமான காரணங்கள் இருந்தால், இங்கிலாந்து மன்னர் பாராளுமன்றத்தைக் கலைப்பதை வற்புறுத்தலாம்" என்று கருத்து தெரிவித்திருக்கிறார்.

" Where the Crown could force dissolution of Parliament :— Whenever there was reason to suppose that a House of Commens and the majority of the electorate are at variance. "

அடுத்து, ஏ.சி. டைசிராய் என்ற ஆங்கில அரசியலமைப்புச் சட்ட நிபுணர் தனது பிரிட்டிஷ் அரசியலமைப்புச் சட்டம், அதாவது British Constitution Law " என்ற நூலில் இதைப்பற்றி மிகவும் தெளிவுபடுத்தியுள்ளார். "பாராளுமன்றத்தின் கருத்து மக்களது கருத்துக்கு மாறுபட்டது என்று சூழ்நிலைகளாலும், சம்பவங்களாலும் மன்னர் கருதுவதானால், பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் பெற்ற அமைச்சரவையை வெளியேற்ற, டிஸ்மிஸ் செய்ய மன்னருக்கு உரிமையுண்டு. அரசியலமைப்புச் சட்டப்படி ஒரு பாராளுமன்றம் அதிகாரத்தில் இருப்பதற்கும், நிலைத்திருப்பதற்கும் உரிமையிழந்து விட்டது என்று கருதுவதற்குரிய காரணம் பாராளுமன்றத்தின் கருத்து, மக்களது கருத்துக்கு மாறுபட்டது என்று நியாயமாகக் கருதுவதற்கு உரிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகும். சட்ட ரீதியான இறையாண்மையிலிருந்து, அரசியல் இறையாண்மையின் வேண்டுகோள்தான் கலைப்பதன் சாராம்சமாகும்" என்று ஆங்கில அரசியல்மைப்புச் சட்ட நிபுணர் ஏ. சி. டைசிராய் கூறியுள்ளார்.

A. C. Dicay in his well-known book on British Constitutional Law says as follows—

" These are certainly features of circumstances under which the Crown has a right to dismiss a Ministry who command a Parliamentary majority and to dissolve the Parliament by which the Ministry is supported. The reason why a House could, in accordance with the Constitution, be deprived of power and of existence was that an occasion had arisen on which there was fair reason to suppose that the opinion of the House was not the opinion of the electorate. A dissolution was, in its essence, an appeal from the legal to the political sovereign. "

இதேமாதிரி, சர் ஏ. பி. கெய்த் என்ற அரசியலமைப்புச் சட்ட நிபுணரும் "அரசர், மக்களின் முடிவுக்கு விடுவதுதான் சரியான வழி என்று கருதுவாரானால், அரசை வெளியேற்றி, பாராளுமன்றத்தைக் கலைக்கலாம்" என்று கூறியுள்ளார்.





" Sir A. B. Keith held the view that the Crown might force dissolution if necessary by dismissing the Government if it thought it necessary for giving the will of the people its just course. "
இது அவர் சொல்லி வைத்தது. இப்படி நிறைய சொல்லிக்கொண்டே போகலாம். மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் போதும் என்று சொல்கிறார்கள். ஆகவே இன்னும் இதுபற்றி ஒருசில விஷயங்களை மட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன்.

டாக்டர் யூஜின் ஏ. போர்சே என்ற கனடிய அரசியல் அமைப்புச் சட்ட நிபுணர் தனது "பிரிட்டிஷ் காமென்வெல்த் நாடுகளில் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்குரிய அதிகாரம்" (The Royal Power of dissolution of Parliament in the British Commonwealth) என்ற நூலில் மேற்கூறிய ஆன்சன், கெய்த், டைசி முதலானவர்கள் கருத்தினை வலுவாக ஆதரித்து விவாதித்துள்ளார்கள், ஒப்புக்கொண்டுள்ளார்கள்.

எனவே இத்தகைய கருத்துகளுக்கு முன்னால் நான் இவற்றையெல்லாம் படித்த பிறகுதான் ஒரு மாபெரும் எல்லையில்லா வன்மையும், நம்பிக்கையும் நம்முடைய முதலமைச்சரிடம் எனக்கு ஏற்பட்டது. பெரிய பெரிய அரசியலமைப்புச் சட்ட நிபுணர்கள் எல்லாம் ஆராய்ந்து சொன்ன கருத்துக்களை தன்னுடைய கட்சியின் லட்சியமாக வைத்திருக்கிறார். மக்கள் நம்பிக்கையை இழந்த பிறகு, விட்டுக் விடு போய், ஊர்வலமாகப் போய் இப்போது ஆதரவு தேடுகிறார்கள். கோயாபில்ஸ் என்று கூடச் சொல்லலாம். பெண்கள் எல்லாம் வருத்தப்படுகிறார்கள். அரசியல் அமைப்புச் சட்டத்தில் உள்ள நுணுக்கங்களை எல்லாம் படித்து, பல்கலைக் கழகங்களில் எல்லாம் படித்த அரசியலமைப்பு நிபுணர்கள் வெளியிட்ட கருத்துக்களை நம்முடைய முதலமைச்சர் மிக அழகாக 1973 ஆம் ஆண்டிலேயே சொன்னார்கள். கோயம்புத்தூர் தேர்தலில் அவர்களுக்கு வெற்றி என்று சொன்ன உடனேயே ராஜிநாமா செய்யச் சொன்னார்கள். அன்று நீங்கள் சொன்னதை நான் மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். "தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை அவர்கள் பதவிக் காலம் முடியும் முன்னரே மக்கள் விரும்பினால் திரும்பி அழைக்கலாம்" என்று சொன்னீர்கள். ஆனால் அதை எவ்வளவு தூரம் தமிழ் நாட்டிலே அமுல்படுத்திக்கொண்டிருக்கிறீர்கள் என்பதையும் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இவர்களுக்கெல்லாம் நானும் ஜனவரி 7 ஆம்

(பிற்பகல் 5-30)

தேதி வரை மதிப்பு அளித்தேன். ஜனவரி 7 ஆம் தேதி, அவர்கள் சொன்ன இந்த உயர்ந்த தத்துவத்தைச் செயல்படுத்திக் காட்டுவதற்கு ஒரு நல்ல வாய்ப்பு அவர்களுக்கு வந்தது. அப்படித்தான் செய்வார்கள், அதிலே என்ன

[திரு. ம. சங்கரலிங்கம்] [1980 பிப்ரவரி 13

சந்தேகம் என்று நான் நினைத்தேன். ஆனால் ‘தத்துவம் எல்லாம் எனக்கு இல்லை, உங்களுக்குத்தான், மற்றவர்களுக்காகத்தான் நான் சொல்லிக்கொண்டே இருப்பேன்’ என்று சொன்ன பிறகு, அதைப்பற்றி என்ன சொல்வதற்கு இருக்கிறது? அவர்கள் இன்னும் சிந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிவகாசியிலே பேசும்போது, ‘நான் போகப் போகிறேன்’ என்று பேசினார்கள். ஆனால், இப்போது உள்ள நிலைமையைப் பார்த்தால், சுற்றி இருக்கிறவர்கள் ‘வேண்டாம்’ என்று சொல்கிறார்களோ என்று நான் அஞ்சுகிறேன். அவர்கள் ராஜிநாமா செய்ய வேண்டுமென்ற எண்ணத்தினால் நான் இதைச் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹண்டே அவர்கள், ஒரு தேர்தலிலே தோற்றவுடனே, அப்போது இருந்த அரசு சட்டசபையிலே பட்ஜெட் சமர்ப்பிக்கக்கூடாது என்று சொன்னார்கள். அப்போது அவர்கள் மதிப்பு வாய்ந்த உறுப்பினராக சட்டசபையிலே இருந்தார்கள். அவர்கள் எல்லாம் இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் என்ன சொல்லியிருக்கிறார்களோ; எனக்குத் தெரியாது. இப்போது என்ன சொல்லியிருப்பார்? உடனே ராஜிநாமா செய்யுங்கள் என்று சொல்லியிருப்பார். அப்படிச் சொல்லிய பிறகும், அவருடைய கருத்து வலுப்படவில்லையோ என்னவோ தெரியவில்லை. இதற்கெல்லாம் என்ன தத்துவங்கள் பின்னணியிலே இருக்கின்றன என்று பார்க்க வேண்டும். நம்முடைய நாட்டிலே நடந்து முடிந்த தேர்தலிலே 55 சதவிகிதம் ஓட்டு இந்த அரசுக்கு எதிராக உள்ள அணி பெற்றது, இவர்களுடைய அணி பூராவும் சேர்ந்து பெற்ற வாக்கு 40 சதவிகிதம். அவர்கள் மொத்தமாகப் பெற்ற இடங்கள் இரண்டே இரண்டு. ‘டோட்டலி டெபேட்டட்’ என்று ஆங்கிலத்திலே சொல்வார்களே அதுபோல முழுமையாகப் புறக்கணிக்கப் பட்டது. ஆனாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ரொம்ப அதிர்ச்சி வராமல் இருப்பதற்காக, அவர்கள் இந்தமாதிரி ஆட்சி தொடர்ந்து இருக்கும் என்று சொல்வதற்கு ஊக்கமளிக்கும் விதத்தில் இரண்டு கிடைத்திருக்கிறது. அதை வைத்துக்கொண்டு இந்தத் தத்துவத்தைப் பேசியிருக்கிறார்கள். நடைமுறையிலே பார்த்தால், இனிமேல் இவர்களால் இந்த நாட்டை சிறப்பாக ஆள முடியுமா? இதற்கு முன்னால் $2\frac{1}{2}$ வருடங்கள் ஆண்டபோது ஒரு சக்தி வாய்ந்த முதலமைச்சர் இருந்தார், அவரிடத்திலே பேசுவதற்கு எல்லோரும் அஞ்சினார்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அஞ்சினார்கள், ஏன் அமைச்சர்களே கூட அஞ்சினார்கள், ஏன் ‘பயப்பட்டோம்’ என்று கூடச் சிலர் சொன்னார்கள். நாங்கள் கூட எங்கள் தலைவருக்கு அஞ்சுகிறோம், பயப்படவில்லை. அஞ்சுவது கூட மதிப்பின் காரணமாக, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இப்போதுதான் நல்லகாலம். இந்தத் தேர்தல் வந்ததைக் கடிதலாக வரவேற்பது ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் தான். “இப்போதுதான் ஏதாவது சொன்னால் முதலமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள்” என்று அவர்கள் சொல்கிறார்கள், கடந்த காலச் சூழ்



1980 பிப்ரவரி 13] [திரு. ம. சங்கரலிங்கம்]

நிலையில், அந்த $2\frac{1}{2}$ ஆண்டு கால அளவில், உங்களை உங்களுடைய கட்சிக்காரர்களே கேட்க முடியாது என்ற நிலையில், “நாங்கள்கூட சட்டமன்றத்திலே பேசிவிட்டுத்தான் போக முடியும்” என்று அவர்கள் நினைக்கும் நிலையிலே நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இனிமேல் மக்களுடைய நம்பிக்கையை இழந்த நிலையில் மேலும் இந்த ஆட்சி தொடர்ந்தால் எப்படி இருக்கும்? உங்களுடைய தோல்விக்கு என்ன காரணம்? அமைச்சர்கள் சொல்கிறார்கள் “நாங்கள் சொன்னதை முதலமைச்சர் அவர்கள் கேட்கவில்லை”; உறுப்பினர்கள் சொல்கிறார்கள், ‘நாங்கள் சொன்னதை முதலமைச்சர் கேட்கவில்லை’ என்று. இப்போது, “இனிமேல் நீங்கள் சொல்வதை நாங்கள் கேட்கிறோம்” என்று முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இப்படிச் செய்தால் ஆட்சி என்னவாகும். நிர்வாகம் எப்படி இருக்கும்? “இதற்கு முன்னால் நீங்கள் கேட்டதைக் கொடுக்கவில்லை, இனிமேல் கொடுப்போம்” என்று முதலமைச்சர் சொன்னதற்குப் பிறகு, இந்த நாட்டினுடைய ஆட்சி எப்படி இருக்கும் என்பதைச் சிந்திக்க வேண்டும். இந்த விஷயங்களுக்கு நான் பின்னாலே வருகிறேன். நான் மேற்குறிப்பிட்ட தத்துவ நிபுணர்கள் சொன்ன கருத்துக்களும், நமது முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்துக்களும் ஒரே கருத்துக்கள் தான். அந்தத் தத்துவ அடிப்படையிலே தான் மக்களுடைய நம்பிக்கையை இழந்த பிறகு ஆட்சியிலே இருக்கின்றீர்கள். இப்பொழுது நீங்கள் ஆட்சியிலே இருக்கிறீர்கள். நாங்கள் பலமுறை இந்த மன்றத்தின் மூலமாகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். உங்களுடைய ஆட்சியிலே சட்டம்—ஒழுங்கு இல்லை. நீங்கள் பெரிய சக்தியாக இருக்கும்போதே சட்டம் ஒழுங்கு இந்த நாட்டிலே சீர்கெட்டது என்று சொன்னால், இப்போது ஜனவரி 7-க்குப் பிறகு உங்களுடைய சட்டம்—ஒழுங்கு பராமரிப்பு எப்படி இருக்கும்? நீங்கள் சொன்னால் யார் கேட்கப் போகிறார்கள்? உங்களுக்கு என்ன மரியாதை? என்ன மரியாதையை பொதுமக்கள், அதிகாரிகள் மத்தியிலே நீங்கள் பெற முடியும் என்பதைத்தான் பார்க்க வேண்டும். உங்களோடு இருப்பவர்கள், “நீங்கள் ஆட்சிக்கு வந்தால் இவற்றையெல்லாம் செய்வீர்களா? நிறைவேற்றுவீர்களா?” என்று எங்களிடத்திலே கேட்கிறார்கள். உங்களுடைய மதிப்பு பொதுமக்கள் மத்தியிலும், உங்களோடு இருப்பவர்கள் மத்தியிலும், உங்கள் கட்சி உறுப்பினர்கள் மத்தியிலும் எப்படி கீழிறங்கிப் போயிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சட்டம்—ஒழுங்கைப் பொறுத்தவரையில், தலைநகரை மட்டும் எடுத்துக்கொண்டு நான் ஒருசிலவற்றைச் சொல்கிறேன். மற்ற இடங்களிலே சட்டம்-ஒழுங்கு சரிவர இல்லை என்று சொன்னால், ‘எங்களுடைய ஆட்சியின் சக்தி போய் அங்கெல்லாம் எட்டுவதற்கு கொஞ்சம் காலதாமதம் ஆகிவிட்டது” என்று சொல்லலாம். உங்களுடைய ஆட்சியிலே மூன்று ஐ.ஜி.-க்கள் இருக்கிறார்கள்.

டைரக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ் என்று ஒருவர் இருக்கிறார். அமைச்சர்கள் எல்லாம் இங்கே பரவலாக நகரம் முழுவதும் இருக்கிறார்கள். உங்களுடைய ஆட்சியிலே சென்னை நகரிலே எத்தனை கொலைகள், எத்தனை கொள்ளைகள்? வசந்தி கொலை, பிரேமா கொலை, இப்படி எத்தனை கொலைகள்? இவைகள் எல்லாம் பழைய கதைகள். இவைகளை நான் விட்டுவிடுகிறேன். டிசம்பர் 1 ஆம் தேதியிலே இருந்து இன்றைக்கு வரையில் சென்னை நகரிலே என்னென்ன நடந்திருக்கிறது என்பதைச் சுருக்கமாகச் சொல்கிறேன். 1—12—1979 ஆம் நாளன்று அடையாறு கஸ்தூரிபாய் நகரில் எழுத்தாளர் நாடோடியின் மனைவி திருமதி சரஸ்வதி சமையல் செய்து கொண்டிருந்த போது, அந்த அம்மையாருடைய கண் கட்டப்பட்டு அந்த வீட்டிலிருந்து பட்டப் பகலில் 15,000 ரூபாய் மதிப்புள்ள நகைகள் கொள்ளையடிக்கப் பட்டிருக்கின்றன. 14—12—1979 ஆம் நாளன்று வெள்ளிக்கிழமை அண்ணா நகருக்கு அருகே நியூ ஆவடி ரோட்டில் கணபதி காலனி அருகே டாக்சி டிரைவர் நயினார் அவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார். 17—12—1979-ல் நுங்கம்பாக்கம் விட் கிராப்ட் சாலையிலுள்ள முன்ஷி பங்களாவில் 22 வயதுள்ள மேவாரம் என்ற வேலைக்காரன், மூன்று நபர்களால் கழுத்து நெரிக்கப்பட்டு பட்டப்பகலில் கொலை செய்யப்பட்டிருக்கிறார். டிசம்பர் 23-ஆம் தேதி, நம்முடைய ஜெனரல் ஆஸ்பத்திரியில் இருக்கும் டீன் திரு. சிவராஜ் அவர்கள் பத்திரிகையாளர்களுக்கு ஒரு செய்தியைச் சொல்கிறார். ரோட்டிலே போய்க் கொண்டிருப்பவர்களுக்கு மயக்க மருந்து கொடுத்து அவர்களிடமிருந்து பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டிருப்பதாகவும், மயக்கமுற்ற நிலையில் இரண்டு பேர் ஆஸ்பத்திரிக்கு வந்திருப்பதாகவும் தெரிவிக்கிறார். அவர்களில் ஒருவரான சர்தார்ஜியிடம் கைக்கடிகாரம், கையிலிருந்த ரொக்கம் மற்றும் மற்றொருவரிடமிருந்து ஆயிரம் ரூபாய் ரொக்கம் கொள்ளையடிக்கப் பட்டிருக்கிறது. 21—12—1979 ஆம் நாள் செய்தி, திருவள்ளூரிலிருந்து சென்னைக்கு சாராயம் கடத்தியதைத் தடுத்த போலீசாருக்குக் கத்திகுத்து. ஹெட் கான்ஸ்டபிள் முத்துவிநாயகம் என்பவர் ஆவடி ரயில் நிலையத்திலிருந்த போது கள்ளச் சாராயம் காய்ச்சும் மூவர் சூழ்ந்து அவரை கையிலும், கழுத்திலும் கத்தியால் குத்தினார். அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருக்கிறார். 19—1—1980 ஆம் நாளன்று, பெசன்ட் நகரில் வேளாங் கண்ணி சர்ச் சமீபம், டி. வி. எஸ். கம்பெனி மேனேஜர் டி. கே. மணி என்பவரின் வீட்டின் கதவை உடைத்து 65,000 ரூபாய் மதிப்புள்ள பொருள்களும், 42 பவுன் தங்க நகைகளும் கொள்ளையடிப்பு. கொள்ளை நடந்துகொண்டிருந்தபோது, வீட்டுக்குள் நுழைந்த மனைவி சாதா கொள்ளையர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டு நினைவிழந்தாள். இப்படிச் செய்தி. அன்றைக்குக் காலையிலே சூளை பகுதியில் இருவரைத் தாக்கி படுகாயப்படுத்தி அவர்களிடமிருந்து பணத்தைப் பறித்துச் சென்றனர். அவர்கள் இருவரும் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். 21—1—1980 ஆம் நாள் என்ன



நடக்கிறது—கூட்டுத் தாக்கு நடக்கிறது. அன்று மாலை 7 மணிக்கு மைலாப்பூரில் 30 வயதுள்ள தொழிலாளி நடராசன் என்பவர் ஒரு கூட்டத் தினரால் தாக்கப்பட்டார், அதேதான் இரவு 8 மணி பெரம்பூரில் 35 வயதுள்ள ஆல்பர்ட் தாக்கப்பட்டிருக்கிறார், மாலை 7 மணிக்கு அண்ணா சாலை பார்டர் தோட்டத்தில் ஒரு ரொட்டிக் கடையும், மற்றொரு கடையும் முகமூடி மனிதர் களால் தாக்கப்பட்டு. அங்கிருந்த பணத்தை அவர்கள் கொள்ளையடித்துச் சென்றார்கள். 29 ஆம் தேதி பீட்டர்ஸ் ரோடிலே கலவரம் நடந்தது என்பதையும், 31 ஆம் தேதி ஸ்மித்ஸ் காலனியில் கலவரம் நடைபெற்றது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்களே இங்கே ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மூலம் அவையில் விளக்கியிருப்பதால் நான் அவைகளைப்பற்றி விளக்கமாகச் சொல்லாமல் அவைகளைச் சுட்டிக் காட்டி விட்டுவிடுகிறேன்.

(பிற்பகல் 5-40)

அடுத்து. பிப்ரவரி மாதம் 8 ஆம் தேதி சென்னையில் சால்ட் கொட்டார்ஸ் என்ற ரெயில்வே கூட்ஸ் நிலையத்தில் ஒரு கோஷ்டி, சோடா பாட்டில்களையும் கற்களையும் கொண்டு காவல் நிலையத் தலைமை அதிகாரியையும், 7 காவலர் களையும் தாக்கி காயப்படுத்தியிருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்றால், கடந்த இரண்டாண்டு காலமாகவே கூட்ஸ் ரயிலில் வரக்கூடிய 15 வாகன் சரக்குகளில் 25 சதவீதம் சரக்குகளை இந்த கோஷ்டி களவு செய்து கொண்டிருக்கிறது. அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு 2 ஆண்டு காலமாகிறது. ஆனால் அதில் 2 ஆண்டு காலமாக இந்தக் கோஷ்டி 15 வாகன்களில் சரக்கு வந்தால், அதில் 25 சதவீதம் சரக்கைக் கொள்ளை அடித்துக் கொண்டுபோயிருக்கிறது. அதைத் தடுத்த போலீஸ்காரர்கள்மீது தாக்குதல் நடத்தி, அவர்களையெல்லாம் படுகாயப்படுத்தியிருக்கிறது. அடுத்து, சென்ற 10 ஆம் தேதி வியாசர்பாடியில் இரண்டு கொலைகள் நிகழ்ந்திருக் கின்றன. அதில் ஒருவர் குடிசை மாற்று வாரியத்தில் காவலாளியாக இருப்பவர். பகல் நேரத்தில் அவர் வீட்டிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டு சாக்கடையில் தள்ளப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கிறார். ஆக நாடு முழுவதும் கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்த நிகழ்ச்சிகளெல்லாம் நடை பெற்றிருக்கின்றன.

சென்னை நகரத்தில் இவ்வளவு கொலைகளும் கொள்ளைகளும் ஏற்பட்டு, மக்களுக்கு ஒரு பாதுகாப்பற்ற நிலை உருவாகி, நாடு முழுவதும் சட்டம் ஒழுங்கு குலைந்து கொண்டிருக்கிறபோது, நம்முடைய சென்னை நகர குற்றவியல் துணை ஆணையாளர் 1—2—1980 அன்று வானொலியில் ஒரு உரையாடல் மூலம் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார். அந்த உரையாடல் அகிலன் என்ற ஒரு சிறந்த எழுத்தாளருக்கும் சென்னை நகரக் காவல் துறை

துணை ஆணையருக்குமிடையே நடைபெற்றது. அந்த அதிகாரியின் பெயரை தான் இங்கே சொல்லவில்லை. அந்த உரையாடலில் அந்தக் காவல் துறை அதிகாரி "இப்போது நடைபெற்றிருக்கிற இந்தக் குற்றங்களெல்லாம் அப்படி யொன்றும் பெரிய குற்றங்களல்ல, இவைகளெல்லாம் சர்வசாதாரணமாக நடைபெறுபவைகள்தாம்" என்று குறிப்பிட்டிருக்கிறார். அதுவரை பொது மக்கள் என்ன நினைத்தார்கள் என்றால், "நமக்கெல்லாம் அரசாங்கத் திலிருந்து, காவல் துறையிலிருந்து பாதுகாப்பு கிடைக்கும், சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றத்திலே ஒத்திவைப்புத் தீர்மானங்கள் மூலம் நிலைமையை விளக்குகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி போன்றவர்கள் மக்களின் பாதுகாப்பற்ற நிலையை எடுத்துச் சொல்லு கிறார்கள்" என்று நினைத்தார்கள். ஆனால் காவல் துறை துணை ஆணையாளர் கூறிய கருத்துக்களைக் கேட்ட பிறகு, "இவைகளெல்லாம் சர்வ சாதாரணமானவைகள், இதைப்போய்ப் பெரிதுபடுத்தத் தேவையில்லை; உங்களைப் பாதுகாத்துக் கொள்ள வீட்டிலே நாயை வளர்க்கலாம், முடிந்தால் கோழியையும் வளர்க்கலாம், காரணம் கோழியும் சில நேரங்களில் கத்தும்" என்று உரையாடலில் கேட்ட பிறகு, இனி இந்தக் காவல் துறையால் நமக்குப் பாதுகாப்புக் கொடுக்க முடியாது என்ற எண்ணத்திற்கு வந்திருக்கிறார்கள். காவல் துறை அதிகாரியின் 15 நிமிட உரையாடலைக் கேட்ட பிறகு, காவல் துறையைப்பற்றியும் இந்த அரசியல் வாதிகளைப்பற்றியும் மக்கள் அப்படித் தான் கருத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இத்தகைய நிலைமை ஆட்சியாளர்களின் தேர்தல் தோல்விக்குப் பிறகு கன வேகத்தில் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இன்னும் ஒன்றை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் ஏற்கெனவே குறிப்பிட்ட அத்தனை கொலை கொள்ளை வழக்குகளிலெல்லாம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெரும் புள்ளிகளின் துணை இருக்கிறது. அதனால்தான் இத்தகைய கலவரங்களையும் கொள்ளைகளையும் காவல் துறையாலே தடுக்க முடியவில்லை. இதை நான் பகிரங்கமாகவே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதன் காரணமாகத்தான் காவல் துறையின் பெரிய அதிகாரியான ஒருவர் இப்படிப்பட்ட கருத்தை தமது உரையாடலில் தெரிவிக்கிறார்.

அதுமட்டுமல்ல, இந்த நாட்டில் வாழ்கிற ஹரிஜன மக்களுக்கு இந்த ஆட்சியில் பாதுகாப்பில்லை என்ற குற்றச்சாட்டையும் தெரிவிக்க விரும்பு கிறேன். இப்போது பாதுகாப்பில்லை என்பது மட்டுமல்ல, இதற்கு முன்னாலேகூட ஹரிஜனங்களுக்கு இந்த ஆட்சியில் பாதுகாப்பில்லை. இதை நான் சொல்வதைவிட இந்த ஆட்சியில் ஒரு அமைச்சராகப் பணியாற்றியவர் பகிரங்கமாகவே ஒரு அறிக்கையிலே சொல்லியிருக்கிறார். கடந்த ஓராண்டுக் காலமாகவே ஹரிஜன மக்களுக்குப் பாதுகாப்பில்லை. பாதுகாக்க வேண்டும்



என்ற அளவில் முயற்சிகள்கூட மேற்கொள்ளப்படவில்லை. இதைக் குறித்த புள்ளிவிவரங்களை இங்கே எடுத்துச் சொல்வதன் மூலமாக நாட்டில் எந்த ஒரு விளைவையும் தோற்றுவித்துவிட முடியாது. என்பதனால் நான் இங்கே அதிகமாக அவற்றைப்பற்றிக் குறிப்பிட விரும்பவில்லை.

மத்திய அரசின் குழு ஒன்று இந்த மாநிலத்திற்கு வந்து ஆராய்ந்து ஹரிஜன மக்களுக்குச் சரியான பாதுகாப்பு கொடுக்கப்படவில்லை என்ற ஒரு அறிக்கையைக் கொடுத்திருக்கிறது. அந்த அறிக்கைக்கு இந்த ஆட்சி எந்த விதமான மறுப்பும் கொடுக்கவில்லை. ஏதோ எழுதியிருக்கலாம் அவ்வளவு தான்.

இப்போது இந்த ஆட்சியில் அமைச்சராகப் பொறுப்பேற்று இருந்தவர், அதுமட்டுமல்ல அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருளாளர் பதவியை வகித்துக் கொண்டிருந்தவர், சொல்லுகிறார், "இந்த ஆட்சியில் ஹரிஜனங்களுக்குப் பாதுகாப்பில்லை" என்று. ஒரு கட்சியில் பொருளாளர் பதவியை வகிப்பது என்றால், எந்த அளவுக்கு அவர் நம்பிக்கைக்கு உரியவராக இருந்திருக்க வேண்டும் என்பதை நான் சொல்லத் தேவையில்லை. அவர் அமைச்சராக இருந்துகொண்டு, இறுதியாக 3, 4 நாட்களாக விடுத்த அறிக்கைகளில் மிகப் பயங்கரமான குற்றச்சாட்டை இந்த ஆட்சியின் மீது சொல்லியிருக்கிறார். ஆனால் இன்றுவரை அவருடைய குற்றச்சாட்டுகளுக்கு பதிலும் சொல்லப்படவில்லை, அவைகள் மறுக்கப்படவு மில்லை.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள்கூட தி.மு.க. பற்றி அப்படித்தான் அறிக்கை விட்டார்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார்கூட அப்படித்தான் சொன்னார் என்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அவர் அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளை திராவிட முன்னேற்றக் கழகத்தின் **மீது** சுமத்தியபோது, அவைகளுக்கு உடனடியாக மறுப்பு அளிக்கப்பட்டது, அவருக்குச் சரியான பதில் தரப் பட்டது. ஆனால் இந்த ஆட்சிக் கட்சியைப் பொறுத்தவரையில், இதுவரையில் அந்த அமைச்சரின் குற்றச்சாட்டுக்கு எந்தப் பதிலும் சொல்லவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக சட்ட மன்றத்திலேயே அதற்குப் பதில் அளிக்கப்பட்டது. அந்தக் குற்றச்சாட்டுகளில் உண்மை இல்லை என்று அப்போது நிரூபிக்கப்பட்டது. ஆனால் இந்த ஆட்சியாளர்களால் ஒரு குற்றச்சாட்டைக்கூட இதுவரை மறுக்க முடியவில்லை.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது குறுக்கிட வேண்டாம் என்றுதான் இருந்தேன். ஆனால் அவருக்குக் குடிப்பதற்குத் தண்ணீர் தேவைப்படும் என்ற காரணத்தால் குறுக்கிட்டு, அவருக்கு அவகாசம் தரலாம் என்ற அடிப்படையில் அதைச் சொன்னேன். பொதுவாக ஒரு அரசியல் கட்சியிலிருந்து விலகியவர்கள் அந்தக் கட்சியைப்பற்றியும் தலைமையைப்பற்றியும் குறை சொல்வதென்பது இயற்கை. அதுமட்டுமல்ல. முன்னாள் அமைச்சரின் குற்றச் சாட்டை இதுவரை மறுக்கவே இல்லை என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 21 சட்டமன்ற உறுப்பினர்கள் நேற்றையதினம் கூட்டாக ஒரு அறிக்கை விட்டு மறுத்திருக்கிறார்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** ஒரு அமைச்சர், அமைச்சரவையிலிருந்து விலகி, அதற்குரிய காரணங்கள் இன்னின்னவை என்று ஆணித்தரமாக புள்ளி விவரத்தோடு சொல்லுகிறார், "நானே தாக்கப்பட்டேன், என் வீட்டில் அமைச்சர்கள் வந்து தாக்கினார்கள்". (சிரிப்பு) இரவு 12 மணிக்கு, அமைச்சர்கள் போனால், அதற்குத் தாக்குதல் என்றுதானே பொருள்! இப்படியெல்லாம் அறிக்கைவிட்ட பிறகுகூட, ஆட்சியில் இருப்பவர்களிடமிருந்து பதில் இல்லை என்பதைத்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சுருக்கமாகவும் ஆனால் அதே நேரத்தில் விளக்கமாகவும் பதில் சொல்லிவிட்டார்கள். ஒரு கட்சியைவிட்டு வெளியே போகிறவர் தான் இருந்த கட்சி மிகவும் நல்ல கட்சி என்று சொன்னதாக எப்போதுமே வரலாறு கிடையாது. இது அடிப்படையான உண்மை. ஒரு அமைச்சர் இன்னொரு அமைச்சர் வீட்டிற்குப் போவது என்பது சாதாரணமான ஒன்று. சில நேரங்களில் சில அமைச்சர்களின் வீட்டிற்கு அமைச்சர்கள் அல்லாத வேறு யார் யாரோ போயிருக்கிறார்கள் என்ற வரலாறெல்லாம் இருக்கிறது அவைகள் இப்போது தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி தம் இருக்கையிலிருந்து எழுந்து பேச முன்வந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இதில் மாண்புமிகு உறுப்பினர் குறுக்கிட என்ன இருக்கிறது? இப்படியே போய் ஒவ்வொருவரும் எழுந்தால் நிலைமை என்னாவது?

**திரு. க. இராமமூர்த்தி :** தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள், எங்கள் கட்சி நல்ல கட்சி என்று சொல்லிவிட்டுத்தான் கட்சியிலிருந்து வெளியேறியிருக்கிறார்.





**திரு. ம. சங்கரலிங்கம் :** ஒரு கட்சியிலிருந்து வெளியேறும்போது கொள்கை பிடிக்காமல் வெளியேறுபவர்களும் இருக்கிறார்கள், ஏதாவது சாக்கு சொல்லிவிட்டு வெளியேறுகிறவர்களும் இருக்கிறார்கள். அதை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களே இங்கே விளக்கமாகச் சொன்னதற்காக நான் அவரைப் பாராட்டி அதை அப்படியே ஏற்றுக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து ரொம்ப பேர் வெளியேறி அமைச்சர்களாகக்கூட இருக்கிறார்கள். அவர்களுடைய அறிக்கைகளெல்லாம் உண்மைக்குப் புறம்பான அறிக்கைகள் என்று இப்போதாவது ஒப்புக்கொண்டதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், கட்சியிலிருந்து வெளியேறியவர்களுக்கும், வெளியேற்றப் பட்டவர்களுக்கும் இடையே வித்தியாசம் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** நாம் அதைப்பற்றிப் பிறகு பார்த்துக்கொள்ளலாம். ஒரு கட்சியிலிருந்து வெளியேறி அறிக்கை விட்டால், அது உண்மைக்கு மாறான அறிக்கை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களே இங்கே தெரிவித்திருப்பதால் எங்கள் கட்சியைப்பற்றி விடப்பட்ட அறிக்கைகளைப்பற்றி ஆட்சிக் கட்சியில் இருப்பவர்களே ஆராய்ச்சி செய்து உரிய முடிவை எடுக்க வேண்டும் என்று விட்டுவிடுகிறேன்.

நான் சொல்வதெல்லாம், "ஹரிஜன மக்களுக்குப் பாதுகாப்பில்லை" என்று முன்னாள் அமைச்சராக இருந்த ஒருவரே அறிக்கை விடுகிறார். அவர் கட்சியைவிட்டு வெளியே போனதற்குக் காரணம் எதுவாகவாவது இருக்கட்டும். அதைப் பொறுத்த வரையில், பதில் அளிக்க வேண்டியவர் மாண்புமிகு முதலமைச்சர் ஆவார்கள். ஆனால் அவர் எந்த பதிலையும் அளிக்காத நிலையில் 21 எம்.எல்.ஏ.க்கள் பதில் அளித்திருக்கிறார்கள் என்று சொல்வது எந்த வகையிலும் சரியல்ல. நாளைக்கு வேறு ஒரு 28 எம்.எல்.ஏ.க்கள் அறிக்கைவிட்டு வேறு ஒரு கருத்தைக்கூட சொல்லலாம். எனவேதான் சொல்லுகிறேன், முன்னாள் அமைச்சர் சொன்னது ஒரு "ஸ்பெசிபிக் சார்ஜ்". அதாவது "தமிழ் நாட்டில் உள்ள ஹரிஜன மக்களுக்குப் பாதுகாப்பில்லை. அவர்கள் சரிவரப் பாதுகாக்கப்படவில்லை". இதுதான் அவருடைய அறிக்கை. இந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மறுத்து பதில் சொல்லாத வரையில், அந்த அறிக்கையை அப்படியே ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. அந்தக் குற்றச்சாட்டு உண்மை என்றுதான் நாங்கள் கருதுகிறோம்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** ஹரிஜனங்களுக்குப் பாது காப்பில்லை என்று சொல்லியிருக்கிறாரா அல்லது ஹரிஜனங்களுக்கு நன்மை செய்யப்படவில்லை என்று சொல்லியிருக்கிறாரா ?

**திரு. ம. சங்கரலிங்கம் :** இதை நான் சொல்லவில்லை. முன்னாள் அமைச்சரான திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் தமது அறிக்கையிலேயே குறிப்பிட்டிருக்கிறார். இந்தக் குற்றச்சாட்டுகளையெல்லாம் தமிழக ஆளுநரிடம் கொடுத்திருக்கிறார். டெல்லிக்குச் சென்று அங்கேயுள்ள ராஷ்டிர பதியிடம் இந்தக் குற்றச்சாட்டுகளைச் சொல்லுகிறார். இவைகளுக் கெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் பதில் சொல்லாத வரையில் அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு பதில் சொல்ல ஒன்றுமேயில்லை என்றுதான் கொள்ள வேண்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

(பிற்பகல் 5-50)

அதுமட்டுமல்ல, அவர் வெளியேறுவதற்கு 2 நாட்களுக்கு முன்னால் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பலர் மாற்றப்படுகிறார்கள். ஒரு பெரிய பட்டியலே வரு கிறது. அதைப்பற்றியெல்லாம் மற்ற உறுப்பினர்கள் இங்கே சொல்லியிருக்கி றார்கள். இந்த அரசு ஒரு காரியத்தையும் தெளிந்து செய்யாது. சொன்னதைச் செய்ய முடியாமல் மாற்றிக்கொண்டேயிருக்கும் என்று சொன்னார்கள். அந்த அமைச்சர் ஒரு வருஷ காலமாகக் குறை சொல்லிக் கொண்டிருந்தால், அதை நிவர்த்திப்பதைப்போல் அந்த அதிகாரிகளின் மாற்றங்கள் உத்தரவிடப் பட்டன. அவர் வெளியேறியவுடன் மீண்டும் அதை நிவர்த்திக்கவில்லை. இதை இரண்டு கோணங்களிலிருந்து ஆராய வேண்டும். முன்னாள் அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள், "பெரிய அதிகாரிகள் திங்கிழைத்தார்கள் ; தனக்கு உரிய இடம் கிடைக்கவில்லை" என்று குறை சொல்லியிருக்கலாம். அதற்காக மாற்றம் செய்திருக்கலாம். அப்படிச் செய்தது தவறாக இருக்கு மானால், அவரை வைத்திருக்க வேண்டும், அல்லது அவரைத் திருப்தி செய்வதற்காகச் செய்த அநீதியாகும், அது அநீதி என்று உணர்ந்து இப்போது ரத்து செய்திருக்கிறோம் என்றால் இதை என் ரத்து செய்ய வேண்டும் ? அவர் போனால் அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் அப்படியே இருக்கலாமே. இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஆஃப் ரிஜிஸ்ட்ரேஷனாக இருப்பவர், செக்ரடரி—அக்ரிகல்சராக வந்தால் என்ன குடி மூழ்கிப் போகும் ? வரக்கூடாது என்று நினைத்து வைத்திருக்கலாம். அப்பொழுதுள்ள அரிசனநலத் துறை அமைச்சர் அவர்களைத் திருப்தி பண்ண செய்திருக்கலாம். அப்படிச் செய்திருந்தாலும், தவறு. அது மிஸ்யூஸ் ஆஃப் பவர். அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்திருக் கிறார்கள். அமைச்சரைத் திருப்திப்படுத்த மாற்றம் செய்யப்பட்டது





என்றாலும், எப்படியும் எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் தவறிழைத் திருக்கிறார்கள் என்ற பெரிய குற்றச்சாட்டை முதலிலேயே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி ஆட்சித் தலைவராக இருக்கிறார். அவர் ஒரு அரிஜன். அவர் பெயர் திரு. சுந்தரேசன் என்று நினைக்கிறேன். அவர் மாவட்ட ஆட்சித் தலைவராக அங்கு வந்து 7 மாதங்கள் ஆகின்றன. அவரை இப்போது திடீரென்று மாற்றியிருக்கிறார்கள். முதலில் மாற்றினார்கள். ரத்து செய்தபோது அவர் மாற்றல் ரத்து செய்யப்படவில்லை. பெரிய அதிகாரிகளாக இருப்பவர்களுக்குக்கூட அரசியலில் சக்திவாய்ந்த, செல்வாக்குப் படைத்தவர்களுடைய தயவு வேண்டும். இல்லையென்றால் மாற்றிவிடுகிறார்கள். அதிகாரிகளை மாற்றுவது அவர்களுக்குள்ள அதிகாரம். நிர்வாகத் திறனுக்காக அவரை மாற்றியிருக்கிறோம் என்று சொன்னால், நான் அதில் குறுக்கிட முடியாது. அது அவர்களுடைய உரிமை. அங்கு நடந்தது அப்படியல்ல. அதிகாரத் துஷ்பிரயோகத்தினால் அந்த மாற்றல் செய்யப் பட்டிருக்கிறது. அவர் ஆட்சித் தலைவராக வந்து 7 மாதங்கள்தான் ஆகின்றன. அவர் ஒரு திறமையான அதிகாரி. மாவட்டத்தில் உள்ள கிளப்புகளுக்குப் போகாத அதிகாரி. ஒருவருடனும் அதிகமாகக் கலந்து கொள்ளமாட்டார். அப்படிப்பட்டவருடைய மாற்றத்திற்குக் காரணம் என்னவென்று சொல்கிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய பாராளுமன்றச் செயலாளர் அங்கு வந்து முகாமிட்டுக்கொண்டு அவரை உடனே வரவேண்டுமென்று அழைத்திருக்கிறார். அந்தச் சந்தர்ப்பத்தில் அவரால் போக முடியவில்லை. 1—1—1979 அன்றுதான் பாராளுமன்றச் செயலாளரை நியமித்தார்கள். அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் 15—2—1979 முதல் 19—9—1979 வரை ஆக 7 மாதங்களுக்கு அவர் சுற்றுப்பயணம் செய்ய ரூபாய் 11,515 அரசாங்கக் கணக்கிலிருந்து—கலெக்டர் புரசிடிங்ஸ் போட்டு—பணம் கொடுக்கப் பட்டிருக்கிறது. கல்யாணம் எல்லாம் சுற்றுப் பயணத்தில்தான். கலெக்டர் போட்ட புரசிடிங்ஸ் அங்கே இருக்கிறது. தேவையானால் கொண்டு வருகிறேன்.

அரசாங்கத்திற்குச் சொந்தமான 'கெஸ்ட் ஹவுஸ்' இருக்கிறது. அதுதான் இப்போது அவருடைய வீடு. எப்போதும் அங்கேதான் இருப்பார். ஒரு ரூமில் அவர் இருப்பார், மற்றொரு ரூமில் அவருடைய பி.ஏ. இருப்பார். அங்கே இருப்பது இரண்டு அறைகள்தான். சில நேரங்களில் கட்சித் தலைவர் அங்கே வரும்போது ரூம் கேட்போம். எங்களுக்கும் ஒதுக்கப் படும். ஆனால் அங்கே சென்றால் ரூமில் இவர்தான் இருப்பார். பிறகு வேண்டாமென்று சொல்லிவிட்டு அவர் கன்னியாகுமரிக்குப் போய்விட்டார். எங்கள் கட்சியின் உறுப்பினர் திரு. கோபால்சாமி அவர்கள் அங்கே வர

இருந்தார். அதற்காக கலெக்டரிடமிருந்து அறையை ஒதுக்குவதற்கான ஆணையை வாங்கிவிட்டோம். திரு. கோபால்சாமி அவர்கள் கூட்டம் முடிந்து இரவு 11 மணிக்குப் போனார். ஒரு அறையில் பாராளுமன்றச் செயலாளர், மற்றொரு அறையில் அவருடைய பி.ஏ. இருந்தார். "கையில் ஆர்டர் இருக்கிறது. ஆகவே இடம் தர வேண்டும்" என்று கேட்டார். அதற்கு அவர் 'முடியாது' என்று சொல்லிவிட்டார். மறுநாள் காலை பாராளுமன்றச் செயலாளர் கலெக்டர் அலுவலகத்தில் ரிசர்வேஷன் போடுகிற அதிகாரியை போனில் கூப்பிட்டு, "என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்" என்று மிரட்டியதன் காரணமாக அலுவலர்கள் போராட்டம் நடத்தினார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மேலவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக குற்றச்சாட்டுக்களைச் சொல்லுகிறபோது, அப்படிச் சொல்லப் படுபவருக்கு, அதற்கு விளக்கம் தருகிற வாய்ப்பு இயற்கையாகவே தரப்பட வேண்டும் என்ற நியதி இருக்கிறது. சட்டப் பேரவையிலோ, மேலவையிலோ இருக்கின்ற ஒரு உறுப்பினர் மீது குற்றம் சாட்டுவது என்றாலும், முன்கூட்டியே அவருக்குத் தகவல் தெரிவிக்கவேண்டும் என்று விதிகள் இருக்கின்றன. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இதையெல்லாம் அறிவார்கள். இருந்தும் இந்த அவையில் இல்லாத, மறுப்புச் சொல்ல இயலாத, விளக்கம் அளிக்க வகை இல்லாத நிதியமைச்சர் அவர்களின் பாராளுமன்றச் செயலாளர் மீது தனிப்பட்ட குற்றச்சாட்டுக்களைச் சொல்லுவது எந்த வகையிலே விதிகளுக்கு உட்பட்டு வருகிறது என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, பாராளுமன்றச் செயலாளரின் பெயரைச் சொல்லவில்லை. அமைச்சரவையில் பொறுப்பு வகிக்கிற ஒருவர் அவர். அவர் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கிறார் என்ற குற்றச்சாட்டைச் சொல்கிறேன். இங்கு அமைச்சரவையின் சார்பிலே பதில் சொல்ல முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள், அல்லது வேறு யாராவது சொல்வார்கள். இன்னும் நேரம் இருக்கிறது. நான் பேசி முடிப்பதற்கு முன்னால் தகவல்களை அறிந்து பதில் சொல்லலாம். நான் தவறான தகவல்களைத் தந்திருந்தால், தவறான தகவல்களைத் தந்ததற்காக, என் பேரில் நடவடிக்கை எடுக்கலாம். நான் அதற்குப் பொறுப்பேற்கிறேன். இந்த அவையில் இல்லாதவர்களைப்பற்றிப் பேசக்கூடாது என்பதல்ல, பெயரைச் சொல்லிப் பேசக் கூடாது. அவையில் இல்லாத போலீஸ் அதிகாரியைப்பற்றி இதற்கு முன்னால் சொன்னேன். அவர் ரேடியோவில் பேசினார். எல்லோரும் கேட்டிருக்கிறோம். இந்தப் பிரச்சினையைப்பற்றி கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலம் கூட எழுப்பியிருக்கிறேன். அதற்கு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள். எப்படி கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன் என்றால், "ஒரு குறிப்பிட்ட தேதியில் கன்னியாகுமரி மாவட்டத்தில் கலெக்டர் அலுவலகத்தில் உள்ள அலுவலர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அதற்கான காரணம் என்ன?" என்று



கேட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விஷயத்திற்குள் நழுவி தந்திரமாக "வேலை நிறுத்தம் செய்தார்கள், பிறகு சமரசம் செய்து வைக்கப் பட்டது, வேலைக்குத் திரும்பிவிட்டார்கள்" என்று சொன்னார்கள். அவர்கள் என்ன காரணத்திற்காகச் செய்தார்கள் என்றால், பாராளுமன்றச் செயலாளரின் அத்துமீறிய பேச்சால்தான் செய்தார்கள் என்று சொன்னேன். அந்தச் சமயம் அமைச்சர் அவர்கள், "இப்போது வேலை செய்கிறார்கள். சமரசம் ஏற்பட்டுவிட்டது" என்று பதில் சொன்னார்கள். முன்னால் சொல்ல முடியாமல் நழுவிப் போனதை இப்போது சொல்லுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். முன்பு மேலவையிலே நான் பதில் சொல்லியிருக்கிறேன். அதைப்பற்றி இன்றைக்குக் குற்றச்சாட்டாகச் சொல்லுகிறபோது, அதை வெளியே படிக்கிறவர்கள் இது என்ன, யார் இப்படி நழுவிவிடுகிறார் என்று நினைப்பார்கள். இன்றைக்குச் சொல்லுவது அவைக் குறிப்பிலே இருக்கும். பத்தாண்டுகளுக்குப் பிறகு, 20 ஆண்டுகளுக்குப் பிறகு படிப்பவர்களுக்கு, "வருவாய்த் துறை அமைச்சர் நழுவிக்கொண்டே போனார்" என்றுதான் தெரியும். இன்றைக்கு இருப்பவர்களுக்குத் தெரியும் நான் அப்படிப்பட்டவன் அல்ல என்பது. நான் கேள்விக்குப் பதில் சொல்லுகிறபோது, அப்பொழுதே "பதில் திருப்தி அளிக்கவில்லை" என்று கேட்டிருந்தால், அப்போதே பதில் சொல்லியிருக்கலாம். ஆனால் பத்து நாள் கழித்துவிட்டு, "நழுவிப் போகிறேன்" என்று சொல்லுவது அவைக் குறிப்பில் இருப்பது சரிதானா? தொடர்ந்து இப்படிச் சொல்லாமல் இருப்பது நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், பத்து, இருபது ஆண்டுகளுக்குப் பிறகு படிக்கிறவர்கள் தவறாக எண்ணக் கூடாது என்று சொன்னதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். அவர் நேரிடையாகப் பதில் சொல்லவில்லை என்று மாற்றிக்கொள்கிறேன். அவர் மனம் புண்படுமானால், அவர் எப்படிச் சொல்லுகிறாரோ அப்படியே திருத்திக் கொள்ளலாம். அதில் எனக்கு ஆட்சேபனை இல்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, என் மனம் புண்படும் என்று நான் நினைக்கவில்லை. பொது வாழ்விற்கு வந்த பிறகு சிலர் மனம் புண்படும்படியும் சொல்லுவார்கள், சிலர் மகிழ்ச்சி அடையும்படியும் சொல்லுவார்கள். அதுவல்ல பிரச்சினை. நான் சொல்லுவது, என்றைக்கு நான் கேள்விக்குப் பதில் சொன்னேனோ அன்றைக்கே என்னுடைய பதில் திருப்தியளிக்கவில்லை என்று சொல்லியிருக்க வேண்டும் என்பது

தான். முன்பு சொன்ன பதில் சரியில்லை என்று பத்து நாட்கள் சிந்தித்து முடிவுக்கு வந்து வாய்ப்பு வருகிறபோது பேச வேண்டுமென்று திட்டமிட்டுப் பேசுவது நல்லதில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, இதை வளர்த்துக்கொண்டு போக நான் விரும்பவில்லை. கவனசர்ப்பின்போது கேள்வியாகத்தான் கேட்க முடியும். விளக்கம் சொல்ல முடியாது. ஆகவே பேசுகிற வாய்ப்பு கிடைக்கிறபோது, அப்படிப் பேசுவதில் தவறில்லை என்று நான் நினைக்கிறேன். என்னைவிட பாராளுமன்ற அனுபவம் உள்ள அமைச்சர் அவர்கள் இதை ஒப்புக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே அதை இத்துடன் விட்டுவிடுகிறேன். ஆகவே. இந்தப் பாராளுமன்ற செயலர், அக்டோபர் 19. . .

(பிற்பகல் 6-00)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கொஞ்சம் குறைத்துக்கொள்ளலாம். இரண்டு கருத்துக்களுக்கும் இடம் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்துக்கும் இடமிருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லும் கருத்துக்கும் இடமிருக்கிறது. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் என்னை சங்கடப்படுத்த வேண்டாம். அதனாலேதான் சொல்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** 1979 ஆம் வருடம் அக்டோபர் மாதத்திலிருந்து டிசம்பர் மாதம் வரை, அந்த கெஸ்ட் ஹவுசிலே போன் சார்ஜ் ரூ. 9,008.20 ஆகியிருக்கிறது. அவர்கள் பேசியதற்கு உள்ளது கொடுக்கப்பட்டிருக்கிறது. கலெக்டர் ஆபிசிலே இருந்து அதற்கு புரோசிடிங்ஸ் போட்டிருக்கிறார்கள். ஒரு பாராளுமன்றச் செயலர் 3 மாதத்தில் ஒரு கெஸ்ட் ஹவுஸ் போனை அந்த அளவுக்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பதால் நான் இதைச் சொல்கிறேன். அது கெஸ்ட்ஹவுஸ் கன்னியாகுமரியிலே நடந்த சம்பவம், அந்த கெஸ்ட் ஹவுசிலே அவர்கள் 24 மணி நேரம் முகாமிட்டிருக்கிறார்கள். அங்கே இருந்துகொண்டு, எல்லா அதிகாரிகளையும் அழைத்து வைத்துக்கொண்டு, அப்படிச் செய்ய வேண்டும், இப்படிச் செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்திருக்கிறார்கள். சொல்லட்டும். நல்லதுதான். ஆனால் அதிலே அவர் சொன்ன சிலவற்றை அங்கேயுள்ள மாவட்ட ஆட்சித் தலைவரால் நிறைவேற்ற முடியவில்லை. அதற்கு என்ன காரணம் என்றால், தேர்தல் வந்துவிட்டது. தேர்தல் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்த நேரத்திலேதான் இவர்கள் சொல்வது " அங்கே ஒரு பால்வாடி திறக்க வேண்டும், அதற்கு ஒரு நிகழ்ச்சி



ஏற்பாடு செய்ய வேண்டும், நான் போய் திறக்க வேண்டும், அதற்கு கலெக்டரும் வரவேண்டும்". கலெக்டர் சொல்கிறார்கள். தேர்தல் காலம் இப்போது, ஆகவே இனிமேல் அரசியல் கூட்டங்கள், அரசியல் வாதிகள் கலந்துகொள்கின்ற கூட்டங்களுக்கு நாங்கள் வரக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். வேண்டுமானால், அமைச்சர் அவர்களே நடத்திக்கொண்டு போகட்டும், பாராளுமன்றச் செயலரே நடத்திக்கொள்ளட்டும் என்பது. அதையே காரணமாகச் சொல்லி, அங்கேயிருந்து இங்கே இருக்கின்ற சிப் செக்ரட்டரிக்கு போன் போட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அது எல்லாம் ரெக்கார்டிலே இருக்கிறது. அங்கே கெஸ்ட் ஹவுசிலே செயலர் அவர்களைப் பார்க்க நூறு பேர்கள் வந்து நின்றுகொண்டிருக்கிறார்கள். அங்கே இருந்து சிப் செக்கரட்டரி அவர்களுக்கு போன் போட்டு அங்கேயுள்ள கலெக்டர் அவர்கள் " நாங்கள் சொல்கின்றவற்றை, கூட்டத்தை ஏற்பாடு பண்ண மாட்டேன் என்கிறார்கள். அவர்கள் நிறைவேற்ற மாட்டேன் என்கிறார்கள், ஆகவே அவர்களை உடனடியாக அங்கேயிருந்து மாற்றவேண்டும், மாற்றுகிறீர்களா இல்லையா " என்று கேட்டிருக்கிறார்கள். இங்குள்ள செயலாளரைக் கேட்டு அவர்கள் அவரை மாற்றச் சொல்கிறார்கள். அப்படிக் கேட்டதன் காரணமாகத்தான் அவர் அங்கேயிருந்து மாற்றப்பட்டிருக்கிறார். நான் உறுதியாகச் சொல்கிறேன். அமைச்சர் அவர்கள் தலைமைச் செயலாளர் அவர்களிடம் கேட்டு," இப்படி ஒரு சம்பவம் நடக்கவில்லை என்று இருக்குமானால், நான் இந்தப் பதவியை ராஜிநாமா செய்யத் தயாராக இருக்கிறேன். அவர்கள் பகிரங்கமாக பல அதிகாரிகளை வைத்து threaten பண்ணினால்தான் மற்ற அதிகாரிகள் எல்லாம் பயப்படுவார்கள் என்று இப்படிச் செய்கிறார்கள். அரிஜன அதிகாரிகள் நிலை இப்படி இருக்கிறது. அவர்கள் அங்கேயிருந்து மாற்றப்பட்டிருக்கிறார்கள். இந்த ஆட்சியிலே அரிசன அமைச்சருக்குப் பாதுகாப்பில்லை. அரிசன ஐ. ஏ. எஸ். அதிகாரிக்குப் பாதுகாப்பு இல்லை. அரிஜன சாதாரண மக்களுக்குப் பாதுகாப்பு இல்லை. மத்திய அரசினுடைய குழுவே சொல்லியிருக்கிறது.

பேரவைச் செயலர் பதவிகள் முதலிலே 1952 லே காங்கிரஸ் ஆட்சி இருக்கின்றபோது ஏற்படுத்தினார்கள். அதுபற்றி ஒரு ஜி. ஓ. எண் 44, நாள் 23—1—1952-ல் வந்திருக்கிறது. அந்த ஜி. ஓ. படி இவர்கள் எங்கே போனாலும், அரசாங்க கிளாஸ் 1 ஆபிசர்களுக்குள்ள சலுகைகள் எல்லாம் கொடுக்கப்படும். ஒரு கெஸ்ட் ஹவுசிலே தங்கினால், கிளாஸ் 1 ஆபிசருக்கு 1½ ரூபாய் கொடுத்தால் போதும். மற்றவர்களுக்குக் கூடுதலாக இருக்கும். அமைச்சர்கள் போனால் அதற்கு வாடகை இருக்காது. அப்படித்தான் இருந்து வந்தது. இந்தப் பாராளுமன்ற செயலருக்கும் அப்படித்தான் இருந்தது. இந்த அரசு வந்த பிறகு அரசாணை எண் 524, பப்ளிக் ஒர்க்ஸ், தேதி 24—3—1979-லே அதுமாதிரிதான் போட்டிருக்கிறார்கள். பாராளுமன்றச் செயலர்களுக்கு

கிளாஸ் 1 ஆபிசருக்குள்ள எல்லாச் சலுகைகளையும் கொடுத்திருக்கிறார்கள். அதை அப்படி Reserve பண்ணுவதற்குச் சலுகை கொடுத்திருக்கிறார்கள். ஆனால் திடீரென்று, 4—10—1979 லே ஒரு அரசாணை, எண் எம். எஸ். 1850, பப்ளிக் ஒர்க்ஸ்-லேயிருந்து போடப்பட்டிருக்கிறது. அந்த ஆணையிலே என்ன இருக்கிறது என்றால், பாராளுமன்ற செயலர் கெஸ்ட் ஹவுசிலே இருந்தால், அவர்களிடம் வாடகை வாங்கக்கூடாது. அதற்குக் காரணம் என்னவென்றால், நான் முன்னால் சொன்ன பாராளுமன்றச் செயலர் போன் பில் ரூ. 9,008 கொடுத்திருக்கிறார்கள், கன்னியாகுமரியிலே சுற்றுப் பயணம் பண்ணியதற்கு கலெக்டர் ஆபிசிலேயிருந்து, அரசாங்கப் பணத்திலேயிருந்து 11 ஆயிரம் ரூபாய்க்கு மேல் கொடுத்திருக்கிறார்கள். ஒரு கிரேட் 1 ஆபீசர் ஒரு நாளைக்கு ரூ. 1½ ரூம் ரெண்ட் என்று வைத்து அவர் கட்ட வேண்டிய அந்தத் தொகை ரூ. 10 ஆயிரம் ஆகியிருக்கிறது. அந்த ரூ. 10 ஆயிரம் கட்டாமல் இருக்க ஒரு ஜி.ஓ. அதுவும் அந்த ஜி.ஓ. வந்த நாளிலிருந்துதான் கட்டாமல் இருக்கலாமே தவிர, அந்த ஜி.ஓ.-விலே எந்த ரிட்ராஸ்ப்பெக்டிவ் எஃபக்டும் கொடுக்கவில்லை. ஆனால் அவர் கட்ட வேண்டிய பணம் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. அதாவது அரசாங்க ஆணைகளைப் போட்டு. அரசாங்க அதிகாரங்களை எல்லாம் துஷ்பிரயோகம் செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த நாட்டு மக்களுடைய வரிப் பணத்தை அவர்கள் சொந்த நலனுக்காகச் செலவு செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். இனிமேல் இங்கே தொடர்ந்து கொண்டிருந்தால், என்ன நிலை ஏற்படும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நான் அரிசன மக்களுக்கு ஏற்பட்ட நிலையைப்பற்றிச் சொன்னேன். பின்தங்கிய மக்களில் ஒரு சாரார் இருக்கிறார்கள். அவர்கள் மீனவர்கள், அந்த மீனவ மக்கள் இருக்கின்ற பூத்துறை என்ற கிராமத்திலே என்ன நடந்தது என்பதை இந்த அவையிலே நான் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் மூலம் கொண்டு வந்து பேசினேன். 14—1—1979ல் அந்தக் கிராமத்திற்கு போலீசார்கள் போனார்கள். ஏதோ போலீஸ் அதிகாரிகள் 4, 5 பேர்கள் போனார்கள். ஜீப்பிலே போனார்கள். அவர்கள் பின்பு வந்துவிட்டார்கள். மறுநாள் இரண்டு ரிசர்வ் வான், போலீஸ் அதிகாரிகள், ஆர்.டீ.ஓ. குளச்சல், டி.எஸ்.பி.யோடு சென்றிருக்கிறார்கள். அந்தக் கிராமத்திற்குள்ளே சென்று சூறையாடினார்கள். அது ஒரு கடற்கரைக் கிராமம். போலீஸ் இவ்வளவு கும்பலாக அங்கே வந்ததைக் கண்டவுடன், அங்கேயிருந்த ஆண்கள் எல்லாம் கடற்கரை ஓரத்திலே நிறுத்தி வைத்திருந்த கட்டுமரங்களிலே ஏறி ஓடிவிட்டார்கள். 500 வீடுகளிலும் போலீஸ்காரர்கள் சூறையாடினார்கள். சுமார் 500 வீடுகளிலும் இருக்கக்கூடிய பெண்களுடைய தாலிகளை அறுத்து, அங்கேயிருக்கக்கூடிய நகைகளையெல்லாம் பறிமுதல் செய்து, தட்டுமுட்டு சாமான்களை எடுத்து, கர்ப்பிணிப் பெண்களை எல்லாம் அடித்து உதைத்தி



ருக்கிறார்கள். அன்றைக்குக் கேட்கக்கூடாதா என்று கேட்கலாம். அன்றைக்கு கால் அட்டென்சன் மோசன் கொடுக்கப்பட்டிருந்தது. அதன் பேரில் இரண்டு கேள்விகள்தான் கேட்க முடியும். கேட்கின்ற அளவுக்குக் கேட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்**: தலைவர் அவர்களே, இந்த சம்பவம் கடந்த மாதம் 14-ம் தேதி குமரி மாவட்டத்திலே நடைபெற்றதாகவும், அதைப்பற்றி உடனடியாக அந்தத் துறையினுடைய அமைச்சர் என்ற முறையிலே தலையிட்டு, நடவடிக்கை எடுத்து ஒரு சுமுகமான நிலைமையை உருவாக்க வேண்டுமென்றும் அந்தப் பகுதியிலே உள்ள மீனவர்கள் என்னிடம் கேட்டுக்கொண்டதன் பேரில், கடந்த மாதம் 26 ஆம் தேதி தான் நான் நாகர்கோயில் சென்றேன். நானே நேரிலே சென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களையும் வைத்து, அதுபோலவே, மாவட்டத் துணைக் காவல்துறை அதிகாரிகளையும் வைத்து, அதுபோலவே பாதிக்கப்பட்ட மீனவர்களையும் வைத்து சமாதானப் பேச்சு வார்த்தைகள் நடத்தினேன். அப்போது இரு தரப்பினரும் அவரவர்களுடைய வாதங்களைச் சொன்னார்கள். இரு தரப்பிலேயிருந்தும் இருவிதமான வாதங்கள், விவாதங்கள் எல்லாம் அந்தச் சம்பவத்தைப்பற்றி ஏற்பட்டன. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கின்ற சம்பவம் உண்மையான சம்பவம் என்று ஏற்றுக்கொள்வதற்கில்லை என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்**: தலைவர் அவர்களே, நான் சொல்வது உண்மையான கருத்து என்று அவர்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், உண்மையான கருத்து எது ?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்**: நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்லவில்லை. அங்கே இந்த சம்பவம் நடந்ததற்கான காரணம், பூத்துறை என்பது மீனவர்கள் கிராமம். அதற்குப் பக்கத்திலே இருக்கின்றது, இறையுமன் துறை என்கின்ற இன்னொரு மீனவ கிராமம். இந்த இரண்டு மீனவ கிராமங்களிலும் வாழ்கின்ற மீனவர்கள் மத்தியில் மீன் பிடிப்பதிலே ஏற்பட்ட தகராறு நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிறது. அவர்களுக்குள்ளே ஏற்பட்ட மோதலின் காரணமாக, காவல் துறை தலையிட்டது என்பதும், ஆகவே இந்தச் சம்பவம்பற்றி பூத்துறையைச் சேர்ந்தவர்கள் ஒரு விதமான தகவலைத் தருகிறார்கள் என்றும், இறையுமன்துறையைச் சேர்ந்தவர்கள் இன்னொருவிதமான தகவலைத் தருகிறார்கள் என்பதையும் சொன்னார்கள். இந்த விவரத்தை நான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். நான் அதை இன்னும் கொஞ்சம் விரிவாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். இறையுமன்துறை என்பது ஒரு கிராமம். அதையொட்டி இருப்பது பூத்துறை கிராமம். மீனவர்கள் வாழ்கின்ற இரண்டு கிராமங்கள். இரண்டிலும் இருப்பவர்கள் ஒருவருக்கொருவர் உறவினர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு வேளை அவர்களுக்கு உறவினராக இருப்பார்கள் என்று நம்புகிறேன். அந்தக் கிராமத்தில் இரண்டு பேர்களுக்கும் மீன் பிடிப்பதிலே ஒரு தகராறு. நான் அந்தத் தகராறுக்குள்ளே வரவில்லை. அந்தத் தகராறை அடக்குவதற்கு, தடுப்பதற்குப் போன போலீசார் செய்த அட்டூழியத்தைத்தான் நான் சொல்கிறேன். அந்த அட்டூழியம் நடக்கவில்லை என்று ஒரு நபர் எழுதிக் கொடுத்து. அது அமைச்சர் அவர்கள் கையிலே இருக்குமானால், நான் இதை வாபஸ் பெற்றுக்கொள்கிறேன். இறையுமன் துறையிலே இருக்கக்கூடிய பாதிரியாரும், இறையுமன்துறையிலே இருக்கக் கூடிய மீனவ மக்களும், பூத்துறையில் பாதிக்கப்பட்டவர்களும் சேர்ந்து சொல்லட்டும். பூத்துறை கிராமத்திலே போலீசார் சென்று 500 வீடுகளைச் சூறையாடியிருக்கிறார்கள், பெண்களை அவமானப்படுத்தியிருக்கிறார்கள். நகைகள் 50,000 ரூபாய்க்குமேல் மதிப்புள்ள பொருள்களைச் சேதப்படுத்தி யிருக்கிறார்கள். 52 பேர்களைக் காயப்படுத்தி மருத்துவமனையிலே இருப்பதைக்கூட அவர்கள் அமைச்சர் அவர்களிடம் சொன்னார்கள். 26 ஆம் தேதி 12½ மணிக்கு கலெக்டர் அவர்கள் அலுவலகத்திற்கு வந்து சேர்ந்த அமைச்சர் அவர்களிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். கழுத்திலேயிருந்த தாலியை 4 போலீசார் இழுத்ததன் காரணமாக ஏற்பட்ட காயத்தையும் அவர்களிடத்திலே காட்டினார்கள். நம்முடைய மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களிடத்திலே காட்டினார்கள். 15 பெண்களுக்கு மேல் போய் அவர்களிடம் முறையிட்டார்கள். ஒவ்வொரு பெண்ணும் தனக்கு ஏற்பட்ட கதியைச் சொன்னாள். ஒரு 21 வயது பெண், திருமணம் ஆகி 8 மாதம் ஆகிறது. அந்தப் பெண் கழுத்தில் 4 போலீசார் தாலியை இழுத்து எடுத்ததைச் சொன்னார்கள். மற்ற செயல்களுக்கு அழுதாள். ஒரு பெண் அதற்குப் பிறகு என்ன நடந்தது என்று சொல்லாமல் அழுதால், என்ன நடந்தது என்பதைக் கண்டுபிடிக்கின்ற திறன் நம்முடைய மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களுக்கு இருக்கும் என்று நம்புகிறேன். இதுபற்றி அந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் மாறுபட்ட கருத்துக்களைச் சொன்னார்கள் என்று சொல்கிறார்கள். அப்படி இருக்கும்போது, அமைச்சர் அவர்கள் ஏன் அந்த கிராமம் வரை போகவில்லை என்று நான் கேட்கிறேன். அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு வந்தார்கள், இரண்டு மாறுபட்ட கருத்துக்கள் சொல்லப்பட்டன என்று சொன்னார்கள், எந்தக் கருத்து உண்மை என்று ஆராய்வதற்கு ஏன் அந்தக் கிராமத்திற்குப் போகவில்லை என்று கேட்கிறேன்.





(பிற்பகல் 6.10)

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** எதிர்க் கட்சித் தலைவரவர்கள் மிகத் திறமையாக குற்றச்சாட்டை என்மீது சுமத்திவிடலாமா என்று பார்க்கிறார்கள். கிராமத்திற்கு நான் ஏன் போகவில்லை என்று கேட்க எந்தவிதமான நியாயமும் இல்லை. காரணம், இரண்டு கிராம மக்களையும் சமாதானப்படுத்தி, பழைய சுமுகமான நிலைமைக்கு அவர்களைக் கொண்டுவர வேண்டுமென்றுதான் நான் நாகர்கோவில் சென்றேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் இரண்டு சாராரையும் கூட்டிவைத்து, ஏறத்தாழ 4 மணி நேரம் பேசி, என்னுடைய முன்னிலையில் இரண்டு பேர்களும் சமாதானமாகப் போய், தங்களுடைய கிராமங்களுக்குப் போவதாகச் சொன்னார்கள். ஆகவேதான் நான் அங்கே போகவில்லை. எந்தக் காரியத்திற்காக நான் போனேனோ, அந்தக் காரியம் முடிந்துவிட்டதால், கிராமத்திற்குப் போக வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு உணவு அமைச்சரவர்கள்மீது குற்றம் சுமத்த வேண்டுமென்ற எண்ணம் கிடையாது. அவர்கள் அங்கு வந்து, அவர்களால் இயன்ற முயற்சி செய்தார்கள் என்பதை நான் ஒத்துக்கொள் கிறேன். ஆனால் இரண்டு கருத்து வந்தால், எந்தக் கருத்து உண்மை என்பது அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும். அவர்கள் மத்தியில் ஏற்பட்ட தகராறைத் தீர்க்க முயற்சி எடுத்தார்களே ஒழிய, அவர்களுக்கு ஏற்பட்ட இன்னல், கொடுமை, போலீஸ் அட்டூழியம் அதுபற்றி அவர்கள் கேட்டது குறித்து விசாரித்தார்களா ? நான் சொல்லுவதை விட்டுவிடுங்கள். நான் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவன். அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள், அவர்களுடைய கூட்டணியில் இருக்கிறவர்கள், அந்தத் தொகுதி எம்.எல்.ஏ. கூறுகிறார். யார் தேர்ந்தெடுக்கப்பட்டதால், நாட்டு மக்கள் எங்களிடம் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்று சுட்டிக் காட்டிச் சொல்லிக் கொண்டி ருக்கிறார்களோ, அந்த திரு. பாக்கியதாஸ், எம்.எல்.ஏ., அவர்கள் 'தீக்கதிர்' பத்திரிகையில் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அதில் என்ன சொல்லி யிருக்கிறார் என்றால், "பூத்துறைப் பகுதியை குமரி மாவட்டப் போலீசார் ஒரு வேட்டைக் காடாக மாற்றியுள்ளனர்". ஒரு பகுதியைத்தான் வாசிக் கிறேன். "பெண்களின் தாலிகள் மற்றும் ஆபரணங்கள், மீன் பிடி வலைகள் முதலியவற்றையும் போலீசார் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். இது இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் நடைபெற்றுள்ளது என்பதை அரசு உணர வேண்டும். பூத்துறையில் போலீசார் நடத்தியுள்ள அக்கிரமங்களைப் பார்க்கும்போது, சாதாரண அப்பாவி மக்களை அரசுக்கு எதிராகத் திருப்பிட போலீசார் திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறார்கள் எனத் தோன்றுகிறது.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1980 பிப்ரவரி 13

எனவே பூத்துறையில் போலீஸ் அக்கிரமம் பற்றி நீதி விசாரணை நடத்த வேண்டும்" என எம்.எல்.ஏ., அறிக்கை விடுகிறார். அந்தப் பத்திரிகை 'தீக்கதிர்' பத்திரிகை. 17—1—1980ல் வந்திருக்கிறது. அன்று இந்த அவையில் அவை முன்னவர் அவர்கள் பதில் அளித்துக்கொண்டிருந்தபோது, 42 பெண்கள் கையெழுத்துப் போட்ட மனுவை அவர்களிடம் கொடுத்தேன். எந்தெந்த இடத்தில் காயம் பட்டது, மருத்துவ மனையில் எத்தனை நாட்கள் டிரீட்மெண்ட் என்று 52 பேர்களுக்குப் பட்டியல் கொடுத்தேன். 14 ஆம் தேதி சம்பவம் நடந்தது. 22 ஆம் தேதிவரை யாரும் வரவில்லை. ஆகவே 'மக்கள் பயப்பட வேண்டாம், எல்லோரும் வர வேண்டும்' என்று கலெக்டர் அறிக்கை விட்ட பத்திரிகையையும் கொடுத்தேன். 30, 31 தேதி 'தீக்கதிர்' பத்திரிகையைக் கொடுத்தேன். அவர்கள் அவமானப்படுத்தப்பட்டார்கள், மானபங்கப்படுத்தப் பட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் என்னை மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன். சுருங்கச் சொன்னால், 26 ஆம் தேதி அவர்கள் அங்கு வந்து, நாராயண்பூர் போன்று சம்பவத்தைப் பெரிதாக்கக்கூடாது, அதற்காக அவருடைய செல்வாக்கை அந்தச் சமூகத்தில் பயன்படுத்தி, அவர்களை அமைதிப் படுத்தினார்கள். "ஏதோ நடந்தது நடந்துவிட்டது, இதைப் பெரிதாக்காதீர்கள், கலைக்க காரணம் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள், இது ஒரு காரணமாகிவிடக் கூடாது, நீங்கள் எல்லோரும் அமைதியாகிவிடுங்கள்" என்று சொல்லி, எல்லாம் செய்கிறோமென்று சொன்னார்கள். 25 ஆம் தேதி வரை எங்களைப் பார்த்து, சர்வ கட்சிக் கூட்டம் கூட்டி, கம்யூனிஸ்ட் தலைமையிலே கூட்டம் போட்டு, எங்கள் கட்சியினரும் கலந்துகொண்டு, அவர்கள் கையெழுத்துப்போட்ட கடிதத்தை வாங்கிக்கொண்டு, 29 ஆம் தேதி புறப்படுகிறேன். அப்போது யாரைக் கூப்பிட்டாலும் வரவில்லை. என்ன என்று கேட்டேன். அமைச்சர் அவர்கள் எல்லாம் சொல்லிவிட்டார்கள் என்று சொன்னார்கள். அப்போதுதான் எனக்குப் புரிந்தது. இவர்கள் போய் அமைதிப்படுத்திவிட்டார்கள் என்று. ஒரே கம்யூனிட்டிதான் அங்கே. ஆனால் ஆர்.டி.ஓ. முன்னாலே, ஒரு டி.எஸ்.பி. முன்னாலே 500 போலீசார் செய்த இந்த அட்டூழியத்தை அமைதிப்படுத்திய பிறகு அந்த இரண்டு அதிகாரிகளையும் மாற்றியிருக்கலாம் அல்லவா? ஒரு பாராளுமன்றச் செயலர் கூட்டம் போடச் சொன்னார். போடவில்லை என்பதற்காக போலியேயே கலெக்டரை பார்லிமெண்ட் செக்ரட்டரி மாற்றினாரே, அதைவிட உயர்ந்த பதவியில் உள்ள அமைச்சர் அவர்கள் அந்த மக்களை, அந்த மீனவர்களைக் கொடுமைப்படுத்தியவர்களை ஏன் டிரான்ஸ்பர் பண்ணக்கூடாது என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

1¾ மணி நேரம் ஆகிவிட்டது. மாண்புமிகு முன்னவரவர்கள் முதலமைச்சரவர்களுக்கு உடல் நலமில்லை, நான் சீக்கிரமாக முடித்துக்கொண்டால் அவரும் சுருக்கமாகப் பேசிவிடுவார் என்று சொன்னார்கள்.



1980 பிப்ரவரி 13]

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : சொல்ல வேண்டியதைச் சொல்லுங்கள். நாளை மறுநாள்தான் அவர் பதில் சொல்லப் போகிறார்.

**திரு. ம. சங்கரலிங்கம்** : நான் நிறையச் சொன்னால் அவர் நிறைய ஆராய்ச்சி பண்ணிச் சொல்ல வேண்டும். (சிரிப்பு)

(திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் அமர்ந்து கொண்டு 6.30 மணிக்கு முடித்துக்கொள்ளுங்கள் என்று கூறினார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் 6.30 மணிக்கு முடித்துக்கொள்ளுங்கள் என்று கூறுகிறார். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் திரு. வீராசாமியின் ஆலோசனையை ஏற்றுக்கொள்வதாகக் சொல்கிறார்கள். ஆகவே 6.30 மணிக்கு முடித்துக்கொள்ளலாம்.

**திரு. ம. சங்கரலிங்கம்** : தலைவரவர்களே, எங்கள் கட்சியின் சிறப்பு அதுதான். ஏனென்றால் தலைவன், தொண்டன் என்று பார்க்காமல், எல்லோருடைய நல்ல கருத்தையும் ஏற்றுக்கொள்கிறோம், சர்வாதிகாரப் போக்கல்ல.

அரசு நல்ல காரியங்களைச் செய்யாமல், தனக்குரிய பணியான சட்டம், அமைதி, ஒழுங்கு ஆகியவற்றை நாட்டில் நிலை நாட்ட முடியாமல் இருந்தாலும், அரசு மிகச் சக்தி வாய்ந்ததாக இருந்துகொண்டு பழி வாங்குகிற செயலைச் செய்து வருகிறது. அதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. இப்போது ஒரு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். நம்முடைய கல்வி இலாக்காவிலிருந்து அந்த ஆணை வந்திருக்கிறது. 'நெஞ்சுக்கு நீதி' என்ற புத்தகத்தைத் தடை செய்த அந்த ஆணையின் எண்ணைச் சொல்கிறேன். அரசு கடிதம் எண். 33345/பி2/76-24 கல்வி (இ-2) துறை, சென்னை நாள் 8—11—1979. பள்ளிக் கல்வி இயக்குநர் நடவடிக்கை என்று போட்டு, அதில் பொருள் என்னவென்றால், "கல்வி—முன்னாள் முதலமைச்சர் திரு. மு. கருணாநிதியால் எழுதப்பட்ட 'நெஞ்சுக்கு நீதி' என்ற புத்தகம் மாநிலத்தின் எல்லா நூல் நிலையங்களிலிருந்தும் திரும்பப் பெறப்படுகிறது. பள்ளி நூல் நிலையங்களுக்கோ அல்லது பிற நூல் நிலையங்களுக்கோ இனிமேல் வாங்கக் கூடாது. மாணவர்களுக்கு இந்தப் புத்தகங்களைக் கொடுக்கக் கூடாது. முதன்மைக் கல்வி அதிகாரி எல்லாப் பள்ளிகளுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவிக்க வேண்டும்". இது ஒரு ஆணை. 1979 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் எட்டாம் தேதியிலே இந்த அரசு கடிதம் எழுதி பள்ளிக் கல்வி இயக்குநர் எல்லா முதன்மைக் கல்வி அலுவலருக்கும் எழுதி, எல்லா நூல் நிலையங்களுக்கும் எழுதி, நூல் நிலையங்களிலிருந்து புத்தகத்தை எடுத்து விட்டார்கள். நான் சட்டமன்ற நூலகத்திலே இந்தப் புத்தகம் இருக்கிறதா

என்று பார்த்தேன். இல்லை. எங்கே என்று கேட்டபோது, ஆறு மாதமாக ஒரு அமைச்சரிடம் இருக்கிறது என்றார்கள். அமைச்சரிடம் கேட்டு வாங்கு வதுதானே என்று கேட்டால். அவர்கள் பயப்படுகிறார்கள். ஒன்றும் சொல்ல வில்லை. இக்கின்பாதம்சுக்குப் போன் பண்ணி இந்தப் புத்தகம் இருக்கிறதா என்று கேட்டேன். அவர்கள் அந்தப் புத்தகத்தைத் தடை பண்ணி விட்டார் களே, தெரியாதா என்றார்கள். அதற்கு ஏதாவது 'ரெபரன்ஸ்' வந்திருக் கிறதா என்று கேட்டு, அந்த லெட்டரைப் பார்த்து எடுத்திருக்கிறேன். அதில் 'முன்னாள் முதல்வர்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆட்சியிலுள்ளவர் களும் 'முன்னாள் முதல்வர்' ஆகிற நாள் எத்தனை என்று எண்ணிக் கொண்டு இருக்கிறார்கள். 'முன்னாள் முதல்வர்' மதிக்கப்பட வேண்டாமா? மதிப்பிற்குரிய இந்திரா காந்தி அம்மையார் மத்தியில் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு, காபந்து சர்க்கார் பிரதமர் முன்னால் இருந்த வீட்டிலேயே இருக்கலாமென்றும், முன்னாள் டெபுடி பிரைம் மினிஸ்டர் திரு. ஜெகஜீவன் ராம் அவர்கள் முன்னால் இருந்த வீட்டிலேயே இருக்கலாமென்றும் சொல்லி யிருக்கிறார்கள். காபந்து சர்க்கார்—உசர்ப்பிங் கவர்ன்மென்ட்—பிரதமராக இருந்தபோது இருந்த வீட்டிலேயே இருங்கள் என்று சொல்லி அந்த வீட்டை அமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட்ட லிஸ்டிலிருந்து மாற்றி, பாராளு மன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்குகிற வீடுகளோடு சேர்த்து, அவர்களுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். இந்தக் காலகட்டத்தில், திருமதி இந்திரா காந்தியை சர்வாதிகாரி என்று சொல்லும்போது, இங்குள்ள ஆட்சியாளர்கள் எப்படிப் பட்டவர்கள் என்பதை அவர்களுடைய செய்கைகள் உலகத்திற்கு அறிவித்துக் கொண்டிருக்கின்றன. இதற்கு முன்னால் இருந்த முதல்வர் எழுதிய புத்தகத்தை எல்லா லைப்ரரிகளிலிருந்தும் திரும்பப்பெற்று, இனி அந்தப் புத்தகத்தை நூல் நிலையங்கள் வாங்கக்கூடாது, மாணவர்களுக்குக் கொடுக்கக் கூடாது என்று உத்தரவு போட்டிருக்கிற அரசுக்கு அந்த நூலில் இன்னின்ன தவறுகள் இருக்கின்றன, தேசத் துரோகக் குற்றம் இருக்கிறது என்று சொல்லி, அதனால் தடை செய்கிறோம் என்று சொல்லும் தைரியம் இருக்க

(பிற்பகல் 6-20)

வேண்டாமா? அதிகாரிகளை வைத்துக்கொண்டு முன்னாள் முதல்வர் மீது போடுகின்ற பழி எத்தனை நாளுக்கு ஓடும்? அந்தப் புத்தகத்தைப்பற்றி புத்தகத்தை வெளியிட்டவர் பதிப்புரையில் என்ன எழுதியிருக்கிறார் என்பதையும் நான் உங்களுக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன். "கலைஞர் வெறும் எழுத்தாளர் மட்டும் அல்ல. சிறந்த கவிஞர். எழுத்திலே உள்ள அத்தனை கோணங்களையும் நுட்பங்களையும் அறிந்தவர். ஈடு இணையற்ற பேச்சாளர். அரசியல்வாதி, அரசியல் தியாகி, ஆட்சித் திறமை மிக்கவர். சமூக சீர்திருத்தவாதி, பகுத்தறிவாளர். அறிஞர் அண்ணாவின் இதயத்தைக் கவர்ந்தவர். நெஞ்சுறுதி மிக்கவர், முப்பது, நாற்பதாண்டுப் பொது வாழ்வின்





அலை மோதல்களை, அனுபவங்களை இவரது எழுத்தாற்றலின் வாயிலாக அறியும்போது நமக்கு மெய் சிலிர்க்கிறது. ஒரு வீரம் செறிந்த காவியம் போல் இந்த நூல் அமைந்துள்ளது. நமக்கெல்லாம் தெரியாத பல ரகசி யங்கள் இந்த நூலில் இழையோடுகின்றன. பூத்துக்குலுங்கும் நகைச்சுவைக் குமிழ்களுடன் கூடிய நீரோட்டம் போன்ற அவருடைய தெள்ளு நடை இந்தப் புத்தகத்தில் துள்ளி விளையாடுகிறது.

அவருடைய அரசியல் வாழ்வு, பொது வாழ்வு, சொந்த வாழ்வு மூன்றும் கங்கையும், யமுனையும், சரசுவதியும் போல் கலந்து வெள்ளப் பெருக்கெடுத் தோடுகின்றன.

கலைஞரின் எழுத்தை நூல் வடிவமாக வெளியிடுவதன் மூலம் தினமணி கதிர் நிறுவனத்தினர் பெருமகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்றனர் என்று எழுதியிருக்கிறார்கள். இந்த நூலைத்தான் அனைத்து நூலகங்களிலிருந்தும் தடை பண்ணியிருக்கிறார்கள். இந்த அநீதியான செயல், இது தர்மத்துக்கு ஒவ்வாத தான்தோன்றித்தனமான செயல், ஒருவர் மீது பழி வாங்க வேண்டு மென்ற செயல் வளர்ந்து வருவதன் மூலம் கீழே இறங்கிக் கொண்டிருக்கிறார் கள். தேர்தலுக்கு முன்பே இப்படியெல்லாம் செய்தார்கள். தேர்தல் தோல்விக்குப் பிறகு இது பெருகிக்கொண்டு வருகிறது என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு உதாரணத்திற்குத்தான் இதைச் சொன்னேன். இப்போது தேர்தலில் தோல்வி அடைந்து விட்டார்கள். இப்போது சட்ட மன்ற உறுப்பினர்களின் யோசனையைக்கூட கேட்கிறார்கள். அவர்கள் "மதுவிலக்கைக் கடுமைப்படுத்தியதனால்தான் ஓட்டுப் போடவில்லை" என்று சொன்னவுடன், மது குடிப்பதற்கு லைசன்ஸ் வைத்தார்கள். இப்போது ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்குப் பின்னாலும் சாராய வியாபாரிகள் "எனக்கு லைசென்ஸ் வாங்கித்தர வேண்டும், எனக்கு லைசென்ஸ் வாங்கித்தர வேண்டும்" என்று சுற்றுகிறதாகச் சொல்கிறார்கள். உண்மையில் குடிக்கிற வர்களுக்கு லைசென்ஸ் கொடுக்கக் காரணம் அவர்களை போலீசார் பிடிக்காமல் பாதுகாப்புக் கொடுக்கத்தான் என்று முதலமைச்சர் சொல்லு கிறார். சரி, பாதுகாக்கட்டும். ஆனால் இதற்கு முன்னால் மதுவிலக்கு சம்பந்தமாகக் கொண்டு வந்த சட்டத்திலே குடிப்பவர்களுக்கு தண்டனை எப்படி கொடுக்கப்பட்டது? அபராதம் விதிக்கப்பட்டது. மது காய்ச்சு பவர்களுக்கும், விற்பவர்களுக்கும்தான் சிறை தண்டனை கொடுக்கப்பட்டது. அந்தச் சட்டம் அமுலில் இருக்கிறது. அந்தச் சட்டத்தை நாம் அமுல் படுத்திக் கொண்டிருந்தோம். அதை இந்த அரசுதான் கொண்டு வந்தது. நாங்கள் அதனுடைய தவறுகளை எல்லாம் சுட்டிக்காட்டி நாட்கணக்கில் விவாதித்து எடுத்துச் சொன்னோம். அப்போது கேட்கவில்லை, சரி. இப்போது அந்தப் பழைய சட்டத்தையே அமுலில் இருக்கிறது என்று

சொன்னாலே போதுமே. நீதிபதிகளுக்கு எல்லாம் discretionary power இருக்கிறது. ஒரு ஏழை, அவன் கை வண்டி ஓட்டி பிழைக்கிறான், மாலையில் 7 மணிக்கு களைப்புக் காரணமாக கொஞ்சம் சாராயம் குடிக்கிறான். அந்த நீதிபதி அவனுக்கு 5 ரூபாய் அபராதம் போடுவார். ஒரு பணக்காரன் குடிக்கிறான் என்றால், அவனுக்கு 200 ரூபாய் அபராதம் போடுவார். சாராய வியாபாரம் பண்ணினால், அவனுக்கு சிறை தண்டனை விதிப்பார். அதுதானே பழைய சட்டம். அதையே கொண்டு வந்திருக்கலாமே. ஆகவே முதலமைச்சர் அவர்கள் சொன்னதை நாங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. திட்டமிட்டு இப்போது இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். சாராய வியாபாரிகளுக்கு சாராயக் கடை வைக்க அனுமதி கொடுப்பதன் மூலம் பல இலட்ச ரூபாயைச் சேர்த்துக் கொள்வதற்குத் திட்டமிட்டு இதைச் செய்கிறார்கள். மதுவிலக்கை ரத்துச் செய்கிறோம் என்று சொல்லவில்லை. அது அப்படியே தான் இருக்கிறது. ஆனால் யாரும் கடை வைக்கலாம், யாரும் சாராயம் குடிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். 25 ரூபாய் கட்டினால் லைசென்ஸ் வாங்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த லைசென்ஸை வழங்குவதற்கான அதிகாரம் தாசில்தாருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. தாசில்தாரிடம் போவதற்கு எம்.எல்.ஏ.யின் உதவி வேண்டும்.,எம்.எல்.ஏ-க்கு என்ன வேண்டும் என்பதை அழைத்துப் போகிறவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டியது. அதற்குப் பிறகு இத்தனை லைசென்ஸ் நான் வாங்கித் தந்திருக்கிறேன், எனக்கு ஓட்டு போட வேண்டுமென்று சொல்ல வேண்டியது. இத்தனை மதுக்கடைகளுக்கு அனுமதி வாங்கித் தந்திருக்கிறேன், இத்தனை சாராயக் கடைகளுக்கு அனுமதி வாங்கித் தந்திருக்கிறேன் என்று சொல்லி, அப்படியாவது தேர்தல் செலவெல்லாம் வரும் என்று நினைக்கிறார்கள்.

ஆகவே இப்போது ஆட்சியாளர்கள் தங்களுடைய வெற்றிக்காகவும், தங்களுடைய கட்சியினுடைய இழந்த தோல்வியை மீண்டும் வெற்றியாக மாற்றுவதற்காகவும் இப்படியெல்லாம் செய்கிறார்கள். அதற்காக அரசு இயந்திரத்தையும், அரசினுடைய பணத்தையும், அரசினுடைய முழு சக்தியையும், ஆட்சியாளர்கள் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் ஒரு வினாடி கூட இந்த நாட்டினுடைய ஆட்சிப் பொறுப்பிலே இருக்க லாயக்கற்றவர்கள். உலகப் புகழ்பெற்ற தத்துவ மேதைகள் எல்லாம் இப்படிப்பட்ட தத்துவத்தை, நான் முதலிலேயே சொல்லியபடி, எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அந்தத் தத்துவ மேதைகள் எல்லாம் சொன்னதைத் தான் நமது மேதையாகிய முதலமைச்சர் அவர்கள் அழகாக இடைத் தேர்தலின்போது செயலில் காட்டினார்கள். இப்போது அவர்கள் வேறொரு நிலையிலே இருந்துகொண்டு பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை நீடிப்பது நல்லதல்ல என்று சொல்லி, நல்லபடியாகச் சிந்தித்து ஒரு நல்ல





முடிவை எடுக்க வேண்டுமென்று நான் விரும்பி, இந்த ஆளுநர் உரையின்மீது நான் ஒரு வார்த்தைகூட என்னுடைய கருத்தாகச் சொல்லவில்லை, காரணம் ஆளுநர் உரையைத் தயார் செய்து கொடுப்பதற்கு தகுதியற்ற அரசு என்பதைச் சுட்டிக்காட்டி, தகுதியற்றவர்களால் தயாரித்துக் கொடுக்கப்பட்ட ஆளுநர் உரையிலே நான் விவாதம் செய்ய ஒன்றுமில்லை என்பதை மாத்திரம் எடுத்துக்காட்டி இந்த நிலை நீடிக்காமல் ஜனநாயகத்தைக் காக்க முன் வாருங்கள் என்று அழைத்து அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சட்டமன்ற மேலவைக் கட்சித் தலைவர்களைக் கலந்து பேசி எடுத்த முடிவின்படி ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதில் உரை 15—2—1980 அன்று காலை 11 மணிக்கு எடுத்துக்கொள்ளப்படும். அன்று கேள்வி நேரம் உட்பட வேறு எந்த நிகழ்ச்சிகளும் எடுத்துக்கொள்ளப் படமாட்டாது.

மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் 15—2—1980 அன்று காலை 11 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 6,25)

## 6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

* 65. Notification issued with G.O. Ms. No. 1701, Home, ted the 6th July 1979 in regard to an amendment to rules 360 d 363 of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid the table of the House under section 133(3) of the Motor hicles Act, 1939 (Central Act IV of 1939)].

### B. Reports, Notifications and Other Papers.

Nil.

இணைப்பு

(344ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண் 62-க்கான விடையைக் காண்க.)

(ஆ) தமிழ் நாட்டில் மண்ணெண்ணெய் (வர்த்தகம் ஒழுங்குபடுத்தல் ஆணை, 1973ன் கீழ் 1—1—1979 வரை 586 மொத்த வியாபாரிகளுக்கு உரிமங்களும் 13,856 சில்லறை விற்பனையாளர்களுக்கு பதிவுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன. மாவட்ட வாரியான விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| மாவட்டம் | மொத்த வியாபார உரிமம். | சில்லறை விற்பனை பதிவுச் சான்றிதழ். |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| சென்னை | 71 | 2863 |
| செங்கற்பட்டு | 38 | 286 |
| வடஆற்காடு | 37 | 785 |
| தென்ஆற்காடு | 73 | 764 |
| சேலம் | 62 | 1401 |
| தர்மபுரி | 13 | 558 |
| புதுக்கோட்டை | 11 | 362 |
| மதுரை | 44 | 1022 |
| கன்னியாகுமரி | 9 | 298 |
| நீலகிரி | 7 | 422 |
| கோவை | 60 | 1799 |
| தஞ்சை | 47 | 1068 |
| திருச்சி | 32 | 764 |
| திருநெல்வேலி | 43 | 1068 |
| இராமநாதபுரம் | 39 | 396 |
| மொத்தம் | 586 | 13856 |

(ஆ) தமிழ் நாட்டில் 1978ம் ஆண்டில் 4,01,737 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய்யும், 1979ம் ஆண்டில் முதல் காலாண்டில் 1,09,540 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய்யும் எண்ணெய் நிறுவனங்களால் மொத்த வியாபாரிகளுக்கு விற்கப்பட்டது. மாவட்ட வாரியான விபரம் கீழே தரப்பட்டுள்ளது :—



**1978-ம் ஆண்டில் மாவட்ட வாரியாக எண்ணெய் நிறுவனங்கள் மொத்த வியாபாரிகளுக்கு விற்பனை செய்த மண்ணெண்ணெயின் அளவு.**

| வரிசை எண் | மாவட்டம். | விற்பனை அளவு. I.O.C. | விற்பனை அளவு. I.B.P | விற்பனை அளவு. B.P.C. | விற்பனை அளவு. H.P.C. | விற்பனை அளவு. H.P.C. (VMU) | மொத்த விற்பனை அளவு. |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 | சென்னை .. | 51,538 | 1,721 | 8,087 | 15,994 | 7,572 | 84,912 |
| 2 | செங்கற்பட்டு .. | 34,688 | 403 | 4,035 | 8,454 | 167 | 47,747 |
| 3 | வட ஆற்காடு .. | 14,094 | .. | 6,591 | 4,225 | 2,296 | 27,206 |
| 4 | தென் ஆற்காடு .. | 16,221 | 1,505 | 5,100 | 2,375 | 2,155 | 27,356 |
| 5 | தர்மபுரி .. | 6,788 | .. | 284 | 524 | .. | 7,596 |
| 6 | சேலம் .. | 26,700 | 282 | 1,484 | 1,305 | 1,814 | 31,585 |
| 7 | கோயம்புத்தூர் .. | 38,754 | .. | 6,205 | 7,121 | 4,701 | 56,781 |
| 8 | நீலகிரி .. | 3,454 | .. | .. | 929 | .. | 4,383 |
| 9 | தஞ்சை .. | 16,584 | .. | 2,057 | 5,828 | 1,635 | 26,104 |
| 10 | திருச்சி .. | 13,323 | .. | 1,875 | 5,455 | 1,434 | 22,087 |
| 11 | புதுக்கோட்டை .. | 4,437 | .. | 236 | 108 | 633 | 5,414 |
| 12 | மதுரை .. | 16,196 | 1,063 | 1,512 | 6,485 | 936 | 26,192 |
| 13 | இராமநாதபுரம் .. | 9,349 | .. | 954 | 2,061 | 637 | 13,001 |
| 14 | திருநெல்வேலி .. | 7,720 | .. | 2,054 | 4,169 | 1,994 | 15,937 |
| 15 | கன்னியாகுமரி .. | 4,040 | .. | 178 | 1,069 | 179 | 5,436 |
| | மொத்தம் .. | 2,63,856 | 4,974 | 40,652 | 66,102 | 26,153 | 4,01,737 |

1979-ம் ஆண்டு முதல் காலாண்டில் எண்ணெய் நிறுவனங்கள் மொத்த வியாபாரிகளுக்கு விற்பனை செய்த மண்ணெண்ணெயின் அளவு.

| வரிசை எண். | மாவட்டம். | I.O.C. | I.B.P. | B.P.C. | H.P.C. | H.P.C. (VMU) | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 | சென்னை | 14,668 | 575 | 2,107 | 5,315 | 1,686 | 24,351 |
| 2 | செங்கற்பட்டு | 9,771 | 59 | 1,160 | 2,418 | 112 | 13,460 |
| 3 | வட ஆற்காடு | 3,536 | .. | 1,704 | 1,328 | 630 | 7,198 |
| 4 | தென் ஆற்காடு | 5,054 | 331 | 1,223 | 308 | 189 | 7,195 |
| 5 | தர்மபுரி | 1,973 | .. | 32 | 48 | .. | 2,053 |
| 6 | சேலம் | 6,466 | 110 | 524 | 656 | 410 | 8,166 |
| 7 | கோயம்பத்தூர் | 10,522 | .. | 1,637 | 1,724 | 1,061 | 14,944 |
| 8 | நீலகிரி | 767 | .. | .. | 447 | .. | 1,214 |
| 9 | தஞ்சை | 4,501 | .. | 504 | 1,698 | 400 | 7,103 |
| 10 | திருச்சி | 3,792 | .. | 462 | 1,657 | 216 | 6,127 |
| 11 | புதுக்கோட்டை | 1,078 | .. | 32 | 154 | 108 | 1,372 |
| 12 | மதுரை | 4,430 | 312 | 333 | 1,900 | 190 | 7,165 |
| 13 | இராமநாதபுரம் | 2,619 | .. | 323 | 737 | 61 | 3,740 |
| 14 | திருநெல்வேலி | 2,025 | .. | 532 | 1,013 | 591 | 4,161 |
| 15 | கன்னியாகுமரி | 1,008 | .. | 33 | 340 | .. | 1,381 |
| | மொத்தம் | 72,150 | 1,387 | 10,606 | 19,743 | 5,654 | 1,09 540 |



## இணைப்பு II.

(363 ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

இராமநாதபுரம் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டத்திலுள்ள மல்லாங்கிணர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்க ரொக்கப் புத்தகம் ஒரு மாத காலமாக எழுதப்படாமல் இருந்தது. தற்போது எழுதி முடிக்கப்பட்ட நிலையில், சங்க ரொக்கக் கையிருப்புத் தொகையான ரூ. 7,500ல் தற்போது ரூ. 2,500 செலுத்தப்பட்டுவிட்டது. மீதமுள்ள தொகை ரூ. 5,000-ஐ வசூலிக்க துணைப் பதிவாளர் (பால் பதம்), விருதுநகர் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார். சங்கத் தலைவரும் இத்தொகையை விரைவில் செலுத்திவிடுவதாக வாக்களித்துள்ளார். இச்செயலால் சங்கம் செயலிழந்த நிலையில் இல்லை. இச்சங்கம் தற்போது நல்ல முறையில் செயல்பட்டு வருவதுடன் தினசரி சராசரியாக உற்பத்தியாகும் 154 லிட்டர் பாலில், தமிழ்நாடு பால்வள நிறுவனத்திற்கு 71 லிட்டர் பால் வழங்கப்பட்டு, மீதி பால் உள்ளூரிலேயே விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

## தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை

வெள்ளிக்கிழமை, 1980 பிப்ரவரி 15.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் ற்பகல் 11 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) வ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### ஆளுநர் உரையின்மீது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆளுநர் உரையின் மீது விவாதம். ாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் . . . .

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர் ருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது இங்கே மாண்புமிகு உறுப் னர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். 13 ஆம் ததி மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் உரையாற்றியவுடன் ரசாங்கத் தரப்பிலிருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலளித் ருக்க வேண்டும். ஆனா [illegible] ருறை காரணமாக 15 ஆம் தேதி தலமைச்சர் அவர்கள் [illegible] ள் என்று தெரிவிக்கப்பட்டது. னால், இன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே வர ல்லை. பொதுவாக இந்த மன்றம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களாலே முறை புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. கேட்கப்படுகின்ற கேள்விகளுக்கும் தவரையில் பதில் இல்லை. பல நேரங்களில் மாண்புமிகு உறுப்பினர்கள் ழுப்புகின்ற வினாக்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே திலளிக்க வரவில்லை. ஆளுநரைக் மரபுகளைக் கட்டிக்காக்க வேண்டிய ந்த அவையில், எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் உரையாற்றுகின்ற ன்றைய தினமாவது முதலமைச்சர் அவர்கள் வருவார்கள் என்று எதிர் ர்த்து நாங்கள் ஏமாற்றம் அடைந்தோம். ஆனால், இறுதியாக இன்றைக் வது உரையாற்றுவார் என்று எதிர்பார்த்து வந்த நாங்கள் இன்றைய தினமும் மாற்றப்பட்டிருக்கிறோம். இந்த மன்றம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. மன்ற றுப்பினர்கள் அவமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய கருத்துக்கள் ந்த அரசாங்கத்தாலே புறக்கணிக்கப்படுகின்றன என்று கருதுகிறோம். ாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் உரையாற்றுவதிலே எங்களுக்கு ஆட்சே ணையில்லை. விளக்கமாகவும், சுருக்கமாகவும் அவர் ஆற்றுகின்ற உரையைக்

கேட்க முடியாத ஒரு இக்கட்டான சூழ்நிலையை இந்த அரசாங்கம் உருவாக்கி விட்டது. நாங்கள் பேசும்போது பல நேரங்களிலே மாண்புமிகு அமைச்சர்கள் அவர்களது அறைகளிலேயே இருந்துகொண்டு கேட்பதாகச் சொல்வார்கள். அதைப்போலவே, நாங்களும் இன்றையதினம் எங்களுடைய எதிர்க் கட்சித் யமைச்சர் அவர்களுடைய உரையைக் கேட்க முடிவு செய்திருக்கிறோம். யமைச்சர் அவர்களுடைய உரையைக் கேட்க முடிவு செய்திருக்கிறோம். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய பேச்சுக்கு ஏதேனும் கேள்விகள் தொடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டால், சம்பந்தப்பட்டவர்கள் இங்கே வந்து அந்த வினாக்களைத் தொடுப்பார்கள் என்று தெரிவித்து, தலைவர் அவர்களே, தங்களுடைய தலைமையில் இப்படிப்பட்ட ஒரு அசாதாரண சூழ்நிலை உருவானதற்கு வருத்தம் தெரிவித்து, இந்த அவையை விட்டு வெளியேறுகிறோம். நன்றி, வணக்கம்.

(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் அவையை விட்டு வெளியேறினர்.)

* திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் உரை மீதான விவாதத்துக்கு முடிவாக பதிலளித்துப் பேசவேண்டிய பொறுப்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சார்ந்தது. நம்முடைய 'பிசினஸ் அட்வைசரி கமிட்டியிலேகூட முதலமைச்சர் அவர்களின் சௌகரியத்திற்காகவே பதிலளிப்பதற்கான நாட்களை ஒத்திவைத்தோம். இல்லையென்றால், 13 ஆம் தேதியே அவர் பேசியிருக்க முடியும். பேரவையிலே பேச வேண்டும் என்பதற்காக, அவருடைய சௌகரியம் கருதி நாட்களைத் தள்ளி வைத்திருக்கிறோம். இத்தனைக்கும் பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு வராமலிருப்பது வருந்தத் தக்கதாகும். இந்த அவை புறக்கணிக்கப்படுகின்ற நிலை உருவாகிக் கொண்டிருப்பதை எங்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதோடு மட்டுமல்ல, இன்றைக்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதிலளிப்பது என்ற நிலை இருந்தாலும்கூட, அவருடைய பேச்சைக் கேட்க வேண்டும் என்ற ஆர்வம் எங்களுக்கு இருந்தாலும்கூட, ஆளுநர் உரை மீதான விவாதத்துக்கு பதிலளிக்கின்ற வகையிலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய உரை அமைவது மரபாகாது. வேண்டுமானால், தலைவர் அவர்கள் அனுமதித்தால், பதிலுரை இல்லாமலேயே ஆளுநர் அவர்களின் உரையின் மீதான விவாதத்தை முடித்துக்கொள்ளலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுவார்கள் என்பதற்காகத்தான் ஏற்கெனவே நாம் தள்ளி வைத்திருக்கிறோம். 'மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பேச இயலவில்லை, ஆகவே, இதோடு முடித்துக்கொள்கிறோம்' என்ற நிலையைக் கொண்டு வரலாமே தவிர, வேறு ஒரு புதிய மரபை உருவாக்குவது முறையல்ல.



இந்த அவையிலே இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலளிப்பதுதான் முறை, மரபு. அப்படி இல்லையென்றால், ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கு பதிலே இல்லாமல் நேரடியாக வாக்கெடுப்பு என்று கொண்டு வரலாம். இந்த இரண்டுமே இல்லையென்றால், இந்த அவையிலிருந்து எங்கள் கட்சி வெளியேற வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகிறது.

THIRU J. M. MIAKHAN : On behalf of the Muslim League, I also feel that this House is being given secondary importance. we had the meeting of the Business Advisory Committee, the reply least today, because we had been waiting for so long. He could have addressed us on the 9th itself. This is against the conventions of this House. Therefore, I also in protest, walk out.

(திரு. ஜே. எம். மியாகான் அவையிலிருந்து வெளியேறினார்.)

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, நான் இங்கே பல ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொண்டு வந்தபோதும் அவைகள் மறுக்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கும் மறுக்கப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய உரையிலே குறிப்பிடுவார்கள் என்று நான் இங்கே வந்திருக்கிறேன். *

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதைப்பற்றிப் பேசுவதற்குப் போகக் கூடாது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : *

(மணியடிக்கப்பட்டது.)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இதே வழக்கமாகப் போய்விட்டது. ஒரு மரபைக் கடைப்பிடிக்க வேண்டும். விதி தெளிவாகச் சொல்கிறது. எந்த வகையிலும் அதை அவையிலே எழுப்பக்கூடாது என்று சொல்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : நான் பிரச்சினையாக எழுப்பவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதைத்தான் நானும் சொல்கிறேன். உறுப்பினர் அவர்கள் எழுப்பவில்லை, எழுப்பவில்லை என்று சொல்லி சாமர்த்தியமாக எழுப்பினால் என்ன அர்த்தம் ?

திரு. க. மீனாட்சிசுந்தரம் : *
நான் கொடுத்ததை எடுக்கவில்லை. ஆகவே நான் வெளியேறு . . . .

---

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : 'ஆன் எ பாயின்ட் ஆப் கிளாரிபிக்கேஷன்' . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நான் சொல்லிவிடுகிறேன், அப்புறம் சொல்லலாம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : கல்லூரி ஆசிரியர்கள் பிரச்சினை சுமுகமாக முடிந்துவிட்டது . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவர் சொன்னதற்கு நான் சொல்லிவிடுகிறேன். மீண்டும் கிளப்ப வேண்டாம். அவையினுடைய நடவடிக்கை விதிப்படி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஓர் உறுப்பினர் கொடுத்தால், அதை தலைவர் அவர்கள் அனுமதிப்பதற்கான சூழ்நிலை இல்லையென்றால், அந்த உறுப்பினருக்குத் தகவல் அனுப்பிவிட வேண்டும். அப்படி தகவல் அனுப்பிவிட்ட பிறகு, எந்தக் காரணத்தை முன்னிட்டும் அந்தப் பிரச்சினையை அவையில் எழுப்பக்கூடாது. அப்படி விதி இருக்கிறது. இந்த விஷயங்களையெல்லாம் மறுபடி மறுபடி சொல்லும் மரபு இருக்கக் கூடாது. "நான் கொடுத்ததை எடுக்கவில்லை, ஆகவே நான் வெளியேறுகிறேன்" என்று சொன்ன வாசகம் குறிப்பிலே இருக்கும். அவர் சொன்ன விளக்கங்கள் குறிப்பிலே இருந்து நீக்கப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்கள் குறிப்பிட்ட கருத்து என்னாலே ஏற்றுக்கொள்ள முடியாத காரணத்தினாலே நான் அவையிலிருந்து வெளியேறுகிறேன்.

(திரு. க. மீனாட்சிசுந்தரம் அவையிலிருந்து வெளியேறினார்.)

திரு. க. இராமமூர்த்தி : பரபைப்பற்றி தங்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்தேன். தங்களுடைய கருத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இல்லாதபோது முன்பு ஒருமுறை கூட நிதியமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அந்த மரபு இருக்கிறது. அப்படி அடிக்கடி நிகழும்போது,



மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய உணர்ச்சியை வெளியிடுவதை நான் உணர்கிறேன். ஆனால் ஒன்று. பதில் இல்லாமலே முடிப்பது என்பது புதிய மரபு. அதற்கு நான் தயாராக இல்லை.

திரு. க. இராமமூர்த்தி : இந்த அரசு இந்த அவையை நடத்துகின்ற முறைக்கு என்னுடைய அதிருப்தியைத் தெரிவிக்கின்ற வகையிலே எங்களுடைய கட்சி வெளிநடப்பு செய்கிறது.

[காங்கிரஸ் (இ) கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் அவையை விட்டு வெளியேறினர்.]

THIRU A. R. DAMODARAN : Mr. Chairman, Sir, the hon. the Leaders of the political parties, the Congress as well as the D.M.K. and Muslim League have staged a walk-out in this regard. While it is not my intention to stage a walk-out, may I also say that the conventions of this House have been flouted rather severely? When we had the meeting of the Business Advisory Committee, the reply to the discussion on the Governor's Address was to have come from the Hon. the Chief Minister on the 9th of February. It was later on postponed to the 11th or the 12th and then we adjourned it to the 15th for the convenience of the Hon. the Chief Minister. While I recognise that, constitutionally speaking, the Hon. the Finance Minister or the Hon. the Leader of the House can reply on behalf of the Government, it would appear that this House is not being taken very seriously by Government. While I have no intention of walking out—I have never done so—, I think, Sir, on behalf of the Independent Members also, I would like to convey to the Government that such breach of conventions results in bringing down the dignity and the prestige of the House.

(முற்பகல் 11-10)

THIRU G. VASANTHA PAI : Sir, may I also join in what Thiru Damodaran has said? I feel that it is not only a breach of conventions but an insult to the Members of this House for the Hon. the Chief Minister not to be here. I join in the sentiments expressed, though I am not walking out.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தங்களது கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இங்கே வெளிநடப்பு செய்த கட்சிகளைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது உணர்வு

களை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அந்த உணர்வுகளை வெளிப்படுத்துகிற உரிமை அவர்களுக்குண்டு. ஆனால், அரசின் சார்பில் மெத்தப் பணிவன்போடு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த அவை உறுப்பினர்களை அவமானப்படுத்த வேண்டுமென்றோ, இதைப் புறக்கணிக்க வேண்டுமென்றோ அல்லது உரிய மரியாதையைத் தரக்கூடாதென்றோ, இந்த அரசுக்கோ, மாண்புமிகு முதலமைச்சருக்கோ எண்ணமேதுமில்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரை நிகழ்த்திய நேரத்தில் அவர் குளிர்க்காய்ச்சல் மூலம் பட்ட வேதனையை பக்கத்திலிருந்து பார்த்தவன் நான். ஆகையால்தான் அன்றைக்கே அவரால் பேச முடியவில்லை. இன்றைக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் படுக்கையிலேதான் இருக்கிறார். ஆகையால்தான் அவர் என்னைப் பார்த்து, "நீங்களே என் சார்பாக எனது நிலையை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எடுத்துச் சொல்லி, நான் மன்னிப்பையும் கேட்கிறேன் என்பதையும் தெரிவித்து, என் சார்பாக பதில் அளியுங்கள்" என்று கேட்டுக்கொண்டார். ஆகவே, நான் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களுக்கும், எதிர்க் கட்சித் தலைவர்களுக்கும், இங்கே கருத்துக்களை எடுத்துச் சொன்ன பாசமிக்க நண்பர் திரு. தாமோதரன் அவர்களுக்கும், உணர்வுகளை வெளிப்படுத்திய மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பை அவர்களுக்கும் மீண்டும் இதனைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த அவையின் மரபைக் காப்பாற்றுகிற முனைப்போடு இந்த அரசு இருக்கிறது. எந்தக் காரணத்தைக் கொண்டும் உறுப்பினர்களின் உள்ளத்தைப் புண்படுத்தவோ, அவர்களை மிகச் சாதாரணமாக நடத்துவதாகவோ எந்த உணர்வுகளையும் மாண்புமிகு உறுப்பினர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அவையில், நிதியமைச்சர் என்ற முறையில் நானும் பேசலாம், அவையின் முன்னவர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சார்பாகப் பேசலாம் என்பதிலே யாருக்கும் அபிப்பிராய பேதமில்லை என்று தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அந்த அடிப்படையிலேதான் நான் இங்கே இப்போது பேசிக்கொண்டிருக்கிறேன். அந்த அடிப்படையிலேதான், மாண்புமிகு தலைவர் அவர்களே, தாங்களும் என்னை அனுமதித்திருக்கிறீர்கள். "மேற்கொண்டு இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் இனி நடைபெறாமல் இருக்க நானே பார்த்துக்கொள்கிறேன்" என்று தலைவரவர்களாகிய தாங்களே உறுதியளித்ததற்குப் பிறகும் மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் அவையை விட்டு வெளியே சென்றிருப்பது வேதனைக்குரியதாகும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தங்களின் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், நீண்டநேரம் பேச வேண்டும் என்று விரும்பவில்லை. எனக்கும் உடல் நலம் சரியில்லை. இருந்தாலும் ஆற்ற வேண்டிய கடமைகளை ஆற்ற வேண்டுமென்ற உணர்வோடு நான் ஒரு சில கருத்துக்களை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் இங்கே பேசும்போது, "உங்களுக்கு மானமிருந்தால், மரியாதையிருந்தால், சுரணையிருந்தால் ஆட்சியைவிட்டு இறங்கிப் போங்கள்" என்றெல்லாம் எங்களைப் பார்த்துக் கேட்டார்கள். "இன்னும் எத்தனை நாளைக்கு" என்றும் கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர்களில் சிலர் பேசும்போது, "அடுத்த பட்ஜெட் கூட்டம் வரை இந்த அரசு நீடிக்குமா?" என்று கூட கேட்டார்கள். அவ்வாறு அவர்கள் கேட்டபோது, நான் பேரறிஞர் அண்ணா அவர்களைத்தான் நினைத்துக் கொண்டேன். 1967 ஆம் ஆண்டு தமிழகத்தில் கூட்டணி ஒன்றை உருவாக்கி, காங்கிரஸ் கட்சியை பேரறிஞர் அண்ணா அவர்கள் வீழ்த்திக் காட்டியபோது, மக்கள் பேரறிஞர் அண்ணா அவர்களின் கரத்தில் அரசை ஒப்புவித்த நேரத்தில், சட்ட மன்றப் பேரவையிலேயே இப்படிப்பட்ட பேச்சுக்கள் பேசப்பட்டன. நான் இந்த அவையின் கவனத்திற்கு, பேரறிஞர் அண்ணா அவர்கள் தெரிவித்த கருத்துக்களை குறிப்பாக எடுத்து வைக்க விரும்புகிறேன். அதுவும், அப்போது ஆளுநரின் பேருரையின் மீது விவாதம் நடைபெற்ற நேரத்தில், பேரறிஞர் அண்ணா அவர்கள் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

". . . இது மழையில் தோன்றிய காளான்போல் அழிந்துவிடும் என்று தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டார்கள். அதற்கு பொதுமக்கள் ஆதரவு வராது என்று நம்பினார்கள். அந்த நம்பிக்கையை பொதுமக்கள் முறியடித்த பிறகும்கூட, இப்போதும்கூட, அவர்கள் ஏமாற்று வித்தையால் ஆட்சிக்கு வந்துவிட்டார்கள் என்றுதான் கருதுகிறார்கள். ஆளுவதற்கு லாயக்குள்ளவர்கள் என்று நினைக்கவில்லை. 'இன்னும் எத்தனை நாளைக்கு' என்ற பேச்சை நாங்கள் பதவியேற்ற நாளிலிருந்து அவர்கள் தங்கள் பேச்சின் முன்னுரையாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். மார்ச் மாதம் 5 ஆம் தேதி அல்லது 6 ஆம் தேதி பதவியேற்றோம் என்றால், அன்று முதல் அவர்கள் 'இன்னும் எத்தனை நாளைக்கு, இன்னும் எத்தனை நாளைக்கு' என்றுதான் பேச்சை ஆரம்பிக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதை அவர்களாலே தாங்கிக் கொள்ள முடியவில்லை. மேற்கு வங்காளத்திலே காங்கிரஸ் அல்லாத அரசையும், பாஞ்சாலத்திலே காங்கிரஸ் அல்லாத ஒரு அரசையும், வேறு சில இடங்களில் காங்கிரஸ் அல்லாத அரசுகளையும் வரைமுறையில்லாத வழிகளில் சென்று கவிழ்த்துவிட்டவர்கள்தான் இப்படிப் பேசுகிறார்கள். ஒரு புலி

ஒருமுறை ரத்தத்தைக் குடித்துவிட்டால், அதைப் புலி என்று சொல்லாமல் மனிதனைக் கொல்லும் பிராணி (Man eater) என்றுதான் சொல்லப்படும்" என்ற கருத்தைத் தெரிவித்தார்கள்,

அடுத்து, பரவலாக ஒரு கருத்தைப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கருத்து என்னவென்றால், "இந்த அரசு கலைக்கப்படும், இந்த அரசு நீண்ட நாளைக்கு இருக்காது, இந்த அரசு தன்னகத்தே தாங்கி நிற்கிற பல காரணமாகவும், முரண்பாடுகளின் பல காரணமாகவும், இந்த அரசு தன்னாலேயே அழியும் அல்லது இந்த அரசை ஒழிப்பதற்கு திட்டங்கள் தீட்டப்படுகின்றன" என்று கட்டுப்பாடான பிரச்சாரம் ஒன்றைப் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் அதற்கும் பதில் தந்தார்கள். அதை இந்த மாமன்றத்தின் சிந்தனைக்கு வைக்க விரும்புகிறேன்,

"எங்களை வீழ்த்த வேண்டும், இந்த ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும் என்று நாங்கள் சதி செய்கிறோமா என்று திரு. விநாயகம் அவர்கள் கேட்டார்கள். சதி என்றாலே வெளியே தெரியாது. இதில் சதியே தேவையில்லை. அங்கத்தினர்கள் பேசுவதிலிருந்தே அது உங்கள் எண்ணமாக இருக்கிறது, திட்டமாக இருக்கிறது என்பது தெரிகிறது. அதில் நட்டம் அடையக் கூடியவர்கள் நிச்சயமாக நாங்கள் அல்ல; நட்டமடையக் கூடியவர்கள் இந்த நாட்டு மக்களாகத்தான் இருப்பார்கள். அது ஜனநாயகமாகத்தான் இருக்குமே தவிர, நாங்களாக இருக்கமாட்டோம் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, இந்தச் சட்ட மன்றத்திலே நான் பேசுகிறபோது ஒவ்வொரு நாளும் இதுதான் கடைசி பேச்சாக இருக்கலாம் என்ற எண்ணத்தோடுதான் நான் பேசிக் கொண்டு வருகிறேனே தவிர, அப்படியே குர்சியைப் பிடித்துக் கொண்டு, இங்கேயே உட்கார்ந்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு அல்ல என்பதை எங்களைக் கவிழ்க்கலாமா, இந்த அரசை நீக்கலாமா என்று எண்ணிக் கொண்டுள்ளவர்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்".

(பிற்பகல் 11-20)

பேரறிஞர் அண்ணா அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி ஏறத்தாழ முப்பதாண்டு காலத்திற்கு மேல் அரசியலில் ஈடுபட்டு பொது வாழ்க்கையில் பணியாற்றிக் கொண்டிருக்கிற என்னைப் போன்றவர்கள் இப்படிப்பட்ட பூச்சாண்டித்தனத்திற்கோ, அச்சுறுத்தலுக்கோ, பயமுறுத்தலுக்கோ பயந்து விடமாட்டார்கள் என்பதை இந்த அவையில் முதற்கண் தெரிவிக்க விரும்புகிறேன்.



இந்த அரசைக் கவிழ்க்க வேண்டுமென்ற எண்ணம் யாருக்காவது இருக்குமானால், கவிழ்க்கலாம். அதற்குப் பிறகு இந்த அரசு இருக்க வேண்டுமென்று முடிவு கட்ட வேண்டியவர்கள் வெளியே இருக்கிற மக்கள் என்பதை நாங்கள் அறிவோம். "இந்த அரசு கவிழக்கூடாது என்று கருதுகிறோம்" என்று சொல்லிவிட்டு, "இந்த அரசு கவிழப் போகிறது" என்ற கருத்தை பரவலாக ஆக்கிக்கொண்டு அதன் மூலம் "இந்த அரசு எப்போது வேண்டுமானாலும் கவிழும்போல இருக்கிறது" என்ற மாயையை உருவாக்கிக் கொண்டு, அதன் மூலம் துரிதமாக நடைபெற வேண்டிய பணிகள் தேக்கம் அடைகிற அளவிற்குச் சூழ்நிலைகளை உருவாக்குவது ஜனநாயகத்திற்கு உரியதல்ல என்பதை இந்த மன்றத்தில் நான் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆட்சி கலைக்கப்படுகிற நாள் வெகு தூரத்திலே இல்லை என்று இங்கே பேசிய நண்பர்கள் சொன்னார்கள். "அடுத்த நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும் வரை இந்த அரசு நீடிக்குமானால்" என்று சட்டமன்றப் பேரவை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்கூட நேற்றைக்கு முன்தினம் சட்டமன்றத்திலே பேசினார். அதற்குப் பதில் அளித்து முதலமைச்சர் பேசும்போது, "நானும் அதைத்தான் சொல்கிறேன். அதுவரை இந்த அரசு நீடிக்குமானால், அதுவரை பொதுமக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்துவிட்டுப் போவோம்" என்ற கருத்தைச் சொன்னார். இங்கேயும் அதையே நானும் தெரிவிக்க விரும்புகிறேன். நாளைக்கே கலைப்பதாக இருந்தாலும் கலைக்கட்டும். ஆனால் "ஆசைகள் குதிரைகளாக மாறினால்" என்று ஒரு பழமொழி உண்டு. அதை நான் முழுமையாகத் தெரிவிக்க விரும்பாவிட்டாலும், இந்த மன்றத்திலே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவு கூர்ந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நண்பர்கள் உணர வேண்டும் என்பதற்காக இன்னும் சொல்கிறேன். அப்படிப்பட்ட முயற்சிகள் நடைபெறாது என்ற நம்பிக்கை எங்களுக்கு இருப்பதற்குக் காரணம், பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் என்பதுதான். ஏற்கெனவே ஜனதா அரசு ஒன்பது மாநில அமைச்சரவைகளைக் கலைத்தபோது, அது ஜனநாயகத்திற்கு முரண்பட்ட செயல் என்று குரல் கொடுத்த முதல் கட்சி தமிழகத்தில் உள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஆகவே, ஒரு கட்சி செய்த தவறை, புதிதாக மக்களின் பெரும்பான்மையைப் பெற்று ஆட்சிக்கு வந்திருக்கிற காங்கிரஸ் கட்சி செய்யாது, செய்யத் துணியாது, செய்ய விரும்பாது என்பதை நான் இந்த மன்றத்திலே தெரிவிக்க விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு, இங்கே பல பிரச்சினைகளைப்பற்றிப் பேசினார்கள். அதிலே குறிப்பாக எதிர்க் கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசும்போது, நிதித் துறை பாராளுமன்றச் செயலாளர் திரு. வின்சென்ட் அவர்கள்மீது ஒரு குற்றச்சாட்டை இந்த மன்றத்தில் எடுத்து வைத்தார். இந்தக் குற்றச்சாட்டைப்பற்றி நான் விசாரித்தேன். விசாரித்த போது, இந்தக் குற்றச்சாட்டைப்பற்றி ஒரு விரிவான கடிதம் ஒன்றை திரு. வின்சென்ட் அவர்கள் முதலமைச்சருக்கு எழுதியிருக்கிறார். எந்த அளவிற்குத் தொலைபேசி துஷ்பிரயோகம் செய்யப்பட்டது என்பதைப்பற்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய பேச்சில், “1979 ஆம் வருஷம் அக்டோபர் மாதத்திலிருந்து டிசம்பர் மாதம் வரை கெஸ்ட் ஹவுஸ் ஃபோன் சார்ஜ் ரூபாய் 9,008-20 ஆகி யிருக்கிறது. கலெக்டர் ஆபிசிலிருந்து அதற்கு ஒரு புரசிடிங்ஸ் போட்டிருக் கிறார்கள். ஒரு பாராளுமன்றச் செயலாளர் மூன்று மாதங்களுக்கு கெஸ்ட் ஹவுஸ் ஃபோனை அந்த அளவிற்கு பயன்படுத்தியிருக்கிறார். இது கன்னியா குமரியிலே உள்ள கெஸ்ட் ஹவுசில் நடந்த சம்பவம். அவர்கள் 24 மணி நேரமும் முகாமிட்டிருக்கிறார்கள்” என்ற குற்றச்சாட்டை திரு. சங்கரலிங்கம் அவர்கள் கிளப்பியிருக்கிறார்கள். பொதுவாகவே எனது நிதித் துறை பாராளுமன்றச் செயலாளராகப் பணியாற்றுகிற திரு. வின்சென்ட் அவர்கள் கன்னியாகுமரி கெஸ்ட் ஹவுசில் தங்குவதில்லை. 1979 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் டிசம்பர் வரை கன்னியாகுமரி கெஸ்ட் ஹவுசில் தங்கியதில்லை என்ற கருத்தை அவர் தெரிவித்திருக்கிறார்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சுக்குப் பதில் சொல்லுவதால் அதைப்பற்றி விளக்க விரும்புகிறேன். “கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர்கோவிலில் உள்ள கெஸ்ட் ஹவுஸ்” என்று சொன்னேன். கன்னியாகுமரி கெஸ்ட் ஹவுஸ் என்பது தவறானது.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** நாகர்கோவில், இராமவர்மபுரம் பயணி யர்கள் விடுதியில் அக்டோபர் முதல் டிசம்பர் வரை 32 நாட்கள் தங்கியதாக திரு. வின்சென்ட் தெரிவித்திருக்கிறார். இலக்கிய, கற்பனை வளம் செறிந்த எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், ஃபோன் செலவுக்காக எவ்வளவு அதிகமாகக் கணக்குப் போட்டாலும், ஆயிரம் அல்லது ஆயிரத்து இருநூறு ரூபாய்க்குமேல் போயிருக்குமென்று யாரும் எதிர்பார்க்க மாட்டார்கள். ஆனால், அவர் தந்திருக்கிற தொகை ரூ. 9,008. மூன்று மாதங்களில் இந்த அளவுக்கு ஃபோனை பாராளுமன்றச் செயலாளர் பயன்படுத்தியிருப்பதாகத் தெரிவித் திருக்கிறார்கள். எனது பாராளுமன்றச் செயலாளர் இங்கே தந்திருக்கிற



கடிதத்தில், “அது நிரூபிக்கப்பட்டால், நான் பதவியை விட்டு விலகத் தயா ராக இருக்கிறேன்” என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார் என்பதை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, நாகர்கோவில் அரசினர் பயணியர்கள் விடுதியில் ஃபோன் சார்ஜ் பணத்தைக் கட்டியதை இனிமேல் யாரும் மாற்ற முடியாது. ஏனென்றால் அந்த விடுதி பொதுப் பணித் துறை யின்கீழ் இருக்கிறது. பொதுப் பணித் துறை ஆபிசிலிருந்து பணம் கட்டி அதற்கான ரசீதையும் வாங்கியிருக்கிறார்கள். இனிமேல் நான் சொன்னாலும் மாற்ற முடியாது, அமைச்சர் அவர்கள் சொன்னாலும் மாற்ற முடியாது. தவறாக நான் சொன்னேன் என்று சொன்னார்கள். ஆகவே உறுதியாக ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். அந்த பி.டபிள்யூ.டி. விடுதியில் இருந்து எந்தெந்த ஆபீஸ்களுக்குக் கால் போடப்பட்டிருக்கிறது என்று அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கான ஃபோன் சார்ஜ் பில்லில் குறிப்பிடப்பட் டிருக்கிறது. வேறு யாராவது ஃபோனைப் பயன்படுத்தினால், உடனே எக்சேஞ்ஜிலிருந்து கூப்பிட்டுக் கேட்டு, பணத்தை வாங்கி, அதற்கான ரசிதை யும் போட்டுக் கொடுத்துவிடுகிறார்கள். பிறகு கூடுதலாக (எக்செஸ் கால்) இருந்தால், அவருக்கு லெட்டர் கொடுத்தனுப்பி அதற்கான பணத்தை வாங்கு கிறார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், பி.டபிள்யூ.டி. அலுவலகத் திலிருந்து அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதத்திற்கான இந்த ரிக்கார்டுகளை வாங்கி இந்த அவையில் எங்களுக்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** ரிக்கார்டுகளைச் சமர்ப்பிக்க வேண்டி யவர் எதிர்க் கட்சித் தலைவர்தான், நான் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் அந்த ரிக்கார்டுகளை வாங்கி எனக்குத் தரட்டும். நிரூபிக்கப்பட்டால், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, நானே அந்த டெலிபோன் ஆபிசில் போய்ப் பார்த்தேன். பொதுப் பணித் துறை, மாநில அரசுக்குக் கீழே இருப்பதால், சொல்வதற்கு மறுத்தார்கள். பிறகு தெரிந்தவரைக் கொண்டு பார்த்தேன். ரிக்கார்டுகளை நான் கேட்டால் தரமாட்டார்கள். அமைச்சர் அவர்கள் கேட்டால் தருவார்கள்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** தலைவர் அவர்களே, இது எப்படி நியாயமான வாதமாகும் என்பது எனக்குத் தெரியவில்லை. என்னைப்போய் ரிக்கார்டுகளைத் தேடச் சொல்கிறார். குற்றச்சாட்டை வைத்திருப்பவர்

எதிர்க் கட்சித் தலைவர். ஆதாரங்களை அடுக்க வேண்டியவர் எதிர்க் கட்சித் தலைவர். அவருக்கு ஆதரவாக ஆதாரங்களைத் தேட என்னை துணைக்கு அழைக்கிறார். எனக்கு வேறு வேலை இருக்கிறது. தயவுசெய்து ஆதாரங்களைத் தேடி இங்கே கொண்டு வாருங்கள், நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன் என்று எதிர்க் கட்சித் தலைவருக்குச் சொல்லுகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையில் உள்ள நாகர்கோவில் எக்சிக்யூட்டிவ் என்ஜினியர் பணத்தைக் கட்டி ரசீதை வாங்கியிருக்கிறார். இதைவிட என்ன ஆதாரத்தைத் தர வேண்டும்? அந்த இலாக்கா இவர்களுடைய பொறுப்பில் இருக்கிற காரணத்தால்தான் சொல்லுகிறேன். அவர்கள் பணத்தைக் கட்டியிருக்கிறார்கள். இதைவிட ஆதாரம் சொல்ல வேண்டிய தேவை எனக்கு இல்லை. ஆதாரம் தெளிவாகத் தரப்பட்டுவிட்டது. ஆகவே அமைச்சர் அவர்கள் தப்பித்துக்கொள்ள இந்த வாதத்தை எடுத்து வைக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** சந்தித்துப் பழக்கமே தவிர, தப்பித்துப் பழக்கமில்லை என்பதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

32 நாட்கள் பலமுறை அவர் தங்கியிருக்கிறார். டூரங் கால் போட்டால், டி.ஏ. கையெழுத்துப் போட்டுக் கொடுப்பார்கள். இந்த ரிக்கார்ட், ரிஜிஸ்டர் எல்லாம் இருக்கிறது. அதையெல்லாம் அவர் பார்த்து எங்களுக்குத் தந்தாரானால்—ஆரம்பத்திலேயே சொன்னதைப் போல திருப்ப வலியுறுத்துகிறேன்—நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும். இதை மாற்றுவதற்

(முற்பகல் 11-30)

காக நான் இதைச் சொல்லவில்லை என்பதையும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னைப் புரிந்தவர்கள் அதை ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், டெலிபோன் பில்லைப்பற்றி மாத்திரம் சொன்னார்கள். அதே சமயத்தில் இன்னொன்று. மாவட்ட ஆட்சித் தலைவர் புரோசிடிங்ஸ் போட்டு ரூபாய் 11,515-30, அவருக்கு ஆறு மாதத்திற்கு கார் செலவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். அதைப்பற்றிச் சொல்லவில்லை. அந்தக் குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்கிறார்களா?



தலைவர் அவர்களே, நீதித் துறை பாராளுமன்றச் செயலரைப்பற்றி மூன்று குற்றச்சாட்டுக்கள் சொன்னேன். மூன்று மாதத்திற்கு ரூ. 9,000-க்கு போனுக்கு ஆன செலவைப்பற்றிய ஒன்றுக்குத்தான் பதில் சொன்னார். இன்னொன்று அவர் ஆறு மாத காலத்திற்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் சுற்றியதற்கு, அரசாங்கப் பணத்திலிருந்து, கலெக்டர் புரோசிடிங்ஸ் போட்டு ரூபாய் 11,515-30 காசு கொடுக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவது குற்றச்சாட்டு, அவர்களை வந்து பார்க்கச் சொன்ன கலெக்டர் பார்க்காததனாலே, தொலைபேசி மூலம் தலைமைச் செயலரோடு தொடர்புகொண்டு, அந்தத் தொலைபேசி ஆபீசிலிருந்தே, அந்த கெஸ்ட் ஹவுசிலிருந்தே, அங்கே ரெக்கார்ட் பண்ணப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரை மாற்றினார்கள். இந்த மூன்று குற்றச்சாட்டுகளைச் சொல்லியிருக்கிறேன். ஒரு குற்றச்சாட்டிற்கு முறையாக விசாரணைக்கு விடுவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். நானும் கொண்டு வந்து ரெக்கார்டுகள் தருகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** இரண்டாவது குற்றச்சாட்டுபற்றி என்னிடம் குறிப்பில்லை. மூன்றாவது, அங்கே இருக்கின்ற கலெக்டர் அவர்கள் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஏதோ உடனடியாக மாற்றப்பட்டிருக்கிறதாக ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். இந்தக் கருத்தை நான் மனப்பூர்வமாக மறுக்கிறேன் என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று. ஆறு மாதத்திற்கு ஒரு முறை, ஏழு மாதத்திற்கு ஒரு முறை ஒரு கலெக்டரை மாற்றுவது என்பது பாபா என்று கேட்டிருக்கிறார்கள். இதற்கு முந்திய ஆட்சியிலேயும் இது நடைபெற்றிருக்கிறது. நிர்வாகம் காரணமாக மாற்றப்படுவது இயற்கை. அந்த அடிப்படையிலேதான் அவர் மாற்றப்பட்டிருக்கின்றாரே தவிர. காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, பாராளுமன்றச் செயலர் தொலைபேசி மூலமாக முதலமைச்சருக்குச் சொல்லி, முதலமைச்சர் உடனடியாக அவருடைய பேச்சைக் கேட்டுக்கொண்டு ஒரு கலெக்டரை மாற்றுவார் என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எதிர்பார்க்கக் கூடாது. நிர்வாகம் காரணமாகத்தான் அவர் மாற்றப்பட்டிருக்கிறார் என்பதை இந்த நேரத்தில் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நான் அப்படி எதிர்பார்க்கக் கூடாது என்று சொன்ன கருத்தை நான் உண்மையிலேயே வரவேற்கிறேன். எதிர்பார்க்காதது நடந்துவிட்டதனால்தான், நான் இதைச் சொல்கிறேன். இதை நாங்கள் எதிர்பார்க்கக் கூடாது. இந்த நாடும் எதிர்பார்க்கக் கூடாது. ஒருவருமே எதிர்பார்க்கக் கூடாது. அப்படி எதிர்

பார்க்காதது நடந்திருக்கிறது, ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர்—தலைவர் அவர்களே, அவர்கள் சொன்னதை நான் சொல்கிறேன்—அவர்களே வந்து லயன்ஸ் கிளப்பிலே ஒரு எக்சிபிஷனைத் திறந்து வைத்தார்கள். அந்த எக்சிபிஷனுக்கு நிதி அமைச்சர் அவர்கள் வருகிறபோது, "இதிலே ஸ்கில் கேம்ஸ் என்று சொல்லி, ரூபாய் 1,90,000 வாங்கி சூதாட்டம் ஆரம்பிக்கிறார்கள், நீங்கள் திறக்கக்கூடாது" என்று அவர்களிடம் முறையிட்டிருக்கிறார்கள். அவர்கள் அந்த எக்சிபிஷன் திறப்பு விழாவிலே வந்து பேசினார்கள். 'இங்கே ஸ்கில் கேம்ஸ் நடக்கப் போவதாக என்னிடம் சொல்லப்பட்டது, அந்த ஸ்கில் கேம்ஸ் இங்கே நடக்கக்கூடாது, சூதாட்டம் நடக்கக்கூடாது, நான் பேசுகிறேன்' என்று சொல்லிவிட்டு அவர்கள் பேசினார்கள். ஆனால் நிதித் துறை பாராளுமன்றச் செயலருடைய துணையோடு ரூபாய் 1,90,000 லயன்ஸ் கிளப்பிலிருந்து ரசீது கொடுத்து வாங்கி அந்த ஸ்டால் அங்கே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அமைச்சரவர்கள் சொன்னதை நம்பி, போலீசார் அங்கே சூதாட்டத்திலே நடந்த தவறான போக்கைப் பார்த்து சிலரைக் கைது செய்தார்கள். 20 அழகிகளை, இருட்டு அறையிலே வைத்து, தீப்பெட்டி கொளுத்தி பார்க்கச் சொல்வது ஆகியவற்றுக்கும், பிறகு கைது செய்திருக்கிறார்கள். இதை ஏற்பாடு செய்தவர்கள் உடனே பாராளுமன்றச் செயலர் அவர்களிடம் போய்ச் சொன்னார்கள். அவர் 'கலெக்டரைக் கூப்பிடு' என்று சொன்னார். கலெக்டர் போகவில்லை. அதனாலேதான் இந்த நிலைமை வந்தது. ஆகவே, இது நிர்வாக மாற்றத்திற்காகவோ அல்லது அவரது திறமைக் குறைவுக்காகவோ மாற்றப்படவில்லை. அப்படி இருந்தால் நான் வரவேற்பேன். அதைப் பாராட்டுவேன். இத்தகைய அநீதி நடந்திருக்கிறது என்பதைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்** : எனக்கு இந்த இருட்டு அறைபற்றியெல்லாம் தெரியாது. அவர் சொல்லித்தான் இப்போது எனக்குத் தெரிகிறது. அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னபடி, நான் அந்த விழாவிற்குச் சென்றபோது, கடுமையாக எச்சரித்துவிட்டு வந்தேன். ஸ்கில் கேம்ஸ் நடக்கப்போவதாக எனக்குத் தகவல், அப்படி நடக்குமானால் நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை அந்தக் கூட்டத்திலேயே சொன்னேன். அப்படிச் சொன்னபோது, எந்த அளவுக்கு பொதுமக்கள் மத்தியிலே மகிழ்ச்சி ஆரவாரம் இருந்தது என்பது அவருக்குத் தெரியும். அதற்குப் பிறகு புதிதாக சில அழகிகளை இருட்டு அறையிலே காட்டுகிறார்கள், தீக்குச்சி கொளுத்தி என்று சொல்கிறார்கள். எனக்கெல்லாம் பார்க்கின்ற வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஆகவேதான் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன் எந்தக் காரணத்திற்காகவோ அவர் மாற்றப்படவில்லை என்பதை இந்நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.



அதற்கு அடுத்தாற்போல், தொழில் துறைபற்றிச் சொல்கிறேன். இங்கே சிலர் சில கருத்துக்களைச் சொன்னார்கள். மாண்புமிகு அங்கத்தினர் திரு. தாமோதரன் அவர்களும், டி. ஏ. பாய் அவர்களும் . .

THIRU G. VASANTHA PAI : Sir, I have nothing to do with him.

THE HON. THIRU K. MANOHARAN : Yes. The hon. Member is comfortably placed.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : மாண்புமிகு அங்கத்தினர் அவர்களை ரொம்ப தூரம் அனுப்பிவிடுகிறீர்களே, மங்களூருக்கு அனுப்பி விடுகிறீர்கள்.

**திரு. ஜி. வசந்த பை** : டெபாசிட்கூட போயிருக்கும் எனக்கு.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்** : மங்களூருக்கேகூட அனுப்பலாம்.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசியதாக நான் குறிப்பேட்டிலே பார்த்தேன். அவர் பேசுகிறபோது தமிழகத்தில் தொழில் முன்னேற்றம் தடைப்பட்டுள்ளது என்றும், காங்கிரஸ் ஆட்சியின்போது மூன்றாவது இடத்தில் இருந்த தமிழகம் இப்போது 13-வது இடத்தில் இருக்கிறது என்றும், அலுமினியம் ப்ளோரைடு போன்ற தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன என்றும், டி.ஐ.ஐ.சி. நிறுவனம் வட்டிக்குக் கடன் கொடுத்து வாங்கும் நிறுவனமாக உள்ளதே தவிர தொழில் துறைக்கு உதவும் அமைப்பாக இல்லை என்றும், அதுவும் 'அலை ஓசை'யைப் பொறுத்தவரை 'இழுத்து மூடு' என்னும் கொள்கை பின்பற்றப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு மாநிலம் தொழில் வளர்ச்சியில் எந்த இடத்தைப் பெற்றுள்ளது என்பது, எந்த அடிப்படையில் இந்தக் கணக்கு போடப்படுகிறது என்பதற்கேற்ப மாறக்கூடும். தொழிலாளர்களின் எண்ணிக்கை, தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் மதிப்பு, பயன்படுத்தப்படும் மின்சாரத்தின் அளவு, தொழிற்சாலைகளில் செய்யப்படும் முதலீடு என்ற வெவ்வேறு அடிப்படைகளில் ஒரு மாநிலத்தின் தொழில் வளர்ச்சியை மதிப்பீடு செய்யலாம்.

"காமர்ஸ்" என்ற மாதப்பதிப்பின் செப்டம்பர் இதழில் தமிழ்நாட்டின் பொருளாதார நிலைமைபற்றி ஒரு ஆய்வு கொடுக்கப்பட்டுள்ளது. "இந்த ஆய்விலிருந்து புதியதாகத் தொடங்கப்பட்ட நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கையின் அடிப்படையில், தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டிலும் 1979-வது

ஆண்டின் முதல் நான்கு மாதங்களிலும், அதாவது தகவல்கள் முழுமையாகக் கிடைக்கப்பெற்றவரை, முதல் இடம் பெற்றிருக்கிறது என்பது தெரிகிறது" என்று எழுதிவிட்டு, புள்ளிவிவரம் தந்திருக்கிறார்கள். மாநிலங்களில் நான்கை எடுத்துக்கொண்டு, தமிழ்நாட்டைப்பற்றிச் சொல்லும்போது, 1978-ல் பதிவு செய்யப்பட்ட ஆலைகளின் எண்ணிக்கை 189, 1979-ல் (சனவரி முதல் ஏப்ரல் வரை) பதிவு செய்யப்பட்ட ஆலைகளின் எண்ணிக்கை 129. கர்நாடகத்தைப் பொறுத்தவரையில், 1978-ல் பதிவு செய்யப்பட்ட ஆலைகளின் எண்ணிக்கை 132—தமிழகம் 189—1979-ல் (சனவரி முதல் ஏப்ரல் வரை) பதிவு செய்யப்பட்ட ஆலைகளின் எண்ணிக்கை கர்நாடகத்தைப் பொறுத்தவரையில் 75, தமிழகத்தைப் பொறுத்தவரையில் 129. ஆந்திரப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில், 1978-ல் பதிவு செய்யப்பட்ட ஆலைகளின் எண்ணிக்கை 103. அதே நேரத்தில் 1979-ல் (சனவரி முதல் ஏப்ரல் வரை) பதிவு செய்யப்பட்ட ஆலைகளின் எண்ணிக்கை 68. கேரளத்தைப் பொறுத்தவரையில் 1978-ல் பதிவு செய்யப்பட்ட ஆலைகளின் எண்ணிக்கை 73, 1979-ல் (சனவரி முதல் ஏப்ரல் வரை) பதிவு செய்யப்பட்ட ஆலைகளின் எண்ணிக்கை 25. குறிப்பாகச் சொல்கிறேன். 1978-ல் தமிழ்நாடு 189, கர்நாடகம் 132, ஆந்திரப் பிரதேசம் 103, கேரளம் 73.

இதை 'காமர்ஸ்' பத்திரிகை மிகத் தெளிவாகக் கோடிட்டுக் காட்டி கருத்தும் தெரிவித்திருக்கிறது என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-40)

அதுமட்டுமல்லாமல், தொழில் நிறுவனங்களில் செய்யப்படும் முதலீட்டில், ஒரு கணிசமான தொகையை மத்திய அரசு, தனது பொதுத் துறை நிறுவனங்களில்—பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ்—முதலீடு செய்கிறது. குறிப்பிட்ட சில மாநிலங்களில் 1—4—1977 வரை செய்யப்பட்ட மத்திய அரசின் முதலீட்டைக் குறிப்பிட விரும்புகிறேன். இதைத் தெரிவிப்பதற்குக் காரணம், ஓரளவிற்கு தொழில் துறையில் மந்தம் ஏற்படுமானால், அதற்கு மத்திய அரசு போடுகிற முதலீடும் காரணமாக அமையும். தொய்விற்கும் அது காரணமாக அமையும், துரிதத்திற்கும் அது காரணமாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசு பீகார் மாநிலத்தில் போட்டிருக்கிற தொகை 2,509 கோடி ரூபாயாகும்; மத்தியப் பிரதேசத்தில் 1,493 கோடி ரூபாயாகும்; மேற்கு வங்கத்தில் 768 கோடி ரூபாயாகும்; ஒரிஸ்ஸாவில் 647 கோடி ரூபாயாகும்; மகாராஷ்டிரத்தில் 631 கோடி ரூபாயாகும்; தமிழ்நாட்டில் 467 கோடி ரூபாயாகும். நான் இங்கே தெரிவிக்க விரும்புவது, தமிழ்நாட்டின் ஜனத்தொகை அடிப்படையிலேயும், தொழில் நுட்ப அறிவாளிகளின் அறிவின் அடிப்படையிலேயும், மற்ற அனைத்து அடிப்படையிலேயும் கணக்குப் போட்டுப் பார்த்தால், நமக்கு மொத்தத்தில் 10 சதவிகிதம் கிடைத்திருக்க வேண்டும். மொத்த முதலீடு 9,238.7 கோடி ரூபாய். அதில் தமிழகத்திற்குக் கிடைத்திருக்க வேண்டியது 10 சதவிகிதம். 10 சதவிகிதம் என்று கணக்கிட்டால் நம்முடைய மாநிலத்தில் அவர்கள் போட்டிருக்க வேண்டிய மூலதனம் 923 கோடி ரூபாயாகும் என்பதை அவை உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் இப்படி ஏன் போட்டார்கள்? ஏன் அந்த மாநிலங்களுக்கு அவர்கள் சலுகை காட்டினார்கள்? ஏன் இந்த மாநிலத்தைப் பொறுத்தவரை, அந்தச் சலுகைகள் காட்டப்படவில்லை? அந்தக் காரணத்தாலே தொழில் வாய்ப்புக்கள் இந்த மாநிலத்தில் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும், அந்தக் காரணத்தாலே தொழில் வளர்ச்சி குன்றியுள்ளது என்பதையும், அந்தக் காரணத்தாலே ஓரளவிற்கு மாநிலத்திலே தேக்க நிலை உருவாகியிருக்கிறது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



அதற்கு பிறகு டி.ஐ.ஐ.சி. நிறுவனம்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். அவர்கள் வட்டிக்கு வட்டி வாங்குகிறார்கள், வட்டிக்கு வட்டி வாங்குவது என்பது அந்த நிறுவனத்தில் மட்டுமல்லாமல், மற்ற எல்லா நிதி நிறுவனங்களும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளும், அகில இந்திய ரீதியில் இயங்கி வரும் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி (ஐ.டி.பி.ஐ.), இந்தியத் தொழில் கடன் முதலீட்டு நிறுவனம் (ஐ.சி.ஐ.சி.ஐ.), இந்தியத் தொழில் உதவி நிறுவனம் (ஐ.எஃப்.சி.ஐ.) போன்ற தொழில் வளர்ச்சிக்கு நிதி உதவி அளித்திடும் நிறுவனங்களும் கையாளுகிற முறையாகும். எனவே இது டி.ஐ.ஐ.சி. நிறுவனத்தில் மட்டும் கையாளப்படுகிற முறையல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வட்டியை அவர்கள் அவ்வப்போது ஒழுங்காகச் செலுத்தியிருந்தால், வட்டிக்கு வட்டி என்ற நிலைமை ஏற்படாது. பல பேர்கள் ஒழுங்காகச் செலுத்துவதில்லை என்ற காரணத்தாலேதான் அந்த நிலைமை உருவாயிற்று.

தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில், கடந்த 1978-79 நிதியாண்டில் டி.ஐ.ஐ.சி. ரூபாய் 12.06 கோடி மொத்த நிதி உதவியாக அனுமதித்தது. நடப்பு ஆண்டில், 1979-80-ல் 10 மாதங்கள் முடிய, அதாவது 31—1—1980 வரை அனுமதிக்கப்பட்ட நிதி உதவி சுமார் 12.97 கோடி ரூபாயாகும். இதிலிருந்து தொழில் வளர்ச்சிக்காக டி.ஐ.ஐ.சி.-யின் நிதி உதவி அதிகரித்துள்ளது என்பது தெளிவாகும். கடந்த ஆண்டு, 1978-79-ல் அளித்த நிதி உதவியால் சுமார் 3,517 பேருக்கு வேலை வாய்ப்புகளும், இவ்வாண்டில், 1979-80-ல் சுமார்

(முற்பகல் 11-50)

இதைத் தவிர இராமநாதபுரம் மற்றும் நெல்லை மாவட்டங்களில் திப்பெட்டி செய்யும் அமைப்புகளின் எண்ணிக்கை பற்றிய குறிப்பினைக் கொடுத்திருக்கிறார்கள். அதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தில் சின்னக்காமன்பட்டி என்ற ஒரு கிராமம். அங்கே திப்பெட்டி செய்யும் சேவை சங்கங்களின் எண்ணிக்கை 1. திப்பெட்டி செய்யும் அமைப்புகளின் எண்ணிக்கை 100. அதுபோல் இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமலிங்கபுரம் என்ற ஒரு கிராமம். அங்கே திப்பெட்டி செய்யும் சேவை சங்கங்களின் எண்ணிக்கை 1. திப்பெட்டி செய்யும் அமைப்புகளின் எண்ணிக்கை 100. நெல்லை மாவட்டத்தில் சங்கரன்கோவிலில் சேவை சங்கங்களின் எண்ணிக்கை 1. திப்பெட்டி செய்யும் அமைப்புகளின் எண்ணிக்கை 100. அதுபோல் நெல்லை மாவட்டத்தில் கோவில்பட்டி, இளையரசனேந்தல், எட்டயபுரம் ஆகிய மூன்றிலும் சேவை சங்கங்களின் எண்ணிக்கை ஒன்று, ஒன்று வீதம், ஆக மொத்தம் மூன்று சேவை சங்கங்கள். ஒவ்வொன்றிலும் திப்பெட்டி செய்யும் அமைப்புகளின் எண்ணிக்கை நூறு, நூறு வீதம், மொத்தம் 300. ஆக மொத்தம 600.

ஆகவே அரசு, 2,600 திப்பெட்டி செய்யும் அமைப்புகளை உருவாக்க எற்கெனவே ஆணை பிறப்பித்து விட்டது. ஆகவே, 2,600 திப்பெட்டி செய்யும் அமைப்புகள் உருவாவது உறுதி என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பா. பாலசுப்பிரமணியம் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்குப் பிறகு, இங்கே பேசிய ஆசிரியப் பிரதிநிதிகள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். ஏற்கெனவே அவற்றைப்பற்றிய விளக்கங்கள் இங்கே தரப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தோஷம் அவர்கள் பேசும்போது மதுரையிலே உயர்நீதிமன்றத்தின் கிளை ஒன்று அமைய வேண்டுமென்றும், அதை நீண்ட நெடுங்காலமாக இங்கே கோரிக்கையாக அங்குள்ளவர்கள் வைத்திருக்கிறார்கள் என்றும் ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். இங்கே ஒன்று உங்களுக்கெல்லாம் தெரியும் என்று நான் கருதுகின்றேன். மத்திய சர்க்காருக்கு அந்தக் கருத்தைத் தெரிவித்து அவர்கள் அதை கிடப்பிலே போட்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே உங்களுக்குத் தெரிவித்து, திரும்பியும் அதைத் துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.





அதற்குப் பிறகு திரு. வசந்த பை அவர்கள் ஒரு கருத்தை இங்கே குறிப்பிட்டதாக எனது நினைவுக்குக் கொண்டுவரப்பட்டது. அவர்கள் பேச்சிலே,

"There are many places in the world where streets are kept closed for traffic. Why cannot we have the same arrangement in Broadway, Subash Chandra Bose Road and other places in Madras? We can close those areas for vehicular traffic so that people could walk and buy their things."

என்று சொன்னார்கள். அவர்கள் கருத்துக்கு நான் ஒன்றை இங்கே கொண்டுவர விரும்புகிறேன். தமிழ்நாடு போக்குவரத்து விதி 49 (ஏ)-யின்படி சென்னை மாநகரில் காவல் துறை ஆணையரும், மாவட்டங்களில் காவல் துறை கண்காணிப்பாளரும் எந்த ஒரு வாகனத்தையும் அல்லது எவ்வகை வாகனங்களையும் எந்த சாலையிலும் செல்வதைத் தடுக்கலாம். சாலையின் முகப்பில் அல்லது அருகில் ஒரு அறிவிப்புப் பலகையை நட்டு, அதில் ஒருவழிப்பாதை என அறிவித்து, அதற்கான சைகையை வைக்கலாம். ஒருவழிச் சாலைத் திட்டம் சில சாலைகளில் கீழ்க்கண்ட காரணங்களால் செயல்படுத்தப்படுகிறது. உதாரணமாக சாலை குறுகியதாக இருக்குமானால், சாலை போக்குவரத்து அதிகமாக இருந்து, சாலையிலேயே போகவும் வரவும் அனுமதித்தால் போக்குவரத்து நெரிசலும், விபத்துக்களும் ஏற்படுமாயின், மக்கள் உபயோகத்திற்கு மாற்று வழி இருக்குமாயின், ஒரு வழிச்சாலைத் திட்டத்தை அமுல்படுத்தலாம். சென்ற வருடம் சென்னை நகர காவல் துறை துணை ஆணையர் (போக்குவரத்து) அவர்கள் பூக்கடை காவல் நிலையத்திற்கும், பிராட்வேக்கும் இடையே உள்ள இடத்தை வாகனப் போக்குவரத்து அல்லாத மண்டலமாகவும், பாதசாரிகள் சதுக்கமாகவும் ஆக்கலாமா என்ற செயற்குறிப்பை ஆராய்ந்து பொது மக்களின் கருத்தைத் தெரிவிக்குமாறு கோரினார். ஆனால் 31—8—1979 அன்று ஊரக வளர்ச்சி மற்றும் உள்நாட்டுத் துறை செயலாளருடனும், மாநகராட்சியின் ஆணையருடனும், சிறப்பு அதிகாரியுடனும் இது குறித்து விவாதித்த பின்னர், நடைபாதை விற்பனையாளர்களுக்கு மாற்றிடம் கொடுக்கப்பட வேண்டிய காரணத்தினால், இச்செயற்குறிப்பை அவர்கள் பிறகு கைவிட்டுவிட்டார்கள். அவர்கள் தெரிவித்த இந்த யோசனை அருமையான யோசனை. இந்த யோசனையையும் அரசு நிச்சயம் பரிசிலிக்கும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதற்குப் பிறகு ஒரு கருத்தை இங்கே ஒரு மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததாக நான் கருதுகின்றேன். யார் பேசியது என்று எனக்குத் தெரியவில்லை. திரு. எல்லமந்தா அவர்கள் பேசுகிறபோது ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். வாக்காளர் பட்டியலிலிருந்து 6 இலட்சம் வாக்காளர்

களின் பெயர்களை நீக்கியிருக்கிறார்கள் என்றும், சென்னை நகர மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை எப்போதுமே ஆதரிப்பார்கள் என்ற பயத்தின் காரணமாக இவ்வாறு செய்திருக்கிறார்கள் என்றும் பெரிய ஒரு குற்றச்சாட்டை திரு. எல்லமந்தா எடுத்து வைத்தார். 1977 ஆம் ஆண்டில் இருந்ததைவிட 1979 ஆம் ஆண்டு சென்னை நகரில் தயாரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலில் 5,65,057 வாக்காளர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது என்பது உண்மை. ஆனால் இதற்குரிய காரணத்தை நான் திரு. எல்லமந்தா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்றால் ஏதோ பயந்து அந்தக் காரியத்தை இந்த அரசு செய்தது என்று குறைபட்டுக்கொண்டார்கள். ஒரு பெரிய குற்றச்சாட்டை வைப்பதுபோல் வைத்தார்கள். 1977 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியல் வீடு வீடாகச் சென்று பார்த்து தயாரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியல் அல்ல. வீடு வீடாகச் சென்று வாக்காளர் பட்டியல் தயார் செய்யப்பட்டு 12 ஆண்டுகள் ஆகின்றன. புதிதாக 1979 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியல் தயார் செய்யப்பட்டபோது, பெரும்பாலான இறந்து போனவர்களின் பெயர்களும், இடம் மாறிப் போனவர்களின் பெயர்களும் நீக்கப்பட்டன. ஆனால் 1977 ஆம் ஆண்டு இருந்த வாக்காளர் பட்டியலில் அப்படிப்பட்டவர்களின் பெயர்கள் நீக்கப்படாமல் இருந்தன. சென்னை நகரைப் போன்ற பெரிய நகரங்களில் அடிக்கடி மக்கள் இடம் மாறிப் போவதுண்டு. வாக்காளர் பட்டியலில் பெயர் விட்டுப் போனால் சேர்ப்பதற்குத்தான் கோரிக்கைகளை அனுப்புகிறார்கள். எவரும் பெயர்களை நீக்க கோரிக்கை அனுப்புவதில்லை. 12 வருட இடைவெளிக்குப் பிறகு, 1979-ல் தயாரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலிலிருந்து, அதாவது தகுதியுடையவர்கள் பட்டியலிலிருந்து, இறந்துபோனவர்களின் பெயர்களும், இடம் மாறிப் போனவர்களின் பெயர்களும் நீக்கப்பட்டன. இவ்வாறு நீக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை பெருமளவில் இருந்தது. எனவே வாக்காளர் பட்டியலிலிருந்து தகுதியுள்ள 6 இலட்சம் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டன என்ற பெரிய குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்பதை நான் பணிவன்புடன் மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்லமந்தா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சென்னை நகரிலுள்ள வாக்காளர் பட்டியலிலிருந்து பல வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டன என்ற குற்றச்சாட்டுக்கு பதிலளித்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை, கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே இந்தக் குற்றச்சாட்டை இங்கே சொன்னோம். குறிப்பாக





ஒரு பகுதியே விடப்பட்டிருக்கிறது என்பதற்கான ஆதாரங்களை எல்லாம் கொண்டுவந்து காட்டினோம். அதற்குப் பிறகு கூட மத்திய அரசாங்கத்திற்கு, தேர்தல் ஆணையருக்குத் தந்தி கொடுத்தோம். அதன் பிறகு அங்கிருந்து அதிகாரிகள் இங்கு வந்தார்கள். சென்னை நகரில் மட்டும் சுமார் 45 ஆயிரம் வாக்காளர்களின் பெயர்கள் விடுபட்டிருக்கின்றன என்பதற்கான ஆதாரங்களையெல்லாம் அங்கிருந்து வந்த அதிகாரிகளிடம் எடுத்துச் சொன்னோம். இருந்தாலும் காலம் அனுமதிக்கவில்லையென்று அதைச் சேர்த்துக்கொள்ள இயலாது என்று சொன்னார்களே தவிர, பெயர்கள் விடுபட்டுப் போனதை அங்கிருந்து வந்த அதிகாரிகளும் மறுக்கவில்லை, இங்கே சென்னை மாநகராட்சி அதிகாரிகளும் மறுக்கவில்லை. வேண்டுமென்று, திட்டமிட்டுதான் பல ஆயிரக்கணக்கான வாக்காளர்களின் பெயர்களை நடந்து முடிந்த தேர்தலின்போது வாக்காளர் பட்டியலிலிருந்து இந்த அரசாங்கம் நீக்கியிருக்கிறது என்கிற குற்றச்சாட்டை நாங்கள் இன்னும் வலியுறுத்துகிறோம்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** ஒரு கருத்தை வலியுறுத்திக் கூற உறுப்பினருக்கு உரிமையுண்டு. அதை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் எனக்கு இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். உண்மை நிலைமையை நான் இங்கே விளக்கியிருக்கிறேன். வேண்டுமென்றே, திட்டமிட்டு இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள் என்று உள்நோக்கம் கற்பிக்கின்ற அளவுக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி போன்றவர்கள் தயவுசெய்து பேச வேண்டாம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நாங்கள் எந்தக் கருத்தை தேர்தலுக்கு முன்பே சொன்னோமோ அதே கருத்தைத்தான் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தேர்தலுக்குப் பின்பு சொன்னார்கள். அதாவது வாக்காளர் பட்டியலிலிருந்து சிலருடைய பெயர்கள் நீக்கப்பட்டிருக்கின்றன என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே அறிவித்திருக்கிறார்கள். இப்போதாவது 'முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்தை ஏற்றுக்கொள்கிறேன்' என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்வதில் என்ன தயக்கம் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** நான் ஏற்கெனவே பேசிவிட்டேன். திரும்பத் திரும்ப அதைப்பற்றி என் பேசிக்கொண்டிருக்க வேண்டுமென்று எனக்குத் தெரியவில்லை. திட்டமிட்டு, வேண்டுமென்று செய்யப்படவில்லை. உள்நோக்கத்தோடு செய்யப்பட்டதல்ல. இறந்து போனவர்களின் பெயர்கள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டன. இடம் மாறிப் போனவர்களின் பெயர்

களும் நீக்கப்பட்டன. அதுதான் நடந்ததே தவிர, திரும்பத் திரும்ப இதையே சொல்லிக்கொண்டிருப்பதன் மூலம் உண்மைக்கு மாறான கருத்துக்கள் உண்மையாகிவிடும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்பார்க்க வேண்டாம் என்று நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

அதற்குப் பிறகு இங்கே பேசியவர்கள் எல்லாம் பொதுக் கருத்துக்களைத் தான் பேசியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களுக்கு ஏற்கெனவே பதில் தரப்பட்டிருக்கிறது. நல்ல கருத்துக்களை இந்த மன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்து வைத்தார்கள். அந்தக் கருத்துக்களை நிச்சயமாக 'அரசு பரிசிலனை செய்யும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

விடை பெறுவதற்கு முன்பு ஒரேயொரு கருத்து. மாண்புமிகு உறுப்பினர் திரு. மியாகான் அவர்கள் ஒரு கருத்தை இங்கே தெரிவித்தார்கள். அந்த அருமையான கருத்தை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதாவது சென்னையில் உள்ள மத்திய ரயில்வே நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டத்தை கைவிடப் போவதாக வெகு நாட்களுக்கு முன்பே அவர் தெரிந்திருப்பதாகவும், அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். கிட்டத்தட்ட 140 கோடி ரூபாய் செலவாகும் அந்தத் திட்டத்தை எப்படியும் அமல்நடத்த வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்போது ஜனதா அரசு ஆட்சியில் இருந்தபோது, ரயில்வே அமைச்சராக இருந்த திரு. மது தண்டவதே அவர்களுக்குக் கடிதம் எழுதினார்கள். டெல்லி சென்றிருந்தபோது, நானும் திரு. மது தண்டவதே அவர்களைச் சந்தித்து இதைப்பற்றி எடுத்துச் சொல்லி, "மக்கள் தொகை அதிகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது, நெரிசல் ஏராளமாக இருக்கிறது, ஆகையால் 'மாஸ் ரேப்பிட் டிரான்சிட்' திட்டத்தை நீங்கள் அமுல்படுத்த வேண்டும்" என்று கேட்டுக் கொண்டேன். அதற்கு அவர்களும், 'நான் நிச்சயமாக ஆவன செய்வேன்' என்று தெரிவித்தார்கள். அதற்குப் பிறகு அந்தச் சர்க்கார் போயிற்று. இப்போது புதிதாக வந்திருக்கிற அரசை இந்த அரசு வற்புறுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதிதாக மத்தியில் பொறுப்பேற்றிருக்கும் கட்சியின் உறுப்பினர்களாக இந்த மன்றத்திலே இருக்கின்ற நண்பர்களும் தங்களுடைய கடமையைச் செய்வார்கள் என்று நம்புகிறேன்.



'முதலமைச்சர் அவர்கள் வரவில்லை, எங்களை அவமானப்படுத்தி விட்டார்' என்று புண்பட்டுப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் தயவுசெய்து அப்படிப் புண்பட வேண்டாம், அந்த எண்ணம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இல்லை என்பதையும், அந்த எண்ணத்திலே அவர் பேசவில்லை என்பதையும் இங்கே குறிப்பிட்டு, அந்த உணர்வோடு உறுப்பினர்கள் கலைந்து செல்லவேண்டாம் என்று உறுப்பினர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்த தொடர் கூட்டம் நடக்குமா, நடக்காதா என்ற சந்தேகம் யாருக்காவது இருக்குமானால், நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், இங்கே இந்த மன்றத்திலே நிதிநிலை அறிக்கையை நான் தாக்கல் செய்வேன் என்ற உறுதியை உங்களுக்குச் சொல்லி அந்தச் சந்தர்ப்பத்தில் என்னென்ன கருத்துக்களைப் பேச வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அந்தக் கருத்துக்களைப் பேசுங்கள் என்று கேட்டு, ஆளுநர் அவர்களின் உரைக்கான தீர்மானத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** கீழ்க்கண்ட உறுப்பினர்கள் ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு திருத்தங்கள் முன்மொழிந்துள்ளனர் . . .

THIRU G. VASANTHA PAI : Sir, on a point of clarification, I request the Government to examine the possibility whether they would, in consultation with the Centre, initiate some proceedings for having an enactment to ban floor-crossing. Will the Government consider it ?

THE HON. THIRU K. MANOHARAN : So long as the hon. Member Thiru Vasantha Pai is not crossing the floor, things will automatically go on smoothly.

**திரு. செ. முத்துசாமி :** கல்லூரி ஆசிரியர்களின் பிரச்சினைகள் முடிக்கப்பட்டுவிட்டன. ஆனால், அவர்கள் இன்னும் விடுதலை செய்யப்படாமல் சிறையிலே இருக்கிறார்கள் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதேதான் மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள்கூட கேட்டிருப்பதாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்.

Thiru G. VASANTHA PAI : Since the Hon. Minister has referred to me personally, I would like to submit that I am an Independent Member and there is no question of crossing the floor so far as I am concerned. What I want to submit is this. There was a move for a legislation to prevent floor-crossing and the Prime Minister, during her Election campaign, had said that she would initiate proceedings for that purpose. I moved an amendment to the Motion of Thanks for the Governor's Address. By that, I wanted to know whether, after an announcement to that effect, this Government would take steps, along with the Centre, to see that persons who were elected on one ticket did not cross floors. A legislation will have to be brought to this effect. I want a clarification on that.

THE HON. THIRU K. MANOHARAN : This is not a question relating to a particular State Government. This is a national issue. Of course, we all can sit together and discuss about this evil of defection. We can find out whether there is any possibility of enacting a legislation. Already that was there. But, in spite of that, whether the parties are sticking to it or adhering to it is a question.

THIRU A. R. DAMODARAN : Sir, there is no question of any Party sticking to it.

THIRU G. VASANTHA PAI : That is why we are asking that at least a legislation may be brought forward.

THE HON. THIRU K. MANOHARAN : It is not in my hands.

THIRU G. VASANTHA PAI : This Government must initiate it for this State.

THE HON. THIRU K. MANOHARAN : That legislation has to be brought by the Parliament.

THIRU G. VASANTHA PAI : But this Government can initiate it by a Resolution just like the one they brought for the Tamil language and things like that. I am mentioning about an initiation by way of a Resolution in this House. Will they bring it?



THE HON. THIRU K. MANOHARAN : The hon. Member's suggestion will be considered.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தெளிவாகச் சொல்லி விடுகிறேன். உண்ணாவிரதம் . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நான் சொல்லிவிட்டேன் . . . . .

*திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் பெரியார் மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம், தஞ்சை மாவட்டம் ஆகிய இந்த மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த கல்லூரி ஆசிரியர்கள் திருச்சியிலே மத்திய சிறையிலே இருக்கிறார்கள். அவர்கள் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை. உண்ணாவிரதத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 3 பேராசிரியர்கள் இங்கே பொது மருத்துவ மனையில் இருக்கிறார்கள். அவர்களும் விடுதலை செய்யப்படவில்லை. ஆகவே, இது குறித்து விளக்கம் வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் கூட இதையே கொடுத்தார்கள்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: அதையேதான் நானும் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : என்னுடைய கவனத்திற்கு இது கொண்டுவரப்பட்டது. ஏற்கெனவே உத்தரவு போயாகிவிட்டது. இந் நேரம் விடுதலை செய்யப்பட்டிருக்கக்கூடும். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. லெட்சுமிகாந்தன், திரு. முத்துசாமி, டாக்டர் சனார்த்தனம் கவலைப் படவேண்டாம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: நானும் இதைச் சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: உங்களையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். கவலைப்பட வேண்டாம். விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இீழ்க்கண்ட உறுப்பினர்கள் ஆளுநர் உரைக்கு . . . . .

* **திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** ஆளுநர் உரை விவாதத்தின் போது, மூன்றாவது சம்பளக் குழுவின் முரண்பாடுகளைக் களைவதற்கு அமைக்கப்பட்டிருக்கின்ற ஒரு நபர் குழுவின் அறிக்கை விரைவில் அறிவிக்கப்பட வேண்டும் என்று கோரியிருந்தேன். ஒரு நபர் குழு அறிக்கை வெளியிடுவதற்கான ஒரு காலவரையறையை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னால் அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் அது பயனுள்ளதாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** குழு அமைக்கப்பட்டிருக்கிறது. முரண்பாடுகள் என்ற பெயரில் ஏராளமான கோரிக்கைகளைத் தந்துகொண்டிருக்கிறார்கள். அதற்கென்று காலவரையறை விதிக்க முடியுமா என்பதைப் பற்றி அரசு யோசிக்க முடியுமே தவிர, இது கிணறு வெட்ட பூதம் வெளிப்பட்ட கதையைப்போல, ஏராளமான பிரச்சினைகள் தாராளமாக வந்துகொண்டிருக்கின்றன. அவைகளை ஒரு நபர் கமிஷன் ஆராய்ந்து கொண்டிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட அளவுக்கு, இத்தனை நாட்களுக்கு உள்ளாக நீங்கள் முடிக்க வேண்டும் என்று சொன்னால், 'எங்களுடைய கோரிக்கைகளை அவர்களிடம் வைக்க முடியவில்லை, எங்களுக்குப் போதுமான அவகாசம் தரவில்லை' என்று நீங்களே சொல்லக்கூடும். ஆகவே, அவர்கள் விரிவாக ஆராயட்டும். நல்ல திட்டத்தைத் தரட்டும். அதை அமுல்படுத்த அரசு தயங்காது.

**திரு. செ. முத்துசாமி:** மூன்றாவது ஊதிய ஆணைக் குழுவின் பரிந்துரைகளில் உள்ள முரண்பாட்டைக் களைய ஒரு நபர் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதைப் பொறுத்தவரையில், இப்போது பதில் சொல்லப்பட்டது. ஆனால் மூன்றாவது ஊதியக் குழு . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இது கேள்வி நேரம் இல்லை.

**திரு. செ. முத்துசாமி:** ஒரேயொரு விளக்கம். அரசுத் துறைகளிலே பணியாற்றும் பெண்களுக்கும், ஆசிரியைகளுக்கும் 90 நாட்கள் பிரசவ விடுப்பு கொடுக்க வேண்டும் என்று மூன்றாவது ஊதியக் குழுவிலே சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், அந்தப் பரிந்துரை இன்னும் அமுல்படுத்தப்படாமல் இருக்கிறது. ஏற்கெனவே ஊதியக் குழு சிபாரிசு செய்திருப்பதால், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அதை ஏற்று அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** நான் சிபாரிசு செய்யவில்லை. மூன்றாவது ஊதியக் குழு சிபாரிசு செய்திருக்கிறது. அதை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. ஏற்றுக்கொள்ளாததற்கான காரணங்களையும் அரசு தெரிவித்திருக்கிறது. மூன்று மாதங்கள் தேவையில்லை என்பது என்னுடைய கருத்து. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாய்மார்களை அவ்வளவு சுலபமாக எண்ணிவிட வேண்டாம். குழந்தை பிறந்து இரண்டாவது வாரத்திலேயே வேலை செய்யும் அளவுக்கு தமிழகத் தாய்மார்கள் இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக, அந்த மூன்று மாதத்தை ஏன் வலியுறுத்துகிறாரோ தெரியவில்லை. தாய்க்குலத்தின் சார்பாக அவருக்கு இருக்கும் அக்கறையைவிட எனக்கு அதிகமாக இல்லாவிட்டாலும், அவர் கொண்டிருக்கும் அக்கறையைவிட என்னுடைய அக்கறை எந்த அளவுக்கும் குறைந்ததில்லை. ஆகையால், இந்த மூன்று மாதத்தைப்பற்றி வலியுறுத்த வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்னும் சொல்கிறேன், அவர் வேண்டுமானால் ஒரு நபர் கமிஷனுக்கு அதைத் தெரிவிக்கலாம்.

**திரு. செ. முத்துசாமி:** மத்திய அரசு தமிழ் நாட்டுப் பெண்களுக்கு மூன்று மாதம் அளித்திருக்கிறது.

(பிற்பகல் 12-10)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்காணும் உறுப்பினர்கள் திருத்தங்களை முன்மொழிந்திருக்கிறார்கள்:—

திருவாளர்கள் ம. சங்கரலிங்கம்
க. இராமமூர்த்தி
சோ. ஆறுமுகம்
வே. தங்கப்பாண்டியன்
ஆற்காடு நா. வீராசாமி
பா. ரா. தாமஸ்
ஜி. வசந்த பை
க. மீனாட்சிசுந்தரம்
செ. முத்துசாமி
ஆ. நல்லசிவன்
ப. மாணிக்கம்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர்) [1980 பிப்ரவரி 15

மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவருடைய பெயரையும் நான் அழைப்பேன். அவர்கள் தம் திருத்தத்தை வலியுறுத்துகிறார்களா அல்லது திரும்பப் பெறுகிறார்களா என்று தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. ஜி. வசந்த பை தம் இருக்கையிலிருந்து எழுந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினரின் முறை வரும்போது எதைச் சொல்வதானாலும் சொல்லலாம். இப்போது தயவுசெய்து அமர வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சங்கரலிங்கம் அவர்கள் அவையில் இல்லாததால் திருத்தம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் அவையில் இல்லாததால், திருத்தம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. ஆறுமுகம் அவர்கள் அவையில் இல்லாததால், திருத்தம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. தங்கப்பாண்டியன் அவர்கள் அவையில் இல்லாததால், திருத்தம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் அவையில் இல்லாததால், திருத்தம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ரா. தாமஸ் அவர்கள் அவையில் இல்லாததால், திருத்தம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

**THIRU G. VASANTHA PAI** : As far as the amendment standing in my name is concerned, the Hon. Minister has now accepted it.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. ஜி. வசந்த பை அவர்கள் தமது திருத்தத்தைத் திரும்பப் பெறுகிறாரா அல்லது வலியுறுத்துகிறாரா என்று தெரிவிக்க வேண்டும்.



1980 பிப்ரவரி 15]

**THIRU G. VASANTHA PAI** : Regarding the second one. the Hon. Minister has accepted it.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் தமது திருத்தத்தை வலியுறுத்துகிறாரா ?

**Thiru G. VASANTHA PAI** : In fact, he has said that he would consider bringing in a Resolution to that effect. So, let that come in.

**The Hon. Thiru K. MANOHARAN** : Magnanimity demands that the hon. Member should not insist on it.

**THIRU G. VASANTHA PAI** : Sir, in view of this, I withdraw it.

திரு. ஜி. வசந்த பை அவர்களின் திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்கள் அவையில் இல்லாததால், திருத்தம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

**திரு. செ. முத்துசாமி:** தலைவர் அவர்களே, நான் என் பெயரிலிருக்கும் திருத்தங்களை வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"கீழ்க்கண்டதை தீர்மானத்தின் கடைசியில் சேர்த்துக்கொள்ளவும் :—

1. அகவிலைப்படி உயர்வு குறித்தும் ;
2. ஆசிரியர் பணி நியமனக்குழு நியமிப்பது பற்றியும் ;
3. இளநிலை ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியர்களாக உயர்த்துவது பற்றியும் ;
4. மருத்துவப்படி வழங்குவது பற்றியும் ;
5 தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர்கள் அனைவருக்கும் தனி ஊதிய விகிதம் அளிப்பது பற்றியும்—பட்டதாரி ஆசிரியருக்கு பணிப்படி கொடுப்பது பற்றியும் ;

6. பி.டி. புலவர் பட்டம் பெற்ற இடைநிலை ஆசிரியர்களுக்கு அத் தகுதிக்கேற்ற ஊதியம் வழங்குவது பற்றியும்;

7. அரசு கல்லூரிகள் மற்றும் பள்ளிகளில் பணியாற்றும் தற்காலிக ஆசிரியர்களை சர்விஸ் கமிஷன் தேர்வுக்கு ஆஜராகாமல் ஆந்திர மாநிலத்தில் செய்துள்ளதுபோல் நிரந்தரம் செய்வது பற்றியும்;

8. மூன்றாவது ஊதியக்குழு பரிந்துரைப்படி மகப்பேறு விடுப்பு 90 நாட்கள் வழங்குவது பற்றியும்;

9. ஒரு மாத போனஸ் வழங்குவது பற்றியும்;

10. அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் அனைத்தும் உள்ளாட்சி நிறுவன ஆசிரியர்களுக்கு வழங்குவது பற்றியும்;

11. சிறுபான்மையினர் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குப் பணிப்பாதுகாப்பு அளிப்பது பற்றியும்;

12. நீலகிரி மாவட்டத்தில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு கவர்னர் ராஜ்பவன் ஊழியர்களுக்கு அளிப்பதுபோல் கோடைகால (சீசனல்) படி வழங்குவது பற்றியும்;

13. இருபது ஆண்டு பணிக்கால அடிப்படையில் சிறப்பு நிலை அளிப்பது பற்றியும்;

14. ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு வெள்ள முன்பணம் வழங்காதது பற்றியும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருத்தத்திற்குரியதாகும்."

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மாணிக்கம் அவர்கள் அவையில் இல்லாததால், திருத்தம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நல்லசிவன் அவர்கள் அவையில் இல்லாததால், திருத்தம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.





அவைமுன் உள்ள பிரச்சினை :

"1980 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 30 ஆம் நாள் ஆளுநர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, உரை நிகழ்த்தியதற்காக, தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தங்களுடைய நன்றியை ஆளுநர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றனர்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, அவை கால வரையறையின்றி ஒத்தி வைக்கப்படுகிறது.

பின்னர், அவை காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 12-14)

# Index to Tamil Nadu Legislative Council Debates

Fifty-seventh Session of the Legislative Council under the Constitution of India

*7th, 11th 13th and 15th February* 1980.

VOLUME CLXVI (Nos. 1-5)

## A


PAGES.

ABDUL WAHAB, THIRU K. S.—

Bills—

Debt Relief (Amendment) Bill, 1980 ... 145—147

Payment of Salaries (Amendment) Bill, 1980. 264—267

Governor's Address, discussion on ... 71—79

Walk-out in protest against inaction of Government to relieve shortage of diesel in the State — 121

ADJOURNMENT MOTION *re*—

Chellammal Women's College, Madras, agitation by students *re* closure of ... ... ... 128—129

Colleges in Madras City, closure of—, agitation by teachers and arrest of teachers ... ... 235—249

Disturbances created by anti-social elements in Royapettah area ... ... ... ... 230—233

Hunger strike by teachers of all Colleges in Tamil Nadu ... ... ... ... ... 14—19

Hunger strike by Thiru P. R. Thomas, M.L.C. and representatives of Ramanathapuram District Teachers' Federation in front of Ramanathapuram Collectorate protesting against the attitude of Chief Educational Officer, Virudhunagar — 6—8

A—*cont.*

PAGES.

ADJOURNMENT MOTION *re*—cont.

P.A.C. Ramasamy Raja Polytechnic, Rajapalayam, hunger strike by teachers and students of ... 9—13

Petroleum Products, shortage of—due to go-slow agitation by employees of Indian Oil Corporation. **4—6**

Power supply to agriculturists in Arni and Thimiri villages in North Arcot district, shortage of ... 233—235

Reported remarks of Union Minister for Petroleum about the State Government and Chief Minister of Tamil Nadu ... ... ... ... 121—128

ANIMAL HUSBANDRY DEPARTMENT—

Demands of staff of—, Minister's attention called to agitation in support of ... ... ... 253—254

ARANGANAYAGAM, THE HON. THIRU C.—

A.V.C. College at Mayuram, statement *re* indefinite closure of ... ... ... ... 131

Adjournment motion *re*—

Chellammal Women's College, Madras, agitation by students *re* closure of ... ... 129

Colleges in Madras City, closure of—, agitation by teachers and arrest of teachers ... 241—246

Hunger strike by teachers of all Colleges in Tamil Nadu ... ... ... ... **17—19**

Hunger strike by Thiru P. R. Thomas, M.L.C., and representatives of Ramanathapuram District Teachers' Federation in front of Ramanathapuram Collectorate protesting against the attitude of Chief Educational Officer, Virudhunagar ... ... ... ... ... 7—8

P.A.C. Ramasamy Raja Polytechnic, Rajapalayam, hunger strike by teachers and students of ... 11—13



A—*cont.*

PAGES.

ARANGANAYAGAM, THE HON. THIRU—*cont.*

Governor's Address, discussion on ... ... 51, 52—54, 55

Teachers of Madurai Polytechnic, statement *re* non-payment of salary to—for the month of January 252

ARIVAZHAGAN, THIRU K.—

Governor's Address, discussion on ... ...53, 54, **55.**

ARUMUGAM, THIRU S.—

Information *re*—

Adjournment motion, given notice of ... 228

Adjournment motion, taking up of ... 360, 361

ASSISTANT PUBLIC PROSECUTORS, GRADE II—

Question *re* basis for difference in scales of pay to—working in Metropolis and mofussil ... 100—102

B

BALASUBRAMANIAM, THIRU Ku. Ma.—

Co-operative Milk Producers' Society, V.R.T. 233 Mallanginar, Aruppukottai, Ramanathapuram district, calling Minister's attention to misappropriation of funds of—by Office bearers ... ... 363

BILL(S)—

Cultivating Tenants Arrears of Rent (Relief) Bill, 1980—

Considered and passed ... ... ... 183—**184**

Message from the Assembly *re* ... ... **117**

Cultivating Tenants (Payment of Fair Rent) Amendment Bill, 1980—

Considered and passed ... ... ... 282—**315**

Message from the Assembly *re* ... ... **227**

B—*cont.*

PAGES.

BILL(S)—*cont.*

Cultivating Tenants (Protection from Eviction) Amendment Bill, 1980—

Considered and passed ... ... ... 157—181

Message from the Assembly *re* ... ... 117

Cyclone and Flood Affected Areas Cultivating Tenants Arrears of Rent (Relief) Bill, 1980—
Considered and passed ... ... ... 184—185

Cyclone and Flood Affected Areas Cultivating Tenants (Temporary Relief) Amendment Bill, 1980—
Considered and passed ... ... ... 182—183

BILLS—

Cyclone and Flood Affected Areas Cultivating Tenants (Temporary Relief) Amendment Bill,
Message from the Assembly *re* ... ... ... 117

Cyclone and Flood Affected Areas Cultivating Tenants (Temporary Relief) Amendment Bill, 1980—

Message from the Assembly *re* ... ... ... 11[illegible]

Debt Relief (Amendment) Bill, 1980—
Considered and passed ... ... ... ... 133—155
